# இன்பத்துள் இன்பம்

வித்வான்
ல. சண்முகசுந்தரம்

சண்முகம் பதிப்பகம்
பிளாட் எண்.52, 2-வது குறுக்குத் தெரு,
N.G.O. காலனி குரோம்பேட்டை,
சென்னை-44.

இன்பத்துள் இன்பம்
மறுபதிப்பு : 1998
உரிமை ஆசிரியருக்கே

| | | |
|---|---|---|
| நூல் | : | இன்பத்துள் இன்பம் |
| பதிப்பாண்டு | : | 1998 ஜூன் |
| ஆசிரியர் | : | ல. சண்முகசுந்தரம் |
| பதிப்பாளர் | : | சண்முகம் பதிப்பகம் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ துர்கை பிரிண்டிங் பிரஸ்<br>21, மதுரைவீரன் கோயில் தெரு,<br>T. நகர், சென்னை-17. |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| விலை | : | 100 ரூபாய் |
| நூல்வகை | : | இலக்கியம் |
| பக்கம் | : | 4 + 464 = 468 |
| தாள் நிறை | : | 16 கிலோ |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |

# முகவுரை

கொஞ்சி விளையாடுவதற்குக் கடவுள் வைத்துக் கொண்ட குழந்தைதான் மனிதன். சிருஷ்டி தத்துவத்தின் மணிமகுடமாக விளங்குகிறான் மனிதன். இறைவனுடைய அற்புதங்களை வெளிப் படுத்தவும், அற்புதங்களை அனுபவிக்கவும் மனிதன்தான் அதிகாரி. மனிதன் இல்லாவிட்டால் இறைவனுடைய லீலா விநோதம் வெறும் பொம்மலாட்டந்தான். வெறும் ஊமை நாடகமேதான்.

பேரண்டத்திலேயே அழகான பொருள் மனிதன்தான். உயர்ந்த வஸ்துவும் மனிதன்தான்.

மனிதனுடைய உடம்பைப் போல அழகானது உலகில் வேறு ஒன்றும் இல்லை. அமைப்பும், ஒழுங்கும், செயல் திறமையும் மனித உடம்பில் வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன.

எவ்வளவு ஒய்யாரமாக நிமிர்ந்து நிற்கிறான் மனிதன்? இப்படிக் கம்பீரமாய் காலூன்றிக் கைகளை வீசி நடமாடும் பிராணி வேறு ஒன்றும் இல்லை.

மனிதனுடைய முகம் எவ்வளவு அழகாய், உருண்டையாய்- அமைந்திருக்கிறது? நீளமான மூஞ்சி, இப்படி வட்ட வடிவமாய் அமைவதற்கு எத்தனையோ லட்சம் ஆண்டுகள் ஆகி இருக்க வேண்டும்?

முகத்தின் முகப்பில் வந்து நிற்கின்றன கண்கள். அறிவுத் தத்துவம் எழுந்து நின்று ஊடுருவிப் பார்ப்பதற்கு தங்கச் சாளர மாய் விளங்குகின்றன கண்கள்.

ஊடுருவிப் பார்ப்பதற்கு ஒவ்வொன்றையும் எடுத்துக்கொடுக்க வேண்டுமே? அப்படி எடுத்துக் கொடுப்பதற்குக் கைகள் ஆதரவாய் அமைந்துள்ளன. பின்னால் தொங்கிக் கொண்டிருந்த வால் தேய்ந்து தேய்ந்து மறைந்துவிட்டது.

மண்டையில் துருத்திக் கொண்டிருந்த கொம்புகளும் கரைந்து விட்டன. கரிய உளி போன்ற பற்கள். ரம்பம் போன்ற நகங்கள். முளக்கம்பி போன்ற ரோமம், தடித்த தோல் எல்லாம் இளகி இளகி மூளையாய் அமைந்துவிட்டன. இல்லை, மூளைக்கு உர மாய் அமைந்துவிட்டன, என்றும் சொல்லாம்.

பார்த்துக் கொண்டே இருக்கலாம் மனித உடம்பை. பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கும் மனித உடம்பு.

மனித உடம்பு பார்க்கப் பார்க்க அழகாக இருப்பதற்குக் காரணம் அதனுள் ஓடும் ரத்தம் மட்டும் அல்ல. உடம்பில் பொருந்தி நிற்கும் எலும்பு, நரம்பு, தோல், தசை இவை மட்டும் அல்ல.

மனித உடம்பு முழுவதும்? ஒவ்வொரு அணுவும் அறிவு மய மாக இருக்கிறது. அதாவது உணர்ச்சிமயமாக இருக்கிறது. மின் சாரத்தை அடைத்து வைத்த பெட்டி போல உணர்ச்சிப் பொக்கிச மாக இருக்கிறது மனித உடம்பு.

மனிதனுடைய மேனியைப் பார்க்கிறபொழுது அதன்பின்னால் இருக்கிற உணர்ச்சியைப் பார்க்கிறோம். அந்த உணர்ச்சியில் ஈடு பட்டுக் கரைகிறோம்.

இனி, மனிதனிடம் உள்ள இதய தத்துவத்தைப் பற்றிச் சொல்வதானால் கடவுளே மனம் உவந்து ஆனந்தக் கூத்தாடும் நடன அரங்கு என்றுதான் சொல்லவேண்டும். சுத்தமான தூய அறிவு மயமாக இருக்கிறது ஆன்மா. அது உணர்ச்சிமயமாக உடம்பு முழுவதும் ஊடுருவிப் பரந்து நிற்கிறது. பசி, தாகம், காதல், கோபம், வீரம், அன்பு இப்படி உணர்ச்சிமயமாக இருக் கிறது. ஆனாலும் ஊமையாகத்தான் இருந்தது எல்லாம். கண்ணைத் திறந்து பார்க்காமல் இருந்தது அவ்வளவும்.

இருட்டுக்குள்ளிருந்து எப்படியோ ஒளி வந்துவிட்டது. மனம் என்னும் தத்துவம் உடம்பினுள் முளைத்துவிட்டது. அது ஒவ் வொன்றையும் யோசிக்க வைத்துவிட்டது. பேரண்டத்தைப்

பற்றியும் பேரண்டத்தில் உள்ள ஒவ்வொன்றைப் பற்றியும் யோசிக்க ஆரம்பித்து விட்டது மனம். அணு அணுவாக அணுவுக்குள் அணுவாகச் சென்று ஒவ்வொன்றையும் அம்சம் அம்சமாக எடுத்து உதறி உதறிப் பார்க்க ஆரம்பித்து விட்டது மனம். தன்னைப் பற்றிக்கூட யோசிக்க ஆரம்பித்து விட்டது மனம். "நாம் யோசிக்கிறோம். யோசிக்க யோசிக்க ஒவ்வொன்றும் தெளிவுபடுகின்றன" என்பதுகூட விளங்கிவிட்டது மனதுக்கு.

மனிதனிடந்தான் இந்த மனம் என்னும் அரிய செல்வம் இருக்கிறது. இந்த மனம் என்னும் அறிவுக் களஞ்சியத்தைக் கையில் வைத்துக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கிறான் மனிதன்.

மனத்திலிருந்து யோசனைகள் ஊறிக் கொண்டே இருக்கின்றன. உடம்பில் ரத்தம் ஊறுவது போல் மனதில் யோசனை ஊறிக் கொண்டே இருக்கிறது. புதிய புதிய ஒளிகளில், பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் என்னும் புதுப்புது வண்ணங்களில் தெளிவும் நிச்சயமும் மனதிலிருந்து வந்து கொண்டே இருக்கின்றன.

தெய்வ ஒளியோடு பிரகாசிக்கிறது மனம் ஒளி ஊற்றாய் இருக்கிறது மனம்.

யோசிக்க யோசிக்க மனிதன் உயர்ந்து கொண்டே போனான், தன்னைச் சுற்றி உள்ளனவற்றை தனக்கு உதவியாக வைத்துக் கொண்டான். தான் சொல்கிறபடி, அவை நடக்கவேண்டும் என்று தன்னுடைய கட்டுப்பாட்டுக்கு உள்ளேயே கொண்டு வந்து விட்டான் எல்லாவற்றையும்.

எல்லாவற்றையும் ஒருவகையாக அடக்கி ஆளப் படித்துக் கொண்டான் மனிதன். அப்படி அடக்கி ஆள்வதற்கு வழிகாட்டியது மனம். மற்றவற்றை அடக்கி ஆள்வதின் மூலம் மனிதன் உயர்ந்து விட்டான்.

கடவுளுடைய சாம்ராஜ்யம் முழுவதுக்கும் பட்டத்து இளவரசன் மனிதன் தான்.

சிந்தனையானது தன்னையும் தன்னைச் சுற்றி உள்ளவற்றையும் கட்டிப் பிடித்தது. மல்லுக்கட்டியது, உருண்டு புரண்டு விளையாண்டது. பல்லாயிரக்கணக்கான வருடங்களாகத் துடிதுடியாய்த் துடித்தது. வேதனைப்பட்டது. திணறியது, தவியாய்த் தவித்தது, கர்ப்பச்சுமை என்பார்களே, அந்தச் சுமையில் திக்கு முக்காடியது.

தங்கத்தை வாட்டி வாட்டி அனலானது புடம் போட்டு எடுப்பது போல, இயற்கையானது மனதை வாட்டி வாட்டி எடுத்தது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனதை அழுத்திக் கொண்டிருந்த சுமை இறங்கிவிட்டது. மனதின் ஆற்றாமை, தவிப்பு எல்லாம் ஒதுங்கிவிட்டன. தங்கச்சிலைபோல ஒவ்வொரு வார்த்தைகளாக பாஷையையே பெற்றெடுத்து விட்டது மனம்.

பாஷை என்று ஒன்று வந்ததோ இல்லையோ, மனதைக் கையில் பிடிக்க முடியவில்லை! ஆட்டந்தான், பாட்டந்தான்! இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் இப்படி எங்கெங்கோ தாவிக் குதிக்க ஆரம்பித்து விட்டது மனம்.

நினைத்ததை எல்லாம் சொல்ல முடிந்தது. சொன்னதை எல்லாம் ஞாபகத்தில் வைக்க முடிந்தது. ஞாபகத்தில் உள்ளனவற்றை எல்லாம் அசை போட்டு அசை போட்டு மெல்ல முடிந்தது. மாறி மாறி மீண்டும் மீண்டும் கொழித்துக் கொழித்துச் சலித்துப் புடைக்க முடிந்தது.

இது சாதாரண காரியம் அல்ல. மனிதனுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரம்.

தன்னுடைய அனுபவம், சரித்திரம், உணர்ச்சி, வெற்றி, தோல்வி எல்லாமே தன்னைப் போல நிலைபெற்று நிற்பதை மனிதன் கண்ணாரக் கண்டான். வார்த்தைகளாகவும், இசையாகவும், கவியாகவும், நாடகமாகவும் தன்னுடைய காரியங்கள் தன்னைச் சுற்றிச் சுற்றி உறவாடுகிற அற்புதத்தை மனிதன் கண்டு கொண்டான்.

மனிதனுக்கு மனிதர்கள் மட்டும் அல்ல. அவனுடைய காரியங்களே உற்ற துணையாக அமைந்துவிட்டன. கலை வடிவங்களோடு அமைந்துவிட்டன. தெய்வத் துணை என்று சொல்லும்படி அமைந்துவிட்டன.

சிந்தனை, மொழி, இலக்கியம், கலை இவைகளோடு சேர்ந்து நிற்கிறது. மனிதனுடைய காரியம். மூளையின் பலங்கொண்டும் கையின் துணைகொண்டும் அரியபெரிய காரியங்களைச் செய்துவிட்டான். மனிதன் மனிதனுடைய அற்புதத் திறமையைக் கண்டு இயற்கையே புளகாங்கிதம் அடைந்துவிட்டது.

இதழ் இதழாக தாமரைப்பூ விரிந்து மலர்வதைப் போல, இயற்கை அன்னையே மனிதனுடைய ஆற்றலைக் கண்டு பரவசப் பட்டு உருகிவிட்டாள். நன்றாக இறுக்கிக்கட்டி முடிந்துவைத்திருந்த ரகஸ்யங்கள் அவ்வளவையும் ஒவ்வொன்றாக அவிழ்த்து மனிதன் கையில் கொடுக்க ஆரம்பித்து விட்டாள். வாங்க வாங்க மனிதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதைவிட எல்லை இல்லாத ஆனந்தத்தில் திளைத்தாள் உள்ளம் பூரித்த இயற்கைத்தாய்! கொடுக்கக் கொடுக்க ஆனந்தம் கரைபுரண்டோடியது தாய்க்கு.

மனிதனுடைய சிந்தனையிலிருந்தும் செயலிலிருந்தும் உண்டான காரியங்களை எண்ணிக் கணக்கிட முடியாது. பசுவின் மடுவிலிருந்து பால் சொரிவது போல, பூமா தேவியின் மடியிலிருந்து பொன்னும் மணியும் உணவும் உடையும் சொரியும் படி செய்திருக்கிறான். உழவுக்கலையை உண்டாக்கி உலகை நிலைபெற வைத்திருக்கிறான். எத்தனையோ தொழில்களைச் செய்திருக்கிறான். பொருள்களைப் புதிது புதிதாக உற்பத்தி செய்து மலை மலையாகக் குவிக்கிறான். யந்திரங்களை உண்டாக்குகிறான். மருந்து, வாகனம், ஆகியவைகளைக் கண்டுபிடித்திருக்கிறான். சோதிடம், விஞ்ஞானம், வானியல், பூமி இயல், தாவர இயல், உயிரியல், உடலியல் எல்லாவற்றிலும் இறங்கி நீந்திக் கரை காண்கிறான்.

கோவில் கட்டி இருக்கிறான். தேர் என்றும் திருவிழா என்றும் உண்டாக்குகிறான். தனக்கென்று வீடுகட்டி இருக்கிறான். மனைவி, மக்கள், உற்றார், உறவினர் நண்பர் என்று வைத்து உறவாடித் திளைக்கிறான்.

தனித்து இருந்து கொண்டே தெருவோடும், ஊரோடும், சமூகத்தோடும் சேர்ந்து செயல்படுகிறான். பழகுகிறான், உறவாடுகிறான். சண்டை போடுகிறான், சமாதானம் அடைகிறான். மனிதனுடைய காரியங்களை இப்படி அப்படி என்று நிர்ணயம் செய்ய முடியவில்லை. எப்படி எப்படி எல்லாமோ நெளிந்து வளைந்து ஓடிக் கொண்டிருக்கிறது மனிதகாரியம். ஆனாலும் மொத்தத்தில் மனித காரியத்தில் ஒரு ஒழுங்கு இருக்கிறது. படிப்படியாக மேலே மேலே உயரும் ஒரு முன்னேற்றமும் இருக்கிறது மனிதன் வளர்ந்து கொண்டே வருகிறான். அவனுடைய மூளை, செயல், நுட்பம், ஆராய்ச்சி, புலமை எல்லாவற்றிலும் ஒரு ஆவேசம் இருக்கிறது வேகம் இருக்கிறது, நயமும் இருக்கவே செய்கிறது. உணர்ச்சியற்ற மரக்கட்டை போல மனித சமூகம் அங்கொரு சமயம், இங்கொரு

சமயம் என்று திகைப்பது உண்டுதான். பேதலித்துப் பரக்கப் பரக்க விழிப்பதும் உண்டுதான். செய்வதறியாது தலையைப் பிய்த்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடுவதும் உண்டுதான். சில சமயம் அலறும். சில சமயம் கூப்பாடு போடும். சில சமயம் ஒப்பாரி வைக்கும். ''எல்லாம் போய்விட்டது ஒன்றும் இல்லை. என்று சில சமயம். கையை விரித்துவிடும். காலை நீட்டி நிமிர்ந்து விடுவதும் உண்டு. ஆனாலும் மனிதசமுதாயம் பின்னோக்கிப் போவதில்லை. தோற்றது இல்லை. கையில் உள்ள எதையும் அது நழுவவிட்டதும் இல்லை.

உபயோகம் இல்லாதவற்றை அது உதறி எறியும். உபயோகம் ஆனவற்றை உண்டாக்கிக் கொள்ளும். இதுதான் மனித சமுதாயத்தின் வரலாறு.

சகல சம்பத்துக்களுக்கும் அதிபதியாய், படை பட்டாளத்தோடு பிரபஞ்சத்தையே ஆட்சி பண்ணுகிறான் மனிதன். அவனுடைய வாழ்க்கை அலங்காரமான தர்பார். தர்பார் நடத்த வசதியாக அவன் கையில் வைத்திருக்கிறானே. குடும்பம்-அதாவது இல்லறநெறி அதுதான் மனிதனுடைய கொலு மண்டபம்.

கடவுள் எப்பொழுதும் ஆனந்த சொரூபியாக இருக்கிறார். ஆனந்தமயமாக இருப்பதற்காக எப்பொழுதும் செயலாற்றிக் கொண்டே இருக்கிறார். பேரண்டம் முழுவதும் அவருடைய செயல்தான். அவருடைய திருவருள்தான்.

மனிதனும் அப்படித்தான். அவன் சும்மா இருப்பதில்லை. ஏதாவது செய்துகொண்டே இருக்கிறான். அவனுடைய கைபடாத காரியம் இந்த உலகில் ஒன்றும் இல்லை. வயலோ, தோப்போ, துணியோ, நகையோ, கல்யாணமோ, திருவிழாவோ, கோவிலோ, விஞ்ஞானமோ, சங்கீதமோ எல்லாம் மனிதனுடைய செயல்தான்.

கடவுளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறான் மனிதன்.

அப்படி இருந்தும் மனிதன் ஏன் கஷ்டப்படுகிறான். எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைக்க வேண்டிய மனிதன் எப்பொழுதும் துயரப்பட்டுக் கொண்டே இருக்கிறான். தன்னைச் சுற்றி தொல்லைகள் அணிவகுத்து நிற்பதாகவே சதா பதறுகிறான் மனிதன்.

பயத்திலிருந்து தப்பிக்கப் பொய் சொல்லுகிறான், ஏமாற்று கிறான், பித்தலாட்டம் பண்ணுகிறான், குடிக்கிறான், சூதாடு கிறான், அடிமை ஆகிறான், அதிகாரம் பண்ணுகிறான், வெறுக் கிறான், ஒதுங்குகிறான். யாராவது ஒட்ட வந்தால் சீறிக் கொதிக்கிறான்.

நடராஜ மூர்த்தியைப் போல சதா களிநடம் புரிந்து இன்பத் தில் திளைக்க வேண்டிய மனிதன் ஏன் இப்படிக் கேவலமான கோமாளிக்கூத்து ஆடவேண்டும்? ஆடி ஆடி விலை மதிக்கமுடியாத உடம்பை, மனசை, உயிரை, ஏன் வாழ்க்கை முழுவதையுமே குத்திக் குத்திப் புண்படுத்த வேண்டும்? இது விளங்காத புதிராகவே இருக்கிறது. எல்லை அற்ற பிரபஞ்ச வெளி முழுவதையும் கண்டு தெளிகிறான் மனிதன். அணுவுக்குள் அணுவான பரமாணுவின் நடவடிக்கைகளைக் கூடப் பார்த்து விடுகிறான். பூமி, சூரியன், சந்திரன் எல்லாவற்றையும் நிறுத்து எடை போட்டுச் சொல்லு கிறான். அளந்து காட்டி விடுகிறான். அப்படி அற்புமான காரியத்தைச் செய்து விடுகிறது மனித மனம்.

ஆனால் அந்த மனத்தால்கூட மேலே சொல்லிய முரண் பாட்டைப் பார்க்க முடியவில்லை. ஏன் தொல்லைப் படுகிறோம், வேதனைக்கு ஆளாகிறோம் என்று மட்டும் யோசிக்க முடிய வில்லை.

ஏன் யோசிக்க வில்லை என்று கேட்டால், யோசிக்க நேரம் எங்கே இருக்கிறது என்று ஓடுகிறது மனம்! ஆம், உண்மைதான். அது நொடிக்கு நொடி சமாளிக்க வேண்டிய பிரச்சனைகள் எத்தனையோ காத்து நிற்கின்றன. அப்படி பிரச்சனைகளை இழுத்துப் போட்டுக் கொண்டுவிட்டது மனம்.

ஏன் அப்படி இழுத்துப் போட்டுக் கொண்டது? அது ஒரு விநோதமான காரியந்தான்.

தன்னைப் பற்றித் தெரிய வேண்டுமே என்னும் புத்தி அதற்கு வரவில்லை. வரவில்லை என்று சொல்வதை விட பயந்து விட்டது என்று சொல்வதுதான் பொருத்தம். தன்னைப் பற்றி யோசித்தால் தன்னுடைய வேஷம் கலைந்து விடுமே என்னும் பயந்தான் காரணம்.

யோசிக்கிற பழக்கம் இருந்தால் அல்லவா புத்தி இருக்கும்? புத்தி கெட்டுப் போய்விட்டது. அதனால் மனித மனம் உல்லாசம் சந்தோசம் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. செழிப்போடுவாழ்வது போல் பாசாங்கு பண்ணுகிறது. நொந்து நொந்து சாகிறது.

இப்படி ஒரு அலங்கோலம் ஏன் ஏற்பட்டது என்று சாதாரண மக்கள் யோசிப்பதில்லை. யோசிக்க அவர்களுக்கு நேரமும் இல்லே.

உண்மையை உணர்ந்த பரம பக்தர்கள். உண்மையை நாடி அதன் பின்னால் எங்கெங்கோ தேடித் திரியும் ஞானிகள் - அன்பு மயமான - நீதியின் திரு உருவமாகத் திகழும் அருளாளர்கள் - குறளாசிரியர் போன்ற உத்தம சீலர்கள் யோசித்துப் பார்க்கிருர்கள்.

மனிதன் ஏன் புண்பட்டு நோவ வேண்டும் என்று யோசிக்கிருர் கள். ஏன் மனிதன் பயப்படுகிறான்? தன்னை மறைத்து ஏன் வேஷம் போடுகிறான்? என்று யோசிக்கிறார்கள்.

கள்ளம் கபடம் இல்லாத உத்தமர்களும் இருக்கிறார்கள். பழி பாவத்துக்கு அஞ்சாத அயோக்கியர்களும் இருக்கிறார்கள். ஏன் இப்படி மனித இனம் பிளவுபட்டு நிற்க வேண்டும் என்று திகைக் கிருர்கள்.

நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில், ஏன் லட்சோப லட்சம் வகைகளில் மனிதனிடம் அறப் பண்புகளும் மறப்பண்புகளும் பெருகி வளர்கிறதைப் பார்த்துப் பார்த்து வியக்கிறார்கள். நெறி முறை இல்லாமல் வெறும் கிறுக்குத்தனமாக அல்லவா போய்க் கொண்டிருக்கிறது மனித வாழ்க்கை என்று யோசிக்கிறார்கள்.

வெறுப்போ, எரிச்சலோ அவர்கள் பார்வையில் இல்லை. அன்பும் அருளும் அவர்கள் பார்வையில் நிறைந்திருக்கின்றன.

குறளாசிரியர் இந்த உலகத்தைப் பார்க்கிறார். மக்களேப் பார்க்கிறார். நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லோரையும் பார்க் கிறார். படபடப்போ, அவசரமோ குறளாசிரியரிடம் இல்லை.

பண்பாடும் சீலமும் நிறைந்த மனிதர்களைப் பார்க்கிருர். அவர்கள் ஆனந்தமாய் இருக்கிற நயத்தைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறார். "மனிதர்களிடம் கசிந்து சுரக்கிற அன்பு உலகையே சந்தோசப் படுத்துகிறதே/கொடுமைகளை எல்லாம் கரைத்து விடுகிறதே/எல்லோரையும் ஒன்றுபடுத்தி விடுகிறதே/ ஆரவாரமும் கும்மாளியுமாக வாழ்க்கையை ஜொலிக்க வைக்கிறதே/என்ன அற்புதம் இது" என்று வியந்து விடுகிறார்.

அப்படியே தாமுண்டு தம்காரியம் உண்டு என்னும் ஜனங்களை யும் பார்க்கிறார். எதையும் ரூபாய் அணா பைசாவாகத்தான்

இவர்கள் பார்க்கிறார்கள். தங்கள் பிழைப்புக்கு என்ன வழி என்பது தான் இவர்களுக்கு யோசனை. உலகம் எக்கேடு கெட்டாலும் சரி. அதுபற்றி இவர்களுக்கு ஒன்றும் இல்லை. நான் என்னும் முனைப்பிலேயே இவர்கள் இருக்கிறார்கள்; அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஒழுங்காக நடப்பதும் அதற்குத்தான். ஒழுங்கீனமாக நடப்பதும் அதற்குத்தான்.

இவர்களிடம் உண்மை இல்லை, அன்பு இல்லை, பொறுமை இல்லை, அறிவே இல்லாத மடஜென்மங்கள் இவர்கள்.

இனி, இழி தொலையே பிழைப்பாக வைத்து நடத்துகிற கயவர்களும் இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் இவர்கள் ஊடுருவி இருக்கிறார்கள். படித்தவர், பதவியில் இருப்பவர், ஏழை, பணக்காரர், அரசன், ஆண்டி எல்லோரிடமும் கயவர்கள் முளைத்து விடுகிறார்கள்.

இப்படியாக மனிதர்கள் நடமாடுகிற விந்தையை ஆர்வத்தோடு பார்க்கிறார். ஒன்றுக்கொன்று உறவே இல்லை என்று சொல்லும் அளவுக்கு மனிதர்கள் வேறுபட்டிருக்கிறார்கள். உத்தமர், காரியக்காரர், கயவர் என்று வேறுபட்டிருக்கிறார்கள். ஆனாலும் ஒரு சமூகமாய்ச் சேர்ந்து இருக்கிறார்கள். தெருக்காரர், ஊர்க்காரர், நாட்டுக்காரர், என்றெல்லாம் இணைந்து நிற்கிறார்கள்.

எவ்வளவு வேற்றுமையில் எவ்வளவு ஒற்றுமை/அதிசயப் படுகிறார் குறளாசிரியர். முரண்பாடுகளும் வேறுபாடுகளும் எவ்வளவு இருந்தாலும் மனிதன் முன்னேறிக் கொண்டே போகிறான். தடைகளை அகற்றி வெற்றிக்குமேல் வெற்றி பெற்று வீர வாகை சூடிக் கொண்டே போகிறான். இந்த அற்புதம் குறளாசிரியருக்குப் பெருமிதத்தைக் கொடுக்கிறது.

நாமும் எதை எதையோ பார்க்கிறோம். நம்மைச் சுற்றி நடக்கிற காரியங்களைப் பார்க்கிறோம். நமக்கு வேண்டியவர்களையும் பார்க்கிறோம். வேண்டாவதர்களையும் பார்க்கிறோம். நாம் பார்க்கிறதுக்கும் குறளாசிரியர் பார்க்கிறதுக்கும் வேறுபாடு அதிகம். ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லை என்று சொல்லும் படி அத்தனை வேறுபாடு.

நாம் ஒன்றைப்பார்க்கிறோம் என்றால் நம்மனதில் ஏற்கனவே ஏறி உட்கார்ந்திருப்பவற்றை அவற்றின் மேல் இறக்கி வைப்பதற் காகவே பார்க்கிறோம். குறளாசிரியர் காரியம் அப்படி அல்ல. திறந்த மனதோடு ஒவ்வொன்றையும் பார்க்கிறார். கள்ளம் கபடம் இல்லாத ஆர்வத்தோடு ஒவ்வொன்றையும் பார்க்கிறார். அவர் உள்ளத்தில் மூட்டை முடிச்சு ஒன்றும் இல்லை. பளிங்கு போன்ற சுத்தமான தூய அன்புதான் அவர் உள்ளத்தில் இருக்கிறது.

மேலும் குறளாசிரியர் ஒன்றைப் பார்க்கிறார் என்றால்-மனித னுடைய சோம்பலைப் பார்த்தாலும் சரி, சுறுசுறுப்பைப் பார்த் தாலும் சரி, பயிர் ஏறி திமு திமு என்று நிமிர்ந்து நிற்கிற வயலைப் பார்த்தாலும் சரி, கல்லும் முள்ளுமாய்க் கிடக்கிற கட்டாந் தரையைப் பார்த்தாலும் சரி, எதைப் பார்த்தாலும் அதையே பார்க்கிறார். அதன் ஒவ்வொரு அசைவையும் பார்க்கிறார். அணு அணுவாக அதைப் பார்த்து விடுகிறார் ‘இதைப்பற்றி ஒரு பிரசங்கம் பண்ணவேண்டும் என்றோ, ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்றோ அவர் ஒன்றையும் பார்ப்பதில்லை.’

வெளிஊரில் பலநாள் சுற்றி அலைந்துவிட்டு ஒருவன் வீட்டுக்கு வருகிறான். அவன் தன்னுடைய மனையாளை, குழந்தைகளை, பசுவை, வீட்டை, நண்பர்களை எல்லாவற்றையுமே ஆசையோடு பார்ப்பான். அப்படி ஆசையோடு பார்க்கிறார் குறளாசிரியர்.

தன்னை மறந்து பார்க்கிறார். எதைப் பார்க்கிறாரோ அதாகவே ஆகிவிடுகிறார் குறளாசிரியர். பார்க்கிற பார்வையில் தன்னையே இழந்து விடுகிறார் குறளாசிரியர்.

நாம் வேறு மற்றவை வேறு என்னும் பேத உணர்ச்சி இருந்தால் ஒன்றைப் பார்த்து உருக முடியாது. கரைய முடியாது, காரணம் நான் என்னும் ஆணவம் தடித்தனமாக நிற்கும். அன்பு சுரக்காது. அன்பு இல்லாவிட்டால் பார்க்கிற பார்வையில் ஒன்றுபட முடியுமா? ஆர்வம் பொங்குமா? சேற்றில் விழுந்து அழுது கொண்டு வரும் குழந்தையைப் பார்த்த தாய் பதறுவது போல மக்களின் அலங்கோலத்தைப் பார்த்து மனம் துடிக்குமா? மற்றவர்களின் பெருமையையும் சிறப்பையும் பார்த்து மனம் துள்ளிக் குதிக்குமா?

திருமண அலங்காரத்தோடு தன் பெண் மணமகனுடன் சேர்ந்து நிற்கிறதைப் பார்த்து தாயின் உள்ளம் பெருமிதத்தில் விம்மும். மனிதர்களுடைய பண்பாட்டை, அன்பை, வீரத்தை, பொறுமையைப் பார்த்துப் பார்த்து, குறளாசிரியரின் உள்ளமும் பெருமிதப்பட்டு விம்முகிறது. திருப்பாற்கடலே மகிழ்ந்து புளகாங்கிதம் அடைந்தால் எப்படி இருக்கும்? ஆனந் தத்தில் அப்படி நிறைந்து பொங்குகிறார் குறளாசிரியர்.

ஆசை பொங்கப் பொங்க ஒவ்வொன்றையும் பார்க்கிறார் குறளாசிரியர். அவர் அப்படிப் பார்ப்பதைத் தமிழ் பார்க்கிறது. வார்த்தைகள் சிறகடித்துக் கொண்டு இசையோடும், தாளத் தோடும் நான் முந்தி, நீ முந்தி என்று ஓடி வருகின்றன. குறளாசிரி யரையும் அவர் அனுபவிக்கிற நயத்தையும் பார்ப்பதற்கென்றே ஓடிவருகின்றன வார்த்தைகள்.

தமிழானது நன்றாகப் பார்ப்பதற்கு இடம் பண்ணிக் கொடுக் கிருர் குறளாசிரியர். நாமும் பார்த்து அனுபவிக்க இடம் பண்ணிக் கொடுக்கிறார் குறளாசிரியர்.

குறளாசிரியர் உண்மையைப் பார்த்து அனுபவிப்பதோடு சரி. உணர்ச்சிமயமாக அனுபவிக்கிறாரே அதோடு சரி. தமிழானது குறளாசிரியரின் அனுபவத்தோடும் ஆனந்தத்தோடும் சேர்ந்து கரைகிறது, ஆனந்த பரவசத்தை கோலம் போட்டுக் காட்டுவது போல் காட்டிவிடுகிறது. வார்த்தைகளைக் கொண்டு, அதாவது தாளத்தையும், இசையையும் வைத்து கோலம் போட்டு விடுகிறது தமிழ். உண்மை, உணர்ச்சி இவற்றுக்கு உருவம் கிடைத்து விடுகிறது. சாகாவரத்தோடு கூடிய கலை உருவம் கிடைத்து விடுகிறது. அதையே நாம் கவி என்கிறோம்.

உண்மை உணர்ச்சியானது மேலே மேலே பொங்கி எழுந்து எப்படிக் கலை உருவம் பெறுகிறது என்று பார்ப்போம்.

மாட மாளிகை கூட கோபுரம், வயிர வைடூர்யம், அதிகாரம், பதவி இவை இல்லாவிட்டாலும் பலர் ஆனந்தமாக இருக்கிறார் கள். நிம்மதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மற்றவர்களிடம் பொறாமை இல்லை. எரிச்சல் இல்லை. பயம் இல்லை. திருட்டுத் தனம் இல்லை. கவலையும் இல்லைதான்.

அப்படி இருப்பவர்கள் தானே அறிவுடையவர்கள்!

அறிவுடைய மக்கள் பலரை குறளாசிரியர் பார்த்திருக்கிறார். அவர்களோடு பழகி இருக்கிருர். அவர்களுடைய ஆனந்தத்தோடு கரைந்து ஆனந்த பரவசம் அடைந்திருக்கிறார்.

அவருடைய பரவச உணர்ச்சியை தமிழ் எப்படி எடுத்துப் பரி மாறுகிறது என்று பாருங்கள்.

''அறிவுடையார் எல்லாம்
உடையர்.''

இனி, ஒரு மனிதனிடம் நீர்வளமும், நிலவளமும் மிக்க நன் செய் நிலம் நாற்பது ஏக்கர் இருக்கிறது. தோப்பு வேறு இருக்கிறது. பாங்கியில் பத்து லட்ச ரூபாய் டெபாசிட்டில் போட்டிருக்கிறான். நவரத்ன கசிதமான ஆபரணங்கள் என்ன, வெள்ளிப் பாத்திரங்கள் என்ன, தங்கப் பாத்திரங்கள் என்ன எல்லாம் இருக்கின்றன. ஒரு மந்தை என்று சொல்லும்படி பல மாடுகள் இருக்கின்றன. பல வீடுகள். சொன்னபடி கேட்கும் வேலைக்காரர்கள் பலர்.

பூமாதேவியும் லெட்சுமிதேவியும் அவன் வீட்டில் கொலு விருக்கிறார்கள். அழகானமனையாள் இருக்கிறாள். ஆண்குழந்தை கள், பெண் குழந்தைகள். எல்லோரும் படித்துப் பெரிய பதவியில் இருக்கிருர்கள்.

எல்லாம் இருக்கிறது மனிதனிடம். ஆனால் அவன் மனதில் நிம்மதி இல்லை. அடுத்த வீட்டுக்காரன் தன் வீட்டை விட ஒரு முழம் உயர்த்திக் கட்டிவிட்டான். அவன் உடம்பும் ஆரோக்கிய மாக இருக்கிறது. அவன் வீட்டுப் பசு நான்கு பக்காபால் கறக்கிறது இவன் வீட்டுப் பசு மூன்றே முக்கால் பக்காதான் கறக்கிறது. இப்படி எத்தனையோ விபரங்கள் வருகிறவர்கள். போகிறவர்கள் சொல்கிறார்கள்.

மனிதன் தவியாய்த் தவிக்கிறான். எரிச்சலில் புழுங்குகிறான். ரத்தம் கொதித்து விடுகிறது. உறக்கம் வரமாட்டேன் என்கிறது. வயல், தோப்பு, மனைவி, மக்கள் ஒன்றிலும் ருசியில்லை மனித னுக்கு. ரத்த வெறி பிடித்த காட்டேரி போல ஆகிவிடுகிறான்.

அவனிடம் என்ன இருந்து என்ன பயன்?

குறள் முழுவதையும் பார்க்கலாம்.

''அறிவுடையார் எல்லாம்
உடையர்; அறிவிலார்
என்னுடைய ரேனும்
இலர்.''

உண்மையானது உணர்ச்சிமயமாகப் பொங்குகிற அற்புதத்தைப் பார்க்கிறோம். அது தமிழோடு தமிழாய்க் கரைந்து பரிமளிக்கிறதையும் பார்க்கிறோம். தமிழ் வார்த்தைகள் துள்ளிக் குதித்து இசையோடு ஆடுகின்றன. உணர்ச்சி பாவத்தின் ஒவ்வொரு சாயலையும் அபிநயம் பிடித்துக் காட்டுகிறது தமிழ்.

ஒன்றை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதற்குப் புத்தி எவ்வளவோ வேண்டும். புத்தி இல்லாவிட்டால் ஒவ்வொன்றையும் அவன் கோலப்படுத்தவே முடியும். மற்றவற்றை அழகாக வைத்துக் கொள்ள - சந்தோஷமாக வைத்துக் கொள்ள அன்பு எவ்வளவு ஊறவேண்டும்? அன்பு ஊறாதவனிடம் புத்தி எப்படி இருக்கும்?

மனையாளை, மக்களை, உடம்பை, மனசை, புகழை, நாணயத்தை. இப்படி ஒவ்வொன்றையும் கலகலப்பாக வைத்துக் கொள்வதற்கு எவ்வளவோ ஞானம் வேண்டும். வீரம் வேண்டும். அதற்குத் தான் அறிவு என்று பெயர்.

தன்னை நன்றாக வைத்துக் கொள்ளாதவன் உலகில் எதைத் தான் ஒழுங்காக வைத்துக் கொள்வான்.

அவன் மனிதனே அல்ல. வெறும் மிருகம். ஏதோ மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் சவம் - செத்த சவம் என்று தான் அவனைச் சொல்ல வேண்டும்.

பாம்பை மிதித்தவுடன் பயம் உண்டாகும். அது இயல்பு, பிறகு பயம் ஓடிவிடவேண்டும். அப்படி ஓடாவிட்டால் பைத்தியம் பிடித்து விடும். அதேபோல், ஒரு தவறு கண்டவுடன் கோபம் வரும். கோபம் வருவது இயல்பு. அந்தக் கோபம் பிறகு ஓடிவிட வேண்டும். மூளையில் உண்டான கொதிப்பு, எரிச்சல், எல்லாம் தணிந்து விட வேண்டும்.

தணியாமல் அப்படியே இருக்குமானால், மேலும் மேலும் வெறிபிடித்து ஆங்காரம் ஒன்றே காலூன்றி நிற்குமானால், மனிதன் பிறகு மனிதனாகவா இருப்பான்?

அவன் முகத்தில் களை இருக்குமா? உயிர் இருக்குமா? உணர்ச்சி இருக்குமா? ஒளிதான் இருக்குமா? ஒன்றும் இருக்காது.

வரம்பு மீறி எப்பொழுதும் ஆங்கார வெறியில் இருப்பவன் மனிதன் அல்ல. அவனைப் பார்க்கவே பயமாக இருக்கும். அருவருப்

பாசவே இருக்கும். பேய், பிசாசு, பிணம் தின்னி ஜடாமுனி இவைகளைப் பார்க்க நேர்ந்தால் எப்படிக் குலைபதறுமோ அப்படிக் குலைபதறும்.

அன்பே இல்லாத கொடிய மூர்க்கர்கள் மனிதர்களோடு சேர்ந்து நடமாடத்தான் செய்கிறார்கள். அவர்களுடைய வறட்சியை - கொதிப்பைப் பார்க்கிறார் குறளாசிரியர்.

மற்றவர்கள் அவனைக் கண்டு முகம் சுழிக்கிறதையும் குறளாசிரியர் பார்க்கிறார். "இப்படியும் இருக்கிறானே மனிதன்" என்று அனுதாபப்படுகிறார். கன்றின் பசியைப் பார்த்து பசுவின் மடுவில் பால் ஊறுவது போல குறளாசிரியர் உள்ளத்தின் அவனை நோக்கி அருள் சுரக்கிறது. எல்லோரும் பயந்து வெறுக்கக்கூடிய அளவுக்கு புத்தி கெட்டுப்போய் விட்டானே என்று இரக்கப்படு கிறார். இரக்க உணர்ச்சி எப்படி ஆவேசத்தோடு தமிழைக் கட்டித் தழுவுகிறது என்று பாருங்கள்.

"இறந்தார் இறந்தார்
அனையர் ..........."

இறந்தார் என்றால் வரம்பு மீறியவர்.

தன்னுணர்வே இல்லாமல் உள்ளமும் உடலும் நிலைதடுமாறிப் போன பின் ஒருவன் மனிதனாக இருக்க முடியாது. மனிதத் தன்மை அவனிடம் செத்துவிட்டது. அதனால் தான் அவனை இறந்தார் என்று சொல்லி இருக்கிறது.

அக்கினி சொரூபமாகத் தோன்றும் கோப வெறியன் மனிதன் இல்லை. "இறந்தார் அனையர்" செத்த பிணம் போல அருவருக் கத்தக்கவன். அவன் ஆவி உருவில் நடமாடும் பேய். அதாவது ரத்த வெறி பிடித்த காட்டேறி ஆவான்.

ஆங்கார வெறியன் நிலையைக் கண்டு இரக்கப்படுகிறார் குறளாசிரியர். உருகி ஓடும் அவருடைய அனுதாப உணர்ச்சி வெட்டொன்று துண்டிரண்டு என்று கண்டிப்போடு பேசுகிறது.

இனி, மற்றவர்களுடைய குற்றம் குறைகளைத் தாங்கிக் கொள் கிறவர்களையும் குறளாசிரியர் பார்க்கிறார். துரோகம், வஞ்சகம், இவற்றைக்கூடப் பொறுத்து நல்லதே செய்கிறவர்களையும் குறளாசிரியர் பார்க்கிறார்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தயாள மூர்த்திகள் இருக்கிறார்கள். மற்றவர் பிழையைப் பொறுத்து நன்மை செய்கிற புண்ணிய மூர்த்தி இருக்கிறார்கள். தாயென்றும், தந்தை என்றும், காதலர் என்றும். சகோதரர் என்றும், நண்பர் என்றும் நம்மைச் சுற்றியே இருக்கிறார்கள்.

கொஞ்சம் பின்னோக்கி யோசித்துப் பார்த்தால் யாரோ ஒருவரிடம். ஏதோ ஓரு கட்டத்தில் பிழை பொறுத்து அருள் பாலித்தது நம்மிடமும் இருக்கும். மனித வாழ்க்கையில் தெய்வாம்சம் பொருந்தியது என்றால் அது ஒன்றுதான்.

ஆனால் அதைப் பற்றி யோசிப்பதில்லை நாம். யோசித்துப் பார்த்தால் அதன் மணம் இன்னதென்று தெரியும். தொடர்ந்து அப்படி வாழ நம்மை அது தூண்டும்.

பொறையுடைமை இன்னதென்று தெரியும். அதன் தெய்வ ஒளி நம்மீது விழுந்து நம்மை தெய்வப் பிறவியாக உயர்த்துகிற அற்புதமும் தெரியும்.

மற்றவர்கள் செய்யும் பிழைகளை ஒருவன் பொறுத்துக் கொள்கிறான். அதை மறந்தும் விடுகிறான். அது மட்டும் அல்ல, கேடு செய்தவனுக்கும் நன்மையே செய்கிறான். அதற்காக தன் உடல் பொருள் ஆவி எதற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் அவன் பின்வாங்குவதில்லை.

அப்படியானால் அவனை தெய்வத்தோடு சேர்த்துத் தானே பார்க்க வேண்டும்? தேவர்களுக்காக நஞ்சை உண்டு அமிர்தத்தை வழங்கிய சிவபெருமானோடு சேர்த்த வைத்துத் தானே அவனைப் பார்க்க வேண்டும்?

குறளாசிரியரும் அப்படியே பார்க்கிறார். மற்றவர் செய்யும் தவறு "ஏதோ மனுச காரியம் அப்படித்தான்" என்று ஒதுக்கித் தள்ளிவிடுகிறவர்கள் - அதாவது சினத்தைத் துறந்தவர்கள், மனித உருவில் நடமாடும் தெய்வங்கள் என்கிறார் குறளாசிரியர்.

உண்மையைக் கண்டு, மயக்கம், பேதைமை, பொய் இவற்றை எல்லாம் உதறித் தள்ளி விட்டு ஆனந்த சொரூபிகளாய் நடமாடுகிறார்களே ஞானிகள் - அவர்களுக்குக் கூட வழிகாட்டும் உத்தமர் இந்தப் பொறுமைசாலிகள் என்கிறார் குறளாசிரியர்.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

''இறந்தார் இறந்தார்
அனையர்; சினத்தை
துறந்தார் துறந்தார்
துணை.''

(துறந்தார் துணை-பற்றற்ற ஞானிகளுக்கு வழி காட்டும் உற்ற துணை).

பாடலைப் பாடிக் கொண்டே இருக்கலாம். மாறி மாறி நாவானது பாடலைப் பாடிக் கொண்டே இருக்கும். பாடப் பாட நாவிற்கு ருசி ஏறும். அப்படிக் கல்க்கண்டாய் இருக்கிறது குறள். சுவைக்கச் சுவைக்கத் தேனூறும் கல்க்கண்டாய் இருக்கிறது குறள்.

இரண்டிரண்டு சீர்களாக நிறுத்தி அவசரப்படாமல் மெள்ள மெள்ளப் பாடிப் பார்க்க வேண்டும். ராகத்தைப் பிடிக்கிறது. அதைத் தொட்டுக் காட்டுகிறது. பீர்க்கா அடிக்கிறது. ஆலாபனை, சுரம்,தாளம் ஒன்றும் வேண்டியதில்லை. நம் தொண்டைக்கு ஏற்ற படி நிறுத்தி அனுபவித்துப் பாடினால் போதும். வசனமாக வாசிக்காமல் பொருளுணர்ந்து பாடினால் போதும்.

தமிழ்ப் பண்பானது குறளாசிரியரின் இதயத்தோடு சேர்ந்து உண்மைக்கு எப்படி உயிர் கொடுக்கிறது. ஒளி கொடுக்கிறது. என்பது தெரியும்.

உண்மை உணர்ச்சியானது ஒளியும், உயிரும் பெற்று கவியாக உருவெடுக்கிற அற்புதமும் தெரியும்.

இனி, தவத்தில் எல்லாம் மேலான தவம் பற்றி கவிஞர் சொல்கிறதைக் கேட்போம். பூமிக்கு மனிதர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். போய்க் கொண்டும் இருக்கிறார்கள். எப்படி வருகிறார்கள். எப்படிப் போகிறார்கள் என்பது ஒன்றும் தெரிவதில்லை. அதைப் பற்றி ஒருவரும் யோசிப்பதில்லை. நம்மைப் பற்றிய யோசனை அறவே போய்விட்டது. ஆனாலும் அபூர்வமாய் சில சம்பவங்கள் எப்பொழுதுதாவது திடுதிப்பென்று தோன்றுகின்றன. நாம் யார் என்று நம்மை யோசிக்க வைக்கின்றன.

இப்பொழுது ஐம்பது ஐம்பத்து ஐந்து வயதைத் தாண்டி பூமியில் இருக்கிறவர்கள் புண்ணியம் செய்தவர்கள். கருணாகர மூர்த்தியாகிய கடவுள், காந்தி மகான் என்னும் பெயரோடு நம்மோடு இருந்தார். அவருடைய திருமேனியைக் கண்ணாரப்

பார்த்தோம். தெள்ளத் தெளிந்த அமிர்தம் போன்ற அவருடைய மெய்யுரைகளைக் கேட்டோம். அவரைச் சுற்றிச் சுற்றி வந்தோம். பக்கத்தில் நின்றோம். தொட்டுக் கூடப் பார்த்தோம். அவர் நம் முன்னே நடந்தார். நாம் அவர் பின்னே போனோம்.

இந்தப் பாக்கியம் நமக்கென்று தவம் பண்ணிக் காத்திருந்தது போல் இருந்தது. நமக்கென்று இறங்கி வந்தது போல் வந்தது.

தொலைத்து விட்ட பொக்கிஷத்தை - சத்தியம் என்னும் பொக்கிஷத்தை நம் கையில் கொண்டு வந்து கொடுத்தார். அழுத்தமாய் இறுகி மூடிய நம் கைகளைப் பிரிப்பதற்கு அவர் என்ன பாடுபட்டார்?

நமக்காகவே அவர் பட்டினி கிடந்தார். நமக்குப் புத்தி வருவதற்காகவும், நம் பைத்தியம் தெளிவதற்காகவுமே அவர் பட்டினி கிடந்தார்.

நாமும் பட்டினி கிடக்கிறது உண்டு. நம் தேகத்துள் நோய் புகுந்து அட்டகாசம் பண்ணினால், அதை மடக்குவதற்குப் பட்டினி கிடப்போம். ஏறுக்குமாறாக மனைவி, நடந்து கொண்டால், அவளை வழிக்குக் கொண்டு வர புருஷன் பட்டினி கிடப்பான். புருஷனுடைய போக்கு ஒரு மாதிரி இருக்கிறது. அது ஒழுங்குபட வேண்டும் என்னும் ஆத்திரத்தில் பெண்சாதி பட்டினி கிடப்பதும் உண்டு.

பரீட்சையில் தோற்றுப் போன குழந்தைகள் பெற்றோர்களைச் சரிக்கட்ட பட்டினி கிடப்பார்கள்.

எல்லாம் அவரவர் காரியத்துக்குத்தான். மற்றவர்களுக்காக பட்டினி கிடந்தவர் காந்தி மகான் ஒருவர்தான். அவர் உலக நன்மைக்காக பட்டினி கிடந்தார். சமுதாய நீதிக்காக பட்டினி கிடந்தார்.

இந்துக்களும் மனிதர்கள். முஷ்லீம்களும் மனிதர்கள். அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை போடுவது கொடுமை. அவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர் ஒருவர் தானே பட்டினி கிடந்தார்.

ஹரிஜனங்கள் நம் சகோதரர்கள். அவர்களைக் கொடுமைப் படுத்துகிறோம். அது பெரிய பாவம். அந்தப் பாவம் தொலைய நான் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று இருந்தவர் அவர் ஒருவர்தானே?

ஒருவேளை இருவேளைப் பட்டினியோடு முடித்துக் கொண்டாரா? இல்லையே! "நாம் செய்வது அயோக்கியத்தனம். அறிவு கெட்ட செயல்" என்னும் உண்மை, மக்களுக்கு விளங்க வேண்டும். அப்படி விளங்கும் வரை நான் பட்டினி கிடக்கிறேன். ஜனங்களுக்கு உண்மை விளங்கவே மாட்டேன் என்றால், இந்த அநியாயத்தைச் சகித்துக் கொண்டு என்னால் மூச்சுவிட முடியாது. உயிர் போகும் வரை பட்டினி கிடக்கிறேன்" இப்படி மனிதகுல நன்மைக்காக உண்ணாவிரதம் இருந்தவர் அவர் ஒருவர்தான்.

அதனால் தான் அவரை மகாத்மா என்று உலகம் வாழ்த்தி வணங்கியது. குறளாசிரியரும் காந்தி மகான் போன்ற உத்தமரைப் பார்த்திருக்கிறார். அடடா பெரியர் என்றால் இவரல்லவா பெரியர் என்று மனம் கசிந்து உருகி இருக்கிறார்.

தெய்வ விளக்காக வந்து மனிதர்களுக்கு நல்வழிகாட்டிய காந்தி மகானையே வாய்க்கு வந்தபடி திட்டினார்கள் சிலர். அவரைக் கோமாளி என்றார்கள். பக்கிரி என்றார்கள். நாகரீகம் தெரியாத காட்டுமிராண்டி என்றார்கள். இருண்ட வாழ்க்கைக்குள் அழைத்துச் செல்லும் வஞ்சகன் என்றார்கள், துரோகி என்று கூடச் சொன்னார்கள்.

எழுதப் படிக்கத் தெரியாத அப்பாவிகள் சொன்னால் கூடக் குற்றம் இல்லை. ஏதோ, அனாமதேயப் பேர்விழிகளின் உளறல் என்று தள்ளிவிடலாம்.

பெரிய பெரிய வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பேராசிரியர்கள், தொழிலதிபர்கள், நிபுணர்கள், கட்சித் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ராஜ தந்திரிகள், கலைஞர்கள், கவிஞர்கள். இவர்களில் கூடச் சிலர் காந்தி மகானைக் கேவலமாகப் பேசினார்கள். எழுதவும் செய்தார்கள்.

எவ்வளவு கேவலமாகத் தன்னைப் பற்றிப் பிறர் பேசினாலும் சரி, எழுதினாலும் சரி, காந்தி மகான் ஒருவரையும் வெறுக்கவில்லை. புன்முறுவல் பூத்துத் தாங்கிக் கொண்டார்.

வசவில் இறங்கியவர்களைக் கூட வாழ்த்தினாரே தவிர ஒருவரையும் அவர் வெறுக்கவில்லை.

நல்லதே செய்வது பெரிய காரியந்தான் ஆனால் அந்த நல்லதை ஒருவரும் அங்கீகரிப்பதில்லை. கேடானது என்றுகூட

அதைச் சொல்கிறார்கள். அதற்காகத் தன்னை தொந்தரவு செய்கிறார்கள் என்றால் அதைத் தாங்கிக் கொள்வது எவ்வளவு பெரிய காரியம்?

அந்தக் காரியத்தைக் காந்திமகான் செய்தார். மகாத்மாக்களுக்கெல்லாம் அவர் மகாத்மா ஆகிவிட்டார்.

இதை எப்படிப் பார்த்து எப்படி அனுபவித்து எப்படி வெளியிடுகிறது தமிழ் என்று பாருங்கள்.

''உண்ணாது நோற்பார்
பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின்
பின்.''

(இன்னாச்சொல்—கொடுஞ்சொல். நோற்பாரில் பின் பெரியர்—பழிச்சொல்லைக்கூட ஒருவன் பொறுத்துக் கொள்கிறான் என்றால் அவன் மனிதன் இல்லைதான். தெய்வந்தான் அவன். உலக நன்மைக்காக உண்ணாவிரதம் இருக்கும் மகானுடைய காரியங்கூட. சாதாரண காரியந்தான். பழிச் சொல்லை ஏற்றுத்தாங்கும் செயல் தெய்வச் செயலேதான்.)

மற்றவர்களின் நல்வாழ்வுக்காகப் பட்டினி கிடந்த தியாக மூர்த்தி பெரியவர் தான். அவரை வெல்ல யாரால் முடியும்? அவரை அவர்தான் வெல்ல முடியும்.

உண்ணாவிரதத்தைவிட அவருடைய அருள். பொறுமையில் பூத்த கருணை ஓங்கி உயர்ந்து நின்று விட்டதல்லவா?

இப்படியாக தன்னையே வென்ற மகான் காந்திஜி. அவர் அப்படியே தன்னை நமக்கு கொடுத்துவிட்டார்.

ஒரு மகானுடைய அருளையும், கொடையையும் கண்ணாரக் கண்டு வாயாரச் சொல்கிறது தமிழ்.

கவிக்கலையின் அரிய பண்பாடு அது.

உலகத்தின் உண்மையான செல்வம் மனிதன்தான். மனிதன் என்றால் அவனுடைய எலும்போ, தோலோ அல்ல. அவனுடைய உணர்ச்சிகள் தாம் செல்வம். அன்பு, பொறுமை, ஒழுக்கம், மரியாதை, உபசரிப்பு, இன்பம், ஒற்றுமை முதலிய அறப்பண்புகள் தான் உலகத்தின் உண்மையான செல்வம்.

இந்தச் செல்வத்துக்குத்தான் அருள் என்று பெயர். திருவருள் என்றும் சொல்லலாம்.

யோசனை பண்ணிப் பார்த்தால் இந்த அரிய பெரிய அருள்ச் செல்வத்தைப் பழுதுபடாமல் பாதுகாக்கவே மனிதன் இருக்கிறான் என்பது தெரியும்.

நன்செய், தோப்பு, பசு, காடு, தொழில் எல்லாம் சேர்ந்து மனுசனை வைத்திருக்கின்றன. மழை என்கிற அரிய தத்துவமோ, வயல் முதலியவற்றை தன்னுள் வைத்திருக்கிறது. அதுபோலவே மனிதன் தன்னிடத்தில் அருள்ச் செல்வத்தை வைத்திருக்கிறுன். பழுதில்லாதபடி பாதுகாத்து வைத்திருக்கிறுன்.

எதை இழந்தாலும் அதைத் தேடிக்கண்டு பிடித்துவிடலாம். புதிதாய்த்தேடிச் சேர்க்கவும் முடியும். ஆனுல் அருளை இழந்து விட்டால் அது முடியாது. ஒன்றுமே நடக்காது.

அவன் விலாசமே அதோடு ஒழிந்து போன கணக்குத்தான்.

இந்த உண்மை எப்படிக் கவியாக அவதாரம் எடுக்கிறது என்று பாருங்கள்.

"பொருளற்றார் பூப்பர்
ஒருகால்; அருளற்றுர்
அற்றுர்; மற்(று) ஆதல்
அரிது."

பாடலைப் பாடப்பாட தமிழ் வார்த்தைகள் ஜதியோடு நடனம் ஆடுவது தெரியும். தாளத்தோடு இசையானது சேர்ந்து குழைந்து அபிநயம் பிடிப்பது தெரியும்.

வார்த்தைகளுக்கு உள்ளிருந்தே நட்டுவனார் சிங்கியைத் தட்டித் தாளம் போடுகிறாரோ என்று சொல்லத் தோன்றுகிறது.

மனையாள், மக்கள்,[5] உற்றார், உறவினர், நண்பர், இவர்களைப் போல ஒரு செல்வம், உலகில் உண்டா? தானியம், காய், கனி, புஷ்பம், பால், நெய், கோவில், மூர்த்தி, வழிபாடு, இசை, நடனம், பாடல் இவைதானே மனிதனுக்கு உற்ற துணை?

அன்பு, பொறுமை, இரக்கம், தாராளம், மரியாதை, உபசரிப்பு, பக்தி இவைதான் மனிதனை வாழவைக்கும் நெறி முறைகள்.

வாழும் நெறி என்ன, அதன் முறை என்ன என்பதைத் தெரிந் தவர்களுக்கு அளவறிந்தார் என்று பெயர். அவர்கள் எப்பொழு தும் ஆனந்தமாக இருப்பார்கள். அவர்கள் உள்ளம் கோடி சூரியப் பிரகாசமாய் ஒளி வீசும். மாசு மறுவற்ற உண்மை தர்மதேவதை யாய் அங்கு கொலு வீற்றிருக்கும்.

இந்த அற்புதத்தைக் குறளாசிரியர் பார்க்கிறார். அனுபவிக் கிறார். தமிழும் அனுபவிக்க ஓடி வருகிறது. குறளாசிரியர் தமிழ் அனுபவிக்க இடம் கொடுக்கிறார். அனுபவ ஆனந்தத்தில் ஒன்றித் திளைக்கும் தமிழ் அதிசயத்தை எடுத்துச் சொல்லத் திணறுகிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறது.

நெறிமுறைகளுக்குக் கட்டுப்படாத கயவர்களைப் பார்க்கிறது. அவர்கள் உள்ளம் முழுதும், உணர்ச்சி முழுதும், அவர்களுடைய நினைப்பெல்லாம் பொய்யும் பித்தலாட்டமும் மண்டிக் கிடக் கிறதைப் பார்த்து விடுகிறது.

அளவறிந்தார்களின் அற்புதத்தை எடுத்துச் சொல்ல வழி கிடைத்துவிட்டது என்று எக்களிப்பு உண்டாகிறது தமிழுக்கு.

நுட்பமான உத்தி ஒன்று எப்படி சுழிவாய் வந்து கைகொடுக் கிறது என்று பாருங்கள்.

“அளவறிந்தார் நெஞ்சத்(து)
அறம்போல நிற்கும்;
களவறிந்தார் நெஞ்சில்க்
கரவு.”

அற்புதமான பாடல். உண்மையை உணர்ச்சியோடு கவிஞர் அனு பவிக்கிறதோடு சரி. அந்த ஆனந்தத்தை எடுத்துச் சொல்வது தமிழ்தான். கவிஞரல்ல என்பது பாடலைப் பாடப்பாட தெரியும்.

உண்மையை உணராதவர்கள் எல்லோரும் பொய்யர்கள்தாம். அதாவது களவறிந்தார்தாம். அவர்கள் எதைப்பார்த்தாலும் ரூபாய் அணாப்பைசாக் கணக்கில்தான் பார்ப்பார்கள். அவர் கள் நினைப்பெல்லாம் தன்னலம் ஒன்றுதான். ஆனால் இதைப் பற்றிச் சொல்லவரவில்லை கவிஞர். உலக நன்மையை கருதி உருகி ஓடும் உத்தமர்களின் அற்புதத்தைப் பற்றிச் சொல்ல நினைத்தார். அதிசயத்தை அனுபவிக்க முடிந்ததே தவிர எடுத்துச் சொல்ல முடியவில்லை. தமிழ்ப் பாஷை எடுத்துச் சொல்கிறது. கயவர்களை

நம்முன் கொண்டுவந்து நிறுத்தியே உத்தமர்களை இனங்காட்டு கிறது தமிழ். உண்மையாக இருப்பது இயல்பான காரியம். எளி தான காரியமும் அதுதான். பித்தலாட்டமும் பொய்யும் சிக்க லானவை, முரண்பட்டவை.

எளிதானஇயல்பான உண்மையைத் தொலைத்துவிட்டு-ஆனந் தத்தை எறிந்துவிட்டு, கேவலமான-படுமோசமான காரியங்களில் மாட்டிக் கொள்கிறான் மனிதன். வாழ்நாள் முழுவதும் கவலைப் படுகிறான்.

ஏன் இப்படிப் புத்தி கெட்டுப் போனுன் மனிதன் என்று குறளாசிரியர் யோசிக்கிறார்.

கவிஞரின் யோசனையை வாங்கி தமிழானது விநியோகம் செய்கிற தோரணையைப் பாருங்கள்.

''உண்மைக்கும் உண்மையை லட்சியமாக கொண்ட ஞானி களுக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். எல்லோரும் நல்லவர்கள் ஆகிவிட்டால், அப்புறம், நல்லவர்களை மதிக்க ஆள் இல்லாமல்ப் போய்விடும். இப்படி ஒரு இரக்க உணர்ச்சி காரணமாகத்தான் பலர் நல்வழியை நாடவில்லை.

கிண்டலும் பக்கவெட்டும் மிக்க எடுப்பான நகைச்சுவையில் வைத்து தமிழ் சொல்கிற நயத்தைப் பாடலில்ப் பார்ப்போம்.

''துறந்தார்க்குத் துப்புரவு
வேண்டி; மறந்தார்கொல்/
மற்றை யவர்கள்
தவம்.''

மறந்தார்கொல்—ஓகோ, அதற்காகவா உண்மையை மறந்தார் கள்!அடடா/என்ன பெருந்தன்மை!மற்றவர் என்பது மற்றையவர் கள் எனத் தாளம் போட்டு வருகிறது. குத்தலும் சிமிட்டும் அப்படி அட்டகாசம் பண்ணுகின்றன.)

இனி வேறொரு பாடல்.

மனிதன் மேல் இயற்கைக்கு ஒரு கோபம். நாலாவழியிலும் தன்னை அடக்கித் தலை குனிய வைக்கிறானே மனிதன் என்று கோபம். எப்படியாவது மனிதனைக் கேவலப்படுத்தி அவன் முகத் தில் கரியைப் பூசிவிடவேண்டும் என்று இயற்கைக்கு ஒரு ஆத்திரம்,

பொறுப்பில்லாமல் சிலர் நடந்து கொள்கிறார்கள். அவர்களைக் கையில் வைத்துக் கொள்கிறது இயற்கை. அவர்களைக் கொண்டு மனிதர்களை மட்டந்தட்டுகிறது இயற்கை.

உயிரைக் கொடுத்து உறவாடும் நண்பர்களுக்கே துரோகம் செய்யவைத்து விடுகிறது இயற்கை.

நிழல் போல ஒருவன் கூட இருக்கிறான். நம்முடைய காரியம் எல்லாம் அவனுக்குத் தெரியும். அப்படி ஒன்றாய் இருக்கிறவன் தான் அவன்.

நமக்கும் இன்னொருவனுக்கும் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடக்கிறது. வழக்கு சம்பந்தமான முக்கிய அம்சங்களை எதிரிக்குக் கொடுத்து விடுகிறான் நண்பன். நாம் தோற்றுவிடுகிறோம்.

என்ன செய்ய வேண்டும் நாம். வீடோ, நன்செய்யோ, ரொக்கமோ ஏதாவது அவனுக்குத் தானமாக வழங்கவேண்டும். ஏன்? "அப்பனே, இதை நீ எடுத்துக்கொள். எடுத்துக்கொண்டு என்னை விட்டுவிடு. இன்றோடு உனக்கும் எனக்கும் கணக்கு முடிந்துவிட்டது! என்று தீர்த்துக் கட்டுவதுக்குத்தான்.

இப்படி அலங்காரமாய் எடுத்துச் சொல்கிறது தமிழ். இனிப் பாடலைப் பார்ப்போம்.

"கொடுத்தும் கொளல்வேண்டும்
மன்ற: அடுத்திருந்து
அல்லவை செய்வார்
பகை."

(மன்ற-நிச்சயமாக, அவனை விட்டு விலகுவதில் இளக்காரம் காட்டிவிடக் கூடாது. உறுதியாய் நிற்கவேண்டும். அல்லவை செய்வார்-உடனிருந்து கேடு செய்கிறவன். அவனுடைய விரோதத்தை என்ன விலை கொடுத்தேனும் பெறவேண்டும். ஏனோ தானோ என்று இருந்துவிடக்கூடாது.)

இனிக் கடைசியாக ஒரு பாடல்.

காரியம் இருந்தால்தான் ஒருவன் சொல்கிறதை மற்றவர்கள் காது கொடுத்துக் கேட்பார்கள். பிரயோசனம் இல்லை என்றால், பக்கத்தில் வரமாட்டார்கள்.

இனி ஒருவனுடைய அனுபவங்களையும், ஆராய்ச்சி முடிவுகளையும், உலக நடப்புப் பற்றிய கருத்துக்களையும், கலை அம்சங்

களையும் தொடர்ந்து யார் வந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்? இதயத்தைக் கொடுத்துக் கேட்கிறதும், ஒத்து அனுபவிக்கிறதும் வாய்க்குமானால், அது பெரிய யோகந்தான்.

தொடர்ந்து ஒரு விஷயத்தைப் பற்றித் தகப்பன் சொல்கிறான். என்றால் அவன் பிள்ளைகள் கூடக் கேட்க மாட்டார்கள். மனையாள் எவ்வளவு நுட்பமாக சமையல் பண்ணுகிறாள்? அது எப்படி என்பதை அவள் எடுத்துச்சொன்னால் கணவன் பொறுமையோடு கேட்பானா? ' வேறு வேலை இல்லையா உனக்கு? எனக்கு நேரம் இல்லை. ஆபீஸுக்கு அவசரம்'' என்று ஓடிவிடுவான் புருஷன்.

பொறுமை இல்லாமல், அன்பில்லாமல், உண்மை இல்லாமல் அப்படித் தத்தளிக்கிறது உலகம்.

இந்த நிலைமையில் முன்பின் தெரியாத ஒருவர் வருகிறார், குறளாசிரியரிடமே வருகிறார். இசை, நடனம், நாடகம், கவி, சமயம், தேகஇயல், மனஇயல், சமுதாய இயல் எல்லாவற்றையும் சுத்தமாக அறிந்திருக்கிறார். சிறந்த கல்விமான். உற்சாகமான பேர் வழி. நல்ல ரசிகர். கள்ளம் கபடம் இல்லாதவர்.

ஒத்து அனுபவிப்பதற்கு இப்படி ஒரு பாத்திரம் கிடைத்தால் அது குறளாசிரியர் செய்த புண்ணியந்தானே? தமிழ் செய்த புண்ணியமும் கூடத்தான்.

குறளாசிரியரும் நண்பரும் சேர்ந்து தமிழையும் பாடல்களையும் அனுபவித்தார்கள். ஒவ்வொரு துறையாக அனுபவித்தார்கள். நேரம் போவதே தெரியாமல் பகலும் இரவும் அனுபவித்தார்கள். ஆனந்தமும் அனுபவமுந்தான் அவர்களுக்குச் சாப்பாடு. அவை தான் அவர்களுக்குத் தூக்கம். ஓய்வும் அவை தான். இப்படி வாரக் கணக்கில் அனுபவித்தார்கள். மாதங்களும் இரண்டைத் தாண்டி விட்டன.

ஊருக்குப் போக வேண்டும் என்பதை வந்தவரும் மறந்து விட்டார். அயலூர்க்காரர் ஆயிற்றே அவர் என்பது குறளாசிரியருக்கும் ஞாபகத்துக்கு வரவில்லை.

இரண்டு மாதம் கழிந்தபின் ஊர் போய் வருகிறேன் என்று குறளாசிரியரிடம் சொன்னார். ''ஊருக்குத்தானே? போகலாம்!'' என்று சொல்லிவிட்டார் குறளாசிரியர்.

இரண்டு நாள் கழித்து மறுபடியும் நண்பர் கேட்டார். பதில் சரியாக வரவில்லை. இப்படிப் பதினைந்து நாட்கள் போய் விட்டன.

கடைசியாக நண்பர் பொட்டணம் கட்டிவிட்டார். ஊர் போல் வர முரண்டி விட்டார். வருத்தத்தோடு சம்மதித்தார் குறளாசிரியர்.

நண்பர் புறப்பட்டார். குறளாசிரியர் தொடர்ந்து பின்னால் வந்தார். வீட்டைத்தாண்டி நண்பரோடு சேர்ந்து வந்தார் குறளாசிரியர். "நான் வருகிறேன் நீங்கள் போங்கள்" என்று பல தடவை வேண்டினார் நணபர். கடைசியாக ஒரு இடத்தில் நின்று நீங்கள் வீட்டுக்குப் போங்கள், அதன்பின் நான் போகிறேன் என்றார் நண்பர்.

குறளாசிரியர் நண்பரைக் கட்டித் தழுவினார். முகத்தை நிமிர்த்துப் பார்த்தார். நெற்றியை வருடினார். கையைப் பிடித் தார். ஏங்கினார், மறுகினார். கண்களில் நீர் பெருகியது. மறுபடியும் ஆவிச் சேர்ந்து கட்டினார். நண்பர் பிரியா விடை பெற்றுப் போனார். அவர் தலைமறையும் வரை அங்கு நின்று பார்த்துக் கொண்டே இருந்தார். பிறகு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார் குறளாசிரியர்.

வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை குறளாசிரியருக்கு. உட்காருவார், எழுந்திருப்பார். திண்ணைக்கு வருவார், தூணைப் பிடிப்பார், உள்ளே போவார், வெளியே வருவார். கன்னத்தில் கையை வைத்து கூரையைப் பார்ப்பார். சுவரைப் பார்ப்பார். வெளியில் வந்து எட்டாத தூரத்தை அளந்து பார்ப்பது போல் பார்த்துக் கொண்டே நிற்பார். கையில் எழுத்தாணியை வைத்துக் கொண்டே தேடுவார், மனையாளைக் கூப்பிடுவார். தாகத்திற்கு நீர் கொண்டு வரவே கூப்பிடுவார். ஆனால் மனையாள் எதிரில் வந்து நின்றவுடன் ஒன்றும் பேசமாட்டார். எதற்காகக் கூப்பிட் டோம் என்று யோசிப்பார். அப்படிப் படாத பாடுபட்டார் குறளாசிரியர்.

அப்பொழுது அவருக்கு ஒரு உண்மையானது ஒளிமயமாகத் தெரிந்தது. "உணர்ச்சி பூர்வமான அறிஞர்களுடன் பழகுவது பெரிய ஆபத்து. அவர்களைப் பிரிய நேர்ந்தால் இந்தப் பிரிவு

வாட்டி வதைக்கிறது'' என்று, மிக்க பிரகாசத்தோடு ஜொலிக்கிற உண்மையைப் பார்த்துப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தார்.

இனி, தமிழ் செய்கிற காரியத்தைப் பார்ப்போம்.

குறளாசிரியரின் அனுபவத்தை எடுத்து உருவம் கொடுக்கிறது தமிழ். கண்ணுக்குத் தெரியாத ஆற்றாமையை, கையால் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு உருவம் கொடுக்கிறது தமிழ்.

''பழகினால் முட்டாள்களுடன் தான் பழகவேண்டும். அது தான் வாழ்க்கையில் பெரிய லாபம். முட்டாள்கள் நம்மைவிட்டுப் பிரிகிற பொழுது நமக்கு ஒரு தொல்லையும் ஏற்படாது. அதனால் இனிமேல் அடிமுட்டாள்களுடன் தான் உறவு வைத்துக் கொள்ளவேண்டும்.''

இப்படி எக்களிப்போடு உணர்ச்சி பாவத்தை வெளிப்படுத்து கிறது தமிழ்.

இனிக்குறளைப் பார்ப்போம்.

''பெரிதினிது பேதையார்
கேண்மை: பிரிவின்கண்
பீழை தருவதொன்(று)
இல்.''

(பெரிது இனிது மிகமிக நல்லது. பேதையார் கேண்மை-மூடர்கள் பழக்கம். பீழை-துன்பம்)

உணர்ச்சியை-மனித உணர்ச்சியை ஆசையோடு பார்க்கிறார். குறளாசிரியர். அன்பு, பொறுமை, ஒற்றுமை, பிரிவு பிரிவாற்றாமை முதலிய உணர்ச்சிகள் ஒவ்வொன்றும் படலம் படலமாய் ஒளி வீசுகிற அற்புதத்தைப் பார்க்கிறார்.

இவற்றுக்கு நேர் எதிரான காரியங்களையும் பார்க்கிறார் எல்லாவற்றையும் அனுபவிக்கிறார். அவற்றின் மணம், ருசி, பக்குவம், ஒவ்வொன்றும் தெவிட்டாத அமிர்தமாய் இருக்கின்றன.

இவ்வளவும் மனிதனிடந்தானே இருக்கின்றன. ஒரு ஆல மரமோ, யானையோ, இல்லை, மலைகூட, சமுத்திரங்கூட இப்படி உணர்ச்சிமயமான வாழ்க்கை நடத்த முடியுமா? சகோதர பாசமோ, நட்போ, அவைகளிடம் இல்லை.

யோசிக்கிற காரியம் அவைகளிடம் இல்லை. உலகை வளப் படுத்தும் செயல் இல்லை. பாஷை இல்லை. மனதில் உள்ளதைக் கொட்டி சேர்ந்து அனுபவிக்க அவைகளிடம் வசதி இல்லை கோயில் இல்லை. திருவிழா இல்லை. இலக்கியம் இல்லை. கலை இல்லை.

எவ்வளவு உன்னதமானவன் மனிதன் என்று பெருமிதப்படு கிறார் குறளாசிரியர்.

அதனால் மனிதனையும் வாழ்க்கையையும், உணர்ச்சிகளை யும், உணர்ச்சிகளின் விதவிதமான சாயல்களையும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் குறளாசிரியர்.

குறளாசிரியரின் அனுபவங்களையும் ஆனந்தத்தையும் தமிழ் மொழி குறள் வெண்பாக்களாய் உண்டாக்குகின்றது. கவிஞரின் ஆனந்தமும் அனுபவமும் தமிழோடு சேர்ந்து கவியாய் அவதரிக் கின்றன.

ஒவ்வொரு குறளும் இன்ப ஊற்றாய் இருக்கின்றது. ஒரு குறள் போதும். வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க.

இவ்வளவு குறள்களையும் அனுபவிக்க நமக்கு வாழ்நாள் போதாதே? ஆயிரம் ஆண்டு, இரண்டாயிரம் ஆண்டு என்று நமக்கு ஆயுளைக் கொடுக்கக் கூடாதா அந்தப் பிரமன்'' என்று ஏக்கந் தான் மேலிடுகிறது.

குறளை அனுபவித்தால் போதும். அனுபவிக்க அனுபவிக்க நம் மனதில் உள்ள அழுக்குக் கரையும். ஒளி உண்டாகும். உண்மையானது சுடர்விட்டுப் பிரகாசிக்கும். வாடா விளக்காய்ப் பிரகாசித்துக் கொண்டே இருக்கும் உண்மை.

நம்மைப்பற்றிய அச்சம் நீங்கிவிடும். வாழ்க்கையில் நம்பிக்கை உண்டாகும். பிரியம் உண்டாகும். புதிய ஊக்கமே பிறந்துவிடும் வாழ்க்கையில்.

திருக்குறள் புத்தகத்தில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் கள் இருக்கின்றன.

நாற்பது நாற்பத்துஐந்து வருடங்களாக நான் குறளைப் படித்து வருகிறேன். அனுபவிக்கவும் செய்கிறேன். அனுபவத்தை நண்பர்களிடம் சொல்லி ஆனந்தம் அடைகிறேன்.

எனக்கு இதுவரை விளங்கிய குறட்பாக்கள் முந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து தான். இந்தப் பாடல்கள் என்னைவிட்டுப் பிரிவது இல்லை. நான் இவைகளை விட்டு விலகுவதும் இல்லை. அப்படி ஒரு அந்தரங்க உறவு.

எனக்கு விளங்கிய குறள் மலர்களின் தேனும் மணமும் தமிழர்கள் எல்லோரும் பெற வேண்டும் என்பது ஆசை.

அந்த ஆசை காரணமாகவே முந்நூற்று தொண்ணூற்று ஐந்து பாடல்களுக்கும் விளக்கம் எழுதி வெளியிட நேர்ந்தது.

ஒவ்வொரு குறளுக்கும் முகப்பில் ஒரு விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. விளக்கத்தை முதலில் படிக்க வேண்டும். உடனே மறந்துவிட வேண்டும். மறந்து விடுவதற்குத்தக்க படியே விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது.

அப்படியே குறளைப் பார்க்க வேண்டும். நிறுத்தி, அவசரம் இல்லாமல் குறளைப் பாட வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு குறளைப் பாடி அனுபவித்தால் போதும். குறளை வளைத்து வளைத்துப் பாட வேண்டும். அட்டகாசமான சங்கீதத்துக்கோ, தடப்புடலான தாளத்துக்கோ இடம் கொடுத்து விடக் கூடாது.

கவிஞரின் உணர்ச்சி கலைந்து விடாதபடி தமிழின் அருமையும் எளிமையும் பதறி விடாதபடி இயல்பாகப் பாடி அனுபவிக்க வேண்டும். இயல்பான முறையில் குறளை நாவானது தொடர்ந்து பாடப்பாட உணர்ச்சி பாவம் கண்முன் வந்து நிற்கும். அது நம் உணர்ச்சியோடு சேர்ந்து கலக்கும். நம்மை வேறொரு வஸ்துவாக மாற்றிவிடும். புதிய பிறவியே நமக்குக் கிடைத்துவிடும்.

குறளாசிரியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். அவர் கையாள்கிற தமிழும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இருந்த தமிழ்தான் ஆனாலும் இன்று நாம் பேசுகிற தமிழாகவே இருக்கிறது. நம் நாவில் சதா உருண்டு புரளும் நம் சொந்தத் தமிழாகவே இருக்கிறது. அது நமக்கு ஒரு பெரிய யோகம். இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் இருந்த வார்த்தைகள் - பாஷை இன்றும் உருக்குலையாமல் இருக்கிறது. நிலை குலையாமல் நிற்கிறது. தடுமாறாமல் நடக்கிறது என்றால் அது எவ்வளவு பெரிய யோகம்.

ஆனால் குறளுக்குப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை ஒன்றும் வேண்டியதில்லை. இலக்கணக் குறிப்பும் தேவை இல்லைதான்.

பதவுரை முதலியவை குறளுக்குக் கீழே இருக்கின்றன. அவை அப்படி இருப்பதனால் குறளைப் படிக்கிறதும் அனுபவிக்கிறதும் இயலாமல் போகிறது. குறளை ஒரு மாதிரிப் பார்ப்பதோடு சரி, பிறகு குறளை விட்டுவிடுகிறோம். பதவுரை முதலியவை நம்மை கட்டியாய்ப் பிடித்துக் கொள்கின்றன. சுளையை எறிந்துவிட்டு கொட்டையை மெல்லுகிற காரியம் ஆகிறது.

ஒன்றிரண்டு வார்த்தைகள் அடிக்கடி நம்முடன் பழகாதவை யாக இருக்கலாம். அவற்றுக்கு அடிகுறிப்பில் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைவைத்துக் கொண்டு பார்த்தால் போதும்.

தற்காலத்தவர் வசனத்தில் ஏதேதோ எழுதுகிறார்கள். அவர் கள் எழுதுகிறதில்கூட பல சொற்கள் பொருள் விளங்குவதில்லை. ஏன் என்று கேட்டால், அது இந்த வட்டாரச் சொல். இது அந்த வட்டாரச் சொல் என்கிறார்கள். ஒன்றிரண்டு வட்டாரச் சொல்லைப் போட்டுவிட்டால் போதும். உண்மையோ, உணர்ச்சியோ, விஷயமோ, கலையோ ஒன்றுமே வேண்டாம் என்று ஆகிவிடுகிறது.

வட்டாரச் சொல் நான்கு போட்டுவிட்டாலே போதும். அவர் அறிஞர் ஆகிவிடுவார். அப்புறம் அவர் நாவலர் ஆகி விடுவார். கோவலரே ஆகிவிடுவார்.

குறளாசிரியரின் தமிழ். இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ். அவருடைய நூல் உரைநடை அல்ல. செய்யுள். அப்படி இருந்தும் இன்றும் விளங்குகிறது. நாமே பேசி நாமே கேட்பது போலே அவ்வளவு தெளிவாய் விளங்குகிறது. ஒரு வட்டாரத்துக்கு மட்டும் அல்ல, எல்லா வட்டாரத்துக்கும் ஒன்று போல விளங்குகிறது. குறளைப் படிக்கிறவர்களுக்கு குறள்தான் லட்சியமாக இருக்கவேண்டும். அதாவது உண்மை உணர்ச்சியும், உண்மை உணர்ச்சிக்கு உருவம் கொடுக்கும் தமிழுமே லட்சியமாக இருக்க வேண்டும்.

இன்பத்துள் இன்பம் என்னும் இந்நூல் அந்த லட்சியத்தை நிறைவேற்றும் என நம்புகிறேன்.

தற்காலத்தில் தமிழகம் முழுவதும் குறள் பற்றிய ஒரு பரபரப்பு எங்கும் இருக்கிறது! எல்லோருமே குறளை ஒரு ஆயுத மாகக் கையாள ஆரம்பித்து விட்டார்கள்!!

தங்களுக்குத் தெரிந்தது குறளாசிரியருக்கும் தெரிந்திருக் கிறதே என்பதில் சிலருக்கு ஒரு எக்களிப்பு. தங்களுடைய அகட விகட சாமார்த்தியங்களை எல்லாம் குறளுக்கு உள்ளே ஏற்றி விட்டால், விளைச்சலும் அதிகமாகிறது. அறுவடையும் கணிச மாகக் கிடைக்கிறது, என்பதில் பலருக்குக் கொண்டாட்டம். இப்படியாக வள்ளுவரை ஒரு வாகனம் ஆக்கி, அவர்மேல் ஏறி உலாவரப் பார்க்கிறது பெரும்பாலான அறிவுலகம். குறளில் இவர்கள் போய் ஏறி உட்கார்ந்து கொள்கிறார்கள். கவிஞரையும், சிருஷ்டி தத்துவத்தையும் தமிழையும் விரட்டி விடுகிறார்கள்.

அதில் ஒன்றும் பிரயோசனம் இல்லை. குறளாசிரியரின் அனுபவத்தையும், கவிதைகளாக சிருஷ்டிக்கும் தமிழையும், ஆனந்தத்தையும் பார்க்கவேண்டும். கவிஞரின் ஆனந்தத்தையும் அனுபவத்தையும் கவிதைகளாக சிருஷ்டிக்கும் தமிழைப் பார்க்க வேண்டும்.

தமிழின் தாளப்பண்பு, இசைப் பண்பு, நடனப் பண்பு, கவிப் பண்பு இவைகளைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் கரைவோம். இழிவும் புன்மையும் நிறைந்த இந்த மாயப் பிறவி ஒழிந்து, அழியாத தெய்வப் பிறவி நமக்குக் கிடைக்கும்.

அல்லாத பட்சம் நாம் அப்படியே இருப்போம், கருங் கல்லாகவே இருப்போம். எதற்கும் இளகாத கல்லுளிமங்க னாகவே இருப்போம்.

குறளாசிரியரின் அருளும் அற்புதமும் தெரியத் தெரிய ஒன்று நமக்கு விளங்கிவிடும். இதுவரை நாம் அறிந்தது ஒன்றும் இல்லை, என்னும் உணர்ச்சி தான் அது.

அந்த உணர்ச்சி விளங்குவதற்கு தமிழின் துணைவேண்டும். தமிழர்களாகிய நமக்கு தமிழ்தான் உற்ற துணை.

முன்னோர்கள் பலர் குறளைப் படித்திருக்கிறார்கள், குறளில் உருகி இருக்கிறார்கள். உண்மை உணர்ச்சியைக் கண்டிருக்கிறார் கள். அந்தப் பரவச நிலையைப் பற்றி நமக்குச் சொல்லவும் செய்கிறார்கள்.

ஆயிரம் வருஷங்களுக்கு முன் ஒரு அறிஞர் குறளைப் படித்தார். அனுபவித்தார். கண்டறியாததைக் கண்டுவிட்டார். அதாவது "நாம் ஒன்றுமே இதுவரை தெரியவில்லையே/ அதைத் தெரிந்து விட்டோம், இதைத் தெரிந்து விட்டோம் என்று ஏமாந்தல்லவா போய்விட்டோம்"// என்னும் உண்மையை உணர்ச்சி பூர்வமாகவே கண்டு விட்டார்.

உண்மையை உணர்ச்சிமயமாகப் பார்த்த பெருமிதம் பாடலாய் உருவெடுக்கிறதைப் பாருங்சள்.

**வெண்பா**

முப்பாலை உண்டோம்;
முலைப்பால் இனிநுகரோம்;
அப்பாலுக்(கு) அப்பாலும்
ஆயினோம்; — எப்பொருளும்
உள்ளஉள்ள ஆறுணர்ந்து
ஓதித் தெளிந்ததிரு
வள்ளுவனார் வைப்பெமக்கு
வாய்த்து".

மேலும் சொல்கிறார் அறிஞர், திருக்குறளோடு கரைந்துவிட்டால் போதும்.

அவனே புலவன்;
அவனே அறிஞன்;
அவனே தமிழை
அறிந்தோன் — புவனத்து,
வள்ளுவ தேவன்சொல்
வாய்மொழியை மெய்யாக
உள்ளுவதே உள்ளும்உளத்
தான்."

(உள்ளுவதே உள்ளும் உளத்தான்—குறளை அனுபவிப்பதையே அனுபவமாகப் பெற்றவன். அவனே புலவன், அவனே அறிஞன். அவனே தமிழை அறிந்தோன்.)

கடைசியாக அறிஞர் தம் ஆனந்தம் முழுவதையும் ஒரு வெண்பாவில் கொட்டுகிறார். குறளாசிரியரின் அருள்—அவருடைய அனுபவமும் ஆனந்தமும் நிலைபெற்று நிற்க வேண்டும். அதற்காக இந்த உலகம் வாழ வேண்டும். மனிதர்கள், பசுக்கள், ஞானம், கல்வி, நீதி, மழை எல்லாம் அதற்காகவே நீடூழிவாழ வேண்டும் என்று கொட்டுகிறார்.

நன்றி உணர்ச்சி மழை பொழிவது போல் பொழிகிறது வெண்பாவில்.

"வாழிமழை ஆன்இனங்கள்;
வாழிமறை ஆகமங்கள்;
வாழிமனு நீதிமன்னர்;
மன்பதைகள் — வாழியரோ!
தெள்ளுகுறள்ச் செந்தேன்
செவிகுளிரப் பெய்ததிரு
வள்ளுவனார் பாத
மலர்."

"வாழியரோ வள்ளுவனார் பாதமலர்.' என்பது நம் இதயத்தில் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

குறளாசிரியரின் ஞானவேள்வியிலும் கருணையிலும், தமிழின் சிருஷ்டித் துவத்திலும், கலைப்பண்பிலும் முன்னோர்கள் கரைந்து உருகி இருக்கிறார்கள். நாமும் அப்படியே உருகி உருகிக் கரைய வேண்டும்.

அப்படி உருகிக் கரைவதற்கு இந்நூல்—இன்பத்துள் இன்பம் என்னும் நூல் துணை புரியும் என நம்புகிறேன்.

தமிழானது ஆவேசத்தோடு எழுந்து நிற்கவேண்டும். மேலே மேலே உயரவேண்டும். உலகம் முழுவதுக்கும் தன்னை யார் என்று இனம் காட்ட வேண்டும். அப்படியானால் "நான்" என்பது சற்று ஒதுங்கி நிற்கத்தான் வேண்டும்.

இனி, திருவள்ளுவமாலைப் பாடல்களை முதலில் பார்ப்போம். அதன்பின் குறளிடம் போகலாம்.

இப்படிக்கு
**ல. சண்முகசுந்தரம்**

# கலையா விமர்சனமா

## திருவள்ளுவமாலை

கொடுமைக்கும் துன்பத்துக்கும் உள்ளாகித் தவிக்கிற மன்ப தைக் கூட்டங்கள் இருக்கவே செய்கின்றன. நமக்குக் கை கொடுத்து நம்மைக் கரை சேர்க்க நாயகன் ஒருவன் வருவான் என்னும் நம்பிக்கையில் அந்தக் கூட்டங்கள் இருக்கின்றன. அந்த அவதார மூர்த்தியை வரவேற்கவும் வாழ்த்தவுமே அக்கூட்டம் காத்து நிற்கின்றன. அதற்காகவே அவை வாழ்கின்றன என்று கூடச் சொல்லலாம்.

வழிகாட்டி ஒளிகாட்ட வந்த அவதாரமூர்த்தியை மனம் உருகிப் போற்றுகின்றன அந்த மன்பதைக் கூட்டம்.

இலக்கியம், கலை சம்பந்தமாகவும் அப்படித்தான். காலப் போக்கில் பல ஏமாற்றங்களுக்கு உள்ளாகி விடுகின்றன கலை உலகம். கொடுமைக்கு ஆளாகி விடுகின்றன. உண்மையைப் பார்க்கக் கண்கூசுகிறது. பொய்யின் பின்னால் போய்க் கொண்டே இருக்கிறது. சகல துறைகளிலும் உண்மையானது புறக்கணிக்கப் படுகிறது. கேவலப்படுத்தப்படுகிறது. விலாசமே இல்லை என்று சொல்லும்படி ஒதுக்கித் தள்ளப்படுகிறது. பொய்யோ அரியாசனம் ஏறிக் கொலு வீற்றிருக்கிறது. அட்டகாசத்தோடு அதைச் செய், இதைச் செய் என்று கட்டளை இடுகிறது.

போக்கிரிகளும், அயோக்கியர்களும் கவிஞர்கள் என்று வருகிறார்கள். படுகேவலமான திருட்டுத்தனங்கள் இலக்கியம் என்று போற்றப்படுகின்றன.

வாயைத் திறக்க வழி இல்லாமல் ஊமையாய் ஒளிந்து நிற்கிறது பாஷை. உண்மையைப் பார்க்கவே அறிஞர்கள் பயப்படு கிறார்கள் என்றால், அவர்களால் வாய்திறந்து ஒன்றைப் பற்றிச் சொல்ல எப்படி முடியும்?

பாஷையே பரக்கப் பரக்க விழிக்கிறது. திக்குகிறது. திணறு கிறது. இந்த அலங்கோல நிலைக்கு ஆளான மக்கள் கண்ணைத் திறந்து விட ஒருவன் வருவான். கையைப் பிடித்து நடக்க வைக்க ஒருவன் வருவான், தெள்ளத் தெளியப் பேச வைக்க ஒருவன் வருவான் என்று எதிர்பார்த்து நிற்கிறார்கள். அப்படி உபகாரம் செய்ய வரும் அவதார புருஷனை வாழ்த்தவும் வணங்கவும் காத்து நிற்கிறார்கள். பாஷையே எதிர்பார்த்து நிற்கிறது என்று சொல்லலாம்.

இது உலகம் முழுவதுக்கும் பொதுவான சரித்திர உண்மை.

மக்களும் பாஷையும் சேர்ந்து செய்கிற தவத்துக்கு தெய்வம் இரக்கப்படுகிறது. உண்மையான உத்தமனைத் தன்னுடைய தூதனாக அனுப்புகிறது. தேவதூதர்கள் அடிக்கடி உலகுக்கு வருகிறார்கள்.

குறளாசிரியர் அப்படி வந்த ஒரு தேவ தூதர் தான்.

பூமியில் வந்து நடமாடிய குறளாசிரியர் "தான் உண்டு, தன் பிழைப்பு உண்டு" என்று நின்று விடவில்லை. தான் வாழும் உலகையும் மக்களையும் அன்போடு பார்த்தார். ஊக்கத்தோடு பார்த்தார். அருமை பெருமைகளைப் பாராட்டி உபசரித்தார். சிறுமைகளையும் புன்மைகளையும் எடுத்துக் காட்டி, இவை மட்ட மானவை என்று உணரும்படி சொன்னார்.

மக்களுக்குத் தைரியம் வந்துவிட்டது. தமிழுக்கு ஊக்கம் பிறந்துவிட்டது. எழுச்சி உண்டாகிவிட்டது. தெளிவாகவும் உறுதியாகவும் ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லியது. இவை மெய், இவை பொய் என்று விபரப்படுத்தியே எடுத்துச் சொல்லியது.

கலை, கவி, இசை, நாடகம், தெளிவு, உறுதி எல்லாம் தமிழில் பூத்துக் குலுங்கிவிட்டன.

எதையும் எளிதில் சொல்லமுடியும் என்னும் நிலை தமிழுக்கு வந்துவிட்டது.

மக்கள் போட்டி போட்டுக் கொண்டு குறளாசிரியரை வாழ்த்தினார்கள். தங்களுக்கு உயிரும் உணர்வும் கொடுத்த அருளாளன் என்று போற்றினார்கள். உண்மையான அறிஞர்களும் கவிஞர்களும், கலைஞர்களும் உள்ளம் உருகிப் பாராட்டினார்கள். இதுவரை இப்படி ஒரு அற்புதம் உலகில் உண்டானது இல்லை'' என்றே புலவர் பெருமக்கள் பாராட்டிவிட்டார்கள்.

அறிஞர்களையும், கவிஞர்களையும் விலக்கிக் கொண்டு தமிழ் வருகிறது. குறளாசிரியரைப் பார்த்துப் பார்த்து புளகாங்கிதம் அடைகிறது. "தெய்வப்புலவர், செந்நாப் போதர்" என்று வானதிர முழக்கமிட்டு வாழ்த்துகிறது.

குறளாசிரியரின் அருள்மயமான கவிகளை அனுபவித்து பல கவிஞர்கள் மனம் உருகி இருக்கிறார்கள். அழகிய பாடல்களில் தங்கள் பக்தியையும் பரவசத்தையும் பதித்து வைத்திருக்கிறார்கள். அப்படிப் பதித்து வைத்த பாடல்கள்—கலை மணம் கமழும் விமர்சனங்கள் ஏராளம். அவைகளில் பல அழிந்துவிட்டன. சில பாடல்களைத் தொகுத்து திருவள்ளுவமாலை என்று பாதுகாத்து அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

இரண்டாயிரம் வருட காலமாக குறளாசிரியர் பற்றிய பாடல் களைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். தொடர்ந்து பாதுகாத்து வந்திருக்கிறார்கள். பெரிய காரியந்தான். அந்தப் பாடல்கள் சிலவற்றை இனிப் பார்க்கலாம்.

எது பொய் எது மெய் என்று இனங் காணமுடியாமல் தவித் தோம். பல நூறு ஆண்டுகளாகத் தவித்தோம். இப்பொழுது இனம் கண்டு கொண்டோம். குறளாசிரியரின் பாடல் காரணமாக பொய்யே தன்னை யார் என்று சொல்லிவிட்டது. மெய்யும், தைரியமாய் தலை நிமிர்ந்து நின்றது.

(1) பொய்ப்பால பொய்யேயாய்ப்
போயின:பொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய்
விளங்கினவால்; — ஒப்பார்இல்
தெய்வப் புலமைத்
திருவள் ளுவர்குறளால்
வையத்து வாழ்வார்
மனத்து."

விபரம் தெரியாமல் அல்லவா இதுவரை வாழ்ந்து தொலைத்தோம். குறளாசிரியர் சொன்ன பிறகுதான் விபரம் தெரிகிறது.

விபரம் தெரிந்ததும் வாழ்க்கையில் ருசி உண்டாகிவிட்டது.

2. அறன்அறிந்தேம்; ஆன்ற
பொருள் அறிந்தேம்; இன்பத்
திறன்அறிந்தேம் வீடு
தெளிந்தேம்; மறன்எறிந்த
வாளார் நெடுமாற!
வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனஎல்லாம்
கேட்டு.''

குறளைப் படிக்கப் படிக்க அறிஞர்களால் நிற்க முடியவில்லை. துள்ளிக் குதிக்கிறார்கள். அவர்கள் குதிக்கிறது பாடலில் தெரிகிறது.

புல்லின் உச்சியில் இருக்கும் சிறிய நீர்த்துளி பக்கத்தில் இருக்கும் மரத்தை அப்படியே தன்னுள் வைத்துக் காட்டும்.

குறளும் அப்படித்தான் மனிதர்களின் உணர்ச்சிகளை படலம் படலமாய்க் காட்டுகிறது.

3. தினைஅளவு போதாச்
சிறுபுல்நீர் நீண்ட
பனைஅளவு காட்டும்
படித்தால்; — மனைஅளகு
வள்ளைக்(கு) உறங்கும்
வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா
விரி.''

(மனைஅளகு - கிளி. வள்ளைக்கு உறங்கும் வளநாட, நெல் முதலியன குற்றும் பொழுது பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டுக்கு மயங்கும் வளமான நாட்டுக்கு நாயகனே! பாண்டிய மன்னனே!.)

மழை பொழிவது போல உண்மையைப் பொழிந்து கொட்டி விட்டார் குறளாசிரியர். அவருக்கு என்ன கைம்மாறு செய்யலாம்?

4. தானே முழுதுணர்ந்து
தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா
அந்நான்கும் — ஏனோர்க்கு
ஊழின் உரைத்தார்க்கும்
ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉல(கு) என்னாற்றும்
மற்று

சூரியன் எவ்வளவோ உபகாரம் செய்கிறான். குறளும் அப்படியே உபகாரம் செய்கிறது.

5. உள்ளக் கமலம்
மலர்த்தி, உளத்துள்ள
தள்ளற்(கு) அரியஇருள்
தள்ளுதலால் — வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும்
வெங்கதிரும் ஒக்கும்என
கொள்ளத் தகும்குணத்தைக்
கொண்டு

சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரமோ, குருவோ, ஒளி மண்டலம் எதனாலும் அது வெளி இருளை விரட்டுவதோடு சரி, உள்ளிருளை விரட்ட முடியாது. குறட்பாக்கள் மனஇருளையே விரட்டி விடுகின்றன. அப்படியானால் குறளுக்கு எப்படி நிகராவான் சூரியன்?

6. வெள்ளி வியாழம்
விளங்கிரவி வெண்திங்கள்
பொள்ளென நீக்கும்
புறஇருளை — தெள்ளிய
வள்ளுவர் இன்குறள்
வெண்பா அகிலத்தார்
உள்இருள் நீக்கும்
ஒளி.

குறளாசிரியர் பாடல்களை எல்லோரும் அனுபவிக்க முடியுமா? இந்தக் கேள்விக்கு முடியும் என்றும் சொல்லலாம், முடியாது என்றும் சொல்லாம்.

வேண்டாதவற்றைப் படித்து ஆணவத்தாலும் பொறாமையாலும் தலை கொழுத்து அலைகிறவர்கள் குறளை அனுபவிக்க முடியாது. அது இது என்று படிக்காமல் மனதை சுத்தமாக வைத்திருக்கும் சாதாரண மக்களுக்கு குறளை அனுபவிக்க முடியும். இயல்பாகவே அனுபவிக்க முடியும்.

7. ஓதற்(கு) எளிதாய்
உணர்தற்(கு) அரிதாகி
வேதப் பொருளாய்
மிகவிளங்கி — தீதற்றோர்
உள்ளுதோ(று) உள்ளுதோ(று)
உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி
மாண்பு

திருவள்ளுவர் பாடலை வெறும் செய்யுள் என்றா சொல்வது? மனப்புண்ணை ஆற்ற வந்த அமிர்தம் என்று சொல்ல வேண்டும். தேனும் பாலும் செவிவழி வார்க்கும் அமுதகீதம் என்று சொல்ல வேண்டும். உண்ண உண்ணத் தெவிட்டாத தேவாமிர்தம் என்று சொல்ல வேண்டும்.

நம்முடைய ஆணவத்தையும் மயக்கத்தையும் வேரறக் களைந்து நம்மை மனுசனாக்க வந்த சஞ்சீவி என்று சொல்ல வேண்டும்.

8. சிந்தைக்(கு) இனிய;
செவிக்கினிய; வாய்க்கினிய;
வந்த இருவினைக்கு
மாமருந்து; — முந்திய
நன்னெறி நாமறிய
நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண்
பா

திருக்குறளைப் படித்து அனுபவிக்காதவனிடம் உயிர் இருக்காது. ஒளி இருக்காது. உணர்ச்சியும் இருக்காது.

அவன் நாக்கும் செத்த நாக்குத்தான். அவன் புத்தியும் தடிப்புத்திதான்.

9. தேவில்ச் சிறந்த
திருவள் ளுவர்குறள்வெண்
பாவில்ச் சிறந்தமுப்
பாஓதார் — நாவில்
செயல்இல்லை; சொற்சுவை
தேர்வில்லை; மற்றும்
உயல்இல்லை ஒன்றாக
ஓர்.

திருக்குறளைப் படித்து உண்மையின் வேகத்தையும் நயத்தையும் தெரிந்தவன் அபத்தமான கதைகளையும் புராணங்களையும் கட்டி அழுவானா? குறள்மூலம் தமிழின் மணமும் சுவையும் இன்னதென்று தெரிந்தவன், வார்த்தைகளைப் போட்டு கோர்த்து வாங்குகிற நூல்களைப் பிடித்துத் தொங்க மாட்டான். தாமரைப் பொய்கையிலும் அருவியிலும் நீராடித் திளைக்கிறவனை ஒரு குடம் வெந்நீரில் குளி என்றால் குளிக்க மாட்டான்.

10. தாளார் மலர்ப் பொய்கை
தாம்குடைவார் வெந்நீரை
வேளா(து) ஒழிதல்
வியப்பன்று — வாளாதாம்
அப்பால் ஒருபாவை
ஆய்பவோ? வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு
வார்.

குறளைப் படிக்கப் படிக்க இதயத்தில் அன்பு ஊறும். பண்பு ஊறும். அறிவுமயமாகவே ஊறும். உடம்பில் ரத்தம் ஊறுவது போலவே ஊறும்.

11. மணல்க்கிளைக்க நீர்ஊறும்;
மைந்தர்வாய் வைத்து
உணச்சுரக்கும் தாய்முலை
ஒண்பால்; — பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர்
முப்பால் மதிப்புலவோர்க்கு
ஆய்தொறும் ஊறும்
அறிவு.

சேர சோழ பாண்டியர் என்று அரசர்கள் மூவர். ஆளுக்கொரு நாடாக ஆண்டார்கள். நாடும் மூன்று. அப்படியே ஆளுக்

கொரு தலைநகர், ஆளுக்கொரு மலை, ஆளுக்கொரு குதிரை, ஆளுக்கொரு கொடி இப்படியே எல்லாம் மூன்று மூன்றுதான்.

ஒவ்வொருவரும் தலையில் நவரத்ன கசிதமான கிரீடம் வைத்திருப்பார்கள். கிரீடத்தின் உச்சியில் அடையாளப் பூவைச் சொருகி இருப்பார்கள். சேரனுக்கு பனம்பூதான் குலப்பூ. சோழனுக்கு திருவாத்தி மலர். பாண்டியனுக்கோ வேப்பம்பூ.

இப்படி எல்லாம் தனித்தனியாக அடையாளப்பூ வைத்துக் கொண்டது திருக்குறள் உண்டாவதற்குமுன். திருக்குறள் வந்த பின் மூவருக்கும் குலப்பூ ஒன்றுதான்.

12. முப்பதியும் முந்நாடும்
முந்நதியும் மும்மலையும்
முக்கொடியும் மும்மாவும்
மும்முரசும் — முத்தமிழும்
தாம்உடைய மன்னர்
தடமுடிமேல்த் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவனார்
பா.

அபத்தமான பாடலைப் பார்த்தால் போதும். சாத்தனார்க்கு மூளை கொதித்து விடும். எழுத்தாணியைக் கொண்டு தலையில் - தன் தலையிலேயே மாறி மாறிக் குத்திக் கொள்வார். படுமட்டமான பாடல்களுக்கு மத்தியில் என்னை வாழவைத்து விட்டதே விதி என்று குத்துவார். சாத்தனார் மண்டை முழுவதும் புண் தான். வெட்டுக் காயமும் குத்துக் காயமுமாகவே இருந்தது.

திருக்குறளைப் படிக்க நேர்ந்ததோ இல்லையோ அவருடைய கொதிப்பு அடங்கி விட்டது. உள்ளம் குளிர்ந்து விட்டது. மண்டையில் விழுந்த வடுக்களும் மறைந்து விட்டன.

சீந்திக் கொடி, கண்டங் கத்தரி ஆகியவற்றின் வேர்களை வெந்நீரில் கொதிக்க வைக்க வேண்டும். அதில் சுக்குப் பொடியைப் போட்டு, தேனையும் ஊற்றிக் கலக்க வேண்டும். பிறகு அந்த ஆவி பட்டாலே போதும். மண்டையிடி ஓடிவிடும். திருக்குறளின் வாடை பட்ட மாத்திரத்தில் மனப்புண்ணே ஆறிவிடும்.

13. சீந்திநீர்க் கண்டம்
தெறிசுக்கு தேன் அளாய்
மோந்தபின் யார்க்கும்
தலைக்குத்தில் — காந்தி

மலைக்குத்து மால்யானை
வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்து தீர்வுசாத்
தற்கு.

மனிதனுக்கு மூளை என்று ஒன்றிருக்கிறது. பேச்சு—அதாவது வாய்மொழி என்றும் ஒன்றிருக்கிறது. கேள்வி ஞானமும் இருக்கிறது. யோசிக்கிற பழக்கமும் இருக்கிறது.

திருக்குறளை அனுபவிக்கவே மனிதனிடம் இவ்வளவும் பொருந்தி இருக்கின்றன.

மூளையும் வாயும் செவியும் மனமும் வைத்து மனிதனைப் படைத்தான் பிரமன். அந்தப் பிரமனே அவைகளுக்குப் பலனும் கொடுத்து விட்டான்.

எப்படி கொடுத்தான் பிரமன்?

திருவள்ளுவராய் அவதரித்து திருக்குறளை எழுதி மூளை முதலியவற்றுக்கு உயிர் கொடுத்தான் பிரமன்.

14. நான்மறையின் மெய்ப்பொருளை
முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த்
தந்துரைத்த — நூல்முதலை
வந்திக்க நம்சென்னி;
வாழ்த்துகவாய்; கேட்கசெவி;
சிந்திக்க நெஞ்சம்
தெளிந்து.

கண்குளிர ஒருதாவரம் தளிர்க்கிறது. குளுகுளுவென்று துளிர்க்கிறது. பூத்துச் சொரிகிறது. இவ்வளவையும் அந்தத் தாவரமா செய்கிறது? தானே நடக்கிற காரியம் அவை. தாவரத்துக்குத் தெரியாமல் அதனுள் இருக்கும் இறைவன் செய்கிற திருச்செயல் அவை.

திருக்குறளின் ஆசிரியர் யாரென்றால்? திருவள்ளுவர் என்று தான் சொல்வோம். ஆனால், திருவள்ளுவரா திருக்குறளை உண்டாக்கினார்? தானே உண்டான காரியம் அது. இறைவனுடைய திருவருளில் நடந்த காரியம் அது.

இந்த் உண்மையை பிரம்மாவைக் கொண்டு வந்து நடத்திக் காட்டுகிறது தமிழ். இனி, சமய சம்பந்தமான ஒரு உண்மை,

மக்களை நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள் மதவாதிகள். ஜனங்களை யோசிக்க விடமாட்டார்கள். குழப்பிக் கொண்டே இருப்பார்கள்.

ஜனங்களுக்கு விபரம் தெரிந்து விட்டால் மதவாதிகளுக்குப் பிழைப்பில்லை.

உலகம் முழுவதும் எல்லாம் மதங்களிலும் கதை இப்படித்தான்.

திருவள்ளுவர் வந்தார். திருக்குறளும் வந்தது. அடடா!இது வல்லவா விஷயம் என்று தெரிந்து கொண்டார்கள் ஜனங்கள்.!

15. ''ஒன்றே பொருள்எனின்
வேறென்ப; வேறெனின்
அன்றென்ப ஆறு
சமயத்தார்:— நன்றென
எப்பா லவரும்
இயையவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த
மொழி.

(என்ப—என்று சொல்வார்கள். ஆறு சமயத்தார் மாறி மாறிக் குழப்பிக் கொண்டிருந்தார்கள்; வள்ளுவர் அதைப் பொருட்படுத்த வில்லை. குறளை ஜனங்களிடம் கொடுத்துவிட்டார். ஜனங்கள் ஒன்றுபட்டார்கள். மதவாதிகள் சண்டை ஓயவில்லைதான்.)

விஷயம் உயர்ந்ததோ, சாதாரணமோ? எதையும் பொறுப் போடு பார்க்க மனிதர்களிடம் பொறுமை இல்லை. மேலெழுந்த வாரியாகப் பார்க்க வேண்டியது ''வெண்ணெயும் சுண்ணும்பும் ஒன்று. இரண்டுக்கும் நிறம் வெண்மைதான்'' என்று தீர்ப்பு வழங்கிவிட வேண்டியது.

இப்படி ஒரு படுகேவலமான கொழுப்பு படித்தவர்களிடம் இருக்கிறது. இல்லாவிட்டால் ஆரியமொழியில் வேதம் எப்படியோ அப்படியே தமிழில் திருக்குறள்'' என்று சொல்லமுடியுமா?

வெறும் வார்த்தைகளை வைத்து பொய் முடிச்சுப் போடு வதையே ஆராய்ச்சி என்று புகழ்கிறார்கள் படிப்பாளிகள்.

திருக்குறளின் தெய்வப்பண்பை உணராமல் படிப்பாளிகள் தடுமாறுகிறார்களே என்று கவிஞர் ஒருவர் வருந்துகிறார்.

முதலில் படிப்பாளிகளின் நோக்கத்தை

16. ஆரியமும் செந்தமிழும்
ஆராய்ந்து, இதனின்இது
சீரிய(து) என்றொன்றைச்
செப்பரிதால்;— ஆரியம்
வேதம் உடைத்து;
தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா
உடைத்து.

என்று அவர்கள் வாக்குமூலத்தையே நம்மிடம், கொடுத்து, ''படித்துப் பாருங்கள். படிப்பாளிகளின் லட்சணத்தை' என்கிறார்.

நாமும் படித்துப் பார்க்கிறோம். முகத்தைச் சுழிக்கிறோம். கவிஞர் தம்முடைய வாதத்தைத் தொடங்குகிறார்.

திருக்குறளுக்கும் வேதத்துக்கும் சம்பந்தமே இல்லை. எழுதிப் படித்தால்கூட அதன் சக்தி போய்விடும் என்று மறைத்து வைக்கிறார்கள் வேதத்தை. வாய்மொழியாகவே சொல்கிறார்கள் வேதத்தை. திருக்குறளோ எல்லோரும் படித்து அனுபவிக்க எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் அனுபவிக்க அனுபவிக்க திருக்குறளுக்கு சக்தி ஏறுகிறதே ஒழிய இறங்கவில்லை. அப்புறம் எப்படி குறளும் வேதமும் ஒன்றாகும்?

17. ஆற்றல் அழியும்என்(று)
ஆரியர்கள் நான்மறையைப்
போற்றிஉரைத்(து) ஏட்டின்
புறத்தெழுதார்;— ஏட்டெழுதி
வல்லுநரும் அல்லாரும்
வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர்(வு)
இன்று.

கவிஞரின் வாதத்தைக்கேட்டு அனுபவித்த கடவுளே தீர்ப்பு வழங்குகிறார். அப்படி வருகிறது பாட்டு.

''திருக்குறளுக்கும் வேதத்துக்கும் சம்பந்தம் இல்லை. யாகம் முதலிய சடங்குகளை நிறைவேற்றுகிறவர் தங்கள் காரியத்தை நடத்துவதற்கு மட்டுமே வேதம் உபயோகப்படும். திருக்குறள் உபயோகப்படுவதில்லை. எல்லோரையுமே மனிதராக்கி விடுகிறது திருக்குறள்.''

அதிகார தோரணையோடு தீர்ப்பு வருகிற வரத்தைப் பாருங்கள்.

18. செய்யா மொழிக்கும்
திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும்
பொருள்ஒன்றோ? — செய்யா
அதற்குரியர் ஆரியராம்;
ஆயுங்கால் ஏனை
இதற்குரியர் அல்லாதார்
யார்?

பேரண்டத்தையே சுருட்டி மடித்து கக்கத்தில் வைத்துக் கொள்கிறது மனித மனம். அந்த மனத்தில் சதா உதித்துவரும் லட்சோபலட்சம் உணர்ச்சிகளுக்கு உயிர்கொடுத்து விட்டார் திருவள்ளுவர். ஒவ்வொரு உணர்ச்சியும் கலை உருவம் பெற்றுக் குறட்பாவாய் அவதரித்து விட்டன.

மனித உள்ளம் முழுவதையும் அளந்த திருவள்ளுவருக்கு ஒப்பாக யாரைச் சொல்வது? வாமனாவதாரம் எடுத்து உலகை அளந்த விஷ்ணுமூர்த்தியைத்தான் ஒப்பாகச் சொல்லவேண்டும்.

19. மாலும் குறளாய்
வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும்
நயந்தளந்தான்;— வாலறிவின்
வள்ளுவரும் தன்குறள்வெண்
பாஅடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார்
ஓர்ந்து.

திருமாலின் செயலாவது ஒருவகையில் திருக்குறளுக்கு ஒப்பாய் அமைந்துவிட்டதே என்பதில் கவிஞருக்கு எக்களிப்பு. ஆனந்த பரவசம் சும்மா இருக்குமா? பாண்டியனையே எதிரில் கொண்டு வந்து நிறுத்துகிறது. அவனிடமே, சொல்லுமையா பதில் என்று கேட்கிறது.

வாமனன்கூட கூனிக்குறுகி நின்றுதான் நிமிர்ந்தான். குறளோ, எடுத்த எடுப்பிலேயே நிமிர்ந்து ஒய்யாரமாய் நின்று அளந்தது. விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஓங்கி உயர்ந்து நின்று அளந்தது.

"குறள்போல் அளந்தது இன்னொன்று உண்டா? ஆளுயர மாலையணிந்த பாண்டிய மன்னனே! நீயே சொல்" வள்ளுவர் போன்று மனதை அளந்தவர் யார்?

20. கால்நின்ற தொங்கலாய்!
காசிபனார் தந்ததுமுன்
கூன்நின்(று) அளந்த
குறள்என்ப; — நூன்முறையான்
வான்நின்று மண்நின்(று)
அளந்ததே; வள்ளுவனார்
தான்இன்(று) அளந்த
குறள்.

கடைசியாக மூன்று பாட்டு. அன்னை கலைமகளே நம்முன் வந்து திருக்குறளைப் பற்றிச் சொல்வதாக முதல் பாட்டு. பாண்டியன் சாட்சியாக இருக்கிறான். அவனை நோக்கிச் சொல்வதாக வருகிறது பாட்டு.

"மக்கள் கண்திறந்து உலகைப் பார்க்க ஆரம்பித்த காலத்தில் பிரம்மாவின் நாவில் அமர்ந்து வேதத்தைச் சொன்னேன். வாழ்க்கையின் பெருமை சிறுமைகளைப் பற்றி மனிதர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது வியாச முனிவராக வந்து பாரதம் இயற்றினேன். கடைசியாக, உணர்ச்சிகளின் நீள அகலங்களையே நேருக்கு நேராகப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். திருவள்ளுவராக வந்து குறள் மூலம் உணர்ச்சி பாவங்களின் சாயல்களைக் காட்டி விட்டேன்."

21. நாடாமுன் நான்மறை
நான்முகன் நாவினில்
பாடா, இடைப்பா
ரதம்பகர்ந்தேன் — கூடாரை
எள்ளிய வென்றி
இலங்கிலைவேல் மாற!பின்
வள்ளுவன் வாயதென்
வாக்கு.

(நாடாமுன்-ஆதிகாலத்தில். பாடா-பாடி. கூடாரை எள்ளிய வென்றி-எதிரிகளைத் தொலைத்துக் கட்டிய. மாற-பாண்டியனே)

இரண்டாவதாக, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே மேடைக்கு வருகிறார். திருக்குறளை வாழ்த்தி விட்டுப் போகிறார்.

"எத்தனை ஆயிரம் வருஷங்கள் ஆனாலும் மனுசன் மனுசனாகவே இருப்பான். மனுசன் இருக்கும் வரை திருக்குறள் இருக்கும். திருக்குறளின் மணம், அழகு, தெய்வத்தன்மை வாடாமல் அப்படியே இருக்கும். கற்பகப் பூச்செண்டாய் இருக்கும் குறள்."

22.
என்றும் புலராது
யாணர்நாள்ச் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும்
நீர்மையதாய் — குன்றாதே
செந்தளிர்க் கற்பகத்தின்
தெய்வத் திருமலர்போல்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச்
சொல்.

கலைத்தெய்வமும் இறையனாரும் வந்தார்கள். பெட்டியில் ஏறினார்கள். வாக்குமூலம் கொடுத்தார்கள். போய்விட்டார்கள்.

முடிவில், கவிஞர் தீர்ப்பளிக்கிறார். "அமிர்தத்தைவிட எவ்வளவோ உயர்ந்தது குறள். பாற்கடலைக் கடைந்து எடுத்தது அமிர்தம். மனித வாழ்க்கையையே உணர்ச்சியின் மூலம் கடைந்து கடைந்து எடுத்தது குறள்.

"அது மட்டும் அல்ல, அமிர்தம் தேவர்களுக்கு மட்டும் உடைமை. உடம்பைப் பளபள என்று வைத்திருக்கும் அமிர்தம்.

குறளோ உலகம் முழுவதுக்கும் பொது உடைமை. உள்ளத்தை உணர்ச்சியையே ஆரோக்கியமாக வைத்திருக்கும் குறள்.

"அமிர்தத்தைவிட, எவ்வளவோ உயர்ந்தது குறள். இது சத்தியம். சத்தியம், சத்தியம்" என்கிறார் கவிஞர்.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

23.
வள்ளுவர் பாட்டின்
வளம் உரைக்கின், பாலாழித்
தெள்ளமுதின் தீஞ்சுவையும்
ஒவ்வாதால்; — தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர்
உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால்
மகிழ்ந்து.

ஏதாவது ஒன்று அகப்படாதா? தும்புதும்பாய் அதைக் கிழித்து எறிந்து விடலாமே! நார் நாராய் அதை உரித்துத் தள்ளி விடலாமே! என்று தவித்துக் கொண்டு திரிகிறார்கள் (தற்காலத்தில்) விமர்சகர்கள்.

அவர்களிடம் திருப்தி என்று ஒன்று இல்லை. தங்களிடமே அவர்களுக்கு நம்பிக்கை இல்லை ஒரே எரிச்சலில், ஆத்திரத்தில், கோப வெறியில் அக்கினி சொரூபமாய் இருக்கிறார்கள் விமர்சகர்கள்.

யார் கிடைத்தாலும் சரி—தெய்வப் புலமை திருவள்ளுவரே அகப்பட்டாலும் சரி குதறி எறிந்து விடுவார்கள்.

குறளின் அருமை அவர்களுக்குத் தெரியாது. ஆனால் உண்மையான மக்களுக்கு கவிஞர்களுக்கு, குறளின் அற்புதம் தெரிகிறது. நன்றாகவே தெரிகிறது.

அது பாடல்களாய் ஒலிக்கிறது. கலைமணம் கமழும் விமர்சனமாக இருக்கிறது.

# அன்பில் விளையும் அற்புதம்

''அன்பு என்று ஒன்று இருக்கிறது. அது ஒன்று மட்டுமே இருக்கிறது. அன்பு ஒன்றைத் தவிர வேறு எதுவும் இல்லை'' என்பது தெரியவேண்டும். தெரிந்துவிட்டால் போதும், வாழ்க்கை ஆனந்தமயமாக இருக்கும். மங்களமாகவே இருக்கும். யாதொரு குறையும் வாழ்க்கையில் இருக்காது.

நமது உடம்பில் எத்தனையோ தத்துவங்கள் நின்று செயல் படுகின்றன.ஆயிரக்கணக்கில் - வேறு வேறான தத்துவங்கள் எல்லாம் ஒன்றாய் நின்றே செயல்படுகின்றன உடம்பில். உட்கார வேண்டுமானாலும் சரி, எழுந்திருக்க வேண்டுமானாலும், நடக்க வேண்டுமானாலும் சரி, நம் உடம்பில் உச்சி முதல் உள்ளங்கால் வரை உள்ள எத்தனையோ நரம்புகள், தசைக் கட்டுகள், எலும்பு கள், அங்கங்கள் ஒன்றாய் நின்று செயல்பட வேண்டி இருக்கிறது.

அவ்வளவும் ஒன்றாய் நின்று செயல்படுகின்றன என்றால், அது அன்பின் மூலமாகத்தான். அன்பு என்னும் அற்புதம் இல்லாது போனால், கைவேறு, கால் வேறு, மூக்கு வேறு, நாக்கு வேறு என்று தனித்தனியாக ஓடிவிடும்.

பல அம்சங்களை வைத்துக் கட்டப்பட்ட கட்டிடமாக இருக் கிறது உடம்பு. உலகில் உள்ள பொருள் ஒவ்வொன்றும் அப்படி அமைந்த கட்டிடங்கள் தாம். மலை, கடல், காற்று, மரம், எறும்பு, மயில், புலி, புஷ்பம், எல்லாப் பொருள்களுமே, கோடிக்கணக்கான அணுக்களைச் சேர்த்து வைத்துக் கட்டிய கட்டிடங்கள் தாம்.

அன்பு என்னும் ஒன்றுதான் ஒவ்வொன்றையும் வடிவு குலை யாமல் சேர்த்துவைத்திருக்கிறது, அன்பு என்பது இல்லாவிட்டால்.

அண்டபிண்ட சராசரம் அவ்வளவும் தூள் தூளாக ஓடிவிடும். ஒன்றுமே இருக்காது. வெறும் வெட்டவெளி ஒன்றுதான் மிஞ்சும்.

பேரண்டம் முழுவதையும், பேரண்டத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் உலைந்து சரிந்து விடாதபடி காப்பாற்றிக் கொண்டிருக்கிறது அன்பு. அதுமட்டுமா? அண்டத்திலிருந்து பிண்டம் வரை ஒவ்வொரு பொருளும் ஒன்றை ஒன்று விட்டு விலகி விடாதபடியும், சார்ந்து நிற்கும்படியும்-ஒரே குடும்பமாக பாசத்தோடு சேர்ந்து உறவாடும்படியும் வைத்திருக்கிறது அன்பு.

அன்பு இல்லாவிட்டால் ஒன்றும் இல்லைதான்.

உடல்த் தத்துவத்தைக் கொஞ்சம் கூர்ந்து பார்த்தால்ப் போதும். அதனுடைய அமைப்பும் கட்டுமானமும் நோக்க அதிசயமாக இருக்கும். கட்டுமானத்தில் உள்ள நுட்பம், இணக்கம் முதலிய ஒவ்வொரு அம்சமும் அற்புதந்தான்.

உடல் தத்துவத்தின் வெளிப்புறம் மிக்க கவர்ச்சியாக இருக்கிறது. அழகு என்பது அப்படியே துடித்துக்கொண்டு நிற்கிறது.

உடல்த் தத்துவத்தை இயக்கிக்கொண்டு நிற்பது உயிர்தான் என்பதை அறிகிறபொழுது, உடல்த் தத்துவத்தின் மவுசு குறைந்து விடுகிறது,

உயிரில்லாத உடம்பு அழகாக இருந்து என்ன பலன்? வாய்ப்பாக இருந்துதான் என்ன பலன்?

இனி, உடம்பை உள்ளுக்குள்ளாகக் கொஞ்சம் சோதித்துப் பார்க்க ஆரம்பித்துவிட்டால், அது எவ்வளவு முடை நாற்றம் வீசும் சாக்கடை என்பது தெரியவரும். நோயும் புழுவும் மண்டிக் கிடக்கும் நரகக்குழிதான் உடம்பு என்பதும் தெரியவரும்.

அப்படியானால் உடம்பு அழியக்கூடியது, கேவலமானது செயலற்றது என்பதும், உயிரோ அழியாதது, புனிதமானது விளைவாற்றல் நிறைந்தது என்பதும் தெளிவாகத் தெரியவரும்.

"அருவருக்கத்தக்க உடம்பிற்குள்—உடம்பின் ஒவ்வொரு அணுவுக்குள்ளுமே, புனிதமான உயிர், எவ்வளவு ஆசையோடு மருவிக் கிடக்கிறது" என்பதை அறிய அறிய நமக்கு வியப்பாக இருக்கிறது.

ஒரு மணி நேரம் இரண்டு மணிநேரம் மட்டுமல்ல, ஒருநாள் இரண்டு நாள் மட்டுமல்ல, நூறு வருடம், எண்பது வருடம் ஐம்பது வருடம் என்கிற அளவிற்கு, ஒவ்வாத உடம்போடு ஒட்டி உற வாடித் திளைக்கிறது உயிர்.

உடம்பிடத்து உயிர் வைத்திருக்கிற அன்பை நாம் மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சேர்ந்தவர் களிடத்து வைக்கவேண்டிய அன்பையும் மறந்துவிடக் கூடாது.

இதை எப்படி அழகாக விளக்கிக் காட்டுகிறது குறள் என்று பார்க்கலாம்.

"அன்போ(டு) இயைந்த
வழக்கென்ப; —ஆருயிர்க்கு
என்போ(டு) இயைந்த
தொடர்பு"

(அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்புடன் கலந்து பேசி செய்துகொண்ட ஒப்பந்தந்தான் இது என்று பெரியோர்கள் சொல்வார்கள். (என்ப-என்பார்கள்) எதை? ஆர் உயிர்க்கு-அற்புத மான உயிர்த்தத்துவம் இருக்கிறதே, அதற்கு. என்போடு இயைந்த தொடர்பு-உடம்போடு சேர்ந்து செயல்படுகிற விந்தையை. அப்படி ஒட்டி வாழ்கிற வாழ்க்கையைப் பார்த்து முன்னோர்கள் வியந் திருக்கிறார்கள். அன்பின் அதிசயந்தான் என்ன என்று வியந்திருக் கிறார்கள்.

எங்கோ பிறந்தவள் பெண்? எப்படியோ வளர்ந்தவள்தான் பெண்? அவளுக்கும் நமக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அவள் வேறு நாம் வேறுதான். ஆனாலும் அந்தப்பெண் நமக்கு மனை யாளாக வாய்த்து விட்டால் பிறகு நாம்வேறு அவள்வேறு என்று இருக்கமுடியுமா? ஒருவர்மேல் ஒருவர் உயிரையே வைத்து விடு கிறோம். ஒருவரைவிட்டு ஒருவர் இரண்டொரு நாள் பிரிந்திருக்க நேர்ந்தாலும் தாங்க முடிகிறதா மனதுக்கு?

அப்படி ஒன்றுபட்டு விடுகிறது காரியம். இனி, பெண்ணின் காரியத்தைப் பார்த்தால் அதிசயமாக இருக்கும். நாயகனிடம் அவள் எப்படி உயிரை வைத்து இருக்கிறாள்? எத்தனை ஆனந்தத் தோடு தன்னையே நாயகனுக்குத் தியாகம் செய்து விடுகிறாள்? உடல், பொருள், ஆவி எல்லாவற்றையுமே, யாரோ ஒருவனுக்காக, யாரோ ஒருபெண் சர்வபரித்தியாகம் செய்து விடுகிறாள் என்றால்-

அதுவும் ஆனந்தத்தோடு செய்து கொண்டே இருக்கிறாள் என்றால் அதைவிட அற்புதம் என்ன இருக்கிறது?

நாயகனுடைய காலில் சிறுமுள் ஒன்று தைத்துவிட்டால் போதும். பெரிய ஆணியை வைத்து மண்டையில் அறைந்து இறக்கினால் எப்படித் துடிப்பாளோ, அப்படித் துடியாய்த் துடித்து விடுகிறாள் பெண்.

இப்படியாக ஒன்றுபடுத்துவது எது? அதுதான் அன்பு. இல்லாவிட்டால் குழந்தையானது குழந்தையாகவா இருக்கும்? குழந்தைகளை எப்படிப் பாதுகாத்து அருமை பாராட்டி வளர்க்கிறார்கள் தாயும் தகப்பனும்? அன்பு பெரிய சுமையாக இருக்கும். இடையூறாகவே இருக்கும்? சனியனாகவே இருக்கும்.

ஆனால் அன்பு என்ன செய்கிறது? குழந்தைக்காகவே பெற்றோர்களை வாழச் செய்கிறது. குழந்தையையே லட்சியமாக வைத்து வாழ்கிறார்கள் பெற்றோர்கள்,

பெற்றோர்களிடம் உள்ள பக்தி, உற்றார் உறவினர்களிடம் உள்ள மரியாதை, நண்பர்களிடம் வளர்கிற உறவு, பக்கத்து வீட்டுக்காரர், தெருக்காரர், ஊர்க்காரர், ஏன் மனிதர்களிடமே உண்டாகிற தொடர்பு, கலைகளிடத்தும், கலைஞர்களிடத்தும் ஊறுகிற ஈடுபாடு எல்லாமே அன்பில் விளைகிற விளைச்சல்தான்.

கோவில், வழிபாடு, பக்தி இவைகளும் அன்பின் காரியந்தான். குடும்பம் என்பது ஒரு பெரிய மாளிகை. அன்பு கொலு வீற்றிருக்கும் அரண்மனை. உண்மையானது அன்பாக அவதரித்து அருள் பாலிக்கும் சந்நிதானம் என்றே குடும்பத்தைப் பற்றிச் சொல்லலாம்.

மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர், வேலைக்காரர், கலை, சமயம், பக்தி இவை ஒவ்வொன்றும் குடும்பம் என்னும் மனைவாழ்க்கைக்கு உரிய அங்கங்கள்.

இவ்வளவும் சேர்ந்திருந்தால்தான் மனைஅறம் என்னும் குடும்ப வாழ்க்கை ஆகும். மூலைக்கு ஒன்றாக இவை சிதறி ஓடி விட்டால், குடும்பமும் இல்லை. வாழ்க்கையும் இல்லை.

சிதறி ஓடிவிடாதபடி சேர்த்து வைக்கிற அன்பு இன்பமானது பொங்கப் பொங்கச் சேர்த்துவைத்திருக்கிறது அன்பு.

தெய்வீகமானது அன்பு. நண்பர்களையும், உற்றார், உறவினர் களையும், பெற்றோர்களையும், மனைவியை, மக்களையும், ஏன்? பழகிய ஒவ்வொருவரையுமே, நினைக்க நினைக்க மனதை உருக்கி விடுகிறது அன்பு. அவர்களைப் பார்ப்பதற்கு எப்படித் துடிக்கிறது அன்பு? ஊனக்கண்ணால் பார்த்தது போதாது என்று மனக்கண்ணால் பார்த்துப் பார்த்து இன்புறுகிறது அன்பு.

அப்படி ஆர்வமயமாய்ப் பூத்துக் குலுங்குகிறது அன்பு. அன்பையும் அதில் கசிந்து ஊறுகிற ஆர்வத்தையும் பார்த்தாலே போதும். பக்தி உண்டாகிவிடும். ஞானமே உண்டாகிவிடும்.

குறளாசிரியர் சொல்கிறார்.

அன்பீனும் ஆர்வம்
உடைமை; அதுஈனும்
நன்பென்னும் நாடாச்
சிறப்பு.

(அன்பு ஈனும் ஆர்வம் உடைமை-காதல் என்றும் பக்தி என்றும் ஈடுபாடு என்றும் பெயர்சூட்டி வைத்திருக்கிறோமே ஆர்வத்தை, அந்த ஆர்வமானது பத்துமாதம் கருவிருந்து, தவம் இருந்தது எங்கே அன்பின் வயிற்றில்தான். பக்தியை (ஆர்வத்தை)ப் பெற் றெடுத்த தாய் அன்புதான்.)

அதுஈனும்-அதன்பிறகு அந்த ஆர்வமானது என்ன செய்கிறது? அதுவும் பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கிறது. எதை? நண்பு என்னும் நாடாச்சிறப்பு- ஞானம், மெய்ஞ்ஞானம் - "எல்லாம் கடவுளுடைய காரியம், நம்முடைய காரியம் ஒன்றும் இல்லை" என்கிற தெளிவு இருக்கிறதே-உறுதி-அந்தப் பேரானந்தமயமான ஞானத்தையே குழந்தையாகப் பெற்றெடுத்து விட்டது ஆர்வம்.

அன்புதான் சகலமும். இப்படிப் பார்த்தால் அது காதலாகப் பரிமளிக்கும்-அப்படிப் பார்த்தால் அது பக்தியாக மணங்கமழும்-முன்னாலே பார்த்தால் நட்பாகத் தெரியும்-பின்னாலே பார்த் தால் அது உறவாக நிற்கும்.

அன்புதான் அவ்வளவும். அது இல்லாமல் வாழவே முடியாது. மூச்சுவிடாமல் எப்படி வாழ முடியும்? எந்தப் பிராணியாலும் முடியாது. அன்பில்லாமலும் வாழ முடியாது. மனிதனால் அது முடியவே முடியாது.

அன்பிலிருந்து அருமை பிறக்கிறது, பெருமை பிறக்கிறது, பாசம் பிறக்கிறது, பற்று உண்டாகிறது, காதல் கனிகிறது. பக்தி சுரக்கிறது, பொறுமை விளைகிறது. எதையும் அர்ப்பணித்துவிட ஊக்கம் உண்டாகிறது. ஞானமே உண்டாகி விடுகிறது. பேரானந் தமே பெருகிவிடுகிறது. அவ்வளவுதானா?

அன்பிலிருந்து கோபமும் உண்டாகிவிடுகிறது. நம்மோடு ஒட்டி உறவாடுகிறவர்கள் புறம்பான வழியில் போகிறபொழுது நமக்கு அவர்கள் மேல் கோபம் உண்டாகத்தானே செய்கிறது? அந்தக் கோபத்திற்கு மூலம் எது? அன்புதான்.

பொறாமைகூட அன்பிலிருந்து உண்டாகி விடுகிறது. கணவனைத் தெய்வமாக மதிக்கிறாள் பெண். தனக்கே உரிய தெய்வமாக மதிக்கிறாள் பெண். அதனால் தன்னிடம் காட்டுகிற அளவுக்கு மற்றவர்களிடம் அன்பு காட்டக் கூடாது என்று நினைக் கிறாள்.

தான் பெற்றெடுத்த மகனிடத்தில்கூட மிக்க பிரியத்தைக் காட்டி விட்டால் போதும். மனைவியால் தாங்கமுடியவில்லை. கோபம் வந்து விடுகிறது. பொறாமையே வந்து விடுகிறது. கிறுக்குப் பிடித்தது போலத் தாறுமாறாகப் புலம்பவே ஆரம்பித்து விடுகிறாள்.

அன்பிலிருந்து கோபம் மட்டும் அல்ல. பொறாமையும் உண்டாகி விடுகிறது.

தொட்டுத் தாலி கட்டிய பெண்டாட்டி பிரசவித்திருக்கிறாள். பிரசவத்தை ஒட்டி அவளுடைய தேகம் உலைந்து போய்விட்டது. ஓரேயடியாக வெளிறி கரைந்து சீவனற்ற நிலையில் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாள் பெண்.

கையிலிருந்த பணம் எல்லாம் வைத்தியத்திற்காகச் செலவாகிவிட்டது. வேண்டியவர்கள் இடம் எல்லாம் கடன் வாங்கி யும் தீர்ந்து விட்டது. மேலும் சிகிச்சைக்காகப் பணம் வேண்டி இருக்கிறது.

எந்த வழியும் பலன் தருவதாக இல்லை. அப்படியானால் பொய் சொல்லக்கூட அவன் கூசுவது இல்லை. புறம் கூறக்கூட அவன் பின்வாங்குவது இல்லை. நண்பர் என்று பாராமல் அவர் களையும் தயங்காமல்க் காட்டிக் கொடுத்து விடத்தானே செய் கிறான்? ஏன், வழிப்பறியில் கூட இறங்கி விடுகிறான், கொள்ளைக்

கூட்டத்தில் சேரவும் பின்வாங்குவதில்லைஅவன். அவசியம் என்று நேர்ந்தால் கொலை பாதகம் பற்றியும் அவன் யோசிப்பது இல்லை தான்.

மனைவி மேல் வைத்த பிரியம், குடும்பத்தின் மேல் உள்ள பாசம் அதாவது அன்பு என்னும் அற்புதத்தத்துவம் கொடு மைக்கும் பிறப்பிடமாக இருக்கிறது.

நன்மைக்கு மட்டும் அல்ல. கொடுமைக்கும் அன்பு தான் காரணம்.

அன்பு என்பது ஒரு வயிரமணி. படலம் படலமாக உணர்ச்சிப் பிரகாசமானது அந்த வயிரத்திலிருந்து ஜொலித்துக் கொண்டே இருக்கும். பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள், என்று உணர்ச்சிகள் ஜொலித்துக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு உணர்ச்சியும் புதிய புதிய சாயல்களோடு நவம் நவமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

அப்படியானால் அன்பை தெய்வ ஒளி ஊறும் ஊற்று என்று தான் சொல்ல வேண்டும். ஒளி ஊற்று என்று ஒன்று உண்டானால் அது அன்பு ஒன்றே தான்.

அறத்திற்கே அன்புசார்(பு)
என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே
துணை.

(அறியார் - விபரம் தெரியாதவர்கள். அவர்கள் சொல்வது இது தான். அன்பு அறத்திற்கே சார்பு என்ப - அன்பானது நல்ல செயல் களுக்கு (மட்டும்) ஆதாரமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வது பைத்தியகாரத்தனம், (உண்மையில்) அஃதே - அந்த அன்பு ஒன்றே. மறத்திற்கும் - கொடுமையான காரியங்கள் செய்வதற்கும். துணை - தூண்டுகோலாய் இருக்கிறது)

ஒரு பெண். மிக்க அழகாய் இருக்கிறாள். பத்தரைமாற்றுத் தங்கம் அல்ல. ஆயிரம்மாத்துத் தங்கத்தையே உருக்கி ஓடவிட்டு, அதில் உள்ள மாசு மறுவை எல்லாம் துடைத்தெறிந்து விட்டு, பக்குவமாக வார்த்தெடுத்த சொர்ண விக்கிரகம் எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறாள் பெண்.

கண்ணும், மூக்கும், நெற்றியும், தோளும், கையும், காலும், இடுப்பும், கூந்தலும், அங்கங்கள் ஒவ்வொன்றுமே, வாளித்து உருவாக்கிய வனப்போடு காட்சி தருகின்றன.

அழகுத் தத்துவத்தில் ஆங்காங்கு சிதறிக்கிடந்த அம்சங்கள் ஒன்று சேர்ந்து, உருவி வெளியே வந்து, அழகுத் தெய்வத்துக்கு அலங்காரம் பண்ணுவது போல இருக்கிறது. பெண்ணின் தோற்றமும் பொலிவும்.

அவளுடைய மேனியும், அங்கங்களும் மட்டும் அல்ல, அவை களுடன் சேர்ந்து கிடக்கும் ஆபரணங்களும் மணிகளும் கூட, பார்ப்பவர்களின் மனசைப் பிசைந்து பரவசப்படுத்தி விடுகின்றன.

இத்தனை அழகோடுகூடிய ஒரு பெண் தனியே நிற்கிறாள். அவள் ஒரு இளைஞனை வளைத்து வளைத்துப் பார்க்கிறாள். அவன் ஞாபகமே மனசில் நிற்க மாறிமாறிப் பார்க்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் அந்தப் பெண்ணை இளைஞனால் விடமுடியுமா, மறக்க முடியுமா? எப்படியும் அவளை ஏற்று அவனோடு சேர்ந்து வாழ்வது தானே அவனுக்கு லட்சியம்.

உயிரைக் கொடுத்தேனும் அந்த லட்சியத்தை நிறைவேற்று வான் இளைஞன்.

இப்பொழுது நாயகனும் நாயகியும் ஆகிவிட்டார்கள் இளைஞனும் பெண்ணும்.

பெண்ணின் அழகைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறான் பையன். பார்க்காத நேரத்தில் நினைந்து நினைந்து உருகுகிறான் பையன்.

அப்படி அழகு கொலுவீற்றிருக்கும் சன்னிதானமாக இருக் கிறாள் பெண்.

நாள் ஆக ஆக பெண்ணின் போக்கு ஒருவிதமாக இருக் கிறதைப் பையன் பார்க்கிறான். மரியாதை இன்மை, திமிர், அகம் பாவம் இப்படி ஒவ்வொன்றாய் அவளிடமிருந்து முளைத்து வருகிற கேடுகள் அவனைத் துன்புறுத்துகின்றன.

அவளுடைய மூடத்தனம், பொறுப்பின்மை, அலட்சியம் ஒவ்வொன்றும் அவனுடைய ரத்தத்தைக் கொதிக்க வைத்து விடுகின்றன.

போதாக் குறைக்கு அவளுக்குத் தன்னிடம் பிரியமே இல்லை என்பதும், அன்பே இல்லாத ஒரு வறண்ட பாலைவனமே அவள் என்பதும் பையனுக்குத் தெரிய வருகிறது.

அலங்காரப்படுத்திக் கொள்வதும், பகட்டும், ஆடம்பரமுமே அவளுக்கு லட்சியம் என்பதும், தான் லட்சியம் அல்ல என்பதும் விளங்கி விடுகிறது பையனுக்கு.

கோடை வெயிலில் மணலில் விழுந்து துடிக்கும் புழுப்போல அவன் மனம் துடிக்கத்தானே செய்யும்?

இப்பொழுது அவள் அவன் கண்களுக்கு எப்படி இருப்பாள்? அழகு தேவதையாகவா இருப்பாள்? அவளுடைய மேனியைப் பாரக்கப் பார்க்க அவன் மனம் கொதிக்கும். அங்கங்களின் அமைப்பும் அவன் உள்ளத்தைக் குத்திக்குதறி ஆங்காரத்தை உண்டாக்கும்.

உடல் அழகு, அங்கவனப்புகள் எல்லாம், பிரயோசனம் இல்லாமல்ப் போய்விடும். அருவருப்பாகவே ஆகிவிடும். அன்பு என்று ஒன்று இல்லாவிட்டால் எல்லாம் அலங்கோலந்தான்.

புறத்துறுப்(பு) எல்லாம்
எவன்செய்யும்/ யாக்கை
அதத்துறுப்(பு) அன்(பு)இல்
லவர்க்கு

(யாக்கை புறத்து உறுப்பு எல்லாம் - உடம்பின் வெளியே கிடக்கிற முகம், உதடு, கழுத்து, முதலிய அங்க அமைப்புகள் எல்லாம். (அவற்றின் அழகெல்லாம்) (யாக்கை-உடம்பு) எவன் செய்யும் - என்ன செய்யும் - என்ன பிரயோசம் ஆகும். அவற்றால் பிரயோசனம் ஒன்றும் இல்லை தான்.

அகத்து உறுப்பு அன்பு - மனசின் அங்கமாய் இருக்கிற அன்பு. உடம்புக்குக் கையும் காலும் அங்கமாக இருப்பது போல மனதுக்கு அங்கமாக இருக்கிறது அன்பு. இல்லவர்க்கு - அந்த அன்பு என்னும் அற்புதம் இல்லாதவர்களிடம், மேனி அழகும், வாட்டசாட்டமான உறுப்புகளின் எடுப்பும் அலங்காரமும்கூட வீண்தான். தொல்லை தரக் கூடியன தான்)

குறிப்பு :- ''அன்பு இருந்தால் போதும். அது அழகுமயமாய் ஜொலிக்கும். அது ஒன்று தான் அழகு. அது அல்லாத வேறு எதுவும் அழகு அல்ல.'' என்னும் அனுபவம் ஆனந்தமாய் தாண்டவம் ஆடுகிறது செய்யுளில்.

மனிதனைப்போல அழகான பிராணி உலகில் வேறு ஒன்றும் இல்லை. இயற்கை முழுவதுமே மனிதனுடைய தோரணைக்கும் வளத்திற்கும் பின்னால் நின்று சேவகம் பண்ணுகிற காரியந்தான். அப்படியாக ஈடும் இணையும் இல்லாதபடி வளர்ந்த ஒய்யார புருஷன் மனிதன்.

மனிதனுடைய ஒய்யாரம் முழுவதையும் - பொக்கிஷம் முழு வதையும் அவன் கட்டிய வாழ்க்கை என்னும் மாளிகையில் பார்க்க லாம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய், லட்சோபலட்சம் பேர் களை - தாய் என்றும், தந்தை என்றும், மனைவி என்றும், மக்கள் என்றும், உற்றார், உறவினர், நண்பர் என்றெல்லாம் சேர்த்து வைத்து, ஒன்றாய் நின்று கட்டிய அரண்மனைதான் வாழ்க்கை.

தூக்கணாம் குருவி கட்டுகிற கூடுகூட விநோதமாகத்தான் இருக்கும். கெட்டிக்காரத்தனத்தை வைத்துப் பார்த்தால் அது மிகப்பெரிய கெட்டிக்காரத்தனமாகவே தெரியும்.

ஆனால் வாழ்க்கையை ஒரு கோவிலாக மனிதன் கட்டி முடித் திருக்கிறானே அதற்கு இணையாக உலகில் ஒன்று உண்டா? கடலைச் சொல்லமுடியுமா? மலையைச் சொல்ல முடியுமா? வானத்தைத்தான் சொல்ல முடியுமா? நட்சத்திரங்கள்கூட - அண்ட பகிரண்டங்கள்கூட, மனிதன் கட்டிய வாழ்க்கை என்னும் மாளிகைக்குப் பக்கம் வர முடியாது.

எட்டிநின்று பார்ப்பதற்கே பேரண்டம்கூட நாணிப் பின் வாங்கும் இந்த அற்புத மாளிகையை - குடும்ப வாழ்க்கை என்னும் அற்புத மாளிகையை, மனிதன் எப்படிக் கட்டினான்? என்று திகைப்புவரும்.

அன்பு ஒன்றின் மூலமாக மனிதன் கட்டினான். இதை அறிய அறிய எக்களிப்பே வந்துவிடும் மனிதனுக்கு.

வாழ்க்கை என்னும் ஆனந்த லட்சியம் (உயிர்நிலை - பிறவிப் பயன்) அன்பில் இருந்து விளைகிறது. அந்த அன்பு இல்லா விட்டாலோ, ஒன்றுமே இல்லை. மனிதனே இல்லைதான்! வாட்டசாட்டமாய் உடம்பு இருக்கிறதே-மூச்சும் ஓடிக் கொண்டு தானே இருக்கிறது. ஓடி ஆடத்தானே செய்கிறான் மனிதன் என்றெல்லாம் பார்க்கக்கூடாது.

வாடாமல் வதங்காமல் மலைபோல் நடமாடினாலும், அன்பு இல்லாத மனிதன் வெறும் பிணம்தான். சவம் - அதாவது பேய் பிசாசு மனிதவடிவில் நடமாடுகிறது என்று வைத்துக்கொள்ள வேண்டியது.

எலும்புகளை முறைப்படி அடுக்கி நிறுத்தி, அதன்மேல் மனிதத்தோலைக் கொண்டு போர்த்து மூடியிருக்கிறது. அப்படி மறைத்துப் போர்த்தப்பட்ட (உடம்பு) சவம் எப்படியோ குறுக்கும் நெடுக்குமாக நடமாடுகிறது. அவ்வளவுதான் என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி வைத்துக் கொள்வதுதான் உண்மை என்கிறார் குறளாசிரியர்.

அன்பின் வழியது
உயிர்நிலை; அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த
உடம்பு.

(உயிர்நிலை - பிறவிப்பயன். வாழ்க்கை இன்பம். என்பு - எலும்பு)

அன்பு என்பது ஒரு தெய்வ தத்துவம். பேரண்டம் முழுவதும் நிறைந்து நிற்கும் ஒரு தெய்வதத்துவம். அது கண்ணுக்குப் புலனாவதில்லை. ஆனாலும் குறளாசிரியர் அதைக் கண்ணாரப் பார்த்து விடுகிறார். பார்க்கும் இடம் எல்லாம் - பார்க்கிற ஒவ்வொரு அம்சத்திலும் அன்பானது விம்மிப் புடைத்து நிறைந்து நிற்பதைக் கண்டு அனுபவிக்கிறார் குறளாசிரியர்.

மனிதர்களிடமும், மனிதவாழ்க்கை முழுவதும் அன்பு பொங்கி வழிவதைக் குறளாசிரியர் பார்க்கிறார். ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கிறார்.

திருஷ்டி கழிப்பதுபோல் - வேண்டும் என்றே அன்புக்கு விரோதமாய் இருக்கிற ஒன்றிரண்டு மனிதர்களும் குறளாசிரியர் பார்வையில் விழுகிறார்கள். அவர்களுடைய வக்கிரங்களும், கிறுக்குத்தனமான அவர்களுடைய கோணல் மாணல்களும் பார்வையில் விழவே செய்கின்றன.

குறளாசிரியருக்கு ஆங்காரம் வந்துவிடுகிறது. பல்லை நறநற என்று கடிக்கிறார். ஆனாலும் அருள்மயமான உள்ளம் உடையவரல்லவா குறளாசிரியர்? அதனால் இரக்கம் உண்டாகி விடுகிறது அவர்களிடம்.

இரக்கமானது "பாவம், என்ன செய்வார்கள் அவர்கள் மனம் என்பது அவர்களிடம் இல்லாமல் போய் விட்டது. மனச்சாட்சியும் இல்லாமல் போய் விடுவதுதான் இயல்பு."

"ஆனால், இவர்களுக்கு மனம் என்பது பறந்து ஓடிவிட்ட பிறகும் - உயிர்த் தத்துவம் வறண்டு போனபிறகும், எப்படியோ தசைகளை இயக்குகிற வேகம் இவர்கள் உடம்பில் தங்கிவிட்டது. பாவம் என்ன செய்வார்கள்! அந்தவேகம் எலும்பை உலைய விடாமல் வைத்திருக்கிறது. தோலையும் உரிந்து போய்விடாத படி வைத்திருக்கிறது. அதனால் அவஸ்தைப் படுகிறார்கள் இவர்கள்" என்று பரிவு காட்டுகிறார் குறளாசிரியர்

"என்புதோல் போர்த்த
உடம்பு"

அன்பைக் கையில் எடுத்துக் காட்டுவதுபோல் காட்டுகிறது கவி உருவம்.

# மனைமாட்சி - பெண் தெய்வம்

மனிதனைவிட ஆலமரம் எவ்வளவோ பெரியதுதான். ஆல மரத்தின் அடிவட்டம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது? ஆறுபேர் ஏழுபேர் சுற்றி நின்று அணைத்தாலும் அடங்குவதாக இல்லை மரத்தின் உடம்பு.

நூறு அடி, நூற்றுஐம்பது அடி என்று நிமிர்ந்து உயர்கிறது ஆலமரம். மனிதனால் அப்படி வளரமுடியுமா? கொப்பும், குழையும், கப்பும், கவருமாக ஆலமரம் விரிந்து பரந்து கிடக்கிறதைப் பார்த்தால் எவ்வளவு விசாலமாக இருக்கிறது? அரண்மனைக் கல்யாணத்திற்குப்போட்ட பிரம்மாண்டமான பந்தல்போல் அல்லவா இருக்கிறது இடப்பெருக்கம்/

ஆலமரத்தில் கிளைகளை எண்ணிமுடியாது. இலைகளையும் எண்ணி முடியாது. விழுதுகளும் அப்படியே.

ஆலமரத்தையும் மனிதனையும் பார்த்தால் மனிதனைவிட ஆலமரம் பெரியதுதான். ஆனால் மனிதனிடம் உள்ள காரியங்களைக் கணக்கிடமுடியுமா? மனிதனுடைய ஆற்றலையும் செயலையும் அளந்து காட்டமுடியுமா?

மனிதனுடைய செயல்களில் ஒன்றுபோதும். ஆற்றலில் ஒரு துளி போதும். அதைவைத்து ஆலமரத்தைப் பார்த்தால் ஆலமரம் பம்மிவிடும். மனிதன் வானளாவி உயர்ந்து நிற்பான்.

இதற்குக் காரணம் என்ன?

குடும்ப வாழ்க்கைதான் உயிர்நாடி.

ஒரு ஆணோ, பெண்ணோ தாய் வயிற்றிலிருந்து பிறந்து வளர்கிற காரியம் சாதாரணம். அவர்கள் கணவனும் மனைவியும்

ஆனபிறகு நடத்துகிறார்களே வாழ்க்கை, - குடும்பவாழ்க்கை, அது தான் அற்புதம். உண்மையான மனிதர்களாவது, திருமணத் திற்குப் பிறகுதான். இது கருதியே முன்னோர்கள் ''குடியிருப்பு'' என்று சொல்லி இருக்கிறார்கள்.

மனிதர்களுக்கு லட்சியம் வாழ்க்கைதான். வாழ்க்கையை ஒரு பெண்ணால் தனித்து நடத்த முடியாது. ஒரு ஆணாலும் தனித்து நடத்த முடியாது. நாயகனும் நாயகியுமாகச் சேர்ந்தே நடத்த முடியும்.

மக்களுக்கு இந்த உண்மை விளங்கிவிட்டது. அதனால் உற் சாகமாக நடத்தி அனுபவிக்கிறார்கள் திருமணத்தை.

ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்துவதுதான் குடும்பம். அதாவது குடும்ப வாழ்க்கை. ஆனாலும் குடும்ப வாழ்க்கையில் ஆணுக்கு இருக்கிறதைவிட, பெண்ணுக்குத்தான் முக்கியம் அதிகம்.

குழந்தைகளைப் பெண்கள் கையில்தானே கொடுத்திருக்கிறது. குழந்தைகளை மட்டுமா கொடுத்திருக்கிறது. உலகத்தையே அவர்கள் கையில்தான் கொடுத்து வைத்திருக்கிறது.

குழந்தையை ஒட்டி, வீடு, வாசல், பாத்திரம், பண்டம், துணி, மணி, பசு, விளக்கு, சமையல், சாப்பாடு, வரவு, செலவு, விருந்து, உபசாரம் அவ்வளவும் அவர்கள் கையிலேயே ஒப்படைக்கப் பட்டுள்ளன.

மனைவியின் உயர்ந்த பண்பாட்டினால்தான், குடும்பமானது, சீரும் சிறப்பும் பெறமுடியும். மனையாளிடம் அத்தகைய பண் பாடு இல்லாமல்ப் போய்விட்டால் கணவன் யாராக இருந்தாலும் சரி, அவனிடம் எவ்வளவு அதிகாரமும் வசதியும் நிறைந்திருந் தாலும்சரி, குடும்ப வாழ்க்கை உருப்படாது.

மனையாள் என்றால் குழந்தைகளுக்கு மட்டும் தாயல்ல, சுற்றத்திற்கும், நட்பிற்கும், மனையறத்திற்கும் அவள்தாய். கணவ னுக்குக்கூட அவள்தான் தாய். மனிதனானவன் மனித இனத்துள் சேர்ந்து வாழும் சமுதாயப் பிராணியாக இருந்தாலும், தனக் கென்று ஒதுக்கப்பட்ட ஒரு சுயமான வாழ்க்கையை நடத்துவதற் காக, தனக்கென்று ஒரு மனையில் வாழ்ந்துவருகிறான். மிருகம் போல ஓரே மந்தையில் மனிதன் சேர்ந்து வாழ்வதில்லை.

மனிதனுக்குத் தனித்த மனை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அவனுக்கென்று அமைந்த ஒரு பெண். அதனால் அப்பெண்ணிற்கு மனைவி, மனையாள் என்று பெயர். அவனும் அவளும் சேர்ந்து வாழ்கின்ற புனிதமான மங்கல வாழ்விற்கு மனைவாழ்க்கை என்றும், மனைமாட்சி என்றும் பெயர்.

பெண்ணிற்கு வேண்டியது தியாக உணர்வு ஒன்றுதான். அதாவது கணவனுடைய போக்கிற்கும், நிலைக்கும் பெண்ணானவள் மாறிவிட வேண்டும். மாறி ஒன்றிவிட வேண்டும். கணவன் வேறு, மனைவி வேறு என்கிற பேதமில்லாமல் ஒன்றிவிட வேண்டும்.

இப்படியாகத் தன்னை இழந்து கணவனுடன் ஒன்றிவிடுகிற பெண்தான். மாண்புடையவள், வாழ்க்கைக்குத் துணையாகிறவள், இந்தப் பெண்மணியைத்தான் உத்தமி என்றும் பத்தினி என்றும் உலகம் பாராட்டுவது. இந்தப் பெண்மணிதான் மேலான வாழ்க்கைத் துணையாகவும் தாயாகவும் விளங்குவது.

"மனைத்தக்க மாண்புடையள்
ஆதித்தற் கொண்டான்;
வளத்தக்காள்; வாழ்க்கைத்
துணை."

தன்கொண்டான் - கணவன். வளத்தக்காள் - கணவனுடைய. வருமானத்தைக் கொண்டு அதற்கு ஏற்றபடி குடும்பம் நடத்துகிறவள்.)

பெண்களிடம் இயல்பாகவே அற உணர்ச்சிகள் அமைந்து கிடக்கின்றன. அவள் மனைவியாகிவிட்ட நாளிலிருந்தே அவ்வுணர்ச்சிகள் விளைந்து பெருகுகின்றன. ஆனாலும் சில பெண்களிடம் அறஉணர்ச்சிகள் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு விளைவதில்லை. சில காரியங்களில் கணவனுடைய குறிக்கோளுக்கு மாறுபட்ட நிலையில் நின்று செயல்படுவார்கள். அதனால் கணவனுக்கு உற்ற துணையாக அவர்களால் முடிகிறதில்லை.

எந்த ஒரு பெண்மணி, கணவனுடைய குறிக்கோளையே, தன் குறிக்கோளாகக் கொண்டு, அதனையே வாழ்க்கையில் ஆனந்தமாக அனுபவிக்கிறாளோ, அந்தப் பெண்மணிதான் "மனைத்தக்க மாண்புடையவள்" ஆகமுடியும். அப்பெண்மணிதான் உண்மையான வாழ்க்கைத் துணையாக முடியும். 'மனைத்தக்க' என்றால்

வீட்டிற்குத்தக்க என்பதல்ல பொருள். கடமையை நிறைவேற்று வதற்கு மனையறம் ஒன்றுதான் சாதனம் என்று ஏற்று நடத்தும் கணவனுடைய குறிக்கோளுக்கு ஏற்றபடி'' என்பது பொருள்.

இப்படிப் பொருள் பெற வேண்டுமானால் 'தற்கொண்டான் மனைத்தக்க' என்று சேர்த்துப் பொருள் காண வேண்டும்

இனி, ஒரு பெண்ணானவள் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவளாக இருக்கலாம். பலரையும் அதிகாரம் செய்கிற குடும்பத்தில் பிறந்தவளாகக்கூட இருக்கலாம். ஆடம்பரமும் படாடோபமும் நிறைந்த வாழ்க்கையில் உல்லாச மாகத் திளைத்து மகிழ்கிற குடும்பத்தில் பிறந்தவளாக இருக்க லாம்.

அப் பெண்ணானவள் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த வனுக்கு மனைவியாகி விட்டால், பிறந்தகத்து ஆடம்பரத்தை விட்டு விடவேண்டியது தான். செல்வக் களிப்பையும் செல்வாக்குச் செருக்கையுந் துறந்து விட வேண்டியது தான்.

கணவனுடைய வசதி எவ்வளவோ அவ்வளவையே மேலான செல்வமாகக்கருதி, அவ்வசதிக்குத் தக்கபடி வாழ்க்கையை நடத்து வதையே ஆனந்தமாக அனுபவிக்க எப்பெண்ணால் முடியுமோ, அப்பெண்தான், கற்புடைய உத்தமியாவாள். அவள்தான் உண்மையான வாழ்க்கைத்துணையாவாள். இதைத்தான்.

'தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்
துணை'

என்று ஆனந்தமாக எடுத்துரைக்கிறது குறள்.

இனிக் குறள் முழுவதையும் இன்னொரு தடவை பார்க்கலாம்.

''மனைத்தக்க மாண்புடையள்
ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்
துணை.''

அற்புதமான குறள். தமிழும், தாளமும், கவிப்பாங்கும் அற்புத மாக உருவெடுத்து வந்துள்ளன. மனித வம்சத்தை ஊழிஊழி காலத்திற்கு நிலை பெறச் செய்கிற சாதனத்தைத் துலக்கமாக எடுத்து விளக்குகிறது குறள்.

பெண்ணின் ஆனந்தமயமான தியாக உணர்ச்சிக்கு மனை மாட்சி என்று பெயர்.

மனைமாட்சி என்கிற பண்பு ஒரு பெண்ணிடம் அமைந்திருந் தால் அப் பெண்ணை மனைவியாகக் கொண்ட கணவனுக்கு யாதொரு குறையும் இல்லை. அவனுடைய வாழ்க்கையும் குறிக் கோளும் கடமையும் தங்குதடையில்லாமல் ஆனந்தமாக ஈடேறும்.

மனைமாட்சி என்கிற பண்பு இல்லாத ஒரு பெண்ணை மனை யாளாக ஒருவன் பெற்று விட்டால், அவனை யாராலும் காப் பாற்ற முடியாது. வளமும் வசதியும் அவனிடம் எவ்வளவிருந் தாலும் சரி அவனுடைய வாழ்க்கை-இல்வாழ்க்கை, முடமாகியே தீரும்.

"மனைமாட்சி இல்லாள்கண்
இல்லாயின் — வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும்
இல்"

(மனைமாட்சி - குடும்ப இன்பம். எனைமாட்சித்து ஆயினும் இல் - வேறு என்ன இருந்தாலும் இன்பம் இல்லை.)

பெண்ணானவள் உல்லாசமான பெண்ணாகத்தான் இருக் கிறாள். ஆனால், அவள் 'மனைவி' என்று ஆனஉடனேயே கணவ னுடைய இதயப்பாங்கு, உணர்ச்சிப்போக்கு, வெறுப்பு, விருப்பு முதலியவை எப்படி எப்படியோ அப்படி அப்படியே மாறி விடு கிறாள்.

"கணவனுக்கென்று ஒரு கொள்கை தனக்கென்று ஒரு கொள்கை" இப்படி ஒரு விபரீதம் பெண்ணிடம் கிடையாது.

இத்தகைய ஞான வாழ்க்கை பக்தியிலிருந்தும் கருணையிலிருந் தும் தான் உண்டாக முடியும். இந்தப் பக்தியும் கருணையுமே பெண்மை என்கிற அற்புத தத்துவமாக விளைந்திருக்கின்றது.

'இல்லதென் இல்லவள்
மாண்பானால், — உள்ளதென்
இல்லவள் மாணாக்
கடை'

மனைவியை 'இல்லவள்' என்று அருமையாகப் பெயர் சூட்டி அழைக்கிறார்.

மனையாளிடம் பெண்மை நலமும் தாய்மைப் பண்பும் இருந்து விட்டால், கணவனுக்கு என்ன குறை? யாதொரு குறையும் இல்லாத பாக்கியவான் அவன்.

'இல்லதென் இல்லவள்
மாண்பானால்'

கேள்வியை, 'இல்லதென்' என்று எடுத்த எடுப்பில் வைத்துக் காட்டுகிறது தமிழ்,

மனையாளிடம், பெண்மையும் தாய்மையும் வறண்டு போனால், கணவனுடைய வாழ்க்கையில் என்ன இருக்கிறது? கணவன் யாராக இருந்தாலும் புண்ணியமில்லை. அவனிடம் வேறு வசதிகள் எவ்வளவு குவிந்திருந்தாலும் புண்ணியமில்லை. வெறுமனே உண்டு உறங்கி, எழுந்திருந்து உலாவும் அதிசயப்பிணந் தான் அந்த மனிதன்.

'உள்ளதென்
இல்லவள் மாணாக்
கடை'

ஒரு பெண் அழகுள்ளவளாக இருக்கலாம். சமத்காரம் நிறைந்தவளாகக் கூட இருக்கலாம். கணவனிடம் ஆசை மிக்கவளாகக் கூட இருக்கலாம். குழந்தை குட்டிகளையும் சொத்துச் சுகத்தையும் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாக்கும் காவல் தேவதையாகக் கூட இருக்கலாம். ஆனால் அவளிடம் புனிதமாக பெண்மை நலமும், தாய்மை உணர்ச்சியும் குறைந்து போனல், வற்றி விட்டால், அவள் கடைகெட்ட ஜன்மந்தான்.

குழந்தைகளை உற்பத்தி செய்வதற்குரிய அதிசயப் பொம்மைகாக அப்பெண் இருக்க முடியுமே தவிர, வாழ்க்கையை மங்கல ஒளிவீச வைப்பதற்கு கடவுளால் வழங்கப்பட்ட செல்வமாக அவள் இருக்க முடியாது.

இதை அழுத்தந் திருத்தமாக எடுத்து விளங்குகிறது.

'உள்ளதென்
இல்லவள் மாணாக்
கடை'

என்னுந்தொடர். மாணா என்றால் மனைமாட்சி இல்லாத என்பது பொருள். கடை என்றால் மிகமிகக் கீழான பிறவி என்பது பொருள்.

குறளாசிரியரின் அனுபவமும் முடிவும் நூற்றுக்கு நூறு உண்மை. இந்த உண்மையை எத்தனையோ குடும்ப வாழ்க்கையில் மனித இனம் பார்த்துக் கொண்டுதான் வருகிறது.

கணவனுடைய கடமை உணர்ச்சிக்கும் குறிக்கோளுக்கும் ஏற்றபடியாக மனையாளின் லட்சியங்களும் மனப்பாங்கும் மாறிக் கொள்கின்றன, பெண்ணுக்குத் தெரியாத படியே இந்த மாற்றம் உருப்பெற்று வருகின்றன.

இயல்பாக அப்பெண்ணிடமிருந்து கொள்கையும் மனப் பாங்கும் கழன்று கழன்று கணவனுடைய குறிக்கோளும் நோக்கமுமே கொஞ்சங் கொஞ்சமாக உருப்பெற்று விடுகின்றன.

கணவனுடைய குறிக்கோளையும், கடமையையும் கல்லாமலே கற்றுத் தேறிவிடுகிறாள் பெண். இந்த அற்புதக் கல்விக்குத்தான் கற்பு என்று பெயர்.

கணவனுடைய லட்சியத்தையே தன்னுடைய லட்சியமாகக் கொண்டுவிட்ட ஒரு பெண்ணிற்கு கணவன்தானே அவ்வளவும். அப்பொழுது தன்னைப் பாதுகாக்கும் வீரனாக மட்டும் கணவன் தோன்ற மாட்டான். தன்னை உய்விக்க வந்த தெய்வமாகவே காட்சி தருவான்.

தன் கணவன்தான் தனக்குத் துணை என்கின்ற உறுதிப்பாடு (கற்பு) ஒரு பெண்ணிடம் வாய்ந்து விட்டால் அப்பெண்ணைக் காட்டிலும் உன்னதமான செல்வம் கணவனுக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்த உலகத்தில் மட்டுமல்ல, வேறு எந்தெந்த உலகங்களுக்குள் சென்று தேடிப் பார்த்தாலும் இத்தகைய செல்வம் இல்லவே இல்லையென்றுதான் திரும்பிவரவேண்டி வரும்.

''பெண்ணில் பெருந்தக்க
யாவுள? கற்பென்னும்-
திண்மைஉண் டாகப்
பெறின்'' 9

(பெண்ணில் - பெண்ணுக்கு நிகராக, பெருந்தக்க - உயர்ந்த லட்சியம். யாஉள - உலகில் வேறு என்ன இருக்கிறது. கற்பென்னும் திண்மை எல்லோரிடமும் வாய்த்துவிடக் கூடியதில்லை. எல்லோரிடமும் ஒரே மாதிரியாக வாய்த்து விடக் கூடியதுமில்லை. அவரவர் தவத்திற்கு (கல்லாது கற்கும் கல்விக்கு)த் தக்கபடியாகத்தான் வாய்க்கும்.

அக்கல்வியை அறவே கல்லாதவர்களுக்குக் கற்பென்னும் திண்மை அறவே இல்லாது போய்விடும். இந்த அருமையைக் கருதித்தான் "கற்பென்னும் திண்மை," "உண்டாகப் பெறின்" என்று விளக்கங் கொடுத்துக் காட்டுகிறது தமிழ்.

விற்கப்படுவதை விலை என்று சொல்கிறோம், நிற்கப்படுவதை நிலை என்று சொல்கிறோம். அதேபோலத்தான் கற்கப்படுவதைக் கலை என்று சொல்லியிருக்கிறார்கள் முன்னோர்கள்.

ஒரு பெண் கற்கவேண்டிய கலையென்ன. கணவனுடைய குறிக்கோளும் நோக்கமும் எதில் எதில், எப்படி யெப்படி என்பதைத் தெரிவதுதான். தெரிந்து பின்பற்றுவதுதான். அதாவது கணவனுடைய கோட்பாட்டிற்கு இசைய மாறிவிடுவது தான். இந்த அற்புதக் கலையைத்தான் குறளாசிரியர் கற்பு என்று கூறுகிறார். (கல் பு=கற்பு. அதாவது கணவனுடைய பழக்க வழக்கங்களையும் கோட்பாடுகளையும் மனைவியானவள் கற்றுக் கொள்ளுதல்.)

இந்தக் கற்பு முற்றுப் பெற்றுவிட்டால், கணவன் ஒருவன் தான் பெண்ணிற்கு லட்சியம். வேறு ஒன்றுமே இல்லையென்று சொல்லிவிடலாம்.

அப்படியானால் அந்தப் பெண்ணானவள் கணவனைத்தானே பாராட்டுவாள். பாதுகாப்பாள், வழிபடுவாள், உபசரிப்பாள்? இந்த நிலைக்குத்தான் கற்பென்னும் திண்மை என்று பெயர்.

கற்பென்னும் திண்மை எவ்வளவு பெரிய தனிப்பெரும்பேறு? மானிட வாழ்வை உய்விக்க வந்த திருவருள்க் கொடையல்லவா அது?

அதனால் அத்தகைய பேறு வாய்ப்பது அருமையிலும் அருமை. எந்தப் பெண்மணியிடம் அப்பெரும்பேறு அமைந்துள்ளதோ அவள் தான் மனித வாழ்க்கைக்கு ஒளிவீசி வழிகாட்டும் திருவிளக்கு. அவளைவிட உயர்ந்தது இப்பிரபஞ்சம் முழுவதிலும் இல்லை யென்று அறுதியிட்டுச் சொல்கிறார் குறளாசிரியர்.

குறளாசிரியருடைய ஒப்பற்ற அனுபவத்தையும் துணிவையும் "யாவுள" என்று அழுத்தமிக்க கேள்வியில் வைத்துக் காட்டுகிறது தமிழ்.

கற்புடைய பெண்ணின் இதயத்தில் பக்தி நிறைந்திருக்கும். அவள் சமய உணர்வு மிக்கவளாக இருப்பாள். தன் குலத்தாரும்

குடும்பத்தாரும் வழிபடும் தெய்வத்தை அவளும் பக்தி பூர்மவாக வழிபடுவாள். அவ்வளவும் தன்குடும்ப நலத்திற்கும், மனை மாட்சிக்காகவுந்தான். கணவனுடைய சீருக்கும் சிறப்பிற்குமாகத் தான்.

அப்படியானால் கற்புடைய பெண்மணியின் ஒரே லட்சிய தேவதை கணவன்தான். கணவனுக்காக எத்தனை தடவை வேண்டுமானாலும் தெய்வ வழிபாடு நடத்துவாள். கணவனுக்காக வழிபாட்டை விட்டுவிலக வேண்டுமானாலும் தயங்க மாட்டாள். இதை எவ்வளவு அற்புதமாக எடுத்து விளங்குகிறார் குறளாசிரியர் என்று பார்க்கலாம்.

''தெய்வம் தொழா அள்'' என்று அளபெடையில் வைத்துக் காட்டி ''கணவன் தொழுதெழுவாள்'' என்று விளக்கிவிடுகிறார்.

கணவனுடைய நலந்தான் பெண்ணின் லட்சியம். அதே நினைப்பில்தான் அவள் வாழ்கிறாள். அது ஒரு பக்தியாகவே பெண்ணிடம் அமைந்துவிடுகிறது.

தூங்கும் பொழுதும் கணவனைப் பற்றிய நினைப்புத்தான். தூங்கி எழும்போதும் அவனுடைய நினைப்புத்தான். இவ்வளவு ஈடுபாடு வேறு தேவதையிடம் பெண்ணிற்கு ஏற்பட முடியாது தானே?

கணவனுடைய நலத்தையே பக்தி பூர்வமாகத் தியானித்துக் கொண்டிருக்கிற ஒரு பெண்ணுக்கு எவ்வளவோ சக்தி உண்டு என்று வியந்து விடுகிறார் குறளாசிரியர். அவளுடைய தவவலிமையும் பக்தியின் ஆற்றலும் அளவிட முடியாத சக்தி நிறைந்தவை என்று பாராட்டுகிறார் குறளாசிரியர்.

தம்முடைய பாராட்டை நாடகத்துறையில் வைத்து ''மழைக்குக் கட்டளையிட்டாலும் அவளுடைய கட்டளையை மழை நிறைவேற்றி வைக்கும்'' என்று சொல்லிவிடுகிறார்.

''தெய்வம் தொழாஅள்
கொழுநற் தொழுதெழுவாள்;
பெய்யெனப் பெய்யும்
மழை'' 10

கற்புடைய பெண்மணியானவள் வரம்பில் நின்று முறையோடு குடும்பத்தைப் பாதுகாக்கிறாள். கணவனைப் பாதுகாக்கிறாள்.

அவளுடைய ஆர்வமும் ஈடுபாடும் உலகையே உலக ஒழுங்கையே பாதுகாக்கிறது. இந்த அதிசயபாவத்தை.

''பெய்யெனப் பெய்யும் மழை''

என்று தாளத்தில் வைத்து அடித்துக் காட்டுகிறது தமிழ்.

கற்புடைய மனைவி கணவனை உபசரிப்பதையும் பாராட்டு வதையுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கிறாள். அன்பும் ஈடுபாடும் அவளுடைய செயலில் மிளிர்வதைக் கண்டு கணவன் ஆனந்தமடைகிறான்.

கணவன் ஆனந்தம் அடைய, ஆனந்தமடைய மனைவி பேரானந்தத்தில் திளைக்கிறாள்.

''பெற்றான் பெறில்பெறுவர்
பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும்
உலகு!'' 11

பெற்றான் கணவன்.

பெருஞ்சிறப்புப்பெறின், ஆனந்தம் பெற்றால். பெண்டிர் - மனைவியானவள்.

புத்தேளிர் வாழும்உலகு பெறுவர் - தேவர்கள்வாழும் தேவ லோக இன்பத்தை (பேரானந்தத்தை)ப் பெற்று அனுபவிப்பாள்.

இல்லற நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுகிறவன் எவனோ? அவன் தான் புகழுக்கும் பாராட்டிற்கும் உரியவன். அவன் தான் வீரம் நிறைந்த ஆண் மகன் மாசு மறுவற்ற நல்லோன்.

இவ்வளவு நற்பேறுகளும் ஒரு ஆண் மகனுக்கு வாய்க்க வேண்டுமானால், மனைமாட்சியோடு கூடிய பெண்ணை அவன் மனைவியாகப் பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெறாதவன் எவ்வளவு ஆடம்பரமாக வாழ்ந்தாலும், மதிப்பில்லாத கீழ் மகனாகத்தான் ஒதுக்கப்படுவான்.

''புகழ் புரிந்(த)இல் இலோர்க்(கு)
இல்லை; - இகழ்வார் முன்
ஏறு போல்ப் பீடு
நடை' 12

புகழ் புரிந்த இல் - கற்பாலும் ஒழுக்கத்தாலும் புகழ்பட வாழும் பெண். இலோர் - அத்தகைய பெண்ணை மனையாளாகப் பெறாதவர்களுக்கு. இகழ்வார் முன் - எதிரிகளுக்கு முன்பு, ஏறுப் போல் பீடுநடை இல்லை - தலை நிமிர்ந்து நிற்கும் ஆண்மை இருக்காது. வீரமும் இருக்காது.

அவன் ஆணாக இருந்தாலும் பாவம் பேடியே தான்,

# பிள்ளைத் தமிழ்

மிசமிக வேண்டிய உறவினர் ஒருவர் மனைவி மக்களுடன் வீட்டிற்கு வந்து விட்டார். அப்பொழுது அவரை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் ஒரு வேகம் உண்டாகும். வந்தவர்களுக்கு அதைச் செய்ய வேண்டுமே, இதைச் செய்ய வேண்டுமே என்னும் பரபரப்பே உண்டாகி விடும்.

இது விஷயம் ஆடவர்களைவிட பெண்டுகளையே பிடித்து ஆட்டும். வந்தவர்களை மனங்குளிர உபகரிக்கிற காரியம் ஒரு வெறிபோல நிற்கும் பெண்களிடம்.

தொட்டிலில் படுத்து உறங்கிய குழந்தைக்கு தூக்கம் கலைந்து விட்டது. காலைக்கையை உதறுகிறது. அவசரம் அவசரமாகப் பார்த்துக் கொண்டிருந்த வேலையை அப்படி அப்படியே போட்டு விட்டு பிள்ளையைக் கவனிப்பாள் தாய். பால் கொடுப்பாள், விளையாட்டுக் காட்டுவாள்.

வயறு முட்டிக் குழந்தை சிரிக்கும்.

அப்படியே வேலையில் இறங்குவாள். ஆனால் குழந்தை கொஞ்சம் குறும்பு பண்ணுகிறது. அடம் பிடிக்கிறது என்றால் தாய்க்கு எரிச்சலாக இருக்கும் அப்பொழுது. ஒன்றும் ஓடாதவளாய் நொந்து குழைவாள் தாய்.

பக்கத்து வீட்டுப் பையன். பன்னிரண்டு வயதுப் பையன். அப்பொழுது அங்கு வந்தான். பாப்பாவைத் தூக்கி இடுப்பில் வைத்தான். கடைத்தெருவுக்குக் கூட்டிப் போனான். இனிப்பு வாங்கிக் கொடுத்தான். தன் வீட்டிற்கே கொண்டு வந்து குழந்தையோடு குழந்தையாய் விளையாடிக் கொண்டிருக்கிறான்.

வேலை எல்லாம் முடிந்தது. விருந்தினர்கள் சாப்பாடும் முடிந்தது. பரமதிருப்தி வந்தவர்களுக்கு.

உடனே தாய்க்குக் குழந்தை ஞாபகம் வந்துவிடுகிறது. பக்கத்து வீட்டுக்குப் பாய்ந்தோடி வருகிறாள். குழந்தையை வாரி எடுக்கிறாள். மார்போடு அணைக்கிறாள்.

"என் கண்ணு இன்னேரம் வரை என்ன செய்து கொண்டிருந்தது! அம்மாளை எந்தக்கண் தேடியது! இந்தக்கண்ணா தேடியது!" என்று கொஞ்சிக் குலாவுகிறாள்.

தாய்க்கு அப்பொழுது உண்டாகிற சுகத்திற்கு அளவு உண்டா?

குழந்தையோ தாயைப் பார்த்துச் சிரிக்கிறது. கேட்ட கேள்விக்கு அரையும் குறையுமாக ஏதோ சொல்கிறது. அந்த மழலைச் சொல் அவள் காதில் விழ விழ அவள் ஆனந்தத்திற்கு எல்லை உண்டா?

இனிக்குறளைப் பார்ப்போம்.

"மக்கள் மெய் தீண்டல்
உடற்கின்பம்; - மற்றவர்
சொற்கேட்டல் இன்பம்
செவிக்கு." 13

(மக்கள்மெய்தீண்டல் - அள்ளி எடுத்துக் குழந்தையை அணைத்துக் கொள்ளுதல் - உடற்கு இன்பம் - தேகம் முழுவதையும் இன்ப ஊற்றாக ஆக்கிவிடும். அவர் சொல்கேட்டல் - குழந்தைகளின் மழலைச் சொல் காதில் விழவிழ. செவிக்கு இன்பம் - பாலும் தேனும் சேர்ந்து வார்த்தால் போல் இருக்கும் செவிக்கு.)

சர்க்கரைப் பொங்கலானாலுஞ் சரி, பாயாசமே ஆனாலும் சரி, புழுதியோடு உழப்பிச் சீரழிக்கிறது குழந்தை என்று வைத்துக் கொள்வோம். பெற்றோர்களுக்குக் கோபம் உண்டாகுமா? அதை இன்பமாக அனுபவிப்பார்கள் பெற்றோர்கள். குழந்தை அளைந்து உழப்புகிற உணவு, உண்ண உண்ண ஆனந்தத்தைக் கொடுத்து விடும் பெற்றோர்களுக்கு. தேவாமிர்தத்தை விட இனிமையாக இருக்கும் அவ்வுணவு.

"அமிழ்தினும் ஆற்ற
இனிதேதம் மக்கள்
சிறுகை அளாயவி
கூழ்" 14

(ஆற்ற இனிது-மேலான இன்பத்தைக் கொடுக்கும், கூழ்-உணவு)

யாழிலிருந்துவருகிற கேட்கக் கேட்க ஆனந்தமாக இருக்கும். நாதசுரத்திலிருந்து வருகிற கானமும் அப்படித்தான். ஆனால் குழந்தையின் மழலைச் சொற்களில் ஈடுபட்டு மயங்குகிற அளவிற்கு, நாதசுரத்திலும், யாழ் ஒலியிலும் இன்பம் பெற முடியாது. கல்நெஞ்சுக்காரனால்க்கூட முடியாது.

''குழலினிது யாழ்இனிது
என்ப தம் மக்கள்
மழலைச்சொல் கேளா
தவர்.''

(இனிதுஎன்ப-இனிதாக இருக்கிறது என்பார்கள். யார்? மழலைச் சொல் கேளாதவர்.)

குழந்தை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் ஒழுங்கும் பண்பாடும் உள்ள குழந்தையாக வளர்வது. அதனால், குழந்தையின் மேனியில் மட்டும் அல்ல, நடையிலும் கண் வைத்திருப்பார்கள் பெற்றோர்.

அறிவுள்ள குழந்தையை நினைந்து நினைந்து தந்தை இன்புறுவான். பொறாமைப்பட மாட்டான். தந்தை இன்புறுவதைவிட, மற்றவர்கள் இன்புறுவார்கள். இது அதிசயந்தான்.

''தம்மில்த்தம் மக்கள்
அறிவுடைமை; - மாநிலத்து
மன்னுயிர்க்(கு) எல்லாம்
இனிது.'' 16

(மாநிலத்து- உலகில் உள்ள. மன் உயிர்க்கு எல்லாம் – நிலைபெற்ற உயிர் எல்லாவற்றுக்கும். அதாவது மனிதர்கள் எல்லோருக்கும். இனிது - அறிவுடைமையை அனுபவிப்பதில் ஆனந்தந்தான். தந்தையைப் போலவே பிறரும் அனுபவிக்கிறுர்கள் என்பது பெரிய அதிசயந்தான்)

அறிவுள்ள மகனை நினைந்து ஆனந்தம் அடைவதில் தந்தைக்கு இளைத்தவளல்லள் தாய். அவளடைகிற ஆனந்தத்திற்கு அளவே கிடையாது.

ஒரு பெண்ணானவள் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போவதை நினைந்து நினைந்து இன்புறுவாள். குழந்தையைப் பெற்றவுடன் பெற்ற குழந்தையைக் கண்ணாரக்கண்டவுடன் அவளடைகிற ஆனந்தத்திற்கு அளவே இல்லை. நிம்மதியும் அமைதியும் நிறைந்த ஆனந்தமானது அவளிதயத்தில் பொங்கிக் கொண்டிருக்கும்.

இனி, தன்னுடைய குழந்தை வளர்ந்து, கற்கவேண்டியன கற்று ஒழுங்கும் உத்தமமும் நிறைந்தவனாக வாழ்வதை அவள் எப்படியெல்லாம் அனுபவிப்பாள்? மற்றவர்கள் தன்னுடைய மகனை நல்லவன். உயர்ந்தவன் என்று பாராட்டுகிற பொழுது, தாயுள்ளம் எப்படியெல்லாம் ஆனந்தத்தால் பொங்கித் ததும்பும்.

வார்த்தைகளால் வருணித்துக் காட்டமுடியாது அந்நிலையை.

நயமான ஒரு உத்தியின் மூலம் விளக்கிக்காட்டுகிறார் குறளாசிரியர்.

"குழந்தையைப் பெற்று, குழந்தையைக் கண்ணாரக் காணும் தாய் எவ்வளவு இன்பம் பெறுவாளோ, அதையும்விட மேலான இன்பம் பெறுவாள் நல்ல குழந்தை என்று தன் குழந்தையைப் பிறர் பாராட்டுவதைக் கேட்டு" என்று விளக்குகிறார்.

"ஈன்ற பொழுதில்ப்
பெரிதுவக்கும்; - தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட
தாய்" 17

[உவக்கும் - மகிழ்வாள்]

இப்படியெல்லாம் அருமை பாராட்டக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து விடுகிற பெற்றோர்களுக்கு என்ன கைம்மாறு செய்து விட முடியும் குழந்தைகள்?

எவ்வளவு பெரிய உதவி செய்தாலும், அது தக்க கைமாறு ஆகமாட்டா.

ஒன்றே ஒன்றுதான் உகந்தது,
அது என்ன?

அறிவும் பண்பாடும் உள்ள பிறவியாக அக்குழந்தை வளர்ந்து வரவேண்டும். அதனுடைய ஒழுங்கையும், சிறப்பையும் பார்த்து மற்றவர்கள் வியப்புறவேண்டும். வியந்து பாராட்ட வேண்டும். இத்தனை நல்ல குழந்தையைப் பெற்றெடுத்த பெற்றோர்களின் பாக்கியமே பாக்கியம் என்று மற்றவர்கள் பாராட்ட வேண்டும். இது ஒன்று போதும் பெற்றவர்கள் திருப்தியடைய.

அவர்களுடைய கடமையுங் குறிக்கோளும் நிறைவேறி விட்டன வல்லவா? அது தானே மேலான ஆனந்தம்.

'மகன் தந்தைக் (கு) ஆற்றும்
உதவி - இவன்தந்தை
என்நோற்றான் ஓர் என்னும் சொல்"

என்நோற்றான் - என்ன தவம் செய்தானோ

# திருமகள் கடாட்சம் அல்லது விருந்துபசாரம்

உயிருக்கு உயிராக இருந்து எல்லாவற்றையும் காப்பாற்றுகிறார் திருமால். அவருடைய இதயத்தாமரையில் அவருடைய ஆசையோடு ஆசையாய் நிறைந்து கொலுவீற்றிருக்கிறாள் லட்சுமி தேவி.

லட்சுமிதேவியின் பார்வை ஓரம்சாரமாக விழுந்தாலேபோதும் வாழ்க்கை மங்களமாகப் பெருகும் தொட்டதெல்லாம் பொன்னாகும். தீராத நோய் எல்லாம் தீர்ந்துவிடும். பாழ்ங்கிணறுகூடத் தெப்பமாய் நீர் சுரந்து பெருகும். கரடுமுரடான பொட்டல்கூட நன்செய் நிலமாக மாறி மூன்றுபோகம் விளையும்.

ஆண்டுதோறும் தேர்வில் தோல்வி அடையும் குழந்தைகள் முதல் மதிப்பெண் பெற்று பரிசு வாங்கி வருவார்கள். விரோதிகள் சிநேகிதர்கள் ஆகிவிடுவார்கள். சான்றோர்களும் சீலர்களும் வலிய வந்து பழகுவார்கள்.

மனைவி, மக்கள், பணியாளர், நண்பர், உறவினர் எல்லோரும் கையும், காலும், வாயும், கண்ணுமாக இருந்து உதவுவார்கள். வீடு கலகல என்றிருக்கும். வீட்டைச்சுற்றி, கண்ணுக்கு எட்டியதூரம் வரை கலகலப்பாகவே இருக்கும்.

மின்வெட்டுப்போல விழுந்து மறைந்த ஒருபார்வைக்கே— லட்சுமிதேவியின் நோக்குக்கே இப்படியாக இன்பமும் செல்வமும் பொங்குமானால், லட்சுமிதேவியே ஒருவனுடைய வீட்டில்வந்து குடியேறி அமர்ந்துவிட்டாள் என்றால், அந்த இடத்தைப்பற்றிச் சொல்லவா வேண்டும்?

ஒத்தஉணர்ச்சி உடையவர்கள். பண்பாடு உடையவர்கள். கலைகளில் தோய்ந்து உண்மையைக்கண்டு ஆனந்தவெறியில் திளைப்பவர்கள், சீலமும் சான்றாண்மையும் மிக்க உத்தமர்கள்—மொத்தத்தில் மனதைக் குளிர்வித்து அமைதிப்படுத்தும் துணைவர்கள் விருந்தினர்களாக வருகிறார்கள்.

அப்படிவரும் விருந்தினர்களை ஆனந்தத்தோடு அகமும் முகமும் மலர்ந்து, உண்மை உணர்ச்சியோடு வரவேற்று உபசரிக்கிறவன்—பக்தியோடு மதிக்கிறவன் இருக்கிறானே? அவனுடைய இடத்தை விசாரித்து வந்து அவனுடன் தங்கிவிடுவாளாம் லட்சுமி தேவி.

பிறகு அவனும் அவனுடைய காரியமும் இன்பமயந்தானே? கவலை, துன்பம், பயம், அவமானம் இவைகளுக்கு அங்கு இடம் ஏது?

அகன்அமர்ந்து செய்யாள்
உறையும்; முகன்அமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான்
இல். 19

(அகன்அமர்ந்து - மனம்விரும்பி ஆசையோடு. செய்யாள் - லட்சுமிதேவி. உறையும் - தங்கி விடுவாள். முகன்அமர்ந்து - ஆனந்தபரவசம் முகத்தில் ததும்ப. ஓம்புவான் - உபசரிப்பவன்)

விருந்தினரை உபசரித்துப் பாராட்டுவதையே, ஆனந்தமான குறிக்கோளாகக் கொண்டவனுடைய நிலம், தானாக விளைந்து விடும். தானிய மணிகள் அம்பாரம் அம்பாரமாகத் தாமே வந்து களஞ்சியத்தில் நிறைந்து விடும். அவன் விதைக்க வேண்டியதும் இல்லை. அறுவடை செய்யவேண்டியதுமில்லை. களஞ்சியத்தில் சேர்த்துவைக்க வேண்டியது மில்லை, என்று வாயாரப் பாராட்டுகிறார் குறளாசிரியர்.

''வித்தும் இடல்வேண்டும்
கொல்லோ/ - விருந்தோம்பி,
மிச்சில் மிசைவான்
புலம்'' 20

(விருந்து ஓம்பி - விருந்தினரை நன்றாக உபசரித்து, மிச்சில் மிசைவான் - அதன்பிறகு மீதமுள்ள உணவைக் குடும்பத்தோடு இருந்து உண்டு மகிழ்கிறவனுடைய,

புலம் - நிலத்தில்

வித்தும் இடல் வேண்டும் கொல்லோ - விதையை எடுத்துக் தூவவா வேண்டும். அந்நிலம் தானாக விளைந்து விடும்!)

குறிப்பு - பக்தியும் உபசாரமும் நிறைந்தவனுக்குக் கண்ணுக்கு புலனாகும்படி, பலர் உதவி செய்வார்கள். கண்ணுக்குப் புலனா காத வகையில் பல அனுசரணைகள் நடைபெறும். இதை அனுபவத் தில் கண்டு தெளிந்தவர் குறளாசிரியர்.

குறளாசிரியருடைய தெளிவும், உறுதியும் குறட்பாக்களில் கணகணவென்று ஒலிக்கின்றன.

3

செல்வ மிகுதியும், தருமவேட்கையும் ஒருவனிடம் கூடி விட்டால் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு அவன் அன்னதானம் செய்யலாம். அத்தகைய அன்னசத்திரங்கள் பலவற்றைப் பல இடங்களில் அவன் ஏற்படுத்தி நடத்து வருவதும் உண்டு.

இவ்வாறு, வெள்ளம் போல வரும் கூட்டத்திற்கு உணவளிப் பதை, வேள்வி என்று பெயரிட்டிருக்கிறார்கள், விருந்து என்பது அப்படியல்ல.

விருந்து என்பது உத்தமர்களை வழிபட்டு உபசரித்து, ஆனந்த மாக உணவளிப்பது. அபூர்வமாகத்தான் ஒருவனுக்கு இத்தகைய பேறு கிடைக்கும்.

மேலான பாக்கியவானாக இருந்தால், நாள்தோறும் நல்லவர் ஒருவரை உபசரித்து மரியாதை செய்யும் பேறு அவனுக்குக் கிடைத்துவிடும். அளவிட முடியாத அருள்ச் செல்வம் உடைய வனாக அவன் இருந்து விட்டால், ஒவ்வொரு நாளும் பல பெரி யார்கள், அவனுக்கு விருந்தினராக வாய்த்து விடுவார்கள்.

அவனுடைய ஆனந்தத்திற்குக் கேட்கவா வேண்டும்?

முதலில் விருந்தினர்கள் உள்ளங்குளிருமாறு உபசரித்து, மதித்து, வழியனுப்பிய கணத்திலேயே, வேறு ஒரு பெரியவர் அவனுடைய விருந்தினராக வந்து விடுவார். கொஞ்சந் தாமதமாகி விட்டால், வருகிற பெரியவரின் வரவை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பான் அவன்.

இத்தகைய பண்பாளனுக்கு உலகில் ஒரு குறையும் இல்லை. முடிவில் அவன் தெய்வத்திற்கு ஏற்ற விருந்தினனாகிவிடுவான். தேவர்எல்லாம் அவனை மேளதாளத்தோடு வரவேற்கக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

"செவ்விருந்(து) ஓம்பி,
வருவிருந்து பார்த்திருப்பான்;
நல்விருந்து வானத்
தவர்க்கு" 21

(வானத்தவர்க்கு - தேவர்களுக்கு)

விருந்தினர்களின் உள்ளம் பூவைக்காட்டிலும் மென்மையானது. அதனால் விருந்தினர்களை உபசரிப்பதும் அவர்களுக்கு உபசாரம் செய்வதும் கூடப்பெரிதல்ல. மதிப்பதும் அவர்களிடம் ஈடுபடுவதுந்தான் முக்கியம்.

மதித்து ஈடுபடாவிட்டால், விருந்து என்கிற தெய்வப்பூ, விருந்தினர் இதயம்) அப்படியே வாடிக் கருகிவிடும்.

"மோப்பக் குழையும்
அனிச்சம்;—முகந்திரிந்து
நோக்கக் குழையும்
விருந்து" 22

(மோப்ப - முகர்ந்து பார்த்த உடன். குழையும் அனிச்சம் - அனிச்சமலரானது குழைந்து வாடிவிடும். முகம் திரிந்து நோக்க - மரியாதை இல்லாமல், அலட்சியமாகப் பார்க்கும் ஒரு பார்வை மூலமாகவே. விருந்துகுழையும் - விருந்தினர்கள் மனம் நொந்து போவார்கள்.)

மேலான பெரியோர்களை விருந்தினராக ஏற்று மதித்துப் பாராட்டுவதும் உபசரிப்பதுந்தான் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இக்குறிக்கோள் எல்லோருக்கும் எளிதில் வாய்த்து விடாது. இக்குறிக்கோள் வாய்க்கப் பெற்றவன் சிறந்த தவப்பேறுடையவன், செல்வங்களுக்கெல்லாம் நாயகமான இன்பமும் ஆனந்தமும் அவனிடம் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கும். அவனுக்கு யாதொரு குறையுமில்லை.

இனி, ஒருவனிடம் ஏரானமான செல்வம் இருக்கிறது. வாழ்க்கை வசதி நிறைந்ததாக இருக்கிறது. வயல் தோப்பு, ரொக்கம், வீடு, மாடு, கன்று, எதற்கும் அவ்னிடம் குறைவில்லை. மனைவி, மக்கள், சுற்றத்தார், நண்பர்கள் எல்லோரும் அவனுக்கு நிறைந்திருக்கிறார்கள்.

ஆனாலும், அவன் உடைமையைக் காக்கும் பூதம் போல வாழ்கிறான். தகுதி நிறைந்த பெரியோர்களை மதிப்பது,

பாராட்டுவது, என்கிற புண்ணியம் அவனிடம் எள்ளளவு கூட இல்லை. அவர்களை வரவழைத்து உபசரிக்கிற இனிமையும் அவனிடம் இல்லை. அந்த நினைப்பே அவனிடம் இல்லை.

அப்படியானால் அவனுடைய வாழ்க்கையில் லட்சியம் இருக்க முடியுமா? ஒன்றுமே இல்லாமல் வறண்டு போய்விடும் அவனுடைய வாழ்க்கை.

வசதி இருந்தும், அவ்வசதியைப் பயன்படுத்தி ஆனந்தம் பெற இடங்கொடுக்காத உள்ளத்தைக் கொடிய மனம் என்று தான் சொல்ல வேண்டும். கல்லைக் காட்டிலும் - இரும்பைக் காட்டிலும் வலுவான முரட்டு உள்ளம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கொடுமையான முரட்டு மனத்தை மடமை என்று குறிப்பிடுகிறார் குறளாசிரியர்.

இந்த மடமை நல்லவர்களிடம் இருக்காது. கெட்டவர் (மடவார்)களிடம் இயல்பாகவே அமைந்திருக்கும். அதை மாற்றிவிட முடியாது என்பது உலகங்கண்ட உண்மை.

''உடைமையுள் இன்மை/
விருந்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண்
உண்டு''. 23

(விருந்தோம்பல் - நல்லவர்களை மதித்துப் பாராட்டி உபசரிக்கும் விருந்தோம்பல் என்னும் தவத்தை, ஓம்பா மடமை - அனுசரிக்க வசதியிருந்தும், அனுசரிக்க மனமில்லாத மூடத்தனம்

மடவார்கள் உண்டு - ஞானமில்லாத மடையர்களிடத்தில் குறைவில்லாமலிருக்கும். இந்த மடத்தனத்தை.

உடைமையுள் இன்மை - செல்வம் இருந்தும் தரித்திரம் என்றே சொல்ல வேண்டும். இந்தப் பணக்காரத் தரித்திரனுக்கு அனுதாபப் படலாமே தவிர, திருத்தி விடமுடியாது என்பது குறிப்பு).

வாழ்க்கையின் அனுபவம் ஒன்றைப் பார்க்கலாம். பெரியார் ஒருவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடன் பல ஆண்டுகள் உறவாடித்திளைக்க முடிந்தது. அவர் சிறந்த கல்விமானாக இருந்தார். பெரிய பெரிய பதவிகளை எல்லாம் வகித்து, அதிலிருந்து விலகி வாழ்ந்தார்.

அவர் வகித்த உன்னதமான பதவிகளை அவரிடம் இயல்பாக அமைந்திருந்த ஞானம் உயர்ந்தது.

அவர், இரண்டு மூன்று தலைமுறைகளுக்குக் குறைவில்லாதபடி சொத்து வைத்திருந்தார்.

கவர்னர்கள், மந்திரிகள், நீதிபதிகள், சிற்றரசர்கள், பண்ணையார்கள், பிரபுக்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள், நாட்டு மக்களை ஒன்று திரட்டி ஒரு பாதை வழியாக அழைத்துச் செல்லும் தலைவர்கள் எல்லோரும் அவரை நாடி வருவார்கள், கோவிலுக்குள் பக்தியோடு செல்லும் அடியார்களைப் போல அவரை நாடி அவரிடம் வருவார்கள்.

அவருடைய அனுபவங்களையும் விளக்கங்களையும் கேட்டு ஆனந்த மடைவதற்கு அறிஞர் குழாம் சாரை சாரையாக வந்து கொண்டேயிருக்கும். அவ்வளவு பேரையும் அன்போடு வரவேற்றதையும், இன்முகம் காட்டி உபசரித்ததையும் யாராலும் மறக்கவே முடியாது.

ஜாதி மத வேறுபாடு அணுவளவு கூட இல்லாமல், தரம், தகுதி, வயது என்பவற்றை மஞ்சாடி கூடப் பாராமல் ஒவ்வொருவரையும் அவர் இதயங் கரைந்து உபசரித்தார்.

எளியவர்களானாலும் சரி, பதவியே இல்லாதவர்களானாலும் சரி, சாதாரண மானவர்களானாலும் சரி அவர்கள் நல்லவர்களானால், அவர்களோடு ஐக்கியமாகி விடுவார். உள்ளமும் உள்ளமும் ஒன்றுபட்டுக் கூடிக் குலாவ இடங்கொடுத்து விடுவார்.

நல்லவர் அல்லாதவர்களாக இருந்தாலும், தன்னை நாடி வந்தவர்களை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும், வித்தியாசமே இருக்காது. அவ்வளவு மரியாதை, அவ்வளவு கனிவு.

அதனால், அவரிருக்கும் இடத்தில் மட்டுமல்ல, அவரிருக்குமிடத்தைச் சுற்றி எவ்வளவோ தூரத்திற்கு, இன்பமும், மகிழ்ச்சியும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. பொய்யும் அறியாமையும் உருத்தெரியாமல் மறைந்து விட்டன.

அவருடைய செல்வத்தைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு செல்வமுடையவர்கள் பலர் வாழத்தான் செய்தார்கள். அவர் வகித்த பதவியைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிய பெரிய பதவிகளை வகித்தவர்களும் இருக்கத்தான் செய்தார்கள்.

பட்டம் அதிகாரம், செல்வாக்கு இவற்றில் அவரை விட மிக அதிக மாகவுடையவர்கள் எவ்வளவோ பேர் நாட்டில் உண்டு.

ஆனால் அவர் ஒருவர்தான் ஆனந்தமான வாழ்க்கை வாழ்ந் தார். மெய்யான இன்பத்தைப் பெற்றார். மற்றவர்களால் அவ் வாறு வாழவும் பெறவும் முடியவில்லை.

காரணம், அவரிடத்திலிருந்த அன்பு, அடக்கம், மரியாதை, விருந்தோம்பல் என்னும் பண்புகள் தான்.

நல்லவர்களிடம் அன்பு காட்டி, மதித்து உபசரிப்பது (விருந் தோம்பல்) தான் உண்மையான செல்வம் என்பதை விளக்க வந்த வர் குறளாசிரியர். அது ஒன்றில் தான் ஞானமும் ஆனந்தமும் உள்ளன என்பதை விளக்க வந்தவர் குறளாசிரியர். விருந்தோம்பல் என்ற குணத்தை இழந்து விட்டவர்கள் மடையர்களென்று எதிர் மறையில் வைத்து இதை விளக்கி விடுகிறார் குறளாசிரியர்.

''விருந்தோம்பல ஓம்பா
மடமை மடவார்கள்
உண்டு''

அம்மடவார்களிடம் பொருளாதார வசதி எவ்வளவிருந்தாலும், அவ்வளவும் தரித்திர மயமானது தான் என்பதை,

''உடைமையுள் இன்மை,
விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கள்
உண்டு''.

என்னும் குறள் சுழன்று சுழன்று ஒலித்துக் கொண்டேயிருக்கும். அதையும்விட இதயத்தில் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருக்கும்.

சில அனுபவங்களை நேரான பாஷையில், நேரான முறையில் வைத்துக் காட்டுவதை விட, வேறொரு வகையான சொற்களில் வேறொரு வகையான முறையில் வைத்துக் காட்டுகிற பொழுது தான், வேகமும், ஒளியும் உண்டாகின்றன. அவ்வாறு உண்டா கியதற்கு மேலே காட்டிய குறள் தக்க சான்று.

உற்றார், உறவினர், நண்பர் இவர்களை உபசரிப்பது உயர்ந்த பண்பு. முன்பின் தெரியாதவர்கள் புதிதாகத் தன்மைத் தேடிவந் தால் அவர்களைத் தம்மவராக ஏற்று உபசரிப்பது அதனினும் உயர்ந்த பண்பாகும்.

பொதுவாக இப்பண்பாடு உலகம் முழுவதும் உள்ள பல்வேறு இனத்தார்களிடமும் அப்படி அப்படி அமைந்து கிடக்கின்றன.

துருவ வட்டத்தில் வாழும் எஸ்கிமோ இனத்தாரிடத்தில் கூட விருந்தோம்பல் என்கிற பண்பு இருக்கவே செய்கிறது. பாலை வனத்துச் சஞ்சாரிகளிடத்தில் கூட விருந்தோம்பல் என்கிற பண்பு இருக்கவே செய்கிறது.

ஆனால் விருந்தோம்பல் என்கிற பண்பை, வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டதும், அதை அறப்பண்பாக மதித்ததும் அடக்கம் மரியாதை, மகிழ்ச்சி இவற்றை அதற்கு அங்கங்களாக வைத்து ஆனந்தத்தை கொடுக்கும் கலை வாழ்க்கையாக உயர்த்தி யதும் தமிழ் மக்கள்தான். அதனால் விருந்தோம்பலுக்கு ஒரு உருவமே கிடைத்து விட்டது.

இந்த வடிவம் பல ஆயிரம் ஆண்டுகளாக மெருகேறி மெரு கேறி வளர்ந்து வந்துள்ளது. குறளாசிரியர் தமிழ் மக்களிடமுள்ள விருந்தோம்பல் என்கிற பண்பையும், அதனிடமுள்ள வேட்கையை யும் நன்றாக அனுபவித்துள்ளார். தமிழும் நன்றாகவே அனுபவித் துள்ளது.

# நல்ல சொல் ஒன்று போதும்

மனிதனுடைய இதயத்தையும் நோக்கத்தையும் தெளிவாக எடுத்துக்காட்டும் சாதனந்தான் சொல். மேலுங் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால் மனிதன் மூலமாக விளையும் செயல்களுக்கெல்லாம் சொல்தான் மூலகாரணம் என்பது விளங்கும்.

அப்படியானால் சொல் என்பது பொழுது போவதற்கு உபயோகிக்கிற வெற்றுரையல்ல என்பதும், அதன்மூலம் அரியபெரிய செயல்களையெல்லாம் செய்துமுடிக்க வேண்டும் என்பதும் தெரிய வேண்டும்.

உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றம், குடும்பம் இவ்வளவு பேரும் மனிதனின் அன்புக்குரியவர்கள்.

அன்புக்குரியவர்களை மேன்மைப்படுத்த வேண்டும் சொல். அவர்களுக்குத் தெரியாமலே அவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாக உயர்த்திக் கொண்டு வரவேண்டும் சொல்.

வேண்டியவர்களை இதமாகத் திருத்தி நல்வழிப்படுத்துவதும் நல்ல சொல்தான். அதைவிட, வேண்டியவர்களை நல்லவர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் எந்தச் சொல் மாற்றுகிறதோ அந்தச் சொல்தான் உயர்ந்த சொல்லாகும்.

மனிதனிடமுள்ள ஏக்கத்தையும் சிறுமையையும் நல்லவர்களின் சால்லானது நீக்கிவிடும். உயர்வையும், ஆனந்தத்தையும் உண்டாக்கிவிடும் நல்லவர்களின் சொல்.

நல்லவர்கள் என்றால் கருணை நிறைந்தவர்கள், நீதி நிறைந்தவர்கள் என்று பொருள். அவர்கள் சாதாரணச் சட்டதிட்டங்

களைவிட நிலையான அறத்தையும் ஒழுங்கையுமேகுறிக்கோளாகக் கொண்டு நிற்பார்கள். அவர்களிடம் அனுதாப உணர்ச்சி பொங்கி நிற்கும். தவறுகளைக்கூட கருணையோடு பார்த்து கருணையோடு நிவர்த்திப்பார்கள்.

அதனால் அவர்களுடைய உபதேசம் இன்பத்தை உண்டாக்கும். வெறுப்பை ஒழித்துவிடும், பயத்தை நீக்கிவிடும். நம்பிக்கையையும் ஆனந்தத்தையும் உண்டாக்கிக் கொண்டே இருக்கும்.

அத்தகைய நல்லவர்களின் சொல்லிற்குத்தான் இன்சொல் என்றுபெயர்.

நல்லவர்கள் பார்க்கிற பார்வை ஒன்றேபோதும், அது அப்படியே, கட்டித் தழுவிக் கொள்ளும், கருணையும் ஆர்வமும் அவர்களுடைய கண்களில் கொலு வீற்றிருக்கும்.

ஆர்வத்தோடு பார்ப்பார்கள். இனிமையாக நோக்குவார்கள். இதயத்தை அப்படியே சொல்லாக மாற்றிக் கொடுத்துவிடுவார்கள். அதாவது தங்கள் வாழ்க்கையையே வார்த்தைகளாக வடித்து வழங்குவார்கள். அந்தச் சொல்தான் அறத்தின் வடிவம், கருணையும் நீதியும் கொஞ்சிக் குலாவும் கோயில்.

“முகத்தான் அமர்ந்தினிது
நோக்கி, அகத்தானாம்
இன்சொல் இனதே
அறம்”. 24

அகத்தான் ஆம் இன்சொல்லினது அறம், உள்ளத்திலிருந்து உண்மையாக விளைந்து வருகிற சொல்தான் இன்சொல். இன்சொல் எதுவோ, அதனிடந்தான் தரும தேவதை கொலு வீற்றிருக்கிறது. (அவ்வின் சொல்லை வழங்கும் உத்தமர்கள் மற்றவர்களை) முகத்தான் அமர்ந்து - ஆசையோடும் அமைதியோடும் பார்ப்பார்கள். (பார்த்து) இனிது நோக்கி - மேலும் மேலும் இனிமையாக நோக்குவார்கள். வெறுப்போ கசப்போ அவர்கள் பார்வையில் இருக்காது.

நல்லவர்கள் நல்ல சொற்களைத்தான் சொல்வார்கள். அந்தச் சொற்கள் எளிமையாக இருக்கும். ஆனால் அவர்கள் உணர்ந்து அனுபவித்து முடிவுகட்டிய உண்மையல்லவா அச்சொற்களாக விளைந்து வருகின்றது என்பதை நோக்கினால் அதிசயமாக இருக்கும்.

சதா உண்மையில் ஈடுபட்டு ஆனந்தத்தில் திளைக்கிறவர்கள் சான்றோர்கள். அவர்கள் தங்கள் அனுபவத்தையும் ஆனந்தத்தையும் மற்றவர்களுக்கு வழங்கத் துடிக்கிறார்கள். அதைத் தெளிவாக மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அதனோடு ஒட்டிய ஆதாரங்கள் பலவற்றைத் தேடுகிறார்கள், சான்றோர் (நல்லவை நாடி).

நம்முடைய பயத்தையும் கவலையையும், ஏன்/அக்கிரம எண்ணம் ஒவ்வொன்றையும் துடைத்தெறிந்துவிட்டு, வீரம், தயாளம் முதலிய அறப் பண்புகளை உண்டாக்கி விடுகின்றனவே/ நல்லவர்களின் சொல்//அதை அறிகிறபொழுது அதிசயத்துக்கு அளவே இல்லை.

''அல்லவை தேய
அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய
சொலின்'' 25

(நல்லவை நாடி - அனுபவத்தாலும் ஞானத்தாலும் நல்லனவற்றையே ஆராய்ந்து தெளிந்து முடிவு கட்டி, இனிய சொலின் - அவற்றை இனிமையாக அனுதாபத்தோடு சொன்னால், அல்லவை - பாவம், தேயும் - ஒழியும்)

சான்றோர்களின் சொற்கள் ஒவ்வொன்றும், அளந்து முடிவு கட்டிய உறுதியான சொற்களாக இருக்கும். அச்சொற்களில் ஏக்கமோ, பயமோ இருக்காது. பரிபூரணத்துவம் நிறைந்து விம்மிக் கொண்டிருக்கும் அச்சொற்களில்.

ஆனால் அச்சொற்கள் எளிமையாக இருக்கும். கேட்கக்கேட்க இன்பமாக இருக்கும். அதனால்தான் ''சிறுமை உள் நீங்கிய இன் சொல்'' என்று குறளாசிரியர் குறிப்பிடுகிறார்.

குறளாசிரியர் குறிப்பிடுகிற இன்சொல்லானது உலக வாழ்க்கைக்கு நன்மை செய்வதுடன், ஆனந்தமயமான ஞான வாழ்க்கைக்கும் துணையாகவே நிற்கும். இதை,

''சிறுமையுள் நீங்கிய
இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம்
தரும்'' 26

[மறுமையும் இம்மையும்-இகபர வாழ்க்கை இரண்டுக்கும்]

அருமையாகவும் எளிமையாகவும் நல்ல கருத்துக்களைச் சொல்வது லகுவான காரியந்தான். ஆனாலும் அப்படிச் சொல்வதற்குப் பதிலாகக் கேடானவற்றைத் துணிச்சலோடு சொல்கிற கூட்டந்தான் உலகில் அதிகம். இதற்கு நாம் என்ன செய்யமுடியும்.

சுவைமிக்க மாம்பழத்தை விட்டு விட்டு, வேப்பங்காயை ஒருவன் மென்று அறைக்கிற கணக்குத்தான் அது.

''இனிய உளவாக
இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்(து)
அற்று.'' 27

[கனி-பழம். மாம்பழம், பலாப்பழம் போன்ற இனிய பழம்]

# நன்றி உணர்வு

மனிதனிடத்துள்ள செல்வத்திலெல்லாம் மிக உயர்ந்த செல்வம் இதயம். இதயத் தடாகத்திலிருந்து தான் உணர்ச்சிகள் என்கிற நறுமலர்கள் பூத்துக் கொண்டேயிருக்கின்றன.

இந்த உணர்ச்சி (மலர்கள்) வாடாமல் நறுமணங் கமழ்ந்து கொண்டேயிருக்கவேண்டும். வற்றாத தேனானது சொட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

அப்படி அமைய வேண்டுமானால் மனிதனுக்கு நண்பர்கள் வேண்டும். நண்பர்களை மறந்துவிடாமல் நட்புணர்ச்சியை எப்பொழுதும் பசுமையாகவே வைத்திருக்க வேண்டும்.

நண்பர்களுடன் தொடர்பு கொள்வதும், உறவாடுவதும், ஆனந்தத்தில் திளைப்பதுந் தான் நட்பிற்குச் செய்யும் பூஜை, நைவேத்தியமும் அதுதான்.

ஆபத்தான நிலையிலிருந்து தத்தளித்த ஒருவன் ஆபத்திலிருந்து விலக்கி ஒருவன் உதவி செய்கிறான். உதவி செய்தவனுடன் நட்பு ஏற்படுவது இயல்புதான். ஆனால் அந்த நட்பை விட்டுவிடுதல் எவ்வளவு கேவலமானது? எவ்வளவு கொடுமையானது? இவ்வளவு கொடியவனிடம் மனம் செத்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். உணர்ச்சி வறண்டு சுருண்டு விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

குற்றமற்ற சான்றோர்களின் உறவு ஒருவனுக்குக் கிடைப்பது அவன் செய்த தவப்பேறாகும்.

அப்படிப்பட்ட வரப்பிரசாதத்தை ஒருவன் இழந்துவிட்டால் அவனை மனிதன் என்று சொல்ல முடியுமா? சொல்லவேமுடியாது.

அதுபோலத் தான் ஆபத்தை நீக்கி உதவி செய்த ஒருவனுடைய நட்பை இழந்து விடுவதும், அவ்வாறு இழந்து விட்டவனையும் மனிதன் என்று சொல்லவே முடியாது.

"மறவற்க மாசற்றார்
கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார்
நட்பு." 28

சான்றோர்களின் உறவையும், உதவி செய்தவர்களின் நட்பையும் எக்காரணத்தைக் கொண்டும் இழந்து விடக்கூடாது என்று வேண்டிக் கொள்கிறார் குறளாசிரியர்.

குறளாசிரியரின் வேண்டுகோள், மறவற்க துறவற்க என்று வாய்ப்பாக எதுகைகளில் நின்று ஒலிக்கின்றன.

[மறவற்க-மறந்துவிடக்கூடாது. மாசு அற்றார் கேண்மை-குற்றமற்ற உத்தமர் உறவை. அதுபோல், துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க-ஆபத்தில் உதவியரின் நட்பை விட்டுவிடக்கூடாது]

உணர்ச்சியும், ஆனந்தமும் உள்ள மனிதன் தனக்கு உதவி செய்த மனிதனை மறக்க மாட்டான். ஆயுள் முழுவதும் மறக்கவே மாட்டான். எத்தனை கூட்டங்களில் எத்தனை எத்தனை சோதனைகள் ஏற்பட்டாலும் அந்த நட்பை மறக்க மாட்டான். எண்ணி எண்ணி இன்புற்றுக்கொண்டேயிருப்பான் அவன்.

"எழுமை எழுபிறப்பும்
உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர்
நட்பு" 29

எழுமை எழுபிறப்பும்-எத்தனை சோதனைகள் ஏற்பட்டாலுஞ் சரி. தங்கள் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்களே ஏற்பட்டாலுஞ் சரி.

உள்ளுவர்-நினைந்து நினைந்து இன்புறுவார்கள். மறக்கவே மாட்டார்கள். எதை?

தங்கள் விழுமம் துடைத்தவர் நட்பு-தமக்கு வந்த இடையூறை நீக்கி உதவி செய்தவர்களுடன் ஏற்பட்ட தொடர்பை.

* * * * * *

ஒருவன் செய்த உபகாரத்தை நினைக்க நினைக்க உறவு ஏற்படுகிறது. உறவின் மூலமாக இன்பநிலை ஏற்படுகிறது. அதனால் நமக்கு ஒருவன்செய்த உபகாரத்தை மறக்கவே கூடாது. மறந்து விடுவது போன்ற நஷ்டம் வேறொன்றுமில்லை.

இனி, ஒருவன் நமக்கு ஒரு தீங்கு செய்துவிட்டான் என்றால் அதை நினைக்க நினைக்க அவன்மேல் ஆங்காரம் ஏற்படுகிறது. வெறுப்பும், கசப்பும் அவன் மேல் உண்டாகி விடுகிறது. உள்ளத்தில் மகிழ்ச்சி நீங்கித் துன்பந்தான் ஏற்படுகிறது. அதனால் வேறொருவன் செய்த தீங்கை மறந்துவிட வேண்டும். மறந்து விட்டால்தான் இன்பம். மறக்காவிட்டால் துன்பந்தான்.

மறக்க வேண்டியதை மறந்து விடவேண்டும். மறக்கக் கூடாததை மறந்து விடக்கூடாது. வாழ்க்கையின் ரகசியம் அப்படியிருக்கிறது.

''நன்று மறப்பது
நன்றன்று — நன்றல்லது
அன்றே மறப்பது 30
நன்று''

[நன்று-நல்ல செயலை. உதவியை நன்றல்லது- கேடானதை. அன்றே மறப்பது-அப்பொழிதே]

துரிதபாவம் ''அன்றே மறப்பது நன்று'' என்று துள்ளி வருகிறது.

அன்றே என்றால் அப்பொழுதே என்பது பொருள், வேண்டாததை உடனுக்குடன் மறந்துவிட வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று வாய்தாப்போட்டு விட்டால், உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும், ஒட்டி வேர்ப் போட்டுக்கொள்ளும். பிறகு நல்லதை நினைக்க அது இடம் கொடுக்காது.

ஒருவன் செய்த உபகாரத்தை நினைந்து அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க அனுபவிக்க மனசுக்கு எவ்வளவோ ஆனந்தமுண்டாகும். அந்த ஆனந்தத்தை வேறு எதனாலும் அழித்துவிட முடியாது.

உபகாரஞ் செய்த பேர் வழியால்க் கூட அந்த ஆனந்தத்தை அழித்துவிட முடியாது. உபகாரஞ் செய்த பேர் வழி, பல தீங்குகள் செய்தாலுஞ்சரி, அந்த ஆனந்த உணர்வு அழியவே அழியாது.

"கொன்றன்ன இன்னா
செயினும் — அவர்செய்த
ஒன்றுநன்(று) உள்ளக்
கெடும்". 31

[கொன்று அன்ன - நமது குறிக்கோளையும், கடமைகளையும் அழித்து விடுவது போன்ற, இன்னா செயினும் - துன்பந்தரத்தக்க இடையூற்றை ஒருவன் செய்கிறான் என்றால் அவன்மேல் வெறுப்பும் ஆங்காரமும் ஏற்படுவது இயல்புதான். அந்த வெறுப்பும் ஆங்காரமும்

அவர் செய்த - அவன் ஏற்கனவே நமக்கு செய்த, ஒன்று நன்று - ஒரே ஒரு நன்மையை (உபகாரத்தை) உள்ள - நினைத்த மாத்திரத்திலேயே, கெடும் - கசப்பு இல்லாமல் போய்விடும். பிறகு ஆனந்தமேதான்.

அறம் என்பது ஒன்றுதான். ஆனால் அது எத்தனையோ கிளைகளோடு காட்சி தரும். ஒழுக்கம், வாய்மை, பொறுமை, அடக்கம், ஒப்புரவு, அன்பு என்கிற கிளைகள் பலவாக அதில் பொருந்தியிருக்கும்.

பாவம் என்பதும் ஒன்றுதான் அதுவும் எத்தனையோ கிளைகளோடு காட்சிதரும். வஞ்சகம், சூது, பொய், கொடுமை, ஏமாற்று, கொள்ளை, களவுஎன்கிற கிளைகள் பலப்பலவாக அதில் பொருந்தியிருக்கும்.

இத்தனைக் கிளைகளோடு அவை தோன்றாவிட்டால் மக்களாகிய நமக்கு அவை, அவ்வளவு தெளிவாகத் தெரியமாட்டா.

ஒருவன் தன்னுடைய செயல்களின் மூலம் தீமைகள் பல செய்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். பொய் சொல்கிறான், களவு செய்கிறான், கொள்ளையடிக்கிறான் ஏமாற்றுகிறான், வஞ்சிக்கிறான், கொலை கூடச் செய்துவிடுகிறான். அப்படியானால் அவனைக் கொடியவன் என்று தானே சொல்வோம்? வாழ்க்கையின் எல்லா நலன்களையும் கொன்றவன், எல்லா, இன்பங்களையும் இழந்தவன் என்றுதான் அவனைச் சொல்வோம்.

ஆனாலும், அவனுடைய ஒவ்வொரு செயலையும் ஆராய்ந்து பார்த்தால், அவன் அப்படி அப்படிச் செய்வதற்கு எப்படி எப்படியோ காரணங்கள் இருப்பது தெரியவரும். காரணம் தெரிந்து விட்டால் மன்னிக்கவே தோன்றும். தண்டிக்கத் தோன்றாது.

ஆகவே, தான் செய்த தீமைகளிலிருந்து ஒருவன் விடுதலை பெற வழி கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ஆனால், ஒருவன் செய்த உபகாரத்தை ஒரு மனிதன் மறந்து விடுவதற்குக் காரணமே இல்லை. உபகாரஞ் செய்தவனுக்குத் தீங்கு கூடச் சிலர் செய்து விடுகிறார்கள். அவர்களுக்கு விமோசனம் இல்லைதான்.

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம்;- உய்வில்லை
செய்நன்றி கொன்ற
மகற்கு". 32

(உய்வு - விமோசனம்)

அற்புதமானகுறள் "எந்நன்றி" என்பதிலுள்ள நன்றி என்பதற்கு அறம் அல்லது ஒழுக்கம் என்பது பொருள். தரும தேவதையின் குரல்வளையை நெரிப்பதைவிட, ஒருவன் செய்த உபகாரத்தை மறப்பதும், மறந்து, உபகாரஞ் செய்தவனைப் புறக்கணிப்பதும் கொடுமையான செயல்களாகும். இந்தக் கொடுமையைச் செய்தவனுக்கு விமோசனமே கிடையாது என்பதை, அறத்தைச் சிதைத்தவன் கூட விமோசனப் படுவான், இவனுக்குத் தான் விமோசனம் இல்லை என்று அழுத்தங் கொடுத்துச் சொல்லியிருக்கிறது.

செய்நன்றியைக் கொன்றவன் (எந்த வகையாலும்) மனிதனே ஆகமாட்டான் என்பதை விளக்குவதற்காக 'செய்நன்றி கொன்ற மகற்கு' என்று குறிப்பிட்டிருக்கிறது. உய்வில்லை என்பதை முன் கூட்டிச் சொல்லி, 'செய்நன்றி கொன்ற மகற்கு' என்பதைப் பின்னால்ச் சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ஒருவன் செய்த உபகாரத்தை, பணத்தை அளவுகோலாகக் கொண்டு பார்க்க முடியாது. அவன் பட்ட சிரமத்தை அளவுகோலாகக் கொண்டும் பார்க்க முடியாது.

உபகாரத்தின் உண்மையான மதிப்பு இதயத்தைக் கொண்டும், அனுபவிக்கும் பண்பைக் கொண்டும், ஆனந்தத்தைக் கொண்டும் பார்க்கக்கூடிய ஒன்றாகும்.

நல்லவர்களுக்கும், சான்றோர்களுக்கும் செய்கிற உபகாரம் எவ்வளவோ நன்மைகளை உண்டாக்கிவிடும். அந்த உபகாரத்தை, நன்மைகளை விட அதிகமாக அவர்கள் மதிப்பார்கள்.

தீயவர்களுக்கு ஒரு உபகாரஞ் செய்தால் அப்படி ஒன்றும் மேலான நன்மை விளைந்துவிடப் போவதில்லை. அவர்களும் அவ்வளவு உயர்வாக மதித்து விடவும் மாட்டார்க்ள்.

ஆகவே, உதவி என்பதற்குக் குறிப்பிட்ட ஒரு மதிப்பு என்பது இல்லைதான். (வரைத்து - அளவு, அன்று இல்லை).

உதவியைப் பெற்றவர்களின் (செயப்பட்டார்) பண்பாடு (சால்பு) எவ்வளவோ, அவ்வளவுக்கு உதவியின் மதிப்பு (வரைத்து) உயரும்.

சான்றோர்கள், தங்களுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தை எண்ணி எண்ணி மகிழ்வார்கள். உருகியே விடுவார்கள். உருகிய உள்ளத்திலிருந்து பக்தியே உண்டாகிவிடும். பக்தியோடு பார்க்கிற பொழுதுதான் ஒன்றன் உருவம் முழுவதும் தெரியும்.

உபகாரத்தின் அளவு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அளவிட முடியாதது அது என்பது தெரிந்துவிடும்.

சாதாரணப் பேர்வழிகளால், உபகாரத்தை எண்ணி உருக முடியாது. அவர்களிடம் பக்தியும் உண்டாகாது. உபகாரத்தின் தரம் புலப்படவும் மாட்டாது.

"உதவி வரைத்தன்று;
உதவி, — உதவி
செயப்பட்டார் சால்பின்
வரைத்து" 33

(உதவி - உபகாரம் என்பது, உதவி வரைத்து அன்று - உபகாரத்திற்கான செலவு, சிரமம் இவைகளைக் கொண்டு கணித்துவிடக் கூடிய காரியமல்ல. உதவி செயப்பட்டார் - உபகாரஞ் செய்யப் பட்டவர்களுடைய, சால்பின் வரைத்து-இதயம், பண்பாடு பக்தி இவற்றை வைத்துப் பார்க்கக்கூடிய ஒன்றாகும்.

ஒரு வேளைச் சோறு கொடுத்து உதவியவனைக் கூட நல்லவர்கள் எப்படிப் பார்ப்பார்களென்றால்,

"முன்ஒருவன் செய்யும்
உபகாரம் மூவுலகம்
தன்னைக் கொடுத்தாலும்
சாலுமோ? கொன்னே
உயிர்க்குறுதி ஆக
ஒருவர்சோ(று) உண்டார்
பிறர்க்குரியர் ஆவாரோ
பேசு"

என்னும் உறுதிமயமாகவே பார்ப்பார்.

குறிப்பு: நன்றி உணர்வு என்பது அநாதியான தத்துவம். அது உள்ளத்துள் நின்று செயல்படுவது, உலகைப் பாதுகாப்பது.

# நெறி முறை

ஒரு பிரதேசத்தில் மக்கள் பஞ்சத்தால் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். வேறொரு பிரதேசத்தில் ஏராளமாகத் தானியம் விளைந்திருக்கின்றது. வியாபாரிகள் அங்கு சென்று தானியவகை களை வாங்கி இங்கு வந்து விற்பனை செய்கிறார்கள்.

லாபம் ஏற்படுவதோடு புண்ணியமும் உண்டாகத்தான் செய் கிறது வாணிபத்தால்.

வணிகர்களிடம் ஒழுங்கு இருக்க வேண்டும். அதைவிட நாணயம் இருக்க வேண்டும். எல்லாவற்றையும்விட நீதி உணர்வு அவர்களிடமிருந்து செயல்பட வேண்டும்.

வணிகத்துறையில் ஒழுங்கும், நாணயமும், நீதியும் சேர்ந்து கிடக்கின்றன.

மேலே குறிப்பிட்ட மூன்று பண்புகளும், வணிகத் துறையில் எவ்வளவிற்கு எவ்வளவு கலந்து மருவுகின்றனவோ? அவ்வளவிற்கு அவ்வளவு சமுதாயத்தில் அற உணர்வு நிறைந்திருக்கும். எவ்வள விற்கு எவ்வளவு அவை கலக்காமல் ஒதுங்கி விடுகின்றனவோ? அவ்வளவிற்கு அவ்வளவு சமுதாயத்தில் கொடுமையும் வஞ்சகமும் பெருகிவிடும்.

குறளாசிரியர் காலமானாலும்சரி, இருபதாம் நூற்றாண்டா னாலும் சரி, மனித வாழ்க்கையின் இருபெரு அங்கங்களாக விளங்குவன உழவும், வணிகமுந்தான். மேலே குறிப்பிட்ட இரண்டும் உறுதியாக இருக்கும் வரை மனித வாழ்க்கை நிலை குலையாது. அவை உழவும் வணிகமும் நிலைகுலைந்து விட்டால் மனித வாழ்க்கை நிச்சயம் தடுமாறவே செய்யும்.

இது காரணமாகவே வணிகர்களை மிகவும் நயமாக வேண்டிக் கொள்கிறார் குறளாசிரியர்.

நான் சொல்லப்போவது "வணிகப் பெரும் மக்களுக்கு" என்கிற பீடிகையோடு ஆரம்பிக்கிறார் குறளாசிரியர். நீங்கள் உங்கள் வணிகத்தைப் பாதுகாப்பது போல,நாணயத்தையும், ஒழுங்கையும், நீதியையும் பாதுகாக்க வேண்டும் என்கிறார்.

"வாணிகம் செய்வார்க்கு
வாணிகம் பேணிப்
பிறவும் தம போல்ச்
செயல்" 34

(பேணி - காத்து, செயல் - செய்க)

லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டது வாணிபம். லாபத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், ஆனந்தத்தைக் குறிக் கோளாகக் கொண்டது அறஉணர்வு. அதனால் வணிகத்திற்கு மாறுபட்டது(பிற) என்று குறிப்பிடுகிறார் நீதியை, "வணிகத்தை வளர்ப்பது போல நீதியையும் வளர்க்க வேண்டும். "தம போல் செயல்" என்று கேட்டுக் கொள்கிறார் குறளாசிரியர்.

தனியாக ஒரு பெண் அகப்பட்டால் போதும், அவள் யாராக இருந்தாலும் அவளை மோசம் பண்ணுவதற்குத் தயங்கமாட்டான் கீழ் மனிதன். அவனைக் கயவன் என்று சொல்லலாம். அத்தகைய கயவர்கள் ஐந்நூறு, அறுநூறுபேர் ஒரு நகரத்தில் வசிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

ஒரு அபலைப் பெண்ணைப் பலவந்தமாக மானபங்கப் படுத்தி விட்டதாக ஒருவன் கையும் களவுமாகப் பிடிபட்டு விட்டால், அந்தக் கொடியவனை நல்லவர்கள் எவ்வளவிற்கு வெறுப்பார் களோ அவ்வளவிற்கு மேலே குறிப்பிட்ட கயவர்களும் வெறுப்பார் கள். நல்லவர்கள் எவ்வளவு தண்டனை அக்குற்றவாளிக்கு வழங்கத் தயாராக இருக்கிறார்களோ அவ்வளவிற்கும் அதிகமான தண்டனையை வழங்க முன்வருகிறார்கள் அக்கயவர்களும்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரியவருகிறது. தனிமனிதன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும்சரி, அதுவல்ல முக்கியம். அவனும், அவனைப் போன்ற பலரும் கூட்டமாக ஒன்று சேர்ந்து விட்டால் கண்ணிற்குத் தெரியாத நீதி அங்கிருந்து ஒளிவீசுவதைப்

பார்க்கலாம். விரும்பினாலும்சரி விரும்பாவிட்டாலும் சரி கூட்டத்திலிருந்து நியாயந்தான் பிறக்கும். உண்மை தலை நிமிரும். பொய் ஒதுங்கி விடும்.

நீதி என்பது சமுதாய உணர்வுக்குள் நிறைந்து கிடக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மறந்துவிடக் கூடாது. மேலே குறிப்பிட்ட சமுதாய உணர்வுக்கு 'நடுவு' என்று பெயர் வைத்திருக்கிறார் குறளாசிரியர்.

ஒருவன் செய்கிற காரியம் நல்ல காரியமாகவே இருக்கலாம். தவறு கொஞ்சங்கூட இல்லாததாக இருக்கலாம். அந்தக் காரியத்தைச் சமுதாய உணர்வு வெறுக்குமானால், அந்தக் காரியத்தை அப்பொழுதே விட்டுவிட வேண்டும் என்கிறார் குறளாசிரியர்.

''நன்றே தரினும்,
நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய
விடல்'' 35

(நடுவு இகந்துஆம்ஆக்கம் - சமூகம் வெறுக்கும் காரியம். அன்றே - அப்பொழுதே, - விடல் - விட்டு விடுக)

வழக்கறிஞர்களிடத்தும் நீதிபதிகளிடத்தும் நீதியை ஒப்படைத்து விடவில்லை. சமுதாய உணர்விலும் அதுகொடுக்கிற தீர்ப்பிலுமே, நீதியை வைத்திருக்கிறது. இந்த உண்மையைப் பார்த்து அனுபவிக்கிறார் குறளாசிரியர்,

எத்தகைய கொடுமையானாலும் அதைச் செய்யக் கூச மாட்டான் கயவன்.

தன்னுடைய கயமையை மறைப்பதற்கு அவன் எத்தனையோ உபாயங்களைக் கையாள்வான்.

மளமளவென்று செல்வந்தனாகி விடுவதிலும், செல்வாக்குப் பெற்று விடுவதிலும் அளவுக்கு மீறி அதிகாரத்தைப் பெற்றுவிடுவதிலும்கூட அவன்தன் கைவரிசையைக் காட்டிவிடுவான்.

மானமும், நாணயமும் இல்லாத கயவனுக்குப் பணமும் அதிகாரமும் செல்வாக்கும் கவசங்களாக அமைந்துவிட்டால் சட்டங்களுக்கு அவன் பிடிபடாமல் நழுவி விடுவான். அக்கயவனே

கோயில் கட்டுவான். கும்பாபிஷேகம் நடத்துவான். பள்ளிக்கூடங்கள் அமைத்து ஆசிரியர்களை நியமித்துக் கொள்வான். மக்களை ஏமாற்றி மக்களுக்குச் சட்ட திட்டங்கள் வகுத்துக் கொடுக்கும் அதிகாரத்திற்கும் வந்துவிடுவான்.

அப்படியானால் மனித நீதியும், மனிதச் சட்டமும் அவனை நெருங்க முடியாமல் திணறிவிடுகின்றன. அவனை வளைத்து மடக்க முடியாமல் தோற்றுவிடுகின்றன.

சமுதாய உணர்வு ஒன்று இருக்கிறதே அது எல்லாவற்றையும் துளைத்து 'அயோக்கியன்' என்று அம்பலப்படுத்தி விடுகிறது. யோக்கியனுக்குச் சிறப்புச் செய்ய முடியாத பரிதாபநிலையில் இருந்தாலும், அவன் யோக்கியந்தான் என்று தீர்ப்பு அளித்து விடுகிறது.

சமுதாய உணர்வின் தீர்ப்பை 'எச்சம்' என்று குறிப்பிடுகிறார் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார்.

சட்டத்தாலும், நீதிபதிகளாலும் பார்க்க முடியாத உண்மையை 'எச்சம்' என்கின்ற ஒன்றால் தான் பார்க்க முடியும் என்றும் அவர் விளக்கி விடுகிறார்.

"தக்கார் தகவிலர்
என்ப(து); அவரவர்
எச்சத்தால் காணப்
படும்". 36

(அவரவர் எச்சம் - ஒவ்வொருவரைப் பற்றியும் சமுதாய உணர்வு வழங்குகிற தீர்ப்பு.)

# அழகின் தோற்றமே அடக்கம்

வியாபார சம்பந்தமாக ஒரு பொருளைப் பற்றிப் பேச்சு. வருகிறது. "இதன் அடக்கம் என்ன ஆகிறது" என்று கேட்கிறோம்.

கல்யாண சம்பந்தமாகப் பேச்சு வருகிறது. பெண்ணை அப்படியும் இப்படியுமாக வருணித்தபிறகு, "பெண் ரொம்ப ரொம்ப அடக்கமானவள்" என்று பேச்சை முடித்து வைக்கிறோம். பையனைப்பற்றிப் பேச நேர்ந்தாலும், அது ஒன்றைத்தான் - "பையன் அடக்கமான பையன், இந்தக் காலத்தில் இப்படி ஒரு அடக்கமான பையனைப் பார்ப்பது எளிதல்ல" என்றுதான் சொல்லித் தீர்க்கிறோம்.

அடக்கம் என்பது நிறைந்தது, குறைவற்றது. அது மரியாதையின் ஒளி. ஞானத்தின் மணம். உண்மையின் உருவம், அழகின் ரகஸ்யம்.

பழகுவதிலும்சரி, உறவாடுவதிலும் சரி, பேசுவதிலும் சரி பாடுவதிலும் சரி, (விளை) யாடுவதிலுங்கூட அடக்கம் இருக்க வேண்டும். அதுதான் முக்கியம். அடக்கமாய் இல்லாவிட்டால் அழகாய் இருக்காது. மற்றவர்களிடம் மரியாதை இருந்தால் அடக்கம் வரும். மரியாதை இருக்க வேண்டுமானால் மனதில் உண்மை இருக்கவேண்டும்.

உண்மையின் அவதாரந்தான் அடக்கம். அதனால் அடக்கம் அழகாய் இருக்கிறது. அழகுக்கு அழகு தருகிறது. அந்த அழகு, பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துகிறது. பக்தியையே உண்டாக்கி விடுகிறது.

பணிவும் அடக்கமும்போல மனிதர்களுக்குப் பெருமை தரக் கூடியது வேறு ஒன்றும் இல்லை.

குறளாசிரியர் சொல்கிறார்.

"அடக்கம் அமரருள்
உய்க்கும்; அடங்காமை
ஆர்இருள் உய்த்து
விடும்." 37

(அடக்கம் அமரர்உள் உய்க்கும் - அடக்கம் என்னும் பண்பு தேவர் களில் ஒருவனாக உயர்த்தும் மனிதனை. பணிவும், மரியாதையும் உடைய பண்பாளனை நினைத்தால், அன்பு, பொறுமை, உபகாரம் இனிமை, பொறுமை, முதலிய பண்புகள் நிறைந்த சீலம்மிக்க சான்றோர்களின் ஞாபகம் வரும். அவர்களுக்கு நடுநாயகமாக நம் மனக்கண் முன்வந்து அமர்வான் அடக்கம் உடையவன். அடங்காமை - திமிரும், அகம்பாவமும் நிறைந்த வெறித்தனம் இருக்கிறதே! அதுஎன்ன செய்யும்? ஆர்இருள் உய்த்துவிடும் - மனித விலாசத்தை விட்டே ஒருவனை எடுத்துவிடும். வெறியவனைப் பற்றிய நினைப்புவந்தால், கூடவே பேய், பிசாசு, நாய், கழுகு இவைகளின் ஞாபகம் வரவே செய்யும். அவைகளுக்கு மத்தியில் தான் அவனுக்கு இடம்.)

சர்க்கார் உத்யோகம் பார்க்கிறான் ஒருவன். மாதம் முடிந்த பின் சம்பளம் வாங்கி வருகிறான். ஆயிரமோ ஆயிரத்து நூறோ வாங்கி வருகிறான். வீட்டுச்செலவு போக ரூபாய் நூறு, நூற்றைம்பது என்று மிஞ்சுகிறது. அதை எவ்வளவு பாதுகாப்பாய் மறைத்து வைக்கிறான் மனிதன்?

சீட்டுப்போட்டுச் சேர்த்து வைக்கிறான். பாங்கியில் போட்டுச் சேர்த்து வைக்கிறான். வட்டிக்குக் கொடுத்துச் சேர்த்து வைக்கிறான். யாருக்கும் தெரியாமல் மறைத்து வைக்கிறான். மனைவி மக்கள்கூடப் பார்த்து விடாதபடி பத்திரமாய் மறைத்து வைக்கிறான் கணக்கை - அதாவது தொகையை.

சாதாரணத் தொகையே மனிதனை இந்தப்பாடுபடுத்தினால், நன்செய், தங்கம், ரத்தினம், வீடு, புகழ், உடம்பு, உயிர், அதிகாரம் முதலிய செல்வங்கள் மனிதனை என்ன பாடுபடுத்தும்? தன்னை விட்டு அக்கம்பக்கம் அவை நகர மனிதன் சம்மதிப்பானா?

செல்வத்தில் எல்லாம் மேலான செல்வம் அடக்கம். அதைப் பொக்கிஷமாக வைத்துப் பாதுகாக்க வேண்டும். அதைவிட உற்றதுணை (ஆக்கம்) மனிதனுக்கு வேறு ஒன்றும் இல்லை.

''காக்கப் பொருள்ஆ(க)
அடக்கம்; ஆக்கம்;
அதனின் ஊங்(கு) இல்லை
உயிர்க்கு''. 38

(காக்க - பாதுகாக்க வேண்டும். பொருள்ஆ(க) பொக்கிஷமாக மதித்து. அதினின் ஊங்கு - அடக்கத்தைவிட மேலான. ஆக்கம் - பெரும்பேறு - அதாவது பாக்கியம். உயிர்க்கு இல்லை - மனிதனுக்கு வேறு ஒன்றும் இல்லை.)

3

நம்மைச் சுற்றி எத்தனையோ காரியங்கள் நடக்கும். நல்லதும் நடக்கும். பொல்லதும் நடக்கும். ஒழுங்காகவும் நடக்கும்' தாறுமாறாகவும் நடக்கும். அவ்வளவையும் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். எல்லாவற்றையும் பின்பற்றி விடவேண்டும் என்று கட்டாயம் இல்லை.

பழிபாவத்திற்கு அஞ்சாத கயவன் எப்படியோ குபேரன் ஆகி விடுவான். பேரும் புகழும் பெற்றுவிடுவான். அதிகாரமே அவன் கைக்கு வந்துவிடும். அவன் சொன்னபடி ஆடும் மன்பதைக் கூட்டம். சந்நிதானங்கள் எல்லாம் அணிதிரண்டு அவனுக்குப் பல்லாண்டு பாடுவதும் உண்டு.

அவ்வளவையும் பார்க்கவேண்டும். அதில் தப்பில்லை. நாமும் கயவன்வழியில் போனால் என்ன என்னும் சபலத்திற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது.

சூறாவளிக்காற்று மூர்க்கத்தனமாக வந்து மோதினாலும் மலை அசையாது. அடைமழையானது கொட்டுக் கொட்டென்று கொட்டினாலும் நடுங்காது மலை. போர்வையை இழுத்து மூடாது மலை. வாட்டுவாட்டென்று பனி வாட்டினாலும் மலைக்குச் சளி பிடிக்காது. அப்படி நிலைகுலையாமல் நிமிர்ந்து நிற்கும் மலை. எவ்வளவு பிர்மாண்டமாய் இருக்கிறது மலை? எத்தனை கம்பீரமாய் இருக்கிறது மலை.

லட்சியத்தில் உறுதியாய் நிற்கிற மனிதனும் அப்படித்தான். ஏன்? எப்பொழுதும் அவன் மக்களின் உள்ளத்தில் நிறைந்து நிற்பான். அப்படி நிறைந்து நிற்கும் காரணமாகவே, அவனைப்

பற்றிய நினைப்பு வந்துவிட்டால், பெருக்கும் ஒய்யாரமும் மலையைவிட உன்னதமாகத் தோன்றுமாம்.

"நிலையில்த் திரியா(து)
அடங்கியான் தோற்றம்;
மலையினும் மாணப்
பெரிது" 39

(நிலை - லட்சியநிலை. தோற்றம் - அடக்கத்தின் கம்பீரம். மாணப்பெரிது - அளவிடமுடியாதபடி வியாபகமாக இருக்கிறது.)

4

சொற்களின் மூலந்தான் குணங்கள் பிரகாசிக்கின்றன. நல்ல பண்புகளானாலும், கெட்ட பண்புகளானாலும், மனிதனுடைய குணங்கள், நோக்கங்கள், நினைப்புகள் எல்லாம் வார்த்தைகள் என்னும் வாகனங்களில் ஏறித்தான் வரும்.

அதனால் சொற்கள் மனிதனைக் காட்டிக் கொடுத்துவிடும். வேறு சாட்சியம் வேண்டியது இல்லை.

ஒருவரைப்பற்றி நமக்கு அபிப்ராயம் ஒருவிதமாக இருக்கலாம். அதை அப்படியே சொல்வது முறை ஆகாது என்று தெரிந்தால், பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான். அதில் ஒன்றும் தவறு இல்லை.

சொல்லில் அப்படி ஒரு அடக்கம் வேண்டும். இல்லாவிட்டால் விபரீதம் உண்டாகும். பிரயோசனம் இல்லை. வாழ்க்கையில் எவ்வளவோ நஷ்டமும் உண்டாகும்.

நோய்வந்து ரத்தத்தைக் குடித்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். சத்தான உணவு, மருந்து, ஓய்வு, கவனிப்பு இவை காரணமாக ரத்தம் பழையபடி ஊறிவிடும்.

கட்டுப்பாடில்லாமல், தான் தோன்றித்தனமாக வந்த சொற்களால் வெந்துபோன உணர்ச்சி பழையபடி தளிர்க்காது. நட்பு, உறவு, சந்தோஷம் எல்லாம் அழிந்துவிடும்.

அவமானமும் தோல்வியுந்தான் பலன்.

"யாகாவார் ஆயினும்,
நாகாக்க; — காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப்
பட்டு". 40

(யா - எதை வேண்டுமானாலும். காவார் ஆயினும் - ஒருவர் பாதுகாக்காவிட்டாலும் பரவாயில்லை. இழந்ததைத் திரும்பப் பெற்றுவிடலாம். ஆனால் - சொல்லால் விளையும் நஷ்டத்தை

ஈடுகட்ட முடியாது. அதனால் - நா - சொல்லை. காக்க - அடக்கி வைக்க வேண்டும். சோகாப்பர் - வருந்துவர். இழுக்கு - அவமானம்.)

5

ஒருவனிடம் நாலாவழியிலும் பணம்வந்து குவியும். அவ்வளவு பணத்தையும் அப்படியே மறைத்துவிடுவான் மனிதன். உயிருக்கு உயிராகப் பழகும் நண்பர்களிடம்கூட, பணப் பெருக்கைக் காட்ட மாட்டான் மனிதன்! செல்வம் என்றால் அதனிடம் அப்படி ஒரு பயம். உண்மையை அனுபவிக்காத குறை.

ஆனால் படிப்பில் - ஆராய்ச்சியில், வெற்றுரையில் மனிதனுக்கு ஒருவிதமான கிறுக்கு. அங்கொன்று, இங்கொன்று என்று ஏதோ சில துணுக்குகள் மனிதன் கைவசம் இருக்கும். ஆனால் குப்பை, கூளம், மண், மணல் எல்லாவற்றையும் கொட்டி, ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று அளந்து கொண்டே இருப்பான்.

உண்மையை அனுபவிக்காத குறைதான் அதுவும்.

வெறுப்பையும், போலிப்படிப்பில்வரும் கெட்டிக்காரத்தனத்தையும் அடக்கி ஒடுக்கி வைத்துவிட்டால் போதும். அப்பொழுதே அவன் மனிதன் ஆகிவிடுவான்? ஏன், தெய்வப்பிறவியே ஆகிவிடுவான்.

அவனைப் பார்த்து அளவளாவ தருமதேவதையே நேரம் பார்த்துக் காத்து நிற்குமாம். முற்றத்தில் நின்று பேட்டிக்காகக் காத்து நிற்குமாம். பேட்டிக்கு நேரம் கிடைத்தவுடன், பாய்ந்து ஓடி அவனைப் பார்த்துக் கொண்டே இருக்குமாம்.

''கதம்காத்து கற்றடங்கல்
ஆற்றுவான் செவ்வி;
அறம்பார்க்கும் ஆற்றின்
நுழைந்து''. 41

(கதம்காத்து - கோபத்தை அடக்கி, கற்று அடங்கல் ஆற்றுவான் - இங்கொன்றும் அங்கொன்றுமாகப் படித்த துணுக்குகளையும், பட்டங்கட்டிவிடாமல் அடக்கமாய் வைத்துக் கொள்பவன். செவ்வி - அவனைக் கண்டுகளிக்கும் நல்லநேரத்தை. அறம் பார்க்கும் - தருமதேவதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும். ஆற்றின் நுழைந்து - அவன் வீட்டு விலாசத்தை விசாரித்து முற்றத்தில் வந்து நின்றே, நேரம் பார்க்குமாம் அறம்)

குறிப்பு - அற்புதமான பாடல், பக்திபாவம் பாடலில் ததும்பி நிற்கிறது.

# நீரால் கழுவமுடியாத அழுக்கு

## 1

மனித குலத்திற்குத் தாயாக இருந்து காப்பாற்றுகிறது ஆறு. அது மலையிலிருந்து இறங்கி கடலை நோக்கிப் போகிறது. போகிற பொழுது ஒரே நேர்கோட்டில் கதிக்கப் போவது இல்லை.வளைந்து வளைந்து, நெளிந்து நெளிந்து ஆறுபோகிறது. சில சந்தர்ப்பங்களில் நேராகவும், ஆறுபோவதுண்டு. இல்லை என்று சொல்ல முடியாது.

ஆற்றின் லட்சியம், பள்ளம் எங்கிருக்கிறது. நன்செய் எங்கிருக் கிறது. பண்படுத்தப்பட்ட தோட்டங்களும், கொடிக்கால்களும் எங்கிருக்கின்றன என்று தேடிப் பார்த்து உதவுவதுதான்.

அதற்காக என்ன பாடுபடுகிறது ஆறு. பாறைகளுக்கு இடையே, உயர்ந்த மேட்டுப்பாங்கான இடங்களுக்கு ஊடே, அடங்கி ஒடுங்கி நடக்கிறது ஆறு. வழி எவ்வளவு சுற்றாக இருந் தாலும், மேடுகளுடன் மோதிக்கொண்டு விரயமாகாமல், சுற்றி வளைத்து விளைநிலங்களை நோக்கிப் பாயும் ஆறு.

அப்படி ஆறானது பண்போடு நடந்து கொள்ளாவிட்டால் நெல்லும் கரும்பும் வாழையும் என்னாவது? மனிதகுலம் என்னா வது? ‘ஆறு’ என்றால் ‘‘செல்லும் வழி’’ என்பதுதான் பொருள்.

அறஉணர்வுகளோடு கூடிய ஒழுக்கத்திற்கும் ஆறு என்றுதான் பெயர். அதுதானே லட்சியத்தை நோக்கி நடக்கும்வழி - அதாவது நடை! வளைந்து, நெளிந்து, ஓடி, ஆடி, வயல்களுக்குள்ளும், தோட்டங்களுக்குள்ளும்போய் நன்மை செய்கிறது ஆறு. அப்படியே மனிதர்களோடு மனிதர்களாய் ஊடாடி, அவர்களுக்கு உபகார மாய் இருக்கவேண்டும். வாழ்க்கை. அதற்காகச் சிரமப்படுவது நஷ்டம் ஆகாது. அதுதான் மனித வாழ்க்கையின் லாபம்,

அந்த லாபம் இன்னதென்று சொல்கிறார் கவிஞர்.

ஒழுக்கம் உள்ளவனே மனிதன். உயர்ந்த மனிதன். ஒழுக்கம் இல்லாதவன் வெறும் யந்திரந்தான். மனுசதத்துவதத்துக்கு உரிய பெருமையோ, அழகோ, சிறப்போ அவனிடம் இல்லைதான்.

பொறாமை பிடித்தவனிடம் ஆனந்தம் இருக்காது. சதா புழுங்கித்தவிக்கும் அவன்மனம். பொறாமை உள்ளவன் சந்தோசத்தை இழந்து தவிக்கிறான். ஒழுக்கம் இல்லாதவனோ எல்லாவற்றையும் இழந்து தவிக்கிறான்.

''அழுக்கா(று) உடையான்கண்
ஆக்கம்போன்(று) இல்லை;
ஒழுக்கம் இலான்கண்
உணர்வு''. 42

(அழுக்காறு - பொறாமை. ஆக்கம் - கூடிமகிழும் இன்ப உணர்ச்சி. உயர்வு - பெருமை. அதாவது மனிதத்தன்மை).

2

ஒரு வாக்கியத்தை எடுத்துக்கொண்டால் அதில் வார்த்தைகள் பல இருக்கும். தனித்தனியாகவே இருக்கும். ஒன்று நீளமாக இருக்கும், ஒன்று குட்டையாக இருக்கும். ஒன்று அர்த்தபுஷ்டி உள்ளதாக, மற்றொன்று சாதாரணமாக இருக்கும்.

ஆனாலும் வார்த்தைகள் ஒன்றைவிட்டு ஒன்று விலகிப் போவதில்லை. சேர்ந்தே நிற்கும்.ஒன்றுக்கொன்று ஆதரவாகவே நிற்கும்.

எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொற்கள் விலகிப்போய் விட்டால், பொருளே இல்லாமல்ப் போய்விடும்.

ஒழுக்கமும் அப்படித்தான். சேர்ந்து ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதுதான் ஒழுக்கம். குடும்பத்தோடு சேர்ந்தும், தெருவோடு சேர்ந்தும், ஊரோடு சேர்ந்தும், நாட்டோடு சேர்ந்தும், உலகத்தோடேயே சேர்ந்தும் வாழ்வதுதான் வாழ்க்கை. அதுதான் மனிதனுக்கு ஒழுக்கம்.

அந்த ஒழுக்கத்தைப் பார்த்து வியக்கிற காரியந்தான் படிப்பு. அந்தப்பண்பு இன்னதென்று பிடிபடாவிட்டால் கற்றது கல்வி அல்ல. வெறும் மூடத்தனத்தையே வருந்திவருந்திப் படித்துத் தொலைத்ததாகப் போய்விடும்.

"உலகத்தோ(டு) ஒட்ட
ஒழுகல்— பலகற்றும்
கல்லார்; அறி(வு)இலா
தார்". 43

("பலகற்றும், ஒட்டஒழுகல் கல்லார் - என்று சேர்த்துப் பார்க்க வேண்டும்; எதை எதையோ படித்தான், பாடம் பண்ணினான், ஆனால் நாலுபேருடன் பழகத் தெரியவில்லை அவனுக்கு. அப்படியானால் அவனைப் படியாதவன் என்றுதானே சொல்லவேண்டும். அறிவே இல்லாதவன் அவன் என்று தீர்ப்புக்கொடுத்து விடுகிறார் குறளாசிரியர்.)

# மன்னிக்கமுடியாத குற்றம்

குற்றங்கள் எத்தனையோ உலகத்தில் இருக்கவே செய்கின்றன. பலகுற்றங்களைப் பொருட்படுத்துவதில்லை உலகம். மறந்துவிடல், மன்னித்துவிடல் என்னும் ஜாபிதாவுக்குள் அக்குற்றங்கள் போய் விடுகின்றன.

பலகுற்றங்களைச் சோதனை செய்து பார்த்தால்-பெட்டியில்ப் போட்டு அவற்றை விசாரித்தால் ஏதோ காரணங்கள் இருக்கவே செய்கின்றன. அதனால் அப்படி அப்படியே ஒதுங்கி விடுகின்றன குற்றங்கள்.

வேலைநிறுத்தம், தரக்குறைவான கோஷம், வழிமறிப்பு, கல்லெறி, ஏன், தீவைப்பு, வெட்டு, குத்து, துப்பாக்கிச் சூடு முதலியவைகூட தற்காலத்தில் நழுவி விடத்தானே செய்கின்றன. ஆனாலும் மன்னிக்கமுடியாத குற்றம் ஒன்று இருக்கிறது பாதிக்கப்பட்டவன் மாத்திரம் அல்லாமல் உலகம் முழுவதும். குலைபதறக் கூடிய கொடுமை ஒன்று இருக்கவே செய்கிறது.

அதுதான் துரோகம்.

துரோகம் யார்செய்தாலும் கொடியதுதான். யாருக்குச் செய்தாலும் கொடியதுதான். மனைவிக்குச் செய்தாலும் சரி, மக்களுக்குச் செய்தாலும், சரி, தாய்க்குச் செய்தாலும், நாட்டுக்குச் செய்தாலும் சரி, துரோகம் துரோகமேதான்.

பழகியவர்களிடமே - உயிருக்கு உயிராக உறவாடியவர்களிடமே ஒருவன் துரோகமாக நடந்து கொண்டான் என்றால், அதைத் தாங்க முடியுமா மனிதனால்? அதைவிட மோசம், முன் பின் தெரியாதவனிடம், அயலானிடம் துரோகம் பண்ணுவது.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் மனைவி கண்கண்ட உண்மை. அவளை வைத்தே குழந்தைகள் இருக்கிறார்கள். குடும்பம் இருக்கிறது. வாழ்க்கையே இருக்கிறது.

மற்றொருவனுடைய மனைவியைத் திருடிவிடுகிறான். ஏமாற்றி விடுகிறான். மோசம் பண்ணிவிடுகிறான் - இல்லை அப்படிச் செய்கிறதையே யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறான் ஒருவன் என்றால், அவனைவிட அயோக்கியன் உலகின் இல்லை தான்.

நெறிமுறைகளுக்கு நேர்மாறாக பல அக்கிரமங்கள் நடக்கின்றன. பொய் சொல்கிறான், திருடுகிறான், கொள்ளை அடிக்கிறான், ஏமாற்றுகிறான், திட்டுகிறான், கொலைகூடச்செய்து விடுகிறான். இவைகள் எல்லாம் அக்கிரமங்கள்தாம்.

இந்த அக்கிரமங்களில் ஒன்றிரண்டைத் தொழிலாக வைத்திருப்பவர்கள் பலர். அவர்களில்க்கூடச் சிலர்; மற்றவன் மனைவியிடம் மரியாதையாக நடந்து கொள்கிறார்கள். நம்பிக்கையோடு நடந்து கொள்கிறார்கள். பாதுகாப்பாக இருந்து உதவுகிறார்கள்.

இந்த அதிசயத்தை இன்றும் கண்கூடாக ஆங்காங்கு பார்க்கிறோம்.

இனி ஒருவன் தர்மசாஸ்த்திரத்தில் சொல்லி இருக்கிற முறைகள் பலவற்றை அனுசரிக்கிறான். அன்னதானம் பண்ணுகிறான், கோவில் கட்டுகிறான், கும்பாபிஷேகம் நடத்துகிறான், பள்ளிக்கூடம் வைக்கிறான், ஞானோபதேசம் செய்கிறான்.

ஆனாலும் அவன்புத்தி மற்றவன் மனையையே நாடுகிறது.

> "அறன்வரையான் அல்ல
> செயினும், பிறன்வரையாள்
> பெண்மை நயவாமை
> நன்று". 44

(அறன் வரையான் - தரும நெறியை மதிக்காதவனாய், அல்ல செயினும் - தவறான செயல்கள் செய்வதையே பிழைப்பாகக் கொண்டிருந்தாலும், களவு, பொய் முதலியவை இருந்தாலும் போய்த் தொலையட்டும், பிறன் வரையாள் - இன்னொருவன் நம்பிக்கைக்கு உரிய பெண்ணின். பெண்மை நயவாமை - இன்பத்தை விரும்பாமல் இருந்தால்ப் போதும்)

# கருணையில் பூத்த வீரம்

## 1

படுக்கையில் மூட்டைப்பூச்சி எப்படியோ வந்துவிடுகிறது. யார் படுத்தாலும் அது தொந்தரவு பண்ணும். புருஷன் படுத்தாலும் கடிக்கும். பெண்டாட்டி படுத்தாலும் கடிக்கும். பிள்ளைகள் படுத்தாலும் கடிக்கும். பெற்றோர் படுத்தாலும் கடிக்கும்.

வீட்டுக்கு வந்தவர்கள் ஆயிற்றே, விருந்தினர்கள் ஆயிற்றே என்று கடிக்காமல் விட்டுவிடுமா மூட்டைப்பூச்சி. கடிக்கத்தான் செய்யும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரே, அந்த வீட்டுக்கு விருந்தினராக வந்திருக்கிறார். அவர் படுத்து உறங்குவதற்காக அந்தப் படுக்கையை விரித்திருக்கிறார். அவரும் படுத்து உறங்க முயன்றார். தூங்கவிடுமா மூட்டைப்பூச்சி. ஏன், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே விருந்தாட வந்து படுத்தாலும், தன் காரியத்தையே செய்யும் மூட்டைப்பூச்சி.

கடிக்காமல் இருக்கமுடியாது மூட்டைப்பூச்சியால். குடிகாரர்கள் கண்டபடி உளறுவார்கள். நல்லவர், வல்லவர் என்று பார்க்காமலே கன்னாபின்னா என்று திட்டுவார்கள். கிறுக்குகளும் அப்படித்தான். யாரை வேண்டுமானாலும் திட்டும். எப்படி வேண்டுமானாலும் திட்டி வசவில் இறங்கிவிடும்.

மூட்டைப்பூச்சிகளையும், குடியர்களையும், கிறுக்குகளையும் பார்க்கவேண்டியதுதான். அனுபவிக்க வேண்டியதுதான். அப்படியே ஒதுங்க வேண்டியதுதான். அவைகளை ஒதுக்கியும் வைக்க வேண்டியதுதான். அவ்வளவுதான் செய்யவேண்டிய காரியம்.

அவைகளை அழித்தே தீருவேன் என்று படைப்பட்டாளங் களை யாராவது திரட்டுவார்களா? அணிவகுத்து நிற்பது உண்டா? போர்தான் தொடுப்பார் உண்டா?

சமுதாயத்தில் மூட்டைப்பூச்சிகளும், கிறுக்குகளும், குடி மயக்கங்களும் போதுமான அளவுக்கு இருக்கின்றன. ஆதிகாலந் தொட்டே இருக்கின்றன. வெளியிலும் அவை உண்டு. வீட்டுக் குள்ளும் அவை உண்டு. மதித்து வழிபடுகிற கூட்டம் எங்கும் குறைவுதான். இகழ்ந்து பேசுகிறவர்கள், "இல்லாதது பொல்லா தது சொல்லி இட்டுக் கட்டுகிறவர்கள்". கேவலமாக திட்டுகிற வர்கள், புண்படுத்துகிறவர்கள் துன்புறுத்துகிறவர்கள் அதிகந்தான்.

பாவம்! என்ன உலகம் இது! பயித்தியம் பிடித்தல்லவா அலை கிறது! என்று அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க அனுபவிக்க இரக்கம் உண்டாகும். அதுதான் உண்மையான வீரம். "மடையர் களின் மடத்தனத்தைக் தாங்கிக் கொள்கிற பொறுமை இருக்கிறதே! அதுதான் ஆன்மவீரம்."

"வன்மையுள் வன்மை
மடவார்ப் பொறை"

என்கிறார் குறளாசிரியர்.

தெய்வ ஒளியோடு பிரகாசிக்கும் இந்த அற்புதத்தை - கருணை யில்ப் பிறந்த வீரத்தைக் கண்ணாரக் காண்பதல்லவா காட்சி.

இக்காட்சியைப் பார்க்க பெரிய மேடை ஒன்றையே அமைத்துத் தருகிறார் குறளாசிரியர்.

தேடிவந்த விருந்தினரை வரவேற்று உபசரிக்காத திமிர் இருக்கிறதே! அது ஒரு பெரிய தரித்திரம்! தரித்திரத்தில் எல்லாம் மோசமான தரித்திரம் அதுவாகும்.

நெல் தேங்காய், பழம், காய், தயிர், நெய், மனை, மனை யாள் அவ்வளவுக்கும் குறைவில்லைதான். ஆனாலும் விருந்தினரை மதிக்கும் பண்பு மட்டும் இல்லை.

எவ்வளவு இருந்தும் ஒன்றும் இல்லாமல் 'திரு திரு' என்று விழிக்கும். அந்த ஆணவமும் ஒரு அதிசயந்தானே!

"இன்மையுள் இன்மை விருந்(து) ஒரால்".

இந்த அதிசயத்தையே மேடையாகப் போட்டு அதன்மேல் ஏற்றி நிறுத்துகிறார் நம்மை. ஏற்றி நிறுத்தி அருள்மயமான ஆற்றலைப் பார்க்கும்படி சுட்டிக்காட்டுகிறார்.

இனிப் பாடலின் முழு உருவத்தையும் பார்ப்போம்.

இன்மையுள் இன்மை -
விருந்தொரால் — வன்மையுள்
வன்மை - மடவார்ப்
பொறை. 45

(விருந்துஒரால் - விருந்தினரைக் கவனிக்காமல் அலட்சியமாக இருப்பது. மடவார்ப் பொறை - புத்தி இல்லாத தடிமுண்டங் களின் மூடத்தைத் தாங்கிக் கொள்வது.)

குறிப்பு:- இருட்டிலிருந்து பிரகாசமான இடத்தைப் பார்க்க வேண்டும். அப்பொழுது ஒவ்வொன்றும் சுத்தமாகத் தெரியும். அதேபோல, விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கப் பயப்படும் கோழையின் தோளில் ஏறிநின்று வீராதிவீரர்களைப் பார்க்கும் போது, அவர்களுடைய சக்தி முழுவதும் அப்படியே கண்களுக்குத் தெரிகிறது.

தமிழானது அதிசயபாவத்தை அழுத்தி அழுத்திக் காட்டுவதற் காக, மடக்கி மடக்கி வார்த்தைகளைப் போடுகிறது.

2

தவறு செய்பவனைத் தண்டித்துவிடுவது எளிது. அதற்கு உபாயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவன் செய்த தவறே நமக்கு ஒரு பெரிய கருவிதானே!

நேராகவும் தண்டிக்கமுடியும், மறைமுகமாகவும் தண்டிக்க முடியும்.

தண்டித்த உடன் விஷயம் முடிந்துவிடுகிறது. ஆத்திரம் தீர்ந்து விடுகிறது. அதில் லாபம் என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லைதான்.

ஆனால் ஒருவன் பெரிய கேடு ஒன்றையே செய்து விட்டான். அவன் செய்த காரியம் பொல்லாத காரியந்தான். முதலில் கோபம் வந்தது. பிறகு வருத்தம் வந்தது. கடைசியில் "மனுச காரியமே இப்படித்தான்! என்ன செய்யமுடியும் நம்மால்! விட்டுவிட வேண்டியதுதான்!" என்னும் தெளிவே வந்துவிட்டது.

பாரமான உடம்பைத் தாங்கிக் கொள்ளவில்லையா? அதற்கு மேல் ஆடை அணி அலங்காரங்களைத் தாங்கிக் கொள்ள வில்லையா? எல்லாவற்றிற்கும்மேல் பேரும் புகழும் வந்து குவிகின்றனவே! அவற்றையும் தாங்கிக்கொள்ளத்தானே செய் கிறோம்! அப்படியே, அசடுகளின் கோளாறுகளையும் தாங்கிக் கொள்கிறோம்.

விஷயம் முடிந்து விடுகிறது.

ஆனால் வாழ்நாள் முழுவதும் நினைக்க நினைக்க அது சுகத்தை அல்லவா கொடுக்கிறது,

உண்மையிலிருந்தும் அருளிலிருந்தும் பிறந்த பொறுமை மன தோடு மனதாய் நிற்கும். மறையவே மறையாது. ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

உலகமே ஒன்றாய் நின்று பாராட்டுகிற புகழாக அது உரு வெடுக்கும். இது எவ்வளவு பெரிய லாபம்?

> ''ஒறுத்தார்க்(கு) ஒருநாளை
> இன்பம்; பொறுத்தார்க்கும்
> பொன்றும் துணையும்
> புகழ்''. 46

(ஒறுத்தார்க்கு - பதிலுக்குப் பதில் தண்டனை கொடுப்பவர் களுக்கு. பொன்றும் துணை - வாழ்நாள் முழுவதும். ஏன்? மனித சமுதாயம் இருக்கும்வரை - உலகம் உள்ள அளவும்.

3

மகாத்மாகாந்தி தென்னாப்பிரிக்காவில் எழுபது ஆண்டுகளுக்கு முன் ரயிலில்ப் போனார். முதல் வகுப்பு டிக்கெட் எடுத்து, முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிப்போனார்.

''வெள்ளைக்காரர் பிரயாணம் செய்யும் முதல்வகுப்புப் பெட்டியில், நீ எப்படி ஏறிவரலாம்'' என்று அதட்டினார் ஒரு வெள்ளைக்காரர்.

காந்தி சொன்னார், ''முதல்வகுப்பு டிக்கெட் வாங்கி இருக் கிறேனே நான்! பணத்தை என்னிடம் வாங்கிக்கொண்டு, டிக்கெட்டைக் கொடுத்திருக்கிறார்களே! அப்புறம் பிரயாணம் ஏன் செய்யக்கூடாது?''

"அது ஒன்றும் எனக்குத் தெரியாது. கருப்பர்கள் வெள்ளையர் பிரயாணம் செய்யும் பெட்டியில் இருக்கக்கூடாது. இறங்கிவிடு" என்று நெருக்கினார் வெள்ளைக்காரர்.

காந்தி மறுத்தார்.

ஒரு நிலையத்துள் ரயில் வந்ததோ இல்லையோ, காந்தியின் பெட்டி படுக்கைகளை எடுத்து பிளாட்பாரத்தில் வீசி எறிந்தார். காந்தியைப் பிடித்து இழுத்து கரகரவென்று வெளியே தள்ளியும் விட்டார். பிறகு ரயிலுக்குப் பச்சைக் கொடியும் காட்டி விட்டார்.

நள்ளிரவு, கொட்டும்பனி, குளிரும், கும்மிருட்டும், முன்பின் தெரியாத இடத்தில் அநாதையாய் நின்றார் காந்தி. அப்பொழுது அவர் மனத்தை அழுத்திய அவமானம், தன்னைப்பற்றி அல்ல, "தனக்கே இந்தக்கதி என்றால், உலகம் முழுவதும் உள்ள கோடிக் கணக்கான அபலைகளின் கதி எப்படி இருக்கும்" என்று வேதனைப் பட்டார். துடியாய்த் துடித்தார். தவித்துத் தத்தளித்தார்,

அன்றிலிருந்தே - அப்பொழுதிருந்தே ஒரு அம்சமாகவே - அங்கமாகவே ஆகிவிட்டார். வாழ்நாள் முழுவதும் அது ஒன்றை நோக்கியே செயல்பட்டார்.

பயம் இன்மை, மரியாதை, தெளிவு, உறுதி, ஒற்றுமை, கருணை, ஆனந்தம் இவை மனிதகுலத்தின் பொது உடைமை என்றும், அதுவே மானுடதருமம் என்றும், உலக சேமம் என்றும் பாடுபட்டார்.

அதற்காகவே வந்தார். அதற்காகவே பாடுபட்டார். அதற்காகவே வாழ்ந்தார்.

சில சந்தர்ப்பங்களில் இந்தப் பொது நலன்களுக்காக, உலக சேமத்திற்காக, கவனிப்பாரற்றுக் கிடக்கும் மன்பதைக் கூட்டத்திற்காக அவர் உண்ணாவிரதம் இருந்தார்.

லட்சியம் நிறைவேறும்வரை உண்ணாவிரதம் என்று இருப்பார். உயிரையே பணயம் வைத்து உண்ணாவிரதம் இருந்த தியாகமூர்த்தி அவர்.

அவர் உண்ணாவிரதம் இருந்தது தனக்காகவா? இல்லை. பாழ்பட்ட உலகைச் செம்மைப்படுத்துவதற்காக? கோடானகோடி மக்களுக்காக அப்படிப் பட்டினி கிடந்தார் காந்தி மகான்.

இது எவ்வளவு மகத்தான செயல் என்று வியக்கிறார் குறளாசிரியர்.

பிறகு யோசனை பண்ணுகிறார். இதையும்விட உன்னதமான காரியம் ஒன்று இருக்கிறதே, அதுதான் அற்புதம். அதை நோக்கும் போது உலக சேமத்திற்காகப் பட்டினி கிடப்பதுகூடச் சாதாரணந் தான் என்று பட்டு விடுகிறது.

குறளாசிரியரின் அனுபவம் எப்படி தமிழில் குதித்தோடி வருகிறது என்று பாருங்கள்,

''உண்ணாது நோற்பர்
பெரியர்,- பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின்
பின்''. 47

(பிறர்சொல்லும் இன்னாச்சொல் - பழிபாவத்திற்கு அஞ்சாமல் எவன் எவனோ சொல்கிற கொடுஞ்சொல்லையும். நோற்பாரின்- தாங்கிப் பொறுத்துக் கொள்கிறார்களே மகான்கள். அவர் களுடைய ஆற்றலுக்கு பின் - கொஞ்சம் குறைந்ததுதான். உலக நன்மைக்காகப் பட்டினி கிடந்து தியாகம் செய்வதும்)

குறிப்பு:- உண்ணாது நோற்றவரை நம்முன் கொண்டுவந்து நிறுத்திவிட்டு, அவருடைய பெருமையை நாம் பார்த்து வியந்து கொண்டிருக்கும் பொழுதே, அவரையும்விட மகா பெரிய உத்தமர் ஒருவரை அவர் பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறது தமிழ்.

உண்மையை அப்படி மேலே மேலே உயர்த்திக் காட்டுகிறது தமிழ்

# மகிழ்ந்து பாராட்ட வேண்டும்

1

மனிதனிடம் கோளாறுகள் எத்தனையோ இருக்கின்றன. கோளாறுகளுக்கு மூலம் வெறுப்புத்தான்.

வெறுப்பு என்னும் விஷம் அறியாமையிலிருந்து பிறக்கிறது. "மனித சமுதாயம் ஒரு முழுப்பொருள். அதில் ஒரு அம்சம் தான் நாம். ஒரு அங்கம் தான் நாம். பிரிக்க முடியாத உறுப்பு நாம்" என்னும் உண்மை. மறந்தே போய்விட்டது மனிதனுக்கு.

புத்தியை விட்டு உண்மை போய் விட்டது. பொய்வந்து உட்கார்ந்து கொண்டது. 'நான்' என்னும் அகம்பாவமும் 'என்னுடையது' என்னும் திமிரும் சேர்ந்த பிழைப்பே வாழ்க்கை யாகி விட்டது.

பிறகு, மற்றவர்களிடம் அன்பு வருமா? மரியாதை வருமா? உபசரிப்பு வருமா? எரிச்சல் தானே வரும்.

வேலைக்காரனைக் கைக்குள் வைத்திருப்பதைப் போல, குழந்தைகளையும் கைக்குள் வைத்துக் கொள்கிறோம். மனைவியையும் வைத்துக் கொள்கிறோம். எல்லோரையும் நம் தயவை எதிர்பார்த்து நிற்கும் பரிவாரங்களாகவே வைத்துக் கொள்கிறோம். நண்பர்களோ, உற்றாரோ, உறவினரோ, தெருக் காரரோ, ஊர்க்காரரோ யாரும் தன்னை மிஞ்சிவிடக்கூடாது என்று நினைக்கிறோம்.

உலகமே நம்முடைய சொல்லைக் கேட்டு உருண்டு தொலைத் தால் என்ன என்றுகூட நினைக்கிறோம்.

இப்படி ஒரு வெறி - வெறி பிடித்த பிறகு மனிதனால் சும்மா இருக்க முடியுமா?

பொறாமை உண்டாகிறது. கோபம் உண்டாகிறது. பகையை வளர்க்கிறான். கொடுமை செய்கிறான்.

பக்கத்து வீட்டுக்காரன் ஆரோக்கியமாக இருந்தாலும் கோபம் வருகிறது. அவனுடைய வீட்டை அவனே இடித்துத் திருத்திக் கட்டினான். உடனே இவனுக்கு ஆங்காரம் பிறக்கிறது. பலவருடம் காத்திருந்த அவன் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயம் ஆகியது என்று கேள்விப்பட்டான். உடனே இவனுக்கு மூளை கொதித்து விடுகிறது. மூன்று வருடம் பாடசாலைத் தேர்வில் தோற்ற அவனுடைய பையன் தேறிவிட்டால், இவனுக்கு என்னகேடு, தலையைப்பிய்த்துக் கொள்கிறான். நாக்கைப் பிடுங்குகிறான். கோபத்தில், தன் மனையாளையே விரட்டி விரட்டி அடித்து விடுகிறான்.

அந்தப் பையனுக்கு ஒரு வேலை கிடைத்து விட்டால் இவனால் தாங்க முடியுமா? வேலை கொடுத்தவனையே தீர்த்துக் கட்ட ஆயத்தமாகிறான். சபித்துத் தொலைக்கிறான்.

எருமைமாடு நாலுபக்கா பால் தருகிறது என்றாலும் புழுங்கி விடுகிறான். ''நம் உடம்பில் அரைக்கால்படி பால்கூட இல்லையே! அப்படி இருக்க, எருமையிடம் இவ்வளவு பால் எப்படி இருக்கலாம்'' என்று சீறுகிறான்.

வெறுப்பும் எரிச்சலும் பொறாமைக்கு அப்படி அபிஷேகம் பண்ணுகின்றன. நாம் எல்லோரும் ஒன்று என்னும் உண்மை விளங்க வேண்டும்.

பொறாமை இருக்காது. பிறன் அழகைப் பார்த்து ரசிப்பான். செல்வத்தைப் பார்த்து ரசிப்பான். ஞானத்தைப் பார்த்து ரசிப்பான். வீரத்தைப் பார்த்து ரசிப்பான்.

மதிக்கவே செய்வான். பக்தியே மனதில் ஊறிவிடும். பிறகு ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து மகிழ்வான். வாழ்த்துவான். போற்றுவான். பாராட்டுவான்.

ஒழுக்கம் ஒழுக்கம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோமே? அதன் பொருள் இது தான். அவனும் நானும் ஒன்றுதான் என்னும்

உண்மையில் ஆனந்தம் அடைவதுதான் ஒழுக்கம். பொறாமை இல்லாமல், வெறுப்பில்லாமல், எரிச்சல் இல்லாமல் ஒன்றி மகிழ்வதுதான் ஒழுக்கம்

"ஒழுக்காறாக் கொள்க;
ஒருவன்தன் நெஞ்சத்(து)
அழுக்கா(று) இலாத
இயல்பு" 48

(ஒருவன் - ஒவ்வொரு மனிதனும். ஒழுக்கு - ஒழுங்கு என்னும் முறையையே. ஆறு ஆ(க) கொள்க வாழ்க்கை நெறியாக ஏற்க வேண்டும். எப்படி ஏற்பது? அழுக்காறு இலாத இயல்பு - பொறாமை தோன்றாதபடி (மனசை) சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலம், ஒழுக்கத்தை லட்சியமாகக் கொள்ள வேண்டும்.)

ஒழுக்கம் என்பது பயத்தில் இல்லை. பாவலாவில் இல்லை. அது எல்லாம் ஒன்று என்னும் ஞானத்தில் இருக்கிறது. தெளிவில் இருக்கிறது. நிச்சயத்தில் இருக்கிறது.

2

நம்மால் ஒருவனுக்கு உதவ முடியவில்லை. வசதி இருந்தாலும் மனம் இல்லை. போய்த் தொலையட்டும். ஆனால் இன்னொருவன் உதவுகிறான். பாவம் கஷ்டப்படுகிறானே. என்று, ஏதோ கொஞ்சம் நெல் கொடுக்கிறான். பறிதோறும் ஐந்தாறு தேங்காய் கொடுக்கிறான். குடி இருக்க காலி மனை ஒன்றைக் கொடுத்து உதவுகிறான். கொஞ்சம் பழசாய்ப்போன துணிமணிகளையும் அவ்வப்போது கொடுத்து வைக்கிறான். தீபாவளிப் பண்டிகையில் இரண்டொரு வேட்டி துண்டும் எடுத்துத் தருகிறான்.

வாங்குகிறவன் நிலைமைக்கு மனம் உருகவேண்டாமா? கொடுப்பவனைப் புகழ்ந்து ஊக்கப்படுத்த வேண்டாமா? முடியவில்லையே மனிதனால்.

"இந்தப்பயல் இப்படியா தலை தூக்குகிறான்" என்று பொருமுகிறான். ரத்தம் சுண்டி விடுகிறது.

அவதூறுகள் சொல்கிறான். பொய்யைப் பட்டம் கட்டி விடுகிறான். கொடுப்பவனையும் வாங்குகிறவனையும் குழப்பத்தில் ஆழ்த்தி கெடுத்தே விடுகிறான்.

விளங்குவானா அவன்? நாசமாய்ப் போய்விடுவான் அல்லவா? அவனுடைய கொடுமையால், அவன் குடும்பம் (சுற்றம்) முழுவதும் அலறும்.

ஒருவாய்ச் சோற்றுக்கும், ஒரு முழத் துணிக்கும் அவன் குடும்பம் தெருவில் நின்று திண்டாடும்.

இன்றில்லாவிட்டாலும் நாளை அது நடந்தே தீரும். என்கிறார் குறளாசிரியர்.

"கொடுப்ப(து) அழுக்கறுப்பான்
சுற்றம்; உடுப்பதூஉம்,
உண்பதூஉம், இன்றிக்
கெடும்." 49

(அழுக்கறுப்பான் - பொறாமையால் கெடுத்தவன். உடுப்பதூஉம் - உடை. உண்பதூஉம் - உணவு. உடுப்பது, உண்பது என்பவற்றை நீட்டல் ஓசை கொடுத்து, உடுப்பதூஉம், உண்பதூஉம் என்று சுட்டிக் காட்டி இருக்கிறது. உணவுக்கும் உடைக்கும் அவனுடைய குடும்பம் கதறி அழுவதை அப்படிக் கண்முன் நிறுத்திக் காட்டு கிறது தமிழ்.)

3

பொறாமைக்காரன் உருப்படமாட்டான். அவன் கணக்கைப் பேரேட்டில் இருந்து எடுத்துவிட வேண்டியது தான். இதுதான் நியதி. ஆனாலும் ஒன்றிரண்டு பேர். பல குடும்பங்களைக் கெடுத்த பின்பும், தளதள என்றிருக்கிறார்கள். அவர்கள் காரியம் கொலு மேளம்கட்டி ஜாம், ஜாம் என்று முன்னேறுகிறது. மாறாக, நல்லவர்கள் — உண்மை உணர்ச்சியும், பண்பாடும், மனத்தெளிவும் உடைய நல்லவர்கள் கஷ்டப்படுகிறார்கள். தொட்டது எல்லாம் துலங்காமல்ப் போய்விடுகிறது அவர்களுக்கு.

மஞ்சளைத் தொட்டாலும் கரியாய்ப் போய்விடுகிறது நல்லவர்களுக்கு. வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறார்கள், அவர்கள். ஒன்றும் இல்லை அவர்களிடம்.

ஏன் இந்தத் தடுமாற்றம்? கொடியவர்களுக்குக் கோலாகலமும் உத்தமர்களுக்குக் கேடும் முறைமாறி, தலைகீழாய் வரக் காரணம் என்ன?

குறளாசிரியர் இந்த அலங்கோலத்தை ஆங்காங்கே பார்த்திருக்கிறார்;

"யோசிக்க வேண்டியது இது. தொடர்ந்து யோசிக்க வேண்டியது இது. விட்டுவிடக் கூடாது!! என்று பெருமூச்சு விடுகிறார் குறளாசிரியர்,

''அவ்விய நெஞ்சத்தான்
ஆக்கமும், — செவ்வியான்
கேடும் நினைக்கப்
படும்.'' 50

(அவ்விய நெஞ்சத்தான் - பொறாமை உள்ளவன். செவ்வியான் - செம்மையானவன், நல்லவன்).

பொறாமைக்காரன் கெடுவான். பொறாமை இல்லாதவன் மங்களமாக இருப்பான். இது தான் நியதி; இதில் உறுதியாக நிற்கிறார் குறளாசிரியர்.

''விபத்து ஏற்பட்டது போல் அங்கொன்று இங்கொன்று என்பவற்றை வைத்து முடிவு கட்டக்கூடாது. யோசிக்கலாம்.'' என்கிறார்.

இப்படி அவர் சொல்வதிலிருந்து குறளாசிரியருடைய நிச்சயம் இன்னதென்று தெரிகிறது.

தமிழ் அதற்கு வடிவம் தருகிறது.

# போதும் என்ற மனம்

1

மனிதர்களுக்கு வேண்டியவை எவை எவை? இப்படி ஒரு கேள்வி கேட்டால், பதில் எளிதில் வந்துவிடும். மனிதர்களுக்கு, மனிதர்களிடம் ஆசை இருக்க வேண்டும். அன்பு மயமாக இருக்க வேண்டும். ஆசை - காதல் வெறி என்று சொல்லும்படி பக்தியே உண்டாக வேண்டும் மனிதர்களிடம்.

அப்படியே வாழ்க்கையிலும் ஆசை இருக்கவேண்டும். கலை, பண்பாடு, சமயம், வழிபாடு இவைகளிடத்தும் ஆசை இருக்க வேண்டும்.

முயற்சி செய்வதில் - உடல் உழைப்பில் ஆசை இருக்க வேண்டும். தனக்கு மட்டும் அல்ல, மற்றவர்களுக்கு ஆகவும் உற்பத்தி செய்கிறதில் ஆசை வேண்டும். அதற்காகவே உழைக்க வேண்டும். அந்த உழைப்பில் ஒரு வெறி போலவே ஆசை வர வேண்டும்.

எளிமையிடத்தும், அழகிடத்தும் ஆசை இருக்க வேண்டும்.

இப்படி ஆசைகளை வெறியாய் வளர்த்து வாழ்கிறவன் சதா ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருப்பான்.

உண்மையாகவும் உத்சாகமாகவும் வாழ்வதற்கு என்ன வேண்டும், என்பது இயல்பாகவே தெரிந்து விடும். பள்ளிக்கூடம் போய்ப் படித்து அறியவேண்டியது இல்லை.

அதனால் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பான். செயல் பட்டவண்ணமாகவே இருப்பான். செயலில் விளையும் பலனை -

ஊதியத்தை, தனக்கு வேண்டிய அளவு மட்டும் எடுத்துக் கொள்வான். மிச்சத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவான்.

மேலும் மேலும் சேர்த்து வைத்துக் கணக்கை ஏற்றமாட்டான்

தன்னிடம் உள்ள சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி பாங்கியில் போட்டு மறைத்து வைக்கிற குணம் காற்றினிடம் இல்லை. அது மிக்க வேகத்தோடு உலகைச் சுற்றிக் கொண்டே இருக்கிறது. தன்னிடம் உள்ள சக்தியை, உயிர்ச்சத்தாக, பிராணிகளுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. மழையானது மேலும் மேலும் நீரைச் சேர்த்து எங்கோ ஒளித்தா வைக்கிறது? நதியும் அப்படித் தான், மேடு காடுகளை எல்லாம் கடந்து, குன்றும் குழியும் கடந்து விளைபுலன்களைத் தேடிவந்தல்லவா தன்னிடம் உள்ளதைக் கொடுத்து விட்டுப் போகிறது.

இயற்கையில் ஒவ்வொன்றும் உபகாரம் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். சேர்த்து வைக்கிறதும், ஒளிக்கிறதும், மனிதனிடம் மட்டும் உள்ள பைத்தியம்.

அழகாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு ஆடம்பரம் உதவாது. எளிமைதான் சாதனம் என்பது தெரியவேண்டும். நிறைந்த மனத்தோடு இனிமையாக வாழ எதுவேண்டும்? எவ்வளவு வேண்டும் என்பதைத் தெரிய முடியாதா என்ன?

தெரிந்து கொள்வது இயல்புதான். ஆனால் தெரியமாட்டேன் என்று சாதிக்கிறான் மனிதன்.

வேண்டாதவற்றைச் சேர்ப்பதிலும், ஒளித்து வைப்பதிலும், அதே ஞாபகத்தில், அதன்மேல் உயிரை வைப்பதிலும் மனிதன் தன்னைப் பறிகொடுத்து விடுகிறான்.

எவ்வளவு அதிகமாக உணவை உண்டாலும் சரி. ஏற்றுக் கொள்கிற அளவு தான் உடம்பு ஏற்றுக் கொள்ளும். எவ்வளவு ரத்தம் வேண்டுமோ, அவ்வளவு ரத்தமே உடம்பில் ஊறும். அளவறிந்து உண்பதுதான் ஆரோக்கியம். அளவை மீறுவது தொந்தரவுதான்.

கணக்கு வழக்கு இல்லாமல் மண்டிக் கிடக்கிறது காற்று. அவ்வளவு காற்றையுமா, மூச்சு இழுத்துக் கொள்கிறது? உடம்புக்குள் ஒளித்து வைக்கிறதா காற்றை? எவ்வளவு தேவையோ அவ்வளவை மட்டும் வாங்கி வாங்கி விடுகிறது மூச்சு.

சந்தோஷம் என்பது நாலுபேர் சேர்ந்தால் வரும். சேர்ந்தவர்கள் சந்தோஷமாக இருந்தால்தான் நாமும் சந்தோஷமாக இருக்க முடியும். ஏன்? உலகம் சந்தோஷமாக இருந்தால்தான் நாம் சந்தோஷமாக இருக்கமுடியும்.

நாம்மட்டும் தனித்துச் சந்தோஷமாக இருக்க முடியாது.

எல்லோரும் சந்தோஷமாக இருக்கவேண்டும். அப்படியானால் நமக்கு வேண்டியது எது? எவ்வளவு என்று தெரிந்துவிடும்.

தெரிந்துவிட்டால் வேண்டாதபடி சேர்க்கமாட்டான். திருடமாட்டான், பொய் சொல்லமாட்டான், கொள்ளை அடிக்கமாட்டான்.

பிறன்பொருளைத் தன்பொருளோடு சேர்க்க புத்தி வேலை செய்யாது. தொந்தரவுபடுத்தாது மனிதனை. உண்மையான செல்வம் என்பது வாழ்க்கைதான். வாழ்க்கை என்னும் தெய்வ சம்பத்து ஒளியற்றுப்போய்விடக்கூடாது.அது ஜொலித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

மற்றவர் பொருளிடத்து ஆசை - வெறி வரக்கூடாது. மனம் நிறைந்தால் வாழ்க்கை சுடர்விட்டு ஒளிரும்.

''அஃகாமை செல்வத்திற்(கு)
யாதெனில்? — வெஃகாமை
வேண்டும் பிறன்கைப்
பொருள்''. 51

(செல்வத்திற்கு - வாழ்க்கை என்னும் செல்வத்திற்கு. அஃகாமை - குறையாமை. யாது எனில் - பரிபூரணம் - என்பது எது என்றால்; இன்னொருவன் பொருள்மேல் ஆசை வைக்காமல் (வெஃகாமை) பார்த்து மகிழ வேண்டும்.

புதிர்போடுவது போல ஒரு கேள்வியைக்கேட்டு, ஆனந்த முழக்கத்தோடு அதற்குரிய பதிலையும் சொல்லிவிடுகிறார் குறளாசிரியர்.

அரியபெரிய உண்மையைக் கண்டுகொண்ட ஆனந்தம் அப்படி துள்ளிக் குதித்து வார்த்தைகளில் புரள்கின்றது.

2

வேறொருவன் பொருளை புத்தி இல்லாமல் கைப்பற்ற முயற்சித்தால் ஆபத்துத்தான். மனுசதத்துவத்தையே இழந்து விடுவான் அவன். செத்த பிணந்தான் அவன்,

இன்பமாகவும் எளிமையாகவும் அழகாகவும் குடும்பம் நடத்து வதற்கு கையில் இருப்பது போதும். கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கிறது. அப்படி இருப்பதை இன்னின்னார்க்குக் கொடுப்போம். என்று தெளிந்தவன் பிறன்பொருள் பற்றி மயங்குவானா?

வலியவந்து, "ஏற்றுக் கொள்ளவேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பிறர் கெஞ்சிக் கொடுப்பதையும் வாங்கமாட்டான். அதை நினைத்தாலே அவன் உடம்பெல்லாம் கூசும். உயிரே பதறும்.

அவன்தான் நிறைந்த வாழ்க்கை உடையவன். அவன் விரும்பினால் விரும்பியபடி ஒவ்வொன்றும் நிறைவேறும். வாழ்க்கையில் அவனுக்கு வெற்றிதானே ஒழிய தோல்வி என்பது இல்லை.

இனி, பாடலைப் பார்க்கலாம்.

"இறல்ஈனும் எண்ணாது
வெஃகின்; — விறல்ஈனும்
வேண்டாமை என்னும்
செருக்கு". 52

(இறல் - அழிவு, ஈனும் - கொடுக்கும். விறல் - வெற்றி.)

இரண்டு பாடல்களும் அற்புதமான சிருஷ்டிகள். வாழ்க்கையின் உண்மைரகசியமானது குறளாசிரியர் உள்ளத்தில் தாமரை மலர்போல பூத்து, தெய்வம் போலக் காட்சி தருகிறது. அதைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் கவிஞர். அப்படியே தமிழ் அனுபவிக்க இடம்கொடுத்து விடுகிறார். அழியாத ஓவியமாய் வார்த்தைகளில்ப் பூத்து மலரச் செய்து விடுகிறது தமிழ்".

# அமிர்தத்தை அல்லவா நஞ்சாக்கு கிறார்கள்

1

உலகம் என்றால் அது மனிதசமுதாயந்தான். கடல் இல்லையா? காற்று இல்லையா, மலை இல்லையா, காடு இல்லையா, வேறு பிராணிகள் இல்லையா உலகில் என்று கேட்கலாம். இல்லை என்று யார் சொன்னது? கட்டமண்ணும் குட்டியச் சுவரும்கூட இருக்கத் தான் செய்கின்றன. இல்லை என்று சொல்லமுடியுமா?

என்னென்ன இருந்தாலும் மனிதனை நோக்கி நிற்கிறது உலகம்.

குடும்பம், தெரு, ஊர், நாடு, சுற்றம் என்று அன்பு பாராட்டி ஒன்றி வாழ்கிறது உலகம். இந்த நட்பு கடல் போன்றது. பாற் கடலேதான், ஒன்றி உறவாடும் நட்பு.

பாற்கடலைக் கடைந்தார்கள். வெண்ணெய் திரண்டு வந்தது போலச் சந்திரன் வந்தது. தண்ணென்று குளிர்ந்த வெண்நிலா வாய் வந்தது. விலைமதிக்க முடியாத அரிய ரத்தினம் வந்தது. கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பகவிருட்சம் வந்தது. காமதேனு என்னும் பசு வந்தது. வாடாத புஷ்பம், பாரிஜாதமலர் பூத்து வந்தது. சகல செல்வங்களுக்கும் நாயகமாகிய லட்சுமிதேவியே பாற்கடலில் வந்துவிட்டாள். அவ்வளவுதானா? நிரந்தரமான இன்பத்தை - பேரின்பமயமான உண்மை இருக்கிறதே - ஆனந்தம்- அதுவும் அமிர்தமயமாக வந்துவிட்டது கடலில் இருந்து.

பாற்கடலில் இருந்து உண்டானவை எவ்வளவோ ஏராளந் தான்.

குடும்பம், சுற்றம், நட்பு இவைகளைச் சாதனமாகக் கொண்டு மனிதர்களுடன் உறவாட உறவாட வாழ்க்கையில் எவ்வளவோ கிடைக்கின்றன. ஆனந்தமே கிடைத்துவிடுகிறது. நிரந்தரமான பேரானந்தமே கிடைத்துவிடுகிறது. உண்ண உண்ணத் தெவிட்டாத பேரானந்தமாக இருக்கிறது உறவில் வருகிற இன்பம்.

பழக்கம், உறவு, ஈடுபாடு, மரியாதை, பக்தி இப்படியாக விளைந்து வருகிற அன்பு - இன்பமயமான அமிர்தம். அதுதான் வாழ்க்கை. அதுதான் லட்சியம். அந்த லட்சியந்தான் உலகம்· கடவுளே அந்த லட்சிய சொரூபந்தான் என்றாலும் குற்றம் இல்லை.

கூடிக்குலாவும் இன்பம் - அமிர்தம் எவ்வளவோ உயர்ந்தது. அதன் பெருமை அளக்க ஒண்ணாதது. அந்த அமிர்தத்தை நஞ்சாக்குவது பாவம். மனிதனுக்கு ஒவ்வாத காரியம் அது. ஆனாலும் மனிதன் அமிர்தத்தையும் நஞ்சாக்கிவிடுகிறான்.

ஒத்த உணர்ச்சியோடு சேர்ந்து பழகி மகிழ்ச்சியில் திளைக்கிறவர்களைப் பார்க்கிறான். வெறுப்பு உண்டாகிறது அவனுக்கு. எரிச்சல்படுகிறான். எரிச்சலில் பலன் கிடைக்கவில்லை என்றதும் அவமானம் வருகிறது. அப்படியே போரில் குதித்து விடுகிறான்.

யுத்தசன்னத்தனாய் அல்ல. யோக்கியன்போல் வேஷம் போடுகிறான். வேண்டியவன் போல் பாவலாப் போடுகிறான், குழைகிறான், நெளிகிறான், வளைகிறான்.

நேருக்கு நேராகப் புகழ்ந்து பேசுகிறான், எப்படியோ ஒட்டிக் கொள்கிறான். யாரைப் புகழ்ந்து ஒட்டிக் கொண்டானோ' அவனுக்கு வேண்டியவனிடமும் ஒட்டிக் கொள்கிறான்.

பிறகு இவனைப்பற்றி அவனிடமும், அவனைப்பற்றி இவனிடமும் எதை எதையோ சொல்லி - விஷத்தையே தூவி விதைத்து விடுகிறான்.

விளைவு என்ன? உறவு, ஆனந்தம் எல்லாம் போன இடம் தெரியாமல்ப் போய்விடுகிறது. கசப்பும், பகையுமாய்ப் போய்விடுகிறது வாழ்க்கை.

புறம் கூறுதல் (கோள்சொல்லல்) போலக் கொடுமை வேறு உண்டா? கொலையைவிட, கொள்ளை அடிப்பதைவிட,கோவிலை உடைத்து தெய்வங்களையே திருடி விலைபேசி விற்பதைவிட பாதகமான காரியம் புறங் கூறுதல்.

வேறொருவனிடம் (பின்நின்று) பேசும்போது, முன் ஒரு வனிடம் பேசியதை மறந்து (முன்நோக்கி), முரண்பட பேசுகிறதை விட்டு விடவேண்டும் என்கிறார் குறளாசிரியர்.

"பின்நின்று முன்நோக்காச் சொல்
சொல்லற்க" என்கிறார் கவிஞர்.

ஒருவனுடையகாரியம் தவறு என்றால் அதைக் கண்டிக்கலாம், திருத்தலாம். தாட்சண்யம் இல்லாமல் அதட்டியே கண்டிக்கலாம். அவன் நொந்து வருந்தும் அளவுக்கு - அவன்மனம் அழுது கண்ணீர் விடும் அளவிற்கு அவனை இடித்து உரைக்கலாம்.

ஆனால் அவன் இல்லாத இடத்தில் குறை சொல்லக்கூடாது.

"கண்நின்று கண்அறச்
சொல்லினும் சொல்லற்க;—
பின்நின்று முன்நோக்காச்
சொல்".

53

(கண்நின்று - கண்முன்நின்று. கண்அற - கண்கலங்கி நீர் சொரியும் அளவிற்கு ஒருவனைக் கண்டிக்கலாம். சொல்லற்க - (ஆனால் ஒருவனைப்பற்றி இன்னொருவனிடம் மறைவாக - முன்னால் ஒன்று, பின்னால் வேறு ஒன்று என்னும் முறையில்) ஒன்றும் சொல்ல வேண்டாம் (என மன்றாடி வேண்டுகிறார்.)

2

புறங்கூறுகிறவனிடம் ஆனந்த உணர்ச்சி இல்லை. சேர்ந்து உறவாடும் பழக்கம்இல்லை. அதனால் பழகிஇன்புறுகிறவர்களைக் கண்டால் அவனுக்குச்சினம் வருகிறது. உடனே செயல்படுகிறான், உயிருக்கு உயிராய் உறவாடியவர்களே, ஒருவரை ஒருவர் வெறுத்து வேறுபடும்படி (பகை) எதை எதையோ சொல்லிவிடுகிறான். இவனுடைய சொல்லை நம்பி நண்பர்களே பகைவர்கள் ஆகி விட்டார்கள்.

"பகச்சொல்லிக் கேளிர்
பிரிப்பர்; நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா
தவர்" 54

(கேளிர் - ஒட்டி உறவாடியவர்களை. நகச்சொல்லி - சிரிக்கச் சிரிக்கப்பேசி, நட்பு ஆடல் தேற்றாதவர் - பழகிப்பழகி ஆனந்திப் பதைத் தெரியாதவர்கள்.)

3

குற்றம் எங்கே இருக்கிறது என்று தேடிக் கொண்டிருப்பான் கொடியவன். அதே வெறியில் திருதிருவென்று கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே அலைவான். அதனால் நல்ல உயர்வான செயல்கள்கூட, கொடியவனுக்குக் கேடான செயல்களாகத் தோன்றும். தோன்றி விட்டால்ப் போதும். அதையே பல்லவியாக வைத்து அதனுடன் இவனுடைய கைச்சரக்கை எல்லாம் சேர்த்து, கண்டகண்ட இடம் எல்லாம் சொல்லித் தமுக்கடிப்பான்.

யாரிடம் எப்படி திரித்துச் சொன்னால் பகை ஏற்படுமோ. அவரிடம் போய் - வலியச் சென்று வர்ணம் வைத்தே பேசுவான்.

யாசகம் எடுக்கிறவன் ஒருவன் வந்தான். பிரபுவுக்கு அவன் மேல் அனுதாபம் உண்டாகி விட்டது. ஒரு வேளைப் பழையதைப் போட்டு அனுப்பி இருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. அவனைக் குளித்து விட்டுவரச் சொன்னார். புதுவேட்டியும் துண்டும் கொடுத்தார். இலைமுன் உட்காரச் சொன்னார். நளபாக மாக விருந்து படைத்தார்.

போகும் பொழுது யாசகன் கையில் வெற்றிலை பாக்குப் பழத்தோடு ஐந்து ரூபாயும் கொடுத்து அனுப்பினார்.

இந்த விஷயம் ஒன்று போதும் கொடியவனுக்கு, ''பார்த்தீர் களா! பார்த்தீர்களா! பயித்தியத்தை என்று ஒவ்வொருவரிடமும் பேசி வருவான். பிச்சைக்காரப் பயலை வீட்டினுள் ஏற்றலாமா? இலை போட்டா அவனுக்கு இல்லத்தரசிகள் பரிமாறுவது. வெற்றிலை பாக்கு வேறு. ரொக்கம் வேறு.''

''ஊரில் உள்ள பெரிய மனுசர்களை எல்லாம் கஞ்சன் என்று கேவலப்படுத்துகிறார், தான் ஒருவரே தருமப்பிரபு என்று காட்டிக் கொள்கிறார். என்ன ஆணவம் என்ன திமிர்'' என்று சந்தர்ப்பம் பார்த்துச் சொல்லி வருவான்.

நல்ல காரியத்தைத் தவறான காரியமாக தூற்றிக் கொண் டிருப்பான். பழகியவர்கள் மனதையே கெடுத்து விடுவான்.

பழகாதவர்களை விட்டாவைப்பான்? கொலை பாதகர் களாக மாற்றிவிடமாட்டானா?

"துண்ணியார் குற்றமும்
தூற்றும் மரபினார்;
என்னைகொல் ஏதிலார்
மாட்டு" 55

(துண்ணியார்குற்றமும் - பழகியவர்கள் (நல்ல காரியத்தையே) கெட்ட காரியமாக ஜோடித்து. ஏதிலார்மாட்டு - அன்னியர்களிடம் என்னை கொல் - என்னென்ன கைவரிசைகளைக் காட்டமாட்டார் கள். அவ்வளவும் காட்டுவான்.

குறிப்பு :- அப்பாவி மக்களிடம் குறளாசிரியருக்குப் பரிவு உண்டாகிறது. அப்படிக் கசிந்து ஊறும் பரிவைத் தமிழ் பார்க் கிறது. வார்த்தைகளை ஏற்றித் தேக்கி விடுகிறது. பிறகு அந்த வார்த்தைகள் தாளம் போட்டு நடனமே ஆடுகின்றன.

பாடலில் அனுதாப உணர்ச்சி தேன் சொட்டுவது போல் சொட்டுகிறது.)

4

பேசிக்கொண்டிருப்பவன் எப்பொழுது எழுந்திருந்து போவான் என்று ஆத்திரப்பட்டு (புறம்நோக்கி), அவன் எழுந்து போன உடன் அவன் பேசிய நல்ல அம்சங்களை ஒதுக்கிவிட்டு, நல்ல அம்சங் களுக்குப் பிரகாசம் கொடுப்பதற்காக உபயோகித்திருப்பானே, நொடிகள், மடக்குகள், உல்லாசங்கள், நகைச்சுவைகள், இவை களை மட்டும் சேர்த்துச் சொல்வான். மனதையே மாற்றுவான்.

"கருணைக்கு ஒரு குறைவும் வந்துவிடக்கூடாது என்கிற அற உணர்வல்லவா? இவனையும் சுமக்கச் சொல்கிறது பூமாதேவியை என்று வியக்கிறார் குறளாசிரியர்.

"அறம்நோக்கி ஆற்றும்கொல்
வையம்? புறம்நோக்கி,
புன்சொல் உரைப்பான்
பொறை" 56

(அறம் - கருணை, ஆற்றும்கொல் - தாங்குகிறதோ. புறம்நோக்கி - காணாத இடத்தில். புன்சொல் - கேவலமாக பொறை பாரம்)

5

குற்றம் குறைகளைக் கண்டுபிடித்து அவற்றை விளம்பரப் படுத்துவதையே தொழிலாக வைத்திருக்கிறார்கள் சிலர். அதில் ஆராய்ச்சியே பண்ணிவிடுகிறார்கள். புலமை பெற்று பட்டமே

வாங்கி விடுகிறார்கள். வெறும் பிழைப்பாய்ப் போய் விட்டது. குற்றம் குறை காணும் தொழில்.

தாமரைப்பூவில் உள்ள மணம், வர்ணம், தேன், மென்மை ஒன்றையும் பார்க்காமல், ''தாமரைப் பூ வாடும் தன்மையது. சேற்றில் உண்டானது. மக்களின் வயிற்றுப்பசியைப் போக்க முடியாதது. பறிக்க வருபவர்களை எதிர்த்துச் சண்டையிட, துணிச்சல் இல்லாதது.'' என்றெல்லாம் விமர்சனம் பண்ணுகிறான் மனிதன். திருவள்ளுவர்கூட அவன் விமர்சனத்திலிருந்து தப்படி முடியாது.

தான் பெற்ற குழந்தைகளிடம்கூடக் குற்றங்களையே தேடுவான். இவன் செய்கிற காரியங்களையே இவன் பிள்ளைகள் செய்கிறார்கள். ஆனால் மகன் செய்வதால் அவற்றைக் குற்றம் என்கிறான். தன்னைப் பார்ப்பதே இல்லை அவன்.

கேடுகளுக்கு எல்லாம் மூலம் இதுதான். தன்னுணர்வு இல்லாததுதான் காரணம். தன்னுணர்வு இருந்தால் அழகு இன்ன தென்று தெரியும். அழகைக் கண்டு விடுவான். ஆனந்தத்தில் திளைப்பான். திளைக்கத்திளைக்க அவனுக்குத் தெரியாமலே அவனிடம் ஒரு திருத்தம் உண்டாகி விடும்.

அழகில்லாத அம்சங்கள் விலகிவிடும். அழகே முன்வந்து நிற்கும். பிறகு துன்பம் எங்கு இருக்கும். எல்லாம் இன்பமயந்தான்.

''ஏதிலார் குற்றம்போல்
தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும்
உயிர்க்கு'' 57

(ஏதிலார் குற்றம் போல் - மற்றவர்கள் செயலில் குற்றம் குறை காண்பது போல் தன் குற்றம் காண்கில் - தன்னுடைய காரியத்தில் உள்ள குற்றங்குறைகளைப் பார்க்க முடியுமானால், பின் தீது உண்டோ - அதன்பின் ஒரு கோளாறும் மனிதனிடம் இருக்காது.)

# வெற்றுரை வேண்டாம்

## 1

நாம் பேசுவது மற்றவர்களுக்கு விளங்க வேண்டும். விளங்கா விட்டால் யோசிக்க மாட்டார்கள். உணர்ச்சி, ஈடுபாடு எதுவும் விளையாது.

ஈடுபாடு வந்து விட்டால் பிறகு நாம் சொல்கிற வார்த்தை ஒவ்வொன்றையும் கவனிப்பார்கள். நம் வார்த்தையை எதிர் நோக்கி நிற்பார்கள். நாலு வார்த்தை நாம் பேசவேண்டுமே என்னும் ஆவல் மக்களிடம் உண்டாகும்.

மக்களின் மனசை வசப்படுத்தவில்லை — அவர்களுடைய உள்ளத்தில் ஆர்வத்தை உண்டாக்கவில்லை என்றால் பேசக் கூடாது தான்.

பணம் கிடைக்கிறதே - வசதி கிடைக்கிறதே என்பதற்காகப் பேசக்கூடாது. அது பேச்சு அல்ல. வெற்றுரை.

சொற்கள் என்பது நாம் சம்பாதித்த சொத்தல்ல. நம்முடைய தந்தை சம்பாதித்த சொத்தும் அல்ல. நம்முடைய பாட்டனோ, பூட்டனோ தேடி வைத்து விட்டுப்போன பிதுரார்ஜ்ஜித சொத்தும் அல்ல.

ஒரு இனத்தார் அவ்வளவு பேரும், ஆயிரக்கணக்கான வருடங் களாய் - கோடிக்கணக்கில் ஆண்களும், பெண்களும், குழந்தை களும் சேர்ந்து உண்டாக்கிய செல்வம் சொல்.

ஒவ்வொரு சொல்லையும் எவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கள் கண்டு பிடித்திருக்க வேண்டும்? வாழ்க்கையில் அடிபட்டு அடிபட்டு ஒவ்வொரு சொல்லும் எப்படித் திருந்தி வந்திருக்க வேண்டும்?

அன்று தொட்டு இன்றுகாறும் - ஆயிரக்கணக்கான வருடங்களாக, சொற்கள் தங்களுக்குரிய பொருளை எவ்வளவு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருகின்றன. யுக யுகாந்திர காலமாக, வாடாமல், வறழாமல், பழுதுபடாமல், சோர்வுபடாமல், நோய் வாய்ப்படாமல், தடுமாறாமல், தள்ளாடாமல், மூப்பு என்பதே இல்லாமல் உண்மையை (பொருளை) விடாமல் பற்றிக் கொண்டு வருகிறது சொல் என்றால் அதைவிட அற்புதம் வேறு என்ன இருக்கிறது.

விலை மதிக்க முடியாத பொக்கிஷம் சொல். அதை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறது. ஜாக்கிரதையாக வைத்துப் பாதுகாப்பது நமது கடமை.

சொற்களுடைய மனம் கோணாமல் - அவற்றைக் கேவலப் படுத்தாமல், பக்தியோடு கையாள வேண்டும், சொற்களை. கேட்பவர்கள் மதிக்க வேண்டும் சொற்களை.

''அடடா எப்படி எப்படி இருக்கிறது சொல். வார்த்தை என்றால் இது அல்லவோ வார்த்தை. வாயில் போட்டால் கற்கண்டாய்க்கரைந்து விடுகிறதே! மனசுக்குள் புகுந்து உணர்ச்சித் தத்துவத்தையே பிசைந்து உருக்கி விடுகிறதே!'' என்று மக்கள் ஈடுபட வேண்டும்.

கேட்பவர்களின் கவலையைப் போக்கி, அவர்களுக்கு ஊக்கத்தையும் எழுச்சியையும் உண்டாக்க வேண்டும் சொல். வாழ்க்கை ஆனந்தமானது என்பதைக் காட்ட வேண்டும் சொல் வாழ்க்கையை அவர்கள் மதிக்கும்படி செய்யவேண்டும்.

அப்புறம் எல்லாம் ஒழுங்குக்கு வந்துவிடும். இதுதான் பிரயோசனம். கேட்பவர்கள் பெறும்பேறு இதுதான்.

பேசுவதினால் பிரயோசனம் உண்டு என்றால் பேச வேண்டும். அது இல்லை. அது வரவே வராது என்றால் பேச்சை நிறுத்திவிட வேண்டும்.

புண்ணியம் செய்யாவிட்டாலும், பாவம் செய்யாத பலனாவது கிடைக்கும்.

பிரயோசனம் ஒன்றும் இல்லை. ஆனாலும் பேச்சை நிறுத்த மாட்டேன் என்கிறான். பேசிக்கொண்டே சண்டித்தனம் பண்ணுகிறான். அப்படி என்றால், மனிதர்களுக்குக் கோபம் வருவது இயல்புதானே?

அதற்காக அவனை என்ன செய்யமுடியும்? பதிலுக்குப் பதில் பிரசங்கம் பண்ணித் தண்டிக்க முடியுமா? முடியாது.

"என்ன மனிதன் இவன்! இங்கிதம் தெரியாதவன். மட்டமான பேர்வழி" என்று பலரும் நொந்து வருந்துவார்கள். சரியான கோமாளி என்று சிரித்து ஆறுதல் அடைவார்கள்.

எல்லாம் பயனில் சொல்லலால் வருகிற வினை.

"பல்லார் முனியப்
பயன்இல சொல்லுவான்;-
எல்லாரும் எள்ளப்
படும்". 58

(முனிய - வயிறு எரிய. எள்ளப்படும் - இகழப்படுவான்.)

2

பொருள் இல்லாமல், உணர்ச்சி இல்லாமல், ஆனந்தம் இல்லாமல் வெறும் வார்த்தைகளை வைத்தே பந்தல் போடுகிறவர்கள். அதில் சிலம்பம் ஆடுகிறவர்கள் பலர். அவசியம் ஏற்பட்டால் இவர்கள் என்ன கொடுமை வேண்டுமானாலும் செய்வார்கள். பழி பாவத்துக்கு அஞ்சமாட்டார்கள் என்கிறார் குறளாசிரியர்.

கலைமகள் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் புனிதமான சொற்களையே துரோகம் செய்கிறவர்கள் வேறு என்ன செய்யமாட்டார்கள்.

வேற்றுமை இல்லாமல் ஒன்றுபட்டு ஒருவன் நம்மிடம் பழகுகிறான் என்றால் அது பெரியகாரியம். தெய்வீகமான காரியம். அப்படிப் பழகிய நண்பனுக்கே துரோகம் செய்துவிடுகிறோம். இதைவிடக் கொலை பாதகம் வேறு உண்டா? உண்டு என்கிறார் கவிஞர்.

கோடிக்கணக்கில் நம்முன்னோர்கள் சேர்ந்து அவர்கள் குடி இருக்கும் சொற்களை மதிக்காமல் அள்ளி வீசுகிறவன் இருக்கிறானே! அவன்காரியம், நண்பனுக்குத் துரோகம் செய்பவன், செயலைவிட மோசமான செயல்" என்கிறார் குறளாசிரியர்.

"பயன்இல பல்லார்முன்
சொல்லல்;- நயன்இல
நாட்டார்கண் செய்தலில்த்
தீது". 59

(நயன்இல - கேடானசெயல். நாட்டார்கண் - நண்பர்களிடம், செய்தலில்தீது - செய்வது தீமைதான். அதையும் விட வேறு தீமை ஒன்று இருக்கிறது. அதுதான், சபையில் பிரயோசனம் இல்லாமல் உளறுவது)

3

சபையில் உள்ளவர்கள் வெறுக்கிறார்கள். ஜனங்கள் வெறுக்கும் அளவிற்கு அப்படிப் பிரசங்கம் பண்ணித் தீர்க்கிறான் ஒருவன். அவன்செயல் கொடிய செயல். ஆனாலும் அத்தோடு ஒழிந்தது அது. அதாவது அவன் பிரசங்கம் என்னும் பயனில் சொல்.

அடுத்தவர் பேச ஆரம்பித்ததும் இதுபோய்விடும். ஆனால் சபையில் ஒரு அசடு. திமிர்பிடித்த அசடு. படுபயங்கரமான மூர்க்கத்தனம் கொண்ட அசடு. சொன்னதையே சாதிக்கும். இணங்கி வராதவர்கள்மேல் கனல்கக்கும். அப்படி ஒரு அசடு.

உண்மைக்கும் இந்த அசடுக்கும் சம்பந்தம் இல்லை. பொய்யும், பித்தலாட்டமும், வெறும் வார்த்தைச் சிலம்பமும், சொல்லடுக்கும், புத்தி இல்லாத மோனையும், கொச்சைச் சிலேடையுமே இந்த அசடு, கட்டி அழுகிற காரியங்கள்.

சபையில் பிரசங்கி கொட்டிய பொருளற்ற வெற்றுரையைக் கேட்டவுடன் இந்த அசடுக்கு ஆவேசமே வந்துவிட்டது. ''ஆகா! ஓகோ! என்னபேச்சு!! என்ன நகைச்சுவை!! என்ன கூப்பாடு, என்ன மடக்கு என்ன சொடக்கு'' என்று வருகிறவர் போகிறவரிடம் எல்லாம் பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொண்டே இருக்கிறது அசடு.

இந்த அசடை மனிதன் என்று சொல்லமுடியுமா? வெறும் பதர்.

''பயன்இல்சொல் பாராட்டு
வானை;- மகன்எனல்
மக்கள்ப் பதடி
எனல்''. 60

(மகன்எனல் - மனிதன் என்று நினைக்க வேண்டாம். எனல் - என்னாதே. பதடி எனல் - பொக்கு என்று நினை.)

குறிப்பு:- பயனில்சொல் ஒரு மோசடி. அதைவிடப் பெரிய மோசடி, பயனில் சொல்லைப் பாராட்டுவது. இந்த அதிசயம் கல்வியில்த் தெளிவாய்ப் பிரகாசிக்கிறது.

# செயலும் பலனும்

(1)

உண்மையான கல்வி நிலையம் என்றால் - கலைக்கோயில் என்றால் அது உலகந்தான். மனிதர்கள்தான் சாஸ்திரங்கள். மனிதர்களுடைய வாழ்க்கையும் அனுபவமுமே ஞானநூல்கள். ஒவ்வொரு மனிதனும் - ஆண், பெண், குழந்தைகள் எல்லோருமே, விஷயத்தை விளக்கும் நூல்கள்தான். படிக்க வேண்டிய பாடப் புத்தகங்கள்தான்.

உணர்ச்சியின் ஒளிப்படலங்கள் என்று சொல்கிறோமே, உளஇயல். அது மனிதனைப் பார்த்தால்தான் விளங்கும். மனிதனின் உடம்பைப் பார்த்தால் போதும். அதில் உள்ள கட்டிடக்கலையானது இஞ்சினீயரிங் துறையை விளக்கிவிடும். ஓவியம், சிற்பம், இசை, நடனம் எல்லாம் விளங்கும்.

தேகதத்துவத்தில் நடைபெறும் காரியங்களைப் பார்த்தால், பௌதீகஇயல், ரசாயனஇயல், கணிதஇயல், நோய்இயல், மருந்துஇயல் (வைத்திய சாஸ்திரம்) உயிரியல், காந்தஇயல், மின்இயல் அவ்வளவும் விளங்கும். வானக்கலையோடு ஒட்டிய ஜாதகக்கலையும் மனிதனோடு சேர்ந்ததுதான்.

மனிதனுடைய காரியங்கள்தானே சரித்திரம்.

இனி, அன்பு, பொறுமை, தாட்சண்யம், காதல், பக்தி, தயாளம், வீரம், தியாகம், முதலிய பண்புகளைப் பார்த்தால் எவ்வளவு பெரிய ஞானக்கடலாக இருக்கிறான் மனிதன். மனிதன் காலடிபடப் படத்தான் மண்ணும் பொன்னாகியது. தலங்கள்

என்றும், தீர்த்தங்கள் என்றும், உல்லாசபுரிகள் என்றும், சுற்றுலா மையங்கள் என்றும் ஒரு பொலிவு ஏற்பட்டு பூமி சாஸ்திரமாக வந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக நியதிதத்துவம் என்று ஒன்றிருக்கிறதே - உண்மை. அதுவும் மனிதன் மூலந்தான் விளங்கும்.

மனிதனுடைய வாழ்க்கையைப் பார்த்தால் கடவுளுடைய எல்லையற்ற திருவிளையாடல் - அதில் உள்ள அனாதியான ஒரு ஒழுங்கு - ஒருமுறை, ஒரு நெறி எல்லாம் இன்னதென்று தெரியும்.

பள்ளிக்கூடம்போய்ப் படிப்பதற்கு வேறு என்ன இருக்கிறது.

ஒருமனிதன். செல்வாக்குள்ள மனிதன். பணபலம், ஆள்பலம், செல்வாக்கு, அதிகாரிகள் பழக்கம் எல்லாம் இருந்தன. அவன் பண்ணிய அட்டகாசத்திற்கு அளவே இல்லை! சமூகத்தையே மிரட்டினான். உருட்டினான். ஊர் மக்களைப் புரட்டிப் புரட்டி எடுத்தான். சொன்னபடி கேட்காதவர்களை நாலாவழியிலும் தொந்தரவுபடுத்தினான். கைநீட்டி அடிக்கவே செய்தான்.

ஜனங்கள் அவனைக்கண்டு நடுங்கினார்கள். அவனை நினைத்தாலே பயந்து விடுவார்கள்.

நாளாக நாளாக என்ன நேர்ந்தது. அவனுடைய மகனே அவனை அறைந்தான். குப்புறத்தள்ளி மிதி மிதி என்று மிதிக்கவும் செய்தான். போதாக்குறைக்கு, மகளைத் திருமணம் செய்த மாப்பிள்ளை இருக்கிறானே, அவனும் உதைத்தான்.

என்ன செய்தான் பாவம்? கண்ணீர்விட்டு அழுதான். இன்னொரு மனிதன். பண ஆசை மிக்கவன். வெறியாய்ப் போய் விட்டது அவனது ஆசை உடன்பிறந்த சகோதரர்களையே வஞ்சகம் பண்ணினான். சுற்றத்தார்களை ஏமாற்றினான். நண்பர்களை மோசம் பண்ணினான். மனைவியையே தொந்தரவு பண்ணிவிட்டான். கூட்டாளிகளைக் கெடுத்தான். அவ்வளவும் பணத்தைக் கொட்டி, கணக்கில் குவித்து கஜானாவைப் பூட்டி விடுவதற்குத்தான்.

என்ன ஆயிற்று அவன்கதை? பிள்ளைகள் பி.ஏ., எம்.ஏ., என்று படித்தார்கள்; கார் வாங்குகிறார்கள். சாராயம் குடித்தார்கள். சினிமாப்படம் எடுத்தார்கள். தேர்தலில் நின்றார்கள். வக்கீலைப் பார்த்தார்கள். மருத்துவர்களைப் பார்த்தார்கள்.

இந்தக் களியாட்டத்தில் மருமக்கள்மார், பெண் குழந்தைகள் மனைவி எல்லோருமே போட்டி போட்டார்கள்.

சொத்துமுழுவதும் காலி. ஜப்தியில் குடி இருந்த வீடும் போய்விட்டது. எல்லாம் போனபிறகும் கடன்மட்டும் போக வில்லை. பிச்சை எடுக்கிற நிலைக்கு வந்துவிட்டது கதை. இன்னும் ஒரு மனிதன். உருவத்தில்தான் மனிதன். குணம் மிருக குணந்தான். திமிர் நிறைந்த உடம்பு. ஆணவம் நிறைந்த மனம். செல்வம் நிறைந்த வீடு.

பெண்கள் என்றால் அவனுக்கு ஒரே கொண்டாட்டம். மனைவியரில் பலர். வைப்பாட்டிகளில் பலர். இவ்வளவும் காண வில்லை அவனுக்கு. அழகிய பெண்களைக் கண்டால் அவனுடைய புத்தி கொதித்துவிடும். ஆசையில் வேர்க்கும். காமவெறியின் நாக்கில் ஜலம் ஊறும்.

மர்மமான வழிகள் என்னென்ன உண்டோ, அவ்வளவையும் அவன் கையாள்வான், பலிக்காவிட்டால், தடித்தனத்தில் இறங்கு வான். பலவந்தமே செய்வான். அவனால் சீரழிந்த குடும்பங்கள் பல.

கடைசியில் என்ன ஆயிற்று, அவனுடைய காரியம் அவனுடைய மனைவியர்களில் பட்டமகிஷியான தர்மபத்தினியே, அவனுடைய வைப்பாட்டியின் மகனுக்கு இடம் கொடுத்தாள். அவன் கண்ணெ திரிலேயே இந்தநாடகம் நடந்தது. மனம் புண்பட்டு ரத்தத்தைக் கொட்டினான். உயிரைக்கூட விடமுடியவில்லை அவனால்.

மகள் ஒருபக்கம், மனைவி ஒருபக்கம், வைப்பாட்டி ஒரு பக்கம் என்று புதுப்புது உறவு வைத்துக்கொண்டு விட்டார்கள்.

பார்த்துப் பார்த்து அலறினான் மனிதன்.

கொடுமை என்பது காற்றோடு காற்றாய், மண்ணோடு மண் ணாய்ப் போய்விடுகிற காரியம் அல்ல, அதுதொடர்ந்து வருகிறது. எங்கு போனாலும்கூடவே வருகிறது. ஒதுங்கி ஒதுங்கி வருகிறது. வசமான இடம் கிடைத்தஉடன் பாய்ந்து குதறிவிடுகிறது.

தப்பமுடியாது கொடுமையிலிருந்து.

சுற்றிவளைத்துக் கொண்ட நெருப்பு விட்டு வைக்குமா? பொசுக்கிச் சாம்பலாக்கிவிடும். பெரிய பெரிய வனங்களைக்கூட எரித்துப் பஸ்மீகரம் பண்ணிவிடும்.

நெருப்புக்கு அவ்வளவு சக்தி. நம்முடைய காரியங்களுக்கு. ஆற்றல் அதைவிட அதிகம்.

நல்லவன் காரியமும் அப்படிச் சுற்றிச்சுற்றி வரவே செய்யும். மோசம் பண்ணாதவன், நாசஞ் செய்யாதவன், நல்லதே செய்தவனுடைய சந்ததி, வாழையடி வாழையாக இன்பமாக வாழ்கின்றதைப் பார்க்கிறோம்.

இந்தக் காட்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. பார்ப்பதற்கு டிக்கெட் இல்லை. கட்டணம் இல்லை. உலகம் முழுவதும் நடைபெறுகிற காட்சி இவை.

குறளாசிரியர் பார்த்து அனுபவித்து விளங்கிக் கொண்டது இதுபோன்ற காட்சிகள் தாம்.

அனுபவம் துள்ளிப்பாய்ந்து வருகிற அழகைப் பாருங்கள்.

'தீயவை தீய
பயத்தலால், — தீயவை
தீயினும் அஞ்சப்
படும்.'' 61

(பயத்தலால் - விளைவிக்கின்றபடியால். அஞ்சப்படும் - பயப்பட வேண்டும்).

நம்நிழல் நம்மைவிட்டு எங்கேபோகும். கூடவே வரும். ஒளிந்துகொள்ள மலைமேல் ஏறினாலும் விடுமா? விடாது. செய்த பாவமும் அப்படியே

''தீயவை செய்தார்
கெடுதல்; — நிழல்தன்னை
வீயா(து) அடிஉறைந்(து)
அற்று.'' 62

(வீயாது - விலகாமல், விட்டுவிடாமல். அடிஉறைந்து அற்று - காலடியை ஒட்டி வருதல் போல.)

# சமுதாய ஞானம்-ஒப்புரவு அறிதல்

ஒரு கிராமத்திற்குப் போகிறோம். முந்நூறு நானூறு வீடுகள் இருக்கலாம். வீதிகளை நன்றாய் வகுத்து விட்டிருக்கிறார்கள். கூரைவேய்ந்த மண்குடிசைகளும் இருக்கின்றன. சுட்ட செங்கலால் கட்டப்பட்ட பெரிய மாடி வீடுகளும் இருக்கின்றன.

கிராமத்தைச் சுற்றி வேலிபோட்டது போல வளமான வயல், தோப்பு, கிராமத்தை ஒட்டி பெரிய ஏரி ஒன்று. அதற்கு ஆற்றிலிருந்து நீர்கொண்டு வரும் வாய்க்கால் எல்லாம் அழகாய்த்தான் இருக்கின்றன. கடைகளும் இருக்கின்றன.

ஊருக்குள் - மத்தியில் சாவடி. அதைஒட்டி பெரிய மந்தைவெளி. தெருக்கோடியில் சிவன்கோயில். தெப்பம், தேர் எல்லாம் இருக்கின்றன.

ஊரில் உள்ள மக்கள் எல்லோரும் சுறுசுறுப்பாய் இருக்கிறார்கள். ஆண்கள், பெண்கள் எல்லோருமே வேலை செய்கிறார்கள் குழந்தைகளும், பெற்றோர்களுடன் சேர்ந்து உதவுகிறார்கள்.

யாரும் வெட்டிப்பேச்சுப் பேசுவதோ, வம்பளப்பதோ, ஊர்ப்புரளி பேசுவதோ இல்லை.

யந்திரங்கள் போல அவரவர் காரியத்தை அவரவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

விவசாயம் செய்கிறவர்கள், ஆடைநெய்கிறவர்கள், எண்ணை ஆட்டுகிறவர், ஆடுமாடு வளர்ப்பவர்கள், நெல் அளப்பவர்கள், காவல் காப்பவர்கள், நீர் பாய்ச்சுகிறவர்கள், மாலை கட்டுகிறவர்கள், துணி வெளுப்பவர்கள், சட்டிபானை பாத்திரம் செய்பவர்

கள், மேளம் வாசிப்பவர்கள், கொத்தர், தச்சர், ஓதுவார், பூசாரி, பண்டம் விற்பவர், எல்லோருமே அவரவர் வேலையை அவரவர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

காலை நான்கு மணிக்கே எழுந்து விடுகிறார்கள். இரவு படுக்கும்வரை வேலைதான்.

ஒருவரோடு ஒருவருக்கு உறவு இல்லையோ என்று நினைக்கும்படி அப்படி உழைப்போடு உழைப்பாய் உருண்டு ஓடுகிறார்கள் ஜனங்கள்.

ஆனால், கிராம மக்களுக்குள் இருக்கிற ஒற்றுமை, அன்யோன்யம், மரியாதை, விட்டுக் கொடுக்கும் தன்மை, ஒத்துப் போகும் பண்பு பட்டிணவாசிக்கு எப்படி விளங்கும்.

ஊரில், மாடன்கோவிலிலோ, அம்மன் கோவிலிலோ கொடை என்றால், ஊரே திரண்டுவிடும். அவரவர் வீட்டில் கல்யாணம் நடப்பதுபோல விழாவைச் சேர்ந்து கொண்டாடுவார்கள்.

முற்றங்கள்தோறும் கோலந்தான். வீடுகள் வெள்ளையடிப்புத் தான். புத்தாடைதான், விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கிற நயந்தான், பொங்கல்தான், பொரியல்தான், ஒருவரோடு ஒருவர் ஒன்றி இருந்து காரியம் நடத்துகிற உறவைப் பார்த்தால் அதிசயம் உண்டாகும்.

மாடன் கோவில் விழாவில், வில்லுப்பாட்டு நடக்கும். பூசாரி ஆராதனை செய்வார். பக்தகோடி திரண்டுவந்து சேவிப்பார்கள். பக்தகோடியில் ஒருவருக்கு ஆவேசம் வரும். அருள் வந்துவிடும். சாமிவந்து ஆடுவார். ஆடிஆடி ஊர்வலம் வருவார். பக்தகோடிகள் சூழ்ந்துவரும். வீடுதோறும் முற்றத்தில் அவருக்கு மஞ்சள்நீர் அபிஷேகம் நடக்கும். அருள்வந்தவருக்குக் காவு கொடுப்பார்கள். இனி, சிவன்கோவில், பெருமாள் கோவில், முருகன் கோவில் விழாக்களில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்வந்து சேர்ந்து ஆனந்தம் பெறுவதைப் பார்த்தால் வியப்பாக இருக்கும்.

இவ்வளவு பேரையும் - வேறுவேறு போக்கில் உள்ள அத்தனை பேரையும் ஒன்றுபடுத்தி அணிவகுத்து நடத்துவது எது? என்று ஆச்சர்யமாக இருக்கும்.

தேர் புறப்பட்டு வருகிறது. அம்மனோ, சாமியோ எழுந்தருளி காட்சி கொடுக்கிறார் என்றால், ஆயிரக்கணக்கில் உள்ளங்கள் ஒன் றாய் நின்று ஆராவாரிக்கின்றனவே, அது எப்படி, அற்புதம் இல்லையா?

வடம்பிடித்து அத்தனைபேரும் எத்தனை உத்ஸாகத்தோடு தேரை இழுத்துக்கொண்டு போகிறார்கள்? நிலைக்கு வந்து சேரத் தாமதம் ஆகும் என்றால் - அங்கங்கே தேர் சறுக்குப் போடுகிறது என்றால், ஜனங்கள் எல்லோரும் ஒன்றுபோலக் கஷ்டப்படுகிறார் கள் அவர்கள் யோசனையை ஓட்விடாமல், அதில் ஒரு பாறை வந்து விழுந்து விட்டதைப் போல் - கல்விழுந்து அடைத்து விட்டதைப் போலத் திணறுகிறார்கள்.

சொல்லிவைத்தது போல அத்தனைபேருக்கும் திணறல் ஒரே மாதிரி வருவது ஏன்? தேர் நிலைக்குவந்து சேர்கிறவரை, சாப்பாடு சரியாய் இறங்காது. தூக்கமும் நேரில் வராது. யோசனையும் நின்ற மாதிரிதான்.

சாவடியில் கம்பராமாயணமோ, திருவிளையாடல் புராண மோ நடக்கிறது. யாரோ ஒருவர்வந்து பாடி விளக்குகிறார். நாலு பேர் சேர்ந்து முதலில் ஏற்பாடு செய்கிறார்கள். பிறகு, ஊர் முழு வதும் திரண்டு வந்து கேட்கிறது. ஏற்பாட்டுக்கு அனுசரணை யாய், 'நான்முந்தி நீமுந்தி' என்று உபசாரம் செய்கிறது.

மந்தைநாடகமும் அப்படித்தான். விடிய விடிய விழித்திருந்து அனுபவிக்கிறார்கள். சேர்ந்தே அனுபவிக்கிறார்கள். ''அவர் அனுபவிக்கிறாரே, நமக்கேன் அது'' என்று விலகிப் போவதில்லை.

நாடகக் காரியத்துக்கும் உதவுகிறார்கள், இப்படி ஒரு ஒத்த உணர்ச்சி, சமுதாயம் முழுவதும் நிறைந்து இருக்கிறது.

மக்களுக்குத் தெரியாமலே மக்களை ஆட்டிப் படைக்கிறது. அவர்களை நெறிமுறை பிறழாதபடி நடத்திச் செல்கிறது ஒரு உணர்ச்சி.

இந்த உணர்ச்சிக்குத்தான் ஒப்புரவு என்றுபெயர். இதை உணரவேண்டும். உணர்ந்து கடமையாக நிறைவேற்ற வேண்டும்

திருமணம், கிருகப்பிரவேசம், சடங்கு, அபரகிரியைகள், எல்லாவற்றிலும் ஒரு உணர்ச்சி பலரையும் சேர்த்துச் செயல் படுத்துகிறது.

பழக்கவழக்கம், நிர்வாகம், ஞாயம், பாதுகாப்பு, பொதுச் சொத்தில் பக்தி இப்படி, சகல துறைகளிலும் ஊடுருவி நிற்கிறது பொதுப்பண்பு.

ஜாதிமத வேறுபாடில்லாமல், ஏழை பணக்காரன் பாகுபாடில் லாமல், படித்தவன், படியாதவன் வித்தியாசம் இல்லாமல் சமுதாய உணர்ச்சிக்கு மரியாதை கொடுக்கிறார்கள் ஜனங்கள்.

அவனவன் குடும்பம், அவனவன் காரியம் என்று மக்கள் துண்டு பட்டே நிற்கிறார்கள். ஆனால் ஒன்றுகூடியே செயல்படுகிறார் கள். திளைக்கிறார்கள்.

ஒன்றுபடுத்தும் அந்த அற்புதப்பண்பு கண்ணுக்குப் புலனுகுவ தில்லை. இது அற்புதந்தான்.

இந்த அற்புதம்–வேற்றுமையில் ஒற்றுமை என்னும் அற்புதம். இங்குதான் இருக்கிறது.

மனிதர்களிடந்தான் இருக்கிறது, தமிழ்நாட்டில்தான் அதைத் திருவள்ளுவர் பார்த்தார்.

அடடா, தேவர்கள் வாழும் பொன்னுலகில்கூட இந்த அற்புதம் இருக்கமுடியாதே என்று அதிசயப்பட்டார்.

அங்கு குடும்பங்கள் ஏது? குடும்ப வாழ்க்கை ஏது? எல்லாம் ஒரே அவியல்தானே.

அதிசயம் குறளாய் உருவெடுக்கிறது.

> ''புத்தேள் உலகத்தும்
> ஈண்டும் பெறல்அரிதே;
> ஒப்புரவின் நல்ல
> பிற.'' 63

(புத்தேள் உலகம் - தேவலோகம். ஒப்புரவின் நல்லபிற - சமுதாய உணர்ச்சி போன்ற வேறு ஒரு இன்பத்தை.)

குறிப்பு : இன்பத்தில் மூழ்கிக் கிடக்கிறவர்கள் தான் தேவர்கள். ஆனால் ஒத்த உணர்ச்சியில் விளையும் ஆனந்தம் தனி. அதன் பக்கம் வரமுடியாது தேவர்கள் இன்பம். இந்த அதிசயம் கவியில்க் கிடக்கிறது.

2

சமுதாய உணர்ச்சி தானாக வந்துவிடும், அப்படி வருவது இயற்கை. ஆனால் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டால், பட்டம்

பதவி வந்துவிட்டால், வேண்டாதவற்றைப்படித்துத் தொலைத்து விட்டால் சமுதாயம் செத்துவிடும்? ஆனந்த உணர்ச்சியும் செத்து விடும். பிறகு அவனும் செத்த சவந்தான்.

உயிருள்ளவன், சமுதாய ஞானத்தில் திளைக்கிறவனே.

''ஒத்த(து) அறிவான்
உயிர்வாழ்வான்;- மற்றையான்
செத்தாருள் வைக்கப்
படும்.'' 64

(மற்றையான் - உணர்வில்லாதவன்.)

- மழை பெய்ய வேண்டிய காலத்தில் மழை பெய்யா விட்டால் கஷ்டந்தான். தந்தை, தாய், உறவினர், வள்ளல்கள், அரசர்கள் முதலியவர்களிடம் கருணை இல்லாமல்ப் போனாலும் கஷ்டந் தான்.

கணவன், மனைவி, குழந்தைகள், பணியாளர், நண்பர் இவர் களிடம் அன்பு இல்லாவிட்டால் தொல்லை தானே. இதை விபரீதம் என்று தான் சொல்ல வேண்டும்.

''நடக்க வேண்டியது நின்று போய் விட்டது'', (செயும் நீர செய்யாது, அமைகில ஆறு) என்று தான் சொல்ல வேண்டும்.

சமுதாய உணர்வு, நிறைந்த ஒருவன் ஒதுக்கப்படுகிறான். அனாதையாய் நிற்கிறான் என்றால் உலகம் தன் கடமையைச் செய்யவில்லை. மக்கள் செய்ய வேண்டியதைச் செய்யாமல் மறந்து போனார்கள்'' என்று தான் சொல்ல வேண்டும்.

''நயன்உடையான் நல்கூர்ந்தான்
ஆதல்!- செயும்நீர
செய்யா(து) அமைகிலா
ஆறு''. 65

(நயன் உடையான் - சமுதாய ஞானம் நிறைந்த பண்பாளன். நல்கூர்ந்தான் ஆதல் - சமுதாயம் மறந்துவிட, ஒதுங்கி நிற்க நேர்தல். செயும்நீர - செய்ய வேண்டிய காரியங்கள், செய்யாது - செய்யப்படாமல் போய்விட்டன. (அதனால்) அமைகிலா ஆறு - நிறைவு என்பது இல்லாமல் குறைபட்டுவிட்டது உலகம்.)

சமுதாய உணர்வினால் நஷ்டம் ஒன்றும் இல்லை. நஷ்டம் வந்து விட்டது ஒருவனுக்கு. அவன் சிரமப்படுகிறான் என்று

வைத்துக் கொள்வோம். அதற்காகச் சமுதாய உணர்வை, ஆனந்தத்தை விட்டுவிடமுடியுமா? உயிரைக் கொடுத்தேனும் அதைப் பற்றிக் கொள்ளவேண்டும். ஒன்றுபட்டுத் துய்க்கும் ஆனந்தம் இல்லாமல் வாழ்ந்து என்ன பலன்?

''ஒப்புரவி னால்வரும்
கேடெனில்; — அஃ(து) ஒருவன்
விற்றுக்கோள் தக்க(து)
உடைத்து. 66

ஒப்புரவினால் கேடுவரும் எனில் - ஒப்புரவால் நஷ்டம் வந்தாலும் கஷ்டமே வந்தாலும் (ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்) எப்படி? விற்று - உயிரைவிட்டேனும், கோள் தக்கது - ஏற்றுக் கொள்ளத் தக்கது (ஒப்புரவு)

# கொடைவளம்

1

மனிதர்களின் உழைப்புக்கு வரம்பு கிடையாது. முடியும் அளவுக்கு உழைக்கவேண்டும். உழைப்பு ஒன்றுதான் மனிதனுக்கு உயிர்ச்சத்து.

உழைப்பில் வரும் ஊதியத்தில் கட்டுப்பாடு இருக்க வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அளவே எடுத்துக் கொள்ளவேண்டும். மிச்சத்தை உடனுக்குடன் தேவை உள்ளவர்களிடம் கொடுத்துவிட வேண்டும். உற்றார், உறவினர், நண்பர், சுற்றி இருக்கத்தானே செய்கிறார்கள்.

இந்த ஏற்பாட்டை மீறியும் செல்வம் சேர்ந்து விட்டால் என்ன செய்ய வேண்டும்?

ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும். புலவர்களுக்கும், கலைஞர்களுக்கும் கொடுக்க வேண்டும். பொதுக்காரியங்களை நிறைவேற்ற வேண்டும்.

''இப்படிச் சில காரியங்களில் நாமும் கலந்து கொள்ள வேண்டும். நம்மை அவற்றில் ஈடுபடுத்த வேண்டும்'' என்னும் நோக்கம் கொண்டல்லவா நம்மிடம் வந்து உட்கார்ந்திருக்கிறது செல்வம் என்று மகிழ வேண்டும்.

செல்வமும், செல்வத்தை விநியோகம் செய்வதற்கு ஆனந்த எழுச்சியும் ஒருவனுக்குக் கிடைத்து விட்டால், பிறகு தடுத்து நிறுத்த முடியுமா கொடுக்கிற காரியத்தை.

"பணம் இருந்தால் தான் சௌகர்யம், ஆடம்பரம், அதிகாரம் எல்லாம் இருக்கும். பணம் போய்விட்டால் அவை ஒன்றும் இருக்காது. அதனால் ஜாக்கிரதை, ஜாக்கிரதை" என்று சொல்லி வேண்டியவர்கள் தடுத்தாலும் கொடுக்கிற செயலை நிறுத்து வானா மனிதன்.

"பணக்காரனுக்குத்தான் வானுலகத்தில் வரவேற்பு உண்டு. தரித்திரம் பிடித்தவன் வந்தால் தேவர்களும் கதவைச் சாத்திக் கொள்வார்கள்" என்று அழுத்தி உரைத்தாலும் கொடுப்பதை நிறுத்தமாட்டான் மனிதன்.

ஆனால், அருள் உள்ளம் கொண்டு ஒருவன் ஏழை எளியவர்கள் துயர்தீர உதவுகிறான். கலைகளும் பண்பாடும் வளர அவற்றுக்குப் பால் வார்க்கிறான் என்று தெரிந்தால் போதும். நாமும் அவனிடம் கொஞ்சம் தட்டி பறிப்போமே என்று பலர் கிளம்பி விடுவார்கள். தேவை இல்லாதவர்களே - வசதியானவர்களே இந்தத் தொழிலில் இறங்கி விடுவார்கள்.

கோவில் காரியம், கோபுரகாரியம், பள்ளிக்கூடகாரியம், சாஸ்திரங்களை அச்சிட்டு விநியோகிக்கிறகாரியம், அன்னதான காரியம், பாராட்டுவிழா என்றெல்லாம் பட்டம் சூட்டி வசூலில் இறங்கிவிடுவார்கள்.

வசூல் தான் நோக்கம். அது இது என்கிற காரியம் எல்லாம் வெறும் பேருக்குத்தான்.

இது பெரிய மோசடி. திருடுவது, கொள்ளையடிப்பதைவிட பெரிய மோசடி,

"எப்படி அவன் நல்லது செய்யலாம், அப்படியானால் நம் கையில் கொட்டிவிட வேண்டியது தானே" என்னும் அயோக்கியத் தனந்தான் இந்த வசூல்க் காரியம்.

பணம் கறப்பதையே நோக்கமாகக் கொண்டு அலைவது படுக் காளித்தனம். எவ்வளவு பெரிய தர்மகாரியத்தைக் காட்டினாலும் படுக்காளித்தனந்தான்.

பரிவோடும் ஆனந்தத்தோடும் கொடுக்கிறது இருக்கிறதே அதுதான் நல்ல காரியம்.

இந்த உண்மை எப்படி உதித்து வருகிறது கவியில் என்று பாருங்கள்.

"நல்லா(று) எனினும்
கொளல்தீ(து);- மேல் உலகம்
இல்லெனினும் ஈதலே
நன்று" 67

(நல்லாறு - நல்ல காரியத்திற்கு என்று பெயர் வைத்து. கொளல் - பெறல்.)

2

பண்பாடும் சீலமும் மிக்க சான்றோனைப் பற்றி பேச்சு வந்தால் "அவன் மனிதனா! இல்லை, தெய்வம்! கண்கண்ட தெய்வம்" என்று வேறொரு இனத்தில் வைத்துப் பேசுவோம்.

நல்ல 'குலமான் கன்று' அவன் என்று பாராட்டுவோம். புண்ணியவான், உத்தமன், அரிச்சந்திரன், கர்ணன் என்றெல்லாம் தனித்த ஒரு வர்க்கத்தில் (குலத்தில்) கொண்டு போய் வைத்து விடுவோம்.

இப்படிப் பேசுவது தான் இயல்பான பேச்சு. அப்படி ஒரு உயர்ந்த குலத்தைச் சேர்ந்த தருமசீலன் கொடுத்துக் கொண்டே இருப்பான். சோர்வுபட மாட்டான். எரிச்சல் வராது அவனுக்கு. கேட்பவர்களிடம் பொய் சொல்வது, ஒளிவது, அலட்சியப் படுத்துவது ஆகிய பித்தலாட்டம் ஒன்றும் அவனிடம் இல்லை தான்.

வந்தவர்களை மதித்தும் உபசரித்தும் உதவுவான்.

"இலன்என்னும் எவ்வம்
உரையாமை ஈதல்;
குலன்உடையான் கண்ணே
உள". 68

(இலன் என்னும் எவ்வம் - கையில் ஒன்றும் தற்போது இல்லையே என்று, அதற்கு ஆதாரமாக எதை எதையோ சொல்லி வம்பளக்கும் பித்தலாட்டம். எவ்வம் - நீட்டி முழக்கும் பொய். உரையாமை ஈதல் - ஜம்பம் ஒன்றும் பண்ணாமல் அன்போடு வழங்கல், உத்தமன் பண்பு)

3

அன்பும் ஆர்வமும் நிறைந்த பண்பாளனுக்கு - வள்ளலுக்கு, லட்சியம் உதவி மட்டும் அல்ல. தன் உதவியை நாடி வந்தார்களே அவர்களுடைய திருப்திதான் லட்சியம்.

வயதுவந்த பெண்ணைக் கட்டிக் கொடுக்க முடியாமல் அறிஞர் ஒருவர் திண்டாடினார். வள்ளலுக்கு விஷயம் தெரிந்தது. நகை செய்யத் தங்கம் கொடுத்தார். விருந்துக்கு நெல்லும் காய் கனியும் கொடுத்தார். பந்தல்க்காரனை அனுப்பினார். வண்டி மாடு கொடுத்தார்.

செய்த உதவி அதிகந்தான்.

ஆனாலும் திருமணம் நடைபெறவில்லை. தடங்கல் நேர்ந்து விட்டது. பெண்ணின் பெற்றோர்களுக்கு ஒரே வேதனை. அதை விட வேதனை வள்ளலுக்கு.

திருமணம் நல்லபடியாக நடந்திருந்தால் ஆனந்தமாய் இருந் திருக்கும். வள்ளலுக்குப் பேரானந்தமே உண்டாயிருக்கும். ஆனால் அது இல்லாமல்ப் போய் விட்டது.

வள்ளன்மை என்பது உதவி பெறுகிறவர்களின் உணர்ச்சி யோடு உணர்ச்சியாய் ஒட்டிக் கொள்கிறது.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

''இன்னாது இரக்கப்
படுதல்; இரந்தவர்
இன்முகம் காணும்
அளவு''. 69

(இரக்கப்படுதல் இன்னாது - உதவி செய்வதில்கூட துயரம் இருக்கிறது: எப்பொழுது? - உதவி பெற்றவர் துயரம் நீங்காத வரை)

பெண்ணைக் கரை ஏற்ற முடியாமல் திணறினார் அறிஞர். வள்ளலின் உதவி கிடைத்தது. கரை ஏறிவிட்டது பெண் என்று மகிழ்ந்தார். ஆனால் திருமணம் நின்றுபோய்விட்டது. அறிஞர் வருந்தினார்.

அறிஞருடன் எத்தனையோ பேர் இருக்கத் தானே செய்கிறார் கள். சுற்றத்தார்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். அவர்களில் ஒருவரையும் அறிஞரின் துயரம் பாதிக்கவில்லை.

ஆனால் வள்ளலைப் பாதித்து விட்டது.

(4)

தவம் இருக்கிறவர்கள், முனிவர்கள். இவர்களுக்கு சக்தி எவ்வளவோ இருக்கிறது. இவர்கள் சினந்து பார்த்தால் ஊரே எரிந்து விடும். அமர்ந்து பார்த்தால் நோய் நொடி எல்லாம் ஓடி விடும்.

அவ்வளவு சக்தி (ஆற்றல்) தவமுனிவர் (ஆற்றுவார்)களிடம். இவ்வளவு சக்தி அவர்களுக்கு எப்படி வந்தது.

சாப்பாட்டுக்கு அடிமையாகிவிடாமல், ருசிகளைக் கட்டுப் படுத்தி, பட்டினிகிடந்து, விரதம்இருந்து முதலில் தங்கள் உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டார்கள். வயிரம்போல் உறுதி பெற்றுவிட்டது உடம்பு. உடம்பின் திறம் மெள்ள மெள்ள மனசுக் குள் போய் சேர்ந்து கொண்டது. வரையறை செய்யப்பட்ட உணவுக்கட்டுப்பாட்டிலிருந்து சக்தி எவ்வளவோ பிறந்தது.

இனி, உயிர்வர்க்கம் முழுவதையும் பிடித்து ஆட்டுகிறதே பசி, அதனால் எவ்வளவோ சக்தி வீணாகிவிடுகிறது. உயர்ந்த லட்சியப் பண்புகள் எல்லாம் அழிந்து போகின்றன. கொடுமை பலவற்றை உண்டாக்குகின்றன.

மனிதர்களின் பசியைநீக்கி அவர்களை வாழச்செய்வது பெரிய புண்ணியம். பிறர் பசியைப் போக்கும் செயலில் ஈடுபட ஊக்கம் வேண்டும். வீரம்வேண்டும். ஆற்றல் எவ்வளவோ வேண்டும்.

அந்த ஆற்றல் முனிவர்களின் ஆற்றலையும் விஞ்சியதுதான்!

"ஆற்றுவார் ஆற்றல்
பசிஆற்றல்; — அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின்
பின்" 70

(ஆற்றுவார்-முனிவர். பசி ஆற்றல் - விரதம். பசியை ஆற்று வார் - அன்னதாதாக்கள்).

5

ஏழை எளியவர்களின் பசிப்பிணியை நீக்குவதுதான் செல்வத் தின் லட்சியம். தன்னுடைய செல்வத்தை பாங்கியில் போட்டு வைப்பதில் உறுதி கிடையாது. அபலைகளின் பசியை நீக்குகிற செயலில்தான் செல்வத்திற்கு உறுதி - அழியாமை இருக்கிறது.

"அற்றார் அழிபசி
தீர்த்தல்; — அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்(பு)
உழி". 71

(அற்றார் - ஆதரவு இல்லாதவர். அழிபசி - சுட்டுப் பொசுக்கும் பசி. பொருள் பெற்றான் - செல்வம் உடையவன். பொருள்வைப்பு உழி - செல்வத்தைப் பாதுகாப்பாக வைக்கும் இடம், பசியைப் போக்கும் அன்னதானந்தான். உழி - இடம்)

6

ஐதராபாத் நிஜாம் உலகில் மிகப்பெரிய கோடீஸ்வரராக இருந்தார். பெரிய கருமியாகவும் இருந்தார். அடிக்கடி பொக்கிஷத்தைத் திறந்து பார்ப்பார். தங்கக் கட்டிகளையும் நவரத்தினக் குவியல்களையும் நோக்கி நோக்கி இன்புறுவார்.

ஒரு தம்பிடி கூட எடுத்துச் செலவு செய்யமாட்டார். வெளியில் உள்ள மசூதிக்குத் தொழுகை நிமித்தம் போனால் தானதருமம் செய்யவேண்டி நேரிடும் என்று, அரண்மனைவளாகத்திலேயே மசூதி கட்டிக் கொண்டார்.

அரண்மனைக்கு வேண்டிய சாமான்களைக் கடைவீதிக்குப் போய், தாமே வாங்கிவருவார்.

தன்னை நேரில் பார்த்த கடைக்காரர் தம்மிடம் பணம் வாங்க மாட்டார் என்னும் தந்திரம்.

ஒரு சமயம் இளவரசர் அரண்மனைக்குள் அங்கும் இங்குமாய்ப் போய்க் கொண்டிருந்தார்.

வயிரமோதிரம் நழுவி விழுந்துவிட்டது. பணியாளர் எடுத்து இளவரசரிடம் கொடுத்தார். இளவரசர் "நீயே வைத்துக்கொள். கீழே விழுந்ததைத் திரும்பப் பெறமாட்டேன். வாங்குவது அரச பரம்பரைக்கு இழுக்கு" என்று சொல்லிவிட்டார்.

நிஜாம் மன்னர் இதைப் பார்த்துக் கொண்டே இருந்தார். பொறுக்க முடியவில்லை அவருக்கு. இளவரசர் போனதும், பணியாளரிடம் மோதிரத்தைக் கொடு என்று வாங்கிக் கொண்டார்.

"இளவரசர் வீசுவதைப் பேரரசர் பிடிப்பார்" என்றும் சொல்லிவிட்டார்.

சேர்த்து சேர்த்து வைத்தாரே நிஜாம் நிலைத்ததா செல்வம்?

ரஜாக்கர்கள் கோடி கோடியாய்ச் சுருட்டிக் கொண்டார்கள். பாகிஸ்தான் பலகோடி ரூபாயைக் கடனாக வாங்கி ஏப்பம் போட்டது.

லண்டனிலும் பாரிஸிலும் நகைகளை விற்று குடும்பம் காலந் தள்ளுகிறது.

அப்படிப் பறந்தோடி விட்டது பூட்டிவைத்த செல்வம்.

ஆனந்தம் என்றால் இன்னதென்று தெரியாமலே போய் விட்டார் நிஜாம்.

கொடுத்து உதவி இருந்தால் ஆனந்தம் இன்னது என்று தெரிந்திருக்கும். வாங்குகிறவர்கள் சந்தோஷத்தைப் பார்த்தால் அல்லவா - தொட்டு அனுபவிக்கக்கூடிய அளவுக்கு ஆனந்தம் நம்முடன் உறவாடுவது தெரியும்.

நிஜாம் மன்னர் வர்க்கம்தான் சமுதாயத்தில் அதிகம். நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பதேமுக்கால் என்றால் குற்றம் இல்லை.

செல்வத்தைப் பூட்டி வைத்து துயரத்தோடு துயரமாய்ப் போகிறவர்களை நோக்கி இரக்கப்படுகிறார் குறளாசிரியர்.

"ஈத்துவக்கும் இன்பம்
அறியார்கொல்! தாம்உடைமை
வைத்திழக்கும் வன்கண்
ணவர்". 72

(ஈத்து உவக்கும் இன்பம் - கொடுத்தும், வாங்குகிறவர் மகிழும் சந்தோஷத்தைப் பார்த்தும் அனுபவிக்கிற ஆனந்தம். (ஈந்து-ஈத்து) வைத்து-பூட்டிவைத்து. இழக்கும் வன் கண்ணவர்-பறிகொடுக்கும் கொடியவர். இன்பம் இன்னதென்று தெரியாமலே போய் விட்டார்களே!)

7

யாசகம் கேட்பது எவ்வளவு கஷ்டமான செயல். தன்னை முற்றும் பலிகொடுத்தல்லவா கை ஏந்துகிறான். யோசித்துப் பார்த்தால் கொடுமையான காரியந்தான்.

அதையும்விடக் கொடுமையான காரியம் ஒன்று இருக்கிறது என்கிறார் குறளாசிரியர்.

வீடு நிறையச் செல்வம் இருக்கிறது. கல்யாணச் சாப்பாடு மிஞ்சிவிட்டது. புளித்துக் கள்ளாய்ப் போய்க் கொண்டிருக்கிறது பழையது. சுண்டைக்கறி ஊசி ஆரம்பித்துவிட்டது.

அதையும் பசித்தவர்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறான். எனக்கே சொந்தம் என்று கட்டிப் பிடிக்கிறான்.

இவன்பக்கத்தில் கேட்பவன் வர முடியுமா? வந்து நிற்கத்தான் முடியுமா?

''இரத்தலின் இன்னாது
மன்ற; — நிரப்பிய
தாமே தமியர்
உணல்''. 73

(இரத்தலின் இன்னாது - யாசிப்பதைவிடக் கொடியது. துன்பமானது. நிரப்பிய - நிறைந்து கிடப்பதை. தாமே தமியர் உணல் - பிறருக்குக் கொடுக்காமல் சாப்பிட்டுத் தொலைக்கிற காரியம். மன்ற - நிச்சயமாக. பிச்சை எடுப்பதைவிடக் கேவலமானதுதான்.)

8

துன்பத்தில் எல்லாம் கொடிய துன்பம் மரண துன்பந்தான். ''இறந்துபோய் விடுவோமே! வேறுவழி ஒன்றும்இல்லையே, இறந்த பின் என்ன செய்வது'', என்கிற ஞாபகம் வந்துவிட்டால் பயம் வராமலா போகும்?

இனி, அன்பும் இரக்கமும் நிறைந்த உபகாரி ஒருவன். அவனிடம் ஒரு உதவியை வேண்டி உற்ற நண்பர் ஒருவர் வந்தார். உதவுவதற்கு எவ்வளவோ ஆத்திரம். ஆனால் உதவுவதற்கு வசதி இல்லை. கையையும் காலையும் கட்டிப் போட்டுவிட்டால் எப்படி இருக்கும். அப்படி இருக்கிறது நிலைமை.

உபகாரியின் துயரத்தை அளக்கமுடியுமா? 'உயிர் போக மாட்டேன் என்கிறதே' என்றுதானே இடிந்து சரிவார் மனிதர்.

ஆசை நிறைவேறாத கட்டங்களில் மரணம் அவ்வளவு சுகமாக இருக்கும்.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

''சாதலின் இன்னாத(து)
இல்லை.

ஆம், உண்மைதான். மரணத்தைப்போல் துன்பமானது வேறு என்ன இருக்கிறது. ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்லத் தோன்றும்.

ஆனால், அதையும்விட அல்லவா கொடுமை ஒன்று இருக் கிறது.

> "சாதலின் இன்னாத(து)
> இல்லை; — இனிததூஉம்
> ஈதல் இயையாக்
> கடை". 74

(இனிது அதூஉம் - மரணங்கூட சுவைத்து அனுபவிக்கும் பண்ட மாக ஆகிவிடும். 'அதுவும்' என்பதை 'அதூஉம்' மாற்றியும், நீட்டி யும், ஓசை கூட்டியும் திருத்திக் கொடுக்கிறது தமிழ்.

ஈதல்—உதவி செய்ய.

இயையாக்கடை—முடியவில்லையே என்று தவிக்கிறபொழுது

# புகழ்

1

உண்மையைத் தெரிவதில் உலகம் முழுவதும் ஒரு ஆவேசம் இருக்கிறது. அதனால் உண்மையிடத்து ஆர்வம் உண்டாகிறது. ஈடுபாடும் உண்டாகிறது.

ஈடுபாடு காரணமாக எத்தனையோ அம்சங்கள், விளங்கி இருக்கின்றன. அப்படி விளங்கியவற்றில் மரணம் என்பதும் ஒன்று.

மரணத்தைப்பற்றி உலகில் உள்ள எல்லோருமே யோசித்துப் பார்த்தார்கள். தவிர்க்கமுடியாத ஒன்று மரணம் என்று தெரிந் தார்கள். அதனால் பயம்கூடியதே தவிர குறையவில்லை.

இந்தியர்கள் அவ்வளவாகப் பயப்படவில்லை. அதிலும் தமிழ் மக்களை எடுத்துக்கொண்டால் மரணத்தைப்பற்றிய பயம் அறவே இல்லை.

தவிர்க்கமுடியாதது என்பது மட்டும் அல்ல, மரணம் இயல் பானதுங் கூட. நியதியானதுங்கூட என்று விளங்கிக் கொண் டவர்கள் தமிழ்மக்கள்.

அதனால் மரணத்தைப்பற்றிய பயமே தமிழ்மக்களிடம் இல்லை. மரணம் பற்றிய தெளிவின் மூலம் வாழ்க்கையைத் திருத்தமாக வைத்துக்கொண்டார்கள். விழாவும், வரவேற்பும், உபசரிப்பும், அன்பும், உல்லாசமும், சந்தோஷமும் ஆகவே வாழ்க் கையை நடத்துகிறார்கள்.

பயம் இருந்தால் இப்படி அமைதியாக வாழமுடியுமா? தாறு மாறாக அல்லவா வாழ்க்கை அலங்கோலப்பட்டுப் போயிருக்கும்.

பொறுமை இல்லாமல், மரியாதை இல்லாமல், இனிமை இல்லாமல், அருள் இல்லாமல், ஒழுக்கமே இல்லாமல் கேவலமாகப் போயிருக்கும் வாழ்க்கை.

உலகில் பெரும்பாலான மக்கள் மரணபயத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். அவர்களை ஆட்டி அலைக்கழிக்கிறது மரணபயம். அதனால் குடும்பநலம் என்பது அங்கு இல்லை. கணவன் மனைவி என்பதெல்லாம் அப்போதைக்கு அப்போதுதான். குழந்தைகள் எல்லாமே அநாதைகள் மாதிரிதான்.

பெற்ற தாய் எங்கிருக்கிறாள் என்று பல குழந்தைகளுக்குத் தெரியாது. தகப்பன் எங்கிருக்கிறான் என்பதும் பல குழந்தைகளுக்குத் தெரியாது.

தாய் தந்தையர் கதி இது என்றால் பாட்டன் பாட்டியைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? மாமன், மாமி, உற்றார், உறவினர் எல்லாம் கிடையாது தான்.

எப்படியோ பிழைக்க வழி இருக்கிறது. சௌகர்யமும் இருக்கிறது. சாகத்தானே போகிறோம் என்கிற நினைப்பில் 'எப்படி வாழ்ந்தால் என்ன என்று' எப்படி எப்படியோ வாழ்கிறார்கள். மிருகங்களும் சௌகர்யமாக வாழத்தானே செய்கின்றன.

எவ்வளவு அலங்கோலமாக வாழ வேண்டுமானாலும் அங்கு வாழ முடியும்.

மரணபயம் படுத்துகிறபாடு அது. நம்மவர்களோ மரணத்தைக் கண்டு பயப்படவில்லை.

மரணத்தில் இருக்கிற இயல்பை அனுபவித்தார்கள். நேர்மையை அனுபவித்தார்கள். ஒழுங்கை அனுபவித்தார்கள். தாட்சண்யம் காட்டாத கண்டிப்பை அனுபவித்தார்கள். லஞ்சம், சலாம், சிபார்சு ஒன்றுக்கும் மசியாத மரண நீதியை அனுபவித்தார்கள்.

இவ்வளவுக்கும் மேலாக இன்னொன்றையும் யோசித்தார்கள். "ஒன்றும் இல்லாத நம்மை மனுசனாக உருவாக்கி, நாலுபேருடன் சேர்த்துவைத்து, கலை, இலக்கியம், பக்தி, குடும்பம் என்றெல்லாம் அனுபவிக்கவும் ஆனந்திக்கவும் செய்திருக்கிறதே! எழுபது ஆண்டு, என்பது ஆண்டுக்காலம் என்றால்க் கொஞ்சமா? அவ்வளவு காலத்திற்கும் நம்மைப்பத்திரமாக வைத்திருக்கிறதே' எவ்வளவு பெரிய

காரியம் இது! எவ்வளவு பெரிய இன்பம் இது? அடடா, குழந்தைகள், என்றும், பேரன் பேத்தி என்றும், வாரிசு என்றும் நமக்குக் கொடுக்கிறதே!

"கடவுளின் அருளே அருள்" என்றும் உணர்ந்தார்கள். பிறகு வாழ்க்கையில் தெளிவும் உறுதியும் பிரகாசிக்கத்தானே செய்யும்?

தமிழ்மக்கள் வாழ்க்கை புதுப்புது நிறங்களில் பிரகாசிக்கும் ஒளி ஊற்றாய் இருக்கிறது.

மரணம் பற்றி உண்மை தெள்ளத்தெளிய விளங்கிவிட்டது. அது தமிழ்மக்களின் உணர்ச்சியோடு கலந்து நிறைந்துவிட்டது. மனசில் எப்பொழுதும் அது நிற்பதால், "மரணத்திற்குப்பிறகு வாழும் முறை" ஒன்று தெரிந்துவிட்டது.

தனக்கென்று மட்டும் வாழாமல் பிறர்க்காகவும் வாழ்தல், பிறர்க்காகவே வாழ்தல் என்பது விளங்கிவிட்டது. ஒரே ஆனந்த பரவசந்தான்.

நந்தவனம் வைத்தார்கள், குளம் வெட்டினார்கள். அன்னதானம் பண்ணினார்கள், அனுபவங்களை எல்லோருக்கும் எடுத்துச் சொன்னார்கள். எடுத்துச் சொல்பவர்களை ஆதரித்தார்கள். கோவில்கள் கட்டினார்கள், கோபுரங்கள் கட்டினார்கள், தேர் செய்தார்கள், திருவிழா நடத்தினார்கள். கலைகளை வளர்த்தார்கள். மருந்துகள் கண்டுபிடித்தார்கள். வைத்தியம் செய்தார்கள். அன்பைப் பொழிந்தார்கள், ஆதரவு கொடுத்தார்கள்.

நாடு முழுவதும் தருமம் பொங்கிப் பொங்கி வழிந்தது. மரணத்தையும் வென்றுவிட்டோம். சாவு என்பது இல்லை. என்றென்றும் நிலைத்து வாழ்வோம் என்று தெளிந்து விட்டார்கள்.

குழந்தைகள் பேரன் பேத்திமார்களைவிட நிலையான வாரிசு-நிலையானபேர்- அழியாத வாழ்க்கை பொது நலம் என்பது தெரிந்துவிட்டது. செயலாகவே பூத்துவிட்டது.

தமிழ்நாட்டையும் தமிழ்மக்களையும், தமிழ்மக்கள் வாழ்க்கையையும் மாறிமாறிப் பார்த்தவர் குறளாசிரியர். பார்த்துப்பார்த்து அனுபவிக்கிறவர் அவர்.

குறளாசிரியர் அனுபவம் எப்படிக் கவியில் பேசுகிறது என்று பாருங்கள்.

"ஈதல், இசைபட
வாழ்தல்; அது அல்ல(து)
ஊதியம் இல்லை
உயிர்க்கு". 75

(இசைபடவாழ்தல் - புகழ்பெற வாழ்தல். அதாவது நிரந்தரமாக வாழ்வதற்குச் சாதனம். ஈதல் - கொடுத்தல் - அதாவது பொது நலம் ஒன்றுதான்.

அது அல்லது - தன்னலம் இல்லாத பொதுநலம் என்னும் ஒன்றைத்தவிர. உயிர்க்கு ஊதியம்இல்லை. பிறந்ததற்கோ வாழ்ந்த தற்கோ அடையாளம் ஒன்றும் இல்லைதான். உயிர்க்கு-மனிதனுக்கு ஊதியம் - லாபம்)

2

கவிஞர்களாகட்டும் கலைஞர்களாகட்டும் தங்களுடைய படைப்புகளில் வைத்துப் பாராட்டுகிறது கொடையையும், தியாகத்தையுந்தான்.

"உரைப்பார் உரைப்பவை
எல்லாம் — இரப்பார்க்கொன்(று)
ஈவார்மேல் நிற்கும்
புகழ்". 76

உரைப்பார் உரைப்பவை எல்லாம் - கவிஞர்கள் புகழ்ந்து பாடுகிற கவிகள் எல்லாம். இரப்பார் - கேட்கிறவர்.

துயரப்படுகின்ற மக்களின்மேல் மனங்கசிந்து உபகாரஞ் செய் கிறவனுடைய மேம்பாடு (புகழ்) கலைகளிலும், இலக்கியங்களிலும், மன்பதையின் நாவிலும், இதயத்திலும் நின்று ஒளிவீசுவதை இன்றும் நாம் பார்க்கிறோம்.

அழியும் உலகத்தில், எத்தனையோ இடங்களில் எத்தனையோ உருவங்களில் அழியாமல் களிநடம்புரியும் புகழ். புகழின் ஆற்றல் தனியானதுதான்.

3

கடமைகளை எல்லாம் தவறாமல் ஒழுங்காக ஒருவன் செய்து விடுகிறான். அதனால் பெரும்புகழ் பெறுகிறான். பல துறைகளில் வைத்து அவன் புகழைப் பாராட்டுகிறது உலகம். அதுமட்டுமா? தேவருலகத்தில் உள்ளவர்கள்கூட இவனையே புகழ்ந்து கொண் டிருக்கிறார்கள். தம்மை ஒத்த தேவர்களைக்கூட அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

"நிலவரை நீள்புகழ்
ஆற்றில்ப்; — புலவரைப்
போற்றாது புத்தேள்
உலகு!'. 77

(நிலவரை - உலகம். புத்தேள் உலகு - வானுலகம். புலவர் - தேவர்.

4

அள்ளிக் கொடுக்கும் வள்ளலுக்கும் வயது ஏற ஏற உடம்பு தளர்ந்து சுருங்கவே செய்யும். அவனுடைய ஊனுடம்பு சுருங்கினாலும் புகழுடம்பு சுருங்காது. விரிந்து கொண்டேவரும். அதே போல் அவனுடைய உடம்பு செயலிழந்து அழிந்துவிடும். அவனுடைய புகழுடம்போ அழியாது நிலைத்து நிற்கும்.

இது அதிசயமான காரியந்தான். உடம்பு தேயத் தேயப் புகழ் வளர்வதும் உடம்பு அழிய அழிய புகழ் நிலைத்து நிற்பதும் சாதாரண காரியம் அல்ல.

இந்த அற்புத காரியத்தைச் செய்து சாதித்து விடுகிற புண்ணிய மூர்த்தியை வித்தகன் என்று தான் சொல்ல வேண்டும்.

வித்தகன் என்றால் மற்றவர்களால் சாதிக்க முடியாத ஒன்றை சாதித்து விடுகிறவன் என்று பொருள்.

கொடையாளன், பிறரால் சாதிக்க முடியாத ஒன்றை எளிதிலல்லவா சாதித்து விடுகிறான்.

இனிக் குறளைப் பார்க்கலாம்.

"நத்தம்போல் கேடும்,
உளதாகும் சாக்காடும்;
வித்தகர்க்(கு) அல்லால்
அரிது." 78

(நத்தம் ஆகும்கேடும் - வளர்வது போலச் சுருங்குவதும். உளதாகும் சாக்காடும் - நிலைத்து நிற்பதில் நிலையாமையும்.

வித்தகர்க்கு அல்லால் அரிது - சதுரப்பாடுடையவர்களுக்குத்தான் முடியும். மற்றவர்களுக்கு முடியவே முடியாது.)

5

சதுரப்பாடுடையவர்களை - அழியாத புகழ் படைத்த அறக் கொடையாளர்களை மக்கள் மறக்கமாட்டார்கள். அது இயற்கையான காரியந்தான்.

வசதியிருந்தும் கொடுக்க மனம் இல்லாதவனை உலகம் பாராட்டாது. கொடியவன் என்று அவனை உலகம் இகழக்கூடச் செய்யும்.

அப்படியானால் புகழ்பெற முடியாத அப்பாவி மனிதன் - கொடையுணர்வில்லாதவன் என்ன செய்ய வேண்டும்.

''நம்முடைய மனம் இவ்வளவு மோசமாக இருக்கிறதே! திருந்த மாட்டேன் என்கிறதே! உள்ளம் நல்லபடியாகத் திருந்த வேண்டுமே'' எனறு அவன் உணரவேண்டும்.

நாலுபேருக்கு உபகாரமாக வாழவேண்டும். அப்படியானால் புகழும் ஆனந்தமும் நமக்கும் கிடைக்கும் என்று உணரவேண்டும் அவன்.

அதற்குப் பதிலாகப் புகழடைந்தவர்கள் மேல் பொறாமைப் படுவதும், தன்னைப் புகழாதவர்களை வெறுப்பதும் பலன் தர மாட்டா.

அது மேலும் மேலும் அறியாமையை வளர்க்கும். ஆணவத்தைப் பெருக்கும். தீமைதான் கூடுமே தவிர நன்மை விளையாது.

இனிக் குறளைப் பார்க்கலாம்.

''புகழ்பட வாழாதார்
தம்நோவார்; தம்மை
இகழ்வாரை நோவ(து)
எவன்!'' 79

(தம்நோவார் - தம்முடைய செயலுக்கு வருந்தாமல். இகழ்வாரை நோவது எவன் - தம்மைப் பாராட்டாதவர்களை, அல்லது தம்மை இகழ்கின்றவர்களை நொந்து கொள்வதில் என்ன புண்ணியம் இருக்கிறது.)

மனித வாழ்க்கையின் குறிக்கோளென்ன, கடமை என்ன என்பவற்றைத் தெளிவாகத் தெரிந்தவர் குறளாசிரியர். அவருடைய தெளிவு குறள்ப் பாக்களில் கணகண என்று ஒலிக் கின்றது.

# திருவருள் துணை

1

உண்மை தெரியாமல் பயப்படுவதில் தான் கோளாறுகள் இருக்கின்றன.

நாம் வேறு, பிறர் வேறு என்பது பொய். எல்லோரும் ஒன்று தான் என்னும் உண்மை தெரிய வேண்டும்.

உயிர் வர்க்கம் முழுவதும் - உலகம் முழுவதும் - பேரண்டம் முழுவதுமே ஒன்றுதான். இது தான் உண்மை. ஆனால் இது ஒன்று தான் தெரியமாட்டேன் என்கிறது.

நம்மை நாம் மதிக்கிறபடியே பிறரையும் நாம் மதிக்க வேண்டும். நம்மை நாம் உபசரிக்கிறபடியே பிறரையும் நாம் உபசரிக்க வேண்டும். நம் உடம்பில் நோய் வந்தால் எப்படிப் பதறுகிறோம். அப்படியே பிறர் கஷ்டம் கண்டு பதற வேண்டும்உள்ளம்.

'அருள், அருள்' என்று சொல்கிறோம். 'கடவுளுடைய செயலே எங்கும்' என்று. அந்த நியதி தத்துவம் இது தான். பேதம் இன்மை. ஒற்றுமை தான் அருள்.

உண்மையைக் கண்டவர்களை அருளாளர் என்கிறார், குறளாசிரியர். அருள் ஆள்வார் என்றே போற்றுகிறார். அவர்களிடம் பயம் எப்படி இருக்கும். ஆனந்த மயமாக இருப்பார்கள் அருளாளர்கள்.

"மன்உயிர் ஓம்பி,
அருள்ஆள்வார்(கு) இல்என்ப
தன்உயிர் அஞ்சும்
வினை".

மன்உயிர்ஓம்பி - உலகம் முழுவதும் நிறைந்துள்ள ஆன்மாவை, மனிதர், பசு, புஷ்பம், எல்லாவற்றையுமே. ஓம்பி - மதித்து உபசரித்து. தன் உயிர் அஞ்சும் வினை இல்என்ப. மரணபயங்கூட அவர்களிடம் இருக்காது. உண்மையைக் கண்ட ஞானிகள் அப்படித் தான் சொல்கிறார்கள் (என்ப) என்கிறார், கவிஞர்.)

2

அருளாளர்களிடம் கவலை என்பது இல்லை தான். ஒரே ஆனந்தந்தான் அவர்களுடைய காரியம். பிறருக்காக உயிரையே தத்தம் செய்வதில்கூட அவர்களுக்கு ஆனந்தமேதான்.

அப்படி இருக்க அல்லல் (துன்பம்) என்பது அவர்களிடம் நெருங்குமா? அது வேண்டும் இது வேணடும் என்னும் தன்னலம் இருந்தால் மனிதனுக்கு மனிதன் பயப்படுவான். ஒன்றும் வேண்டாம் என்பவன் பயப்படமாட்டான். எல்லோரிடமும் மரியாதையாக இருப்பான். எல்லோருக்கும் ஆதரவாக இருப்பான்.

அவனிடம் பயமும் இல்லை. கவலையும் இல்லை. இதற்கு சாட்சியங்கள் எத்தனையோ உண்டு. உலகத்தையே பெட்டியில் போட்டு விசாரித்தாலும் அப்படியே சொல்லிவிடும்.

''அல்லல் அருள்ஆள்வார்க்(கு)
இல்லை; வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம்
கரி''. 81

(அல்லல்-துன்பம். வளிவழங்கும் - ஓய்வே இல்லாதபடி காற்றானது எப்பொழுதும் வீசிக்கொண்டே இருக்கும். மல்லல்மா ஞாலம் - சகல வளங்களும் நிறைந்து ஆரவாரத்தோடு திகழும் பெரிய உலகம், (ஞாலம் - உலகம்) கரி - உலகமே சாட்சி தான் (கரி - சாட்சி)

3

வசதி உடையவர்கள் பலர் தரித்திரர் ஆகிவிடுகிறார்கள். எப்படி என்று தெரியவில்லை. இதைவிட வியப்பான ஒன்றும் இருக்கிறது. தரித்திர நிலைக்கு உள்ளானவர்களில் சிலர் பணக் காரர் ஆகிவிடுவது. இந்த விசித்திரமான சகட விளையாட்டை அடிக்கடி நாம் பார்க்கிறோம்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறதென்றால், ஒருவனிட மிருந்து செல்வம் விலகிப் போய்விட்டால், மறுபடி வந்து

ஒட்டாது என்று எண்ணிவிடக் கூடாது. பிரிந்து போன செல்வம் திரும்ப வருதல் இயல்புதான்.

''பொருள் அற்றார் பூப்பர்
ஒருகால்''

கிண்ணத்தில் வைத்திருந்த நாணயங்(காசு)கள் சிந்திவிட்டால், அவற்றை எடுத்துக் கிண்ணத்தில் போட்டுவிடலாம். அதுபோலத் தான், செல்வத்தை இழந்தவர்கள் முயற்சி செய்து சம்பாதித்து விடுவார்கள்.

ஆனால் கிண்ணத்திலிருந்த நெய்யோ, தைலமோ சிந்தி விட்டால், மறுபடி எடுத்துக் கிண்ணத்தில் நிரப்ப முடியாது. சிந்தியது சிந்தியது தான்.

அருளின் காரியமும் அப்படித்தான். அருளை இழந்து உள்ளம் மரமரத்துப் போய் விட்டால், பழையபடி அவ்வுள்ளத்தில் அருள் முளைக்கவே முளைக்காது.

''பொருள்அற்றார் பூப்பர்
ஒருகால்; — அருள்அற்றார்
அற்றார்மற்(று) ஆதல்
அரிது''. 82

அற்புதமான பாடல். தமிழும், தமிழிலுள்ள மந்திர சக்தியும் எத்தகையவை என்பதை நேருக்கு நேராக விளக்கிக் காட்டுகின்றது பாடல்.

பழையபடியும் சம்பாதித்து விடுவதை ''பூப்பர் ஒருகால்' என்று அழகாய்ச் சொல்லி இருக்கிறது. 'அருளற்றார்' 'அற்றார்' என அடித்துக்காட்டியிருக்கிறது. ''மற்று ஆதல் அரிது'' என உறுதி யோடு முடித்துக் காட்டியும் விட்டது தமிழ்.

*   *   *   *

4

ஆணவம் விலகினால்த்தான் அறிவு தெளிவுபடும். தெளிவு ஏற்பட ஏற்பட உறுதி உண்டாகும்.

ஆணவம் விலகாத நிலையிலும் அறிவு இருக்கலாம். ஆனால் அந்த அறிவில் தெளிவும் இருக்காது. உறுதியும் இருக்காது.

தெளிவும், உறுதியும் இல்லாத அறிஞன் ஆராய்ச்சி செய்வதற்குத்தான் ஏற்றவன். உண்மையை உணரவும் அனுபவிக்கவும் அவனால் முடியாது.

ஆணவத்தோடு கூடிய அறிஞன் "உண்மையைக் கண்டு விட்டேன்;' என்று சொல்வது தலைகீழாகக் கண்டுவிட்ட கணக்குத் தான். வேடிக்கையும் விபரீதமும் நிறைந்த காட்சிதான் அது.

"தெருளாதான் மெய்ப்பொருள்
கண்டற்றால்".

(தெருளாதான் - தெளிவில்லாதவன். கண்டற்றால் - கண்டுவிட்டேன் என்று சொல்கிற கணக்குத்தான்)

இதயத்தில் இரக்கமும், நீதியும் இல்லாத கொடியவர்கள் செய்கிற தருமம், பொதுநல வேஷம்.

"தெருளாதான் மெய்ப்பொருள்
கண்டற்றால்; தேரின்
அருளாதான் செய்யும்
அறம்". 83

(அருளாதான் - அருள் இல்லாதவன் செய்யும் அறம் - அள்ளிக் கொடுக்கும் கொடையானாலுஞ்சரி, பொதுநலப்பணியானாலும் சரி, எல்லாம் மோசடிதான். எதுபோல? தெளிவில்லாதவன் உண்மையைக் கண்டதாகச் சொல்லும் மோசம்போல.)

5

வழிதவறி மறுகுகிற குழந்தைக்கு யார்யாரோ வந்து பண்டம் வாங்கிக் கொடுக்கலாம். ஆதரவு தரலாம். ஆனால்த் தாயைக் கண்டமாத்திரத்தில்தான் குழந்தையின் ஏக்கம் நீங்கும், பயம் தொலையும், நிம்மதி ஏற்படும்.

அதேபோல, ஒருவன் மற்றவர்களுக்கு உபகாரம் செய்யலாம். உபதேசம் புரியலாம். ஆனால், அருளாளர்களின் கொடையிலும் உபதேசத்திலும்தான், உலகம் தழைக்கும், உய்யும் நிலைபெற்று நிற்கும்.

வலுவுள்ள ஒருவன், தன்னிலும் மிக்க வலுவுள்ளவனை எண்ணிப் பயப்படுகிறான். ஆனால் வலுவில்லாதவனையோ நெருக்குகிறான். வலுவில்லாதவனை மிரட்டி உருட்டுகிறான்.

''வலியார்முன் தன்னை
நினைக்கத்தான் தன்னின்
மெலியார்மேல்ச் செல்லும்
இடத்து'' 84

வலியார்முன் தன்னை நினைக்க - தன்னை முரடன் ஒருவன் படுத்துகிறபாட்டை நினைத்துப் பார்த்தால் அப்பாவிகளை உருட்டிப் புரட்டுகிற செயல் கேவலம் என்பது தெரியும்.

தன்னின் மெலியார் மேல் செல்லும் இடத்து - எளியவர்களை மடக்க முற்படுகிறபோது, தன்னை மடக்கும் முரடன் ஞாபகம் வர வேண்டும்.

மேலதிகாரி படுத்துகிறதை உணர்ந்தால் வேலைக்காரர்களை நசுக்குவானா?

உணர்ச்சிதான் செத்துப் போய்விட்டதே!

# உண்மையின் தொனி

1

ஆடவரும், பெண்டிரும் ஐயாயிரம் பேர் கூடி இருக்கிறார்கள். இலக்கியவிழா. பெரிய சபை, ''சைவம் ஒரு ஞானநெறி'' என்னும் தலைப்பில் தடபுடலான தமிழ்க்குடிமகன் ஒருவர் பேசுகிறார்.

பெரிய பதவியில் இருக்கிறார், ''வள்ளுவச் செல்வம்'' ''திருவள்ளுவரின் திருஉருவம். வள்ளலார்க்கு வாய்த்த துணை'' என்றெல்லாம் பட்டம் வாங்கியவர்.

சத்தம் பலமாகப் போடுகிறார். மேஜைமேல் ஓங்கி ஓங்கி அடிக் கிறார். சைவ உணவின் மணம், குணம், ருசி, சத்து இவைபற்றி எல்லாம் விபரங்களைக் கொட்டுகிறார். திருவள்ளுவரிலிருந்தும், வள்ளலாரிலிருந்தும் பாடல்களை எடுத்து அவற்றுக்கு அவர் கொடுக்கிற விளக்கங்களைப் பார்த்தால் ''தமிழ் என்ன போடு போடுகிறது'' என்று சொல்லத் தோன்றும்.

காண்டாமிருகமும் யானையும் சைவந்தானே, மாமிசம் சாப்பிடுமா அவை என்று அவர் அதட்டிக் கேட்கிறார், ''அவை களை விட வேறுபலம் உள்ள விலங்குகள் எவை'' என்று மடக்கி யும் வினவுகிறார். அவ்வளவும் மிக்க எடுப்பாய் இருக்கின்றது.

நூற்றுக்கணக்கில் மேற்கோள்கள். மேற்கோள்களை விளக்க வேறு மேற்கோள்கள். எல்லாம் சேர்ந்து இரண்டு மணி நேரம் பேசித் தீர்த்தார். கேட்பவர்களின் மூளையும் கலங்கிவிட்டது வயிறும் கலங்கிவிட்டது.

பேச்சில் அவ்வளவு காரசாரம்.

பேசி முடிந்த உடன் ஜாகைக்குப் போனார். நண்பர்களோடு அமர்ந்து சாப்பிட்டார். சபாக்காரர் அமர்த்திய ஜாகைதான். வள்ளுவச் செல்வத்தின் கட்டளைப் படிதான் - தேவைப்படியே உணவை வரவழைத்திருக்கிறார்கள். உணவில் சைவம் என்பது எதுவும் இல்லை. முட்டை, கோழி, ஆடு, மீன் அவ்வளவும் பதார்த்தங்களாக வந்துள்ளன. இன்னும் ஏதோ ஒருவகை அதில் இல்லையே என்று சபா நிர்வாகிகளை அவர் அதட்டிய அதட்டைப் பார்க்க வேண்டும். அதைவிட அவர் பார்த்த பார்வை பயங்கர மானது. திரிபுரமாக இருந்தால் எரிந்து சாம்பலாயிருக்கும். பாவம், இது, திருவள்ளுவர் கழகம். தப்பியது.

ராமலிங்க அடிகளைப் பற்றியும், திருவள்ளுவரைப் பற்றியும் உண்மை இல்லாமல் வெறும் ஆராய்ச்சி பண்ணினால் புண்ணியம் உண்டா? பிரசங்கம் பண்ணினால் புண்ணியம் உண்டா? கட்டுரை எழுதினால் புண்ணியம் உண்டா?

பிழைப்பு உண்டு. வசதியான பிழைப்பு உண்டு. அவ்வளவு தான்.

திருவள்ளுவரிடம் பேச்சாளருக்கு உண்மை இருக்கவேண்டும். புலால் உண்ணாமையில் உண்மை இருக்கவேண்டும்.

உண்மையோடு சேர்ந்து வார்த்தை வருமானால் அது கேட்பவர்களின் மனசைக் குழைக்கும். பிசையும். உணர்ச்சியோடு உணர்ச்சியாய்க் கலக்கும். அழுக்கை நீக்கும். அழகைக் கொடுக்கும். கேட்பவர்களை, புத்தம்புதிய மனிதர்களாக உண்டாக்கிவிடும்.

ஐயாயிரம் பேரில் ஒருவரைக்கூட ஒன்றும் செய்யவில்லை பிரசங்கம். திருவள்ளுவர் கழகத்தையே ஒன்றும் செய்யவில்லை. செய்திருந்தால் நூறுரூபாய்க்கு மாமிசப் பதார்த்தங்கள் உணவாக வருமா? சைவச் சொற்பொழிவுக்கு இரை மாமிசந்தான்.

மகாத்மாகாந்தி அடிகள் புலால் உண்ணாமைபற்றி தம் அனுபவத்தைச் சொன்னார். அது உலகம் முழுவதும் உள்ள ஆடவர் பெண்டிர் எத்தனையோ பேரை மாமிச உணவை விட்டு விடச் செய்தது. பரம்பரை பரம்பரையாகச் சாப்பிட்டவர்களே மாமிசத்தை விட்டுத் தொலைத்தார்கள்.

இதுவரை எவ்வளவு பாவம் செய்து விட்டோம் என்று அவர் கள் மனம் உருகுகிறார்கள்.

காந்தி அடிகள் பிரசங்கம் பண்ணவில்லை. ஆராய்ச்சி பண்ண வில்லை. கட்டுரை எழுதவில்லை.

கொலையையும் புலாலையும் பாவம் என்று வெறுத்தார். அவர் வெறுத்ததில் உண்மை இருந்தது.

உண்மை இருந்தால் அதில் உயிர் இருக்கும். ஒளி இருக்கும்.

திருவள்ளுவர் பாடலில் உயிர் இருக்கிறது. ஒளி இருக்கிறது என்றால், அவரிடம் உண்மை இருக்கிறது. உணர்ச்சி இருக்கிறது. இதோ பாருங்கள் பாடலை.

''கொல்லான் புலாலை
மறுத்தானை;- கைகூப்பி
எல்லா உயிரும்
தொழும்''. 85

(எல்லா உயிரும் - உலகில் உள்ள பலதிறப்பட்ட மக்களும், கை கூப்பி தொழும் - பக்தி பரவசத்தோடு போற்றுவார்கள். யாரை? இரக்கம் உடையவனை. கருணை உள்ளவன் கொலை செய் வானா? கொன்று தீர்த்த பிணத்தை உண்பானா?)

குறிப்பு:- உணர்ச்சியைப் பளிங்கில் வைத்துக் காட்டியது போல் தெளிவு படுத்திக் காட்டுகிற குறள்.

# உழைப்பே தவம்

## 1

எத்தனையோ பெரிய காரியங்களை உலகம் செய்து நிறைவேற்றி இருக்கிறது. படுமட்டமான காரியங்கள் ஒன்றிரண்டையும் உலகம் செய்துதான் இருக்கிறது.

அதில் ஒன்று, உழைப்பை - அதாவது உடலுழைப்பை மதிக்கத் தவறியது. அதுமட்டுமல்ல, உடலுழைப்பைக் கேவலமானது என்றும் நடத்தியது.

மன்னிக்கமுடியாத மகாபயங்கரம் இது.

'வீட்டுவேலை என்று' ஒரு பெண் ஒரு வீட்டில் வேலை பார்க்கிறாள். அவள் காரியத்தைப் பார்த்தால் போதும். எவ்வளவு உதவி செய்கிறாள் என்பது விளங்கும்.

'வீடு முழுவதையும் இரண்டு மூன்றுதரம் பெருக்கிக் கூட்டுகிறாள். முற்றம் தெளிக்கிறாள், கோலம் போடுகிறாள், நீர் இறைக்கிறாள், சுமந்து வருகிறாள், துணிகளைத் துவைக்கிறாள், காயப்போடுகிறாள், மடித்து வைக்கிறாள், மாடு கன்றுகளைக் கவனிக்கிறாள், குழந்தை குட்டிகளையும் கவனிக்கிறாள், கடைக்குப் போகிறாள், எச்சில்த் தட்டுகளைக் கழுவுகிறாள், அரைத்துக் கொடுக்கிறாள், இடித்தும் நுணுக்கியும் கொடுக்கிறாள்.

எவ்வளவு உதவியாக இருக்கிறாள் பெண். அவளை ஒரு நாளாவது நாம் மதித்தது உண்டா?

கல்வேலைக்காரன் எவ்வளவு உதவியாக இருக்கிறான். அவன் இல்லாவிட்டால், ஆட்டுரல் வருமா? அம்மி வருமா? குழவி வருமா? வீடுகட்ட முடியுமா? கோவில் கட்ட முடியுமா? அவனை மதித்தோமா?

செருப்புத் தைக்கிறவன் செய்கிற காரியம் மிகப்பெரிய காரியம். இவர்கள் காரியத்தைவிட நீதிபதிகள் காரியம் உயர்ந்ததா? பேராசிரியர்கள் காரியம் உயர்ந்ததா? இல்லை, கவர்னர் காரியந்தான் உயர்ந்ததா?

ஆனால், உழைக்கிறவன் ஒருவனையாவது நாம் மதிக்கிறோமா? உடலுழைப்பை ஒருவரும் மதிக்கவில்லை. கேவலமாக நடத்துகிறார்கள். அதனால் மக்களுக்கு உழைப்பின் மேல் பிரியம் இல்லை. ஏதோ வழி இல்லாமல் பிழைப்புக்காக உழைப்பைக்கட்டி மனிதன் அழுகிறானே தவிர, பிரியத்தோடு உழைப்பை யாரும் வைத்துக் கொள்ளவில்லை.

கொத்தனுக்குக் கொத்துவேலை நஞ்சாய் இருக்கிறது. தச்சனுக்குத் தச்சுவேலை அப்படியே. சட்டிபானை செய்வதைக்குயவன் வெறுக்கிறான். உழவன் விவசாயத்தைக் கேவலம் என்று நினைக்கிறான். மேளகாரன் சங்கீதத்தையே நஞ்சாய் நினைக்கிறான். ஓதுவாமூர்த்திகளுக்குத் தேவாரமே கசந்துவிட்டது. பூசாரிகளுக்கு, இறைவனே அனாவசியம் என்று படுகிறது.

நம்ம தலைமுறையோடு இதுதொலையட்டும். நம் பிள்ளைகளை இதன் பக்கத்தில் வரவிடக்கூடாது. எப்பாடுபட்டேனும் அவர்களைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விடவேண்டும் என்று வெறியாய் நிற்கிறார்கள்.

உழைப்பை மதிக்காததால், உழைப்பில் யாருக்கும் ஈடுபாடு இல்லை. மரியாதை கெட்ட தொழில் என்று உழைப்பை நினைக்கிறார்கள். அதனால் சோம்பேறியாய் இருந்து - உடலுழைப்பு இல்லாமல் சம்பாதித்தால் போதும் என்று ஆசைப்படுகிறார்கள்.

பொய் சொல்வது, திருடுவது, லஞ்சம் வாங்குவது, துரோகம் செய்வது, சலாம் போடுவது, அதிகாரம் பண்ணுவது, உத்யோகம் பார்ப்பது என்ன அயோக்கியத்தனம் ஆனாலும்சரி, அதற்காக உயிரையே கொடுக்கிறார்கள்.

ஆனால் உழைப்பதை யாரும் விரும்பவில்லை. காரணம், அயோக்கியத்தனங்களை உலகம் மதிக்கிறது. உழைப்பை அவமதிக்கிறது.

உழைப்பை மதிக்கவேண்டும். மதித்தால் பக்தியோடு அவரவர் காரியத்தை அவரவர் செய்வார்கள்.

உணர்ச்சியோடு தங்கள் தங்கள் காரியத்தில் மக்கள் இறங்கி உழைப்பார்களானால்-தேசம் அமைதியாக இருக்கும்.ஆனந்தமாக இருக்கும். குழப்பமே இருக்காது.

உழைப்பே வாழ்க்கை, உழைப்பே ஆனந்தம் என்னும் ருசி தட்டுப்பட்டு விட்டால் பிறகு மக்களிடம் தவறுகளே இருக்காது. போலீஸ் நிலையங்கள், வழக்கறிஞர்கள், நீதிமன்றங்கள், கண் காணிப்பாளர்கள், மருத்துவ நிலையங்கள், யூனிவர்சிட்டிகள் ஒன்றும் இருக்காது.

குழந்தைக்கு உணவு கொடுக்கவும் வளர்க்கவும் சம்பளம் கேட்கிறாளா தாய். உணவு கொடுப்பதும் வளர்ப்பதுந்தான் தாயின் வாழ்க்கை. ஆனந்தம் அதுதான்.

மனிதர்களுக்கு உழைப்புத்தான் - அதாவது உற்பத்தி செய்து கொடுப்பதுதான் வாழ்க்கை. அதுதான் ஆனந்தம்.

பணம் அல்ல லட்சியம்.

உழைப்பை உலகம் மதிக்கவேண்டும். ஒவ்வொருவரும் உழைப்பை மதித்து உண்மை உணர்ச்சியோடு செயல்பட வேண்டும். அதுதான் தவம்.

உடல் உழைப்பால் தங்கள் தங்கள் காரியத்தை மதித்து பக்தி யோடு செய்கிறவர்களே, தவம் செய்பவர்கள். உழைக்காமல் பிழைப்பு நடத்துகிறவர்கள் போக்கிரிகள்

"தவம்செய்வார் தம்கருமம்
செய்வார்; மற்(று) — எல்லாம்
அவம்செய்வார் ஆசைஉள்ப்
பட்டு". 86

(தம்கருமம் செய்வார் தவம் செய்வார் - நீதிபதி, தோட்டி, மருத் துவர், தச்சர், வண்ணார், பேராசிரியர், நாவிதர், இன்ஸ்பெக்டர், விவசாயி, வியாபாரி, ஆலைஊழியர், அமைச்சர் எல்லோருடைய தொழிலும் ஒன்றுதான். ஒவ்வொருவரும் தம்தம் காரியத்தை மனசோடு செய்யவேண்டும். உணர்ச்சியோடு செய்யவேண்டும். அப்படிச் செய்வதுதான் தவம். மற்றுஎல்லாம் - பணத்தைக் கறப் பதற்கும், உழைக்க மனம் இல்லாமல் உழத்துவதுக்கும் செய்கிற காரியம் எல்லாம். அவம் - பித்தலாட்டமேதான். செய்வார் ஆசையுள்பட்டு - சும்மா உட்கார்ந்து பொழுதைப்

வதற்கும், வேண்டாததைச் செய்வதற்கும் பணமும் சௌகர்யமும் மரியாதையும் கிடைக்கின்றன என்பதால், உழைப்பை விட்டுவிட்டு வேறு பிழைப்பை நாடி ஓடுகிறார்கள். ஆசைவெறியோடு ஓடு கிறார்கள். எதை எதையோ செய்கிறார்கள்)

2

மனம் ஒரு பக்கம். கை ஒரு பக்கம், கண் ஒரு பக்கம், என்று ஓடாமல் உழைப்பில் அத்தனையும் ஒன்றுபடும். ரயில்வண்டியை டிரைவர் ஓட்டுகிறார் என்றால், தண்டவாளம், இஞ்சின், வேகம், நேரம், வண்டியில்வரும் ஜனங்கள், நிலையங்கள் எல்லாம் அவருடைய மனசில் நிற்கும். கண்ணிலும் நிற்கும். கையிலும் நிற்கும். இல்லாவிட்டால் அனாயாசமாக ஓட்டிக் கொண்டு போக முடியாது, ரயிலை.

தேகம், மனம், உயிர் மூன்றும், ஒருநிலையில் வந்துநின்று தொழிற்படும். அப்படி ஒருமுனைப்பட்டு நிற்பதுதான் யோகம். அதுதான் தவம்.

இஞ்சின் உறுப்புகள் சொன்னபடி கேட்கவில்லை. திமிறு கின்றன. வண்டி அதனால் குலுங்குகிறது. ஆடுகிறது என்றால் வண்டியை ஒரு இடத்தில் நிறுத்திவிடுவார். சரிசெய்த பிறகே எடுப்பார்.

வண்டியில் இருப்பவர்கள் பொறுமை இழந்து பேசுவார்கள். புகார்கூடப் பண்ணுவார்கள்.

அதுபற்றிக் கவலைப்பட மாட்டார் டிரைவர். ரயிலும் ஜனங் களின் உயிருமே அவருக்கு லட்சியம்.

உலகக்ஷேமம்-சமுதாய முன்னேற்றம் இதையே லட்சியமாகக் கொண்டு செயல்படுகிறவர்களும், துன்பத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள். தோல்வியைக்கூடப் பொருட்படுத்த மாட் டார்கள்.

செயல்பட்டுக் கொண்டே இருப்பார்கள். அதுதான் அவர்கள் வாழ்க்கை. அதாவது தவம்.

"உற்றநோய் நோன்றல்,
உயிர்க்குறுகண் செய்யாமை,
அற்றே தவத்திற்(கு)
உரு." 87

(உற்றநோய் நோன்றல் - துன்பத்தைத் தாங்குதல் உறுகண் செய்யாமை - துன்பம் செய்யாது நன்மை செய்தல் அற்றே - அது தான். தவத்திற்கு உரு - தவவாழ்க்கை.)

3

தங்கத்தை நெருப்பில் போட்டுக் காயவைப்பார்கள். நீர் விட்டு ஆற்றுவார்கள். டெம்பர் ஏறும். பிறகு அடிகல்லில் வைத்து அடிப்பார்கள். பலதடவை இப்படிச் செய்வார்கள். அதனால் தங்கத்திற்கும் உறுதி கிடைக்கும். ஒளி ஏறும். சோதனைக்குள்ளாகி உரம் பெறுகிறது பொன்.

சமுதாயத்தின் நோய்களைக் களைந்து அதைத் திருத்தி உயர்த்தப் பாடுபடுகிறவர்களுக்கும் சோதனை வரும். அடிக்கடி வரும். ஒவ்வொரு சோதனையும் துவைத்துத் துவைத்து எடுக்கும்.

அதனால் லட்சியத்திற்குப் பிரகாசம் ஏறவே செய்யும்.

''சுடச்சுடரும் பொன்போல்
ஒளிவிடும்; — துன்பம்
சுடச்சுட நோக்கிற்
பவர்க்கு.'' 88

(நோக்கிற்பவர்க்கு - லட்சியத்தை நிறைவேற்றுபவர்களிடம். பொன்போல் ஒளிவிடும் - லட்சியம் தங்கம்போல் பிரகாசிக்கும்.)

4

லட்சியத்தோடு ஒட்டியசெயல் - தியாகம், ஆனந்தம் எல்லாம் அபூர்வமாகச் சிலரிடமே உள்ளன. மற்றவர்கள் காரியம் முற்றும் வேறுபட்டே இருக்கிறது. ஏன்? எல்லோரும் தங்கள் வாழ்க்கையை - லட்சியத்தை நோக்கிய வாழ்க்கையாக - தவவாழ்க்கையாக - அமைத்துக் கொண்டால் என்ன? என்று நினைக்கத்தோன்றுகிறது. அதற்குரிய பதில் இதுதான்.

''தவவாழ்க்கையை நடத்துகிறவர்கள் காரியம் பெரிய காரியம். அதன் பெருமை தெளிவாகத் தெரிய வேண்டும். நாம் உள்ளே விழுந்து அதை மறைத்து விடக்கூடாது'' என்னும் நல்லெண்ணங்கொண்டே, பலர் ஒதுங்கிவிட்டார்கள்.

மேலே குறிப்பிட்டபடி சமாதானம் செய்துகொள்ள வேண்டியதுதான். வேறு காரணம் என்ன இருக்கமுடியும்.

"துறந்தார்க்குத் துப்புரவு
வேண்டி, — மறந்தார்கொல்!
மற்றை யவர்கள்
தவம்." 89

(துப்புரவு - பிரகாசம். மற்றையவர் - லட்சியநோக்கு இல்லாதவர்)

5

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று தெரியும். திருப்தியாக இருக்கிறார்கள் என்று தெரியும். கொஞ்சம் உள்ளே ஊடுருவிப் பார்த்தால் பெரும்பாலும் கிறுக்குகள்தான். திருப்தியே இல்லாமல் வெறிகொண்டு அலையும் தரித்திரங்கள்தான் என்பது விளங்கும்.

உழைப்பு என்று ஒன்று இருந்தால், உழைப்பே லட்சியமாகவும், ஆனந்தமாகவும் அமைந்தால் சந்தோஷம் இருக்கும். நிம்மதி இருக்கும். அன்யோன்யம் இருக்கும். மரியாதை இருக்கும்.

லட்சியம் உள்ளவர்கள் சிலர். லட்சியம் இல்லாத ஜம்பங்கள் பல. காரணம் இதுதான்.

"இலர்பலர் ஆகிய
காரணம்? — நோற்பார்
சிலர்;பலர் நோலார்
தவர்." 90

(நோற்பார் சிலர், நோலாதவர் பலர் - உழைப்பை உண்மை என்று நம்புகிறவர்கள் சிலர். அதை நம்பாமல் அலைகிறவர்கள் பலர். அதனால் நிம்மதி சிலரிடமே இருக்கிறது. நிம்மதி இன்மைதான் பலரிடம்.)

# ஒழுக்கம் உயர்குலம்

1

அறஉணர்வுகள் மனதில் நிற்கவேண்டும். வாழ்க்கையில் பிரகாசிக்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும் பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று நிறம் வீசவேண்டும்.

வெறும் பிரசங்கத்தில் மட்டும் அறவுணர்வைப் பார்க்க முடியாது. வெறும் கட்டுரையிலும் அப்படியே. ஒருவன் வகிக்கும் பதவியில் மட்டும் அது இருக்கமுடியாது. சொத்துச் சேர்த்து விட்டதிலும் அதைப் பார்க்கமுடியாது.

காரியத்துக்காக நல்லவர்கள் போல பலர் நடிப்பார்கள். நல்லவர்களாகவே நடிப்பார்கள். உபசாரம் செய்வார்கள், புகழ்வார்கள், பின்னால் வருவார்கள், முன்னால் போவார்கள், சுற்றிச் சுற்றியே வருவார்கள்.

எல்லாம் காரியத்துக்குத்தான். நல்லவர்களாக நடந்து கொள்வது உண்மை இல்லை. பெரிய மோசடி பண்ணுவதற்குத் தான்.

ஒருவன் மனதில் இருக்கிற மோசடி நமக்குத் தெரியாது. நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியாது. ஏன், உலகமே அதைச் சரியாகக் கவனிக்கிறதில்லை. மோசடி பண்ணுகிறவனுக்கே அதன் வேகம் முழுவதும் தெரியாது.

ஆனால் அவன் மனசுக்கு அது நன்றாய்த் தெரியும். உணர்ச்சி இல்லாத வெறும் ஜடம் என்று நினைக்கிறோமே உடம்பு - அவனுடைய உடம்பு அதற்கும் நன்றாகத் தெரியும்.

மோசடியின் கோரத்தைப் பார்த்து அவன் கண்கள் கூசும். அதன் கசப்பு நாக்கைத் துன்புறுத்தும், முனகலின் கரகரப்பு செவியைக் குடையும். மோசடியில் உள்ள துர்நாற்றம் மூக்கை நமநம என்று அரிக்கும். தேகம் முழுவதும் பற்றி எரியும்.

எரிச்சலும் கொதிப்பும் சிரிப்பாக வரும். "எப்படி வேஷம் போட்டு எவ்வளவு திறமையாக நடிக்கிறான் இவன்" என்று நினைத்தவுடன் நமக்கும் சிரிப்புத்தானே வரும்.

"வஞ்ச மனத்தான்
படிற்றொழுக்கம்; பூதங்கள்
ஐந்தும் அகத்தே
நகும்." 91

(படிற்றொழுக்கம் - கெட்ட நினைப்பு. பூதங்கள் ஐந்தும் - மெய் வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும். அகத்தே நகும் - மனதோடு சேர்ந்து சிரிக்கும்.)

2

மனைவிக்குத் தெரியாமல் மறைத்துவிடலாம் குற்றத்தை. குழந்தைகளுக்குத் தெரியாமலும் மறைத்துவிடலாம். ஆனால் தன்மனச் சாட்சிக்குத் தெரியாமல் ஒரு குற்றத்தையும் மறைக்க முடியாது. மற்றவர்கள் மனச்சாட்சிக்கும் குற்றம் ஓரம்சமாய்த் தெரியவே செய்யும். மனச்சாட்சி ஒன்றுதானே.

மனச்சாட்சியின் கணக்கை உறுத்துகிற அளவுக்குக் குற்றம் செய்கிறான் ஒருவன் அவன் யோக்கியன் போல நடமாடுகிறான். தடபுடலோடு ஆடம்பரமாகவே நடமாடுகிறான்.

அவனுடைய அந்தஸ்து, பதவி, திமிர், எல்லாம் சேர்ந்து கம்பீரமாக (வான் உயர்தோற்றம் ஆக) வே தெரிகிறது, தெரிந் தாலும், அவன் காரியத்தைப் பார்க்கிறபோது அவனுடைய வேஷம் ஓடிவிடும். அருவருப்பாக இருக்கும் அவன் நிலை.

"வான்உயர் தோற்றம்
எவன்செய்யும்? — தன்நெஞ்சம்
தான்அறி குற்றம்
படின்" 92

(எவன் செய்யும் - என்ன பிரயோசனம். குற்றம்படின் - அவன் யோக்யத்தை (குற்றம்) தெரிந்து விட்டால் - வேஷம் கலைந்து விட்டால், வானுயர் தோற்றத்தால் பிரயோசனம் இல்லை தான்,

3

வில்லில் பூட்டுகிற கணை பார்க்க அழகாக இருக்கிறது. நேராக இருக்கிறது. பளபள என்று இருக்கிறது. கண்ணுக்கு விருந்து தான். ஆனால் அது செய்யும் கொடுமை ஞாபகத்துக்கு வருமானால் பக்கத்தில் நிற்க முடியாது. ரிலால்வரிடம் குழந்தையை விளையாட விடுவோமா?

ஆனால், வீணை இருக்கிறதே, அது கோணல் மாணலாகத் தான் இருக்கிறது. நீளமான தண்டு, வட்டமான குடம், திருகு, முறுக்கு, கம்பி இப்படியாக ஒரே கசாபுசாத்தான்.

அதன் நாதமும், குளுமையும் பிரியத்தை உண்டாக்குகின்றது. வீணையை அப்படியே மடியில் தூக்கி வைத்துக் கொள்ளச் சொல் கிறது. கொஞ்சச் சொல்கிறது. குலாவச் சொல்கிறது.

யோக்கியர்கள் கரடு முரடாக இருந்தாலும் பழகப்பழக ருசியாக இருப்பார்கள். அயோக்கியர்கள் நாகரீகமாகச் சிங்காரித்துக் கொள்வார்கள். அவர்களுடைய நடை உடை பாவனைகளில் நயம் இருக்கும். நளினம் இருக்கும். இருந்தாலும் நினைத்தாலே கசப்புத்தான். குடலையே உருவிவிடும் கசப்பு.

''கணைகொடிது, யாழ்கோடு
செவ்விதாங்(கு) அன்ன;
வினைபடு பாலால்க்
கொள்க''. 93

(யாழ்கோடு - வீணை வளைந்து தான் இருக்கும். ஆனாலும் செவ்விது - இனிமையானது. அம்பு அப்படி அல்ல. நேராகத் தோன்றும். ஆபத்தான காரியம் அது. ஆங்கு அன்ன - அது போலவே தான் மனிதர்களுடன் வைத்துக் கொள்கிற பழக்கம். வினைபடுபாலால் கொளல் - யோக்கியதை இருந்தால் உறவாட வேண்டும். ஆளின் தோற்றம் உறவுக்குப் பிரயோசனப்படாது.)

மணப்பெண்ணுக்கு ஆடையும் அலங்காரமும் தனிதான். சாதாரணப் பெண்ணுக்குத் தனிதான். வீட்டு வேலையில் ஈடு பட்டிருக்கும்போது கட்டி இருக்கிற சேலையையே கோவிலுக்குப் போகும் போதும் கட்டிக்கொண்டு போகமாட்டார்கள்.

இளைஞர்களும் முதியவர்களும் ஒரேமாதிரி உடுத்தவேண்டும் என்றோ, ஆண்களும் பெண்களும் ஒரே மாதிரி கட்டிக் கொள்ள வேண்டும் என்றோ எதிர்பார்க்கக்கூடாது.

ஆடை, அணி இவை எல்லாம் குறிப்பிட்ட அடையாளப் பொருளாய் நிற்கின்றன.

ஆனால் முட்டாளுக்கு ஒரு உடை, புத்திசாலிக்கு ஒரு உடை, அறிவாளிக்கு வேறு உடை, ஞானிக்கு வேறு உடை என்று இல்லை. யார்யாருக்கு எதுஎது பொருத்தமோ அதைக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

சமய சம்பந்தமான அடையாளம் சில உண்டு. விபூதி, திருமண், ருத்திராட்சம் இப்படி உண்டு. வேண்டும் அளவுக்குப் பொருத்த மாக அவற்றை உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

இவைகளை உபயோகித்தால்தான் கடவுளைப்பற்றி யோசிக்க முடியும் என்பது இல்லை.

சிவபெருமான் போலச் சடைவளர்த்தால்தான் ஞானம் வரும் என்றால், அவர் போல பாம்பை எடுத்து மாலை போட்டுக் கொள்ள வேண்டும். தலைப்பாகை கட்டிக் கொள்ளவேண்டும்.

நஞ்சையும் எடுத்து ருசிபார்க்க வேண்டும். சின்னம் என்பது விருப்பமான ஒரு அலங்காரம். அலட்சியம் அல்ல. மூச்சை அதற்குக் கொடுக்க வேண்டாம்.

''மழித்தலும் நீட்டலும்
வேண்டா; உலகம்
பழித்த(து) ஒழித்து
விடின்''. 94

(உலகம் பழித்தது - இழிசெயல்களை. ஒழித்துவிடின் - விட்டுத் தொலைத்தால் போதும். விட்டுத்தொலைத்தவன், மொட்டை யைப் பற்றியோ சடையைப் பற்றியோ கவலைப்படமாட்டான்.)

# தெரிய வேண்டியது ஒன்று

## 1

வாழ்ந்து கொண்டு இருக்கிறோமே, நாம் வாழும் வாழ்க்கை எது? என்னது என்பது தெரிய வேண்டும்.

நம்மிடம் என்ன இருக்கிறது. என்ன இல்லை. வேண்டியது எது, வேண்டாதது எது என்பது தெரியவேண்டும்.

நம்மிடம் என்னென்ன நோய்கள் இருக்கின்றன. அவற்றை எப்படிக் களைவது என்று தெரியவேண்டும்.

இப்படித் தெரிவதற்குப் பல பேர் உறவு வேண்டும். துணையே வேண்டும். தனித்திருந்து பார்க்க முடியாது. தன்னையே வைத்துப் பார்த்துவிட முடியாது.

மேலே குறிப்பிட்ட உண்மை ஒன்று தெரிந்தால்ப் போதும். நாம் யார்? எங்கிருந்து வந்தோம், ஏன் வந்தோம், எங்கு போகிறோம். ஏன் போகிறோம் என்பதெல்லாம் விளங்கிவிடும்.

விளங்கிக் கொண்டவர்களுக்கு அளவறிந்தார் என்று பெயர்.

உண்மையைத் தெரிந்தவர்கள் உண்மையாய் இருப்பார்கள். உண்மை இன்னதென்று தெரியாதவர்கள், பித்தலாட்டக்காரர் களாகவே இருப்பர்கள். பித்தலாட்டத்தை நோக்கியே அவர்கள் மனம் சதா போய்க் கொண்டிருக்கும்.

"அளவின்கண் நின்றொழுகல்
ஆற்றார்; — களவின்கண்
கன்றிய காத
லவர்"

களவின்கண்-திருட்டுத்தனத்திலேயே, கன்றிய - ஊறிய. காதலவர்- வெறிபிடித்தவர்கள். அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - உண்மையை (அளவை) தெரியாமல், உண்மையில் நிற்காமல் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு போகிறவர்கள்.

2

அளவு இன்னதென்று தெரியாத அறியாமை ஒரு இருட்டு. வாழ்க்கையை வெறும் பொய்யாக்கிவிடும் அந்த இருட்டு.

ஒழுக்கம், பண்பாடு, கலை, பக்தி ஒன்றும் வேண்டாம் அந்த இருட்டுக்கு. பொய்யும் பித்தலாட்டமும் சாமர்த்தியமுமே வேண்டும்.

இந்த இருட்டுக்குத்தான் மாயை என்று பெயர். மாயைக்குப் பலம் அதிகம். தந்திரமும் அதிகம். படைபட்டாளங்களாகிய துணையும் ஏராளம்.

தந்திரமாக வந்து வளைக்கும். ஆவேசமாகப் பாயும். ஆனால் உண்மை ஒளிமுன் அது நிற்காது.

''களவென்னும் காரறி
வாண்மை; — அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண்
இல்''. 96

(கார் அறிவு ஆண்மை - மாயையின் அட்டகாசம். தந்திரம் ஒரே திருட்டுமயமாக (களவென்னும் நிலையில்) இருக்கிறது மாயை.)

3

உண்மையைக் கண்டவர்கள் மனம் சுத்தமாக இருக்கும். பளிங்குபோலச் சுத்தமாக இருக்கும். அன்பு, பொறுமை, நீதி, கருணை எல்லாம் செயல்பட்ட வண்ணமாய் இருக்கும். எல்லாம் சேர்ந்து நிறைந்திருக்கும் அவர்கள் மனம்.

உண்மையான ஞானிகளைப் பார்த்துப் பரவசப்படுகிறார் குறளாசிரியர்.

பரவச உணர்ச்சிக்கு எப்படி அழுத்தம் கொடுக்கிறது தமிழ் என்று பார்ப்போம். (களவறிந்தார்) அயோக்கியர்களின் மனம் வஞ்சகமாகவே இருக்கும். பொய், பித்தலாட்டம், சூது இவையே அயோக்கியர்களின் மனதில் நிறைந்திருக்கும்.

எப்படி அடைசேர்ந்து நிறைந்திருக்கும் என்பதை விளக்குவதற்கு உதவியாக வருகிறார்கள்.

எப்படி என்று பார்ப்போம்.

"அளவறிந்தார் நெஞ்சத்(து)
அறம்போல நிற்கும்;
களவறிந்தார் நெஞ்சில்க்
கரவு". 97

(அறம் - அருள்மயமான நீதி. கரவு - வஞ்சகம்)

ஞானிகளின் கருணையே கருணை. அயோக்கியர்களின் மனசைத் திறந்து பார்ப்பதற்குக்கூட உதவுகிறார்களே என்று அதிசயப்படுகிறது தமிழ்.

அற்புதரசம் பாடலில் பொங்குகிறது.

# பொய்யா விளக்கு

1

இந்தியா பெரியநாடு. வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே கன்யாகுமரி வரை, கிழக்கே சீன மண்ணின் எல்லையிலிருந்து மேற்கே அரபுக்கடல் வரைக்கும் விரிந்து பரந்துள்ள நாடு.

பலபல இனங்களும், மதங்களும், தட்ப வெப்பங்களும், வாழ்க்கை முறைகளும் சேர்ந்து கலந்து கிடக்கிற மாபெரும் நாடு இந்தியா.

பல அரசர்கள் பல இடங்களிலிருந்து அரசோச்சிக் கொண் டிருந்த நாடு இந்தியா.

இவ்வளவு பெரிய நாடு, எங்கோ, எட்டாத தொலைவிலிருந்து வந்த ஆங்கிலேயர்களுக்கு, அடிமை ஆகி விட்டது. ஐந்து வருடம் பத்து வருடம் என்றில்லை. நூற்றைம்பது வருடம் அடிமையில் சிக்கித் தவித்தது. ஏழ்மை, அறியாமை, உணர்ச்சியின்மை, சோம்பல், வழி தெரியாமை முதலியவற்றால் பீடிக்கப்பட்டு மக்கள் ஒவ்வொருவரும், தாங்கள் மனிதர்கள் என்பதையே மறந்து விட்டார்கள்.

இந்த இருண்ட காலத்தில் தான் காந்தி மகான் அவதரித்தார். இங்கிலாந்து சென்று படித்தார். தென் ஆப்பிரிக்காவிற்கு வழக் கறிஞராகச் சென்றார். ஒரு இனத்தாரால் மற்ற இனத்தார் படு கின்ற துன்பங்களை நேரில் பார்த்தார். அபலைகளின் ஒவ்வொரு துயரையும் ஒத்து அனுபவித்தார். இன ஒதுக்கலையும் ஆதிக்கத் தையும் எதிர்த்துப் போர் தொடுத்தார்.

பிறகு இந்தியாவிற்கு வந்தார். கோடானகோடி மக்களின் வறுமையையும், அறியாமையையும், சோம்பலையும், நேருக்கு நேராகப் பார்த்தார். ஒவ்வொரு பிரச்சனையையும் ஈடுபட்டு அனுபவித்து உணர்ந்தார்.

மக்களின் பிரச்சனைகளை அறிந்து தெளிவதற்கு அந்த மக்களில் ஒருவராகக் கலந்து மருவினார். அப்படிக் கலந்து மருவுவதற்கு எண்ணற்ற தியாகங்களைச் செய்தார். உணவு, உடை, பழக்கவழக்கம் அத்தனையிலும் தியாகம் செய்தார்.

அன்போடும், ஆதரவோடும் மக்களோடு உறவாட, உறவாட, காந்தி மகானுக்கு உண்மை விளங்கிவிட்டது. அடிமையிலிருந்து விடுதலை பெறாதவரை மக்கள் மக்களாக வாழ முடியாது என்கிற உண்மை விளங்கி விட்டது. ஆதிக்கத்தை அகற்றுவதும், அடிமை உணர்ச்சியை அகற்றுவதும்தான் செய்யவேண்டிய பணி என்பது விளங்கி விட்டது. இப்பணியை நிறைவேற்றி முடிக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பதும் விளங்கி விட்டது.

மனித குலத்தை அழுத்திக் கொண்டிருந்த அச்சத்தை விலக்கவும், மனித குலத்திற்குத் தன்னம்பிக்கை ஏற்படவும் அவர் தொடர்ந்து பாடுபட்டார். ஆதிக்கம் செய்பவர்களே தங்களுடைய காரியம் எவ்வளவு கொடுமையானது என்று உணரும்படி பணியை தொடர்ந்து நடத்தி வந்தார்.

நான் என்னும் ஆணவம் கழன்று விலகிவிடவேண்டும். அப்பொழுதுதான் உண்மை புலனாகும். ஆனந்தம் உண்டாகும் என்பது நியதி. நான் என்னும் உணர்ச்சி ஒதுங்க வேண்டும். என்றால், அபலைகள் ஒவ்வொருவருடைய துயரையும் செவி கொடுத்துக் கேட்க வேண்டும். மனம் கொடுத்து உணர வேண்டும். அன்பும் ஆர்வமும் பெருக்கெடுக்க வேண்டும். அவர்களின் துயர் விலக ஒழுங்கோடும் முறையோடும் தொடர்ந்து செயலாற்ற வேண்டும். அதன் காரணமாக எதை எதை இழக்க வேண்டி நேரிட்டாலும், இழந்து மனம் உவந்து செயலாற்ற வேண்டும்.

மற்றவர்களோடு தன்னை ஈடுபடுத்துகிற பொழுது ஆணவம் சுழலும்.

காந்தி மகான் தன்னை மற்றவர்களின் கையில் ஒப்படைத்து விட்டார். நான் என்னும் மயக்க உணர்ச்சி அப்படியே அவரை விட்டுக் கழன்றோடி விட்டது.

இந்த உண்மையை விடாமல் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார். (காந்தி மகான் வாழ்ந்தார் என்றால் சத்தியத்தை எல்லாத் துறைகளிலும் வாழ வைத்து நடமாடச் செய்தார் என்பதுதான் பொருள்.)

தமது வாழ்க்கையின் மூலம் உண்மையை நிலைநிறுத்தி வாழ வைக்கிற உத்தமர்களைக் குறளாசிரியர் பார்த்திருக்கிறார்.

இந்த உத்தமர்கள் தங்களிடம் உள்ள எல்லை இல்லாத அன்பையும் அழகுணர்ச்சியையும் வேறு செயல்களுக்காக விரையஞ் செய்துவிடக் கூடாதே? சத்திரம் கட்டுகிறேன், பள்ளிக்கூடம் வைக்கிறேன், கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்கிறேன் என்று தங்களது அன்பையும், அறத்தையும் சிதறடித்து விடக்கூடாதே? அப்படி அவர்கள் அன்பையும் அறத்தையும் அங்கும் இங்குமாகப் பொதிந்து வைத்து விட்டால், மனிதகுலம் நிமிர்ந்து நிற்க முடியாதே? என்று குறளாசிரியர் ஆத்திரப்பட்டிருக்கிறார்.

குறளாசிரியருடைய ஆத்திரம் எப்படி அன்பாய்ப் பூத்து மணங் கமழ்கிறது என்று பாருங்கள்.

''பொய்யாமை பொய்யாமை
ஆற்றின், — அறம்பிற
செய்யாமை செய்யாமை
நன்று''. 98

(பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - உண்மை ஒன்றுக்காகவே உண்மையோடு பாடுபட்டால் அப்படிப் பாடுபடுகிறவன், பிறஅறம் செய்யாமை செய்யாமை - வேறு தருமம் செய்ய வேண்டியது இல்லை )

குறிப்பு:- சொற்களை அழுத்தி அழுத்தி ஒளிவீச வைக்கிறது தமிழ். உணர்ச்சியோடு உணர்ச்சியை வைத்து, அழுத்துவதின் மூலம் உதிக்கிற ஒளிதான் உண்மை.

உண்மையைத் தெரிந்து கொள்வது லகுவான காரியம் அல்ல. கடினந்தான். ஆனால் உண்மையைத் தெரிந்து கொண்டு விட்டால் மட்டும் புண்ணியம் இல்லை. உண்மை எல்லோருக்கும் விளங்கப் பாடுபட வேண்டும். அதற்காக எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யலாம். ஏன்? தன்னையே தியாகம் செய்துவிடலாம்.

அப்படிக் கொடுத்து வாங்குகிற பொருள்தான் உண்மை.

2

ஒவ்வொரு மனிதனிடமும் மனம் என்பது இருக்கவே செய்கிறது. எது நல்லது, எது கெட்டது, எது உண்மை, எது பொய் என்பதை ஒவ்வொரு மனமும் இயல்பாகவே தெரிந்து கொள்கிறது. பெரும்பாலானவர்களுடைய மனம் அப்படித் தெரிந்து கொள்வதிலேயே திருப்திப்பட்டு விடுகிறது. அதன் பிறகு தூங்கி விடுகிறது.

சிலருடைய மனம் அப்படி உடனுக்குடன் உறங்கி விடுவதில்லை. உண்மைக்கு ஆதரவாகவும் பொய்க்கு எதிராகவும் அவர்களைத் தூண்டி விடுகிறது. அப்பொழுது மனம் சாட்சியாக விளங்குகிறது.

இனி, கலை, ஒழுக்கம், பக்தி, முதலிய சாதனங்களால் பண்பட்டவர்களுடைய இதயமோ, மனச்சாட்சியை மேலும் மேலும் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறது. பொய்யை எதிர்க்கவும், உண்மைக்குத் துணையாக நிற்கவும் அவர்களை ஏற்பாடு செய்து விடுகிறது. அப்பொழுதுதான், 'வழிகாட்டும் தெய்வ ஒளி தன்னுள் இருப்பதை மனிதன் உணர்கிறான்.

இனி, அன்பும் இரக்கமும் உடையவர்களை, உண்மையோடு சேர்ந்து நின்று பொய்யை எதிர்த்துப் போராட வைத்து விடுகிறது அந்த ஒளி.

பொய்யை எதிர்த்துப் போரிடுவதிலும், உண்மையினிடத்துத் தன்னை ஒப்படைப்பதிலும் உத்தமர்கள் ஆறுதல் பெறுகிறார்கள்'

தண்ணீரால் உடம்பு சுத்தம் அடைவதைப்போல, உண்மையால் சுத்தம் அடைந்து விடுகிறது மனம். எப்படி என்று பார்ப்போம். மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருப்பார். ஆனால், என்னைத் தவிர வேறு யாரும் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்று வற்புறுத்துவார்.

காரணம் என்ன?

''என்னுடைய வேண்டுகோளை ஏற்று உதவி செய்ய மனித சக்தியால் முடியவில்லை. மனித சக்தியால் முடியாத ஒன்றைத் தெய்வத்திடம் வைக்கிறேன். என்னுடைய வேண்டுகோளில் ஞாயம் இருந்தால், தெய்வம் மனம் இரங்கி அவர்களுக்கு வழி காட்டி உதவட்டும். ஞாயம் இல்லாவிட்டாலோ, என்னுடைய குறைகளையும் தவறுகளையும் நான் உணர்ந்து கொள்ள எனக்கு

வழிகாட்டட்டும். இதற்காகத்தான் நான் உண்ணாவிரதம் இருக்கிறேன். மற்றவர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக நான் உண்ணா விரதம் இருக்கவில்லை.''

உண்மையைக் கண்ணால் பார்த்து அதனோடு பழகி உறவாடி நம்பிக்கை வைத்தால் அல்லாது, இப்படித் தன்னை உண்மையிடம் ஒப்படைக்க முடியாது.

காந்தி மகான் அப்படி உறவாடி ஒப்படைத்தவர். அதனால் அவருடைய இதயம் பளிங்கு போல ஒளி வீசுகிறது.

''புறந்தூய்மை நீரான்
அமையும்; — அகந்தூய்மை
வாய்மையால் காணப்
படும்''. 99

(புறம் தூய்மை - உடல் தூய்மை. அகம் தூய்மை - மன சுத்தம். வாய்மை - உண்மை.)

குறிப்பு:- 'அமையும்' என்றும் 'காணப்படும்' என்றும் நெளிந்து வளைந்து உல்லாச விளையாட்டு விளையாடுகின்றது தமிழ்.

### 3

சூரியன் என்கிற மாபெரும் விளக்கு உலகம் முழுவதையும் வெட்ட வெளிச்சத்தில் வைத்து இருக்கிறது. உலகை ஒளிமய மாக்கச் சந்திரனும் இருக்கவே செய்கிறது. சந்திரனை நம்பாத உலகம், வெளிச்சத்திற்காக எத்தனை எத்தனையோ புதிய புதிய விளக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறது.

அணுவிற்குள் ஒண்டிக் கிடக்கும் பொடிப் பொடித் தூசிகளைக் கூட, இனம் கண்டு கொள்ளும் அளவிற்கு, கோடி சூரியப் பிரகாச மான அறிவு விளக்குகளையும் உலகம் வைத்திருக்கிறது. எத்தனை விளக்குகள் இருந்து என்ன பலன்? எவ்வளவு வெளிச்சம் இருந்து என்ன பலன்?

மனசில் இருட்டு உட்கார்ந்து இருக்கும்வரை சூரியனையே கை விளக்காக வைத்துக் கொண்டாலும் இருட்டு இருட்டாகவே இருக்கும்.

மனசிலுள்ள இருட்டுத் தொலைய வேண்டும், உண்மை ஒளி வீச வேண்டும். அதனால் உத்தமர்கள் எப்பொழுதும் மன

விளக்கைத் தூண்டிக் கொண்டு இருக்கிறார்கள். அன்பாலும் இரக்கத்தாலும் தூண்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

"எல்லா விளக்கும்
விளக்கல்ல; — சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே
விளக்கு". 100

(பொய்யா விளக்கு - உண்மை.)

4

என்னை உணர்கிறேன் என்னை உணர்கிறேன் என்று வெறு மனே ஆத்ம விசாரணை செய்து கொண்டிருந்தால், சோம்பல் ஒன்றுதான் மிஞ்சும். சோம்பலுக்குள்ளே ஆணவமானது விம்மி வளரும். கடவுளைக் காண முடியாது. ஆனந்தத்தை அடையவும் முடியாது.

துன்பத்திலிருந்தும் பயத்திலிருந்தும் விடுதலை பெற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. எப்பொழுதும் உண்மை ஒன்றையே நாடி நிற்கிற நிலைதான் அந்த வழி.

'உண்மை ஒன்றுதான் எனக்கு வழிகாட்டி' அதன் கையில் இருக்கிறேன் நான், அதன் கட்டளைப்படி நடப்பதுதான் எனது கடமை.'

உண்மையின் கையில் என்னை ஒப்படைத்த பிறகுதான், நான் என்பது எனக்கு விளங்குகிறது. நான் இருக்கிறேன், நன்றாக இருக்கிறேன், என்னுடைய கடமைகளை நன்றாகவே செய்கிறேன். கடவுளும் என்கூடவே இருக்கிறார். கடவுளை விட்டு நானோ, என்னை விட்டுக் கடவுளோ விலகி விடாதபடி, காதல் மயமாகப் பிணைத்து வைத்திருக்கிறது உண்மை.

இதுதான் மகான்களுடைய அனுபவம்.

"யாம்மெய்யாக் கண்டவற்றுள்
இல்லை; — எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல
பிற". 101

(எனைத்துஒன்றும் - வேறுஒன்றும். வாய்மையின் நல்ல - உண்மை போல நல்லது ஒன்று இல்லை)

# கோபம் வேண்டாம்

1

அன்பு போல கோபமும் ஒரு குணந்தான். அது இரண்டு நிலைகளில் வரும். அன்பிலிருந்து வருவது ஒருவகை. அன்பின்மை காரணமாகவரும் இன்னொரு வகை.

தவறு கண்டால், தொந்தரவு ஏற்பட்டால், இடையூறு செய்தால் கோபம் வரவே செய்யும். இதற்கெல்லாம் ஒருவனுக்குக் கோபமே வரவில்லை என்றால் அவன் மனிதனே இல்லை.

ஆனால் வருகிற கோபத்தை நல்லதுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். எதையும் சுட்டெரித்துவிடும் நெருப்பு. அது இல்லாமல் ஒன்றும் நடக்காது. பற்றவைத்த நெருப்பை சமையல் முடிந்த உடன் அணைத்துவிட வேண்டும். விளக்கில் ஏற்றிச் சுடர் விட்டுப் பிரகாசிக்க வைக்கவேண்டும்.

தலையில் வாரிப்போட்டுக் கொள்ளக்கூடாது நெருப்பை.

திருத்துவதற்கு உபயோகப்படுத்தலாம் கோபத்தை. பிரயோசனப்பட்டவுடன் கோபம் அணைந்துவிடலாம். பிரயோசனப்படாது என்று தெரிந்தால் அணைத்துவிட வேண்டும்.

மண்டி எரிந்து கொண்டே இருக்கக்கூடாது கோபம். மனது எரிந்து புகைந்து கொண்டே இருந்தால் கெட்டுவிடும். தேகமும் கெட்டுவிடும். வாழ்க்கை, லட்சியம் எல்லாம் ஒழிந்துவிடும். சமுதாயமே கெட்டுவிடும்.

"நகையும் உவகையும்
கொல்லும் சினத்தில்;
பகையும் உளவோ
பிற". 102

(சினத்தில் பகையும் உளவோபிற - கோபத்தைப் போல எதிரி யார் இருக்கிறார்கள். ஒருவரும் இல்லைதான்).

2

முரடன்மேல் கோபம் வரக்கூடாது. வந்தால் தொல்லை தான். அது பொறுமையாய் மாறிவிடவேண்டும். இனி, இவன் நம்மை ஒன்றும் செய்ய முடியாது என்னும் இகழ்ச்சியில் ஒருவனை வெருட்டுவதும் துன்புறுத்துவதும் ஆபத்தேதான். எளியவர்மேல் வந்த கோபம் இரக்கமாக மாறிவிட வேண்டும்.

"செல்லா இடத்துச்
சினம்தீது:- செல்லிடத்து
இல்அதனில் தீய
பிற". 103

(செல்லாஇடம் - கோபம் செல்ல முடியாத வலுத்த இடம். செல்லிடம் - கோபம் தாராளமாகச் செல்லும் எளிய இடம்.

3

நம்மேல் நமக்கு ஆசை இருக்கவேண்டும். அப்படியானால் கோபம் நம் ரத்தத்தை உறிஞ்சிவிடாமல்ப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"தன்னைத்தான் காக்கின்
சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும்
சினம்" 104

மனைவிகூட வெறுத்து ஒதுங்கி விடுவாள், மக்கள் எதிரியாகி விடுவார்கள். நண்பர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். பிறகு செத்த மனிதன்தானே. சினம் ஆறாது பொங்குவது அவ்வளவு கேடு.

4

அணையாமல்ப் பொங்கிப்பொங்கி எழுகிற கோபம் சேர்ந் தாரை - அதாவது மனைவி, மக்கள், தாய், தந்தையர், சுற்றம் என்பவர்களின் உறவைப் பொசுக்கி விடும். பிறகு நட்பு (சேர்ந் தார்) என்னும் துணை (படகை)யையே நொறுக்கிவிடும்.

அநாதையாய்த் தத்தளிப்பான் ஆங்காரம் பிடித்தவன்.

''சினம்என்னும் சேர்ந்தாரைக்
கொல்லி, — இனம்என்னும்
ஏமப் புணையைச்
சுடும்''. 105

(கொல்லி - ரத்தவெறி பிடித்த காட்டேரி. இனம் - நட்பு. ஏமப் புணை - வாழ்க்கைக்குத் துணைபுரியும் படகு.)

5

கோபத்தையே சிலர் ஆடம்பரமாக வைத்து நடத்துவார்கள். அவர்கள் முடிவு பரிதாபமாகவே இருக்கும். பாறையில் ஓங்கி ஒரு குத்துவிட்டால், அப்படி விட்டவன் கைஎன்ன ஆகும்?

''சினத்தைப் பொருள்என்று
கொண்டவன் கேடு;
நிலத்தறைந்தான் கைபிழையா(து)
அற்று''. 106

(நிலம் - பாறை)

6

மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர் எல்லோரும் நம்முடன் உறவாடுகிறவர்கள். ஏதோ தவறுதலாக நடந்து கொள்கிறார்கள். கோபம் வருகிறது. பொங்கி எழுகிறது. இயல்புதான். அதேபோல், தணிந்துவிட வேண்டும். மேலும்மேலும் உசுப்பக் கூடாது (வெகுளாமை) கோபத்தை.

''இணர்எரி தோய்வன்ன
இன்னா செயினும்,
புணரின் வெகுளாமை
நன்று''. 107

(இணர்எரி தோய்வன்ன இன்னா - நெருப்பில் தள்ளிவிட்டது போன்ற கொடுமை. சூட்டுக் கோல் போட்டது போன்ற துன்பம்.)

7

ஆத்திரம் இல்லாமல் அமைதியாக இருந்தால் போதும். மனதுக்கு அது எவ்வளவோ பலம். யோசிக்கயோசிக்க அந்த மனம் ஆற்றல்மயமாய் ஒளிரும்.

"உள்ளிய(து) உள்ளத்தான்
உடன்எய்தும்; உள்ளத்தான்
உள்ளான் வெகுளி
எனல்". 108

(உள்ளியது எல்லாம் - நினைத்தது. நினைத்தபடி. உடன்எய்தும் - உடனுக்குடன் பெறுவான். வெகுளி - கோபம். உள்ளான் எனில் - நினைக்காதவன் - கோபத்திற்கு இடம்தராதவன்.)

8

வரம்பு மீறிய கோபக்காரன் பிணந்தான். பார்த்தாலே அருவருப்பு வரும். பயமாக இருக்கும். மறந்து மன்னித்து விடுகிறவன் ஞானிகளுக்கே வழிகாட்டி.

"இறந்தார்; இறந்தார்
அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார்
துணை". 109

இறந்தார் - வரம்பு மீறிய கோபக்காரர். இறந்தார் அனையர் - உயிரில்லாத பிணம் போன்றவர். சினத்தைத் துறந்தார் - கோபத்தை விட்டொழித்தவர். துறந்தார்துணை - ஞானிகளுக்கு வழிகாட்டி)

# ஆனந்தம் நம் கையில்

1

உண்மையைச் சொல்வது எளிது. எளிது என்றால் உண்மையைச் சொல்வது ஒன்றுதான்.

பொய் சொல்வதற்கு எவ்வளவோ கஷ்டப்படவேண்டி இருக்கிறது. இதயத்தையே குத்திக் கிழித்து வெளியே உருவிக் கொண்டு வருவது போல்க் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது.

சொல்கிறவன் கஷ்டம் இருக்கட்டும். பொய்யினால் உலகம் எவ்வளவு கஷ்டப்படுகிறது எத்தனைபேரை அணுஅணுவாகக் கொன்று தீர்க்கிறது பொய்.

ஒருஉயிரைக் கொலை செய்வது கொடுமைதான். கொலையில் எல்லாம் பெரிய கொலை பொய்தான்.

அன்பும் உண்மையும் இருந்தால் ஆனந்தந்தான்.

"ஒன்றாக நல்லது
கொல்லாமை: - மற்றதன்
பின்சாரப் பொய்யாமை
நன்று" 110

(ஒன்றாக - நிச்சயமாக. அதன்பின் சார - அதற்கு ஆதாரமாக. அன்புக்கு ஆதாரம் உண்மை.)

2

கொலை செய்கிறவன் பாதகன். கொடியபாதகன். அவன் உடம்பையா வெட்டுகிறான். உடம்புக்குள்ளிருக்கும் உயிரையே வெட்டிவிடுகிறான். ஆங்காரமும் வெறியும் கொண்ட கொலை காரனை மனிதன் என்று சொல்லமுடியுமா? பேய் என்றுதான்

சொல்ல வேண்டும். ரத்தப்பசி எடுத்த மூர்க்கமான பிசாசு (உடம்பின் செல்லா தீவாழ்க்கையர்) என்று தான் சொல்ல வேண்டும்.

"உயிர்உடம்பின் நீக்கியார்
என்ப; செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை
யவர்". 111

(உயிர் - உயிரை உடம்பின் - தேகத்திலிருந்து. என்ப - என்று சொல்வார்கள்)

குறிப்பு : பேய்கள் செயல் படுவது உடம்போடு நின்று அல்ல. வெறியோடு நின்றே செயல்படுகின்றன. கொலைகாரனும் வெறியோடு நின்றே செயல்படுகிறான். அதனால் ஒரு உயிர் உடம்போடு சேர்ந்து நிற்பது அவனுக்கு உகந்ததாக இல்லை.

# நல்லதே செய்வார்

உடம்பில் நோய் வருகிறவரை, அதைப்பற்றிய நினைப்பு வருவதில்லை. நோய் வந்த உடன் உடம்பைப் பற்றித் தெரிகிறது, பதற்றம் உண்டாகிறது. உடம்பின் அருமை தெரிகிறது. அதை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் தெரிகிறது. நோய்க்கு இடம் கொடுத்த நம்செயல்கள் ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்கு வருகின்றன.

உடம்பின் காரியம் அப்படி இருக்கட்டும். மனம் என்பது தெய்வீகமானது. அது நம்மிடம் இருக்கிறது. அதுவும் நோய்வாய்ப்பட்டு உலையும்படி ஏதேதோ செய்து விடுகிறோம். குழப்பம், பயம், துன்பம், மயக்கம் இப்படி எத்தனையோ நோய்கள் வந்து மனதைக் கசக்கிப் பிழிகின்றன. அதற்கு இடம் கொடுக்கிறோம் நாம்.

பிறரிடம் அன்போடு இருந்தால்ப் போதும். மனம் ஆனந்தமாக இருக்கும்.

''நோய்எல்லாம் நோய்செய்தார்
மேலவாம்; — நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு
பவர்'' 112

நோய்-துன்பம். பிறரைத் துன்புறுத்தினால் துன்பந்தான். தினை விதைத்தால் தினைதானே முளைக்கும். அருமையான பாடல். விஷயம், உணர்ச்சி, தமிழ் மூன்றும் சேர்ந்து கவியாய் உருவெடுத்திருக்கிறது.

# நிலையாமை

1

செல்வம் இருக்கிறதே, அது ஒரு அதிசயம். காரியம் ஒவ்வொன்றையும் நடத்திவிடுகிறது செல்வம். செல்வம் நின்று கட்டளையிட்டால் ஒவ்வொன்றும் சொல்லி வைத்ததுபோல முடிந்துவிடுகின்றன. பெரிய அதிசயந்தான் செல்வம்.

அந்த செல்வமானது இனங்கண்டு தேடிப்பிடித்து ஒருவனுடன் உறவாடுவது இருக்கிறதே! அது அதைவிடப் பெரிய அதிசயம்.

அதிசயத்தில் எல்லாம் பெரிய அதிசயம்! உயிருக்கு உயிராகச் சேர்ந்து, ஒன்றாய் இருந்த செல்வம் கணவனிடம் மனைவி ஒன்றி இருந்தது போல ஒன்றி இருந்த செல்வம் ஓடிப்போய் விடுகிறதே! அதுதான்.

உலகம் முழுவதும் இந்த அதிசயந்தான். ஒரு இடத்தில் அப்படி, ஒரு இடத்தில் இப்படி என்றில்லை.

குறளாசிரியர் தமிழகம் முழுவதும் எத்தனையோ இடங்களில் இந்த அதிசயத்தைப் பார்த்திருக்கிறார். அனுபவித்திருக்கிறார். அனுபவம் ரசமாக மாறி ஊறி ஊறி கவிதையாய் விளைகிறது.

நாடகக் கொட்டகைக்கு (கூத்தாட்டு அவைக்கு) கூட்டம் வந்து கூடுகிறது. நாடகம் முடிந்த உடன் கூட்டம் முழுவதும் கலைந்து போய்விடுகிறது

கூடுவதும் கலைவதும் மாயமந்திரமாக இருக்கிறது. இதையும் பார்த்து அனுபவித்திருக்கிறார் குறளாசிரியர்.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

"கூத்தாட்(டு) அவைக்குழாத்(து)
அற்றே — பெருஞ்செல்வம்;
போக்கும் அதுஇழிந்(து)
அற்று." 113

(கூத்தாட்டு அவைக்குழாம் - நாடகக் கொட்டகையில் கூடும் கூட்டம். செல்வம் போக்கும்-செல்வம் போவதும். அது இழிந்து அற்று - நாடகக் கூட்டம் கலைந்து போனது மாதிரிதான்.)

2

ஆடம்பரமாகச் செல்வம்வந்து கொலு இருந்ததும், ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போனதும் அதிசயந்தான்.

இனி, உடம்பை எடுத்துக் கொள்வோம், ஆயிரம், பதினாயிரம் என்கிற கணக்கில் தத்துவங்கள் ஒன்றாய் நின்று செயல்படும் ஞானக்கோயிலாக இருக்கிறது உடம்பு.

தளதள என்று உடம்பு வளருகிற ஒய்யாரத்தைப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாய் இருக்கிறது.

ஆனால் மளமளவென்று மெலிந்து விடுகிறது. சுருண்டுவிடுகிறது. பேச்சும் இல்லாமல் மூச்சும் இல்லாமல் விழுந்துவிடுகிறது. பிறகு மண்ணோடு மண்ணாய்ப் போய்விடுகிறது.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவு நிச்சயம் இல்லை. தற்காலிகம் ஆனதுதான்.

வாடகைவீட்டைக் காலிசெய்துவிட்டுக் குடி இருந்தவன் போனதுபோல் உடம்பைவிட்டு எங்கோ ஓடிப்போய் விடுகிறது உயிர்.

"குடம்பை தனித்தொழியப்
புள்பறந்(து) அற்றே;
உடம்போ(டு) உயிரிடை
நட்பு." 114

(குடம்பை தனித்து ஒழிய - கூட்டை விட்டுவிட்டு. புள்பறந்து அற்று - பறவை ஓடிப்போவது போல், உயிர் ஓடிப்போய்விடுகிறது, உடம்பை விட்டுவிட்டு)

கடவுளுடைய விளையாட்டுத்தான் செல்வமாய் வந்து ஆடியது. விளையாட்டு நின்ற உடன் ஆட்டமும் நின்றுவிடுகிறது.

உடம்பிலும் கடவுளுடைய அருள் விளையாட்டுத்தான். ஆட்டத்தை அவர் நிறுத்திக் கொண்டவுடன் உடம்பின் கதையும் முடிந்துவிடுகிறது.

3

எங்கும் நிறைந்த உயிரின் நிலையை இனிப் பார்போம்.

ஒரு இடத்திலாவது நிரந்தரமாக அது தங்கி இருக்க முடிய வில்லை. இடத்தை மாற்றிக் கொண்டே இருக்கிறது. குடிசையைக் கிளப்பிக்கொண்டே இருக்கிறது. யாரோ பின்னால் நின்று துரத்த, ஒவ்வொரு இடத்திலும் ஒளிந்து ஒளிந்து ஓடுவதுபோல் இருக்கிறது. உயிரின் காரியம்.

ஆதரவற்று அலையும் உயிர்மேல் கவிஞருக்கு இரக்கம் உண்டா கிறது.

"குடிஇருக்க ஒரு சிறு இடம் கிடைக்கவில்லையே உயிர்க்கு" என்று மனம் கசிகிறார்.

''புக்கில் அமைந்தின்று
கொல்லோ! — உடம்பினுள்
துச்சில் அமைந்த
உயிர்க்கு.''

(புகுஇல் அமைந்தின்று கொல் - சேர்ந்திருக்க ஒரு இடம் கிடைக்க வில்லையே! உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - உடம்பு தோறும் ஒளிந்து ஒளிந்து ஒண்டுகிற உயிர்க்கு.)

# விடுதலை இன்பம்

1

உயிரை ஊட்டி வளர்க்கிறது பால். நெய்யும் அப்படித்தான். பண்டங்களுக்கெல்லாம் ருசி கொடுத்து தேகத்தோடு தேகமாய்ச் சேர்ந்து தேகத்தை வளர்க்கிறது. மாம்பழம் உண்ண உண்ணத் தெவிட்டாத அமிர்தமாய் இருக்கிறது.

வயது அறுபது ஆகிவிட்டால் சத்தையும், கொழுப்பையும், ருசியையும் யோசிக்கக்கூடாது. உடலைக் காயப்போடுவதுதான் நல்லது.

சர்க்கரைப்பொங்கல் புளியோதரை இவற்றை விட்டுவிட வேண்டியதுதான்.

உளுந்தவடையை விடுவதில் ஒரு லாபம், ஆமைவடையில் இன்னொரு லாபம். பூசணிக்காயை விடுவதில் ஒரு சுகம். கத்திரிக் காயை விடுவதில் இன்னொரு சுகம்.

பலாப்பழம்கூட விடவேண்டிய ஒன்றுதான். எதை எதை விடு கிறோமோ, அதனால் தொந்தரவு இல்லை. ஆரோக்கியந்தான். சந்தோஷந்தான்.

வயல், தோப்பு, ரொக்கம், வியாபாரம், வரவு செலவு இவை களையும் விட்டுவிடுவது நல்லது. பிள்ளைகளிடமே விட்டுவிடலாம்.

ஆடம்பரம், படாடோபம், பட்டம், விருது, பதவி, அதிகாரம் ஒவ்வொன்றையும் கழற்றி வைத்துவிடுவது நல்லது.

விடவிட இன்பந்தான். அந்த இன்பத்தைக்கண்டவன் ஒன்றை யும் தொடமாட்டான்.

"யாதனின் யாதனின்
நீங்கியான் — நோதல்
அதனின் அதனின்
இலன்". 116

(நீங்கியான் - விட்டுத் தொலைத்தவன். எதை எதைவிட்டானோ? அதனின் அதனின் நோதல் இலன் - அதன்மூலம் அதன்மூலம் உண்டாகிற துன்பத்தை விட்டவன் ஆவான்)

குறிப்பு-அருமையான கவி. உண்மையானது உணர்ச்சிமய மாய்ப் பொங்குகிறது கவியில். தாளத்தில் அழுத்தி அழுத்தி அனு பவத்தை வைப்பதால், உண்மைக்கு ஒளி உண்டாகிறது. இசையும் நடனமும் கைகோர்த்து ஆடுகிறது கவியில்.

2

இன்பம்வேண்டும், திருப்திவேண்டும் என்றால் ஒவ்வொன்றை யும் விட்டுவிடவேண்டியதுதான். மிச்சம் சொச்சம் இல்லாமல் விட்டு விடவேண்டும். பேரம் ஒன்றும் அதில் வைத்துக்கொள்ளக் கூடாது.

விடவிட ஆனந்தம் தேடிவரும். எத்தனை கும்மாளி போட்டுத் தேடிவரும் தெரியுமா? அளவிட முடியாது அதை.

"வேண்டின் ஒன்றாகத்
துறக்க; — துறந்தபின்
ஈண்டியற் பால
பல". 117

(வேண்டின் - இன்பம் வேண்டும். எனவிரும்பினால். ஒன்றாக-உறுதியாக. துறக்க - சுமைகளை இறக்கிவைத்து விடுக. துறந்த பின் - விட்டபிறகு. ஈண்டு இயற்பால பல - இங்கேயே - வாழ்க் கையிலேயே பல சௌகர்யங்கள் வந்து உதவும்.)

3

கையில் உள்ளதை உதறி எறிவது எளிதான செயல் அல்ல. சபையில் அறிமுகப்படுத்துகிறவர், ஒருவர் பெற்ற விருதுகளில் ஒன்றை விட்டுவிட்டால்கூட - ஞாபகம் இல்லாமல் மறதியில் சொல்லவில்லை என்றால்கூட, தாங்க முடியவில்லையே! ரத்தம், மூளை, உணர்ச்சி எல்லாம் கொதித்து விடுகின்றன.

அப்படி இருக்க, எல்லாவற்றையும் கொடுத்துவிட - தத்தம் பண்ணிவிட மனம் வருமா?

கடவுள் அருள் இருந்தால் முடியும். அது இருந்தால் மட்டுமே முடியும்.

பாரத்தை இறக்கி வைக்கவேண்டுமே! அது ஒன்றுக்காவது கடவுளின் காலைப் பிடி! என்கிறார் கவிஞர். விட்டுவிடாமல் இறுகப் பற்றிப் பிடித்துக்கொள் என்கிறார்.

''பற்றுக பற்றற்றான்
பற்றினை; — அப்பற்றைப்
பற்றுக; பற்று
விடற்கு'' 118

(பற்றுஅற்றான் - கடவுள். பற்றினை பற்று - அருளை நினை. அப்பற்றைப்பற்று - அது ஒன்றையே பிடித்துத் தியானி. பற்று விடற்கு - அப்பொழுதுதான் உன்சுமையை உன்னால் இறக்கி வைக்க முடியும்)

குறிப்பு :- வழி தெரிந்துவிட்டது என்னும் உத்ஸாகம் பாடலில் கும்மாளி போடுகிறது.

# மெய்யுணர்தல்

## 1

பரம்பொருள் ஒன்றுதான் உண்மை. மற்றவையெல்லாம் வெறும் தோற்றந்தான். அப்பர் சுவாமிகள் இப்படிச் சொல்கிறார் ஆண்டவனைப் பற்றி.

> "நின்னாவார் பிறர்இன்றி
> நீயே ஆனாய்".

"இறைவனே நீ ஒருவன்தான் உண்மை. எல்லா வஸ்துக்களாகவும் நீதான் விளைந்திருக்கின்றாய். நீ வேறு, வஸ்துக்கள் வேறு இல்லை. உன்னுடைய செயல்தான் எங்கும்.

உண்மையை நேருக்கு நேராகப் பார்த்துச் சொல்லி விடுகிறார் அப்பர்சுவாமிகள். தண்ணீரென்றும், காற்றென்றும்,செடி என்றும், சந்திரனென்றும் தோன்றுகின்ற ஒவ்வொன்றும் உண்மை இல்லை. உண்மை என்பது பரம்பொருள் ஒன்றுதான்.

வஸ்துக்களையெல்லாம் உண்டாக்கியது பரம்பொருள்தான் என்று சாதாரணமாகச் சொல்லத் தோன்றும். இன்னும் கொஞ்சம் எட்டி யோசனை பண்ணினால், வஸ்துக்கள் அவ்வளவும் பரம்பொருளிடமிருந்துதான் உண்டாயின என்று சொல்லத் தோன்றும். இரண்டும் பொருத்தமில்லாதவை தாம்.

பரம்பொருள் ஒன்றுதான் எல்லாக் கோலங்களுமாகக் காட்சியளிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது சற்று கடினமான காரியமே. தெரிந்துவிட்டால் உத்ஸாகமே வந்துவிடும். உத்ஸாகம்,

> "நின்னாவார் பிறரின்றி
> நீயே ஆனாய்"

என்று கும்மாளி போட்டுக் கொண்டுதான் வரும்.

* * * *

குறளாசிரியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர், எப்படி உண்மையை உணர்ந்து அனுபவித்து ஆனந்தமாக வெளியிடுகிறார் என்று பார்க்கலாம்.

''எப்பொருள் எத்தன்மைத்(து)
ஆயினும்; — அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து)
அறிவு''.

(எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - கடுகானாலும் சரி, மலையானாலும் சரி, சிறிதாகவும் தோன்றலாம். பெரிதாகவும் தோன்றலாம். அப்பொருள் மெய்ப்பொருள்-எல்லாப் பொருள்களுமே பரம் பொருள்தான். அதாவது பரம்பொருள்தான் உண்மை. அந்த ஒன்றுதான் பலபடியாகத் தோற்றமளிக்கின்றது. நாம் என்றும், அதுவென்றும் ஒன்றுமே இல்லை. இதை காண்பது - உணர்ந்து அனுபவிப்பதுதான் அறிவு - ஞானம். தெரிந்து கொள்ள வேண்டியது இது ஒன்றுதான் என்பது கருத்து.) பரம்பொருள் ஒன்று உண்டு. அது ஒன்றுதான் உண்டு என்பதை உணர உணர நாம் என்பது இல்லை என்று ஆகிவிடும். எல்லாம் கடவுளுடைய திருவிளையாடல் என்பது புரிந்துவிடும். நமது செயல் இல்லையென்றாகிவிடும். பிறகு துன்பமும் இல்லைதானே.

2

எல்லாம் கடவுளுடைய திருவிளையாடல் என்பது புரிந்துவிட்டால், ஒரே ஆனந்தந்தான். பிறகு, கவலையோ துன்பமோ ஏற்பட மாட்டா;

''சார்புணர்ந்து, சார்பு
கெடஒழுகின்; — மற்றழிந்துச்
சார்தராச் சார்தரும்
நோய்''. 120

(சார்பு உணர்த்து - நாமும், நமது காரியங்களும் உண்மையல்ல. வெறும் நிழல் (சார்பு) என்பதை உணர்ந்து. சார்புகெட ஒழுகின் - நான் எனது என்னும் மயக்கம் நீங்க உண்மையோடு ஈடுபட்டு விட்டால், சார்தரும் நோய் - உண்மை போல வந்து ஒட்டிக் கொண்டிருக்கின்ற நான், எனது என்னும் பொய்யும், அதனால் ஏற்படும் கவலைகளும், சார்தரா - தலை காட்ட மாட்டா)

குறிப்பு :- உண்மையைத் தெரிந்து கொள்வது எவ்வளவு எளிதாக இருக்கின்றது. தெரிந்த உடனே எப்படிப் பேரானந்த மயமாக நிறைந்துவிடுகிறது உண்மை.

3

எளிதாக உண்மையை உணர்ந்துஆனந்தத்தில் திளைப்பதற்குப் பதிலாக, எத்தனை எத்தனைச் சிரமங்களுக்கு ஆளாகித் துன்பப் படுகிறான் மனிதன்?

''துன்பங்களை வாரி வாரித் தலையில் போட்டுக் கொள் கிறானே மனிதன்'' என்று ஆற்றாமைப்படுகிறார் குறளாசிரியர். நான் என்பது உண்மையல்ல. பொய். அந்தப் பொய்யோ அது வேண்டும், இதுவேண்டும் என்று ஆசைப்படுகிறது. ஆசை நிறைவேறுவதற்காக ஆங்காரம்(அமைதியின்மை, ஆனந்தமின்மை) கொள்கிறது.

ஆசை, ஆங்காரம், மயக்கம் மூன்றும் நீங்கவேண்டும் இவை மூன்றும் பூரணமாக விலகினால்தான் பேரானந்தம் உண்டாகும். அதாவது கீழ்மை, குறை, கவலை, துன்பம், எல்லாம் ஒழியும்.

''காமம் வெகுளி
மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும்
நோய்''. 121

(இவை மூன்றன் நாமம் கெட - காமம், வெகுளி, மயக்கம், இந்த மூன்றினுடைய வாசனைகூட இல்லாமல் கெட்டுவிட வேண்டும். அவை அழிந்த பிறகுதான். நோய்கெடும் - துன்பம் தொலையும்)

4

யோக சாதனங்களின் மூலமாகச் சிலர் மனதைக் கட்டுப், படுத்தி வைத்துக் கொள்கிறார்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்கள் ஐந்தும் சொன்னபடி ஆடும் அவர்களுக்கு, சித்தத்தை ஒடுக்கி, ஐம்புலன்களையும் வசப்படுத்திக் கொள்வதன் மூலமாக, இவர்கள் பல காரியங்களைச் செய்து காட்டுவார்கள்

மந்திரம் என்பார்கள். தந்திரம் என்பார்கள். மாயவித்தை என்றுகூடச் சொல்லுவார்கள்.

அசாதாரணமான காரியங்களை இவர்கள். செய்துவிடுவதால் ஒரு புண்ணியமும் உண்டாகிவிடுவதில்லை. பரம்பொருள் ஒன்று தான் என்னும் உண்மையைத் தெரிந்துவிடுவதில்தான் - நாமும்

நம் காரியமும் வெறும் தோற்றம் தான் என உணர்த்து, பொய்யை அப்புறப்படுத்தி விடுவதில்த்தான் ஆனந்தம் இருக்கிறது.

''ஐயுணர்(வு) எய்தியக்
கண்ணும் பயன்இன்றே;
மெய்யுணர்(வு) இல்லாக்
கடை''. 122

(ஐஉணர்வு - மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்புல உணர்வுகளும் எய்திய கண்ணும் - தன்வசமாகக் கட்டுப்பட்டு விட்டாலும், பயன் இன்று - அதனால் ஒரு பலனும் ஏற்படப் போவதில்லை. மெய்யுணர்வு இல்லாக்கடை - உண்மையைக் காணவும், அனுபவிக்கவும் கொடுத்து வைக்காத ஒருவனுக்கு)

குறிப்பு:- உண்மையை அறிந்து அனுபவித்து விட்டவன் வேறு ஒன்றுமே செய்யவேண்டாம். இழிவும், ஏக்கமும் அவனை விட்டு விலகிவிடும். ஆனந்தமயமாக நிறைந்துவிடுவான் என்பது கவியில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

இது சம்பந்தமாக சிவவாக்கியர் சொல்வதைப் பார்க்கலாம்.

''மனத்த கத்(த)அ
முக்க றாத
மௌன ஞான
யோகி கள்;
வனத்த கத்தி
ருக்கி னும்ம
னத்த கத்த
ழுக்க றார்;
மனத்த கத்த
ழுக்க றுத்த
மௌன ஞான
யோகி கள்;
முலைத்த டத்தி
ருக்கி னும்பி
றப்ப றுக்க
வல்ல ரே''.

'சமயதத்துவத்தைப் பற்றி அக்கரை இல்லாதவர் குறளாசிரியர். கடவுளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை அவர், என்று சிலர் சொல்லிக் கொள்வதுண்டு. தமிழ்நாட்டிற்குள் அந்த அபிப்பிராயம் புகைபோல படர்ந்து மூடுவதும் உண்டு.

குறளை நேருக்கு நேராக அனுபவித்துவிட்டால் சமயம், பக்தி, தியானம் இவற்றில் எவ்வளவு ஈடுபட்டுத் திளைக்கிறார் குறளாசிரியர் என்பது தெரியவரும்.

# பயந்து பயந்து சாகமாட்டோம்

1

சந்திரன் அழகாக இருக்கிறது. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதபடி அழகாக இருக்கிறது. பூரணசந்திரன் எப்பொழுது உதிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அனுபவிக்கிறோம். சலிப்பே இல்லாமல் பார்த்து அனுபவிக்கிறதே தொழிலாய்ப் போய்விட்டது,

இவ்வளவு அழகாக இருக்கிறதே நிலா, அதை நம் வீட்டிற்குக் கொண்டு போய் வைத்துக் கொள்ள வேண்டியதுதான் என்று யாராவது முயல்கிறார்களா? இல்லை.

சந்திரனைப் பணமாக மாற்றிவிடலாம். காசாக்கிவிடலாம் என்றால் எப்படியாவது சந்திரனைக் கொண்டுவந்து விலைபேசி விற்றுவிடத் தோன்றும்.

ரூபாய் அணா பைசாமேல் அப்படி ஒரு வெறி. எல்லாவற்றையும் ரூபாய் அணா பைசாவாகவே பார்க்கிறது உலகம். உத்யோகம், செல்வாக்கு அதிகாரம் எல்லாவற்றையும் காசு பணமாக மாற்றுவதுதான் தொழிலாய்ப் போய்விட்டது.

நட்பு, அன்பு, ஞானம், ஆனந்தத்தைக்கூடப் பணமாக மாற்றுவதே காரியம் ஆகிவிட்டது.

அதனால் பயம் வந்துவிட்டது. எதைக் கண்டாலும் பயப்படுகிறான் மனிதன். வாழ்க்கையைக் கண்டு பயப்படுகிறான். மரணத்தைப்பற்றிப் பயப்படுகிறான்.

பயந்து பயந்து வாழமுடியுமா? பயம் இல்லாமல் சந்தோஷமாக வாழ்வதுதான் வாழ்க்கை.

மரணபயம் இல்லாமல் சந்தோஷமாக வாழவேண்டும். செய்யவேண்டிய காரியங்களைச் சந்தோஷமாய்ச் செய்ய வேண்டும்.

அன்புக்கு அன்புதானே வேண்டும். அன்பை அன்பாகவும், உண்மையை உண்மையாகவும், நட்பை நட்பாகவும் வைத்து மதிக்கிறவன், காசு பணமாக மாறமாட்டான். பயப்படமாட்டான். எமபயம் இல்லாமல் ஜீவன் முக்தனாகவே இருப்பான்.

பிறவாமை என்பது அதுதான். அதுவேண்டும் இதுவேண்டும் என்னும் அவாஇன்மை-அதாவது வேண்டாமைதான் பிறவாமை.

வயிரம்போல் அழியாமல் ஜொலித்துக்கொண்டு இருக்கவே (பிறவாமை ஒன்றை நோக்கியே) தவியாய்த் தவிக்கிறது உலகம்.

அது இருக்கும் இடம் தெரிந்துவிட்டது. துள்ளிக் குதிக்கிறார் குறளாசிரியர்.

"வேண்டுங்கால் வேண்டும்
பிறவாமை; — மற்றது
வேண்டாமை வேண்ட
வரும்" 123

(வேண்டும் கால் வேண்டும் - வேண்டியது ஒன்றுதான்)

2

செல்வத்தில் எல்லாம் செல்வம் தெய்வீகச் செல்வம். உண்மைதான். அதாவது வாழ்க்கையைப் பணமாக்கிவிடும் வியாபாரத்தை விரும்பாமைதான்.

வேண்டாமைதான் செல்வம். உண்மையான செல்வம். இங்குமட்டும் அல்ல. எங்குமே செல்வம் என்றால் வேண்டாமை தான். உண்மை என்கிற ஒன்றுதான்.

"வேண்டாமை அன்ன
விழுச்செல்வம்;- ஈண்டில்லை;
யாண்டும் அஃதுஒப்ப(து)
இல்." 124

(விழுச்செல்வம் - உயர்ந்த செல்வம். யாண்டும் - எங்கும்)

3

அறியாமை இல்லை. இருட்டு இல்லை. மயக்கம் இல்லை. கவலை இல்லை என்றால் மனம் ஒரே பிரகாசமாகத்தானே இருக்கும். பளிங்குபோலத் தெளிந்து துப்புரவாக இருக்கும் மனம்,

தூய்மை என்றால் அவாஇன்மைதான். அதாவது வாழ்க்கையில் உண்மைதான். உண்மை ஒன்றேதான்.

தூஉய்மை என்ப(து)
அவாஇன்மை;- மற்றது
வாஅய்மை வேண்ட
வரும்''. 125

(வாய்மை-உண்மை. தூய்மை, வாய்மை இரண்டு சொற்களும் நீண்ட ஓசைபெற்று (தூஉய்மை - வாஅய்மை என அளபெடை பெற்று) தாளத்தோடு நடனம் ஆடுகிறது.)

4

விடுதலை பெற்றவர்கள் - துன்பம், கவலை, பயம் இவற்றை விட்டொழித்தவர்கள் என்றால், ஆசையை - அவாவினைக் கை கழுவியவர்கள்தான்.

''அற்றவர் என்பார்
அவாஅற்றார்- மற்றையார்
அற்றாக அற்ற(து)
இலர்'' 126

(மற்றையார் - அவாவை விடாதவர். மனதில் ஆசைஉடையவர்கள். அற்றாக - பூரணமாக. அற்றது இலர் - விடுதலை பெறவில்லை.)

5

வழக்கறிஞர் ஒருவர். பெரிய ஜமீன்சொத்து சம்பந்தமாக அவர் ஒரு வழக்கை ஏற்று நடத்தினார். வழக்கை ஜெயித்துக் காட்டவேண்டும் என்னும் முனைப்போடு நடத்தினார். கட்சிக்காரர் நோக்கமும் வழக்கறிஞர் நோக்கமும் வழக்கு விஷயமாய் ஒன்றாய் நின்றது.

வழக்கு பற்றிய கவலை, பயம், ஆசை எல்லாம் சேர்ந்து மனதை இழுத்துக் கொண்டேபோனது. கேள்வி, குறுக்குக்கேள்வி, சாட்சியம், விசாரணை, தீர்ப்பு இவற்றோடு மனம் உருண்டு புரண்டு போராடிக் கொண்டே இருந்தது.

நீதிபதி பற்றியும்-அவர் கண்டிப்பு பற்றியும் பயமாகஇருந்தது. கவலையாகவே இருந்தது.

அப்படி ஒரு ஆசை-மனதை ஆட்டிவைத்தது. வழக்கறிஞருக்கு நீதிபதி பதவி கிடைத்தது. உயர்நீதிமன்ற நீதிபதி ஆனார். உச்ச நீதிமன்ற நீதிபதி ஆனார். உச்சநீதிமன்ற நீதிபதியாகவே ஏறிப் போய்விட்டார்.

நீதிபதியாகப் போகும்போது வழக்கு சம்பந்தமான ரிக்கார்டு கட்டை வேறொரு வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டுப்போனார். அப்படிப் போன நாளிலிருந்து அந்த வழக்குப் பற்றிய ஞாபகமே இல்லை அவருக்கு. ஞாபகப்படுத்தினால், அந்த வழக்கு விஷயம் அவருக்கு அருவருப்பாக இருக்கிறது. ஒரேபொய், ஜோடனை பித்தலாட்டம், கள்ள ரிக்கார்டு - சேச்சே என்ன கேவலமான விவகாரம் அது என அருவருப்பு உண்டாகிறது.

ஆசை கழன்றுவிட்டதால் இப்பொழுது அந்த வழக்கைப் பற்றி யாரிடம் வேண்டுமானாலும் பேசமுடியும். மனம்விட்டுப் பேசமுடியும். உண்மையைத் தைர்யமாகவே சொல்லிவிட முடியும்.

விடுதலை பெற்றுவிட்டால் எல்லாம் முடியுந்தான்.

அவாவினை ஆற்ற
அறுப்பார்;- தவாவினை
தான்வேண்டும் ஆற்றான்
வரும்''. 127

(ஆற்றஅறுப்பார் - வேரோடு வெட்டி எறிந்தவர்கள். (ஆற்ற - மிச்சம் இல்லாமல்) தவாவினை - உண்மையை. தான்வேண்டும் ஆற்றால் வரும் - நினைத்தது நினைத்தபடி சொல்லமுடியும்.)

6

ஆசையைவிட்டுத் தொலைத்தவன் ஆனந்தமயமாக இருப் பான். ஆனந்தம் அவன் மனதிலிருந்து பொங்கிக் கொண்டே இருக்கும்.

"இன்பம் இடையறா(து)
ஈண்டும்;- அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம்
கெடின்''. 128

(இடையறாது - தடைப்படாமல், ஈண்டும் - பெருகும்.)

7

உயிர்ப் பிராணிகள் என்றால், அதனிடம் பசி இருக்கவே செய்யும்.

ஆசையினிடம் இருக்கிற பசி தனி. அது அடங்காதபசி, தீராத பசி. எந்த உயிர்ப் பிராணி ஆனாலும் உண்டஉடன் பசி அடங்கும். ஆசை இருக்கிறதே அது உண்ண உண்ண பசி அடங்காமல் வெறி பிடித்து அலையும்.

ஆசையைத் துடைத்து எறிந்தவர்கள் விடுதலை பெற்றவர்கள். வீடுபெற்றவர்கள். பேரா இயற்கை என்னும் பேரானந்தத்தில் திளைக்கிறவர்கள்.

ஜீவன் முக்தர்கள் என்றால் அவர்கள்தான். அவர்களுடைய காரியம் என்றென்றும் நிலைத்து நிற்கும். அழிவு என்பது இல்லைதான்.

"ஆரா இயற்கை
அவாநீப்பின், — அந்நிலையே
பேரா இயற்கை
தரும்", 129

ஆரா இயற்கை அவா - தணியாத பசியுடைய ஆசை. அந் நிலையே - அவாவை விட்டதே. பேரா இயற்கை தரும் - ஆனந்த பரவசம் ஆகிவிடும்.)

குறிப்பு:- உண்மை என்னும் அற்புதத் தத்துவம், உல்லாசத் தையும் களிப்பையும் புதியபுதிய சாயல்களில் வைத்து அபிநயம் பிடித்தே காட்டுகிறது கவியில்.

அதைப் பார்த்துப் பரவசப்படும் தமிழ், வார்த்தைகளாலும்) தாளத்தாலும், நடனத்தாலும் ஓவியமாகத் தீட்டிவிடுகிறது. அற்புதத்தை எக்களிப்பு புதுப்புது உணர்ச்சி ஒளிகளை வீசுகின்றன பாடல்களில்.

# விதியின் விளையாட்டு

## 1

பசு நம்முன் நிற்கிறது. பசுவைப் பார்க்கிறோம். அதனுள் நடக்கும் காரியம் இன்னதென்று நமக்குத் தெரியாது.

வைக்கோல், புண்ணாக்கு, புல், கழுநீர், இவை பசுவுக்குள் போகின்றன. ரத்தம் ஊறிவிடுகிறது. ரத்தம் தேகம் முழுவதும் சதா ஓடிக்கொண்டே இருக்கிறது. கண்ணோடு கண்ணாய் ஆகிறது, காதோடு காதாய் ஆகிறது, நகத்தோடு நகமாகவும், தோலோடு தோலாகவும் ஆகிவிடுகிறது ரத்தம். உயிருக்கு இன்பத் தைக் கொடுக்கிறது ரத்தம்.

பசுவுள் நிறைந்திருக்கும் தெய்வசக்தி ரத்தத்தைப் பிழிந்து அமிர்தத்தை வடிகட்டி எடுக்கிறது. அந்த தெய்வசக்தியே - பசு வின் எலும்பை, நரம்பை, தசைக்கட்டை, தோலை, மண்டையை, மனசை தேகம் முழுவதையுமே உருக்கிவிடுகிறது. பசு உருகஉருக ரசம் கசிகிறது.

அமிர்தமும் ரசமும் அணு அணுவாய் மடியை நோக்கி வரு கின்றன. கன்றைப் பார்த்த உடன், கன்று வந்து மடியில் முட்டிய வுடன் நிறைந்து விம்முகிறது மடி.

மடியினுள் வந்து சேர்ந்தஉடன் அமிர்தமும் ரசமும் சேர்ந்து பாலாகிவிடுகிறது. பாலுக்குள் தயிர் இருக்கிறது, நெய் இருக் கிறது.

பாலைப் பொழிந்த ரத்தத்துக்குள் கோமயமும் இருந்தது, சாணமும் இருந்தது.

இவ்வளவும் எப்படி என்று பசுவுக்குத் தெரியாது, நமக்கும் தெரியாது. நம் அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம் அது.

ஆனால் விதி என்று ஒன்று இருக்கிறது. அது எங்கும் நிறைந்திருக்கிறது. அது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கிறது. அதற்குத் தெரியும் உண்மை. அது ஒன்றுக்குத்தான் உண்மை தெரியும்.

* * * *

ஊக்கம், எழுச்சி, சுறுசுறுப்பு என்றெல்லாம் சொல்கிறோமே, இதை, 'அசைவு இன்மை' என்கிறார் கவிஞர்.

இந்த அசைவின்மை பலரைப்போய் பிடித்துக் கொள்கிறது. அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னாகிறது. எல்லாச் செல்வங்களும் அவர்களுக்குப் பரிவாரங்களாய்ப் புடைசூழ்ந்து நிற்கின்றன.

அவர்களிடம் மட்டும் அசைவின்மை போய்ச் சேர்ந்த காரணம் விளங்கமாட்டேன் என்கிறது. அவர்களுக்கே விளங்கமாட்டேன் என்கிறது.

சோர்வு, மயக்கம், தளர்ச்சி, கசப்பு என்று சொல்கிறோமே, இதை மடி என்கிறார் குறளாசிரியர். இந்த மடியும் பலரை வளைத்துப் போட்டுக் கொள்கிறது. எல்லாவற்றையும் இழந்து விடுகிறார்கள். அவர்களிடம் மட்டும் மடி ஏன் போனது? விபரம் நமக்குத் தெரியாது.

எல்லாவிபரமும் விதிக்குத் தெரியும். அதற்கு நியதி என்று பெயர்.

"ஆகூழால் தோன்றும்
அசைவின்மை; — கைப்பொருள்
போகூழால் தோன்றும்
மடி". 130

(ஆகு(ம்) ஊழால் அசைவின்மை தோன்றும் - விளைந்து பொங்க வைக்கும் ஊழால் (நியதிப்படி) உண்டாகிறது உறுதி. மடி - உணர்ச்சி இல்லாமல் மடித்துப் போனநிலை. போகு(ம்) ஊழால் தோன்றும் - தட்டிப்பறிக்கும் நியதிப்படி - சிந்தித்தொலைக்கும் விதிப்படி உண்டாகிறது. ஏன் அப்படி என்பது யாருக்கும் தெரியாது. விதியிடம் கேட்க வேண்டிய கேள்வி அது.

## 2

உண்மையைக் கசடறக் கற்றவர்கள் சிலர் இருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் உண்மையைக்கண்டு தெளிந்தவர்களாய் இருக்கிறார்கள்.

அவர்களைப்பற்றி யாரும் நினைப்பதே இல்லை. எங்கோ ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறார்கள் அவர்கள்.

வேண்டாத விஷயங்களை - வெறும் புள்ளிவிபரங்களை - வெறும் வார்த்தைகளையே உருப்போடுகிறார்கள் பலர். பொய்யை அளந்து கணக்கிட, தேர்வுவேறு. தேர்வில் வெற்றி பெறுகிறார்கள் அதிகாரிகள் ஆகிவிடுகிறார்கள். பேராசிரியர்கள் ஆகிவிடுகிறார்கள், நீதிபதிகளாகவே வந்துவிடுகிறார்கள்.

அவர்களுக்கு மேளந்தான், தாளந்தான், பூமாலைதான், பொன்னாடைதான். மக்களுக்கு வழிகாட்டும் நாயன்மாராகவே தர்பார் நடத்துகிறார்கள் அவர்கள்.

உண்மைக்கு ஏன் நாதி இல்லை? பொய்க்கு ஏன் போட்டி போட்டு, ''நான் முந்தி, நீ முந்தி'' என்று அடிமை ஆகிறார்கள் ஜனங்கள்.

விதிக்குத்தான் விபரம் தெரியும்.

''இருவே(று) உலகத்(து)
இயற்கை; — திருவேறு,
தெள்ளியர் ஆதலும்
வேறு''. 131

(திருவேறு - ஆடம்பரமும், செல்வாக்கும், அதிகாரமும், சௌடால்த்தனமும் ஒருபக்கந்தான். அதுவும் உலகில் ஒரு அனாதியான தத்துவம் (இயற்கை) தான். தெள்ளியர் ஆதலும் வேறு - தெளிவும் - உறுதியும், உண்மையும் ஒருபக்கந்தான். அதுவும் அனாதியான தத்துவந்தான்.

இரண்டும் விதியின் கையில்தான் இருக்கின்றன.

## 3

இளைஞன் ஒருவன் பள்ளியில்ப் படித்துக் கொண்டிருந்தான். கஷ்டப்பட்டுத்தான் அவனைப் படிக்க வைத்தார்கள் பெற்றோர் கள். ஆனால் பையனுக்குப் படிப்பில் நாட்டம் இல்லை. பள்ளியை

விட்டு ஓடிப்போய்விட்டான். ஒரு இரும்புக்கடையில் போய் வேலைபார்த்தான். வருடங்கள் பல ஓடிவிட்டன.

அதன்பின் சொந்தத்தில் அவனே ஒரு இரும்புக்கடை வைத்தான். சம்பாத்யமும் பண்ணினான். வீடு, நிலம், ரொக்கம் எல்லாம் சேர்ந்துவிட்டன.

கல்வி நல்லதுதான். டாக்டராக வந்திருக்கலாம். நீதிபதி ஆகி இருக்கலாம். அமெரிக்காவிலோ, ஜப்பானிலோ தூதர் பதவிகூட வகித்திருக்கலாம்.

ஆனால் விதி அவனை ஒரு வியாபாரி ஆக்கிவிட்டது. லட்சக் கணக்கில் பணம் புரளும் வியாபாரி ஆகிவிட்டான் அவன்.

லாபம்தரும் என்று நினைத்த பள்ளிக்கூடமும், படிப்பும் கசந்தன, துன்பப்படுத்தின, ஏன்? பணத்தை அவனிடம் கொண்டு வந்து கொட்டுவதற்குத்தான்.

''நல்லவை எல்லாம்
தீயவாம் — செல்வம்செயற்கு.

இனி, அந்த இரும்பு வியாபாரி ஒரு விஷயத்தில் கவலைப் பட்டான். பலவருட வியாபாரத்தில் ஒட்டை, உடைசல், காது போனது, கண்போனது, துருப்பிடித்தது, உளுத்தது, மக்கியது என்று பழைய இரும்பு அவனிடம் குவிந்திருந்தது. மலைமலை யாய்க் குவிந்திருந்தது.

''இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறதே சனியன், என்ன செய்ய இதை'' என்று பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டான் வியாபாரி. அவனுக்கு இடைஞ்சல் (தீயது) ஆகவே இருந்தது பழைய இரும்பு.

இந்தநிலையில் உலகில் யுத்தம் ஒன்று வந்தது. உலக யுத்த மாகவே அது வந்துவிட்டது.

பெரிய பெரிய வர்த்தகர்கள் வந்தார்கள். பழைய இரும்பு முழுவதையும் ஆணி கூட மிஞ்சாதபடி அள்ளிக் கொண்டு போய் விட்டார்கள். லட்சக்கணக்கில் பணம் வந்து விழுந்தது வியாபாரி யின் மடியில்.

நல்லதாய்ப் போய்விட்டது தீயது.

''நல்லவை எல்லாஅம்
தீயவாஅம்; — தீயவும்
நல்லவாஅம், செல்வம்
செயற்கு''. 132

(தீயஆும் என்பதை நீட்டி தீயவாஅம் எனப் பாடவேண்டும். செல்வம் செயற்கு - பணம் உண்டாவதற்கு)

குறிப்பு:- செல்வத்தை வைத்து விதிவிளையாடுகிற விளையாட்டை அப்படியே அபிநயம் பிடித்துக் காட்டுகிறது தமிழ்.

4

பேய் பிசாசுகூடக் கொஞ்சம் கண் அயரும். சதா விழிப்போடு - ஒரு வெறியோடு பணத்தை ஒளித்துக் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள் பலர்.

அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு ஓடிப்போய் விடுகிறது செல்வம். இது ஏன்?

ஏழை எளியவர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கிறான் ஒருவன். உற்றார் உறவினர்களுக்கெல்லாம் வாரி வழங்கி அவர்களைத் தாங்குகிறான். கலைஞர்களுக்கும் புலவர்களுக்கும் பொன்னையும் மணியையும் மழைபோலக் கொடுக்கிறான்.

அவன் செல்வம் வளர்கிறது. தேய்கிறது இல்லை. ஏன்?

விதிக்குத்தான் ரகஸ்யம் தெரியும்.

"பரியினும் ஆகாவாம்
பால்அல்ல; — உய்த்துச்
சொரியினும் போகா
தம". 133

(பரியினும் - அணைத்துப் பிடித்துக் கட்டிக்கொண்டாலும். பால் அல்ல - விதியானது மனம் வைக்கா விட்டால். ஆகாஆம் -செல்வம் தங்காது. உய்த்துச் சொரியினும் - அள்ளி அள்ளிப் பிறர் கையில் கொட்டினாலும். தம - நம்மிடம் விதி சேர்த்து வைத்தால். போகா - நம்மைவிட்டுப் போகவே போகாது.)

5

ஒருமனிதன். நல்ல நன்செய்நிலம் ஐம்பது ஏக்கர் வைத்திருந்தான். நூறு ஏக்கர் தோப்பும் இருந்தது. மா, பலா, தென்னை, வாழை, எல்லாம் தோப்பில் ஏராளம். ஐந்துலட்ச ரூபாய் பாங்கியில் போட்டு வைத்திருந்தான்.

நெல்லும், கரும்பும், காயும், கனியும், வண்டிவண்டியாய் வந்து இறங்குகிறது வீடுமுழுவதும் நிறைந்திருக்கிறது. பால், தயிர், நெய்க்குக் குறைவே இல்லை.

ஆனால் மனிதனுக்குப் பசிவரமாட்டேன் என்கிறது. ஜீரண சக்தி போய்விட்டது. தூக்கமும் இல்லைதான். ஒன்றும் சாப்பிட முடியவில்லை. ருசியாய் இருக்குமே என்று ஒரு துண்டு மாம் பழத்தை வாயில்போட்டால் போதும். அவர் உடம்பில் உள்ள சர்க்கரைச் சத்தைப் பிழிந்து நீரில் சேர்த்து விடுகிறது மாம்பழத் துண்டு.

ஒரு வாரம் அவஸ்தைதான்.எல்லாம் இருக்கிறது. ஒன்றையும் ருசிபார்க்கக்கூட வழி இல்லை.

பெரிய முரட்டு வீடுதான் ஆசாமியின் வீடு. அதில் அவர் தனியாகத்தான் இருக்கிறார். அவர் மனைவி அவருடன் இல்லை. தனியே பிரிந்து போய்விட்டாள். ''கருநாகம் கூட இருந்து குடித்தனம் நடத்தினாலும் நடத்தலாம். இந்த லோபியுடன் சேர்ந்திருக்க முடியாது'' என்று விலகிப் போய்விட்டாள்.

பிள்ளைகளும் திசைக்கு ஒருவராக வெவ்வேறு ஊர்களில் இருக்கிறார்கள்.

பேச்சுத் துணைகூட மனிதனுக்கு இல்லை.

பூதம் காத்ததுமாதிரி சொத்தைக் காத்துக் கொண்டிருக் கிறார். அவ்வளவுதான்.

''வகுத்தான் வகுத்த
வகைஅல்லால்; - கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல்
அரிது''. 134

(வகுத்தான் வகுத்தவகை - இறைவன் அருள். விதியின் நியதி. தொகுத்தார் - சேர்த்து வைத்தவர். துய்த்தல் அரிது - அனுபவிக்க முடியாது. இறைஅருள் இல்லாமல் ஒன்றையும் அனுபவிக்க முடியாது)

அனுபவம் என்பது அருளில் இருந்து கிடைப்பது. அருளில்லாத வன் அனுபவிக்க முடியாது.

6

நண்பர் ஒருவர் பெரிய பண்ணையார் வீட்டுப் பெண்ணைக் கட்டிக்கொண்டார். நூறு ஏக்கர் நன்செய் பண்ணையாருக்கு. பண்ணையாருக்கு ஆண் வாரிசு இல்லை. இரண்டு பெண்கள்தான். அதனால் தனக்கு ஐம்பது ஏக்கர் நன்செய் இருக்கிறது என்று நம்பினார் மாப்பிள்ளை. பேங்கில் பார்த்த வேலையையும் விட்டு விட்டார்.

மாமனாருக்கு வயது ஆகிவிட்டது. சொத்தை செட்டில் மெண்ட் பண்ணி எழுதினார். இரண்டு பெண்களுக்கும் பாதி பாதி என்று எழுதினார். 'யார் ஒருவருக்கு வாரிசு இல்லையோ, அவர், தம் ஆயுள்வரை சொத்தை அனுபவிக்கலாம். அதன்பின் வாரிசு உடையவருக்கு இறங்கிவிட வேண்டும் சொத்து' என்று எழுதி வைத்தார் பண்ணையார். எழுதிவைத்த ஒருவருடத்தில் பண்ணை யார் காலமாகிவிட்டார். அவருடைய இளையமகளுக்கு இரண்டு குழந்தைகள். மூத்தமகளுக்குக் குழந்தை இல்லை.

பண்ணையார் இறந்தபின் நான்குவருடம் கழித்து மகளும் இறந்துவிட்டாள்.

சின்னமகளைக் கட்டியவர் சொத்து முழுவதுக்கும் அதிகாரி ஆகிவிட்டார்.

பெரியமகளைக் கட்டியவருக்கு - வரவேண்டியது (உறற்பால) வராமலே போய்விட்டது. (ஊட்டா கழியும்) விதியின் திருவிளை யாடல் பரிதாபமாகத்தான் இருக்கிறது.

சொத்துக்காக உபாயங்கள் பல செய்து பார்த்தார். ஒன்றும் எடுபடவில்லை. கடைசியில் என்ன சொல்கிறார்."ஒத்தக்கட்டைக்கு சொத்து எதற்கு என்று விட்டுக் கொடுத்துவிட்டேன். அதை நிர் வாகம் பண்ணுகிற தொல்லை ஒன்றும் வேண்டாம் என்று நிம்மதி யாக இருக்கின்றேன்" என்று.

முற்றத் துறந்த முனிவர் பேசுவது போலவே பேசுகிறார். ஆனால் மனசில் மட்டும் ஞானஒளி (துப்பரவு) இல்லை.

இதுவும் விதியின் ஒரு குறும்புதான்.

"துறப்பார்மன் துப்புர வு)
இல்லார்; - உறற்பால
ஊட்டா கழியும்
எனில்' 145

(உறற்பால - கிடைக்கவேண்டியதை. ஊட்டா கழியும் எனில் - கிடைக்கவிடாமல் விதியானது தடுத்து விடுவது உண்டு. அதற்கு ஆளானவன் தியாகமூர்த்திபோல் நடிப்பான்.)

## 7

ஆற்றின் கரையில் வீடு. வீட்டின் பின்புறம் - கொல்லை நிலம் விசாலமான இடம். பத்துத் தென்னை மரம், இரண்டு வேம்பு,

இரண்டு மருது, எலுமிச்சை, கறிவேப்பிலை, வாழை, முருங்கை இவ்வளவும் கொல்லையில் உண்டு.

பத்துப்பன்னிரண்டு பசுவும் கன்றும் குடி இருக்கிற தொழுவம், வைக்கோல் படப்பும், உரக்குழியும் கொல்லையில் உண்டு.

ஐப்பசி, கார்த்திகை மாதம். அடைமழைக்காலம். இரண்டு நாட்கள் இரவும், பகலும் விடாமல் மழை பெய்தது. எங்குபார்த்தாலும் ஒரே தண்ணீர்க்காடுதான்.

மூன்றாம்நாள் காலையில் கொல்லைப் புறத்துக்கு வந்து பார்த்தால், ஆற்று வெள்ளம், வீட்டின்(பின்) சுவர்வரை ஏறிவந்து போயிருக்கிற விபரம் தெரிகிறது. அத்துடன் ஒரு பெரிய வைக்கோல் படப்பை அடித்துக்கொண்டு வந்து நம் வீட்டுக்கொல்லையில் ஒதுக்கி இருக்கிறதும் தெரிகிறது.

ஒரே சந்தோஷம் நமக்கு.

மழை வெறித்துவிட்டது. சுள்ளென்று வெயில் கொளுத்துகிறது. வெள்ளம் அடித்து வந்த வைக்கோல்போரை உதறிக் காயப் போட்டோம். அள்ளி எடுத்து அமைத்து வைத்துவிட்டோம்.

வெள்ளம் செய்ததை மறக்க முடியவில்லை. இரண்டுவாரம் கழித்து பழையபடியும் மழை. முரட்டுமழை. இரண்டுநாட்கள் யாரும் அடைத்த கதவைத் திறக்கவில்லை. அப்படி விடாமல் அடித்தது மழை.

மழை வெறித்ததும் கொல்லைப்புறம் வந்து பார்த்தோம். புதிதாக வந்த வைக்கோல்படப்பு - ஏற்கனவே நம்மிடம் இருந்த வைக்கோல் படப்பு - இரண்டையும் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

மிக்க அவமானமாகப் போய்விட்டது விஷயம். கோபம் ஒரு பக்கம், வருத்தம் ஒருபக்கம், கசந்து துன்பப்படுகிறது மனம்.

துன்பப்படுவதற்கு ஞாயம் ஏதாவது இருக்கிறதா? விழுந்து விழுந்து சிரிக்கக்கூடிய காட்சி அல்லவா அது? இரண்டு வாரங்களுக்கு முன் வந்து சேர்ந்த வைக்கோல்க் கட்டைப் பார்த்து அப்படித்தானே சிரித்தோம்.

கொடுத்த வெள்ளந்தானே எடுத்தது?

வந்ததுக்குச் சிரிக்கிறவன் போவதற்கும் சிரிக்கவேண்டும்.

ஆனால் அது விளங்கமாட்டேன் என்கிறது. விதி நடத்துகிற விளையாட்டு எளிதில் விளங்குவதாக இல்லை.

"நன்றாம்கால் நல்லவாக்
காண்பவர்; - அன்றாங்கால்
அல்லல் படுவ(து)
எவன்". 136

(நன்று ஆம் கால் - லாபம் ஏற்படுகிற பொழுது. நல்லவா(க) காண்பவர் - நல்லது நல்லது - யோகம் யோகம் என்று மகிழ்கிறார்கள். அப்படி மகிழ்பவர். அன்று ஆம்கால் - நஷ்டம் வருகிறபொழுது. அல்லல் படுவது எவன் - ஏன் வருந்த வேண்டும்.)

லாபமும் - நஷ்டமும் விதியின் காரியந்தான். நம்முடைய காரியம் ஒன்றும் இல்லை என்பது கருத்து.

* * * *

8

விதி என்பது எங்கும் நிறைந்திருக்கிறது. உலகம் முழுவதும் நிறைந்திருக்கிறது. உலகை அதுதான் வழிவகுத்து நடத்துகிறது. சக்தி முழுவதும் அதனிடம் இருந்தே உலகத்திற்குக் கிடைக்கிறது. சகல சக்திகளுக்கும் ஆதாரமாய் இருப்பது விதிதான்.

அதன் திட்டப்படியே காரியங்கள் எல்லாம் நடைபெறும் மாறாக ஒன்றும் நடக்காது. அண்டத்திலும் நடக்காது. பிண்டத்திலும் நடக்காது.

ஆற்றுநீரில் மிதந்து போகிற மரத்தெப்பம், ஆற்றின் போக்கில் போய்க் கொண்டிருக்க வேண்டியதுதான்.

எதிர்த்து ஒன்றும் செய்யமுடியாது.

வெள்ளத்தோடு வெள்ளமாய் மிதந்துகொண்டே போகலாம். எவ்வளவுதூரம் வேண்டுமானாலும் போகலாம்.

எதிர்த்து ஏதாவது செய்ய ஆரம்பித்தால் தெப்பக்கட்டை கவிழும். ஏறி இருந்தவனும் கவிழ்வான்.

"ஊழில் பெருவலி
யாஉள! — மற்றொன்று,
சூழினும் தான்முந்(து)
உறும்" 137

(யாஉள - என்ன இருக்கிறது. ஒன்றும் இல்லை. மற்ற ஒன்று சூழினும் - விதியை ஏமாற்றி விடலாம் என்று வேறொரு தந்திரத்

தில் இறங்கினால், முந்துறும்-நாம் செயல்படும் முன்பே விஷயம் அதற்குத் தெரிந்துவிடும். அதற்கு ஏற்றபடி அது நடத்தும்)

கடவுளுடைய காரியமே எங்கும். அதையே செயல் (நியதி) என்கிறோம்.

அருள் கண்ணுக்குப் புலனாகாது. ஆனால் ஒரு குறியீடு வேண்டும் என்பதற்காக (இறைவனுடைய) திருவடி என்று அருளைச் சொல்கிறார்கள். கண்ணுக்குப் புலனாகிற ஒரு தூல மாகப் பாவனை செய்து பார்க்கிறபொழுது தான் கண்ணுக்குப் புலனாகாத உண்மையினிடத்துப் பக்தி சுரக்கும்.

"சிந்திப் பரியன;
சிந்திப்ப வர்க்குச்
சிறந்துசெந் தேன்
முந்திப் பொழிவன
சிந்தை நிறைந்திட;
மொய்த்திருண் டு,
பந்தித்து நின்ற
பழவினை தீர்ப்பன
பாம்புசுற் றி,
அந்திப் பிறையணிந்(து)
ஆடும்ஐ யாறன்
அடித்தல மே.

அப்பர் சுவாமிகள் இறைவனுடைய செயலை - எங்கும் நிறைந்த அருளை அப்படிக் கண்ணால்க் கண்டு உருகுகிறார்.

நாமும் அப்படி மனக்கண்ணால்த்தான் அருளைப் பார்க்க முடியும். அதற்கு ஒரு கண்ணாடி வேண்டும். அந்தக் கண்ணாடியே விதியின் விளையாட்டு.

# உண்மை ஒளி கல்வி

## 1

தமிழ்நாடு முழுவதும் - பட்டிதொட்டி எல்லாம் சினிமாக் கொட்டகை வந்துவிட்டன. ஐம்பது வருடங்களில் நடந்த காரியம் இது. அதற்கு முன்பே - இருநூறு வருடங்களுக்கு முன்பே பள்ளிக்கூடங்கள் வந்துவிட்டன.

பாடப்புத்தகம், பரீட்சை, அட்மிஷன், பாடத்திட்டம், ஆசிரியர், பாடவேளைகள், ரிசல்ட் எல்லாம் வந்துவிட்டன.

கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் எல்லாம் பள்ளிக்கூடங் களுக்குப் போட்டி போட்டுக் கொண்டு நுழைந்துவிட்டன.

மழலையர் பள்ளிகள்கூடக் காளான்கள் முளைத்தபடி முளைக் கின்றன.

திருவள்ளுவர் காலத்தில் பள்ளிக்கூடம் இல்லை; காலேஜ், யூனிவர்சிட்டி இல்லை. சினிமாக் கொட்டகை இல்லை. பாடப் புத்தகம், பரீட்சை, லெக்சர் ஒன்றும் இல்லை.

மக்கள் எல்லோரும் மக்களாக இருந்தார்கள். உண்மையோடு இருந்தார்கள். பக்தியோடு இருந்தார்கள். பண்பாட்டோடு இருந் தார்கள்.

யாரும் சும்மா இருக்கமாட்டார்கள். எல்லோரும் வேலை செய்தார்கள்.

பசுவை அன்போடு வளர்த்தார்கள். பசுவைப் பற்றியும், பசுவின் உபயோகம் பற்றியும், பசுவை எப்படிப் பாதுகாக்க வேண்டியது என்பது பற்றியும் அவர்களுக்குத் தெரியும்.

கால்நடைக் கல்லூரியில் போய் அவர்கள் படிக்கவில்லை.

விவசாயம் செய்தார்கள், ஆடை நெய்தார்கள், கட்டிடம் கட்டினார்கள். குளம் வெட்டினார்கள், உலோகங்களை உருக்கி வார்த்து வடித்தார்கள், திருவிழா நடத்தினார்கள். வாய்விட்டு. மனந்திறந்து நன்றாகப் பாடினார்கள். மகிழ்ந்து ஆடினார்கள், சமைத்தார்கள், சாப்பிட்டார்கள், உபசரித்தார்கள், குழந்தைகளை வளர்த்தார்கள்.

புத்தகங்களைச் சுமந்து பள்ளிக்கூடம் போய் பரீட்சை எழுதவில்லைதான்.

ஆனால் அவர்களுக்கு அடிப்படையான ஞானம், எதுஎது தெரியவேண்டுமோ, அதுஅது நன்றாகத் தெரிந்திருந்தது.

தாவர இயல், விவசாய இயல், உலோக இயல், பௌதீக இயல், ரசாயன இயல், தச்சியல், மருத்துவஇயல், தொழிலியல், வியாபார இயல், சங்கீதம், நாடகம், பரதநாட்டியம், ஓவியம் எல்லாம் நேருக்குநேராகத் தெரிந்திருந்தன.

பண்பாடு, பக்தி, ஒழுக்கம், உண்மை அவர்களிடம் இருந்தன.

மொத்தத்தில் வாழ்க்கையைப் பற்றிய ஞானம் தெள்ளத் தெளிய அறிந்தார்கள்.

மனிதர்களோடு மனிதர்களாய்ச் சேர்ந்து ஆனந்தமாக இருந்தார்கள்.

வெறும் வார்த்தைகளை அவர்கள் படிக்கவில்லை. விஷயத்தையே நேருக்கு நேராக அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

கரும்புக்குள் இன்சுவையோடுகூடிய சாறு ஊறிநிற்கிறதே அது எப்படி என்று அதிசயப்பட்டார்கள். நாணலில் அப்படிச் சாறு ஊறுவதில்லையே என்றும் அதிசயப்பட்டார்கள்.

கரும்பின்சாறு காய்ச்சக் காய்ச்ச வெல்லம் ஆவதைப் பார்த்தார்கள். அது பாயசத்தோடும், சர்க்கரைப் பொங்கலோடும் கலந்து அமிர்மாக விளைவதையும் பார்த்தார்கள்.

இப்படியே ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து அதிசயப்பட்டார்கள். அதனால் அவர்களிடம் அகம்பாவம் இல்லை. திமிர் இல்லை. பொறாமை இல்லை. பித்தலாட்டம் இல்லை,

விஷயங்களைத் தெரிவதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. விஷயங்களைத் தெரிந்து கொண்டே உழைத்தார்கள். வாழ்க்கையை நடத்தினார்கள்.

ஞானம் விளையும் பூமியாக இருந்தது தமிழகம். விஷய ஞானம், தெளிவு, ஈடுபாடு எல்லாம் இருந்ததால், கவி, இலக்கியம், கலை சம்பந்தமான நூல்கள் பலவற்றை உணர்ந்து படித்தார்கள். விளங்காத பகுதிகளை அனுபவம் உள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

இளமைப்பருவம் முழுவதையும், மூளை முழுவதையும், உணர்ச்சி முழுவதையும் பள்ளிக்கூடம் உறிஞ்சிக் குடிப்பதற்கு அவர்கள் இடங் கொடுக்கவில்லை.

சிலம்பம், மல்யுத்தம், வைத்தியம், கட்டுமான இயல், நடனம் முதலிய அம்சங்களில்த் தனித்தேர்ச்சி பெறுவதற்காக ஆங்காங்கு சிலர் இருந்து அனுபவங்களை விளக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் போய் விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொண்டார் கள் சிலர்.

குழந்தைகளிடம் மறைந்து கிடக்கும் சக்திகளைக் கண்டு பிடித்து வெளியே கொண்டுவரவும், அந்த சக்தியைக் குழந்தைகள் பார்த்து ஈடுபடவும் கல்வி பயன்பட்டது.

அதனால் குழந்தைகளுக்கு உண்மையின் மேல் ஆர்வம் உண்டாகியது. முயற்சியினிடத்து ஊக்கம் உண்டாகியது. வாழ்க்கையினிடத்து நம்பிக்கை ஏற்பட்டது.

பண்பாடு, ஒழுக்கம், கலை, பக்தி இவையே லட்சியமாக இருந்தன. கற்வேண்டிய பொருளாகவும் - பாடமாகவும் இருந்தன.

கற்கவேண்டியவற்றைக் கற்றார்கள். சந்தேகத்திற்கு இடம் இல்லாதபடி கற்றார்கள்.

கல்விக்கு ஒளி கொடுப்பதுபோல வாழ்ந்தார்கள்.

இது குறளாசிரியர் கண்ட கல்வி.

''கற்கக் கசடறக்
கற்பவை; — கற்றபின்
நிற்க அதற்குத்
தக'', 138

(கற்க - உண்மைக் கல்வியைப் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். வாழ்நாள் முழுவதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும்.)

கற்பவை கசடு அற கற்க - படிக்க வேண்டியதை மட்டும் படிக்க வேண்டும். பார்ப்பவற்றை எல்லாம் படிக்கவேண்டும் என்பது இல்லை. படிக்க வேண்டியதையே சந்தேகம் இல்லாதபடி படிக்க வேண்டும்.

கற்றபின் அதற்குத்தக நிற்க - வாழ்க்கையில் தெரிந்துகொண்ட உண்மையை லட்சியமாக வைத்துச் செயலாற்ற வேண்டும். விட்டு விடக்கூடாது. அதற்காக மேலும் மேலும் உண்மையைத்தேடி படி (கற்க) என்கிறார் குறளாசிரியர்.

2

உலகம் முழுவதும் அற்புதம் நிறைந்து கிடக்கிறது. ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு துளியும் அற்புதமாய் இருக்கிறது. அவ்வளவும் உண்மைதான். ஒரே உண்மைதான்.

இந்த உண்மையைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டும் அனுபவிக்க அனுபவிக்க அறிவு ஊறும். ரத்தம் ஊறுவது போல் ஊறும்.

மணலைக் கிளறக் கிளற நீர் ஊறுவதுபோல் கற்கக் கற்க அறிவு ஊறும். மேலும் மேலும் அறிவு ஊற வேண்டும். அப்படி ஊறுவதுதான் கல்வி என்கிறார் குறளாசிரியர்.

"தொட்டனைத்(து) ஊறும்
மணல்க்கேணி;- மாந்தர்க்குக்
கற்றனைத்(து) ஊறும்
அறிவு". 139

(தொட்ட அனைத்து - தோண்டும் அளவு. தோண்டத்தோண்ட; கற்றஅனைத்து - படிக்கும் அளவு; படிக்கப்படிக்க)

3

உண்மையைக் காண்பதிலும், அனுபவிப்பதிலும் ஆர்வம் ஏற்படவேண்டும். ஆர்வத்தை உண்டாக்க வேண்டும் கல்வி.

உண்மை எது பற்றியும் இருக்கலாம். ஒரு செடிக்குள்ளிருந்து பருத்தி என்று ஒன்று வருகிறதே - அது ஒரு உண்மை. அந்த பருத்தி பஞ்சாகிறது. நூலாகிறது. ஆடை ஆகிறது. உலகம்

முழுவதற்கும் அது ஒரு பெரிய உண்மையாக இருக்கிறது. மனித குலம் முழுவதற்கும் ஒரு சின்னமாகத் திகழ்கிறது பருத்தி. அது ஒரு உண்மைதான்.

எவ்வளவு காலமாகத் தொடர்ந்து உபகாரம் செய்து கொண்டு செய்து வருகிறது, பருத்தி. இன்னும் எவ்வளவோ காலத்திற்கு - மனிதகுலம் முழுவதற்கும் உற்ற துணையாக இருக்கப்போகிறது பருத்தி என்பது விளங்கவிளங்க உண்மை பிரகாசிக்கத்தானே செய்யும்?

சுடர்விட்டுப் பிரகாசிக்கும் உண்மையைப் பார்க்கப்பார்க்க ஆனந்தந்தான்.

நெருப்பையும் அதன் உபயோகத்தையும் கண்டவுடன் மனிதன் எவ்வளவு ஆனந்தம் அடைந்திருப்பான். நெல்லையும் கரும்பையும் வாழையையும் தென்னையையும் பயிரிட்டு, அவை விளைய விளைய - பூமிக்குள்ளிருந்து அவை பொங்கப் பொங்க மனிதனிடமும் ஆனந்தம் பொங்கித்தானே இருக்கும்.

பால் தயிரானது கண்டு துள்ளி இருப்பான் மனிதன். தயிரைக் கடைந்து வெண்ணெயைத் திரட்டுவதற்கும், வெண்ணெயை நெய்யாக உருக்குவதற்கும் எவ்வளவோ முயன்றிருக்க வேண்டும். அந்த முயற்சியில் இருக்கிறது கல்வி. ஆர்வத்தில் இருக்கிறது கல்வி. அனுபவத்தில் இருக்கிறது கல்வி.

பருத்தி, நெருப்பு, பால் மூன்றிலும் இருப்பது உண்மைதான். ஒரே உண்மைதான். உலகம் முழுவதும் - பேரண்டம் முழுவதும் உண்மை ஒன்றுதான்.

உண்மையைப் பார்க்கப் பார்க்க ஆனந்தம். அந்த உண்மை ஒன்றுதான். ஒன்றே ஒன்றுதான் என்று காணக்காணப் பேரானந்தம்.

உண்மையைக்கண்டு ஆனந்தம் அடைகிறான் மனிதன். அவன் ஆனந்தம் அடைவது போலவே மற்றவர்களும் ஆனந்தம் அடைகிறார்கள்; தன்னைப்போலவே மற்றவர்களும் ஆனந்தம் அடைவதைப் பார்த்து அவனுக்கு ஆனந்தவெறியே உண்டாகி விடுகிறது.

கல்வி என்றால் அப்படி ஆனந்த வெறியை உண்டாக்க வேண்டும்.

"தாம்இன்(பு) உறுவ(து);
உலகின் புறக்கண்டு,
காமுறுவர் கற்றறிந்
தார்" 140

(உலகு - மக்கள். காமுறுவர் - வெறி கொள்வர்)

4

உண்மையைக் காணும் ஆர்வமும் ஆனந்தமும் (கல்விச் செல்வம்) மனிதனுக்கு உயிர் போன்றது. அந்த ஆர்வமும் ஆனந்தமும் இருந்தால் தான் வாழ்க்கையில் உண்மை இருக்கும். நம்பிக்கை இருக்கும்.

உண்மைக் கல்வியாகிய செல்வம் இல்லாவிட்டால் வாழ்க்கை வெறும் கேலிக்கூத்துத்தான். கோமாளித்தனந்தான்.

இதை ஒரு அலங்கார நடையில் வைத்துக் காட்டுகிறார் கவிஞர்.

"கேடில் விழுச்செல்வம்
கல்வி; — ஒருவற்கு
மாடல்ல மற்றை
யவை". 141

கல்வி கேடு இல்விழுச் செல்வம் - பழுது இல்லாத உன்னதமான செல்வம் கல்வி ஒன்றுதான். மற்றையவை - கல்வி இல்லாமல் வீடு, நிலம், பணம், மனைவி, மக்கள் எல்லாமுமே. மாடு அல்ல - உண்மையான செல்வம் அல்ல. ஒருவற்கு - மனிதனுக்கு. மனிதனுக்கு என்றால், உலகம் முழுவதும் உள்ள மனிதனுக்கு என்று பொருள்.)

# இருளின் வலிமை—கல்லாமை

1

உண்மையைக் கண்ணாரக்கண்டு அனுபவிக்கிறவர்கள் ஞானிகள். அவர்கள் ஆனந்தத்தில் திளைத்தார்கள். உருகிக் கரைந்தார்கள்.

அவர்களுடைய அனுபவமும், ஆனந்தமும் கவியாக அவதாரம் எடுத்து வந்துள்ளன. திருக்குறள், கம்பராமாயணம், திருவாசகம், முத்தொள்ளாயிரம், பெரியாழ்வார் பாடல்கள், காரைக்கால் அம்மையார் பாடல்கள், குற்றாலக்குறவஞ்சி என்றெல்லாம் தமிழில் விளைந்து வந்துள்ளன.

இந்தப் பாடல்களுக்கு இலங்குநூல் என்று பெயர்.

தமிழனாய்ப் பிறந்து தமிழனாய் வாழ்கிற ஒவ்வொரு தமிழனும் இவற்றை அனுபவிக்கவேண்டும். உலகில் அவன் கண்டு உணரும் உண்மையின் அம்சம் ஒவ்வொன்றும் இவைமூலம் தெளிவு பெறும். உறுதிப்படும். அனுபவத்திற்கும் ஆனந்தத்திற்கும் ஒரு உருவமே கிடைத்துவிடும்.

இலங்குநூல் கற்றவர் உண்மையான மனிதர். முழுமனிதர். இலங்குநூல் கல்லாதவன் ஒருநிலையில் நிற்கமாட்டான். அங்கு ஓடுவான், இங்கு ஓடுவான், பரக்கப்பரக்க விழிப்பான்.

''விலங்கொடு மக்கள்
அனையர்; — இலங்குநூல்
கல்லாரோ(டு) ஏனை
யவர்''.

(ஏனையவர் - கற்றவர். மக்கள் அனையர். ஞானிகளுக்குச் சமான மானவர், ஞானிகளேதான். விலங்கு - மிருகம்.)

2

நிலம் ஒன்றுதான். ஆனாலும் பூமியில் எத்தனையோ வேறு பாடுகள் இருக்கின்றன. நன்செய், புன்செய், தோட்டம், நந்த வனம், தோப்பு, மேடு, பள்ளம் என்றெல்லாம் வேறுபாடு இருக்கின்றன.

வேறுபாடு எல்லாம் மனிதனுடைய செயலையும், பண் படுத்திய பண்பாட்டையும் ஒட்டி வந்தவையே.

அனுபவமும் ஆனந்தமும் விளைகிற கல்வி பெற்றவன் நயமான நன்செய் நிலம் போன்றவன். உலகு முழுவதற்கும் உயிர் கொடுக்கும் கரும்பும், வாழையும், காயும் கனியும் அல்லவா அதில் விளைந்து கொண்டிருக்கின்றன.

ஒருவன் இருக்கிறான் - வாழ்கிறான் என்றால் கற்றவன்தான். கல்லாதவன் வெறும் எண்ணிக்கைக்கு மட்டுமே இருக்கிறான்.

"உளர்என்னும் மாத்திரையர்
அல்லால் — பயவாக்
களரனையர் கல்லா
தவர்". 143

(உளர் என்னும் மாத்திரையர் அல்லால் - ஏதோ மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறான், நடமாடுகிறான் என்னும் கணக்கில்தான் கல்லாதவன் வாழ்வு. (மாத்திரை-அளவு) பயவாக்களர்-விளைச்சல் இல்லாத உவர்நிலம்.)

3

உண்மைக்கல்வி கற்றவர்கள்தாம் மனிதர். உலகம் என்னும் காட்டில் பூத்த நறுமலர்கள் அவர்கள். அதனால் கற்றவர்கள் ஒவ்வொருவரும் நல்லவர்கள்.

நல்லவர்கள் என்றால் கற்றவர்கள். உண்மைக்கல்வி கல்லாதவன் மனிதஉருவில் நடமாடினாலும் அவன் கொடிய விலங்குதான். வெகுமூர்க்கமான சர்ப்பந்தான்.

கொடியவனிடம் பதவி, அதிகாரம், பணம், எல்லாம் சேர்ந்து விட்டால் அந்த உலகம் தாங்கமுடியுமா?

அனுபவமும் ஆனந்தமும் நிறைந்த ஞானிகள் வறுமையில் வாடுவது கொடியதுதான். ஆனால் அந்தத்துன்பம் அவர்களோடு சரி. அவர்கள் வீட்டோடு சரி. ஆனால் உண்மையை உணராத (கல்லாத) கொடியவனுடைய செல்வம் தெருவைக் கெடுக்கும், ஊரைக் கெடுக்கும். நாட்டையே துன்புறுத்தும். மனிதகுலத்தையே அவமானப்படுத்திவிடும்.

''நல்லார்கண் பட்ட
வறுமையின் இன்னாதே;
கல்லார்கண் பட்ட
திரு''. 144

(நல்லார் - கற்றவர். வறுமையின் இன்னாது. வறுமையைவிடக் கொடிது).

குறிப்பு - உண்மையான கல்வி கற்றவர்களைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறார் திருவள்ளுவர். அவருடைய பரவசம் ஒரு ஆட்டம் போட்டுக்கொண்டு தமிழில் விளையாடுகிறது.

4

உண்மையை அனுபவிக்கவும் ஆனந்திக்கவும் கொடுத்து வைக்காதவன் மூடன். அவனால் சும்மா இருக்கமுடியாது. பொருளற்ற வெறும் வார்த்தைகளை உருப்போட்டு அவன் மூளைக்குள் திணித்து வைத்திருக்கிறான். அதைக் கொட்டித் தொலைக்க வேண்டும். முடியாது போனால் அவன் மண்டை வெடித்துவிடும்.

அதனால் உளறிக்கொண்டே இருப்பான். உளறலை ஆராய்ச்சி என்பான். சொற்பொழிவு என்பான். கட்டுரை என்பான். புதுக் கவிதை என்பான். புரட்சி, மறுமலர்ச்சி, கண்டுபிடிப்பு என்றெல்லாம் உளறுவான்.

கற்றுத் தெளிந்த அறிவாளிகளிடம் வந்தே உளறுவான். தன்கெட்டிக்காரத்தனத்தைக் காட்டுவான். ''உங்களுக்கு விளங்கவில்லை. விளக்குவதற்கு என்றே அவதரித்து வந்திருக்கிறேன்'' என்னும் தோரணையில் உளறுவான்.

கற்றவர்கள் கூடிக்குலாவும் கூட்டத்தில் இப்படி ஒரு கொடியவன் புகுந்து வாயைத் திறந்துவிட்டால் ஆனந்தம் என்ன பாடுபடும்? கொலையை விடக் கொடுஞ்செயல் உளறல்.

கல்லாதவனால் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்க முடியாது. உளறாமல் உண்மையை அவன் அனுபவிக்கிறான். ஆனந்

தம் அடைகிறான் என்றால் அது கலைமகள் செய்த புண்ணியந் தான். அன்னை கலைமகளுக்கு மேலும் ஒரு கல்விமான் கிடைத்து விட்டான் அல்லவா?

கல்லா தவரும்
நனிநல்லர்; — கற்றார்முன்
சொல்லா(து) இருக்கப்
பெறின்". 145

(கல்லாதவரும் - படியாதவர்கூட, நனிநல்லர் - நன்கு கற்ற அறிஞருக்குச் சமானம் ஆகிவிடுவார். எப்பொழுது? கற்றார்முன் சொல்லாது இருக்கப்பெறின் - படித்தவர்கள் சொல்கிறதைக் கேட்டு அவனால் அனுபவிக்க முடியாது. அப்படி முடியும் அவனால் என்றால், அவன் கற்றவன்தான்.)

குறிப்பு:- புத்தி இல்லாதவர்களிடம் சிக்கி மிகமிகத் தொல்லைக்கு ஆளாகி இருக்கிறார் குறளாசிரியர் என்று தெரிகிறது.

# நடமாடும் கலைக்கோயில்கள்—கேள்வி

1

திருவள்ளுவர்காலத்தில் பள்ளிக்கூடம் இல்லை. குழந்தைகளை மாணவர்கள் என்று மாற்றவில்லை. அட்மிஷனுக்காகப் பெற்றோர்களும் பிள்ளைகளும் மந்தை மந்தையாகிக் கூடி பள்ளிக்கூட முற்றத்தில் காத்துக்கிடக்கவில்லை. உழைப்பைக் கேவலமாக நினைக்கவில்லை. உழைப்பைக் கேவலப்படுத்துவதற்காகப் புதிது புதிதாய் அலுவலகம் திறக்கவில்லை. லஞ்சம் இல்லை. பொய் இல்லை. பயமும் இல்லைதான்.

சமுதாயம் முழுவதும் புத்தி இருந்தது. யோசனை இருந்தது, கலை உணர்வு இருந்தது. சந்தோஷம் இருந்தது.

கலை, இலக்கியம் இவற்றில் நாட்டம் இல்லாமல் மேல்ப் போக்காய்ப் போய்க் கொண்டிருந்தவர்களும் உண்டு. அவை எல்லாம் ஏன்? சோறும் துணியுந்தானே முக்கியம் என்று பேசுகிறவர்களும் இருந்தார்கள்.

சமுதாயம் அப்படி ஒரு இருட்டுக்குள் போய்விடக் கூடாதே என்று சிலர் பதறினார்கள். அப்படி வழிதவறிப் போகிறவர்களைத் தடுத்து கலையிலும் கவியிலும் இருக்கிற மதுரத்தை அனுபவிக்கும் படிச் செய்தார்கள்.

அப்படிச் செய்வதையே லட்சியமாக வைத்து வாழ்ந்தார்கள் அவர்கள். அவர்களுக்குக் கணக்காயர் என்று பெயர். உண்மையான ஆசிரியர்கள் கணக்காயர்கள்.

கலை, இன்பம், கவிஇன்பம், உண்மையில் தோய்வு இப்படியாக ஆனந்தத்தையே கண்டு தெளிந்து அதில் திளைக்கிறவர்கள் இவர்கள்.

தங்கள் அனுபவத்தையும் ஆனந்தத்தையும் எல்லோரிடமும் காட்டவேண்டும். எல்லோரும் பார்த்து அனுபவிக்க வேண்டும் என்று அவர்கள் துடித்தார்கள். அதற்காக நாடு முழுவதும் சுற்றி வந்தார்கள். சோம்பல் இல்லாமல் காற்றானது உலகம் முழுவதையும் சுற்றி வீசுவது போல இவர்களும் பட்டிதொட்டி எல்லாம், நாடு முழுவதும் சுற்றி, தங்கள் அனுபவங்களை எடுத்துச் சொன்னார்கள்.

இவர்களை ஞானிகள் என்று மதித்து உபசரித்தார்கள் மக்கள்.

ஞானிகளின் விளக்கங்களை மக்கள் ஆவலோடு கேட்டார்கள். தங்களுக்கு உகந்த காரியங்கள், தாங்கள் கண்ட காட்சிகள், விருப்பங்கள், எல்லாவற்றுக்கும் உறுதியான ஆதாரம் ஒன்று ஞானிகளின் விளக்கங்களிலிருந்து வருவதைப் பார்த்தார்கள். அதனால் வாழ்க்கையிலும் லட்சியத்திலும் மக்களுக்கு ஊக்கம் பிறந்தது.

ஞானிகளின் வாக்குமூலங்களும், தீர்ப்புகளும் பார்வையைக் கொடுத்தன. அதாவது பார்க்க வைத்தன. கேட்க வைத்தன. பேசவும் வைத்தன.

கலை, இலக்கியம், பக்தி, பண்பாடு, வாழ்க்கை எல்லாம் உயிரோடு இருந்தன. ஒளியோடு இருந்தன. உஷாராய் இருந்தன.

ஞானிகள் கண்ணும் கருத்துமாய் இருந்து சமுதாயத்தைக் காத்தார்கள். அதற்காக நாடுமுழுவதும் அலைந்தார்கள்.

அவர்களுடைய மெய்யுரையைக் கேட்டு உணர்வதற்குக் கேள்வி என்று பெயர். அது படிப்பைவிட உயர்ந்தது.

கலைகளை உணர்ந்து கற்பது நல்லதுதான். அதைவிட நல்லது கேள்வி. கற்ற கல்விக்கு உருவம் கேள்வியில் இருந்தே கிடைக்கிறது.

ஆர்வம், வேகம், தொனி, சாட்சியம், எல்லாம் நேருக்கு நேராய் நின்று தாண்டவம் ஆடுகிறபொழுது உண்மைக்கு வியாபகம் ஏற்படுவது இயல்புதான்.

குறளாசிரியர் காலத்தில் ஞானிகள் பலர் ஆங்காங்கு இருந்தார்கள். அவர்கள் மனிதர்களிடம் சென்று அனுபவங்களை உணர்ச்சியோடு எடுத்துச் சொன்னார்கள். ஜனங்கள் ஆவலோடு கேட்டு அனுபவித்தார்கள். அனுபவிக்கிறதில் ஒரு ஆத்திரமே இருந்தது சமூகம் முழுவதற்கும்.

''செல்வத்துள் செல்வம்
செவிச்செல்வம்; — அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம்
தலை.'' 146

உண்மைச் செல்வத்தை அழுத்தி அழுத்திக் காட்டுகிறது கவி. பாடலில் உள்ள தாளமும் இசையும் நாவைவிட்டுப் போகாது. நடனம் ஆடிக்கொண்டே இருக்கும்.

2

மனித சமுதாயம் முழுவதற்கும் உயிர் சோறுதான். ருசியுள்ள உணவுதான். வேளாவேளைக்கு ருசியுள்ள உணவு - மனதுக்கு உகந்த சாப்பாடு கிடைத்தால் போதும். சமுதாயத்தில் போக்கிரித் தனம் எவ்வளவோ குறைந்துவிடும்.

தட்டில்லாமல் உணவு கிடைக்கவேண்டும். வாய்க்கு ருசியாகக் கிடைக்கவேண்டும் என்பது கருதியே சமையல்த் துறையைப் பெண்களிடம் ஒப்படைத்திருக்கிறது. குழந்தைகளையும் அவர்களிடமே ஒப்படைத்திருக்கிறது.

ஆபீஸ் வேலைக்குப் போகிற பெண்களின் மனதில், மேஜை, நாற்காலி, பைல், தேடிவருகிறவர், போகிறவர், கூட வேலைபார்க்கிறவர், அதிகாரிகள் இவ்வளவுந்தான் நிற்கும். இவ்வளவையும் சமாளிக்க வேண்டும் ஒவ்வொரு நாளும். அப்புறம் மனம் என்ன ஆகிறது? தேகம் என்ன ஆகிறது? புத்தி என்ன ஆகிறது?

அடுப்பு, நெருப்பு, உணவு, கணவன், குழந்தைகள், விருந்தினர், பசி, ருசி எல்லாம் மனசைவிட்டு ஓடிவிடும்.

பல குடும்பங்கள் அமைதி இல்லாமல் தத்தளிக்கின்றன. வீடு இருந்தும் சாப்பாடு இல்லை. பெண்டாட்டி இருந்தும் ருசி இல்லை. அதனால் அமைதியும் இல்லை.

உணவும் ருசியும் மனிதனை அப்படி அதிகாரம் செய்கின்றன.

உணர்ந்த பண்பாட்டோடு ஒட்டிய நுட்பமான விஷயங்களை நயமாக எடுத்து விளக்குகிறார் ஒரு மகான். அதைக் கேட்கக் கேட்க ஆனந்தமாக இருக்கும்.

அந்த ஆனந்தத்தை லட்சியமாகக் கொண்டவனை ருசி அதிகாரம் பண்ணாது. தன்னுடைய உணவை இன்னொருவர்தான் - மனைவிதான் செய்து கொடுக்க வேண்டும் என்னும் கட்டுப் பாட்டுக்கு அவன் உடன்படமாட்டான்.

வயிற்றையும் நாவையும் தாஜாப் பண்ணுகிற காரியம் கேள்வி உடையானிடம் இல்லை.

"செவிக்குண(வு) இல்லாத
போழ்து; — சிறிது
வயிற்றுக்கும் ஈயப்
படும்." 147

(செவிக்குஉணவு - நல்ல கேள்வி. வயிற்றுக்கும் ஈயப்படும் - நாவுக்கு மட்டும் அல்ல, வயிற்றுக்கும் உபசாரம் செய்யவேண்டிய நிலை ஏற்படும். இரண்டுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலை உண்டு.)

3

உண்மையான அனுபவங்களைக் கேட்டுச் செவிக்கு உணவு கொடுக்கிறவர்கள். செவிமூலம் மனப்பசியை ஆற்றுகிறவர்கள் பண்பாளர்கள்.

உயர்ந்த லட்சியத்தையே அமிர்தமாக எடுத்து சமுதாயத் துக்குக் கொடுக்கிற ஞானிகளுடன் சேர்ந்து மதிக்கத்தக்கவர்கள் அவர்கள்.

"செவிஉணவில்க் கேள்வி
உடையார்; — அவிஉணவின்
ஆன்றாரோ(டு) ஒப்பர்
நிலத்து." 148

(நிலத்து - உலகில். அவிஉணவின் ஆன்றார் - சமுதாய நலனுக் காக எவ்வளவோ தியாகம் செய்து, குழப்பம், தடித்தனம் முதலிய நஞ்சைக் களைந்து, சமாதானம் ஆனந்தம் முதலிய இன்பத்தை - அமிர்தத்தை வழங்கும் ஞானிகள். அவிஉணவு - யாகத்தில் வரும் உணவு)

4

வாய்க்கும் வயிற்றுக்கும் மட்டும் அடிமையாகிவிட்டார்கள் மனிதர்கள் என்றால், அது பெரிய ஆபத்துத்தான். உண்மை, ஞானம், ஆனந்தம் ஒன்றும் வேண்டாம், வேளாவேளைக்குச் சாப்பாடுதான் வேண்டும். வாய்க்கு ருசியாக வேண்டும். வயிறு முட்ட வேண்டும் என்னும் சோற்றுமாடன்களாகவே சமூகம் இருந்துவிட்டால், பிறகு உய்யும் வழி ஏது.

இந்த இனம் இருந்தாலும் ஒன்றுதான். போனாலும் ஒன்று தான். உலகம் அதுபற்றி யோசிப்பது இல்லை.

"செவியின் சுவைஉணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும்
என்!." 149

(செவியின்சுவை - கேள்வி. உணரா - அனுபவிக்காத. அவிதல் - அழிதல்)

5

உண்மையான கவி, கலை இவற்றைப் படிக்கிறபொழுது உயர்ந்த லட்சியம் மனதில் தோன்றும். அனுபவத்தோடு வைத்துக் கலையைப் பார்க்கிற எல்லோருக்குமே லட்சியம் ஒரு சாயலில் தெரியவே செய்யும்.

ஆனால் அந்தக் காட்சி மங்கலாக இருக்கும். தெளிவு கொடுக்காது. நிலையாய் மனதில் நிற்கவும் செய்யாது. வாழ்நாள் முழுவதும் கலையோடும், கவியோடும் சதா தோய்ந்து அனுபவிக்கிறவர்களின் மனதில்தான் நிலைத்த காட்சியாய் அவை நிற்கும்.

படிப்பையே வேலையாகக் கொள்ளாதவர்களும் தெளிவு பெற முடியும். லட்சியத்தைத் தொட்டுப் பார்ப்பதுபோலப் பார்த்து அனுபவிக்க முடியும். எப்பொழுது?

அனுபவம் மிக்கவர்களின் மெய்யுரையைக் கேட்டு மனம் ஈடு படுகிறபொழுது. ஏன், நெறி புலப்படாமல், "அப்படியா, இப்படியா" என்று தடுமாறுகிற பொழுது ஊன்றுகோலாய் நின்று தாங்கும் கேள்வி.

"கற்றிலன் ஆயினும்
கேட்க; — அஃ(து)ஒருவர்க்(கு)
ஒற்கத்தின் ஊற்றாம்
துணை." 150

(ஒற்கம் - வழுக்கு. ஊன்றுஆம் துணை - ஊன்றுகோல்)

6

பண்பாடான விஷயங்களைக் கவிகள் மூலமும் கலைகள் மூலமும் எடுத்து அமிர்தம் பரிமாறுவதுபோல் பரிமாறுவார்கள் ஞானிகள். அவர்கள் சொல்லை மனம் கொடுத்துக் கேட்பவர்கள், பக்திமான்களாய்த் திகழ்வார்கள். அடக்கமும், ஒழுக்கமும் நிறைந்த மரியாதையை அவர்கள்மூலம் பார்க்கலாம். அவர்கள் சொல் மூலமாகவும் பார்க்கலாம்.

கேள்வி ஞானம் இல்லாதவர்கள்.

"நுணங்கிய கேள்வியர்
அல்லார்; — வணங்கிய
வாயினர் ஆதல்
அரிது." 151

(வணங்கிய வாயினர் ஆதல் அரிது - எளிமையாகவும் இனிமையாகவும் பேசமாட்டார்கள் (அரிது - முடியாது) )

7

ஞானிகள் விளக்கிய அனுபவத்தை - உண்மையை, அம்சம் அம்சமாக எடுத்துப் பார்த்து அனுபவிக்கும் கேள்வி உடையவர்கள். மறந்தும் அபத்தமாய்ப் பேசமாட்டார்கள்.

கனவில்க்கூட நல்லதையே அவர்கள் காண்பார்கள்.

"பிழைத்துணர்ந்தும் பேதைமை
சொல்லார்; — இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி
யவர்." 152

(பிழைத்துஉணர்ந்து - தெரிந்ததை மறந்த நிலையிலும், இழைத்து உணர்ந்து ஈண்டிய - இழை இழையாக ஒவ்வொரு அம்சத்தையும் எடுத்துப் பார்த்து அனுபவத்தோடு சேர்த்து ஆனந்தம் பெறுகிற கேள்வியவர் - கேள்வி அனுபவம் உடையவர்)

8

எத்தனையோ விஷயங்களை வாசிக்கிறான். உண்மை புலனாகவில்லை. வார்த்தைகளே மிஞ்சுகின்றன. அவனே சான்றோர்களின் தெளிவுரைகளைக் கேட்கவும் செய்கிறான். அப்பொழுதும் வார்த்தைகளே செவியில் விழுகின்றன. அப்படியே மூளையைப் போய்த் தாக்குகின்றன. மூளையைச் சுற்றி ஒரு கோட்டையே கட்டிவிடுகின்றன.

விஷயம், உணர்ச்சி, அனுபவம் ஒன்றும் செவியில்படவில்லை. நுழையவும் முடியவில்லை. அப்படி இரும்பால் ஆன செவியில் தொண்டி விழவா செய்யும்?

"கேட்பினும் கேளாத்
தகையவே; — கேள்வியால்த்
தோள்க்கப் படாத
செவி." 153

(கேளாத்தகைய - முழுச்செவிடுதான். தோள்க்கப்படாத செவி, உண்மையும் உணர்ச்சியும் ஒன்று சேர்ந்தே தொளை போட முடியவில்லை என்றால், அந்த முரட்டுச் செவியை மரஆணி வைத்து அடித்து மூடிவிட்ட செவி என்றுதான் சொல்ல வேண்டும். (தோள்க்க - தொளைக்க)

குறிப்பு:- பள்ளிக்கூடங்களும் வெற்றுரைகளும் உண்மை அறிவை அமுக்கி வைத்துள்ளன. அவை ஒழிந்தால் அல்லாது விமோசனம் இல்லை என்பதைக் கவிகள் தெள்ளத்தெளிய எடுத்துச் சொல்கின்றன.

கேள்விதான் உண்மைக்கல்வி என்பதை விளக்கிவிடுகின்றன.

# அறிவுச் செல்வம்

1

விவசாயம், வியாபாரம், தொழில் எல்லாம் அறிவிலிருந்து உண்டாகின்றன. கலைகள் பிறப்பதற்கும் அறிவு துணை செய்கிறது. அறிவானது உணர்ச்சியாய் செயல்படுகிற பொழுது அறவுணர்வுகளுக்கு உயிர் கிடைக்கிறது. உருவமும் கிடைக்கிறது. பட்டை தீட்டிய வயிரமாய் ஜொலிக்கின்றன அறப்பண்புகள்.

உலகம் முழுவதும் அறிவை லட்சியமாக வைத்து வாழ்கிறது. அந்த அறிவுக்கே லட்சியம் ஒன்று இருக்கிறது.

உண்மைதான் அறிவுக்கு லட்சியம்.

எல்லாம் ஒன்றுதான் என்றும் ஒரே சக்தியின் செயல்தான் எல்லாம் என்றும் காண்பதுதான் அறிவுக்கு லட்சியம்.

ஒன்றாகக் காணும் காட்சியே அறிவின் லட்சியம்.

''எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும்; — அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து)
அறிவு''. 154

(எப்பொருள் - எந்த விஷயமும். மெய்ப்பொருள் - உண்மை, எங்கும் கடவுளின் செயல் ஒன்றே என்னும் உண்மை).

2

உண்மை விளங்கிவிட்டால் - உண்மையைக் கண்டு புளகாங்கிதம் அடைந்து விட்டால் போதும். தாங்கள் கண்டு அனுபவித்த உண்மையை மற்றவர்களுக்குக் காட்டுவார்கள். அப்படிக் காட்டுவதே அவர்கள் காரியம்.

அனுபவித்த உண்மையை ஊட்டி விடுவார்கள். குழந்தைக்கு அமிர்தம் கொடுக்கும் தாய்போல், சேர்ந்து ஊட்டுவார்கள். விஷயம், உணர்ச்சி, உண்மை எல்லாம், பாலும் தேனும் சேர்ந்து இறங்குவதுபோல் கேட்பவர் உணர்ச்சியில்ப் போய்க் கலந்துவிடும். அப்படி "நினைத்து நினைத்து பார்த்துப் பார்த்து" மகிழத்தக்க பேருண்மையாக இருக்கும் அவர்கள் சொல்கிற விஷயம்.

சொல்வதோடு நின்றுவிடுவது இல்லை அவர்கள் காரியம். மேலும் மேலும் உண்மையைத் தெரியத் துடிப்பார்கள். காதல் வெறியோடு துடிப்பார்கள்.

உண்மையைத் தெரிவதில் மோகமும், பிறருக்கு விளக்குவதில் தாகமும் அறிவுடையார் காரியம்.

"எண்பொருள ஆகச்
செலச்சொல்லி; — தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப(து)
அறிவு". 155

(எண்பொருள் - யோசிக்கச் செய்யும் உண்மை நுண்பொருள்-நுட்பமான தத்துவ நிலைகள்.)

3

அறிவு உள்ளவனிடம் பயம் இருக்காது. வீரம் கொலு இருக்கும் இடமே உண்மை அறிவுதான். ஆனால் பழி பாவங்களைப் பார்த்த உடன் - அவற்றை எங்கு பார்த்தாலும் சரி, பதறி விடுவார்கள். தங்களிடமே அவற்றைக் கண்டுவிட்டதுபோலப் பதறுவார்கள். தன் உடம்பில் புற்றுநோய் இருக்கிறது என்று தெரிந்தவுடன் எப்படிப் பதறுவான் மனிதன். அப்படிப் பதறுவார்கள் பழிபாவங்களை எண்ணி. எங்கேயோ, உள்ள பழிபாவங்களை எண்ணியே பதறிவிடும் அறிவு.

"அஞ்சுவது அஞ்சாமை
பேதைமை; — அஞ்சுவ(து)
அஞ்சல் அறிவார்
தொழில்". 156

(அஞ்சுவது - பழிபாவம்)

4

மரணம் நிச்சயம் என்பதைக் கண்டு தெளிந்தவர்கள் அறிஞர்கள். பொங்கல்த்திருவிழா வருகிறது. இரண்டு நாட்களுக்கு

முன்பே கரும்பு, மஞ்சள்க்குலை, தேங்காய், வெல்லம், பச்சரிசி, நெய், பழம் எல்லாம் தயார்பண்ணி வைத்துக் கொள்கிறான். பொங்கல் நாளை எதிர்பார்த்து ஆவலோடு நிற்பானே ஒழிய, அது ஏன் வருகிறது என்று பயப்படமாட்டான்.

தெரிந்து அவற்றைத் திருத்தமாகச் செய்து முடித்தவன் மரணத்தை நோக்கிப் பயப்படமாட்டான்.

எமபயம் அறிஞனிடம் வாலாட்டாது.

"எதிரதாக் காக்கும்
அறிவினார்க்(கு) — இல்லை;
அதிர வருவதோர்
நோய்" 157

(எதிரதுஆக காக்கும் அறிவினார் - செய்யவேண்டியதை முன் கூட்டியே செய்துமுடித்த அறிஞர். கணக்கில் பாக்கி இல்லாத வர்கள். அதிரவருவதோர் நோய் - அட்டகாசமாய் அதட்டிக் கொண்டுவரும் எமபயம்)

5

தாமரைப்புஷ்பத்திடம் என்ன இருக்கிறது? பாங்கியில் பணம் போட்டு வைத்திருக்கிறதா? நிலபுலம் உண்டா?மாடிவீடு உண்டா? வயிர நகை உண்டா, சட்டை கோட், டர்பன், அங்கவஸ்திரம் உண்டா? ஒன்றும் வேண்டாம் என்றிருக்கிறது தாமரைமலர்.

எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது தாமரைமலர். அதன் ஆனந்தத்தைப் பார்த்து லட்சுமிதேவி அதனிடம் ஓடிவருகிறாள். சரஸ்வதிதேவி ஓடிவருகிறாள். பிரம்மாவே ஓடிவருகிறார். போட்டிபோட்டுக் கொண்டு இடம் பிடிக்கிறார்கள் தாமரையில்.

காற்று, தண்ணீர், சூரியஒளி, மண் இவை போதும் என்று கவலை இல்லாமல் இருக்கிறது தாமரை மலர்.

அதனிடம் ஒரு குறையும் இல்லை. நிறைந்திருக்கிறது. அறிவுடையவர்கள் அப்படி நிறைந்திருப்பார்கள். கவலை, ஏக்கம், குறை ஒன்றும் இல்லாமல் ஆனந்தம் பொங்கித் ததும்பும் அறிவுடையாரிடம்.

"அறிவுடையார் எல்லாம்
உடையார்"

ஒருவனிடம் நான்கு துணி ஆலைகள் இருக்கின்றன. பத்து வியாபார நிலையங்கள் இருக்கின்றன. பல கணக்கில் பாங்கியில் பணம்போட்டு வைத்திருக்கிறான். மாடமாளிகைகள் பல. பணி யாளர்கள் பலர். விளைநிலம் ஏராளம். சேர, சோழ, பாண்டியர் களில் ஒருவனோ என்று சொல்லும்படி இருக்கிறது செல்வம்.

ஆனால் அவன்மனம் எப்பொழுதும் தவித்துக் கொண்டே இருக்கிறது. அமைதியே இல்லை. ஒன்றையும் அனுபவிக்கமுடியா மல் தவிக்கிறான்.

"தன் மாளிகையை ஒட்டிய காலிமனையைக் கொடுக்க மாட்டேன் என்கிறானே! அதையும் சேர்த்து ஒரே சதுரம் ஆக்கி வேலிபோட முடியவில்லையே! என்று கலங்குகிறான்.

கலக்கமும் வேதனையும் அவன் உள்ளத்தைப் பிடித்து ஆட்டு கின்றன. தங்கம், வயிரம், மாளிகை, மனைவி, மக்கள், நெய், பருப்பு, கனி, தேன் எவ்வளவு இருக்கின்றன அவனிடம். ஒன்றை யும் உள்ளே வரவிடமாட்டேன் என்கிறது அவன் மனம்.

என்ன இருந்து என்ன பலன்.
இனிப் பாடலைப் பார்க்கலாம்.

"அறிவுடையார் எல்லாம்
உடையார்; — அறிவிலார்
என்னுடைய ரேனும்
இலர்". 158

(என்னுடையரேனும் - எல்லாச் செல்வங்களும் அவர்களிடம் இருந்தாலும். இலர் - ஒன்றும் இல்லாத தரித்திரர்கள்தான் அறி வில்லாதவர்கள்)

குறிப்பு :- அற்புதமான பாடல், உண்மையை அப்படியே கையில் எடுத்துக் கொடுக்கிறது கவி; தமிழ் செய்கிற காரியம் அது.

# வழிகாட்டும் பெரியவர்கள்

## 1

உண்மையும் அனுபவமும் நிறைந்தவர்கள் அறிஞர்கள். அவர்கள் உணர்ச்சிமயமாக இருப்பார்கள். அன்பு, பொறுமை, தெளிவு, உறுதி, பக்தி, ஆனந்தம் இப்படி உணர்ச்சி மயமாக இருப்பார்கள்.

அறிஞர்கள்தான் பெரியவர்கள். அரசர், அமைச்சர் நீதிபதிகள், போர் வீரர், வைத்தியர், இஞ்சினியர், கொத்தர், தச்சர் எல்லோரும் அறிஞர்களையே பெரியவர்கள் என்று மதித்தார்கள். தங்களுக்கும். நாட்டுக்கும் வழிகாட்டும் பெரியவர்கள் என்று அறிஞர்களையே மதித்தார்கள்.

ஒருநாட்டில் எல்லோரும் அறிஞர்கள் ஆகிவிட முடியாது. ஆனால் புத்தி உள்ளவர்களாக இருக்கவேண்டும். அறிஞர்களைப் பார்க்கவும், மதிக்கவும், பழகவும் புத்தி வேண்டும்.

அறிஞர்களின் உறவை, கடவுளின் அருள் என்றுதான் சொல்ல வேண்டும். அறிஞர்களின் மனதுக்கு உகந்தவன் ஆகிவிட்டால் அவனுக்கு என்ன குறை? அவனுடைய சொல்லுக்கு ஒரு சக்தி, நடைக்கு ஒரு சக்தி. அவனுடைய செயல் ஒவ்வொன்றும் சக்தி நிறைந்த செயலாக இருக்கும்.

சக்தி முழுவதுக்கும் இருப்பிடம் என்று சொல்லலாம் அறிஞர் உறவை.

''தம்மில் பெரியார்<br>
தமரா — ஒழுகுதல்;<br>
வன்மையுள் எல்லாம்<br>
தலை.''

(தமரா(க) - உறவாக, வேண்டியவராக, வழிகாட்டியாக. வன்மை - வல்லமை)

2

அறிஞர்களை மதிக்கவேண்டும். அவர்களை அவமதிக்கிறது என்று ஏற்பட்டால், முடிவு, அதோகதிதான். நாட்டுக்கு நல்லது அறிஞர்களை மதித்துப் போற்றுதல். பெரியபெரிய சாம்ராஜ்யங்கள்கூட அறிஞர்களை மதிக்கத் தவறியதால் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கின்றன.

சுற்றி உள்ளநாடுகள் பலவும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு நாட்டை விரோதிக்கின்றன - இடையூறு செய்கின்றன என்றால் அதைச் சமாளிக்க முடியாதுதான். அளவற்ற சக்தியை உடைய நாடும் திணறும். செயலற்றுத் தடுமாறும். ஊரில் உள்ள எல்லோரும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் எதிர்க்கிறார்கள். வெளியில் உள்ளவர்களும் எதிர்க்கிறார்கள். அப்படியானால் அவன் நிலை பரிதாபத்திற்கு உரியதுதான்.

பெரியவர்களுடைய பழக்கத்தை இழப்பது அதைவிடப் பரிதாபத்திற்கு உரியது.

''பல்லார் பகைகொளலில்ப்
பத்தடுத்த - தீமைத்தே
நல்லார் தொடர்கை
விடல்.'' 160

(பத்துஅடுத்த - பத்துமடங்கு, நூறுமடங்கு, ஏன் ஆயிரம் மடங்கே. அதாவது அளவற்றபடி, தொடர்கைவிடல் - நட்பை இழத்தல்.)

# அமிர்தத்தை நஞ்சுடன் கலக்கவேண்டாம்

1

அறிவுத்தத்துவம் மிகவும் உறுதியானது. வயிரம்போல் உறுதி யானது. ஆனாலும் அறிவுத்தத்துவத்துக்கு ஒருகுறை உண்டு. அந்தக் குறையைக் களைய முடியவில்லை அறிவுத்தத்துவத்தால்.

நல்லெண்ணம் இல்லாத - பொறுப்பற்ற கயவர்களிடம் ஒருவன் பழகுகிறான் என்று வைத்துக் கொள்வோம். பண்பாடும் அறிவும் அவனிடம் இருந்தாலும் அது எடுபடாது. மெல்ல மெல்லக் கீழான பண்புகளுக்கு இரையாகி வசம் அழிந்துபோவான்.

தரங்கெட்டவர்கள் பழக்கத்தில் நாட்டம் உண்டாகிவிட்டால் அவன் அறிவு செயலற்றுப் போய்விடும்.

கெட்டவர்கள் இவனிடம் வந்து இவனுடைய காரியங்களைப் பார்த்து கரைகிறார்கள் என்றால் ஒரு வேளை நல்லது நடக்கலாம். கெட்டவர்களிடம் இவன் பிரியம் கொண்டுவிட்டான். அந்தப் பிரியத்தை இவனால் கழற்ற முடியவில்லை என்றால் இவனுடைய உணர்ச்சி, செயல், நோக்கம் எல்லாம் அப்படி அப்படித்தான்.

மேலெழுந்தவாரியாகத்தானே அறிஞன் தொடர்புவைத்திருக் கிறான். ஒட்டாமல்த்தானே பழகுகிறான் - அப்படி இருக்க தீய வனுடைய போக்கு அறிஞனை எப்படிக் கெடுக்கமுடியும் என்று நினைக்கலாம். வானத்திலிருந்து மழையானது நீரைக்கொட்டு கிறது. வெள்ளமாய்த்திரண்டு ஓடுகிறது நீர். ஓடுகிற நீருக்கு வேகம் அதிகம். ஆற்றல் அதிகம். ஒட்டாமல்த்தான் ஓடுகிறது.மேலெழுந்த வாரியாகத்தான் ஓடுகிறது. ஆனாலும் சவமாய்க் கிடக்கிற நிலம் நீரை மாற்றிவிடுகிறது. கரும்புள்ளி செம்புள்ளி குத்தி வர்ணம்பூசி விடுகிறது மண்.

நீர்தான் தடுமாறியது. மண் விட்டுக் கொடுக்கவில்லை. நஞ்சோடு அமிர்தம் பழகக்கூடாது.

''நிலத்தியல்பால் நீர்திரிந்(து)
அற்றாகும்; — மாந்தர்க்(கு)
இனத்தியல்ப(து) ஆகும்
அறிவு''. 161

(அற்றாகும் - அதுவாகும். மண்ணின் நிறத்துக்குத்தக்கபடி மாறும். இனத்து இயல்பது ஆகும் - கூட்டம் எப்படியோ, அப்படி நிறம் மாறும் புத்தி.)

2

அன்பு, கோபம், வீரம், சோகம் முதலிய உணர்ச்சிகள் மனதில் இருந்தே உதிக்கின்றன. அறிவிலிருந்து உதிக்கின்றன என்று சொல்லலாம்.

ஆனால் மனம் என்று ஒன்று இருக்கிறதே எண்ணம், நினைப்பு, யோசனை இவை சேர்ந்த அறிவு -அதுவே, உறவாடுகிற கூட்டத்திலிருந்துதான் உதிக்கிறது.

நடவடிக்கைதானே மனிதனுக்குப் பிரதிநிதி. கூட்டாளிகளின் போக்கை அனுசரித்தே நடவடிக்கைகள் வரும்.

''மனத்தான் ஆம் மாந்தர்க்(கு)
உணர்ச்சி; — இனத்தான் ஆம்
இன்னான் எனப்படும்
சொல்'' 162

(மனத்தான்ஆம் உணர்ச்சி - அறிவுத்தத்துவம் செயல்படும் விதத்தில் உணர்ச்சி நிறம் பெறுகின்றன. இன்னான் எனப்படும் சொல் - இவனா? இவன் இப்படிப்பட்டவன் என்னும் அபிப்ராயம் அவன் சேக்காளிகளை வைத்து வரும்.

3

வேண்டியவர்களிடம் கேட்ட விபரங்கள், படித்த சமாச்சாரம், பிறர் சொல்லிக் கொடுத்த சங்கதிகள், ஏற்பட்ட அனுபவங்கள் இவற்றின் மொத்த உருவத்தையே அறிவு என்கிறோம். விபரம், சமாச்சாரம், சங்கதி அனுபவம் அவ்வளவும் எங்கிருந்து கிடைக்கின்றன? நம்மைச்சுற்றி உள்ள மனிதர்களிடம் இருந்தே-பெற்றோர், சுற்றத்தார், நண்பர், தோழர், ஆசிரியர் இப்படி நாம் பழகுகிறவர்களிடமிருந்தே கிடைக்கின்றன.

சமூகம் - இனம் என்னும் ஒன்றிடமிருந்தே கிடைக்கின்றன.

சமூகம் தந்த இந்தத் துணுக்குகளை வைத்து அப்படியும் இப்படியும் யோசனைப் பண்ணுகிறது மனம். சீட்டுக்கட்டைக் கலைத்துச் சேர்ப்பதுபோல் சமூகம் கொடுத்த துணுக்குகளை வைத்து விளையாடுகிறது மனம்.

நம்முடைய அறிவுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. அது சமூகத்தின் அனுபவம் வரன்முறை - ஒழுங்கு அவ்வளவுதான்.

ஆனால் அறிவு நம் மனத்திலிருந்து உதயமாகி வந்தது போல நம்மை ஏமாற்றுகிறது.

சேர்க்கைதான். உறவாடும் கூட்டந்தான் நமக்குப் பாதை காட்டுகிறது. வழி நடத்துகிறது. அதனால் நல்ல பண்பாடுடைய வர்களைத் தேடிச் சென்றே பழகவேண்டும்.

"மனத்து ளதுபோலக்
காட்டி — ஒருவற்(கு)
இனத்துள(து) ஆகும்
அறிவு". 163

(அறிவு - செயல்களுக்கு மூலமான தீர்மானம், நினைப்பு. இதையே அறிவு என்கிறோம். இந்த அறிவு, மனத்துஉ(ள்)ளது போலக் காட்டி - மனதில் இருக்கிற ஒன்று போலவும், மனதிலிருந்தே உதித்ததுபோலவும் தெரிகிறது. ஆனால் உண்மையில், அந்த அறிவு, இனத்து உள்ளது - சமூகத்திலிருந்தே கிடைக்கிறது)

4

நல்லவர்களிடம் பழகி, அவர்கள் உறவை வைத்துக் கொண் டால் போதும், மனம் பளிங்கு போலப் பிரகாசிக்கும். செயல்களும் சுடர்விட்டு ஒளிவீசும்.

"மனத்தூய்மை செய்வினை
தூய்மை இரண்டும்
இனத்தூய்மை தூவா
வரும்". 164

(இனம் தூய்மை தூவாவரும் - சேக்காளிகள் நல்லவர்களாக இருக்கவேண்டும். அந்தப் பண்பாகிய வித்திலிருந்து-நல்ல பண்பைத் தூவி விதைக்கிறதின் மூலம் மனத்தெளிவு உண்டாகும். செயல் நலமும் உண்டாகும்).

# ஆழம்தெரியாமல் காலை விடக்கூடாது

1

உள்மலையிலும் சரிவிலும் காடுகள் உண்டு. காடுகளுக்குள் சுனை, பொய்கை, குட்டை ஆகியவை இருக்கும். நீர்நிலையை ஒட்டிய புதரில் முன்கூட்டி வந்து ஒளிந்திருக்கும் புலி.

மான் முதலிய மிருகங்களை எதிர்பார்த்து ஒளிந்திருக்கும். அவைகளுக்குத் தெரியாமல் அவைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் புலி.

தாகங் கண்ட மான் முதலிய பிராணிகள் நீர்த்துறைகளில் வந்து நீர் அருந்தும். அவை சற்றும் எதிர்பாராத முறையில் அவற்றின் மேல் பாய்ந்து அடித்துவிடும் புலி.

நம்மைச்சுற்றி உள்ள மனிதர்களும், நாம் எப்பொழுது கீழே விழுவோம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விழுந்தவுடன் அவர்களுடைய ஆத்திரத்தை எல்லாம் நம்மேல் கொட்டுவதற்குக் காத்து நிற்கிறார்கள்.

நோயானது உடம்புக்கு உள்ளேயே இருக்கிறது. தசைக்கூறுகளில் மட்டும் அல்ல, நரம்புகளுக்குள்ளும், எலும்புகளுக்குள்ளுமே நோய் உட்கார்ந்திருக்கிறது.

எப்பொழுது தளர்வு உண்டாகும் என்று காத்துக்கொண்டிருக்கிறது.

வேண்டாதவர்கள் மட்டும் அல்ல, வேண்டியவர்கள் என்று நாம் நினைக்கிறவர்களில் பலருமே ''ஒன்றில் தோற்று அவமானப் படமாட்டானா இவன்'' என்றுதான் காத்து நிற்கிறார்கள்.

இதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய காரியம் ஒவ்வொன்றையும் யோசித்து வரவு செலவு என்ன? சாதகபாதம் என்ன, என்பதைச் சரியானபடி கணக்கிட்டே செய்யவேண்டும.

அள்ளிக்குவித்து விடலாம் என்று மடத்தனமாய் எதிலும் போய் விழுந்துவிடக்கூடாது. கையில் இருந்ததும் போய்விடும். உலகம் அனுதாபப்படாது. ஆத்திரத்தைக் கொட்டும். வஞ்சந் தீர்க்கும்.

முதல்போனது கூடப் பெரிதில்லை. வேண்டியவர்களும் வேண்டாதவர்களும் அணிவகுத்து நம்மைக் கேவலமாக ஒதுக்கு கிறது வேதனைதரும் விஷயம்.

"ஆக்கம் கருதி
முதல் இழக்கும் செய்வினை,
ஊக்கார் அறிவுடை
யார்". 165

(ஆக்கம் - லாபம் - ஊக்கார் - செய்யமாட்டார்கள்)

2

யோசனை இல்லாமல் ஒருசெயலில் ஈடுபடுதல். அதில் ஆவேசம் கொள்ளுதல் நல்லதல்ல. முரட்டுத்தனமாக ஒன்றில் இறங்கக்கூடாது. புத்தி இல்லாமல் செய்கிற காரியம் நம்மை அனாதை ஆக்கிவிடும். சிதறிக் கிடக்கும் எதிரிகளை ஒன்று திரட்டி அணிவகுக்கச் செய்துவிடும்.

"வகையறச் சூழாது
எழுதல்; — பகைவரைப்
பாத்திப் படுப்பதோர்
ஆறு''. 166

(வகையறச்சூழாது எழுதல் - வரவு செலவு இனங்களை வகைப் படுத்திப் பார்த்து கணக்கிடாமல் செயல்படுவது, செயல்பட முனைவது, பாத்திப்படுப்பதோர் ஆறு - அவர்களை அணிவகுத்து நிற்கச் செய்யும் வழி)

குறிப்பு - அழகான பாடல். பரிவுணர்ச்சியைக் கையால் அள்ளிக் கொடுக்கிறது தமிழ்.

# நிலைமை தெரியவேண்டும்

1

லேவா தேவிக்காரர் ஒருவர் இருந்தார். ஈகையிரக்கம் இல்லாதவர். சந்தர்ப்பத்திற்குத் தக்கபடியெல்லாம் வட்டியை உயர்த்துவார். கடன் வாங்கியவர்களுடைய சொத்தில் பெரும் பகுதி அவருடைய சொத்தாகிவிட்டது. கடன் வாங்கியவர்கள் ஈடாக வைத்திருந்த தங்கநகை, வெள்ளிப் பாத்திரம் எல்லாம் அவரிடம் தங்கிவிட்டது.

அவரிடம் தோப்பு, நன்செய், புன்செய்நிலம் எல்லாம் கிராமம் கிராமமாக இருந்தது. ரொக்கம் மட்டும் மூன்று லட்சத்திற்கு மேல் வைத்திருந்தார்.

அவருக்கு ஒரே மகன். எம். ஏ. வரை படித்துத் தேறிய மகன். உத்தியோகத்திற்குப் போகவில்லை. தந்தையின் தொழிலிலும் ஈடுபடவில்லை. சில ஆண்டுகள் சும்மா இருந்தான். பிறகு பொதுக் காரியங்களில் ஈடுபட்டு, பொது மக்களுக்கு உபகாரம் செய்து வந்தான்.

லேவாதேவிக்காரர் மகன் ஒரு அரசியல்க் கட்சியில் சேர்ந்து, கட்சியின் முக்கியஸ்தராகிவிட்டார். பொதுமக்களுக்கு உகந்த நன்மைகளை அரசியல் செல்வாக்கால் செய்து வந்தார். அதனால் அந்த வட்டாரம் முழுவதும் அவருடைய செல்வாக்கு ஓங்கி யிருந்தது.

இந்த நிலைமையில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடு மாறு கட்சி வேண்டியது. கட்சியின் வேண்டுகோளை மறுத்து விட்டார் லேவா தேவிக்காரருடைய மகன்.

பண வசதிக்குக் குறைவில்லை. படிப்பும் மேலான படிப்புத் தான். குணமும் தொண்டும் மிக உயர்ந்த பெயரை அவருக்குப் பெற்றுக் கொடுத்திருந்தன. இருந்தாலும் தேர்தலில் வெல்வது சிரமம் என்பது தெரிந்துகொண்டார்.

இரண்டு ஆண்டுகளில் அவர் தந்தையார் காலமாகிவிட்டார். தொடர்ந்து அவர் பொது மக்களுக்குத் தொண்டு புரிந்து வந்தார். அவருடைய உபகாரமும், கருணையும், நேர்மையும் பொது மக்களிடத்து அளவிட முடியாத கௌரவத்தை ஏற்படுத்தியது. அதன் பிறகு வந்த தேர்தல் ஒவ்வொன்றிலும் போட்டியில்லாமலே தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தப் பகுதிக்கு மட்டுமல்ல. அதை ஒட்டிய பல பகுதி மக்களுக்கும் முடிசூடா மன்னராக விளங்கினார். பிறகு மந்திரியாக வீற்றிருந்து பெரும்புகழ் பெற்றார்.

ஒரு காரியத்தை மேற்கொள்கிறவர்கள் முதலில் தம்முடைய தகுதியை அளந்து பார்க்கவேண்டும். எது முடியும். (ஒவ்வது) எது முடியாது என்பது தெரிய (அறிவது அறிந்து) வேண்டும். முடிவு கட்டி (அதன் கண் தங்கி) விடவேண்டும். இவ்வளவும் ஆன பிறகு தான், முடியும் காரியத்தை மேற்கொள்ளவேண்டும். வெற்றி எளிதில் கிடைத்துவிடும். கிடைக்காமல் போகாது.

''ஒவ்வது அறிவது
அறிந்ததன், கண்தங்கி,
செல்வார்க்குச் செல்லாத(து)
இல்''. 167

ஒவ்வது - நடக்கக் கூடியது எது என்பதை; அறிவது அறிந்து - இன்னதென்று தெரிவதுதான் மனிதன் தெரிய வேண்டிய ஒன்று. அதை நன்கு தெரிந்து, அதன் கண் தங்கி - அதன் அம்சங்கள் பல வற்றையும் தனித்தனியே எடுத்துப் பார்த்து, மிக்க கவனமாகத் தீர்மானித்து, செல்வார்க்கு - செயலில் ஈடுபடுகிறவர்களுக்கு, செல்லாதது இல் - எல்லாம் இனிது நடைபெறும்.

குறிப்பு:- எவ்வளவு வசதியுள்ளவரானாலுஞ் சரி, தகுதிக்கு மீறிய காரியத்தை மேற்கொள்ளக்கூடாது.

2

மயில்த் தோகை எடுக்க எளிதாக இருக்கும். கனம் இல்லாதது. ஆனாலும் மயில்த் தோகையைக் கட்டுக் கட்டாகக் கட்டி அம்பார மாக ஒரு மாட்டு வண்டியில் ஏற்றி வைத்தால், பாரம் தாங்குகிற வரை பொறுக்கும். அப்புறம் அச்சே முறிந்து விடும்.

தகுதிக்கு மீறிய காரியத்தை மேற்கொண்டவருடைய கதையும் அப்படித்தான்.

''பீலிபெய் சாக்காடும்
அச்சிறும்; — அப்பண்டம்
சால மிகுத்துப்
பெயின்''. 168

குறிப்பு:- அற்புதமான குறள். உவமானத்தை மட்டும் சொல்லி உவமேயத்தை (விஷயத்தை) தானே தோன்றும்படி செய்திருக்கிறது. அப்படி வாய்ப்பாக வந்து விட்டது குறள். அபிநயத்தில் உணர்ச்சிபாவம் வருவது போல்.

(சாக்காடு - வண்டி, சாலமிகுத்து - அளவுக்கு மீறி, கட்டுப்பாடில்லாமல், பெயின் - அடைத்து வைத்தால். அச்சு இறும் - அச்சு முறிந்து விடும்.

3

தேங்காய் பறிக்கிறவன் தென்னை மரத்திலேறி மட்டையில் உட்கார்ந்து கொள்வான். பிறகு தென்னங்காயை வெட்டித் தள்ளுவான். அப்புறம் இறங்கி விடுவான். கடினமான காரியந் தான். ஆனால் மனிதன் லகுவாகச் செய்து முடித்து விடுகிறான்.

தென்னை மரத்தில் ஏறியவன் மட்டையின் வழியே நடந்து போகிறதானால், காரியம் உருப்படுமா? மட்டையின் முனையிலுள்ள ஓலையில்ப் போய் உட்கார முயற்சித்தால் அவன் என்ன நிலையை அடைவான்? கீழே விழுந்து உயிரை விடவேண்டியது தானே.

எந்தக் காரியத்தில், எந்த அளவிற்கு ஈடுபடவேண்டுமோ, அந்த அளவிற்குத்தான் ஈடுபட வேண்டும். வரம்பு மீறினால்

''நுனிக்கொம்பர் ஏறினார்,
அஃதிறந்(து) ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி
விடும்''. 169

குறிப்பு - இந்தப் பாடலும் பெரிய உண்மை ஒன்றை அபிநயத்தில் வைத்துக் காட்டுகிறது.

(அஃது இறந்து - அதையும் கடந்து. ஊக்கின் - சென்றால், உயிர்க்கு இறுதி - மரணம். கொம்பர் - கிளை.)

4

ஒருவருக்கு நான்கு ஏக்கர் தென்னந்தோப்பு இருந்தது. ஆண்டு தோறும் இரண்டாயிரம் ரூபாய் வருமானம் வந்தது. ஒரு வழியாகக் குடும்பம் நடந்து வந்தது.

வேறொருவருக்கு இரண்டு ஏக்கர் எலுமிச்சந் தோட்டம் இருந்தது. ஆண்டுதோறும் இருபதினாயிரம் ரூபாய் அவருக்கு வந்து சேர்ந்தது.

தென்னந்தோப்புக்காரர் பார்த்தார். நாமும் எலுமிச்சந் தோட்டந்தான் வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித் தார். தென்னை மரங்களை எல்லாம் வெட்டித் தள்ளினார். எலுமிச்சை' போடுவதற்குத் தக்கபடி மேலும் மேலும் திருத்தி உரம் போட்டார். நிலத்தைத் திருத்துவதற்கும் உரம் போடு வதற்கும் கூட அவர் பணம் பற்றாமல் கஷ்டப்பட்டார். கடைசி யில் எலுமிச்சை போட முடியாமலே போய்விட்டது. தென்னந் தோப்பு பொட்டல் நிலமாக மாறிவிட்டது.

வருமானம் குறைவாக உள்ள காரியமானாலுங் குற்றமில்லை. தரத்துக்கு மீறிய செலவு செய்வது கேடானது.

"ஆகா(று) அளவிட்ட(து)
ஆயினும், கேடில்லை;
போகா(று) அகலாக்
கடை". 170

(ஆகாறு - வருமானம் அளவிட்டதாயினும் - அளவுக்குட்பட்டுக் குறைவாக இருந்தாலும். கேடு இல்லை - அதனால் ஒரு கெடுதலும் இல்லை. போகு ஆறு - செலவு அகலாக்கடை - அதிகரித்து விடக் கூடாது.

# காலம் கனிய வேண்டும்

## 1

செண்பகப்பூ மொட்டாக இருக்கிறது. வாசனை இல்லை. பூத்த உடன் வாசனை கம் என்று காடு முழுவதும் உண்டாகிறது. ஒரு மணி நேரத்திற்குமுன் மணமே இல்லை. இப்பொழுது வந்து விட்டது. எங்கிருந்து வந்தது இந்த வாசனை.

விபரம் நமக்குத் தெரியாது. செண்பகப் பூவுக்கும் ஏன் என்பது தெரியாதுதான்.

நினைத்தவுடன் அன்பு கிடைத்து விடுகிறதா? அருள் கிடைத்து விடுகிறதா? காதலியின் அன்பும் அருளும் கிடைப் பதற்குக்கூட நேரமும் காலமும் ஒத்துவர வேண்டி இருக்கிறது.

வேளாண்மை, வாணிகம், தொழில், படிப்பு, உத்யோகம் ஒவ்வொரு துறையிலும் வாசனை உண்டாவதற்கு, பலன் காண்பதத்குக் காலம் வேண்டி இருக்கிறது. காத்துக் கிடக்க வேண்டியதுதான். ஆனால், காலம் வரும்வரை சும்மா இருப்போம். என்று விட்டுவிடக்கூடாது. காலத்தையே குறியாக வைத்து எதிர் பார்த்து அதே நினைப்பில் ஒன்றி நிற்க வேண்டும்.

கலை, இலக்கியம், கவி இவைகளுக்கும் காலம் வரவேண்டும். காலம் செல்லச் செல்லத்தான், வயதுஆக ஆகத்தான் உண்மை விளங்கும். உண்மை ஒளி இன்னதென்று தெரியும்.

எதற்கும் அவசரப்படக்கூடாது. மறந்துவிடவும் கூடாது நம்முடைய சிந்தனையில் போட்டு அந்தச் சூட்டில் பழுக்க வைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

உற்ற நேரத்தை - பொருத்தமான வேளையை, செயலுக்கு உயிர்கொடுக்கிற காலத்தைப் பருவம் என்று சொல்லி வந்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

பருவத்தை விட்டுவிட்டால் செயலில் இறங்கினால் வெற்றி உறுதி. திருமகள் அருளை நம்முடன் சேர்த்து வைக்கும் மங்கல நாண் (தாலிக்கயிறு) ஆகும் அது.

> "பருவத்தோ(டு) ஒட்ட
> ஒழுகல்; — திருவினைத்
> தீராமை யாக்கும்
> கயிறு." 171

(திரு - லெட்சுமி. தீராமையாக்கும் கயிறு - விலகாமல் சேர்ந்திருக்க முடிச்சுப்போட்டு வைக்கும் மங்கலநாண்.)

குறிப்பு:- செயலுக்கும்.வெற்றிக்கும் காலம் நடத்திவைக்கும் திருமணத்தைப் பார்த்து பரவசப்படுகிறார் கவிஞர். கவிஞருடைய பரவசம் தமிழில் அலங்காரமான நடையிலும் தாளத்திலும் வந்து அபிநயம் பிடிக்கிறது. அதிசயபாவம் அப்படியே கவியில் உருவெடுத்திருக்கிறது.

2

வெற்றி ஒன்றையே கருதுகிறவர்கள் - அமைச்சர் பதவி, பிரதமர் பதவி, ஜனாதிபதி பதவி(ஞாலம்) ஏதோ ஒன்றை நாடிச் செயல்படுபவர்கூட எதிர்பார்ப்பது காலத்தைத்தான்.

பூவாக மலர்வதற்குப் பரபரப்புக் காட்டாமல் மொட்டு எப்படி அடக்கமாய்ச் செயல்படுகிறதோ - அப்படி அடக்கமாய், பரபரப்பு இல்லாமல் காலத்தை எதிர்நோக்கி நடந்து கொள்வார்கள்.

யார்? காரியக்காரர்கள்.

> "காலம் கருதி
> இருப்பர்; கலங்கா(து);
> ஞாலம் கருது
> பவர்." 172

(கலங்காது - தளர்ச்சி, சோர்வு இல்லாமல். திடமாகவும் அடக்கமாகவும்)

3

சண்டைக்கடா பம்மிப் பம்மி நிற்கும். பின்வாங்குவதுபோல் பணியும். ஏன்? எதிரியை ஒரே அறையாக அறைந்து தீர்த்துவிடுவதற்குத்தான். அதற்குரிய வாய்ப்பை நோக்கியே கடா குனிந்து பார்க்கும்.

வெற்றியைக் குறியாக வைத்துப் பார்க்கிற திடசாலியும் வாய்ப்புக் கிடைக்கிற வரை மடங்கி ஒதுங்குவான்.

"ஊக்கம் உடையான்
ஒடுக்கம்; — பொருதகர்
தாக்கற்குப் பேரும்
தகைத்து." 173

(ஒடுக்கம் - அடக்கம். அமைதி. பொரு தகர் - சண்டைக்கடா. பேரும்தகைத்து - பின்வாங்குவது போலத்தான்)

4

பூனை ஒரு இடத்தில் மறைந்து நிற்கும். இன்னொரு இடத்தில் எலி விளையாடும். எலியைப் பார்த்த உடன் பூனையின் நாக்கில் நீர் ஊறும். உடம்பு முழுவதும், உணர்ச்சி முழுவதுமே உருகும். பூனையை ஒரு வெறி பிடித்து ஆட்டிவிடும்.

ஆனாலும் பாய்வதற்கு இடம்வகுத்து பம்மவே செய்யும் பூனை. பிறகுதான் எலியின்மேல் பாயும்.

செயலையும், பலனையும், மனதில் வைத்துப் பார்த்துப் பார்த்து இன்புறுகிறவன், மிக்க பிரகாசத்தோடு காரியம் தன்னை நோக்கி வருவதை மனக்கண்ணால் பார்க்கிறவன் (ஒள்ளியவர்) காலத்தை எதிர்நோக்கி நிற்பான்.

அதை வெளியில் காட்டமாட்டான். ஆனால் அதை அவன் உணர்ச்சிக்கண்கள் சதா பார்த்துக் கொண்டே இருக்கும். பார்த்துப்பார்த்து உணர்ச்சி உருகும். வேர்த்தே கொட்டிவிடும் உணர்ச்சி.

"பொள்ளென ஆங்கே
புறம்வேரார்; — காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி
யவர்." 174

(பொள்ளென ஆங்கே புறம் வேரார் - பொலபொலவென்று அவர்கள் உடம்பு வேர்த்துக் கொட்டாது. (புறம் - உடம்பு) ஆனால், உள்ளம் வேர்த்துக் கொட்டும், அவ்வளவு அடக்கம்.)

5

மீன் பக்கத்தில் வரும்வரை கொக்கு அமைதியாக இருக்கும். கல்மேல் வைத்த கல்போல் அசையாமல் உட்கார்ந்திருக்கும் கொக்கு. பக்கத்தில் வந்துவிட்டது மீன் என்று கண்ட மாத்திரத்தில் ஒரே பாய்ச்சல், ஒரே கொத்து, அவ்வளவுதான்.

காரியக்காரர்களும் கொக்கு மாதிரிதான்.

"கொக்கொக்க கூம்பும்
பருவத்து; — மற்றதன்
குத்தொக்க சீர்த்த
இடத்து." 175

(கூம்பும் பருவத்து - பருவமும் பொருத்தமும் மலராமல் கூம்பி இருக்கும் நிலையில். சீர்த்தஇடம் - பருவமும் வாய்ப்பாக, பொருத்தமும் வாய்ப்பாக மலர்ந்துவிட்ட கட்டத்தில். குத்து ஒக்க - பாய்ந்து கொத்துவது போல்.)

குறிப்பு:- பாடலில் உள்ள வல்லோசை உணர்ச்சிக்கு உருவம் கொடுக்கிறது. அருமையான பாடல்.

# மனிதனைத் தெரிந்து கொள்ளவேண்டும்

1

இலக்கணம், இலக்கியம் எல்லாவற்றையும் ஒருவன் வாசித்திருக்கலாம். பரீட்சையில் தேறியும் இருக்கலாம். பெரிய உத்தியோகமும் அவன் பார்க்கலாம். ஆனாலும் அவன் மனிதன்தான்

அமெரிக்காவில் இருக்கின்றவனும் மனிதன்தான், ஆப்பிரிக்காவில் இருக்கின்றவனும் மனிதன்தான். பீஜித் தீவுகளில் இருக்கிறவனும் மனிதன்தான்.

பெரிய பெரிய பாலங்களைக் கட்டியவராயிற்றே - புற்று, காசம், ரத்தக்கொதிப்பு, மூளைக்கட்டி ஆகிய நோய்களைக் குணப்படுத்தியவராயிற்றே என்று ஏமாந்து விடக்கூடாது. ஒவ்வொருவரும் மனிதர்தான் என்பதை ஞாபகத்திலேயே வைத்திருக்க வேண்டும். மறந்துவிடக்கூடாது.

நீதிபதியாக இருக்கிறார் ஒருவர். அவருடைய மனைவியும் நிறையப் படித்தவள்தான். பல்கலைக்கழகத்தில் ஒரு துறைக்குத் தலைவராக இருக்கிறாள் அந்த அம்மாள். வேறொரு ஊரில் அம்மாளுக்கு அலுவலகம்.

அடிக்கடி மனையாளுக்குக் கடிதம் எழுதுவார். ''நலம், நலமறிய ஆவல். உடம்புக்கு எப்படி இருக்கிறது. குழந்தைகள் சௌகர்யம் எப்படி, லட்சுமி சுற்றுலா போய் வந்து விட்டாளா? முருகன் பள்ளிக்கூடம் ஒழுங்காகப் போகிறானா? குத்தகைப் பணம் வந்ததா? நெல்லை விற்றுவிட்டாயா? கடைக்காரன் இன்னும் வாடகையைக் கூட்டித் தரவில்லையா? எப்பொழுது நீ இங்கு வருகிறாய்?'' இப்படித் தமிழில் எழுதுவது எளிதுதான். இயல்பானதுங்கூடத்தான்.

ஆனால் இயல்பாக எழுதித் தொலைக்கிறாரா மனிதர்? எழுத மாட்டார். எழுத முடியாது அவரால்.. இங்கிலீஷில்தான் அப்படியும் இப்படியும் கிறுக்குவார். மகளுக்கு எழுதுகிற கடிதமும்சரி, மருமகனுக்கு எழுதுகிற கடிதமும் சரி, நண்பர்களுக்கு எழுதுகிற கடிதமும் சரி. பேரனுக்குக் கூடத் தமிழில் எழுதமாட்டார். இங்கிலீஷில்தான் எழுதுவார். கோணல் மாணலாகவே எழுதுவார்.

நண்பர்களை, சிப்பந்திகளை விட்டா வைப்பார். இனி, கோவிலுக்குப் போகிறார். தேங்காய் பழத்தோடேயே போகிறார். அங்கும் இங்கிலீஷ்தான் வரும். பூசாரி இடத்தில்கூட இங்கிலீஷில் தான் கேள்வி கேட்பார். நடராஜமூர்த்தியின் தாண்டவ கோலத்தை இங்கிலீஷில்தான் விளாசுவார்.

பெண்டாட்டி பிள்ளைகளிடம் அன்புள்ளவர்தான் நீதிபதி. பொறுமைசாலிதான். வேலையில் கெட்டிக்காரர்தான். நாணயமும் உண்டு. ஆனாலும் அவரைப் பிடித்த சனியன் போகவில்லையே.

வாழ்நாள் முழுவதும் மனுக்களையும், ரிக்கார்டுகளையுமே பார்த்தவர். விசாரணை, வாய்தா, தீர்ப்பு எல்லாம் கண்டவர். அவ்வளவையும் இங்கிலீஷிலேயே கட்டி அழுதவர். அதனால் பெண்டாட்டி, பிள்ளை, மாடு, கன்று, வீடு, வாசல் எல்லாமே இங்கிலீஷாகத் தான் தெரிகிறது. ரசம், மோர்க்குழம்பு, அப்பளம், கூட்டு, அவியல், வடை, பாயசங்கூட இங்கிலீஷ்மயந்தான் நீதிபதிக்கு.

பாவம் என்ன செய்வார் நீதிபதி! மனுசன்தானே அவர். அவருக்குச் சம்பளம் கொடுப்பது இங்கிலீஷாய் போய்விட்டது. அவர் குடிக்கிற சிகரெட்டுக்கும், சீமைச் சாராயத்துக்கும்கூட இங்கிலீஷ்தான் பணம் கொடுக்கிறது.

அவரை அறியாமலே அவரிடம் வந்து தொத்திக் கொண்டது இங்கிலீஷ்.

கண்ணுக்குத் தெரியாமல் ஏதாவது ஒரு கோளாறு மனிதனிடம் ஒட்டியே கிடக்கும். அதைப் பார்த்து, அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டும். நல்லவராயிற்றே என்று கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது.

கோளாறுக்கு வெளிறு என்று பெயர்.

''அரியகற்(று) ஆசற்றார்
கண்ணும்; — தெரியுங்கால்
இன்மை அரிதே
வெளிறு.'' 176

(அரியகற்று - நுட்பமான விஷயங்களை ஆராய்ந்து பார்த்து. ஆசு அற்றார் - தொழிலை நாணயமாக நடத்தினாலும் (ஆசுஅற்றார் - குற்றம் அற்றவர்) தெரியுங்கால் - ஆராய்ந்து பார்த்தால். வெளிறு இன்மைஅரிது - கோளாறு இல்லாமல் இருக்காது. ஏதாவது ஒரு கோளாறு இருக்கவே செய்யும்.)

2

மனிதர்களிடம் கோளாறு இருக்கிறதே என்பதற்காக மனிதர்களை விட்டுவிடக் கூடாது. அவர்களுடைய குணத்தை உபயோகித்துக் கொள்ள வேண்டியதுதான்.

உமி இருக்கிறதே என்று நெல்லை விட்டுவிட முடியுமா?

''குணம்நாடிக், குற்றமும்
நாடி; — அவற்றுள்
மிகைநாடி மிக்க
கொளல்.'' 177

குற்றத்தை விடக் குணந்தான் அதிகம் என்று தெரிந்தால், வைத்துக்கொள்ள வேண்டியதுதான். இல்லாவிட்டால் விட்டுவிட வேண்டியதுதான்.

3

தங்கத்தின் மதிப்பை(மாற்றை)க் கண்டுபிடிக்க கட்டளைக்கல் என்று ஒன்று இருக்கிறது. அதில் வைத்து உரைத்துப் பார்த்தால் தங்கத்தின் நிலை இன்னதென்று தெரியும்.

மனிதர்களை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல் அவர்களுடைய செயல்தான்.

வாங்குகிற சம்பளமோ, தலைப்பாகையோ, கோட்டோ, அங்கவஸ்திரமோ அல்ல.

''பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக்
கல்.'' 178

(தம்தம் - அவரவர். கருமம் - செயல்.)

4

பரீட்சை ஒவ்வொன்றிலும் முதல் ஆளாக ஒருவன் தேறி இருப்பான். தங்க மெடல், வெள்ளிமெடல் எல்லாம் வாங்கி இருப்பான். நூறுபேரை வைத்து வேலை வாங்குவதில் கெட்டிக்காரனாக இருப்பான். நிர்வாகம் பண்ணுவதில் வல்லவனாக இருப்பான்.

ஆனால் ஒழுக்கம் இல்லாதவன், பண்பாடு இல்லாதவன், குடும்பம் நடத்தத் தெரியாதவன். அன்பு இல்லாதவன், பணம் என்றால் லஜ்ஜைப்படாதவன். பெண்டாட்டி, பிள்ளைகள்கூட நம்பமாட்டார்கள் இவனை.

அப்பேர்ப்பட்டவனிடம் பெரிய பொறுப்பை – அரசாங்கப் பொறுப்பை ஒப்படைத்தால் என்ன ஆகிறது; குட்டிச்சுவராய்த் தானே போகும்.

''அற்றாரைத் தேறுதல்
ஓம்புக; — மற்றவர்
பற்றிலர் நாணார்
பழி.'' 179

(அற்றாரை - பண்பாடில்லாதவர்களை. தேறுதல் ஓம்புக - நம்ப வேண்டாம். நம்பி அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம். பற்றுஇலர் - எதிலும் அவர்களுக்கு உறவு கிடையாது. நம்பிக்கையும் கிடையாது. பழிநாணார் - ஒன்றுக்கும் வெட்கப்பட மாட்டார்கள்.)

குறிப்பு:- அயோக்கியர்களின் அயோக்கியத்தனங்களை அவர்களுடைய சொந்த விஷயம் என்று மடித்து வைப்பது கொடுமை. அந்தக் கொடுமையை உலகம் இப்பொழுது அனுபவிக்கிறது.

வாழ்க்கையில் ஒழுங்கில்லாதவன், உலகை எப்படி வழி நடத்தமுடியும்? அவனிடம் அதிகாரத்தைக் கொடுப்பதும், அவனை எதிர்பார்த்து நிர்வாகம் நிற்பதும் எவ்வளவு கேவலம்.

குறளாசிரியர் மக்களிடம் மிக்க அனுதாபம் கொள்கிறார். அவருடைய அனுதாபம் கவிஉருவம் எடுத்து வந்திருக்கிறது.

5

ஒழுக்கம் இல்லாதவன் கையில் பொறுப்பைக் கொடுப்பது ஆபத்து. அதே போல, செயலாற்றும் திறன் இல்லாதவனிடம் பொறுப்பை ஒப்படைப்பதும் ஆபத்தாய்த்தான் முடியும்.

நம்மிடம் பழகியவன் ஆயிற்றே - பெரிய பணக்காரன் ஆயிற்றே - பத்திரிகையை வைத்திருக்கிறானே கையில். தேர்தலுக்குப் பணம் கிடைக்குமே என்றெல்லாம் நிர்வாகத் துறையில் புத்திபோகக் கூடாது.

வேண்டியவனுக்கு வேறுவழியில் - சொந்த வழியில் உபகாரம் செய்யவேண்டுமே ஒழிய - பொறுப்பையோ, நாட்டையோ அவன் கையில் கொடுத்து விடக்கூடாது.

வேண்டியவன், துணைவன், உதவுகிறவன் என்ற நினைப்பில் அவனை நம்பிப் பொறுப்பைக் கொடுத்தால் பைத்தியகாரத்தனம் ஆகிவிடும் காரியம்.

பெண்டாட்டி பிள்ளைகளுடன் காரில் பிரயாணம் செய்கிறான் ஒருவன் - அமைச்சன் என்றே வைத்துக் கொள்வோம். தன்னுடைய எலக்ஷனுக்கு அள்ளிக் கொடுத்தவன் இவன் தான் என்று நினைத்து - ஓட்டத் தெரியாதவனிடம் காரைக் கொடுப்பானா ஓட்டச்சொல்லி? அதைவிட ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் நிர்வாகத்தில்.

> ''காதன்மை கந்தா
> அறிவறியார்த் தேறுதல்;
> பேதைமை எல்லாம்
> தரும்.'' 180

(காதன்மை கந்தா(க) - பிரியம் காரணமாக. கந்து - காரணம். அறிவு அறியார் - நிர்வாக இயல் தெரியாதவன். தேறுதல் - நம்புதல் பேதைமை - அறிவீனம்)

6

நிர்வாகப் பொறுப்பிற்கு ஒருவனிடம் அன்பு வேண்டும் - அதாவது ஒழுக்கம் வேண்டும். கூடவே திறமையும் வேண்டும். இரண்டும் வேண்டும். ஒன்றிருந்து ஒன்றில்லா விட்டால் புண்ணியம் இல்லை.

ஒழுக்கமும் திறமையும் உள்ளவனைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. சிரமம்தான். சிரமப்படாமல் - அதாவது சோதித்துப் பார்க்காமல் நம்பிவிடுவது ஆபத்து.

ஒருவனுடைய ஒழுக்கத்திலும் திறமையிலும் யாதொரு குறையும் இல்லை. அனுபவ ரீதியாகவே தெளிவாகி விட்டது. விஷயம்.

அப்படி இருந்தும் அவன் மேல் சந்தேகம் நீங்கவில்லை என்றால் ஆரம்பத்திலிருந்தே விடாமல் சந்தேகம் இருந்துகொண்டே சாதிக்கிறது என்றால், அதுவும் ஆபத்துத்தான். தீராத இடும்பையேதான்.

"தேரான் தெளிவும்,
தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை
தரும்." 181

(தேரான்தெளிவு - சோதனை செய்யாமலே நம்பிவிடுதல். ஐயுறவு- சந்தேகம்.)

குறிப்பு:- மனிதனை எப்படி எல்லாம் அளந்து, நிறுத்து எடை போட்டுக் காட்டுகிறார் கவிஞர். மனிதனிடம் கவிஞருக்கு அவ்வளவு பிரியம். கவிஞரின் பிரியம் முழுவதும் தமிழில் உருகி ஓடுகிறது. தாளத்திலும் இசையிலுமாக உருகி ஓடுகிறது.

# மக்கள் தாம் நாடு

1

ஒரு நாட்டில் நுட்பம், ஆராய்ச்சி, அறிவு எல்லாம் நிறைந்த கல்வி வளமாக இருக்கிறது. மக்கள் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். பேச்சாளிகளாக இருக்கிறார்கள். கலைஞர்கள், புலவர்கள் எல்லோரும் ஓவியம், இசை, நடனம், தத்துவம் முதலிய கலைகளை வளர்க்கிறார்கள். கவிஞர்கள் தெய்வப்பாடல் பலவற்றை அருளிச் செய்கிறார்கள் என்றால் அது தெய்வகடாட்சந்தான்.

ஒருநாடு நீர்வளம் நிலவளம் பொருந்தியதாக இருக்க வேண்டும். அவற்றைப் பயன்படுத்தி நன்றாக உழைக்கும் மக்களும் அங்கு இருக்கவேண்டும். உற்பத்தியாகும் பொருள்களை நல்ல முறையில் அனுபவித்து மற்றவர்களும் அனுபவிக்க வழங்கும் பண்பாடு மக்களிடம் இருக்கவேண்டும். மக்களின் அறவுணர்வும், ஞானமும், பக்தியும் வாழ்க்கையோடு சேர்ந்து பரிமளிக்கவேண்டும் நேர்மை, ஒழுங்கு, எல்லாம் வாழ்க்கையோடு வாழ்க்கையாகக் கலந்து விடவேண்டும்.

உண்மையைக் காணவும் அனுபவிக்கவும், ஆனந்தத்தில் திளைக்கவும் மக்களிடம் ஆவல் இருக்கவேண்டும்.

இவ்வளவுக்கும், அமைதி முக்கியம். பாதுகாப்பு முக்கியம். அரசியல் நிர்வாக ஒழுங்கு முக்கியம். "எப்பொழுது என்ன நடக்குமோ" என்ற பயம் மக்களிடம் இருந்தால் ஒன்றும் உருப் படாது.

தமிழ்நாட்டில் எல்லாம் இருந்தன. மலைகளுக்குக் குறைவில்லை. ஆறுகளுக்குக் குறைவில்லை. காடுகளுக்குக் குறைவில்லை. அழகான கடலுக்கோ, துறைமுகங்களுக்கோ குறைவில்லை. மக்களின் உழைப்புக்கும் குறைவில்லை. அறப்பண்புகளுக்கோ, கலைஉணர்வுக்கோ பக்திக்கோ யாதொரு குறையும் இல்லை.

பலநூறு ஆண்டுகளாய் தொடர்ந்து நாட்டையும் மக்களையும் பத்திரமாகப் பாதுகாத்து வந்த சேர, சோழ, பாண்டியர்களுக்கும் ஒரு குறைவும் இல்லை. தமிழ்மக்கள் பயம் இல்லாமல் இருந்தார்கள். சந்தோஷமாக இருந்தார்கள். உழைப்பு, உற்பத்தி, விநியோகம், கலை, வாழ்க்கை எல்லாம் தெய்வீகந்தான்.

எல்லா நலன்களும் நிறைந்திருந்ததைத் தமிழகத்தில் குறளாசிரியர் பார்த்தார். தமிழ்நாடு, நல்ல மக்களையும், நல்ல உணர்வுகளையும், நல்ல அரசர்களையும் உடைமையாகப் பெற்றிருந்தது.

ஒவ்வொருவருவரும் தங்கமலை, வெள்ளிமலை, வயிரமலை என்று வைத்திருக்கவில்லை. விவசாயிகளும் இருந்தார்கள். வியாபாரிகளும் இருந்தார்கள். குயவர்களும் இருந்தார்கள். தச்சர்களும் இருந்தார்கள். மேளம் வாசிக்கிறவர்களும், பூசாரிகளும்கூட இருந்தார்கள். எல்லோரும் அவரவர் காரியங்களை அவரவர் உண்மையோடு பார்த்துக் கொண்டார்கள். வெளி அபாயமும் இல்லை. உள்க்குழப்பமும் இல்லை. கலைமயமாகவும், பக்திமயமாகவும் இருந்தது நாடு.

அப்படி இருக்கிற நாட்டில் மக்களிடம் புத்தி இருக்கும். யோசனை இருக்கும். தெளிவு இருக்கும். பேச்சுக்கலை இருக்கும். அறிவை விருத்தி பண்ணுகிற ஆத்திரம் இருக்கும்.

மலையும், கடலும், ஆறும், அருவியும், காடும் இருக்கின்றன. நம்மை எதிர்பார்த்துக் காத்து இருக்கின்றனவோ என்று சொல்லும்படி அவை இருக்கின்றன. மலை முதலியவற்றை நாம் உண்டாக்கவில்லை. தாமாகவே அவை முளைத்தன. நிரந்தரமாக இருக்கின்றன. தேடிப் போக வேண்டாம். நம்மை எதிர்பார்த்தே இவை இருக்கின்றன.

கலை, பண்பாடு, பக்தியும் அப்படியே. அவை நம் வாழ்க்கையில் இருக்கின்றன. நிறைந்து இருக்கின்றன. நம்மை எதிர் நோக்கியே இருக்கின்றன.

டென்மார்க்கில் உள்ள சர்வகலாசாலையில் படித்துவந்த பிறகுதான் பசுவை வளர்க்க வேண்டும் என்பது இல்லை. ஜெர்மனியர்களிடம் தெரிந்துதான் நெய் உருக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. ஜப்பானுக்குப் போய்த்தான் அன்பைத் தேட வேண்டுமா? அமெரிக்காவில்த்தான் காதலைக் கண்டு பிடிக்க வேண்டுமா? கர்நாடக சங்கீதத்தைக் கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும், சாமி கும்பிடுவது எப்படி என்பதை மாஸ்கோ யூனிவர்சிட்டியிலும் ஏன் போய்த் தேடவேண்டும்.

தமிழகத்தில்கூட அவற்றைத் தேடிக்கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. பாடல், சங்கீதம், அபிநயம், நந்தவனம், கோவில், பக்தி, அன்பு, பொறுமை, நடராஜமூர்த்தியின் ஓவியம் எல்லாம் நம் வாழ்க்கையில் இருக்கின்றன. மனதில் இருக்கின்றன.

ஆர்வம் இருந்தால்ப் போதும், பொங்கிக்கொண்டு வந்து விடும். வந்து நம்கண் எதிரில் நிற்கும்.

கலை, பண்பாடு, பக்தி ஆகியவை நாட்டு மக்கள் எல்லோரு டைய வாழ்க்கையிலும் உணர்ச்சியிலும் நிறைந்திருக்க வேண்டும். இயல்பாக வந்து நிற்கவேண்டும். அப்படி இயல்பாக வளர்ப்ப தோடு இருக்கிற நாடுதான் நல்லநாடு. ''நாடென்ப நாடா வளத்தன'' தேடி அலையவிடாதபடி எங்கும் நிறைந்திருக்க வேண்டும் வளம். உண்மையான கலைவளம். அதற்குத்தான் ''நாடா வளத்தன'' என்று பெயர்.

வற்றல்க்குழம்பு வைப்பதுகூட, ''பல ஆண்டுகள் பாடங்கேட்டு ஆராய்ந்து முடிவுகட்டிய பிறகே'' முடிகிற காரியம் என்று ஏற்பட்டு விட்டால் உருப்படுமா! திருமணத்திற்கு மணவறை எப்படி அமைப்பது, சேலை எப்படிக் கட்டுவது!! மலர்களைத் தொடுத்து மாலை கட்டுவது எப்படி, இவைகளை அனுபவிப்பது எப்படி, ரசிப்பது எப்படி, வெளியிடுவது எப்படி என்று எங்கெங்கோ சென்று தேடி அலைகிற கூட்டம் என்றைக்கு உருப்படும்! அன்னியர்கள் சொன்ன பிறகு தான் நம்மை நமக்குத் தெரியும், என்று வந்தபிறகு அந்த மனிதர்களை, மனிதர்கள் என்று எப்படி மதிக்கமுடியும். அவர்கள் வாழும் நாட்டை ''நல்ல நாடு'' என்றும் சொல்ல முடியாது.

நாடு அல்ல; நாட வளம் தரும் நாடு.

பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

"நாடென்ப நாடா
வளத்தன; — நாடல்ல
நாட வளந்தரும்
நாடு". 182

ஒரு இனத்தார் தங்கள் கலைநயம், பண்பாட்டுநயம், பக்திநயம், கவிஇன்பம் இவற்றை இழந்து விடக்கூடாது. மேலே குறிப்பிட்ட அம்சங்கள் வாழ்க்கையை விட்டு விலகி நிற்கின்றன என்றால் உணர்ச்சியை விட்டு ஒதுங்கிப் போய்விட்டன என்றால் - தேவைப் படுகிறபொழுது தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டி இருக்கிறது என்றால் அது படுமோசமான காரியம். அவர்கள் வாழும் நாடு சுடுகாடுதான்.

கலை முதலிய அம்சங்கள் வாழ்க்கையோடும், உணர்ச்சி யோடும் சேர்ந்து சர்வ வியாபகமாய் உள்ளன என்றால், தேடிப் பார்க்கவேண்டாம். நேருக்குநேர் நின்று அவை ஒவ்வொரு துறை யிலும் பிரகாசிக்கின்றன என்றால் அந்த இனத்தார் உயர்ந்தவர் கள்தான். அவர்கள் வாழும் நாடுதான் நாடு.

2

நிரந்தரமான அரசாங்கம் இருக்கவேண்டும். இருந்தால் கலை, இலக்கியம், பண்பாடு, பக்தி முதலியவை உயிரோடு இருக்கும். மக்களுக்கு அவை பிரயோசனப்படும். இல்லாவிட்டால் ஒன்றும் இல்லைதான்.

அரசாங்கமும் ஒழுங்கான அரசாங்கமும் முக்கியம்.

"ஆங்கமை(வு) எய்தியக்
கண்ணும் பயம்இன்றே;
வேந்தமை(வு) இல்லாத
நாடு." 183

(ஆங்கு அமைவு எய்திய கண்ணும் - கலைமுதலியவை இருந்தாலும் பயம் - பயன். வேந்து அமைவு இல்லாத நாடு - அரசியல் ஒழுங்கு இல்லாமல் சதா குழப்பத்தில் கிடக்கும் நாடு)

3

அரசனுக்கு நாடு இருந்தால் மட்டும் போதாது. கோட்டை கொத்தளங்கள் வலிமையாக இருந்தால் மட்டும் பிரயோசனம் இல்லை. ஆயுதங்கள் குவிந்து கிடந்தாலும் பயன் இல்லை. ராணுவம் அதிகமாக இருந்தும் புண்ணியம் இல்லை.

அரசனுடைய அரசியலில் ஒழுங்கு - நேர்மை தவறாமல் இருக்கவேண்டும். வினைமாட்சி இல்லை என்றால் இல்லைதான். ஒன்றுமே இல்லைதான். ஜனங்கள் நம்பிக்கை இல்லாமல் அஞ்சி அஞ்சி வாழ்வார்கள் அந்த நாட்டில்.

"எனைமாட்சித்(து) ஆகிய
கண்ணும்; — வினைமாட்சி
இல்லெனின் இல்லை
அரண்". 184

(எனைமாட்சித்து ஆகிய கண்ணும் - செல்வம், பாதுகாப்பு, எல்லாம் ஒரு நாட்டில் வளமாக இருந்தாலும். வினைமாட்சி இல் எனில் - அரசியலில் ஒழுங்கு இல்லை என்றால், இல் - பிரயோசனம் இல்லை)

குறிப்பு : அரசியல் எத்தனைத் தெளிவோடு தமிழில் வந்து பேசுகிறது! தமிழ் மக்கள் வாழ்க்கையில் அப்படி உண்மை இருந்தது தான்.

# நீதியும் கருணையும்

## 1

குடும்பம் என்பதும், வாழ்க்கை என்பதும் மனிதனிடம் உள்ள காரியங்கள். மனிதனிடம் மட்டுமே உள்ள காரியங்கள். சூரிய குடும்பம், தாவர குடும்பம் என்பதெல்லாம்- பெயருக்குத்தான். புலியின் வாழ்க்கை, தென்னை மரத்தின் வாழ்க்கை என்பதும் அப்படி அப்படியே. மனிதன் ஒருவன்தான் வாழ்க்கையை நடத்துகிறான். குடும்பம் என்று ஒன்றை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறான்.

மனைவி என்று இருக்கிறாள். குழந்தைகள் இருக்கிறார்கள். உற்றார், உறவினர் இருக்கிறார்கள், நண்பர்கள் இருக்கிறார்கள். விவசாயம் இருக்கிறது. வியாபாரம் இருக்கிறது. தொழில் இருக்கிறது. உத்யோகம் இருக்கிறது. சமூகம் என்றும், சமுதாயம் என்றும் இருக்கின்றது.

இவ்வளவும் மனிதனோடு சேர்ந்தே இருக்கின்றன. அதனால் அன்பு, என்னும் தத்துவத்தை வாழ்க்கையானது அழுத்துகிறது. நாலா பக்கத்திலிருந்தும் அழுத்தம் ஏற்படுகிறது அன்புக்கு·

இறுகி, இறுகி அன்புக்கு உறுதி கிடைத்துவிட்டது. வயிரம் போல் ஒளிவீசுகிறது அன்பு.

பொறுமை, உபசாரம்,மரியாதை, அனுபவம், ஆனந்தம், தியாகம், வீரம், முதலிய பண்புகள் அன்பிலிருந்தே உண்டாயின. புதுப் புதுஒளிகளுடன் இந்தப் பண்புகள் அன்பிலிருந்தேஜொலிக்கின்றன.

மனிதனிடம் மட்டும் குடும்பம் இருக்கிறது. வாழ்க்கை இருக்கிறது. அன்புக்கும், அன்பிலிருந்து பிறந்த உணர்ச்சிகளுக்கும் அறியாத தன்மை - அதாவது உருவம் இருக்கிறது.

குடும்பம், வாழ்க்கை இவை தொடர்ந்து அழுத்துவதின் காரணமாக அன்பிலிருந்து பொறுமை முதலிய உணர்ச்சிகள் விளைந்து திருட்டு, அகம்பாவம், வஞ்சகம், கொடுமை முதலிய பித்தலாட்டங்களும் விளைந்து அவையும் மனிதர்களோடு மனிதர் களாக நடமாட ஆரம்பித்து விட்டன.

மாறுபட்ட பண்புகள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. குணங்களின் முரண்பாடு காரணமாக வாழ்க்கைக்கு ஆபத்து வந்துவிடக்கூடாதே என்று, ஒரு சக்தி உண்டாகி, அன்புக்கும், அதை ஒட்டிய பண்புகளுக்கும் ஆதரவாகத் தொடர்ந்து வந்திருக்கிறது.

அந்த சக்தியையே முறைமை என்று சொல்கிறோம். நெறி முறை என்பதும், ஒழுங்கு என்பதும் அந்தச் சக்திதான்.

இந்தச் சக்தியே வளர்ந்து வளர்ந்து அரசாங்கமாக உரு வெடுத்தது. அரசாங்கத்துக்கு ஒரு தலைவன், அரசன் வேண்டி இருந்தது. அரசனும் கிடைத்துவிட்டான்.

நாடு என்றால், மக்கள்கூட்டம் என்றால், வாழ்க்கை என்றால் அரசாங்கம் ஒன்று இருக்கும். கட்டாயம் இருக்கவே செய்யும்.

கண்கண்ட தெய்வமாக இருந்து ஜனங்களைக் காப்பாற்று கிறது அரசாங்கம். அரசனுடைய கொற்றம்.

அதனால் ஜனங்களுக்கு அரசாங்கத்திடம் - அதாவது அரசனிடம் பக்தி உண்டாகிவிட்டது. தெய்வபக்தி போலவே ராஜபக்தியும் மக்களைக் காப்பாற்றுகிறது.

ஒருநாட்டில் அரசன் இல்லை. அரசாங்கம் இல்லை என்றால் அங்கு என்னென்ன கொடுமைகள் எல்லாம் தாண்டவம் ஆடும். ஜனங்கள் என்ன பாடுபடுவார்கள்?

அசாதரணமான இந்த நிலை இடை இடையே ஏற்பட்டிருக் கிறது. அப்பொழுதெல்லாம் மக்கள் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். வாழ்க்கை, குடும்பம் என்னும் தெய்வக் கோயில்கள் இடிந்து நாச மாக்கப்பட்டுள்ளன.

பிறகு அரசன் ஒருவன் வந்து, நாட்டை மீட்டிருக்கிறான். ஜனங்களைக் காப்பாற்றி இருக்கிறான். குடும்பமும் வாழ்க்கையும் பழையபடி தளிர் எடுத்திருக்கின்றன.

இதன் காரணமாக ராஜபக்திக்கு ஒரு அழியாத்தன்மை இருக்கிறது. இன்றளவும் நிலைத்து ஒளி வீசுகிறது.

மக்களிடம் உள்ள ராஜபக்தியைக் கண்ணாரக் கண்டவர் குறளாசிரியர்.

உயிர்வர்க்கம் முழுவதையும் மழை காக்கிறதுபோல் அல்லவா, மனிதவர்க்கம் முழுவதையும் அரசாங்கம் (மன்னவன் கோல்) காப்பாற்றுகிறது என்று வியந்திருக்கிறார் குறளாசிரியர்.

கவிஞருடைய வியப்பைத் தமிழ்ப் பாஷை பார்த்துப் பார்த்து ஆனந்தம் அடைகிறது. ஆனந்த பரவசத்தை வார்த்தைகளில் எப்படி அழுத்திவைக்கிறது தமிழ் என்பதைப் பார்க்கலாம்.

"வான்நோக்கி வாழும்
உலகெல்லாம்; — மன்னவன்
கோல்நோக்கி வாழும்
குடி." 185

(வான் - மழை. உலகு - உயிர்வர்க்கம்-கோல் - நெறிமுறை - நீதி. குடி - மக்கள் வாழ்க்கை.

2

அரசாங்கம் சமுதாயத்தை மதிக்கிறது. மக்களும் வாழ்க்கையும் லட்சியம் என்று மதிக்கிறது என்று ஏற்பட்டால் போதும். பிறகு ஒருகுறையும் நாட்டில் இருக்காது.

இது ஒன்றும் அரசனுக்குக் கஷ்டமான காரியம் இல்லை. நல்லவனாக இருக்கவேண்டும் அரசன். உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும். அரசன் அப்படி இருந்தால் போதும். நிர்வாகம் ஒழுங்காக நடக்கும். நிர்வாகத்தின் ஒவ்வொரு அம்சமும் ஒழுங்காக நடக்கும்.

மக்கள் தங்கள் காரியங்களை ஒழுங்காகச் செய்வார்கள். விவசாயம், வியாபாரம் எல்லாம் சரியாக நடக்கும்.

இந்த அற்புதத்தைப் பார்த்தால், ஒழுங்கான நாட்டில் மழை கூட ஒழுங்காகப் பெய்கிறது. விளைச்சலும் சொல்லி வைத்தபடி ஒழுங்காக விளைகிறது என்று நினைக்கத்தோன்றும்.

"இயல்புளிக் கோல்ஓச்சும்
மன்னவன் நாட்ட;
பெயலும் விளையுளும்
தொக்கு". 186

(இயல்பு உளி - இயல்பாக, உண்மையாக. நாட்ட - நாட்டில், பெயல் - மழை. விளையுள் - விளைச்சல். தொக்கு - சேர்ந்து - போட்டிபோட்டு உதவும்)

3

நெறிமுறையோடு அரசாங்கம் செயல்படுமானால், மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள். வாழ்க்கையில் அவர்களுக்கு ஊக்கம் உண்டாகும். தேசத்திடம் நம்பிக்கை பிறக்கும். பக்தி உண்டாகி விடும்.

ஜனங்களின் ராஜபக்திதான் - தேசபக்திதான் எதிரிகளிடம் இருந்து தேசத்தைக் காப்பது. ராணுவம் மட்டும் காக்க முடியாது.

"வேல்அன்று வென்றி
தருவது; — மன்னவன்
கோல்அதூஉம் கோடா(து)
எனின்". 187

(மன்னவன் கோல் அதூஉம் - அரசியல் நெறி என்று ஒன்று இருக்கிறதே, அதுகோடாது. எனின்-ஒழுங்கைவிட்டு விலகாமல் நிமிர்ந்து செயல்படுமானால், அந்தநாட்டை யாரும் வெல்லமுடியாது. வேல் - ராணுவம் (மட்டும்) வென்றி-வெற்றி. கோலது என்பதைக் கோலதூஉம் என நீட்டி ஓசைகூட்டி வைத்திருக்கிறது.

4

பயிர் வளரவேண்டும். பலன் கிடைக்க வேண்டும். விவசாயத்திற்கு லட்சியம் அதுதான்.

பயிர் வளர்வதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது களை. அப்படியானால் களையைப் பிடுங்கி எறிந்து விடவேண்டியதுதான். ஐயோ, களையே! பயிரோடு சேர்ந்து விளைந்த களையே!! என்று ஏமாந்துவிடவிடக்கூடாது.

சமுதாயம் முக்கியம். குடும்பம், வாழ்க்கை, மக்கள், அவர்களுடைய கடமை, செயல் எல்லாம் முக்கியமே.

மேலே குறிப்பிட்ட அம்சங்களுக்குப் புறம்பான சக்திகள் தலை தூக்குமானால் - சமுதாய நலனுக்கு முட்டுக்கட்டையாக இருக்குமானால் அயோக்கியத்தனத்தை வெட்டி எறிந்து விடவேண்டியது தான். ஒழுங்கில்லாதவர்கள் கொலைகாரர்களைவிடக் கொடியவர்கள்.

மனிதர்களாயிற்றே - உற்ற உடன்பிறப்புகள் ஆயிற்றே என்று இவர்களிடம் மயங்கிவிடக்கூடாது. அது அரசாங்கத்தின் கடமை.

"கொலையில்க் கொடியாரை
வேந்தொறுத்தல் — பைங்கூழ்
களைகட் டதனொடு
நேர்."

188

(வேந்துஒறுத்தல் - அரசன் ஒடுக்குதல் - அழித்தல். உடனுக்கு உடன் செய்துவிடவேண்டும் இதை. வளரவிடக் கூடாது. வளர்ந்து விட்டால் பெரிய ஆபத்து. பைங்கூழ் - பசுமையோடு நிறைந்த பயிர். களைகட்டதனொடு நேர் - களைபறித்துப் பயிரைக் காப்பது போலத்தான்)

குறிப்பு :- சமுதாய விரோதிகளைத் தலைதூக்க விடாமல் உடனுக்குடன் தேய்த்து அழித்து விடவேண்டும். அப்படிச் செய்வது அரசனுடைய கடமை. இந்த உண்மை அற்புதமாய் உருவெடுத்திருக்கிறது. பாடலாகவே உருவெடுத்திருக்கிறது.

# நீதியும் கருணையும்—2

அடடா, நெறி முறைகளுக்கு உள்ப்பட்ட மனித வாழ்க்கை, எவ்வளவு அழகாக இருக்கிறது, என எண்ணிப் பரவசமடைந்தார் குறளாசிரியர்.

மனிதனிடந்தான் எவ்வளவு அன்பு இருக்கிறது என்று மயங்கினார். மற்றவர்களை ஆதரித்தும், பாராட்டியும், உபகாரம் செய்தும் மனிதன் வாழ்க்கை நடத்துகிற விந்தையைக் கண்டு உருகினார். அது மட்டுமா, இந்த அன்புணர்ச்சி, மனைவி என்றும், மக்களென்றும், சுற்றமென்றும், உடைமை என்றும் பந்தபாசத்தோடு பின்னிப் பிணைந்து செயல்படுகின்றதைப் பார்த்து வியந்தார். பதம்பட்ட குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டே எல்லாம் கடவுள் செயல், நம்முடையது என்று ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து, அருளோடும், தூய்மையோடும், மனிதன் வாழ்க்கை நடத்துகிற அற்புதத்தைக் கண்டு மயங்கினார்.

மனிதனுடைய உழைப்பும் செயல் திறமையும் அளவிட முடியாதபடி இருக்கிறதே என்று மனம் நெகிழ்ந்தார்.

பாலைவனமாக இருந்த பூவுலகை,எப்படித் தோப்பும் வயலும் பூந்தோட்டமும் நிறைந்த பூஉலகமாக மனிதன் மாற்றிவிட்டான்? உற்பத்தியான பொருள்களைக் கொடுத்து வாங்குவதில், வாணிக முறையை எவ்வளவு ஒழுங்காக வளர்த்து வந்துள்ளான் என்று வியந்தார்.

வாழ்க்கையில் ஆனந்தம் பெறவேண்டும் என்கிற நோக்கத்தோடு, கலைகளை உண்டாக்கி வளர்த்து வந்திருக்கிறான். கோயில் கட்டி பக்தியை வளர்த்து விழாக்களைப் பெருக்கி இருக்

கிறான். பல்வேறு சடங்குகளையும், விழாக்களையும் ஏற்படுத்தி இருக்கிறான். அவ்வளவையும் ஞாபகத்தோடு விடாமல் தொடர்ந்து செய்தும் வருகிறான்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பாஷை என்று ஒன்றைக் கண்டு பிடித்து, அதை வளர்த்து வந்திருக்கிறான். ஒரு சொல் எந்தப் பொருளை உணர்த்துகிறதோ, அந்தச் சொல், அந்தப் பொருளை, நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து உணர்த்த வேண்டியும் அவன் உடன்பட்டிருக்கிறான்.

தண்ணீர் என்பது திருவள்ளுவர் காலத்திலும் தண்ணீரைத் தான் உணர்த்தியது. அகத்தியர் காலத்திலும் தண்ணீரைத்தான் உணர்த்தியது. தொண்டை மண்டலமானாலும் சரி, குமரிக் கோட்டமானாலும் சரி, தண்ணீர் என்பது தண்ணீரை உணர்த் தாமல் போனதில்லை.

எந்தப்பிராணியாவது தனக்கே சொந்தமாக ஒரு மனைவியை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறதா? கற்பு என்னும் புனிததத்துவத்தைப் பேணி வளர்க்கிறதா? திருவிழா நடத்தி மகிழ் கிறதா? தன்னுடைய ஆனந்தத்தையும், அனுபவத்தையும் வெளிப் படுத்துகிறதா?

மனைவி என்றும், தாய் என்றும், அக்காள் என்றும், மதனி என்றும் வகுத்துக் கொண்டு முறையோடு உறவாடுகிறானே மனிதன். இந்த உறவு எந்தப் பிராணிக்கும் உண்டா?

அவ்வளவும் ஒழுங்கிலிருந்தும்,வரம்பிலிருந்தும் உண்டானவை

இந்த ஒழுங்கும் முறையும் தவறுகிறதானால் தனிமனிதனும் குடும்பமும், சமுதாயமும், சீரழிந்து போகின்றன. நாசமடை கின்றன. ஒழுக்கத்தை ஒவ்வொரு மனிதனும் உயிருக்கு உயிராகப் பாதுகாக்கிறான். அதுவும் காணாதென்று அரசு என்று ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் பல தோரணைகளையும், அதிகாரங்களையும் வழங்கி, ஒழுக்கத்தை மனிதன் காப்பாற்றி வருகிறான்.

குறளாசிரியர் மனிதன், மனித வாழ்க்கை, ஒழுக்கம், ஒழுக் கத்தைப் பேணி பாதுகாக்கும் பக்தி அவ்வளவையும் கண்ணாரக் கண்டு அனுபவித்தார். அவருடைய அனுபவமும், ஆனந்தமும் தமிழோடு சேர்ந்து குறள்களாக மலர்ந்தன.

ஒவ்வொரு குறள்மலரிலும் உள்ள அனுபவத்தையும் ஆனந்தத் தேனையும் நாம் பெற வேண்டும். அல்லாத பட்சம் பதவுரையும், கருத்துரையும் இலக்கணக் குறிப்புந்தான் மிஞ்சும்; குறளும் தமிழும் விலகிவிடும்.

இனி குறளாசிரியருடைய அனுபவம் என்ன என்பதைச் சிறிது பார்க்கலாம். குறளாசிரியரின் அனுபவம் தமிழோடு தமிழாகக் கலந்து நடனமாடுவதையும் பார்க்கலாம்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில்தான் மனம் என்கிற அற்புத தத்துவம் இருக்கின்றது. அனுபவம், ஆனந்தம், பகிர்ந்து கொள்ளுதல் என்பவையெல்லாம் மனிதனிடம் உள்ள காரியங்கள்.

மனிதன் கவலையில்லாமல் வாழ வேண்டுமானால் செல்வம் இருக்கவேண்டும். செல்வம் அதிகம் இல்லாவிட்டாலும் குற்ற மில்லை. வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற வசதிக்காகவேனும் இருக்கவேண்டும்,

செல்வம் இல்லாவிட்டால் வாழ்க்கையை முறையோடு நடத்த முடியாது. உற்றார் உறவினர்களோடு கலந்து உறவாட முடியாது. மனத்துக்கு உகந்த செயல்களைச் செய்யவும் முடியாது.

அதனால் ஆனந்தம் இல்லாமல் கசந்து விடுகிறது வாழ்க்கை. வறுமை என்பது வந்துவிட்டால், மனிதன்பாடு சங்கடந்தான். அதாவது ஒவ்வொரு நாளும் அடுத்த வேளை சாப்பாட்டிற்கு என்ன வழி என்கிற நிலை மனிதனுக்கு வந்து விட்டால் அவன் என்ன செய்வான்?

அருமை மனையாளுக்குச் சேலை என்றால் வாங்கிக் கொடுக்க முடிகிறதில்லை. அன்புக்குழந்தை நோயால் எமனோடு போராடிக் கொண்டிருக்கிற பொழுது மருத்துவம் செய்ய முடிகிறதில்லை. பெற்ற தாய்க்குத் தேவையான பண்டத்தைக் கடைசி வேளையில் அவள் வாய்திறந்து கேட்டும் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இத்தகைய வறுமையில் உழல்கிற ஒருவன் ''ஏன் மனிதனாகப் பிறந்தோம், எதற்காக இந்த உயிரை வைத்துக் கொண்டு இருக் கிறோம்'' என்று துடிப்பது இயற்கைத்தான்.

ஏனைய பிராணி ஒன்றுக்கும் இத்தகைய துன்பம் இல்லை. வறுமையின் காரணமாக மட்டும் அனுபவிக்கிற இந்த வேதனையைப் போல் உலகில் எதுவும் இல்லை என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

வறுமைக்கு ஆளாகி மனிதன் படுகிறபாட்டைக் குறளாசிரியர் பார்த்திருக்கிறார். பார்த்துப் பார்த்து, அனுபவித்து இருக்கிறார்.

உலகத்தில் எத்தனையோ கொடுமைகள் இருக்கின்றன. ஆனால் வறுமையால் விளையும் கொடுமையைப்போல், வேறு ஒரு கொடுமையும் இல்லை என்று வேதனைப்படுகிறார் குறளாசிரியர்.

அந்த வேதனையைத் தமிழ் எவ்வளவு நயமாக எடுத்துப் பரி மாறுகிறது என்று பாருங்கள்.

''இன்மையின் இன்னாத(து)
யாதெனின்; — இன்மையின்
இன்மையே இன்னா
தது'' 189

பாடலைப் பாடப்பாட நாவில் நறுமணம் கமழ்ந்துகொண்டே இருக்கும் மனதில் ஆனந்தமான கிறுகிறுப்பு உண்டாகிக் கொண்டே இருக்கும். மனத்தையும், நாவையும் விட்டுக் குறள் அகலவே அகலாது.

சொற்களும், சொற்களைத் தாளத்தில் வைத்துக் காட்டுகிற நடனமும் அனுபவத்திற்கு வேகந் தருகின்றன. ஒளியைக் கொடுக் கின்றன.

குறளைப் பாடப் பாட மனதைவிட்டு வறுமை நீங்கிவிடும்.

கொடுமையும் நீங்கி விடும். ஆனால் தாளமும் நடனமும் சேர்ந்து வார்த்தைகளைத் தெய்வ ஒலியாக மாற்றுகின்ற அற்புதம் மனதில் குடிகொண்டு வீற்றிருக்கும்.

1

வறுமையின் காரணமாக ஒழுக்கம் கெட்டுவிடும். (செல்வத் தின் காரணமாகவும் ஒழுக்கம் கெடுவது உண்டு) பொய் சொல்லா தவன் பொய்ச்சாட்சி சொல்லத் தயாராக இருப்பான். களவு செய்யப் பயந்தவன் கொள்ளைக் கூட்டத்தில் சேர வேண்டு மானாலும் சேரத் தயார்.

வஞ்சகம், சூது, கொடுமை, அவ்வளவும் வெட்கமில்லாமல் வளர்ந்து வரும்.

நல்ல பண்புகள் எல்லாம் தேய்ந்து மறைந்து போகும். பாசம் விலகிவிடும். அன்பு வறண்டு போகும். நீதி தடுமாறும்.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கற்பு என்பது செயலிழந்து போய் விடும்.

வறுமையானது, சமுதாயத்தில் பெருகிவிட்டால் மேலே குறிப்பிட்ட ஒழுக்கக் கேடுக்ள் ஆதிக்கம் பெற்றுவிடும்.

குழப்பமும் கலவரமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். பலவந்தமும், தடித்தனமும் அதிகாரம் பண்ண ஆரம்பித்துவிடும்.

குழப்பங்களும், கொடுமைகளும் சமுதாயத்தில் ஏற்படாமல் பாதுகாப்பதற்காகத்தான், அரசு என்கிற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

தப்பித்தவறி, சமுதாயத்துள் குழப்பமும், தடித்தனமும் ஏற்பட்டால் அவற்றை அடக்கி ஒடுக்குதற்கும், அழித்துவிடுவதற்கும் கூட அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய அரசனே முறை தவறுபவனாக வாய்த்து விட்டால், தடியடிக்காரனாக மாறிவிட்டால், வேறு என்ன செய்யமுடியும்?

நல்லவர்களும், மனச்சாட்சியுள்ளவர்களும் ஒடுங்கி விட வேண்டியதுதான். பொய்யர்களும் கயவர்களும் உயர்வு பெறுவார்கள்.

கொள்ளையும், கொலையும், தாராளமாக நடைபெறும். நேர்மையானவர்களும், ஒழுங்கீனத்தை வெறுப்பவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

அந்தக் கொடுங்காலத்தில் தரித்திரர்களுக்கும் பயம் இருக்காது. துன்பமும் நேராது. பயமும், துன்பமும், செல்வம் உடையவர்களுக்குத்தான். இதேபோல் ஒழுங்கில்லாத பெண்ணுக்கு ஒரு கவலையும் இல்லை. கற்புடைய பெண்ணுக்குத்தான் கவலையும் வேதனையும். கயவர்களுக்கு மரியாதை ஏற்படும். உத்தமர்களுக்கு அவமானம் நேர்ந்தாலும் நேரலாம்.

இந்த சோகக்காட்சியைக் குறளாசிரியர் பார்த்திருக்கிறார். அனுபவித்திருக்கிறார். அனுபவம் தமிழில் எப்படி முழக்கமிட்டுக் கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கலாம்.

வறுமையைப் போலக் கொடுமையானது வறுமை ஒன்றேதான் என்று சொல்லிய குறளாசிரியர், வேறொன்றும் இருக்கிறது என்று விளக்குகிறார். "வறுமையைப் போலக் கொடுமையானது செல்வம் ஒன்றுதான்"

எனப் பளிச்சென்று சொல்லி விடுகிறார்.

''இன்மையின் இன்னாதது உடைமை''

நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது, செல்வம் எப்படி வறுமையைப் போலக் கொடுமையானதாக இருக்க முடியும் என்று மயங்குகிறோம்.

''அப்பனே! செல்வம் உயர்ந்ததுதான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கொடுங்கோலன் ஆட்சியில் செல்வத்தோடு வாழ்வதுதான் துன்பத்தை உண்டாக்கும்.'' என நம் மயக்கத்தை நீக்கி விடுகிறார் குறளாசிரியர். பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

''இன்மையின் இன்னாத(து)
உடைமை; — முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப்
படின்.'' 190

(உடைமை - நிலபுலம், கால்நடை, ரொக்கம், கல்வி, செல்வாக்கு, பண்பட்ட குடும்பநலம் ஆகிய எல்லாப் பேறுகளையும் குறிக்கும் சொல்)

குறளாசிரியருடைய அனுபவம் எவ்வளவு அகலமானது. எவ்வளவு ஆழமானது என்பது, பாடலைப் பாடத் தெரியவரும். அளவிடமுடியாத அகலத்துள்ளும், ஆழத்துள்ளும், நிறைந்து தமிழ் விளையாடுவதும் தெரியவரும். தெரியத் தெரியக் குறளாசிரியரிடத்து நமக்கு பக்தியுண்டாகி விடும். தமிழிடத்திலும் அப்படியே பக்தி உண்டாகிவிடும்.

2

திருநெல்வேலிக்குத் தெற்கே இருபது மைல்தூரத்தில் உள்ள சிறிய கிராமத்து ஆசாமி ஒருவர் சென்னைப் பட்டினத்தில் உத்தியோகம் பார்த்து வருகிறார்.

அவருடைய தாயார் அபாய நிலையில் இருப்பதாகவும் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் ஒரு நாள் அவருக்குத் தந்தி வந்து சேர்ந்தது.

பொறுப்புகளை உதவியாளரிடம் ஒப்படைத்தார். கையில் பணம் இல்லாத காரணத்தால் தெரிந்தவர் சிலரிடம் கேட்டுப் பார்த்தார். கிடைக்கவில்லை. மிகவும் கவலைப்பட்டார்.

கணவனுடைய துயரத்தைக் காணச் சகிக்கவில்லை மனைவிக்கு. தன்னுடைய ஆபரணங்களை கழற்றிக் கொடுத்தாள். அவற்றை அடகு வைத்துப் பணத்தோடு தாயாரைப் பார்க்கப் புறப்பட்டார்.

அவசரம், அவசரமாக ரயிலேறி வந்தார். திருநெல்வேலியில் இறங்கினார். மறுபடி பஸ்ஸில் ஏறி இருபதுமைல் கடந்து வந்ததும் பஸ்ஸை விட்டு இறங்கினார்.

இரவு பத்துமணி. சாலையிலிருந்து கிராமம் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. ஆசாமி நடந்து வருகிறார்.

நாலாபக்கமும் பனைமரங்கள் நிறைந்தகாடு. பனை ஓலையின் இரைச்சலும், மனத்தின் படபடப்பும் பயங்கரமாக இருக்கின்றது.

இருளைத் துளைத்துக் கொண்டு சீட்டிச் சத்தம் கேட்கிறது. ஆசாமியின் கால்கள் நடுங்குகின்றன. மூடி விழிப்பதற்குள் நாலா பக்கமும் வேலாயுதத்தோடு கொள்ளையர் சூழ்ந்து நிற்கிறார்கள்.

வெறியோடு ஒரு அறை கொடுத்து "என்ன வைத்திருக்கிறாய் எடு" என்று அதட்டினான் ஒருவன்.

அவ்வளவு தான், இருந்த பணம் அவ்வளவையும் கொடுத்து விட்டுக் கண்ணீரும் கம்பலையுமாகத் தாயைப் பார்க்க ஓடி வருகிறார் ஆசாமி. அவருடைய மனநிலையும் துயரமும் எப்படி யிருக்கும்? எவ்வளவு பரிதாபமான நிலைக்கு உள்ளாகி விடுகிறது மனித வாழ்க்கை?

இனி, அரசாங்கம் நடப்பதற்கும் எதிரிகளிடமிருந்து நாட்டைக் காப்பதற்கும், குடிமக்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருக் கிறார்கள். அரசனுடைய இயல்பான செலவுக்கும் கொடுப்பார்கள் ஜனங்கள்.

ஆனால் அரசன் மக்களைக் கொடுமைப்படுத்திக் கசக்கிப் பிழிந்து பணம் வசூலிப்பதும், கொடுக்க முடியாதவர்களின் வாழ்க்கையைச் சூறையாடுவதும் பரிதாபமான செயல். ஆடம்பரத்திற்காகவும், அட்டகாசத்திற்காகவுமே, வரி, வரி என்று கொள்ளை அடிப்பது கொடுமை.

"வேலொடு நின்றான்
இடுஎன் றதுபோலும்;
கோலொடு நின்றான்
இரவு" 191

(கோலொடு நின்றான் - அதிகாரத்தோடு நிற்கும் அரசன்; இரவு - வரி என்கிற பெயரால் மக்களிடம், கறந்து பெறுவது)

கொடுக்க முடியாதவர்களின் நிலையைக் கவனிக்க மாட்டான். அவர்களுடைய வறுமைக்கு இரக்கம் காட்டவும் மாட்டான். அதிகாரத்தின் பேரால் அவன் படுத்துகிற கொடுமை, மலைபோல் நிலைத்து நிற்கும். இதை அழகாக எடுத்துப் படம் பிடித்துக் காட்டுகிறது,

''நின்றான்'' என்கிற சொல்.

''இரவு'' என்னும் சொல் கொடுமையை ஏளனமாக விளக்கிக் காட்டுகிறது.

3

அரசன் முறை தவறிப்போனால், அவனுடைய அதிகாரிகள் செய்கிற அட்டூழியங்களுக்கு அளவே இருக்காது. தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்கிற நிலை வந்துவிடும்.

லஞ்சமும் கொடுமையும் மக்களை வாட்டி வதைக்கும். பல வந்தமும், பறிமுதலும் தலைவிரித்தாடும். மக்கள் எல்லோரும் செயலற்றுப் போவார்கள்.

தாங்கள் மனிதர்கள் என்கிற உணர்ச்சியே மனிதர்களிடம் இல்லாமல் போய் விடும். மனச்சாட்சி என்பது தேய்ந்து மழுங்கிப் போகும். அதனால் நீதியும், ஆனந்தமும் என்னவென்று தெரியாமலே போய்விடும்.

உணர்ச்சியும், மனச்சாட்சியும் உள்ளவர்கள் இந்தக்கொடுமையையும் அட்டூழியத்தையும் சகிக்க முடியாமல் வேதனைப்படுவார்கள். கண்ணீர் விடுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாத நிலையில் அழுது கதறுவார்கள்.

எத்தனையோ கொடுங்கோலர்களையும் அவர்களுடைய அதிகார வெறியினையும் அழித்து வந்திருக்கிறது, அபலைகளின் கண்ணீர். இது சரித்திரம் கண்ட உண்மை.

''அல்லற்பட்(டு) ஆற்றா(து)
அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்
படை'' 192

(அல்லல்பட்டு - வேதனைப்பட்டு. ஆற்றாது - நிம்மதி இல்லாமல் அழுத கண்ணீர் - ஏழை எளியவர் அழுது வடித்த கண்ணீர் தான். செல்வத்தைத் தேய்க்கும் படை - கொடுங்கோலனுடைய அதிகாரத் திமிரையும் ஆணவத்தையும் ஒழித்துக்கட்டும். ஒழித்துக் கட்டுந் திறனுள்ள படை கண்ணீர்தான்)

குறிப்பு - நொறுங்கிப் போன கொடுங்கோலாட்சியின் ஒவ்வொரு துண்டுகளையும் காட்டி, இப்படியானது கண்ணீரால் தான். வேறொன்றாலும் இல்லை, என விளக்குகிறது. "அழுத கண்ணீரன்றே" என்னும் தொடர். "அன்றே" என்பதின் அதிகாரத்தையும் உறுதியையும் உணர்ந்து அனுபவிக்கவேண்டும்.

4

மக்களைப் பாதுகாப்பது என்றால் நீதி தவறாமலிருப்பது மட்டும் போதாது. ஆட்சியில் கருணை நிறைந்திருக்க வேண்டும்.

கருணையில்லாத நீதி அநீதியாகத்தான் முடியும். மழையில்லா விட்டால் உலகமும், உலகிலுள்ள உயிர் வர்க்கங்களும் என்ன பாடு படுமோ, அப்படியாகிவிடும். அரசனிடம் கருணையில்லா விட்டால் மக்களின் நிலை.

இதைக் குறள் எவ்வளவு அழகாக வெளியிடுகிறதென்று பார்க்கலாம்.

"துளியின்மை ஞாலத்திற்(கு)
எற்றற்றே; — வேந்தன்
அளியின்மை வாழும்
உயிர்க்கு" 193

(எற்று அற்றே - எப்படியோ அப்படித்தான், அளி - கருணை, துளி - மழை)

குறிப்பு:- கொடுங்கோலாட்சியில் மக்கள் வாழ முடியாது என்பதை அழகாய் விளக்குகிறது, குறள். உண்மைதான். மழையே இல்லாமல் போனால் உயிர்வர்க்கம் வாழ முடியாதுதானே.

துளியின்மை, அளியின்மை என்பவற்றிலுள்ள இன்மை என்கிற பிரயோகங்களைக் கவனிக்க வேண்டும்.

கவனித்தால், உயிரும், வாழ்வும், மழையையும், கருணையை யும் வைத்தல்லவா இருக்கின்றது என்பது விளங்கிவிடும்.

குறள், விளங்க விளங்கக் குறளாசிரியர் விலகி விடுவார். அவர் எடுத்துரைக்கும் தத்துவங்கள் கூட விலகிக் கொள்ளும். ஆனால் குறளாசிரியரின் அனுபவமும், அனுபவத்தைத் தாளத்திலும் நடனத்திலும் வைத்துக் காட்டுகிற தமிழும், நம் கண்களைவிட்டு அகலா.

அது தானே கலை. மனிதனைத் தெய்வமாக மாற்றும் கலை அதுதான்.

# பணமும் குணமும்

## 1

மனைவி, மக்கள், உற்றார், உறவினரோடு வாழ்வதற்கும், கடமையை நிறைவேற்றுவதற்கும் சிறந்த சாதனம் செல்வம்.

மேலான செல்வத்தைக் கீழான வழிகளுக்குப் பயன்படுத்தினால் கேவலமாகப் போய்விடும் செல்வம்.

செல்வத்தைத் தவறான காரியங்களுக்குப் பயன்படுத்தி வீணாகி விடக்கூடாதே என்கிற இரக்க உணர்வின் காரணமாகத் தான், செல்வம் நிலையற்றதென்றும்; அதை மட்டும் நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்றும் ஞானிகள் சொல்லி இருக்கிறார்கள்.

வசதியை இழந்து, மனைவி மக்களோடு தெருவில் அலைய வேண்டும் என்பதற்காக அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை.

பக்கத்து வீட்டுக் குழந்தையின் மேல் நமக்கு அன்பு உண்டு. அக்குழந்தை பாலில்லாமல் அழுது துடிக்கின்றது. அதனுடைய அழுகையையும் துடிப்பையும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. எப்படியாவது பால் கொடுத்து விடவேண்டும் என்று இரக்கமுண்டாகிறது. நம்மிடம் பசுவுமில்லை. பால் வாங்குவதற்குக் காசும் இல்லை. அப்படியானால் நம்முடைய இரக்கம் செயலற்று முடமாகி விடுகிறதல்லவா?

பசுவும் பாலும் நிறைய உடைய ஒருவன் குழந்தையின் பசியை நீக்க அருள் கொள்வானானால் அது பலன்தரும்.

அன்பு என்பது உயர்ந்தபண்புதான். அருளைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. அன்பின் வயிற்றில் பத்து மாதம் இருந்து

பிறந்த குழந்தைதான் அருள். ஆனாலும் செல்வம் என்கிற வளர்ப்புத்தாய் இல்லாவிட்டால் அருள் என்கிற தெய்வக் குழந்தைகூட மெலிந்து தேய்ந்து விடும்.

அருள்என்னும் அன்பீன்
குழவி; — பொருள்என்னும்
செல்வச் செவிலியால்
உண்டு. 194

(அன்பு ஈன்குழவி - அன்பு பெற்றெடுத்த (அருள்க்) குழந்தை. பொருள் என்னும் செவிலியால் உண்டு - செல்வம் என்னும் வளர்ப்புத் தாயால் வளர்கிறது).

குறிப்பு:- பொருளை, வெறுமனே செவிலி என்று சொல்லி விடவில்லை. செல்வச் செவிலி என்று சொல்லி இருக்கிறது.

அருள் என்கிற குழவி (குழந்தை) ஒரு அபூர்வமான குழந்தை தான். ஏனைய குழந்தைகள் போலத் தாயை மட்டும் நம்பி வாழ முடியாது அருள்க் குழவியால். கட்டாயம் இக்குழந்தைக்கு வேறொரு வளர்ப்புத்தாய் வேண்டும். செல்வம், என்கிற வளர்ப்புத்தாய் இல்லாவிட்டால் இக்குழந்தை (செயலும்) இல்லை தான்.

2

மதங்கொண்ட இரண்டு கொம்பன்கள்- மூர்க்கமாகச் சண்டை போடுவதைப் பார்க்க அழகாக இருக்கும். சண்டை போடும் இடத்திலிருந்தோ, பக்கத்திலிருந்தோ, பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் பார்க்கிறவர்களுக்கு ஆபத்து ஏற்படும்.

ஓங்கி உயர்ந்த ஒரு பாறையின் உச்சியில் ஏறி இருந்து கொண்டு பள்ளத்தாக்கில் காட்டிற்குள் யானை போடுகிற சண்டையைப் பார்க்க வேண்டும்.

சண்டை தெளிவாகத் தெரியும். பயங்கரமான அவ்வழகை ஆபத்தில்லாமல் அனுபவித்தால் ஆனந்தம் உண்டாகும். செல்வமும் வசதியும் நிறைய உடையவன், கடமையோடு ஒட்டிய செயல்களைச் செய்வானானால் இடையூறில்லாமல் இனிது நிறை வேறிவிடும்.

அதுவும் அழகானதுதான். ஆனந்தமானதுதான்.

"குன்றேறி யானைப்போர்
கண்டற்றால் — தன்கைத்தொன்(று)
உண்டாகச் செய்வான்
வினை." 195

(தன்கைத்து - தன்னுடைய அதிகாரத்தில் தனக்குச் சொந்தமாக. ஒன்று உண்டாகச் செய்வான் - குறைவில்லாமல்ச் செல்வத்தைப் பெற்றவன். வினை - செயலாற்றின். அது; பெரிய பெரிய பாறையின் மேலிருந்து யானைகளின் சண்டையைப் பார்ப்பது மாதிரி அழகாக இருக்கும்.)

3

நமக்கு வேண்டாதவர்கள் பலர் இருக்கலாம். அவர்களுடையக் கொட்டத்தை ஒடுக்குவதற்கு அவர்கள் மேல் நாம் போர் தொடுக்க வேண்டியதில்லை. வலுவான கூரிய ஆயுதங்களை அவர்கள் மேல் பிரயோகிக்க வேண்டியதும் இல்லை.

நல்வழியில் விடாமுயற்சியோடு மேலும் மேலும் தொடர்ந்து பாடுபட்டுப் பொருளைச் சேர்த்துக் கொண்டிருந்தால்ப் போதும். எதிரிகளின் கொட்டமும் கொழுப்பும் அடங்கிவிடும். அதனால் பொருளை நல்லமுறையில் சேர்த்துக் கொண்டு போக வேண்டும் ஒவ்வொரு மனிதனும்.

"செய்க பொருளைச்;
செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனில்க் கூரிய(து)
இல்." 196

(செறுநர் - பகைவர். செருக்கு அறுக்கும் எஃகு - பொறாமையின் காரணமாக அவர்கள் நம்மிடம் காட்டுகின்ற மமதையை, தொலைத்தெறிவதற்குரிய கூரிய ஆயுதம். அதனில்க் கூரியது இல்- செல்வத்தைவிடச் சிறந்தது வேறொன்றுமில்லை. பொருளைச் செய்க - அதனால் செல்வத்தைத் தொடர்ந்து ஈட்டுக.)

4

எதையும் ஊடுருவிப் பார்த்து அதை வசப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் பொருளுக்கு உண்டு. அதனால் செல்வத்தை 'ஒண் பொருள்' என்று சொல்வது உண்டு.

செல்வத்தை வளமாகச் சேர்த்துக் கொண்டவர்களுக்கு அற உணர்வும் ஆனந்தமும் இயல்பாகவே வாய்த்துவிடும். பொருளை

நல்ல வழியில் சேர்க்க வேண்டும். சேர்ந்த பிறகு நல்ல வழியில் வாழவேண்டும். அவ்வளவுதான், அறமும் இன்பமும் தேடி வந்து சேரும்.

"ஒண்பொருள் காழ்ப்ப
இயற்றியார்க்(கு) — எண்பொருள்
ஏனை இரண்டும்
ஒருங்கு." 197

(காழ்ப்ப இயற்றியார்க்கு - வருகின்ற செல்வம் உலைந்து போய் விடாபடி உறுதியாக நிற்க அதைத் தேடுகின்றவர்களுக்கு. எண் பொருள் - மனிதனுடைய லட்சியமாகவும் வேட்கையாகவும் கருதப்படும் செல்வங்களாகிய, ஏனைஇரண்டும் - அறம், இன்பம் என்கிற இரண்டும், ஒருங்கு - சேர்ந்து வந்து நிற்கும்.)

குறிப்பு:- வாழ்க்கையின் ஜீவநாடியாக இருப்பது செல்வந் தான். இதில் அணுவளவு கூட சந்தேகமில்லாதவர் குறளாசிரியர்.

ஆனால் உண்மையான ஆனந்தம் பொருளால் மட்டும் பெற முடியாது. அது அறத்திலிருந்து விளைகிற ஒன்று என்னும் கொள் கையும் அவருக்கு உறுதியாகவுண்டு. அதனால் தான்,

"ஏனை இரண்டும் ஒருங்கு"

என்று சொல்கிறார்.

பொருளை அறவழியில் தான் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தினால்தான், மெய்யான இன்பத்தை அனுபவிக்க முடியும் என்பதை எளிமையாகவும் தெளிவாகவும் சொல்கிறது குறள். இதை, குறளாசிரியர் வாயிலாகக் கேட்பது போல, பிறருடைய வாயிலிருந்து கேட்க முடியாது. குறளை ஒரு புலவர் நன்றாக அனுபவித்து இருக்கிறார். அனுபவித்ததை அழகாக வெளியிடுகிறார். பாண்டிய மன்னனிடத்தில் சொல்வதாகப் பாட்டு.

"அறன் அறிந்தேம்; ஆன்ற
பொருளறிந்தேம்; இன்பத்
திறனறிந்தேம்;—வீடு
தெளிந்தேம்—மறன் எறிந்த
வாளரார் நெடுமால!
வள்ளுவனார் தம் வாயால்
கேளா தன எல்லாம்
கேட்டு".

என, தம் அனுபவத்தை ஒருவெண்பாவில்க் கொட்டி வைக்கிறார் கவிஞர்.

# கொழுமுனையில் உலகம்

1

மனித சமுதாயம் எத்தனைத் துறைகளைச் சுற்றிச் சுற்றி வந்தாலும்சரி, உணவும் உடையும் இல்லாமல் வாழ முடியாது. உழவுத் துறையை நம்பித்தான் வாழவேண்டி இருக்கிறது. மனிதன் உயர்ந்தவன் என்பது உண்மை. அதுபோல் உழவுத் தொழில்தான் சிறந்தது என்பதும் உண்மை.

''சுழன்றும்ஏர்ப் பின்ன(து)
உலகம் அதனால்
உழன்றும் உழவே
தலை.'' 198

(சுழன்றும் - அதுதான் உயர்ந்தது, இதுதான் உயர்ந்தது என்று எதை எதையோ சுற்றி அலைந்தாலும்; உலகம் ஏர்ப்பின்னது - உலகம் ஏரைத்தான் (உழவைத்தான்) நம்பி உள்ளது; உழன்றும். எவ்வளவு தான் ஆராய்ச்சியால் மூளையைக் கலக்கி உணர்ந்து பார்த்தாலும்).

2

சமுதாயம் முன்னேற வாணிகத்துறை முக்கியமான சாதனந் தான். மானத்திற்கு இழுக்கு வராமல் வீரதத்துவத்தைப் பாது காக்க வேண்டியதும் முக்கியந்தான்.

வாணிகத் துறையையும் போர்க்கலையையும் வளர்க்கிற ஆவேசத்தில் உழவுத்துறையை ஒரு சமுதாயம் சரிவரக் கவனிக்கத் தவறுமானால் அச் சமுதாயம் தலைநிமிர்ந்து நிற்க முடியாது. வாணிகத் துறைக்கு ஆதாரமாக விளங்குவது உழவுக் கலைதான்

போரில் வெற்றி பெறுவதற்கு உறுதியான ஆயுதம் ஒன்று உண்டென்றால் அது தட்டில்லாத உணவு வளந்தான். வணிகர், போர் வீரர், கலைஞர், அதிகாரிகள் அவ்வளவு பேரையும் காப்பாற்றிக் கொண்டிருப்பது உணவு. உழவுத் தொழிலும் உழவர்களும்தான் மனித சமூகத்தின் அச்சாணி.

"உழுவார் உலகத்துக்(கு)
ஆணி அஃ தாற்றா(து)
எழுவாரை எல்லாம்
பொறுத்து". 199

(அஃது ஆற்றாது-உழவை மதிக்காமல், எழுவாரை எல்லாம்-வேறு வேறு துறைகளில் முனைந்து செல்பவர்களைக்கூட. பொறுத்து - உழவுத் தொழில் வஞ்சந் தீர்ப்பதில்லை. மன்னித்து அருள் பாலிக்கிறது. அதாவது அவர்களுக்கும் உணவு, உடை முதலியன வழங்குகிறது. கைவிட்டவர்களையும் வெறுத்துவிடாமல் அவர்களையும் காப்பாற்றுகிறது. அதனால் உலகம் முழுவதற்கும் உழவுத் தொழில்தான் அச்சாணி. உழவர்கள் தாம் ஆதாரம்).

3

கண்ணியமாகவும், குறைபாடில்லாமலும் கடமையை நிறைவேற்றுகிறவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டு உற்பத்தி செய்பவர்கள்தான், தங்களுடைய குறிக்கோளை மற்றவர்களுக்காக மாற்றிக் கொள்ளாமலும், பயப்படாமலும் நேர்மையாக நிறைவேற்றுகிறார்கள் அவர்கள்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"

மற்றவர்களுடைய காரியம் அப்படி அல்ல. அமைச்சர்கள், ஆனாலும் சரி, பெரிய, பெரிய அதிகாரிகளானாலும் சரி, வியாபாரியானாலும்சரி, மற்றவர்களுக்கு இணக்கமாகத் தங்களை மாற்றிக் கொள்ளத் தயங்க மாட்டார்கள்.

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்; — மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்
பவர்." 200

(மற்று எல்லாம் - உழவர்கள் நீங்கலாக உள்ள மற்றவர்கள் அவ்வளவு பேரும், தொழுது உண்டு பின் செல்பவர் - ஒருவருக்

கொருவர் சலாம் போட்டு, ஒருவரை ஒருவன் பாராட்டிப் பிழைக் கிறவர்கள் தாம். ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கிற விருதாக் கூட்டந்தான்.)

4

எத்தனையோ அரசுகளைப் பற்றியும், பேரரசுகளைப் பற்றி யும் நாம் படித்திருக்கிறோம். உழவுத் தொழிலைப்பேணாமல் புறக் கணித்த நாடுகள் சமாதான காலத்திலும் சரி, போர்க்காலத்திலும் சரி அவை நாசமாகி விட்டதையும் நாம் படித்திருக்கிறோம். உழவுத் தொழிலை நன்றாக மதித்து ஈடுபட்ட நாடுகள் உணவுப் பொருள்களில் சிறப்புற்று அதனால் எல்லா நலன்களையும் பெற்று மேலாக வாழ்வதையும் படித்திருக்கிறோம்.

நிலத்தை உழுது, பண்படுத்தி உழவுத்தொழிலைப் பேணி மதிக் கும் ஒரு இனத்தாரிடம் பஞ்சத்தில் வாடும் நாடு தஞ்சம் அடைந்து விடுகின்றது. ஆகவே தான் உழவுத் தொழிலில் வளம் பெற்ற நாட்டார், பல நாட்டாருக்கும் 'ஆணையாளர்' ஆவர் என்று அழகாக விளக்குகிறார் குறளாசிரியர்.

''பலகுடை நீழலும்
தம்குடைக்கீழ் காண்பர்;
அலகுடை நீழ(ல்)
லவர்''. 201

(அலகுடை நீழலவர் - கொழுவையே செல்வமாக வைத்துப் பேணுகிற உழவர்கள்; விவசாயம் என்னும் நிழலடியில் வாழ்பவர் கள் என்று அருமையாக விளக்குகிறார். பல குடை நீழலும் - பல தேச அரசியல் அதிகாரங்களும்; தம் குடைக்கீழ் - தங்களுடைய விவசாயம், உணவு என்னும் அடிப்படைத் தேவைக்குள் வந்து அடங்கிவிடுவதை; காண்பர் - பார்ப்பார்கள்)

5

உழவர்கள் சுதந்திரமானவர்கள். பிறருடைய கட்டளையை நிறைவேற்ற அவர்கள் விவசாயம் செய்யவில்லை. தங்கள் கடமையை நிறைவேற்றும் குறிக்கோளுடன் தான் விவசாயம் புரி கிறார்கள்.

நிலத்தில் நன்றாக இறங்கி உழைக்கிறார்கள். அதையே ஊதியமாகக் கொண்டு உண்கிறார்கள். அவர்கள் மற்றவர்களிடம் எப்பொழுதும் எதையும் எதிர்பார்ப்பது இல்லை (இரவார்). தம்

மிடம் வேண்டி வந்தவர்களுக்கு இல்லை என்று மறைக்காமல் கொடுத்துவிடுவர். (கரவாது இரப்பார்க்கு ஈவர்).

''இரவார்; இரப்பார்க்கொன்று
ஈவார்; கரவா
கைசெய்தூண் மாலை
யவர்.'' 202

(கைசெய்து ஊண் மாலையவர் - நன்றாக உழைத்து அதன் மூலம் கிடைக்கும் உணவை உண்டு வாழும் இயல்பினர், (உழவர்); மாலை - இயல்; கரவாது - மறைக்காது; இரவார். இரப்பவர்க்குக் கரவாது ஈவார் என்பதில் உள்ள அருமையும் எளிமையும் நயமாக ஒளி வீசுகின்றன)

6

தம்மேல் இருந்த பற்றை விட்டு விட்டவர்கள், மனைவி மக்கள் மேல் இருக்கும் பாசத்தைக் கூடத் துடைத்தெறிந்து விட்டவர்கள் - ஞானிகள். மேலான ஞானத்திலும் தியானத்திலும் நின்று இறை யின்பத்தை அனுபவிக்கும் அத் துறவிகளுக்குக் கூட குறைந்த அள விலாவது உணவுவேண்டித்தான் இருக்கிறது. உழவர்களும் உழவுத் தொழிலும் சீரழிந்து போனால் துறவிகள் கூடத் தம் தூய தவ வாழ்வில் நிலைத்து நிற்க முடியாது.

''உழவினார் கைம்மடங்கின்
இல்லை; — விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும்
நிலை.' 203

(விழைவதூஉம் - மனிதன் விரும்பும் எல்லாவற்றையும், வீடு வாசல் மனைவி மக்கள், நன்செய் புன்செய் எல்லாம்; விட்டேம் என்பார்க்கும் - அவற்றுடன் வைத்திருந்த தொடர்பை விட்டு விட் டோம் என ஒதுங்கி நிற்கும் துறவிகளுக்கும்கூட; உழவினால் கை மடங்கின் - உழவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றாமல் போனால்; நிலையில்லை - நிலைத்து நிற்க முடியாதுதான்)

7

துறவிகளும் ஞானிகளும்கூட உழவை வைத்து வாழ வேண்டு மென்றால் அரசர்களைப் பற்றியும் அமைச்சர்களைப் பற்றியும் சொல்ல வேண்டியதில்லை தானே. ஒவ்வொரு மனிதனும் தம் தம் கடமையை ஆனந்தமாக நிறைவேற்ற வேண்டும். லாபமானா லும், நஷ்டமானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் தம்

கடமையை மதித்து நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறை வேற்றுவதில் ஒரு காதல் வெறியே உண்டாக வேண்டும்.

சிறைச்சாலைக் காவலன் ஆனாலும் நாட்டின் தலைவனே ஆனாலும் தம்தம் கடமையை மதித்து நிறைவேற்றுவதுதான் மனிதப்பண்பு. ஆனால், இந்தப்பண்பு, இயல்பாக உழவுத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு உண்டு. பிற தொழிலில் ஈடுபடு வோர் கவனமெல்லாம் ஊதியம், புகழ், அதிகாரம் ஆகிய வற்றையே நாடி நிற்கும்.

உழவர்கள் உழவுத் தொழிலைப் பக்தியோடு மதிப்பதுபோல் வேறு யாரும் தங்கள் தொழிலை மதிப்பதில்லை. உழவர்கள் நிலத்தை ஆசையோடு கவனித்துப் பேணுவது போல வேறு யாரும் தங்கள் காரியத்தை ஆசையோடு கவனித்துப் பேணுவதில்லை.

அருமை மனையாளை அன்பு மிக்க கணவன் எப்படி உபசரிப் பானோ, அப்படியே பூமியை உபசரிக்கிறான் உழவன். அப்படி உபசரிப்பதுதான் விவசாயம். வசதி இல்லையே என்று சோம் பலுக்கு ஆளாகி நிலத்தைக் கவனிக்கமுடியாது போனால் - நிலத்தைப் பேணாவிட்டால் - உபசரிக்கா விட்டால் உழவனை அந் நிலம், மதிக்குமா? மதிக்காது. பெண்மையை அவமானப் படுத்தும் கயவனிடம் இருந்து பெண்ணானவள் எப்படி ஒதுங்கி விடுவாளோ அப்படி ஒதுங்கிவிடும் சோம்பேறியிடம் உள்ள நிலம்.

"இலம்என்(று) அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள்
நகும்." 204

(இலம் என்று - உபசரிக்க வசதி இல்லையே என்று, அசைஇ - சோம்பி, இருப்பாரைக் காணின் - கவனிக்காது அலையும் ஊதாரியைப் பார்த்து, நிலம் என்னும் நல்லாள் - பூமா தேவி என்னும் தெய்வப்பெண் - ஆருயிர் நங்கை என்ன செய்வாள். நகும் - நீஒரு மனிதன் தானா என்று காரி உமிழ்வாள். அவனை விட்டுப் போய்விடுவாள்.)

# நோயற்ற வாழ்வு

1

உடம்பை மதிக்காதவன் என்ன பழிபாவமும் கூசாமல் செய்வான் உடம்பு ஒரு அடைக்கலப் பொருள். அதைச் சுத்தமாகவும் பிரியமாகவும் வைத்திருக்க வேண்டும். உடம்பின் மனம் கோணும் படியாக ஒருபோதும் நடந்து கொள்ளக்கூடாது.

கடவுள் அருளிய கடாட்சங்களில் மிகப்பெரிய கடாட்சம் உடம்பு கமகம என்று உடம்பு எப்பொழுதும் மணத்துக்கொண்டே இருக்கவேண்டும். அதைச்சுற்றி வெகுதூரத்திற்குக் கவலையோ, வலியோ, தளர்ச்சியோ, சோர்வோ தலைநீட்டக் கூடாது. உடம்பு எப்பொழுதும் கலகலப்பாக இருக்கவேண்டும். முக்கக்கூடாது, திணறக்கூடாது. சிக்கல் இல்லாமல் இருக்கவேண்டும். காற்றாய் இருக்கவேண்டும். பறவைகளின் இறகு எப்படிப் பாரம் இல்லாமல் லகுவாய் இருக்கிறதோ, அப்படி இருக்கவேண்டும். எளிதாகவும் வலுவாகவும் இருக்கவேண்டும். பழுதுபடாமல் இருக்கவேண்டும்.

மனிதனுக்குத் தேவையான உணவு முழுவதும் மனிதனைச் சுற்றி ஆங்காங்கே இருக்கிறது. தேடி அலையவேண்டியது இல்லை. சுற்றிலும் ஏராளமாக இருக்கிற உணவில் எது தன் உடம்புக்கு ஏற்றது? எந்த அளவு தேவை என்பதை மனிதன் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து வரையறை செய்து கொள்ளவேண்டும். வரையறை செய்துகொண்ட உணவை முறைமாறாமல் சாப்பிட்டுவந்தால் போதும். உடம்பு தன்னைத்தானே நன்றாக வைத்துக் கொள்ளும்.

இருப்புச்சட்டியை அடுப்பில் வைத்திருக்கிறது. அதில் எண்ணெய் ஊற்றி இருக்கிறது. தீ எரிகிறது. நன்றாகக் காய்ந்து

விட்டது எண்ணெய். பிசைந்த உளுந்தமாவையோ, கடலை மாவையோ போடவேண்டும், உளுந்தவடை கிடைக்கும். ஆமை வடை கிடைக்கும்.

இடித்த அரிசிமாவும் திரித்த உளுந்தமாவும் சேர்த்துப் பிசைந்துபோட்டு வெந்தெடுத்தால் முறுக்குவரும். சீடைவரும். கோதுமை மாவைப் பிசைந்துபோட்டால் பூரி வரும்.

அறைத்துவைத்த தோசை மாவை எண்ணெய்ச் சட்டியில் போட்டால் தோசை வருமா? இட்லி வருமா? ஒன்றும் வராது. மாவும் ஒன்றுக்கும் உதவாது. எண்ணெய்க்கும் முறிவு ஏற்பட்டு பிரயோசனப்படாது. அதே போல் உடம்புக்கு உகந்த உணவு அமிர்தம். உதவாத உணவு நஞ்சுதான்.

வேண்டாத உணவை வேண்டாதபடி போட்டு நிறைக்கிற தால்தான் உடம்பு திணறுகிறது. நோய்க்கு இடம் கொடுக்கிறது.

நோய்க்கு ஆளானஉடம்பை வைத்தியத்தின் மூலமே வழிக்குக் கொண்டுவர வேண்டி இருக்கிறது என்பது கேவலமான காரியம். அன்புகாட்டி உறவாடிக் கவனிக்கவில்லை கணவன். ஏறுக்கு மாறாய்த் திமிறி விட்டாள் மனைவி. அவளைச் சமாதானப்படுத்து வதற்காக வக்கீலை நாடுகிறான். கோர்ட்டுக்குப் போகிறான் என்றால் அது அசிங்கந்தான்.

உடம்பை வைத்தியன் பொறுப்பில் விடுவதும் அசிங்கமான காரியமே. இப்படியாக, வாழ்க்கையையும் வாழ்க்கையோடு ஒட்டிய அங்கங்களையும் அன்போடு பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் குறளாசிரியர்.

உண்மைஅனுபவம் செய்யுளாக உருவெடுக்கிற அற்புதத்தைப் பாருங்கள்.

''மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு; — அருந்திய(து)
அற்றது போற்றி
உணின்.'' 205

(யாக்கைக்கு - உடம்புக்கு. அருந்தியது - உண்ட உணவு. அற்றதுபோற்றி உணின் - எந்த அளவு உயிர்ச்சத்தாக மாறியது. எந்த அளவு அப்படி மாறாமல் சண்டித்தனம் பண்ணுகிறது என் பதைக் கவனித்து, அதற்கு ஏற்றபடி உணவை வகுத்துக் கொண்டால்.

அவனுக்கு மருத்துவம் தேவை இல்லைதான்.)

2

வரையறை செய்யப்பட்ட உணவையே சாப்பிடவேண்டும். இன்னும் இடம் இருக்கிறது வயிற்றில், அதனால் போடு போடு என்று கேட்டாலும், "போதும், போதும்," வயற்றில் இடம் கொஞ்சம் காலி இருக்கட்டும்" என்று மறுத்துவிடவேண்டும்.

ஜீரணகாரியம் வசதியாக நடைபெற வயிற்றுக்குக் கொஞ்சம் இடங்கொடுத்து உண்ணவேண்டும்.

உடம்பும் உயிரும் சந்தோஷமாக இருக்கும்.

"மாறுபா(டு) இல்லா
உண்டி மறுத்துண்ணின்,
ஊறுபா(டு) இல்லை
உயிர்க்கு." 206

(மாறுபாடு இல்லாத உண்டி - முரண்பாடில்லாத பொருத்த மான உணவு. மறுத்து உண்ணின் - அளவோடு குறைத்துச் சாப் பிட. ஊறுபாடு - நோய்)

3

உடம்பை மதிக்காதவன், வாழ்க்கையின் அருமை தெரியாத வன் கண்டபடி தின்பான். அவனை விட்டு நோய் விலகாது.

"இழிவறிந்(து) உண்பான்கண்
இன்பம்போல் நிற்கும்;
கழிபேர் இரையான்கண்
நோய்." 207

(இழிவு அறிந்து உண்பான்கண் - அளவுக்கு மீறி உண்பது தொல்லைதான் என்பதை அனுபவத்தில் கண்டவன், அளவோடு சாப்பிடுவான். அவனிடம், இன்பம் போல்நிற்கும் - ஆரோக்கிய மும் ஆனந்தமும் சேர்ந்து குடி இருக்கும். அதுபோலவே, கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும் - காட்டுத்தனமாகச் சாப்பிடுகிற வனிடம் நோய் நிரந்தரமாகக் குடி இருக்கும்.)

4

மருத்துவக்கலை அற்புதமான ஒரு அருள்க்கலை. இன்ன நோய்க்கு இன்னமருந்து என்கிற கணக்கில்மட்டும் மருத்துவம் இல்லை. நோய் ஒன்றாக இருக்கலாம். அதில் எத்தனையோ

ரகங்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வேகம், தனித்தனி ஆத்திரம், தனித்தனி ஆற்றல் உண்டு. அவற்றைத் துல்லியமாகக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் உண்டாகவேண்டும். ஒருநோய் புது அவதாரம் எடுத்து புதிய தந்திரத்தோடு போர்புரிய எப்படி இடம் கொடுத்தது உடம்பு என்கிற காரணத்தை (நோய்முதல்) கண்டு பிடிக்கப் பொறுமை வேண்டும். உடம்புக்குச் சேதம் நேராதபடி அந்த நோயை ஒரே அறையில் அடித்துச் சாய்ப்பதற்குப் பக்குவம் தெரியவேண்டும்.

இவ்வளவும் கணக்கில் இருந்து உண்டாகிவிடாது. அன்பி லிருந்தே உண்டாகும்.

மருத்துவக்கலை உண்மையான அன்புக்கலைதான்.

"நோய்நாடி, நோய்முதல்
நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச்
செயல்." 208

(செயல் - செய்கிற செயல் திருவருள்ச் செயலேதான்.)

5

தேகத்தின் சக்தி, நோயின் பலம், இந்தநோய், இந்த உடம்பில் எவ்வளவு காலமாக இருக்கிறது என்னும் நோயின் வயது, ஆக மூன்றையும் சரியானபடி கண்டு கொள்ளவேண்டும் மருத்துவன். தெளிவாக விஷயம் புலப்பட்டபின் கொடுக்கிற மருந்துதான் சரியானபடி வேலைசெய்யும். குறி தப்பாமல் வேலை செய்யும்.

இவ்வளவுக்கும் பொறுமை எவ்வளவோ வேண்டும். பரிவும் எவ்வளவோ வேண்டும். மருத்துவக்கலை அருள்மயமான கலை தான்.

"உற்றான் அளவும்,
பிணிஅளவும், காலமும்
கற்றான்: கருதிச்
செயல்." 209

(உற்றான் அளவு - நோய்க்கு இடங்கொடுத்த உடம்பின் நிலை. கற்றான் - தெளிந்து பார்க்கிறவன். கருதிச்செயல் - பொருத்த மாகச் செய்கிறதே செயல். உண்மையான மருத்துவம்.)

6

இறைவனுடைய செயலே எல்லாம் என்று தெளிந்த ஞானி போன்றவன் உண்மையான மருத்துவன். தன்னுடைய காரியம் ஒன்றும் இல்லை. எல்லாவற்றையும் இறைவனே செய்கிறார். அவருக்கு நான் ஒரு கருவிதான் - அவன் திருவருள் வெளிப்படுகிற கண்ணாடிதான் நான் என்கிற பக்தியில் பரவசம் அடைவான் மருத்துவன்.

அன்போடும் பரிவோடும் அவன் வைத்தியம் செய்யச்செய்ய உடம்பின்அற்புதம் அவனுக்குஇன்னதென்று தெரியும். எத்தனைத் தத்துவங்கள் ஒன்றாய் நின்று செயல்படுகின்றன இந்த உடம்பில் என்று வியப்பான். எத்தனை அரியபெரிய காரியங்களைத் தானாகவே செய்து சரி பண்ணிக் கொள்கிறது உடம்பு என்பது அவனுக்கு விளங்கிவிடும். இப்பயனாக, உற்றவன் (உடம்பின்) பெருமை அவனுக்கு விளங்கும். பிறகு, அதிசயம்மிக்க உடம்பையே அரித்துத் தின்னுகிற நோயை - குப்பைக்குழியில் முளைத்த சாதாரணப் பச்சிலைச்சாறு வேரறக்களைந்து விடுகிறது! ''இது என்ன அற்புதம்!! கடவுளுடைய லீலையே லீலை'' என்று கரைந்து விடுவான்.

உண்மையானது நாலாவிதமான கோலங்களில் நின்று தாண்டவம் ஆடுகிறது. அதைப் பார்க்கிறான் மருத்துவன். பார்த்துப் பரவசம் அடைகிறான். அவனுடைய பரவச உணர்ச்சி.

''உற்றவன் தீர்ப்பான்,<br>
மருந் துழைச் செல்வான்என்(று)<br>
அப்பால்நால்ப் பட்டதே<br>
கூற்று.'' 210

என்னும் கவியாய் எழுந்தருளுகிறது.

(உற்றவன் - உடம்பு. தீர்ப்பான் - வைத்தியன். உழைச்செல்வான் - எங்கும் ஊடுருவி நிறைந்து நிற்கும் விதியின் செயல். அல்லது காலம். நால்பட்டது - இப்படி நான்கு வகையாக நிற்கிறது. கூற்று மருத்துவம், மருத்துவம் என்று (கூறுபடுத்தி) சிறப்பித்துச் சொல்லப்படுகிற வைத்தியம்)

குறிப்பு- மருத்துவக்கலை பக்தியையே உண்டாக்கிவிடுகிறது. உடம்பின் மேல் பக்தி, செடிகளின் மேல் பக்தி, எங்கும் நிறைந்த திருவருள் மேல் பக்தி, திருவருளின் விருப்பத்தை நிறைவேற்ற அல்லவா நாம் இருக்கிறோம் என்று தம் மேலேயே பக்தி. இப்படிப் பெருக்கெடுத்து ஓடுகிறது வைத்தியத்தில் பக்தி.

அவ்வளவும் தமிழ் செய்கிற காரியம்.

# முறைகெட்ட பிழைப்பு

1

மனையாளிடம் கணவனுக்கு அன்பு இருக்கவேண்டும். பக்தியே இருக்கவேண்டும். ஆனால் பயம் இருக்கக்கூடாது. மனையாளிடம் பயப்படுகிறவன், நண்பர்களுக்குப் பயப்படுவான், சுற்றத்தாரிடம் பயப்படுவான். கடமையை நிறைவேற்றப் பயப்படுவான் கடவுளிடங்கூட அவனுக்குப்பக்தி இருக்காது. பயம்தான் இருக்கும்.

''இல்லாளை அஞ்சவான்
அஞ்சும்மற்(று) எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல
செயல்.'' 211

(இல்லாளை அஞ்சுவான் - மனைவியிடம் அன்பு செலுத்துவதற்குப் பதிலாக அவளிடம் அச்சங் கொண்டுவிட்ட ஒருவன். அஞ்சும் - பயந்துகொண்டே இருப்பான். நல்லார்க்கும் நல்ல செயல் எஞ் ஞான்றும் - நல்லவர்களை மதிக்கவும் அவனுக்குப் பயம். நல்ல காரியம் செய்யவும் அவனுக்குப் பயம். ஒரு நாள், இருநாள் அல்ல, வாழ்நாள் முழுவதிலும் அவன் பயந்து கொண்டுதான் இருப்பான்)

2

மனைவியின் மேல் அன்பு செலுத்தி அவளை உபசரிப்பதற்குப் பதிலாக, அவள் மேல் மோகங் கொண்டு பயந்து சாகிறவன் கேவலமான ஒரு பிராணி.

அவனை மனிதன் என்று நினைக்கக்கூடாது. கடமை, குடிப் பிறப்பு, ஆண்மை, ஒன்றும் இல்லாத பேடி அவன். அவனைவிட அவனைப் பம்பரமாய் ஆட்டுகிறாளே ஒருத்தி, அவள் எவ்வளவோ தேவலை.

"பெண்ஏவல் செய்தொழுகும்
ஆண்மையின்; — நாணுடைப்
பெண்ணே பெருமை
உடைத்து". 212

(பெண் ஏவல் செயது ஒழுகும் ஆணில் - பெண்ணின் அடாபிடிகளை நிறைவேற்றுகிற ஆணைவிட. நாண் உடைய பெண்ணே பெருமை உடைத்து-மெல்லியலாள் என்று சொல்லப்படுகிற பெண் நல்லவள்தான். அவள் அடாவடித்தனம் பண்ணினாலும் மனுசி தான்.

மனிதனைப் பார்க்கிற பொழுது உடல் தத்துவம் என்கிற ஒன்று அவனிடமிருப்பது தெரிகிறது. உடம்பிற்குள்ளே இதயம் என்கிற ஒன்றும், இதயத்தில் பூக்கிற உணர்ச்சி தத்துவமும் ஆக மூன்று அம்சங்கள் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கின்றன.

உடம்பை நிறுத்துப் பார்க்கலாம். எடை எவ்வளவு இருக்கிறது என்பதைத் தெரிய முடியும். இதயத்தையோ உணர்ச்சியையோ நிறுத்துப் பார்க்க முடியாது.

இதயம், உணர்ச்சி இரண்டும் பல ஆயிரம் ஆண்டுகளாக பண்பட்டு உரம் ஏறி வந்திருக்கின்றன.

கட்டடத்திற்குள்ளும், காடுகளுக்குள்ளும், இருக்கிற கல்லும் ஓடும், புலியாகவும், மானாகவும், வேட்டை நாயாகவும் காட்சியளிப்பதைப்போல ஒழுங்கிற்குள்ளும், வரம்பிற்குள்ளும் இயங்குகிற பொழுது, மனிதன் தெய்வமாகவும் அவனுடைய செயல்கள் அற்புதங்களாகவும் காட்சியளிக்கின்றன.

ஞானம், வீரம், அற்புதம், ஆனந்தம் அவ்வளவும் ஒழுங்கிலிருந்து விளைந்தனவாகும்.

இதயதத்துவம் ஒடுங்கி, உணர்ச்சி தத்துவம் மழுங்கிப் போனவர்களிடம், உடல் தத்துவம் ஒன்றே இருக்கும். அது, பசியோடும் தாகத்தோடும் செயல்படும்.

உடற்பசியும் உடல்த்தாகமும் அதிகமாக அதிகமாக வரம்பும் கட்டுப்பாடும் நொறுங்கிவிடும்.

பிச்சை எடுப்பதற்கும், விபச்சாரத்தின் மூலம் டாம்பீகமாக வாழ்வதற்கும் கூட மனித ஜென்மம் தயாராகிவிடும். அறிவு, வீரம் ஆகியவைகள் இல்லாமல் முழு மட்டமாகிப் போய்விடும். எல்லாம் உடல்ப்பசியில் ஏற்படுகிற வெறிதான். நாணமும் வெட்கமும் ஒதுங்கிப் போனால் மனிதன் மிருகந்தானே.

தன்னுடைய உடம்பையும் உடம்பிலுள்ள அழகையும் பணம் கொடுப்பவனுக்கெல்லாம் விற்பனை செய்கிற பெண்ணுக்கு, பொருள்ப் பெண்டிர், வரைவின் மகளிர், விலைமகள் என்று பெயர்.

விலைமகளோடு கூடி ஒருவன் தன்னுடைய உடற் பசியைத் தணித்துக் கொள்கிறான் என்றால் அதை இன்பம் துய்த்தல் என்று கருத முடியுமா? கருத முடியாது. உடம்பிலுள்ள வெறியையும், தினவையுந் தீர்த்துக் கொள்வதற்காக ஒருவன் செய்கிற முரட்டுச் செயல் என்றுதான் சொல்லமுடியும்.

"பொருள்ப் பெண்டிர் பொய்ம்மை
முயக்கம்; இருட்டறையில்
ஏதில் பிணந்தழீ இ
அற்று." 213

(ஏது இல் பிணம் - அழுகிப் போகாத முழுப்பிணம். தழீஇ அற்று - ஆலிங்கனம் செய்தமாதிரிதான்.

4

விலைமகளுக்கு வேறொரு அபூர்வமான பெயருமுண்டு. இருமனப் பெண்டிர் என்பதுதான் அப்பெயர்.

மனிதனுடைய முன்னேற்றம், வளம், ஆனந்தம், பண்பாடு, ஞானம், புகழ் அவ்வளவிற்கும் அதிதேவதை திருமகள் என்றும், அவள் செந்தாமரை மலரிலும், திருமாலின் இதயத்திலும் கொலுவீற்றிருக்கிறாள் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனந்தமாக வாழ்கிறவனைத் திருமகள் அருள் பெற்றவர் என்றும், துன்பத்தில் உழல்கிறவனைத் திருமகள் கைவிட்டபயல் என்றும் சொல்கிறோம்.

திருமகளானவள் ஒருவனை அடியோடு வெறுத்து அவன் வாடையே உதவாதென்று குடிபெயர்ந்து போய்விட்டால், அவனிடம் வந்து குலாவுகிறவை எவை எவை தெரியுமா என்று ஒரு கேள்வி கேட்டுக்கொண்டு, அதற்குப் பதிலும் சொல்கிறார் குறளாசிரியர்.

"இருமனப் பெண்டிரும்,
கள்ளும், கவறும்
திரு நீக்கப் பட்டார்
தொடர்பு." 214

(கவறு - சூது. குடி, கூத்தி, சூது ஆக மூன்றும் மூதேவிக்கு உறவு முறை)

குறிப்பு:- அற்புதமான கவி. பாடிப்பாடி அனுபவிக்க வேண்டிய கவி. லட்சுமி தேவியால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சண்டாளன் விலைமகள் வீட்டைத்தானே சுற்றுவான். கள்ளைக் குடித்துத்தானே அவன் மகிழ்ச்சி பெற முடியும். சூது (கவறு) விளையாட்டுத்தானே அவனுக்குத் தொழிலாக இருக்க முடியும்.

திரு நீக்கப்பட்டவனுடைய கொடிவழி ஜாபிதா இவை என்று விளக்கி விட்டது குறள்.

# மதுவிலக்கு

## 1

மனிதனிடம் உண்மை இல்லை. மகிழ்ச்சி இல்லை. அதாவது மனிதனிடம் உண்மையான மகிழ்ச்சி இல்லை.

பெரும்பாலான மக்கள் - நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பதே முக்கால்வாசி திருடுகிறார்கள், பொய் சொல்கிறார்கள், கொள்ளைக்கூட்டம் வைத்தே நடத்துகிறார்கள்.

இவர்கள் பணம் பணம் என்று அலைகிறார்கள். பணத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்கிறார்கள். ஏதோ தேடுகிறார்கள். சேர்க்கிறார்கள். ஒளித்து வைக்கிறார்கள். பிறகு பயப்படுகிறார்கள். பயந்து பயந்து சாகிறார்கள்.

இவர்களிடம் எப்படி உண்மை இருக்கும். மகிழ்ச்சி எப்படி இருக்கும். ஆனால், மகிழ்ச்சி வேண்டுமே - பொய்யாகவேனும் மகிழ்ச்சிவேண்டுமே என்று இவர்கள் தவிக்கிறார்கள். அதற்காகவே கள்ளைக் குடிக்கிறார்கள். மதுவ்கைகளை அருந்துகிறார்கள். போதை வஸ்துக்களை உபயோகிக்கிறார்கள்.

சூது விளையாடுவதும் அதற்காகத்தான். தாசிகள் சிநேகிதமும் அதை உத்தேசித்துத்தான்.

குடி, சூது, தாசி இப்படியாகப் பழக்கம் பெருகப்பெருக, வைத்தியர், வக்கீல், போலீஸ் இவர்களும் வந்து சேர்ந்து கொள்கிறார்கள். கூட்டத்தோடு கூட்டமாய் நின்று கோவிந்தாப் போடுவதுபோல எமதர்ம மகாராஜாவும் தொடர்ந்து பிரசன்னமாகவே சுற்றிவருகிறார்.

அன்பு ஒழுக்கம், வீரம், பொறுமை, நாணயம் முதலிய பண்புகள் வாழ்க்கையில் அமைய வேண்டும். கலை, கவி, பக்தி முதலிய மெய்யுணர்வுகள் உணர்ச்சியைக் குழைத்து பண்புகளை வாழ்க்கையாக உருவாக்க வேண்டும். அப்பொழுது உண்மை இருக்கும். சந்தோஷம் இருக்கும்.

கள்ளுக்கோ, சூதுக்கோ, தாசிக்கோ இடம் இல்லை அங்கு. குடியின் மூலம் உடம்பு கெடுகிறது. உணர்ச்சி செத்து விடுகிறது. பொருள் போய்விடுகிறது. குடும்பம், குடும்ப நலம் எல்லாம் நாசமாகி விடுகிறது. உயிரும் அந்த உடம்பில் சேர்ந்திருக்கத் தயங்குகிறது.

நண்பர்கள்முன், குடும்பத்தார்முன், அன்னியர்முன் ஊரார் முன், தெருக்காரர்முன், ஏன், பெண்பிள்ளைகள் முன்னிலையில் கூட கேவலமான முறையில் நிற்கவைத்து விடுகிறது குடி.

தனக்கு நேர்கிற இழிநிலையைக் கண்ணாரக்கண்டும் குடிப்ப தற்கு வெட்கம் வரமாட்டேன் என்கிறதே மனிதனுக்கு! என்று ஆற்றாமைப்படுகிறார் குறளாசியர்.

குடிக்க வேண்டாம் என்று கையைப் பிடித்துக் கெஞ்சுகிறார் கவிஞர். மசிகிறதாக இல்லை குடிகாரன். "குடித்தால், உன்னை மனிதன் என்று யாரும் நினைக்கமாட்டார்கள். நல்லவர் பக்கம் நீ தலை நீட்ட முடியாது" என்கிறார். அதற்கும் அசையமாட்டேன் என்கிறான் மிடாக்குடியன்.

"அப்படியானால், அது உன் தலை எழுத்து, எப்படியும் நீ நாசமாய்ப் போ. குடித்துத் தொலை". என்று உதறி எறிகிறார்.

குறளாசிரியரின் உணர்ச்சியையும், வேகத்தையும் அப்படியே அபிநயம் பிடித்துக் காட்டுகிறது தமிழ்.

"உண்ணற்க கள்ளை;
உணில்உண்க;— சான்றோரால்
எண்ணப் படவேண்டா
தார்". 215

உண்ணற்க - குடிக்கவேண்டாம். சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார் - நல்லவன் பெரியவன் உறவு தேவை இல்லை என்பவன். உணில் உண்க - குடிக்கவேண்டுமானால் குடித்துத் தொலையட்டும்.

உண்ணற்க என்பதை எடுத்த எடுப்பில் வைத்திருக்கிறது. அது ஆத்திரம் காட்டுகிறது. உணில் உண்க என்பதைச் சொல்லி. நிறுத்திவிட்டு "சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார்" என்பதைத் தனித்து வைக்கிறது. குடியின் படுகேவல நிலையைச் சான்றோர்களின் மூலம் தூக்கி நிறுத்துகிறது தமிழ்.

2

குடித்துவிட்டு வருகிறவனைப் பார்த்த தாயே - பெற்ற தாயே வெட்கப்படுவாள். நாணிக் கூசுவாள். அவளுக்கே மனம் கொதித்து விடும். மற்றவர் நிலையைச் சொல்லவாவேண்டும்.

"ஈன்றாள் முகத்தேயும்
இன்னாதால்;— என்மற்றுச்
சான்றோர் முகத்துக்
களி". 216

களி - குடிகாரனைப் பார்த்தஉடன். இன்னாது - தாயின் சந்தோஷமே ஓடிவிடும். அவள் வேதனை முகத்தில் படரும். மனைவி, மக்கள், நண்பர் என்ன பாடு படுவார்கள். அறிஞர்களை என்னபாடுபடுத்திவிடும். குடிகாரன் காரியம் என்று நொந்து வருந்துகிறார் கவிஞர்.

கவிஞருடைய அனுதாப உணர்ச்சி எங்கெங்கோ எழுந்து போகிறது.

3

குடி, குடி என்று சொல்கிறோமே ஒரு கொடிய செயலை. மானம், மரியாதை எதைப் பற்றியும் கவலைப்படாத கொடுஞ் செயல். அந்த வல்லரக்கனைக் கண்டால், நாணம் என்கிற உத்தமி பதறிவிடுவாள். பைத்தியமே பிடித்துவிடும் அவளுக்கு. ஓடி விடுவாள் அந்த இடத்தைவிட்டு. அவ்வளவு அசிங்கமானது குடி.

"நாண்என்னும் நல்லாள்
புறம்கொடுப்பள் — கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத்
தார்க்கு." 217

(நாண் என்னும் நல்லாள் - மரியாதை என்னும் குலமகள். புறம் கொடுப்பள் - ஓடுவாள். கள் என்னும் பேணாப் பெரும் குற்றத் தார்க்கு - குடிகாரர்களின் கொடுமையைக் கண்டு.)

4

கையிலிருந்த பொருளைக் கொடுத்துக் கள்ளை வாங்கி ஊற்று கிறான் குடிகாரன். அது என்ன செய்கிறது? பணத்தைப் பிடுங்கிக்

கொடுத்ததோடு நின்றதா? மூளையில் உள்ள ஞாபக சக்தி முழுவதையும் ஒற்றி ஒற்றி எடுத்துவிட்டது. வெட்கம், மானம், சூடு, சுரணை எல்லாம் போய்விட்டது. அதுமாத்திரமா? செயலற்ற நிலையில் பிணத்தைச் சாய்த்ததுபோல மனிதனைச் சாய்த்தும் விட்டது. பிறகும் குடிக்கிறானே மனிதன்!

"கைஅறி யாமை
உடைத்தே;—பொருள்கொடுத்து
மெய்யறி யாமை
கொளல்." 218

(கைஅறியாமை -செயலற்றநிலை. மெய்யறியாமை-புத்தி கெட்ட நிலை. அறிவீனத்தைப் பணம்கொடுத்து வாங்குகிறான்குடிகாரன். செயலற்று முடங்குகிறான். பரிதாபமான காரியந்தான்.)

5

இறந்துபோனால் ஒருவன், அவனைச் செத்தான் என்பதுதான் சரி. ஆனால் மரியாதைக்காக இறைவனடி சேர்ந்தான் என்கிறோம். துஞ்சினான் என்கிறோம். உபசார வழக்குத்தான் இது.

அதேபோல, நஞ்சை ஊற்றிக் குடிக்கிறவனை உபசார வழக்கை ஒட்டி, கள் உண்டான், மது அருந்தினான் என்று சொல்கிறோம். உண்மையில் அவன் குடிக்கிறது விஷந்தான்.

"துஞ்சினார் செத்தாரின்
வேறல்லர்; — எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்
பவர்." 219

(எஞ்ஞான்றும் - என்றென்றும்.)

பரிவின் வேகம் தமிழ் வார்த்தைகளில் துள்ளிப் பாய்ந்து வருகிறது. அற்புதமான பாடல்.

6

குடிகாரனைத் திருத்தமுடியாது என்று படுகிறது. மனைவி, மக்கள், தாய், தகப்பன், நண்பர், உறவினர் இவ்வளவு பேரும் சேர்ந்து திருத்தமுடியாத ஒன்றை எப்படித் திருத்தமுடியும்.

பணக் கஷ்டம், குடும்பத்தின் அவலம், மனைவியின் கண்ணீர், தாயின் வேதனை, வேலைக் காரர்களின் இகழ்ச்சி, ஊரார் அருவருப்பு இவ்வளவும் ஒன்றுசேர்ந்தும் அவன் தோலை ஊடுருவி உள்ளே போகமுடியவில்லை. அப்படி ஒரு முரட்டுக்தோலாய் இருக்கிறது அவன் தொலி.

குடியின் கொடுமைபற்றி அவனிடம் விளக்கம் கொடுப்பது வேண்டாத செயல். பிரயோசனமே இல்லை.

தண்ணீரின் ஆழத்தில் ஒருவன் முங்கி இருக்கிறான். அவனைக் கண்டு பிடிக்கவேண்டும். அதற்காகத் தீவட்டியைக் கொளுத்தி அதைக் கையில்ப் பிடித்துக் கொண்டு தண்ணீருக்குள் மூழ்கினால்ப் பிரயோசனம் உண்டா? தீவட்டி வெளிச்சம் இருக்குமா?

குடிகாரனைத் திருத்துகிற உபாயமும் இல்லைதான்.

"களித்தானைக் காரணம்
காட்டுதல்; நீர்க்கீழ்
குளித்தானைத் தீத்துரீஇ
அற்று." 220

(களித்தானைக் குடிகாரனைத் திருத்துவதற்காக, காரணம் காட்டுதல் - காரண காரிய விளக்கத்தோடு. குடியின் கெடுதலை அவனுக்கு எடுத்துச் சொல்லல் வீண் தண்டந்தான். நீர்க்கீழ் குளித்தானை - தண்ணீருக்குள் முங்கி இருப்பவனை. தீ - தீவட்டி வெளிச்சத்தில், துரீஇஅற்று - தேடிப்பார்ப்போம் என்று இறங்குவது போன்ற பைத்தியக்காரச் செயலேதான்.)

7

குடிகாரனும் மனிதன்தானே! பெண்டாட்டி பிள்ளைகளோடு கூடிய மனிதன் தானே! அதனால் அவன் மேல் இரக்கமே உண்டாகிவிடுகிறது கவிஞருக்கு. இரக்க உணர்வு ஒரு நாடக இயலோடு சேர்ந்து வெளிப்படுகிறது.

"குடிகாரன் சில நேரம் குடிக்காமல்த் தானே இருக்கிறான். அப்பொழுது குடியில் மயங்கிக் கிடக்கும் மற்றவனைப் பார்க்கிறது உண்டுதானே! அப்படியானால், குடியில் வரும் மானம்கெட்ட இழிநிலை பற்றி இவன் ஏன் யோசிக்கமாட்டேன் என்கிறான்"

இப்படி ஒரு நாடக இயலில் வைத்து கவிஞரின் அனுதாப உணர்ச்சிக்குக் கவி உருவம் கொடுக்கிறது தமிழ்.

எப்படி என்று பார்ப்போம்.

"கள்உண்ணாப் போழ்தில்,
களித்தானைக் காணுங்கால்,
உள்ளான்கொல் உண்டதன்
சோர்வு" 221

(உண்டதன் சோர்வு - குடியில் வந்த கேவலத்தை, உள்ளான் கொல் - யோசித்துப் பார்க்க மாட்டேன் என்கிறானே குடிகாரன்.

# உருட்டும் புரட்டும்

1

பூமியில் முளைத்த பொன்னுலகம் என்று திகழ்ந்தது சீன தேசம். நீர்வளமும் நிலவளமும் மிக்க நாடு சீனா. விவசாயம் தொழில், வியாபாரம் எல்லாம் அங்கு ஓங்கி இருந்தன. செல்வ வளத்தில் குபேரநாடு என்று சொல்லும்படி இருந்தது. கல்வி, கலை, பண்பாடு எல்லாத் துறைகளிலும் செழித்திருந்தது சீனா.

மக்கள்தொகை மிகுந்த நாடு. விஸ்தீரணத்திலும் பெரிய நாடு.

மிகப்பெரிய சாம்ராஜ்யமாக விளங்கியது சீனா. அப்பேர்ப் பட்ட சீனசாம்ராஜ்யமே அபினி வழக்கத்தால் சீரழிந்து போய்விட் டது. ஒன்றுக்கும் உதவாத குட்டிச்சுவராய்ப் போய்விட்டதுசீனா.

இது சரித்திரத்தில் காணும் உண்மை.

பாண்டவர்கள் வளமான சாம்ராஜ்யத்துக்கு அதிபதியாக இருந்தார்கள். வீர தீரம் நிறைந்தவர்கள், வரம் பல பெற்றவர்கள், கல்விமான்கள், அப்படி இருந்தும் சூது விளையாட்டில் எல்லா வற்றையும் இழந்து விட்டார்கள். பண்டாரம் பரதேசிகள் போல பதின்மூன்று வருடம் காட்டில் அலைந்து திரிந்தார்கள்.

நளமகாராஜனும் சூது விளையாட்டில் ராஜ்யத்தையே பறி கொடுத்தவன்தான்.

இதுவும் சரித்திரம் புகட்டுகிற உண்மைதான்.

குடியும், சூதும் பெரிய பெரிய சாம்ராஜ்யங்களையே மண்ணோடு மண்ணாய் உருட்டி விடுகின்றன என்றால், சாதாரண விவசாயி, தொழிலாளி, மாதச் சம்பளக்காரன், முதலாளி, டாக்டர், இஞ்சினியர், அரசியல்வாதி இவர்களால் தாக்குப் பிடிக்க முடியுமா?

ஆயிரம் ஆயிரம் குடும்பங்கள் தெருவில் நிற்கின்றன. விசாரித்தால், குடி அல்லது சூதாட்டம் இவற்றில் ஒன்று பதிலாக வருகிறது.

சூதாட்டத்தில் லாபந்தான் என்றாலும் அதைவிட்டுத் தொலைத்துவிட வேண்டும். வலைஞர்கள் தூண்டிலில் இரும்பு, செம்பு இதனால் ஆகிய முள் ஆணியை வைத்திருப்பார்கள். உணவுடனேயே வைத்திருப்பார்கள்.

உணவுடன் சேர்த்து உலோக ஆணியை விழுங்கிவிடும் மீன். தொண்டையில் சிக்கிக் கொள்ளும் ஆணி, தூண்டிலில் சிக்கிவிடும் மீன்.

சூது விளையாட்டில் லாபம் கிடைப்பதாக இருந்தால், அந்த லாபத்தோடு ஒரு மாயவலை சேர்ந்திருக்கும். அது நம் மனதைத் கொக்கிபோட்டு இழுக்கும். பொறியில் நன்றாக மாட்டி விடுவோம் அதனால் சூதாட்டத்தின் பக்கம் தலைநீட்டி விடக்கூடாது.

''வேண்டற்க வென்றிடினும்
சூதினை; — வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி
அற்று.'' 222

(வேண்டற்க - விரும்பவேண்டாம். வென்றதும் - சூதாட்டத்தில் வெற்றியாக வந்த பணமே எமனாகிவிடும். எப்படி? தூண்டில்-தூண்டிலில் கட்டிவைத்த. பொன் - இரும்புமுள், மீனுக்கு எமனானது போல்)

2

லாபத்தை விட நஷ்டந்தான் அதிகம் வரும், சூது விளையாட்டில், நஷ்டம் நூறுமடங்கு, ஆயிரம் மடங்கு என்று பெருகிவிடும். அப்படி இருந்தும் சூது விளையாட்டிலிருந்து ஒருவன் விடுபட முடியாவிட்டால், அவனை எப்படி ஆண்மகன் என்று சொல்லமுடியும்? அவனை நம்பி ஒன்றையும் ஒப்படைக்க முடியாது. ஒன்றுக்கும் உதவாத பேடி அவன்.

''ஒன்றெய்தி நூறிழக்கும்
சூதர்க்கும் உண்டாம்கொல்;
நன்றெய்தி வாழ்வதோர்
ஆறு.'' 223

(உண்டாம் கொல் - வரவாசெய்யும். அடடா! வராமலே போய் விடுகிறதே! என்னது, நன்றுஎய்தி வாழ்வது ஓர் ஆறு - அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழும் ஒரு தெய்வீக நலம்.)

3

சூதுவிளையாட்டில் பந்தயம் ஏறிக்கொண்டே போகும். தோற்கத் தோற்க வேகம் கூடும். ஐந்து, பத்து, நூறு, ஆயிரம் என்று தொகை ஏறும். கடிகாரம், பேனா, அங்கவஸ்திரம், வீடு, வாசல் எல்லாமே பந்தயத்துக்குள் வந்துவிடும்.

புரண்டு சுருளும் பந்தயத்துக்கு (உருளாயம்) உடைமையை இப்படி ஏலம் போடுகிற ஒருவன் (ஓயாதுகூறின்) ஒன்றையும் வைத்துப் பாதுகாக்கமாட்டான். குடும்பத்தையே தெருவில் விட்டு விட்டுப் போய்விடுவான் ''பொருளாயம் போஒய் புறமே படும்''

இனிப் பாடலைப் பார்ப்போம்.

''உருள்ஆயம் ஓயாது
கூறின்; — பொருள்ஆயம்
போஒய்ப் புறமே
படும்.'' 224

(உருள்ஆயம் - சூதாட்டக்காயுடன் ஏற்றிஏற்றி உயர்த்துகிற பந்தயத்தை. ஓயாதுகூறின் - மேலே மேலே வெறியோடு சொல்வார்கள். அவர்களுடைய பொருள் ஆயம் - செல்வம் புறமே போய் விடும் - இவர்களை விட்டு வெளியேறி வேறொரு இடம் போய்ச் சேர்ந்துவிடும்.)

4

நோய் வந்து உடம்பை ருசிபார்க்க, ருசிபார்க்க மனிதன் துன்பப்படுவான். உயிர்மேல் ஆசை உண்டாகும் அவனுக்கு. பந்தயம் தோற்கத் தோற்க விளையாட்டில் வெறியே உண்டாகும்.

''இழத்தொறூஉம் காதலிக்கும்
சூதேபோல்; — துன்பம்
உழத்தொறூஉம் காதற்(று)
உயிர்.'' 225

(இழத்தொறும் - கையைவிட்டுப் பணத்தை இழக்க, இழக்க. காதலிக்கும் சூதுபோல் - வெறியையே உண்டாக்கும் சூதாட்டம். அது போலவே. துன்பம் இழத்தொறும்-துன்பம் வந்து அழுத்தஅழுத்த. உயிர்காதற்று - உடம்பினிடத்து உயிருக்கு ஆசை உண்டாகும்.)

குறிப்பு :- உடம்பு தேயத்தேய அது உயிரைத் துன்புறுத்துகிறது. துன்பம் பெருகப் பெருக, துன்புறுத்தும் உடம்பின் மேல் உயிருக்கு ஆசை பெருகுகிறது. இது வேடிக்கைதான். இந்த வேடிக்கையை வைத்தே, செல்வம் தொலையத் தொலைய - அப்படித் தொலைத்துக்கட்டும் சூதின்மேல் மனிதனுக்கு வெறி கூடுகிறது'' என்று சொல்கிறார் குறளாசிரியர்.

விஷயத்தை உவமானம் ஆகவும். உவமானத்தை விஷயமாகவும்புரட்டிப் போட்டிருப்பதில் ஒரு தனியான ரசம் இருக்கிறது.

# வறுமை

1

கொடுமைகள் இன்னின்ன என்று உலகம் ஒரு பட்டியலை நெடுகிலும் தயாரித்து வருகிறது. பழையன கழிதல் புதியன புகுதல் என்னும் மாற்றம் பட்டியலில் அடிக்கடி வரும். ஆனால் அன்று தொட்டு இன்றுகாறும், ஆதி அந்தம் என்பதே இல்லாத படி ஒரு கொடுமையான அட்டகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அதற்கு வறுமை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நல்குரவு, என்னும் சொல்லால் அந்த வறுமை செய்கிற அயோக்கியத் தனங் களைக் குறளாசிரியர் சொல்கிறார்.

உண்மையைத் துருவித்துருவி ஆராய்ந்து பளிங்கில் வைத்துக் காட்டுவது போல்க் காட்டுகிறான் ஒருவன். இலக்கியம், கலை, சமயம், தத்துவம், விஞ்ஞானம், எதிலாகட்டும் - ஏன், அரசியலே ஆகட்டும், சொல்கிறவன் ஏழை என்றால், ஒருவரும் அதை அங்கீகரிக்கமாட்டார்கள்.

தப்பும் தவறுமாகவே சொல்கிறான் பணக்காரன், அதை ஆகா, ஓகோ, என்று போட்டி போட்டு எல்லோரும் பாராட்டு வார்கள்.

இதைவிடத் துரோகம் ஒன்றுண்டா. இது போன்ற துரோகங் களைச் செய்து கொண்டே இருக்கிறது வறுமை.

"நல்பொருள் நன்குணர்ந்து
சொல்லினும், — நல்கூர்ந்தார்
சொல்பொருள் சோர்வு
படும்."

(நல்பொருள் - தெளிந்த உண்மை. நல்கூர்ந்தார் - வறியவர். சா ர் வுபடும் - அங்கீகரிக்கட்படாமலே போய்விடும்.)

2

அன்பு, அருள், பொறுமை, அடக்கம், ஒழுக்கம் முதலிய பண்புகள் தெய்வீகமானவை. இந்த நல்ல பண்புகளை அழஅழப்படுத்தும் வறுமை. கசக்கித் தேய்த்துத் தூர எறிந்து விடும் வறுமை. அத்தனை பொல்லாதது வறுமை. (அறம் சாரா நல்குரவு)

பெற்ற தாயைவிட அன்பும் அருளும் உடையவர் உலகில் ஒருவரும் இல்லை. கடவுளால் மன்னிக்க முடியாத குற்றங்களைக்கூட தாய் மன்னித்துவிடுவாள். புனிதமான தாயே, வறுமைக்கு இரக்கப்படமாட்டாள். வறுமையில் உழலும் மகனை ஒருமாதிரி யாகவே நோக்குவாள்.

"அறப் சாரா நல்குரவு;
ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப்
படும்." 227

அறம்சாரா நல்குரவு - அறவுணர்வுகள் பக்கத்தில் வரப்பயப்படும் அப்படிக் கசக்கித் தூர எறிந்து விடும் வறுமை. தாயானும் - வறியவனைச் சகோதரர்கள் ஒதுக்குவது இயல்பு. நண்பர்கள் ஒதுக்குவது இயல்பு. ஆனால் பெற்ற தாயும் ஒதுக்கி வைக்கிறாள். (தாயானும் - தாயால்கூட) பிறன்போல நோக்கப்படும் - வறியவன் அன்னியனாக நினைக்கப்படுவான்.)

3

வறுமை என்ன பாடுபடுத்துகிறது மனிதனை. கொடியவனாக்கி விடுகிறது. வேண்டாதவனாக்கி விடுகிறது. அதுமட்டுமல்ல பெண்டாட்டி பிள்ளைகளுடன் சந்தோஷமாய் இருக்கிறவனைச் சந்நியாசியாகவும் வேஷம்போட்டு ஓடவைத்து விடுகிறது. பரிதாபம் இல்லையா இது.

வறுமைக்குப் பயந்து சந்நியாசிகளானவர்கள் செய்கிற காரியம் ஒன்றுதான். சமைத்த உணவு பலவீடுகளில் நாள்தோறும் மிஞ்சும். அதற்குப் பழையது என்று பெயர். நீராகாரத்தோடு சேர்ந்த பழையது மிஞ்சி மிஞ்சிப் புளிப்பேறிவிடும். அதற்குக் காடி என்று பெயர்.

காடிக்கஞ்சியை என்ன செய்வது என்று பலர் கஷ்டப்படுவது உண்டு. அந்தக் கஷ்டத்தை இந்தச் சந்நியாசிகள் தீர்த்து வைக்கிறார்கள். இவர்கள் துப்பரவு பண்ணுவது பழையதைத்தான். தங்களை அல்ல.

''துப்புர(வு) இல்லார்
துவரத் துறவாமை;
உப்பிற்கும் காடிக்கும்
கூற்று.'' 228

(துப்புரவு இல்லார் - மனம் தூய்மை பெறாதவர். துவரத் துறவாமை - பற்றைத் துடைத்தெறியாமல். சந்நியாச வேஷம் போட்டது. உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பழையதுக்கும் உப்புக்கும் கிடைத்த விமோசனந்தான்.)

குறிப்பு:- வறுமையின் அடி பொறுக்க மாட்டாமல் சந்நியாச வேஷம் போட்டவர்கள். அதையே ஒரு சாக்காகக் கொண்டு உண்மைச் சந்நியாசி ஆகக்கூடாதா, பாசபந்தத்தை அறவே விட்டொழுக்கும் தவவழியில் செல்லக்கூடாதா என்று அனுதாபப் படுகிறார் குறளாசிரியர்.

4

வசதி உள்ளவனுக்கு நேரம் போவது தெரியாது. அதனால் எப்பொழுதும் அவன் ஆனந்தமாக இருப்பான். காலம் என்பது அவனுக்கு உத்தம மனைவி மாதிரி, சுகங்கொடுத்துக் கொண்டே இருக்கும்.

வறியவனுக்குக் காலந்தான் எமன். வருஷம், மாதம், நாள், காலை, நண்பகல், மாலை, இரவு என்றெல்லாம் புதுப்புது ரம்பங்களைக் கொண்டு வறியவனைக் காலமானது நறுக்கும். ஒவ்வொரு நிமிஷமும் அவனுடைய உணர்ச்சியை - உணர்ச்சியின் நகக்கண்ணை ஊசிகொண்டு குத்துவதுபோல் குத்திக் கொண்டே இருக்கும் காலம்.

காலம் அவன் கண்ணுக்குத் தெரியும். ஒவ்வொரு வேளையுமே அவன் கண்ணுக்குத் தெரியும். ரத்தப் பொலி வாங்கும் காட்டேறியாகவே அவன் கண்ணுக்குத் தெரியும்.

வறியவனுக்குக் காலம் என்பது நரகம்.

''இன்றும் வருவது
கொல்லோ! நெருநலும்
கொன்றது போலும்
நிரப்பு.'' 229

(இன்றும் வருவது கொல்லோ - இன்றைக்கும் அது வரத்தான் செய்யுமா! நெருநலும் - நேற்றும். கொன்றதுபோலும் நிரப்பு - உயிரை வாங்கிய வறுமை. அதாவது துன்பம்.)

குறிப்பு:- வறியவன் கண்ணுக்குக் காலமே வறுமையாகத்தான் தெரிகிறது. அப்படி உணர்ச்சியே இல்லாதபடி செய்துவிட்டது வறுமை.

5

இன்மை (வறுமை) போலக் கொடியது வேறு ஒன்றும் இல்லை. உலகம் முழுவதிலும் இல்லை. வறுமையைப் போன்ற கொடுமை வறுமை ஒன்றுதான்.

''இன்மையின் இன்னாத(து)
யாதெனில், — இன்மையின்
இன்மையே இன்னா
தது.'? 230

(இன்மையின் - வறுமைபோல. இன்னாதது - கொடியது. யாது எனின் - வேறு என்ன இருக்கிறது உலகில் என்று ஒருவர் கேட்டால்.

பதில் ஒன்றுதான். அதாவது, இன்மையின் இன்னாதது இன்மையே - வறுமையைப்போல் கொடியது வறுமைதான்)

இதுதான் பதில்.

# பேதைமை

1

பேதைமை என்பது அநாதியான தத்துவம். அதுஒரு தினுசான பைத்தியம். எந்தவித மருத்துவத்துக்கும் தெளியாத ஒரு பைத்தியம்.

''நான் தனி, எனக்குத்தான் இது தெரியும், எனக்குத்தான் இது சொந்தம்'' என்று பேதப்படுத்தி வைத்துக்கொள்ளும் இந்தப் பைத்தியம்.

உண்மைக்குப் புறம்பானது, உண்மைக்கு விரோதமானது, உண்மையே இல்லாதது எதுவோ, அதுதான் இதன் கண்களுக்குத் தெரியும். அதை இது நன்றாகப் பிடித்துக் கொள்ளும். இதை அதுவும் இறுகப்பிடித்துக் கொள்ளும். முட்டாளுக்கு முட்டாள் தெண்டன் இட்டேன் என்று ஒன்றை ஒன்று அர்ச்சனை பண்ணிக் கொண்டே இருக்கும்.

தோசை, இட்டிலி என்பது முக்கியமான ஆகாரம், வாழ்நாள் முழுவதுக்கும் தெவிட்டாத ஆகாரம். ஒருவாரம் பத்துநாள் வரை இட்டிலி, இல்லை, தோசை இல்லை என்றால், கன்னம் வீங்கி விடும். முகம் வீங்கிவிடும். நாக்குக்கு வெறி உண்டாகிவிடும்.

இட்லி தோசைக்கென்றே தனித்த முறையில் துவையல் தயாரிக்கிறார்கள். அந்தத் துவையலில் எத்தனையோ வகை. தேங்காய், பொரிகடலை, மிளகுவற்றல், உப்பு, புளி, இவற்றை ஒன்றாய்ப் போட்டு அரைத்து தாளித்துக் கொட்டிய சட்டினியும் இட்லி தோசையும் சேர்ந்துவிட்டால் சொர்க்கந்தான். சட்டினி போதாதென்று சாம்பார்வேறு. எள்ளுப்பொடிவேறு மிளகாய்ப் பொடி வேறு, எண்ணெய் வேறு.

இத்தனை பரிவாரங்களுடன் இட்லி தோசை எழுந்தருளுகிறது என்றால் நாக்கில் நீர் ஊறவே செய்யும். அப்படி ஊறாவிட்டால் நாக்குச் செத்துவிட்டது என்றுதான் சொல்லத் தோன்றும்.

இட்லி தோசையை எப்படிக் கண்டுபிடித்து விட்டார்கள் நம் முன்னோர்கள் என்று யோசிக்க யோசிக்க வியப்பாக இருக்கும்.

அரிசியையும், உளுத்தம்பருப்பையும் நன்றாக ஊற வைக்கிறார்கள். அரிசியை உரலில்ப் போட்டு மையாய் அரைக்கின்றார்கள். உளுத்தம்பருப்பின் தொலியைக் களைந்து, உரலில்ப் போட்டு பொங்கப் பொங்க அரைக்கிறார்கள். மாவானது திரண்டு திரண்டு துள்ளி எழவேண்டும். பந்து துள்ளுவதுபோல் துள்ளிக் குதிக்க வேண்டும் மாவு. அப்படி அரைத்த உளுந்து மாவையும் அரிசி மாவையும் ஒன்றாய்ப் போட்டு, அதில் அளவோடு உப்பையும் சேர்த்து பிசைந்து வைத்து விடுகிறார்கள். பன்னிரண்டு மணிநேரத்தில் புளிப்பு உண்டாகி மாவில் ஏறிச் சேர்ந்து கொள்கிறது. மாவை நன்றாகக் கிண்டிக்கொடுத்து ஆவியில் இட்லியாக அவிக்கிறார்கள். தோசையாகக் கல்லில் ஊற்றிச் சுடுகிறார்கள்.

எப்பேர்ப்பட்ட அருங்கலை இது. சுயநிலையில் உள்ள எல்லோரும் இட்டிலியை மதிப்பார்கள். தோசையை மதிப்பார்கள். சட்டினி, சாம்பார், எள்ளுப்பொடி எண்ணெய் எல்லாவற்றையும் மதிக்கவே செய்வார்கள்.

''இட்லியா, சட்னியா இவைபற்றி விபரம் ஒன்றும் தெரியாது என்று சொல்லமாட்டார்கள்'' ''அதுபற்றி, பழைய காலத்து ஆசாமிகளுக்குத்தான் தெரியும் என்றும் சொல்ல மாட்டார்கள்.''

இட்லி தோசையை வயிறு புடைக்கத் தின்று கொண்டே, அதைப்பற்றிப் பேசுவதற்கும், யோசிப்பதற்கும் பயப்படுகிற அகம்பாவமும் திமிரும் பேதையினிடமே உண்டு.

இட்லி தோசை பற்றிப் பேசவே அவன் பயப்படுவான். ஆனால் மெக்ஸிகோவாசிகள் வைக்கும் கோழிப் பிரியாணி பற்றிப் பிரசங்கம் பண்ணுவான். சைனாக்காரர்கள் வைக்கும் பாம்புப் பொரியல் பற்றி ஆராய்ச்சிப் பேருரை நிகழ்த்துவான். அரேபியர்களின் மாட்டுக்குழம்பு, பாலைவனவாசிகளின் பச்சை மாமிச உணவு, போர்னியோத்தீவில் உள்ள தலைவெட்டிப் பட்டாளங்களின் நரமாமிசம் இவைபற்றி எல்லாம் உயிரைக் கொடுத்து விழுந்து விழுந்து படிப்பான். அவைபற்றி முற்றும் உணர்ந்தவன் போலக் கட்டுரை எழுதுவான், புத்தகம் எழுதுவான்.

அதற்காக டாக்டர் பட்டம் வாங்குவான். உத்யோகம் கேட்பான். பிறகு இட்லி தோசை சாப்பிடுகிறவர்களை மதிக்கவா செய்வான், கேவலமாக நினைப்பான்.

சாப்பாட்டு விஷயத்திலேயே இந்தப்போடு போடுகிறவன், சங்கீதம், கவி, கோவில், நந்தவனம், குடியிருப்பு, வாகனம், பழக்க வழக்கம் முதலியவற்றில் என்னபோடு போட மாட்டான்.

தன்னைச் சுற்றி உள்ள எதையும் அவன் பார்க்கமாட்டான். தனக்குத் தெரியாததையே பார்ப்பான். பார்த்துவிட்டது போலவே பாசாங்கு பண்ணுவான். அதுபற்றி ஆராய்வான், வந்தவர் போனவரிடம் எல்லாம் தெரியாததையே சொல்லி விளக்குவான். அதோடு அதுவாய்க் கலந்துவிட்டது போல் மயங்குவான்.

பேதையின் பயித்தியம் இப்படி.

இந்தப் பயித்தியத்தை எப்படித் தெளிய வைக்கமுடியும். உலகம் முழுவதும் இந்தப் பயித்தியம் ''சர்வம் ஜகத்மயம்'' என்று நிறைந்துள்ளது. எல்லாத் துறைகளிலும் ஊடுருவிக் கிடக்கிறது. அன்றுதொட்டு இன்றுகாறும் இருக்கிறது. காலம் இடம் கடந்த தத்துவமாய் இருக்கிறது பேதைமை.

எல்லா இடங்களிலும் எல்லாக் காலமும் எல்லாத் துறைகளிலும் பேதைமையின் காரியம் ஒன்றுதான். அதாவது பொய்யைக் கட்டி அழுவதுதான். இருட்டில் முங்குவதுதான். தெரியாததோடு கட்டிப் புரண்டு உருள்வதுதான்.

இந்த விசித்திரம் கவியில் எழுந்து நிற்கிற ஆவேசத்தைப் பாருங்கள்.

''பேதைமையுள் எல்லாம்
பேதைமை; — காதன்மை
கைஅல்ல தன்கண்
செயல்.'' 231

(கை அல்லதன்கண் - இல்லாத ஒன்றின்மேல். காதன்மை செயல் - ஆசைவெறி கொள்ளுதல்.)

2

கனவையே நனவென்று மயங்குவான் பேதை. அந்த மயக்கத்திலேயே சதா கிடப்பான். வீடு, வாசல், உற்றார், உறவினர், மனைவி, மக்கள், தொழில், பிழைப்பு அத்தனையும் அவன்

மயக்கத்தில் அடிபட்டுப் போய்விடும். உருவெளித் தோற்றம் இருக்கிறதே அதற்காகச் சக்தி முழுவதையும் கொட்டித் தொலைப்பான்.

நடராஜமூர்த்தியின் திருநடனத்தை (சிலையை) விற்றுவிடுவான். அந்த ரூபாய்க்கு அமெரிக்கன் பொம்மையாக வாங்கி வந்து விடுவான்.

> "பேதைமை என்ப(து) ஒன்(று)
> யாதெனில்; — ஏதம்கொண்(டு)
> ஊதியம் போக
> விடல்." 232

(ஏதம்கொண்டு - நஷ்டத்தை வலிய வாங்கி, ஊதியம்போக விடல்- லாபத்தை விட்டுவிடுதல்.)

3

அன்பு, பொறுமை, அடக்கம் முதலிய பண்புபற்றி ஆயுள் நாள் முழுவதும் படிப்பான். விதவிதமான கதைகளில் வைத்து அவற்றை அனுபவிப்பான். பிரசங்கம் பண்ணுவான்.

ஆனால் மனையாளிடம் புலிபோல்ப் பாய்வான். பிள்ளைகளிடம் வெறிநாய் விழுவதுபோல் விழுவான். நண்பர்களும், பணியாளர்களும் இவனைப் பார்க்கவே பயப்படுவார்கள். பேதையின் காரியமே தனிதான்.

> "ஓதி உணர்ந்தும்
> பிறர்க்குரைத்தும்; — தானடங்காப்
> பேதையில்ப் பேதையார்
> இல்." 233

(படித்தும் முட்டாளாய் இருக்கிற - பேதையில் - பேதையைப் போல, பேதையார்இல் - வேறொரு பேதை உலகில் இல்லைதான்.)

4

வாழ்க்கையும் உண்மையும் பேதைக்குக் கசந்து போய்விடும். அவன் மயங்குவது வாழ்க்கையிலோ, உண்மையிலோ அல்ல. இனி, அவன் ஒருகாரியம் செய்தாலும் போதும். அது போதும் போதும் என்று ஆகிவிடும். அப்படிக் கோளாறு பண்ணிவிடுவான் பேதை. கல்யாணவீடு. மங்களமான இடம். விருந்தினர், பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார், மாப்பிள்ளை, பெண்

எல்லோரும் கலகலப்பாய் இருக்கிறார்கள். தாமரைக்குளத்தில் எருமை புகுந்து உழப்புவதுபோல் அங்கேவந்து உளறித் தொலைப்பான் பேதை.

விமான விபத்து, ரயில் விபத்து, பூகம்பச் சேதம். இப்படிச் சொல்லித் தீர்ப்பான். கல்யாணம் ஆன மறுநாளே தன்னுடன் படித்த ஒருவன் மாரடைப்பால் இறந்ததுபற்றியும், அதனால் அந்தப்பெண் அலறிக்கதறியது பற்றியும் வருணித்துக்காட்டுவான்.

கல்யாணவீடு என்னபாடுபடும்!

அவனுடைய ஒருகாரியம் அத்தனைப் பேரையும் குத்திக் கொண்டே இருக்கும். நரகவேதனையாக இருக்கும். ஆயுள்நாள் முழுதும் (எழுமையும்) இருக்கும். பேதையின் மனதில் இருந்த (புக்கு அழுந்தும் அளறு) நரகவேதனை, அவனைச்சுற்றி இருப்பவர் களுக்கும் வந்துவிடும்.

''ஒருமைச் செயல்ஆற்றும்
பேதை; — எழுமையும்
தான்புக்(கு) அழுந்தும்
அளறு.'' 234

5

பேதையின் கையில் பணம் வந்துவிட்டால் போதும். கோமாளி களாய் அவனைச்சுற்றிக் கூடிவிடுவார்கள். பெரிய கொட்டகை தான். போஜனப்புரைதான். வரவேற்புத்தான். உபசரிப்புத் தான். களியாட்டமாகவே இருக்கும் வீடு.

அதேநேரத்தில் நோய்வாய்ப்பட்ட மனைவிக்கு வைத்தியம் செய்யப் பணம் இல்லை என்பான். தாயும் தந்தையும் காசிபோய் வரவிரும்பினால், ''அதுதேவை இல்லை, கர்நாடகம்'' என்று சொல்லிவிடுவான்.

நண்பனுடைய குழந்தைக்குப் பால் கொடுக்கமாட்டான். வேலைக்காரிக்குப் பழையது போதாதா என்பான்.

அகிலஉலக மன்றங்கள், 'அது இது' என்று இருக்கின்றனவே அவைகளுக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று மொய் எழுதுவான். பேதையின் காரியம் இது.

''ஏதிலார் ஆரத்
தமர்பசிப்பர் — பேதை
பெருஞ்செல்வம் உற்றக்
கடை.'' 23

(ஏதிலார்ஆர - சம்பந்தம் இல்லாதவர்கள் ஆடிப்பாடி ஆரவாரிக்க. தமர்பசிப்பர் - உற்றாரும் உறவினரும் பசியில் வாடுவார்கள்.)

6

பைத்தியம் பிடித்தவன் வயிறுமுட்டக் கள்ளையும் குடித்து விட்டானானால் விட்டு வைப்பானா? வீட்டையும் தெருவையும், ஏன், ஊரையே அமர்க்களப்படுத்தி விடுவான்.

பேதையின் கையில் பணம் வந்து சேர்ந்துவிட்டால் அந்தக் கொடுமையைத் தாங்க முடியாது. அதைவிடக் கொடுமை அவனிடம் அதிகாரம் போய்ச் சேர்வது.

''மையல் ஒருவன்
களித்தற்றால்; — பேதைதன்
கைஒன்(று) உடைமை
பெறின்.'' 236

(மையல்ஒருவர் - பயித்தியம். களித்துஅற்றால் - கள்ளுண்டநிலை தான். கைஒன்று உடைமை - பேதையின்பிடியில் பதவியோ, பண மோ, அதிகாரமோ சிக்குவது.)

7

ஒத்தஉணர்ச்சி உடைய அறிஞர்கள் உலகில் எங்குமே அபூர் வந்தான். எந்தத்துறையிலும் அபூர்வந்தான். ஆர்வம் இருக்கும், படிப்பு இருக்கும், நல்ல பயிற்சியே இருக்கும், உணர்ச்சி கூட இருக்கும்; ஆனாலும் உலகில் பெரும்பாலோர் தெளிவில்லாமலே தத்தளிக்கிறார்கள்.

இந்தநிலையில் துணை இல்லையே நமக்கு என்று அறிஞர்கள் தவிப்பது இயல்புதான். மனம் ஒன்றி உறவாடுவதற்குத் தெளி வுள்ளவர் ஒருவர் கிடைத்து விட்டால் பிறவிப் பயனையே பெற் றவர்போல அறிஞர் மகிழ்வார். வந்தவரைத் தம்மவராகவே வைத்துக் கொள்வார். இருவரும் ஒருவாரம், இரண்டுவாரம் என்று அளவளாவினார்கள். ஒருமாதமும் அளவளாவினார்கள். இரண்டுமாதமும் முடிந்துவிட்டது. வந்தவர் ஊருக்குப் புறப்படுகிற பொழுதெல்லாம் பலதடவை தடுத்து நிறுத்தி ஆகிவிட்டது. இந்த முறை அப்படி முடியவில்லை, விடைகொடுத்து அனுப்பிவைப்பது தவிர வேறு வழிஇல்லை. சொந்த ஊருக்குப் புறப்பட்டுவிட்டார் வந்திருந்த அறிஞர்.

தாங்கமுடியுமா பிரிவை? வீடு வெறிச்சோடிப் போகும். மனம் வெறிச்சோடிவிடும். உணர்ச்சி ஒய்ந்துபோகும். தமிழும் கவியும் வெறிச்சோடியே போய்விடும்.

"அநாதையாய் நிற்கவேண்டியதுதான். என்ன செய்வது இனி" என்று உணர்கிறபொழுது அறிஞருடைய மனம் கொதிக்கத் தானே செய்யும்.

"ஒத்த உணர்ச்சியோடு கூடிய அறிஞர்களுடன் பழகுவது தவறு. பெரிய தவறு. மடத்திலும் மடத்தனம்" என்றுதானே மனம் குமுறும் அந்த வேளையில்

"இனிமேல் உறவாடுவது என்றால் மூடர்களாகிய பேதை களுடன்தான் உறவாடவேண்டும்." என்று சோக உணர்ச்சி மனதைக் கசக்கிப் பிழியவே செய்யும்.

திருவள்ளுவரும் அறிஞர்களோடு உறவாடியவர்தான். சதா உறவாடித் திளைத்தவர்தான். அதனால் ஏற்படுகிற அவஸ்தையை அவரே பெட்டிஏறிச் சாட்சியம் சொல்வதுபோலச் சொல்கிறார்.

"பெரி(து) இனிது — பேதையார்
கேண்மை"

அசடுகளோடு பழகுவதுதான் ஆனந்தம். ஏன்?

பிரிவின்கண் அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பியபின்.
"பீழை தருவ(து) ஒன்(று)இல்"

வேதனைப்படுவதற்கு ஒன்றும் இருக்காது. அப்படியானால் இனிது தானே!

இனிப் பாடலை முழு உருவத்தில்ப் பார்ப்போம்.

"பெரிதினிது பேதையார்
கேண்மை; — பிரிவின்கண்
பீழை தருவதொன்(று)
இல்." 237

(பீழை - துயரம்).

8

மெத்தையைப்போட்டு அதில் தூய வெள்ளைத்துப்பட்டியை விரித்து வைத்திருக்கிறது. சாணத்திலும் சகதியிலும் நடந்து வந்த ஒருவன், காலைக் கழுவாமல் மடமடவென்று வந்தான். அந்தக் காலை மெத்தைமேல்-துப்பட்டியின் மேலேயே வைத்துவிட்டான்.

அருவருப்பாக இருக்கும் அது.

கலை உணர்வும் பண்பாடும் மிக்க அறிஞர் கூடிய சபையில் பேதை வந்து உட்கார்ந்து கொள்வான். சும்மா இருக்கமாட்டான். ''அதில் அப்படிச் சொல்லி இருக்கிறதே! இதில் இப்படிச் சொல்லி இருக்கிறதே'' என்று உளறுவான்!! கேட்கச் சகிக்காது!! அவனை அங்கே வைத்திருக்கவும் மனம் சகிக்காது. அறிஞர்களின் நிலை பரிதாபமான நிலைதான்.

இனி, பாடலைப் பார்ப்போம்.

''கழாஅக்கால் பள்ளியுள்
வைத்தற்றால்; — சான்றோர்
குழாஅத்துள் பேதை
புகல்.'' 238

(கழாஅக்கால் - சாணமும் சகதியும் பட்ட காலை, கழுவாமல். பள்ளியுள் வைத்து அற்று - படுக்கைமேல் படும்படி நடந்து கொள்வது போன்ற அருவருப்பு வரும். சான்றோர் குழாஅத்துள் பேதைபுகல் - அறிஞர் கூடி அனுபவிக்கும் சபையில் ஆராய்ச்சிக் காரன் நுழைந்து உழப்புகிற காரியம்)

குறிப்பு :- மனிதனிடம் இருக்கிற அற்புதம் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து அதிசயப்படுகிறார் கவிஞர். அடடா, தெய்வகடாட்சம் அல்லவா மனிதன்! என்று மனிதனைப் பார்த்துப் பார்த்து உருகுகிறார் கவிஞர். நேர் எதிரான அம்சங்களும் கவிஞர் பார்வையில் விழுகின்றன. இப்படி எல்லாம் வானளாவி மணக்கும் மனிதப் பூஞ்சோலைக்குள், வேண்டாத களைகளும், முள்களும், மணம் இல்லாத போலிப்பூக்களும், இருக்கின்றனவே! புதர்களும் மண்டிக் கிடக்கின்றனவே! பூச்சிகளும் அவற்றில் நடமாடுகின்றனவே என்று கலங்குகிறார்.

இந்தத் தொல்லையிலிருந்து மனிதனை எப்படியாவது மீட்டுவிடவேண்டுமே என்று கவிஞரின் உள்ளம் இடிகிறது. இடிந்து கரைகிறது.

தமிழ் அவ்வளவையும் பார்க்கிறது. பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறது. தமிழின் பரவசத்தைக் கவிகளில் பார்க்கிறோம்.

# பித்தலாட்டம் படுத்துகிற பாடு

1

உண்மையைப் பார்க்க வேண்டும் என்றால் படிப்பு மட்டும் காணாது. இதயவளம் வேண்டும். உணர்ச்சி வேண்டும். இரண்டும் ஏராளமாகவே வேண்டும். கலைநயத்தைக் காணவும், கவியை அனுபவிக்கவும் வயதே ஒருவருக்கு வேண்டும். அப்படியானால்த் தான் முடியும். படிப்பு, ஆர்வம், உணர்ச்சி மூன்றும் காணாது. மூன்றும் அறிவுமயமாய்ப் பழுத்துக் கனிவதற்கு வயசும் வேண்டும்.

காமம், குரோதம் இவற்றின் ருசி தெரிவதற்குக் கூட அறிவு தான் துணை. அறிவு துணை செய்ய வயதுதான் முக்கியம். அப்படி யானால்த் தானே, காமம் காதலாகவும், குரோதம் வீரமாகவும் அவதாரம் எடுக்க முடியும் மனிதனிடம்.

பக்திக்கும் அப்படித்தான்,

கல்விக்கு லட்சியம் உண்மைதான் என்றால் மனவளம். உணர்ச்சிவளம், வயதின் அனுபவம் ஆகியவற்றை ஒப்புக் கொள் வார்கள். பொறுமையாக இருப்பார்கள். அடக்கமாக இருப்பார்கள். கற்றவர்களிடம் மரியாதையாக இருப்பார்கள்.

உண்மை லட்சியம் அல்ல; பிழைப்புத்தான் கல்விக்கு லட்சியம் என்று வந்து விட்டால் பொறுமைக்கு அங்கு இடம் இல்லை. அடக்கத்திற்கும் அங்கு இடம் இல்லை. மரியாதை தேவை இல்லை தான்.

"தனக்குத் தெரியாமல் ஒன்று எப்படி இருக்க முடியும். எது ஒன்றும் அப்படி இருக்க முடியாது" என்கிற திமிர்தான். அறிவில்லாதவனிடம் இருக்கும். அகம்பாவமும் இருக்கும்.

இதைப் புல்லறிவு என்று வள்ளுவர் சொல்கிறார். புல்லறிவு என்னும் பித்தலாட்டம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது. பேயாட்டமே ஆடி இருக்கிறது. குறளாசிரியர் தம் கண்ணாலேயே இந்தக் கொடுமையைப் பார்த்திருக்கிறார். தற்காலத்து யூனிவர்சிட்டிப் படிப்பில் உண்டாகிற அகம்பாவமும் திமிரும் போலவே அக்காலத்தும் அறிவீனம் என்கிற ஒன்று இருந் திருக்கிறது.

அறிவுத்துறைக்குள் புகுந்து அட்டகாசம் பண்ணுகிற அறிவீனம் பெரிய தரித்திரம். அது நாட்டுக்கே பெரிய தரித்திரம். பசி, பட்டினி, வேலை இல்லை, உடல்நலம் இல்லை, மேல்கால் வலி, விளைச்சல் குறைந்து விட்டது. மழை சரியாகப் பெய்யவில்லை என்றால்க்கூடச் சகித்துக் கொள்ளலாம் அறிவுத்துறை வெறும் ஆடம்பரமாகப் போய்விட்டது. பித்தலாட்டமாய்ப் போய் விட்டது. என்றால் சகிக்கமுடியாது தான்.

''அறிவின்மை இன்மையுள்
இன்மை; — பிறிதின்மை
இன்மையா வையா(து)
உலகு.'' 239

(இன்மையுள் இன்மை அறிவின்மை ஒன்றுதான். (இன்மை - வறுமை) பிறிது இன்மை(யை) உலகு இன்மையா(க) வையாது. (வையாது - நினைக்காது)

குறிப்பு :- எதையும் தாங்கிக் கொள்ளலாம்; அகம்பாவத்தை யும் திமிரையும் தாங்க முடியாது என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது குறள். நம் உணர்ச்சியின் ஒவ்வொரு சாயலுக்கும் தனித்தனி உருவம் கொடுத்து, அவற்றை நம் கையிலேயே கொடுத்து விடுகிறது தமிழ்.

2

அறிவில்லாதவனிடம் அகம்பாவம் இருக்கும். திமிர் இருக்கும். அத்துடன் லோபியாகவும் இருப்பான் அறிவில்லாதவன். எதையும் வெளிக்குக் காட்டமாட்டான். ஒளித்து ஒளித்து வைப்பான். ஏதாவது கேட்டால் கொடுக்கவேண்டி நேருமே என்று மனிதர் களுடன் பழகவே மாட்டான். பார்க்கவே பயப்படுவான்.

பிறருக்கு ஒன்றும் கிடையாது'' என்பது தான் அவன் கொள்கை. அப்பேர்ப்பட்ட மகாலோபி அவன்,

அறிவே இல்லாத லோபி ஒருவனிடம் பழகுகிறான் ஒரு மனிதன். லோபி அவனிடம் பிரியம் வைக்கிறான் என்றால் அது யோகந்தான். அவனுக்குத் தேவையான ஒன்றை கொடுத்தும் விடுகிறான் என்றால், அதற்குக் காரணம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. ''பெறுகிறவன் பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்கிறான். தவம் பண்ணி இருக்கிறான். தெய்வங்களுக்குப் பாலாபிஷேகம் நெய்யாபிஷேகம் பண்ணி இருக்கிறான். அந்தப் புண்ணியந்தான் இது. இது ஒன்றுதான் காரணமாக இருக்க முடியும்.

''அறிவிலான் நெஞ்சுவந்(து)
ஈதல்: — பிறிதுயாதும்
இல்லை; பெறுவான்
தவம்'' 240

(நெஞ்சுஉவந்து - மனம் விரும்பி. பிறிதுயாதும் இல்லை - காரணம் வேறு எதுவும் இல்லை. பெறுவான்தவம் - வாங்குகிறவன் பூர்வ புண்ணியமே.)

3

அறிவில்லாதவன் சும்மா இருக்கமாட்டான். துள்ளுவான் குதிப்பான். திம்திம் என்று ஆடுவான். பந்தயம் போடுவான் சபதம் எடுப்பான். மோதுவான், முட்டுவான், சும்மா இருக்கவே மாட்டான்.

கெட்டொழிந்தே போவான். அவனுடைய அட்டகாசமே அவனைக் கெடுத்துவிடும்.

விரோதிகளால் செய்ய முடியாத காரியத்தை அவனுடைய பித்தலாட்டமே அவனுக்குச் செய்துவிடும்.

''அறிவிலார் தாம்தம்மைப்
பீழிக்கும் பீழை,
செறுவார்க்கும் செய்தல்
அரிது.'' 241

(பீழிக்கும் பீழை - கெடுக்கும் கேடு. செறுவார்க்கும் - விரோதி களாலும் செய்தல் அரிது - செய்ய முடியாததுதான்.)

4

உலகத்தில் நடக்கும் செயல்கள் எல்லாம் தன் விருப்பப்படி நடப்பதாகவே ஜோடித்துப் பேசுவான். மகாமூடன் ''நான் கெட்டிக் காரன், நான் கெட்டிக்காரன்'' என்று, அவனுடைய ஆணவம் கூத்தாடிக் கொண்டே இருக்கும்.

அறிவீனத்துக்கு வேறு சாட்சியம் தேவை இல்லை தானே.

''வெண்மை எனப்படுவ(து)
யாதெனில்; — ஒண்மை
உடையம்யாம் என்னும்
செருக்கு.'' 242

(வெண்மை - அறிவீனம். ஒண்மை உடையம் என்னும் செருக்கு - நானே அறிஞன் என்னும் ஆணவம்.)

5

ஆழம், நுட்பம், தெளிவு எல்லாம்சேர்ந்து கிடக்கிறது அறிவில். அறிவில்லாதவனிடம் பேராசை ஒன்று தான் இருக்கும். அது ஒரு மோசமான வெறியாகவே இருக்கும். உண்மைக்கும் அவனுக்கும் வெகுதூரம். தொடக்கூட முடியாது அவனால். அப்புறம் கையில் எடுத்து அவனால் உண்மையைப் பார்க்க முடியுமா? அம்சம் அம்சமாகப் பிரித்துக் காணமுடியுமா? தனித்தனியாக எடுத்து விளக்க முடியுமா? சேர்த்து வைத்துக் கொடுக்க முடியுமா? ஒன்றுமே முடியாது அவனால்.

ஆனால் மேடைமேல் ஏறிவிட்டால் சண்டப் பிரசண்டம் பண்ணுவான். ஒவ்வொன்றுக்கும் பலபல மேற்கோள்களைக் கொண்டு வந்து கொட்டுவான். ஒன்றையும் பார்த்திருக்க மாட்டான். ஆனாலும், ''அவர் அப்படிச் சொன்னார். இவர் இப்படிச் சொன்னார்'' என்று மேற்கோளாகவே கொட்டித் தீர்ப்பான்.

'தீ சுடும்' என்பதற்குப் பத்து மேற்கோள் 'நீர் குளிரும்' என்பதற்குப் பதினைந்து மேற்கோள். இப்படிக் கொட்டி முழக்கு வான்.

படிக்காமலே இப்படி மேற்கோளைக் கொட்டுகிற பழக்கம் அவனுக்கே கேடாக முடிந்தது. எப்படி என்று பார்ப்போம். வயிற்றுவலி என்று மருத்துவரிடம் போகிறான். என்ன செய்கிறது? என்று வயித்தியர் கேட்கிறார். வயிற்றுவலிதான் தன் நோய் என்பது அவனுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனாலும் நான்கைந்து மேற்கோள் போட்டு வயிற்றுவலி பற்றி டாக்டரிடம் சொல்ல முடியவில்லையே என்று திணறுகிறான்.

அவனுடைய பேச்சே அவனைக் காலைவாரி விட்ட மாதிரி வெட்கப்படுகிறான். பயமே உண்டாகிறது அவனுக்கு. நம்முடைய

ஆடம்பரமான மேற்கோள் பந்தலுக்கு இந்தக்கதி ஏற்பட்டு விட்டதே என்று பயந்து போகிறான்.

எல்லாம் பித்தலாட்டம் பண்ணுகிற வினை.

"கல்லாத மேற்கொண்(டு)
ஒழுகல்; — கசடற
வல்லதூஉம் ஐயம்
தரும்." 243

(கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - கற்றுத் தெளியாத - தெளிந்து உணராதவற்றை மேற்கோள் காட்டியே வண்டியை ஓட்டுதல் கேவலமான காரியம்.

கசடற வல்லதும் - தெள்ளத் தெளிந்த உண்மைகூட (மேற் கோள் இல்லாவிட்டால்) ஐயம்தரும் - வெளியில் வரக்கூடும்.

6

பித்தலாட்டக்காரன் தன்னிடம் இருப்பது பித்தலாட்டம் என்று தெரியவேண்டும். தெரிந்து அறிவீனம் ஒழிந்துபோம்படி மேலும் மேலும் கற்க வேண்டும். கற்றுக் கற்றுத் தெளியவேண்டும். அவ்வாறு செய்யாமல், அறிவீனத்தைத் தந்திரமாக மறைத்து வைப்பதால் என்ன பிரயோசனம். அப்படி மறைப்பது பெரிய பித்தலாட்டமே. மிகப்பெரிய பித்தலாட்டமே!

"அற்றம் மறைத்தலோ
புல்லறிவு; — தம்வயின்
குற்றம் மறையா
வழி." 244

(அற்றம் மறைத்தல் - குறையை ஒளித்து மறைத்தல். (அற்றம் - ரகஸ்யம். தம்வயின் குற்றம் மறையாவழி – தன்னிடம் இருக்கிற குறையைக் களையாமல்,)

7

உண்மையைப் பார்ப்பதும், உண்மையின் அற்புதத்தை அனுபவிப்பதும் அறிஞர்கள் காரியம். அனுபவிக்கிற இன்பத்தை உலகிற்குக் கொடுப்பது அவர்கள் தொழில்.

அறிவில்லாதவன் உண்மையைப் பார்க்க மாட்டான். கண்ணுக்குப் புலனாகாத - கருத்துக்கே புலனாகாத வெகு தூரத்தை எட்டிப்போய் நிற்கும், அறிவில்லாதவன் பார்வை. நின்று, பரக்கப் பரக்க விழிக்கும். காணாத ஒன்றைக் கண்டது மாதிரி துள்ளும், குதிக்கும், சோரும், மயங்கும் பரிதாபமான நிலை தான் அறிவில்லாதவன் நிலை.

பசுவானது எவ்வளவோ உபகாரம் செய்கிறது மக்களுக்கு. ஊட்டி வளர்க்கும் தாய் போல் பாலும் தயிரும் நெய்யும் கொடுத்துக் காப்பாற்றுகிறது. உழவுக்கு உபயோகமான காளையையும், உரமாகச் சாணத்தையும் கொடுத்துக் காக்கிறது பசு.

காட்டு விலங்காக இருந்த பசுவை வசக்கி வீட்டுக்குள் கொண்டு வந்து, குடும்பத்தோடு குடும்பமாக வைத்துக் கொண்டானே மனிதன்! இந்த உண்மையை நேருக்கு நேராக அனுபவிப்பார்கள் அறிஞர்கள்.

புத்தி இல்லாதவன் அனுபவிக்க மாட்டான். உண்மையைப் பார்க்கமாட்டான்.

''உடம்பு ஒரு வீடு. உயிர் தங்கும் வீடு. உயிருக்குப் பசு என்று பெயர். உடம்பாகிய வீட்டில் உயிராகிய பசுவைக் கட்டிப்போட்டு வைத்திருக்கிறது. இதைப்பார்த்த மனிதன் மற்றொரு வீடாகிய தன் மனையில் ஒரு மிருகத்தைக் கொண்டு வந்து கட்டி வைத்தான். அந்த மிருகத்திற்கு உயிரின் பெயரையே - பசு என்னும் பெயரையே சூட்டிவிட்டான்'' இப்படி எட்டாத தூரத்திற்குப் போய் விடுவான்மூடன். கையிலிருந்து உண்மையைப் பார்க்காமலே விட்டுவிடுவான் மூடன். 'தான் காணான்'

ஒன்றையும் பாராமலே பலவற்றைப் பார்த்தது போல் ஏமாறுவான். ஏமாற்றத்தையே'அது இது'என்று மற்றவர்களுக்குக் காட்டுவது போல் உளறுவான். அதாவது ''காணாதால் காட்டுவான்'' இப்படி உளறுவதற்கு, தெற்கு, வடக்கு, மேல், கீழ் நாலாதிசையிலிருந்தும் மேற்கோள்களைக் கொண்டு வந்து கொட்டுவான். அவன் காட்டுகிற மேற்கோள்களின் கருத்து அவனுக்குத் தெரியாது. ஆனாலும் அத்துபடியானது போல உளறுவான். அதாவது ''காணாதான் கண்டானாம்.''

அறிவில்லாதவன் உண்மையைப் பார்க்கிற அழகு இது ''தான் கண்ட ஆறு'' இனி, பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

''காணாதால் காட்டுவான்
தான்காணான்; கண்டானாம்!
காணாதான் தான்கண்ட
ஆறு!! 245

(காணாதால் - பார்க்காததையே. காணாதான் கண்டானாம், அதற்கு மேற்கோள் காட்டுவான். அதன் உண்மையும் இவனுக்குத் தெரியாது. ஆனாலும் பார்த்ததகாச் சொல்லுவான்.)

குறிப்பு :- போய்த் தொலையட்டும் மூடனுடைய காரியம். குறள் இருக்கிறதே அது போதும்.

# வேண்டியதில்லை பகைமை

1

ஆணவம், திமிர், அகம்பாவம் எல்லாம் அநாதியான தத்துவங்கள்தான். அவை இருக்கவே செய்யும். நம்மிடமும் இருக்கும். நம் குடும்பத்திலும் இருக்கும். நமக்கு வேண்டியவர், வேண்டாதவர் எல்லோரிடமும் இருக்கும். உலகம் முழுவதுமே மேலே சொல்லிய அம்சங்கள் இருக்கின்றன.

ஆணவம், திமிர் முதலியவை எரிச்சலை உண்டுபண்ணும் வெறுப்பை உண்டுபண்ணும். உலகில் கொடிய நஞ்சு எதுவென்றால் எரிச்சலும் வெறுப்புந்தான்.

வெறுப்பு, கொதிப்பு என்கிற நஞ்சை அமிர்தமாக மாற்றிவிட வேண்டும். அப்படி மாற்றுவதுதான் கலை. வாழ்க்கைக் கலை. அப்படி மாற்றாமல் பகையாக அவற்றை வளர்த்தால் நாசந்தான் உண்டாகும்.

காமக் குரோத லோபம் (காமம் வெகுளி மயக்கம்) என்னும் முப்பகையைக் காதல், வீரம், இன்பம் என்று மாற்றி உருவாக்கி இருக்கிறார்கள். வாழ்க்கையோடு சேர்ந்து பரிமளிக்க வைத்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

காரமான விஷத்தை முறித்துவிட்டால் அமிர்தம் ஆகிவிடும் நஞ்சு.

வாழ்க்கையில் உள்ள இந்தச் சித்து விளையாட்டைத் திருவள்ளுவரும் தமிழும் சேர்ந்து அனுபவிக்கிறார்கள். அனுபவம் நடனஜதியோடு பாடலாய் வருகிறது.

''இகல்காணான் ஆக்கம்
வருங்கால்''

ஒருவனுக்கு வாழ்க்கையில் நல்லகாலம் பிறக்கிறதென்றால், அவன் மனம் பளிங்குபோல் தெளிந்துவிடும். வெறுப்பு கொதிப்பு, கசப்பு எல்லாம் மனதைவிட்டு ஓடிவிடும். இகல் என்னும் பகை உணர்வு அவன் நினைப்பிலிருந்தே கழன்றுபோய்விடும்.

ஒருவனுக்குக் கெட்டகாலம் ஆரம்பம் என்றால் அவன் மனதில் இருந்த வெறுப்பும் எரிச்சலும் ஒரு உருவமே எடுத்து விடும். புதுப்புது அவதாரமே எடுத்துவிடும். அப்படிப் பத்தாய், நூறாய், ஆயிரமாய் பெருக்கிவிடுவான் பகைமையை.

இனி, பாடலைப் பார்ப்போம்.

"இகல்காணான் ஆக்கம்
வருங்கால்; — அதனை
மிகல்காணும் கேடு
வரற்கு." 245

(இகல் - பகைமையை வைத்து நெஞ்சு புழுங்குகிற புழுக்கம். ஆக்கம் வரற்கு - முன்னேற்றம் வருகிற பொழுது. அதனை-விரோ தத்தை. மிகல்காணும் - மூட்டி வளர்ப்பான்.)

2

பகை உணர்ச்சியை அணைத்து விடவேண்டும். "மனிதன் தானே! மனித காரியம் அப்படி அப்படித்தான். எங்கும் இப்படி இருக்கவே செய்யும்" என்று உண்மையை நோக்கி மனம் பார்க்க வேண்டும்.

பார்க்கப்பார்க்க மனிதனுடைய காரியம் ஒரு நாடகமாகவே இருக்கும். டிக்கெட் வாங்கிப் பார்க்கவேண்டிய நாடகமாகவே இருக்கும். நாடகக் காட்சிகள் ஒவ்வொன்றாய் எழுந்துவரும். பார்க்கப் பார்க்கத் தெளிவு உண்டாகும். மனிதனுடைய அறியாமை, வேஷம், கோமாளித்தனம், ஏமாற்றம், எல்லாம் தெரியும். காட்சி சோகமாக இருந்தாலும் மனதில் உள்ள அழுக்கைக் கழுவி சுத்தப்படுத்திவிடுகிறது. அதனால் உத்சாகம் உண்டாகிறது. விழுந்து விழுந்து சிரிக்கிறோம். வாழ்க்கையில் நம்பிக்கையே உண்டாகிவிடுகிறது.

பகைமை என்னும் நோய் போய்விட்டால் மனதுக்குத் தெம்பு வந்து விடுகிறது.

பகை, நோய்போல உட்கார்ந்து கொண்டாலோ,

"இகலான்ஆம் இன்னாத(து)
எல்லாம்; — நகலான்ஆம்
நன்னயம் என்னும்
செருக்கு." 246

(இகல்(ஆன்) இன்னாததுஎல்லாம் - துயரம் அத்தனையும் பகைமை உணர்ச்சியிலிருந்தே பிறக்கின்றன. நகலான்ஆம் – பகைமைஅற்ற மகிழ்ச்சியிலிருந்து தோன்றுகிறது. நல்நயம் என்னும் செருக்கு - கலைமயமான இன்பவாழ்க்கை (நகல் - மகிழ்ச்சி).

3

நம்முடன் உயிருக்கு உயிராக ஒருவன் பழகுகிறான். பெட்டிச் சாவியையே அவனிடம் கொடுத்து வைக்கிறோம். அப்படி நம்பிக் கையாய் இருக்கிறான்.

நமக்கும் இன்னொருவனுக்கும் வழக்கு ஒன்று நடந்தது. வழக்கில் வென்றால்தான் நமக்கு வாழ்வு. இல்லாவிட்டால் ஒன்றும் இல்லை. அவ்வளவு முக்கியமான வழக்கு அது.

நமக்குச் சாதகமான அம்சங்களைக் கொண்ட வெற்றிக்கு உயிர்கொடுக்கிற ரிக்கார்டுகள் நம்மிடம் இருந்தன. ரிக்கார்டு களைக் கோர்ட்டில் சமர்ப்பிக்கவேண்டிய நேரம் வந்தது. ரிக்கார்டு களைப் பார்த்தால், ஒன்றுகூட இல்லை. எல்லாம் எதிரிவசம் போய்விட்டது. உயிருக்கு உயிராக உறவாடிய நண்பன் அப்படித் துரோகம் செய்துவிட்டான்.

இனிச் செய்யவேண்டியது என்ன? உடனடியாக அவனை விட்டு விலகிவிடுவதுதான். ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுத் தாவது அவன் உறவைத் தீர்த்துவிடவேண்டும். கூடவே இருந்து குழிவெட்டுகிறவன், வேண்டியவனாக இருப்பதைவிட வேண்டாத வனாய்ப் போய்த் தொலைவதே நல்லது.

"கொடுத்தும் கொளல்வேண்டும்
மன்ற; — அடுத்திருந்து
அல்லவை செய்வார்
பகை." 247

(மன்ற - கட்டாயமாக, உடனடியாக. அடுத்து இருந்து - கூடவே இருந்து குலாவிவிட்டு. அல்லவை செய்வார் பகை - கெடுதல் செய் பவன் விரோதத்தை. அவனைவிட்டுத் தொலைக்கிறகாரியத்தை

குறிப்பு:- என்ன விலையானாலும் அவனைவிட்டுத் தொலைப் பதற்குத் தானம் பண்ண வேண்டியதுதான். ஆத்திரமும் அவசரமும் பாட்டில்த் தெளிவாய்த் தெரிகின்றன.

4

உண்மையைக்கண்டு உணரும் கல்வி கல்லாதவன் பணியமாட்டான். அவனிடம் திமிர் இருக்கும். திமிர் ஒன்றே அவனிடம் இருக்கும். விளையாட்டுக்குப் பேசுகிற பேச்சைக்கூட அவன் அனுபவிக்கமாட்டான், சொல்லில் உள்ளநயம் இன்னதென்று தெரியாமல் சீறுவான். பெரிய மோசடி ஒன்றைக் கண்டதுபோல் பாய்வான்.

யாரையும் மதிக்கமாட்டான். எல்லோரும் அசடுகள், மழுமட்டைகள் என்பதே அவன் முடிவு.

இந்த முடிந்த முடிவின் காரணமாகவே விளையாட்டு, கேலி' நகைச்சுவை எல்லாம் அவனுக்கு வேம்பாய்க் கசக்கின்றன.

யாருடனும் பழகி உறவாடாத ஆணவப்பிசாசோடு, மரியாதையும் உறவாடாதுதான். பெருமை, உயர்வு, சிறப்பு, என்றெல்லாம் போற்றுகிறோமே அந்த ஒளி அவனிடம் இல்லைதான்.

"கல்லான் வெகுளும்
சிறுபொருள்; — எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா(து)
ஒளி." 248

(சிறுபொருள் - சிறுகுழந்தைகளின் மழலைச் சொல்லைக்கூட வெறுத்துச் சீறுவான். ஒல்லானை - உறவாடாதவனை)

5

நம்முடைய துயரம் இன்னதென்று நமக்குத் தெரியும். நமக்குத் தெரிகிறது போலவே நம்மோடு ஒட்டியவர்களுக்கும் தெரியும். நின்றவர், போனவர், பார்த்தவர் எல்லோருக்கும் நம் துயரின் வேகம் தெரியவேண்டும், என்கிற கட்டாயம் இல்லை. அவர்கள் தெரிந்து கொள்ளவில்லையே என்று வருந்துவது அறிவீனம்.

"நோவற்க நொந்த(து) அறியார்க்கு."

நம்மை வஞ்சந்தீர்க்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான் ஒரு எதிரி. அவன் குளுமையாக நம்மைப் பார்க்கிறான். குளுகுளுவென்று நாலுவார்த்தைகள் நம்மிடம் பேசுகிறான்.

இதைவைத்து அவனை நம்பிவிடக்கூடாது. அவனுடன் உற வாடினால் தொலைந்தது காரியம்.

''நோவற்க நொந்த(து)
அறியார்க்கு; — மேவற்க
மென்மை பகைவர்
அகத்து.'' 249

(நோவற்க - வருந்தவேண்டாம். மேவற்க - நம்பி உறவாட வேண் டாம்.)

6

நன்செய் நிலத்தில் அல்லது வீட்டுமுற்றத்தில் நெருஞ்சி, கள்ளி, கற்றாழை, முள்ளுடை முதலிய மரங்கள் முளைத்து விட்டால், நம் கையைக் குத்திக் கிழித்துவிடும்.

வஞ்சனையோடு பழகுகிறான் என்று தெரிந்த உடனே அவன் உறவை விட்டுவிட வேண்டியதுதான். அவன் உறவு வளர வளர ஆபத்தேதான்.

''இளைதாக முள்மரம்
கொல்க; — களையுநர்
கைகொல்லும் காழ்த்த
இடத்து.'' 250

(களையுநர் - அரக்கி வெட்டுகிறவர். பிடுங்கி எறிகிறவர். காழ்த்த இடத்து - கட்டியாய் விளைந்து முற்றியபின்.)

7

நாம் சொல்லிய சொல்லை உபயோகித்தே நம்மை மடக்குகிற வர்கள் செப்படி வித்தைக்காரர்கள் அவர்களுக்குச் சொல் ஏர் உழவர்' என்று பெயர்.

வார்த்தையை வைத்தே உழுது பயிரிட்டு வேளாண்மை செய்கிற கூட்டம் திருவள்ளுவர் காலத்திலும் இருந்திருக்கிறது. இதற்கு எவ்வளவோ காலத்திற்குமுன்பும் இருந்திருக்கிறது.

சொல்லேர் உழவர்களிடம் திருவள்ளுவர் எவ்வளவோ தொல்லைப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது. இல்லாவிட்டால் ''அவர்களை விரோதித்துக் கொள்வதில் பிரயோசனம் இல்லை. அவர்களுடன் பழகாமலே இருந்திருக்கவேண்டும். அதுதான் புண்ணியம். அதுதான் யோகம்'' என்று துள்ளிக் குதிப்பாரா கவிஞர்.

எப்படிக் குதித்துக் கும்மாளி போடுகிறார் கவிஞர் என்று பாருங்கள்.

''வில்லேர் உழவர்
பகைகொளினும் — கொள்ளற்க;
சொல்லேர் உழவர்
பகை'' 251

(வில்லேர் உழவர் - வீரர். வில்லேந்திச் சமர்புரியும் போர்வீரர். கொள்ளற்க - கொள்ள வேண்டாம்.)

குறிப்பு:- வார்த்தைகளை வைத்தே உருட்டிப் புரட்டிப் பிழைப்பை நடத்துகிறவர்களுடன் பழகுவதே தவறு. பழக்கமே இல்லை என்றால் பகையும் இல்லைதானே.

வார்த்தைகளை வைத்தே பிழைப்பு நடத்துகிற கூட்டத்தை இன்றைய அரசியல் உலகத்தில் மந்தை மந்தையாகப் பார்க்கிறோம். கல்வித்துறையிலும் மந்தை மந்தையாகப் பார்க்கிறோம். இவர்கள் எவ்வளவு அபாயகரமான பேர்வழிகள் என்பதை அவர்களுடைய காரியங்களில் ஒன்றிரண்டை எடுத்துப் பார்த்தாலே போதும்.

பிறகு உறவும் உண்டாகாது. பகையும் வராது.

# நம்பிக்கைத் துரோகம் கொடியது

1

நண்பர்கள் நமக்குக் கெடுதல் செய்ய வேண்டாம். கெடுதல் செய்ய நினைக்கிறார்கள் என்று தோன்றினாலே போதும். கேடுகளைவிடக் கொடியதாகிவிடும் அது.

நமது குழந்தைகள் நமக்கு விரோதிகளாக இருக்கிறார்கள். மனையாளுக்கு நம் மேல் நல்லெண்ணம் இல்லை. என்றால் தாங்க முடியுமா மனிதனால்.

நாம் சாப்பிடுகிற ஆகாரம் நமக்கு அமுதமாய் இருந்து நம்மைக் காப்பாற்றுகிறது. உடம்புக்கு உயிர் கொடுக்கிறது ஆகாரம். அந்த ஆகாரமே உடம்புக்குக் கேடு செய்ய ஆரம்பித்து விட்டால்! உடம்பு தான் அன்று முதல் இன்று வரை நம்மை மடியில் வைத்துக் காப்பாற்றுகிறது. அப்படி நம்பிக்கையாய் இருக்கிற உடம்பு, உள்ளுக்குள்ளேயே செங்கலை ஒவ்வொன்றாய் உருவ ஆரம்பித்து விட்டால்!! உடம்பில் நம்மை எழுந்தருளச் செய்து, நமக்குப் பாலாபிஷேகமும் தேனாபிஷேகமும் நடத்தி, அருச்சனை செய்து கொண்டிருக்கிறது மனம். அந்த மனமே நமக்கு விரோதமாகக் குசும்பு பண்ண ஆரம்பித்து விட்டால்!!!

நம்பிக்கைத் துரோகந்தான். நம்பிக்கைத் துரோகம் மிகமிகக் கொடியது.

அதனால் எதிரிகளைவிட நண்பர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நண்பர்கள் எதிரிகளாக நினைக்கிறார்கள் என்று தெரிந்த உடனே உஷாராகி விடவேண்டும்.

உஷாராகிவிட்டாலே போதும். எல்லாம் சரியாகிவிடும்.

"வாள்போல் பகைவரை
அஞ்சற்க; — அஞ்சுக
கேள்போல் பகைவர்
தொடர்பு." 252

(வாள்போல் பகைவரை - பளபளவென்று பிரகாசிக்கும் வாள் எப்படி தன்னை இனம் காட்டுகிறதோ அப்படியே தம்மை இனம் காட்டுகிறவர்கள் பகைவர்கள். அஞ்சற்க - அவர்கள் விரோதிகள் என்பது நிச்சயம் ஆகிவிட்டதால், அவர்கள் என்னென்ன செய்வார்கள் என்பது நமக்குத் தெரியும். அதனால் அவர்களையே நினைத்துப் பயப்பட அவசியம் இல்லை. கேள்போல் பகைவர் தொடர்பு - ஆனால், உற்றார், உறவினர் போல் நடந்து கொண்டே விரோதம் செய்கிறவர்களின் தொடர்பை எண்ணியே! அஞ்சுக - பயப்படவேண்டும். ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.)

2

மண்ணோ, மணலோ குவியலாகக் குவிக்கப்பட்டிருக்கும். கோபுரம் போல சேர்ந்து உயர்ந்து இருக்கும். மழைபெய்து, வெள்ளம் இறங்கின உடன் உலைந்து சரிந்துவிடும். கரைந்து ஓடிவிடும். தண்ணீரோடு தண்ணீராய் ஓடிவிடும்.

காலை வாரி விடுவதற்கு என்றே சேர்ந்து இருப்பவர்களும் அப்படியே.

நமக்கு ஒரு சோதனை வரவேண்டியது தான் தாமதம். எதிரிகளுடன் அணி வகுத்து நிற்பார்கள். முன்நின்று தாக்குதலே தொடுப்பார்கள்.

உட்பகை அஞ்சித்தற்
காக்க; — உலைவிடத்து
மட்பகை போலத்
தெறும்." 253

(தற்காக்க - உட்பகை விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மண்பகை போல உட்பகைதெறும் - சேர்ந்திருந்த மண் மேடு வெள்ளத்தோடு சேர்ந்து ஓடுகிற மாதிரி, துரோகிகளும் நம்மை விட்டு ஓடுவார்கள். எதிர்க்கவும் செய்வார்கள். தெறுதல்- எதிர்த்தல்.)

3

இரண்டு மரச்செப்பை ஒன்றாய்ச் சேர்த்து வைத்தால் ஒன்றாகவா செய்யும்? ஆகாது.

"செப்பின் புணர்ச்சிபோல்க்
கூடினும் கூடாதே;
உள்ப்பகை உற்ற
குடி." 254

(செப்பு - மரச்செப்பு. புணர்ச்சி - ஒட்டவைத்தல். உள்ப்பகை உற்றகுடி கூடாது - கூடி இருந்து குழிபறிப்ப'வர் நண்பர் ஆகார்.)

4

மனம் மாறுபட்டு (உரம் பொருது) ஒருவரை ஒருவர் நம்பாமல் ஒருவருக்கொருவர் துரோகிகள் ஆகிவிட்டால், புருஷனாவது! பெண்டாட்டியாவது! பிள்ளைகளாவது! குடும்பம் முழுவதுமே நாசந்தான்.

"அரம்பொருத வாள்போலத்
தேயும்; உரம்பொழுது
உள்ப்பகை உற்ற
குடி." 255

(அரம்பொருதவாள் - அரத்தால் தேய்க்கப்பட்ட வாள்.)

5

கடுகைவிடப் பொடியான தானியம் எள். அந்த எள்ளை பத்தாக, நூறாகத் துண்டு போட்டால், அதில் ஒரு துண்டின் அளவு மிகமிகச் சிறிதாக இருக்கும். கண்ணுக்கே தெரியாது அது.

உட்பகையும் கண்ணுக்குத் தெரியாததுதான். எள்ளின் பொடியைவிட மிகமிக ஒடுங்கி உள்வாங்கி நிற்கும் உட்பகை. ஆனாலும் உள்ளிருந்து வெடித்துச் சிதறும் கேடுகள் அளவிட முடியாதவை. அது ஒரு பெரிய சொக்கப்பானை நெருப்புத்தான்.

"எள்ப்பக(வு) அன்ன
சிறுமைத்தே ஆயினும்;
உள்ப்பகை உள்ளதாம்
கேடு." 256

(பகவு - பிளவு. சிறுமைத்து - சிறியது.)

6

மாளிகை வசதியான மாளிகைதான். படுக்கை அறை சொர்க்கம் போல் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இரவு நடுச்சாமம் அளவில் படுக்கை அறை ஜன்னலை ஒட்டி நாகம் ஒன்று நடமாடுவது தெரிகிறது. தற்செயலாக ஒருநாள் அதைப் பார்க்க நேர்ந்தது.

அதன் பின் உறக்கம் வருமா? அதே படுக்கை அறையில் படுக்க முடியுமா? பாம்பை ஒழித்து விடவேண்டும். இல்லாவிட்டால் காலி செய்ய வேண்டும் அறையை.

சேர்ந்துவாழ இயலாது.

''உடம்பா(டு) இலாதவர்
வாழ்க்கை; — குடங்கருள்ப்
பாம்போ(டு) உடன்உறைந்(து)
அற்று.'' 257

(உடன்பாடு இல்லாதவர் வாழ்க்கை - உணர்ச்சியில் ஒருமைப்பாடு இல்லாமல், ஒருவருக்கு ஒருவர் பகைவராய் இருந்து ஒரு வீட்டில் குடி இருக்கிற குடும்ப வாழ்க்கை. குடங்கருள் - ஒரு சிறு குடத்தில், பாம்போடு சேர்ந்து வாழ்வது போலத்தான்.

குறிப்பு :- துரோகத்தையும் அதன் கொடுமையையும் நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது தமிழ். பயங்கர பாவம் உருவெடுத்து நிற்கிறது கவியில்.

# இரவச்சம்

## 1

குறளாசிரியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். குறளாசிரியருடைய காலத்தில் தமிழ்நாட்டின் பிரதானத் தொழில் விவசாயந்தான். வணிகத் துறையிலும் தமிழ்நாடு சிறப்புற் றிருந்தது. வாழ்க்கைக்குத் தேவையான ஆடை, அணி, வீடு, மருந்து, எண்ணெய், வாசனைப் பொடி, ஆயுதம், வண்டி முதலியவை - தானே விளைவது போல், குடும்பங்களில் உற்பத்தி ஆயின.

கலையிலும், கல்வியிலும் உன்னத நிலையில் இருந்தது தமிழ் நாடு. அதனால் எளியவராக இருந்தாலும், வசதி நிறைந்தவராக இருந்தாலும் திருப்தியோடு வாழ்ந்து வந்தார்கள். 'அது இல்லையே, இது இல்லையே' என்கிற ஏக்கமும் அதனால் ஏற்படும் சிறுமையும் அவ்வளவாக இல்லை.

தமிழ்நாட்டை மன்னர்கள் தான் ஆண்டு வந்தனர். தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று பாராட்டப்பட்டு அவர் கள் அரசாட்சி செய்து வந்தார்கள். அதிகாரம் அவர்களிடம் குவிந் திருந்தாலும் நீதிக்கும் கருணைக்கும் புறம்பாக மஞ்சாடிகூட விலகாமல் அரசர்கள் ஆண்டார்கள்.

குறளாசிரியர் காலத்தில் வறுமையில் கிடந்து உழன்றவர் களும், மூடர்களும், சோம்பேறிகளும், கயவர்களும் கூடத்தான் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் எந்த அளவில் இருந்தார்கள்? எந்த அளவில் அவர்கள் இருக்க வேண்டுமோ அந்த அளவில்தான் அவர்கள் இருந்தார்கள். வறுமை, அறியாமை, கயமை முதலிய குணங்கள் ஆங்காங்கு இருந்தாலும் மனித இனத்தின் கௌரவம்

பங்கப்படவில்லை. மனித தத்துவத்தின் கண்ணியத்திற்கும் தகுதிக்கும் களங்கம் ஏற்படாமல் ஏதோ ஒன்று கவனித்துக் கொண்டது.

சமுதாயம் நிம்மதியாக, ஆனந்தமாக வாழ்ந்தது. அரசர்கள் சில கட்டங்களில் கொடுங்கோலர்களாக வாய்த்த பொழுதுகூட சமுதாயம் கட்டுக்கோப்பு உலைந்து விடாமல் தன்னைப் பாது காத்துக் கொண்டு சமாளித்து வந்தது.

ஆனாலும், சமாளிக்க முடியாத ஒன்றும் அங்கங்கே இருக்கவே செய்தது. அது என்ன? தேவையில்லாத பொருளை, அதாவது உயிர் வாழ்வதற்கு அவசியம் இல்லாத பொருளை ஒருவர் மற்றொருவரிடம் பெற்றுக் கொள்வது அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. ஆனால் உயிர் வாழ்வதற்குத் தேவையான பொருளை ஒவ்வொரு நாளும் பிறருடைய தயவில் தான் பெற வேண்டும். பெற்றுத்தான் வாழவேண்டும் என்னும் நிலை ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால் அவனால் எப்படி ஆனந்தமாக இருக்க முடியும்?

> "இரந்தும் உயிர்வாழ்தல்
> வேண்டில் பரந்து
> கெடுக உலகியற்றி
> யான்." 259

(இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டில் - உயிர்வாழத் தேவையான உப்புக்கும் கூழுக்கும் மற்றவன் தயவு பண்ணித் தான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு விட்டால் அவனுக்கு வாழ்வு வெறுத்து விடும். 'மரணம் வரமாட்டேன் என்கிறதே' என்று கலங்குவான்; அக்கலக்கமானது, பரந்து கெடுக உலகியற்றியான் - இந்த உலகமும் அதைப் படைத்த கடவுளும் நாசமாய்ப் போகட்டும் என்று புலம்ப வைத்துவிடும் அவனை)

வறுமையானது கொடுமைப்படுத்த ஆரம்பித்துவிட்டால் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவான். முதலில் தன்னை வெறுப் பான். பின் சமுதாயத்தை வெறுப்பான். இறுதியில் கடவுளைக்கூட வெறுத்துவிடுவான். வறுமையில் சிக்கி உழல்கிறவன் மற்றவரிடம் எதிர்பார்த்த பொருள் கிடைக்காவிட்டால் சபித்தே விடுவான். வறியவனிடம் ஏற்படும் வெறுப்பையும் ஆங்காரத்தையும் குறள் அழகாக எடுத்துக்காட்டுகிறது. வறியவனாக நின்று அனுபவிக்கும் நிலை நாடக இயலோடு வந்து காட்சி தருகிறது. இனி, வேறொரு குறள் பார்க்கலாம்.

2

கடுமையான பொருள்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. கருங்கல், இரும்பு, கொடிய உள்ளம் இத்தனையும் கடுமையான பொருட்கள் தான்.

மேலே குறிப்பிட்ட எல்லாவற்றையும் விடக் கடுமையான பொருள் ஒன்று உண்டு. அதற்கு இணையானது வேறொன்றுமே இல்லை. அது என்ன?

இதோ——

''இன்மை இடும்பை,
இரந்துதீர் வாம்என்னும்
வன்மையுள் வன்பட்ட(து)
இல்.'' 260

(இன்மை இடும்பை - வறுமைத் துன்பத்தை; இரந்துதீர்வாம் - யாசகம் செய்து நீக்குவோம்) வறுமைத் துன்பத்தை யாசகம் பண்ணித்தான் தொலைக்க வேண்டியிருக்கிறது. வேறு வழி இல்லை என ஒருவன் செயலில் இறங்கினால் அது ஒன்றுதான். வன்மையுள் வன்மை - இளகாத கடுமை.

3

வாழ்வதற்கு வழியே இல்லாத நிலையிலும் பிறரிடம் ஒன்றைக்கேட்டு வாங்காமல் துன்பப்படுகிறவர்கள் உலகில் அபூர்வம். வறுமையில் உயிரே போவதாக இருந்தாலும் பிறரிடம் அவர்கள் யாசிக்க மாட்டார்கள்.

''அவர்களின் புகழ் உலகம் முழுவதையும் நிறைத்து நிற்கும். பெருகி வரும் அவர்களுடைய புகழைச் சேர்த்துவைக்க இடமில்லாமல் உலகம் திணறும்'' என்கிறார் குறளாசிரியர்.

''இடம்எல்லாம் கொள்ளாத்
தகைத்தே; — இடம்இல்லாக்
காலும்,இர(வு) ஒல்லாச்
சால்பு.'' 260

(இடம் இல்லாக் காலும்–வாழ வழியில்லாத நிலையிலும், இரவொல்லாச் சால்பு - பிறரிடமிருந்து ஒன்றைப் பெற்று வாழ ஒப்பாத பெருந்தகைமை இருக்கிறதே அது. இடம் எல்லாம் கொள்ளாத் தகைத்து - உலகம் முழுவதும் நிறைந்து, இடமில்லாது தத்தளிக்கும் பெரும்புகழாகும்)

4

வறுமையானது மனிதனைக் கொடுமைப்படுத்துகிறது. வறுமைக்காகப் பயந்து பிறரிடம் ஒன்றை வாங்கிப் பிழைக்கும் இழிசெயலோ மனித தத்துவத்தையே கேவலப்படுத்திவிடுகிறது.

வாய் திறந்து ஒன்றைக் கேட்டும், ஒருவர் கொடுக்காமல் மறைந்து விடுகிறார் எனில், இதயத்தைப் பிளந்து வடுவை உண்டாக்குகிற காரியந்தான். அதனால் குறளாசிரியர், யாசகர் களிடத்திலேயே ஒரு யாசகம் கேட்கிறார். மிக்க பணிவோடு. கேட்கிறார். ''என் அனுதாபத்திற்கும் அன்பிற்குமுரிய யாசகர்களே! பிறரிடம் ஒன்றைக் கேட்டு வாங்கும் நிலை ஏற்பட்டால், இல்லை யென மறைக்கும் கரப்பாளரிடம் போய்க் கேட்டு விடாதீர்கள்!! இதுதான் என் வேண்டுகோள்!!!

''இரப்பன் இரப்பாரை
எல்லாம்; — இரப்பின்
கரப்பார் இரவன்மின்
என்று.'' 261

(இரப்பன் - நான் யாசகம் கேட்கின்றேன். இரவன் - யாசகம் கேட்டு விடாதீர்கள். கரப்பார்-இல்லை என்று மறைப்பவரிடம்.)

5

தரித்திரனுக்கு வாழ்க்கை என்பது கடல்தான். அந்தக் கடலை யும் கடக்க ஒரு தோணி இருக்கவே செய்கிறது. அதுதான் யாசகம்.

வஞ்சகர்களிடம் போய் ஒருவன் ஒன்றைக் கேட்டால் போதும், கேட்ட பொருள் கிடைக்காமல் போவது மட்டுமல்ல, யாசகத்தின் மேலேயே அவனுக்கு வெறுப்பு வந்துவிடும். அதாவது யாசகத் தோணியே நொறுங்கிச் சிதறிவிடும்.

''இரவென்னும் ஏமாப்பில்
தோணி; — கரவென்னும்
பார்தாக்கப் பக்கு
விடும்.'' 262

(பார் - பாறை; பக்குவிடும் - பிளந்துவிடும். எது? இரவு என்னும் - யாசகம் என்கிற. ஏமாப்பில் தோணி - கரடுமுரடான படகு)

'தனக்கு வேண்டிய ஒன்றை மற்றொருவனிடம் கேட்டு வாங்கி யல்லவா அனுபவிக்க வேண்டியிருக்கிறது' என்பதை நினைக்க,

நினைக்க, ஒருவனுடைய இதயம் உருகிக் கரைந்து போகும். எவ்வளவு வல்லவனானாலும் சரி, அவன் உள்ளம் உருகிக் கரைந்து விடுவது நிச்சயம்.

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் யாசகனுக்கு இவ்வுலகில் வேறொன்றும் இல்லாவிட்டாலும் மனச்சாட்சி என்கிற ஒன்றாவது இருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் தன்னிடமுள்ள பொருளை மற்றவர்களுக்குச்சிறிதும் காட்டாமல் மறைக்கும் சண்டாளர்களுக்கோ அந்த மனச்சாட்சி ஒன்று மட்டும் இல்லை.

''இரவுள்ள உள்ளம்
உருகும்; — கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக்
கெடும்.'' 263

(இரவுள்ள - பிறரிடம் கேட்க வேண்டியுள்ளதே என்று யாசகத்தை நினைக்க; உள்ளம் உருகும் - யாசிக்கிறவனுக்கு மனம் கலங்கும். காரணம் அவனிடம் மனச்சாட்சி என்று ஒன்றிருக்கிறது; கரவுள்ள- பிறர் கேட்காதவாறு, கேட்டாலும் இல்லையென்றுகூற -மறைத்து வைக்கத் திட்டம் போடுபவனின் திட்டத்திற்கு, உள்ளதூஉம் இன்றிக்கெடும் - கலக்கமும், இல்லை உருக்கமும் இல்லை. காரணம் அவனிடம் மனச்சாட்சி இல்லை.)

ஆவலோடு ஒரு பொருளைக் கேட்டு வந்து நிற்கிறான் ஒருவன். அவன் கேட்டவற்றை ஏராளமாக உடையவனோ அப்பொருள் இல்லையென்று அலட்சியமாகப் பதிலுரைத்து விடுகிறான். அவன் பதிலில் உள்ள ஆணவம், கொடுமை, வஞ்சகம் இவற்றை எண்ணி, எண்ணிக் கேட்டு வந்தவனுடைய உயிர் உளைகிறது. நைந்து நைந்து மறுகுகிறது. ஆனால் இல்லை என்று சொன்னவன் உயிர் கல்லாக இருக்கிறதே ஏன்? என்று அதிசயிக்கிறார் குறளாசிரியர்.

''கரப்பவர்க்(கு) யாங்கொளிக்கும்
கொல்லோ! — இரப்பவர்
சொல்லாடப் போஓம்
உயிர்.'' 264

(கரப்பவர்க்கு - இல்லையென ஆணவமாக இகழ்ந்து சொல்கிறவனுக்கு; யாங்கு ஒளிக்கும் கொல் - எங்கு போய் ஒளிந்து கொண்டது. உயிர் ஒளிந்து கொள்ளாவிடின் யாசகன் உயிர் உளைந்து மறுகுவதைப் பார்த்த பிறகேனும் மறுகி உளைந்து தானே இருக்கும்? மறுகவில்லையே! உளையவும் இல்லையே! காரணம் என்ன? ஆணவக்காரனுக்கு மனச்சாட்சி இல்லை. அதனால் உயிர், மானம் கெட்டு ஒளிந்து கொள்கிறது.)

# அருவருக்கும்படி செயல்படக்கூடாது

1

நீதிபதி ஒருவர் இருந்தார். கண்டிப்பான பேர்வழி அவர். யாரும் அவர் பக்கத்தில் நெருங்க முடியாது. வழக்கு, விசாரணை இவை சம்பந்தமாக அவர் மனதில் எது தோன்றுகிறதோ, அது தான் தீர்ப்பு.

நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு நாளும் அவர் வரத்தான் செய்கிறார். ஆனாலும் ஒவ்வொருநாளும் அவருடையகுமாஸ்தாக்களும், ஏவலர்களும் பதறுவார்கள். நேற்றுப் பயந்தோம், இன்று அது இல்லை என்பது இல்லை.

வழக்கறிஞர்கூட அவரைக் கண்டால் பயந்தான். அவரை நினைத்தாலும் பயந்தான்.

சாட்சிகளைப் பெட்டியில்போட்டு வக்கீல்கள் விசாரிப்பார்கள். வாதி, பிரதிவாதிகளையும் விசாரிப்பார்கள். விசாரணையில் வக்கீல்கள் ஏதாவது பித்தலாட்டம் பண்ணுகிறார்கள் என்று பட்டால் ஒரு அதட்டு அதட்டுவார். மானங்கெட்ட பேச்சுப்பேசி கண்டபடி திட்டிவிடுவார்.

பெட்டி ஏறி பதில் சொல்கிறவர்கள் பொய் சொல்வதாகத் தெரிந்தால் போதும். வாய்க்குவந்தபடி திட்டிவிடுவார். ஒன்றுக்கும் மசியாத கல்லுளிமங்கன்கள் சிலவேளை பெட்டியில் ஏறி நிற்பது உண்டு. அவர்கள் மேலும் பொய்தான் சொல்கிறார்கள் என்றால் ஆசனத்தைவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பெட்டியை நோக்கிப் பாய்வார். பளார் பளார் என்று அறைவார். தலை முடியைப் பிடித்து நச்சு நச்சென்று பெட்டியில் வைத்து முட்ட

வைப்பார், "மானங்கெட்ட கழுதை. இது கோர்ட் என்று நினைத்தாயா? என்ன நினைத்தாய்" என்று நாலு மிதி மிதித்து பெட்டியை விட்டுப் பயலைத் தூக்கி எறிந்து விடுவார்.

பயங்கரமான பேர்வழி நீதிபதி. "சாட்சிகளுக்கே கதி இது வானால், நம் கதி என்னாவது" என்று எல்லோரும் நடுங்குவார்கள்.

நீதிபதியின் கோபமும் வெறியும் அட்டகாசமும் பயங்கரமாக இருக்கும். கண்கொண்டு பார்க்கமுடியாதபடி அப்படிப் பயங்கர மாக இருக்கும். மனைவி, மக்கள், வேலைக்காரர் எல்லோருமே அவரைப் பார்க்கப் பயப்படுவார்கள்.

"கோர்ட்டு, உத்யோகம், அந்தஸ்து எல்லாவற்றையும் இப்படிக் கேவலப்படுத்துகிறாரே மனிதன், கடவுளுக்குக் கண் இல்லையா! இவரை ஏன் ஒன்றும் கேட்க மாட்டேன் என்கிறது தெய்வம்" என்று எல்லோரும் அலறினார்கள்.

உண்மையினிடத்துப் பிரியம் வைத்தவர்தான் நீதிபதி. பொய்யைக் கண்டிக்க அவருக்கு உரிமை உண்டு. தண்டிக்கக் கூட அவருக்கு உரிமை உண்டு. சாட்சியம் பொய் என்று தெரிந்தால் வாக்குமூலம் பொய் என்று தெரிந்தால் அதை அப்படியே தள்ளி விட அவருக்கு அதிகாரம் இருக்கவே செய்கிறது.

ஆனால் இப்படி நடந்து கொள்ளக்கூடாது. அருவருக்கும்படி நடந்து கொள்ளக்கூடாது. குறளாசிரியர் சொல்கிறார்.

"தவறு செய்கிறவன் தவறு செய்யப் பயப்படும்படியாக நடந்துகொள். ஆனால் நயமாக, முறையாகத் திருத்து, தண்டனை கூட, தவறு செய்தவன் வருந்தும்படி இருக்கவேண்டுமே தவிர, வெறுக்கும்படி இருக்கக்கூடாது."

அப்படி ஒரு போக்கில், முறையில், அமைய வேண்டும் தண்டனை.

"கடிதோச்சி மெல்ல
எறிக; — நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு
பவர்." 265

(கடிது ஓச்சி மெல்ல எறிக - பாவனையில் கடுமையைக் காட்டி தண்டனையில் அருள்புலப்படக் கண்டிக்கவேண்டும். அப்படிச் செய்தால் வாழ்க்கையில் பேரும் புகழும், ஆனந்தமும் நிலைத்து நிற்கும். ஆக்கம் - செல்வம்.)

சொன்னபடி கேட்காமல் அடம்பிடிக்கிற குழந்தையைப் பார்த்து, உன் தோலை உரித்து விடுவேன் என்பாள் தாய். கண் விழியைத் தோண்டிவிடுவேன் என்றும் சொல்வாள். ஆனால் அப்படிச் செய்யமாட்டாள். தவறைக் கண்டிக்காமலும் இருக்க மாட்டாள். அதட்டியும் அணைத்தும் கொண்டு போவதில்தான் உண்மை இருக்கிறது. நயம் இருக்கிறது. ஆனந்தமும் இருக்கிறது.

2

டிப்டிக்கலைக்டராக இருந்து ஓய்வுபெற்றவர் ஒருவர். ஓய்வு பெறுகிற பொழுது அவருக்கு லட்சரூபாய் பணம் கிடைத்தது. பணத்தை வைத்துக்கொண்டு சொந்த ஊரில் வந்து இருந்தார்.

பெண்களுக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டது. பையன் களும் திருமணம் ஆகி வேறுவேறு இடங்களில் வேலை பார்க்கிறார் கள். இவரும் மனவியுந்தான் மிச்சம். இரண்டு பேரும் சேர்ந்து தான் இருக்கவேண்டி ஏற்பட்டது.

ரிட்டயர்டு கலைக்டர் பயங்கரமான ஆள். பொல்லாத கோபக்காரர். கோபத்தில் என்னவேண்டுமானாலும் செய்துவிடு வார். அவரே சொல்வார், ‘‘கோபம் வந்துவிட்டால், நான் மனிதன் இல்லை. எனக்குப் புத்தியே இருக்காது’’ என்று.

அவருடைய கோபம் அவருக்கு அடிக்கடி ஆபத்தை உண்டு பண்ணி இருக்கிறது. உத்யோக பலம் - அம்மாளின் தாலிப்பாக் கியம் - எல்லாவற்றிற்கும் மேலாக ‘‘இந்த மனிதன் புத்தி இவ்வளவு தான்’’ என்று முடிவுகட்டிய உலகின் அனுபவம் - ஆகிய மூன்றுமே ஆபத்தை நீக்கியவை.

ரிட்டையராகி ஊருக்கு வருகிறபொழுது பர்த்தாவிடம் ஒரு வரம் வாங்கித்தான்வந்தாள் தர்மபத்தினி. ‘‘இனிமேல் ஒன்றுக்கும் கோபப்படமாட்டேன். எதையும் பொறுமையோடு கேட்டுப் பதில் சொல்வேன்’’ என்று நீங்கள் உறுதிகூற வேண்டும். அப்படியானால் தான் உங்களுடன் ஊரில் வந்து இருக்கமுடியும். இல்லாவிட்டால், இங்கேயே குறைக்காலத்தையும் தள்ளிவிடுவோம். என்ன சொல் கிறீர்கள்’’ என்று வரங்கேட்டாள் தாய்.

‘‘கோபப்படமாட்டேன். அடக்கிக் கொள்கிறேன்’’ என்று தலையில் அடித்துச் சத்தியம் பண்ணிக் கொடுத்தார் டிப்டிக் கலைக்டர். ஆனால் பொட்டணங்கட்டி ரயில் ஏறுவதற்குமுன்பே சத்தியம் காற்றில் பறந்து போய்விட்டது.

எப்படியோ வந்து சேர்ந்து விட்டார்கள். குடித்தனம் நடத்து கிறார்கள்.

ஒருநாள் மகள், மருமகன், பேரன் மூவரும் ஓய்வு பெற்றவரைப் பார்க்க வந்தார்கள். இரண்டு மூன்று நாள் தங்கினார்கள். பத்து வயதுப் பேரனும் பக்கத்துவீட்டுப் பையனும் வீட்டு முற்றத்தில் விளையாடினார்கள். அவர்களுக்குள் சண்டைவந்து விட்டது. டிப்டிக்கலைக்டர் பேரன், பக்கத்து வீட்டுப் பையன் மண்டையில் ஒரு கல்லை வைத்துக் குத்திவிட்டான. கூர்மையான ஊசிக்கல் அது. அவன் மண்டையிலிருந்து ரத்தம் சொளு சொளு என்று கொட்டியது.

பையனுடைய தகப்பனார் பிரபல வழக்கறிஞர். தன் பையனுடைய நிலையைப் பார்த்து வருந்தினார். பையனை அழைத்துக் கொண்டு, காயத்தையும் ரத்தத்தையும் பழைய கலைக்டரிடம் காட்டினார். ''பையனைக் கொஞ்சம் அடக்கி வையுங்கள்'' என்று சொன்னார்.

அவ்வளவுதான், புலி பாய்வது போல் பாய்ந்தார். ''என்னு டைய பேரனை அடக்கிவைக்க வேண்டும் என்று சொல்ல நீ யார்? உன் பையனைக் கட்டிவைக்க உனக்கு நாதி.இல்லை. எனக்கு வந்து உபதேசிக்கிறாய். புத்தி கெட்டவன்'' என்று கத்தினார்.

வழக்கறிஞரும் ஏதோ சொன்னார். பழைய ஆங்காரம் தலையை விரித்துப் போட்டு ஆட ஆரம்பித்துவிட்டது.

பூண்கட்டிய கம்பை எடுத்து அட்வகேட்டின் மண்டையில் ஓங்கி அடித்துவிட்டார். அவருடைய மண்டையும் உடைந்தது.

வழக்கு நடந்தது. வழக்கு மேல்கோர்ட்டுக்கும் போனது. பலமாதங்கள் தொடர்ந்து நடந்த வழக்கில் கையில் இருந்த பணம் கணிசமாகக் கரைந்து விட்டது.

சாகும்வரை அவருக்கு நிம்மதி இல்லை. அலறி அலறித் துடித்தார்.

தெரிந்தவரிடமும் சீறினார். தெரியாதவரிடமும் சீறினார். யார் சொல்வதையும் கவனிக்கமாட்டார். அக்கினிச் சொரூபமாக நிற்பார்.

இவர் சீறச்சீற இவரிடம் இருந்த 'திரு' லட்சுமிதேவியும் சீறி விட்டாள். இவருடைய வாடையே உதவாது என்று ஓடிப்போய் விட்டாள்.

"இனத்தாற்றி எண்ணாத
வேந்தன்; — சினத்தாற்றிச்
சீறிடச் சீறும்
திரு." 266

(இனத்துஆற்றி - ஒரு சம்பவம் கோபத்தை உண்டாக்கினால் அதனோடு தொடர்புடைய சம்பவங்களைப் பார்க்கவேண்டும். அதுபோன்ற சம்பவங்களைப் பார்க்கவேண்டும். கோபம் ஆறி விடும். எண்ணாத வேந்தன் - அப்படி ஒத்துப் பார்க்காதவன், சினத்து ஆற்றிச் சீறிடின் - சினத்தோடு சினமாக மனத்தைப் போட்டுக் கொதிப்படைவான் ஆனால். திரு சீறும்-அவனைவிட்டு ஓடிவிட லட்சுமிதேவியும் ஆயத்தம் செய்வாள்.

அவனை வெறுத்துவிடுவாள் லட்சுமிதேவி.)

குறிப்பு: அருவருக்கத்தக்க கோபத்தை எப்படி அதனோடு ஒட்டி நின்று பார்க்கிறார் வள்ளுவர். பார்க்கப் பார்க்க, அவருக்குப் பரிவு உண்டாகிறது.

தமிழ்பாஷை பரிவை அப்படியே எடுத்து - அமிர்தமாய்க் கொடுக்கிறது.

# தேர்ந்தெடுக்க வேண்டும் மனிதனை

1

''வாழ்க்கை என்பது ஒரு திறந்த புத்தகமாக இருக்கவேண்டும். ரகஸ்யம் என்று ஒன்றும் வாழ்க்கையில் இருக்கக்கூடாது'' என்று தெளிவுபடச் சொன்னார் காந்தியடிகள்.

சொன்னபடியே வாழ்ந்தும் காட்டினார் காந்திமகான்.

அரசியலிலும் ரகஷ்யம் இருக்கக்கூடாது. நாட்டுக்கு நாடு பயமோ, வஞ்சகமோ இருக்கக்கூடாது என்றும் எடுத்துச் சொன்னார்.

உண்மை இருந்தால் ஒளித்து வைப்பதற்கு ஒன்றும் இல்லைதான். மறைத்து வைப்பதற்கும் இல்லைதான்.

உண்மை இல்லாததால் ரகஸ்யம் என்று ஒன்று உண்டாகி விட்டது. அது இன்றளவும் நிலைத்தும் விட்டது. மனிதனுக்கு, உடம்பு, மனம் வீடு, பணம், அன்பு எப்படி முக்கியமோ, அப்படியே ரகஸ்யமும், முக்கியம் ஆகிவிட்டது.

தன்னிடம் உள்ள ஒன்றைப் பிறர் அறியாமல் மறைத்து வைப்பதில் மட்டும் ரகஸ்யம் இல்லை. யாருக்கும் தெரியாமல் பிறர் மறைத்து வைத்திருக்கும் ஒன்றை, அறிந்து கொள்வதிலும் சேர்ந்து கிடக்கிறது ரகஸ்யம்.

வேறு தேசங்களின் அரசியல் நிலை, படைவலிமை, போருணர்ச்சி, இவைகளை நுட்பமாகப் பார்த்து உண்மையைத் தெளிவாக விளக்குவதற்குச் சிலரை அனுப்பி வைப்பார்கள். அதற்குரிய தகுதி அவர்களிடம் உண்டு. அத்துடன் அவர்களுக்குச் சிறப்பான பயிற்சியும் கொடுத்து அனுப்புவார்கள்.

மிக ஆழமான போக்குகளைக்கூட இவர்கள் கண்டு கொள்வார்கள். கண்டவற்றைச் சம்பவங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். தெளிந்த கருத்தை தம் அரசுக்கு ரகஸ்யமாகச் சொல்வார்கள்.

இவர்களுக்கு ஒற்றர்கள் என்று பெயர். உளவுத்துறையினர் என்றும் சொல்கிறார்கள்.

ஒற்றர்கள் இன்னார் என்று மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது. இவன் ஒற்றன் என்று தெரிந்தபிறகு அவனிடம் யார்வந்து பழகுவார்கள்.

அதனால் ஒற்றனுடைய காரியம் ரகஸ்யமாகவே இருக்க வேண்டும்.

ஒற்றர்களுக்கு அரசு உதவி செய்யவேண்டும். பல வழியிலும் ஒற்றர்களை ஆதரித்து உபசரிக்க வேண்டியதுதான்.

ஆனால் இவன் ஒற்றன் என்று பிறர் கண்டு கொள்ளும்படி வெளிப்படையாகச் செய்துவிடக்கூடாது உபசாரத்தை.

''சிறப்பறிய ஒற்றின்கண்
செய்யற்க;

என்கிறார் குறளாசிரியர்.

உபசாரம் செய்கிறதன் மூலம் இவன் ஒற்றன் என்னும் ரகஸ்யத்தை அம்பலப்படுத்தி விட்டால், ராஜாங்க ரகஸ்யத்தை (இறை) விளம்பரப்படுத்தியது (புறப்படுத்தல்) ஆகிவிடும்.

இனிப் பாடலை முழு உருவத்தில்ப் பார்ப்போம்.

''சிறப்பறியது ஒற்றின்கண்
செய்யற்க; — செய்யின்
புறப்படுத்தான் ஆகும்
இறை.'' 267

(சிறப்பு - பாராட்டை. அறிய - பிறர்தெரியும் படி. செய்யற்க - செய்யாதே. இறை - ரகஸ்யத்தை. புறப்படுத்தான் ஆகும் - ஏவீயிட்டதாகிவிடும்.)

2

பதவி காரணமாக கிறுக்குப் பிடிக்கிற கூட்டந்தான் உலகில் அதிகம். இது என்றென்றும் உள்ள நியதி.

தான்கண்ட உண்மை அனுபவத்தை மற்றவர்களிடம் சொல்ல - உலகம் முழுவதற்குமே சொல்லிவிட ஆசை உண்டாகும்'

ஒரு வெறியாகவே உண்டாகும் ஆசை. இது மனித இயல்பு. இந்த இயல்பை ஒட்டியே மனித காரியம் நடக்கிறது. ஆனால் ஒரு மனிதனை ஆசிரியர் ஆக்கி விட்டால் இந்த இயல்பு விலகிப் போகிறது. அந்த ஆசிரியரைக் கலாசாலைக்கு நிர்வாகி (பிரின்ஸ் பால்) ஆக்கி விட்டாலோ கேட்க வேண்டியதே இல்லை.

பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் போனபிறகு, அனுபவமும், பிறருடன் பகிர்ந்து கொள்ளும் ஆர்வமும் அவரிடம் இருக்க முடியுமா?

அதிகாரமும் செருக்குந்தான் மிச்சம்.

இந்தக்கேட்டிலிருந்தும் சிலர் தப்பிவிடுவார்கள். தங்களை இழக்காமல் மனிதப்பண்பை தைர்யமாகக் கையில் வைத்துக் காட்டிக் கொண்டிருப்பார்கள் அவர்கள்.

அவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும். அவர்களிடம் அதிகாரம், பதவி, நிர்வாகம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும்.

அப்படிக் கண்டுபிடித்து ஒப்படைப்பது எளிதான காரியம் அல்ல. சிரமமான காரியம். சிரமமானாலும் செயல் அப்படித் தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் காரியம் ஒவ்வொன்றும் கேடாகவே முடியும். காரியத்தைத் திருத்தமாகச் செய்தது ஆகாது.

“அறிந்தாற்றிச் செய்கிற்பாற்(கு)
அல்லால்; — வினைதான்
சிறந்தான்என்(று) ஏவல்பாற்(று)
அன்று.” 268

(அறிந்து - நாம் மனிதன்தான் என்பதைத் தெரிந்து - மறக்காமல் ஞாபகத்தில் வைத்து. செய்கிற்பான் - செயல்படுகிறவன் எவனோ, அவனிடம் ஒப்படைக்க வேண்டும் (அரசியல்) பொறுப்பை. செய் கிற்பாற்கு அல்லால் - அப்படி உணர்ந்து செயல்படுகிறவனைத் தேடிப்பார்த்து ஒப்படைக்காவிட்டால் - ஏதோ, அதில் வல்லவன், இதில் வல்லவன் என்பதை வைத்து ஒருவனிடம் பொறுப்பைக் கொடுப்பது ஆபத்து.)

குறிப்பு: மனிதனையும் அவனுடைய பண்பையும் எவ்வளவு உயர்வாக மதித்துப் பார்க்கிறார் குறளாசிரியர். வாழ்க்கையைப் பார்த்துப் பார்த்து உண்மையைக் கண்டவர் குறளாசிரியர். அவர் கண்ட உண்மையும் ஆனந்தமும் தமிழில் முழக்கமிடுகின்றன.

3

லட்சியத்திற்காக உயிரையே தத்தம் பண்ணுகிறவன் போல முழங்குவான். பகல் என்றும் பாராமல், இரவென்றும் பாராமல் பாடுபடுவான். தலைவனிடம் பணிவாக நடந்து கொண்டான். தொண்டர்களைத் தட்டிக் கொடுப்பான். அதிகாரம் பெறுகிற வரை - பொறுப்புக்களை நாணயமாக நிறைவேற்றுவான்.

பதவியும் அதிகாரமும் கிடைக்கும் வரை மனிதன்தான் நல்லவன்தான். நெறிமுறை பிறழாதவன்தான்.

அதிகாரம் வந்த பிறகு, பதவியில் ஏறி உட்கார்ந்து பிறகு அப்படியே ஒருவன் மனிதனாகவே இருந்து செயல்படுவது அபூர்வம். அப்படி ஒருவன் கிடைத்துவிட்டால், அது பூமாதேவி செய்த புண்ணியந்தான்.

எனைவகையால் தேறியக்
கண்ணும் — வினைவகையால்
வேறாகும் மாந்தர்
பலர். 269

(எனைவகையால் தேறிய கண்ணும் - பல காரியங்களில் சோதனை செய்து பார்த்திருக்கலாம். ஒவ்வொரு சோதனையிலும் அவன் யோக்கியன் என்று தேறி இருக்கலாம். வினைவகையால் - பெரிய பதவியும், அதிகாரமும் கிடைத்துவிட்டால், அதன்பிறகு, வேறு ஆகும் மாந்தர் பலர் - மனித இயலுக்கு மாறுபட்டு நடக்கிற கூட்டந்தான் உலகில் அதிகம்)

# ஊக்கம் உடைமை

1

ஊக்கம் என்பது ஆனந்தத்திலிருந்து உண்டாகிறது. ஆனந்தம் வாழ்க்கையிலிருந்து பிறக்கிறது. வாழ்வுக்கு இடம் குடும்பந்தான்.

குடும்ப வாழ்க்கை என்பது மனிதனிடம் உள்ள காரியம். அதனால் ஊக்கமும் மனிதனோடு ஒட்டிய காரியம் ஆகும்.

வேறு பிராணிகளிடம் ஊக்கம் இல்லை. மலைபோன்ற பெரிய உருவத்தோடு கூடிய யானையினிடமே ஊக்கம் இல்லை என்றால் மற்றப் பிராணிகளைப் பற்றிச் சொல்லவேண்டியது இல்லைதானே.

பரியது கூர்ங்கோட்ட(து)
ஆயினும்; — யானை
வெரூஉம் புலிதாக்
குறின்.'' 270

(கூர்ங்கோட்டது - கூர்மையான கொம்புகளை வேறு வைத்திருக்கிறது. வலுவானவை அவை. பாறையைக்கூட குத்திக் கிழித்து விடும் சக்திகொண்டவை. புலிதாக்குறின் வெரூஉம் - புலியைப் பார்த்தாலே போதும் பதறிவிடும் யானை.)

2

மனிதனிடம் எப்படியோ ஊக்கம் உண்டாகிவிட்டது. அது மனிதனை விடாமல் ஒட்டிக் கொள்ளவும் செய்தது. இல்லா விட்டால் விவசாயம், வியாபாரம், தொழில், பொருள் உற்பத்தி, கலை, பக்தி, இவ்வளவையும் மனிதன் உண்டாக்கமுடியுமா? இன்றளவும் பாதுகாத்துக் கொண்டுதான் வரமுடியுமா?

தாமரைமலர் பூத்துக்குலுங்கும் பொய்கையில்த்தான் தவளையும் பிறந்து வளர்கிறது. தாமரைப்பூவின் ஒன்றுவிட்ட தம்பி என்று தவளையைச் சொல்லலாம். இருந்தும் தாமரை மலரை, தவளையால் அனுபவிக்கமுடியவில்லை. வெறும் மண்டூகமாய்ப் போய்விட்டது தவளை. அரண்மனை போல வீடு இருக்கிறது. பொக்கிசம் இருக்கிறது. மந்தைமந்தையாய்ப் பசு இருக்கிறது. மனையாள் இருக்கிறாள். உடம்பும் வளமாக இருக்கிறது. உயிரும் இருக்கவே செய்கிறது. ஆனாலும் மனதில் உத்ஸாகம் இல்லை. ஊக்கம் இல்லை. அப்படி என்றால் எல்லாம் வீண்தான்.

ஊக்கம் இல்லாதவன் எல்லாவற்றையும் இழந்தவன் - பறி கொடுத்தவன் தான்.

"ஆக்கம் இழந்தேம்என்(று)
அல்லாவார்; — ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை
யார்." 271

(ஆக்கம் - செல்வம், வசதி. அல்லாவார் - துன்பப்படுவர். ஒருவந்தம் கைத்துடையார் - இழந்து நிற்பவர்.)

3

ஊக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு நிமிர்ந்து நிற்கிறதோ அவ்வளவுக்குச் செயலில் ஈடுபாடு பிறக்கும். வாழ்க்கை ஒளிமயமாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

ஊக்கம் குன்றக்குன்ற வாழ்க்கைக்கு உயிர் இல்லைதான். ஒளி இல்லைதான். உணர்ச்சியும் இல்லைதான்.

நீரின் அளவை ஊடுருவி தாமரைப்பூ நிமிரும். தண்டின் நீளமும் குறுக்கமும் தண்டோடு சரி. தண்ணீர் ஏறஏற அதை ஒதுக்கித் தள்ளிவிட்டு பூவானது ஏறி நிற்பதுபோல, பிரச்சனைகள் தோன்றத் தோன்ற அவற்றைத் தள்ளி நொறுக்கிவிட்டு உயர்ந்து நிமிர வேண்டும் மனிதன். அந்த மனஎழுச்சிக்குத்தான் ஊக்கம் என்று பெயர்.

"வெள்ளத்(து) அனைய
மலர்நீட்டம்; — மாந்தர்தம்
உள்ளத்(து) அனைய(து)
உயர்வு." 272

(வெள்ளத்து அனைய மலர்நீட்டம் - தண்ணீரின் அளவுக்கு ஏற்ற படி தாமரை முதலிய நீர்ப்பூக்களின் உயரம் ஏறும். மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு - மனிதனின் மனஎழுச்சிக்கு ஏற்றபடி பெருமை கிடைக்கும். புகழ் கிடைக்கும்.)

குறிப்பு:- முயற்சிபற்றி, விடாமுயற்சி பற்றி தமிழில் ஒன்றும் இல்லையே என்று சிலர் சொல்வார்கள். ஊக்கம், துணிச்சல், அஞ் சாமை, வீரம் இவை எல்லாம் இங்கிலீஷில் தான் வரும். தமிழில் வராது என்றும் அளந்து விடுவார்கள்.

மேலே குறிப்பிட்ட பாடல்கள் ஊக்கத்தைக் கையில் எடுத்து வைத்துக் காட்டுகின்றன. இதுபோன்ற பாடல்கள் தமிழ்மொழி யில் நிறைந்து கிடக்கின்றன. தமிழ்ப் பாடல்களைப் பார்த்தால்— அனுபவித்திருந்தால், ஊக்கம், விடாமுயற்சி இவைபற்றிச் சொல் வதற்கே தகுதியான மொழி தமிழ்தான், தமிழேதான் என்று சொல்லமுடியும்.

அப்படிச் சொல்வது மிகைபடக் கூறல் ஆகாது.

# பொய்யில் அழியும் புகழ்

1

உண்மையை நோக்கி - உண்மையின் பொருட்டு கோபம் பிறக்குமானால் அந்தக்கோபம் சிறிது நேரத்தில் துணிந்துவிடும். அருளாகவே அது மாறிவிடும்.

நான் என்னும் ஆணவத்தை நோக்கி - ஆணவத்தின் பொருட்டு உண்டாகிற கோபம், ஆறாது; அது புகைந்து எரியும். அணைவது போல இருந்தால் போதும். ஆணவமானது சினத்தை மூட்டிவிடும்.

கோபமானது மனதில் பொங்கப்பொங்க அவமானம் வரும். ஆங்காரம் வரும். வெறி உண்டாகும். அயோக்கியத்தனம் பண்ணிக் கொண்டே இருப்பான். முடிவு நாசந்தான்.

இதுகருதியே வரம்பு மீறிய கோபம் கொடியது என்கிறார் குறளாசிரியர்.

''இறந்த வெகுளி(யின்ன) தீது''

என்பது அவருடைய தீர்ப்பு.

மூளையைக் கொதிக்கச் செய்யும் ஆங்காரத்தைவிட மோசமான காரியம் ஒன்றிருக்கிறது. அதையும் சேர்த்தே சொல்கிறார் குறளாசிரியர்.

நான் என்னும் ஆணவவெறி கொதிக்கும் ஆங்காரத்தீயில் மனிதனை எடுத்துப் போட்டு வறுக்கும். அதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால், பொய்யான புகழுரைக்குள் மூக்கி ஊறப் போட்டு விடும்.

ஒருவன் நம்மிடம் இல்லாதவற்றைச் சொல்லி ஜோடித்து புகழ்ந்து தொலைக்கிறான் என்றால், கேட்டுத் தொலைக்க வேண்டியதுதான். மனிதன் எவ்வளவு திறமையாகப் பொய்க்கு அலங்காரம் பண்ணுகிறான் என்பதைப் பார்த்துச் சிரித்துவிட வேண்டியதுதான்.

ஒருவன் நம்மை ஏமாற்றவும், மயக்கவும் இனிக்க இனிக்க நம்மைப் புகழ்ந்து பாராட்டுகிறான் என்றால் அதை நம்பிவிடலாமா? நம்பி அதனோடு தோய்ந்து விடலாமா? கூடவே கூடாது.

ஆணவ வெறியானது உண்மை என்று பொய்ப்புகழை அங்கீகரிக்கத் தூண்டும். வற்புறுத்தவே செய்யும். எப்படியாவது சிக்க வைத்து விடவேண்டும் மனிதனை என்று தவியாய்த் தவிக்கும். ஜாக்கிரதை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரிய ஆபத்துத்தான். வரம்பு மீறிய ஆங்காரத்தில் உண்டாகிற ஆபத்தைவிடப் பெரிய ஆபத்தாய் முடியும் பொய்யான புகழிலும் உபசாரத்திலும் விழுந்து மூழ்கிப்போவது.

இனிக் குறளைப் பார்ப்போம்.

''இறந்த வெகுளியில்த்
தீதே — சிறந்த
உவகை மகிழ்ச்சியில்ச்
சோர்வு.'' 273

(இறந்த - அளவுமீறிய. வெகுளியில் - கோபத்தைவிட. சிறந்த உவகை மகிழ்ச்சியில் - நன்றாக ஜோடித்து அலங்கரிக்கப்பட்ட புகழுரையிலும், உபசாரத்திலும் சிக்கி மதிமயங்கும். சோர்வு - செயலற்றநிலை.)

2

வறுமையில்ச் சிக்கித் தவிக்கிறவன் பொய் சொல்வான், திருடுவான், ஏமாற்றுவான், காலைப் பிடிப்பான், கையைப் பிடிப்பான், ஒன்றுக்கும் வெட்கப்படமாட்டான். காரணம் அவனிடம் அறிவு என்பது இல்லை. இருந்த அறிவை சிறிது சிறிதாக அரித்துத் தின்றுவிட்டது வறுமை.

வறுமையானது அறிவைத் தீர்த்துக் கட்டியது போலவே, மனிதனை மேன்மைப்படுத்தும் புகழைக் கொன்று தீர்த்துவிடும் பொய்யில் மயங்குகிற மயக்கம்.

"பொச்சாப்புக் கொல்லும்
புகழை; — அறிவினை
நிச்ச நிரப்புக்கொன்
றாங்கு." 274

(பொச்சாப்பு - பொய்யில் மயங்குகிற மயக்கம். நிச்சநிரப்பு - வறுமை. கொன்றாங்கு - கொன்று விடுவதுபோல்.)

3

இட்டுக்கட்டி ஒருவன் சொல்கிற புகழ்ச்சியில் மட்டும் பொய் இருக்கிறது. மற்றவற்றில் இல்லை என்று நினைத்து விடக் கூடாது. மனிதனுடைய காரியம் ஒவ்வொன்றிலும் பொய் இருக் கிறது. மனிதனுடைய பிழைப்பே பொய்தானோ என்று சொல்லும் படி சர்வ வியாபகமாய் நிறைந்துகிடக்கிறது பொய்.

கலை, இலக்கியம், பக்தி இவற்றைப் பார்க்கிறதில்கூட எப்படியோ பொய்க்கு ஆள்ப்பட்டு விடுகிறான் மனிதன். பிறகு அவன் அனுபவக்கிறதிலும் பொய், ஆனந்திக்கிறதிலும் பொய்.

உண்மையைத் தூண்டித் தூண்டித்தான் பொய்யை அடித்துத் துரத்தவேண்டும். மனம்எப்பொழுதும் உஷாரராக இருக்கவேண்டும். சோர்ந்து அமர்ந்து விடக்கூடாது மனம்.

பொய்யில் மனதை ஊறப்போட்டுச் சோர்ந்து போனவன் உண்மையைக் காணவேண்டும் என்று ஆசைப்படமாட்டான். அவனிடம் யோசிக்கிற பழக்கம் இல்லை, புத்தியும் இல்லைதான்.

யோசிக்கிற பழக்கம் உள்ளவன், உண்மையைக் கண்டவுடன் ஆனந்தத்தில் திளைப்பான். உண்மை ஒளியைப் பார்த்துப் பார்த்து அனுபவிப்பான்.

உண்மையை மனதில் வைத்து சதா அதை அனுபவித்து ஆனந்தம் அடைகிறவனுக்கு முடியாதது ஒன்று உண்டா?

கவியே உண்டாகிவிடும் அவனிடம் இருந்து. வெண்பாவில் உருவெடுக்கவேண்டும் என்று அவன் விரும்பினால் வெண்பாவில் உருவெடுக்கும். விருத்தத்தில் வரவேண்டும் என்று விரும்பினால் விருத்தத்தில் எழுந்துவரும்.

எந்தமெட்டில் - எந்த நடையில் வரவேண்டும் என்று விரும்பு கிறானோ அந்தமெட்டில் அந்த நடையில் விஷயமானது கவியா கவே அவனிடமிருந்து உதித்துவந்து விடும்.

இது அதிசயந்தானே.

இந்த அதிசயம் குறளிலிருந்து எப்படி எழுந்து நம் கையில் வந்து சேர்கிறது என்று பாருங்கள்.

"உள்ளிய(து) எய்தல்
எளிதுமன்; — மற்றுந்தான்,
உள்ளிய(து) உள்ளப்
பெறின்." 275

(உள்ளியது - உண்மையோடு சேர்த்துவைத்துப் பார்க்கிற காரியம், எய்தல்எளிது - பலன்தருவது எளிதுதான். எப்பொழுது? தான் உள்ளியது உள்ளப்பெறின் - ஒருவன் உண்மையோடு சேர்த்து வைத்துப் பார்க்கிற விஷயம் மனதைவிட்டு அகலாமல் மீண்டும் மீண்டும், யோசனைக்கு உள்ளாகிறபொழுது)

பொய்க்கு இரையானவன் மனதில் உண்மை நிற்காது. அதைப்பற்றிய யோசனையும் அவனுக்கு இல்லைதான்.

வாழ்க்கையில் பெரிய நஷ்டம் பொய்தான்.

# சோம்பலை உதறவேண்டும்

1

வெளிச்சம் உள்ள இடத்தை இருள் எட்டிப் பார்க்காது. தெளிவுள்ள இடத்தைக் கவலை எட்டிப் பார்க்காது. அன்புள்ள இடத்தைப் பொறாமை எட்டிப் பார்க்காது. ஞானம் உள்ள இடத்தைப் பயம் எட்டிப் பார்க்காது.

ஆனந்தம் உள்ள இடத்தைச் சோம்பல் எட்டிப் பார்ப்பது இல்லை.

உழைப்பில் ஆர்வமும் இன்பமும் பொங்குகிற இடத்தை லட்சுமி கடாட்சம் என்று சொல்வார்கள்.

நாலாதிசைகளில் இருந்தும் புஷ்பத்தை நோக்கி வண்டுகள் வரும். அதுபோலவே ஆர்வம்மிக்க முயற்சி உடையவனை நோக்கி, நோக்கி ஊக்கம் வரும், வீரம் வரும், ஞானம் வரும், புகழ் வரும், செல்வாக்கு வரும். நண்பர்கள் வருவார்கள். சுற்றத்தார் வருவார்கள். தெய்வமே அவனைத் தேடி வரும்.

நீயே தஞ்சம் என்று அவன் காலடியில் (முயற்சியோடு முயற்சி யாக) தெய்வமே தங்கிவிடும் என்கிறார் குறளாசிரியர்.

நெருப்பை ஒருவன் கண்டுபிடித்து விட்டால். கண்டுபிடிப்ப தற்கு அவனிடம் ஆர்வம் எவ்வளவோ இருந்திருக்க வேண்டும். ஊக்கமும் அப்படியே இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கண்டுபிடித்திருக்க முடியாது.

உலகம் முழுவதும் இன்றுவரை நெருப்புக்குக் கட்டுப்பட்டே இருக்கிறது, ஒருவரும், எனக்கு நெருப்பு தேவை இல்லை என்று சொல்லவில்லை.

ஊக்கம் என்பது உலகம் முழுவதையும் தன் கையில் எடுத்து வைத்துப் பார்க்கும்.

திருமால் ஒரு குள்ளமான வடிவத்தில் மாவலிச் சக்ரவர்த்தி யிடம் போய் மூன்றடி மண் வேண்டினார். அரசனும் கொடுத்தான்.

பேரண்டம் முழுவதையும் (சிறிய) பாதத்தால் அளந்து தீர்த்து விட்டார் திருமால்.

திருமால் அளந்த உலகம் முழுவதும் ஊக்கம் உடையவன் ஆணையில் நிற்கும். அவன் 'நில்!என்றால் நின்றே தீரும் என்கிறார் குறளாசிரியர்.

''மடிஇலா மன்னவன்
எய்தும்; — படிஅளந்தான்
தாஅய(து) எல்லாம்
ஒருங்கு'' 276

(மடிஇ(ல்லா) மன்னவன் - சோம்பல் இல்லாத சுறுசுறுப்பான அரசன். எய்தும் - பெறுவான். படி அளந்தான் - திருமால் (படி- உலகம்) தாயது எல்லாம் - தாவி எட்டுவைத்து அளந்த இடம் முழுவதையும். ஒருங்குஎய்தும் - மிச்சம் இல்லை என்று சொல்லும் படி மொத்தமாக அடைவான்.

ஒரு அரசன் பெரிய சாம்ராஜ்யத்திற்கே அதிபதியாக இருக்க லாம். ராஜ்யத்தை நிர்வாகம் பண்ண அமைச்சர்களையும் அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்து இருக்கலாம். ராஜாங்கத்தின் மேல் அரசனுக்கு ஆசை எவ்வளவோ இருக்கத்தான் செய்கிறது. (பற்று அமைந்த கண்ணும்) ஆனாலும் சோம்பல் அவனைப் பற்றிக் கொண்டது. கேளிக்கையான காரியங்களில் அவன் உத்சாகமாக இருக்கிறான். ராஜ்ய நோக்கில் ஆர்வமும், வேகமும் இல்லை என்று சொல்லும்படி மயக்கத்திலேயே இருக்கிறான்.

அவனுடைய கதி அதோகதிதான்.

''படிஉடையார் பற்றமைந்த
கண்ணும்; — மடிஉடையார்
மாண்பயன் எய்தல்
அரிது.'' 277

(படி - ராஜ்யம், பற்று - ராஜா என்னும் பதவியில் ஆசை. மடி - சோம்பல். மாண்பயன் எய்தல் அரிது - அரசனுக்குரிய புகழோடு வீற்றிருத்தல் இயலாது.)

3

ராஜ்யம் இருந்தால் மட்டும் போதாது. ஆசை இருந்தால் மட்டும் போதாது. ஆர்வம் வேண்டும். ஈடுபாடு வேண்டும். ஊக்கம் வேண்டும். 'துருதுரு' என்று எழும் வேகம் வேண்டும்.

ஒன்றும் இல்லாவிட்டால் - ''எல்லாம் இருக்கிறது யாதொரு குறையும் இல்லை'' என்னும் மயக்க நிலை (மடி) வந்துவிட்டால், ஒன்றும் தங்காது.

மூதேவியை யாரும் கண்ணால்ப் பார்த்தது இல்லை. அவள் விலாசமும் தெரியாதுதான். ஆனாலும் திருவள்ளுவர் மூதேவியின் விலாசத்தைக் காட்டுகிறார். அங்கே அவள் இருந்து அதிகாரம் பண்ணுவதையும் காட்டுகிறார்.

''மடிஉளான் மாமுகடி
என்ப;''

(மாமுகடி - மூதேவியானவள். மடி - சோம்பேறியிடம். உளாள் என்ப - வாசம் செய்கிறாள், தங்கி விட்டாள் என்று யாரோ சொன்னார்கள். அது உண்மை என்பது விளங்கி விட்டது.)

பிறர் சொல்லாமலே அனுபவத்தில் கண்டது ஒன்று இருக்கிறது என்றும் சொல்லுகிறார் குறளாசிரியர்.

சோம்பல் இல்லாமல் ஆர்வத்தோடு பாடுபடுகிறவனுடைய காலடியில் (முயற்சியில்)தான் செல்வத்துக்கு அதிதேவதையாகிய திருமகள் தங்கி இருக்கிறாள்.

இதை நான் கண்டு கொண்டேன் என்று மார்பு தட்டுகிறார் குறளாசிரியர்.

''மடிஉளாள் மாமுகடி
என்ப; — மடிஇலான்
தாள்உளாள் தாமரையி
னாள்.'' 279

(தாள் - முயற்சி, காலடி. தாமரையினாள் - இலட்சுமிதேவி.)

குறிப்பு :- பிறர் காண முடியாத ஒன்று தான் கண்டதாக எக்களிப்பு கவியில் எழுந்து நிற்கிறதைப் பார்க்கிறோம்.

# இடுக்கண் அழியாமை

1

ஒரு செயலை மேற்கொண்டு ஆற்றுகிறவர்களுக்குத்தான் இடையூறு ஏற்படும். துன்பம் உண்டாகும். சும்மா இருக்கும் மனிதர்களுக்கு அப்படி எதுவும் ஏற்படுவதில்லை.

மலட்டுப் பெண்ணுக்கு ஏதாவது வலி உண்டாகுமா? ஒரு குழந்தைக்குத் தாயாகப்போகிற பெண்ணிற்கு வலி வரும். பிரசவ வலி உண்டாகும்.

குறிக்கோளை நோக்கிச் செயலாற்றுபவர்களுக்குச் சோதனைக்குமேல் சோதனை வரும். வேதனைக்குமேல் வேதனை வரும்.

நோய் குணமாகி விடவேண்டும் என்கிற ஆசை, கசப்பான மருந்தை ஆர்வத்தோடு சாப்பிட வைக்கிறது.

கசப்பான மருந்து இனிய ஆரோக்கியத்தைக் கொடுத்து விடுகிறது என்னும் முரண்பாட்டையே அனுபவித்து அனுபவித்து மருந்தை உண்பான் மனிதன்.

இந்த மனப்பாங்கோடு செயலாற்றினால், பலன் கூடுதலாகக் கிடைத்தாலும், குறைவாகக் கிடைத்தாலும் ஆனந்தமாக இருக்கும்.

வெற்றியிலெல்லாம் மகத்தான வெற்றி எதுவென்றால்,

> “இடுக்கண் வருங்கால்
> நகுக; அதனை
> அடுத்தூர்வ(து) அஃதொப்ப(து) 280
> இல்.”

(இடுக்கண் - துன்பம். அதனை அடுத்து ஊர்வது - அதைச் சமாளித்து நீந்துவது எதில் இருக்கிறது? துன்பத்தைக் கண்டு பயப்படாமல் இருப்பதில் இருக்கிறது. அந்தச் சிரிப்பை விட்டு விடக்கூடாது. நகுக - சிரிக்கவும். அஃது ஒப்பது இல் - அதற்கு நிகரானது வேறு ஒன்றும் இல்லை.)

2

காதல் துறையில் ஈடுபட்டுக் காதலியின் அருள் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்ட ஒருவனுக்குக் காதலியை நாடிச் செல்கிற நேரம் இரவாக இருக்கலாம். பாதை கரடு முரடானதாக இருக்கலாம்.

பாதையிலுள்ள இடையூறும் நேரத்திலுள்ள துன்பமும் லட்சியத்தில் குறிக்கிடுவதில்லை. அவனுடைய மனக்கண்களுக்கு முன், காதலியும், அவள் இன்முகமும், அருளும், ஏக்கமுமே தெரியும்.

லட்சியத்தை நோக்கிப் போகிற ஒருவனுக்கு, அதுதான் உள்ளத்துள் நின்று ஒளிவிடும். மலை மலையாக வந்து குறிக்கிடு கிற துன்பங்கள்கூட அவன் முயற்சியைத் தடுக்க முடியாது. கலங்காமை என்பது, கவசத்தையே கலக்கிவிடும்.

''வெள்ளத்(து) அனைய
இடும்பை; அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக்
கெடும்'' 281

(வெள்ளத்து அனைய இடும்பை - மலை மலையாய் வந்தாலுஞ்சரி துன்பம். அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக்கெடும் - குறிக் கோளில் நாட்டம் உடையவன், குறிக்கோளை நினைக்க நினைக்க தூள்தூளாய் நொறுங்கிவிடும் துன்பம்.)

3

குறிக்கோள் இன்னதென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டவனுக்குத்தான் ஆனந்தம் என்ன என்பது தெரிய முடியும்.

நல்ல செயலையே ஆனந்தமாக வைத்து அவன் அனுபவித்துக் கொண்டிருப்பான்.

உண்மையை உணர்ந்த இத்தகைய பேராளன், அந்த ஆனந்தத்திற்குரிய விலையைக் கொடுக்கத் தயங்க மாட்டான். விலைகொடுக்காமலே உயர்ந்த பலனைப்பெற விரும்பமாட்டான்.

இன்பத்திற்குரிய விலையாகச் சோதனைகளைக் கருதுவார்கள். துன்பம் என்று மனஞ் சோர்ந்துபோக மாட்டார்கள்.

"இன்பத்துள் இன்பம்
விழையாதான்; - துன்பத்துள்
துன்பம் உறுதல்
இலன்." 282

4

நமக்கு வேண்டாதவர்களும் நம்மை உயர்வாக மதிக்கவும். நம்மை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளவும், வாழ வேண்டும். அதற்கு வழி இதுதான்.

செயலாற்றுகிற பொழுது, ஏற்படும் தடங்கல்களை அனுபவமாக வைத்து முன்னேறுவதுதான்.

"இன்னாமை இன்பம்
எனக்கொளின் - ஆகுந்தன்
ஒன்னார் விழையும்
சிறப்பு." 283

(இன்னாமை - துன்பம். ஒன்னார் விழையும் சிறப்பு - எதிரிகளும் விரும்பும்படியான பெருமை, ஆகும் - கிடைக்கும்.)

# தூது

1

குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசனைச் சேர்ந்தது. அரசனுக்கு உதவியாக மந்திரிகள், தளகர்த்தர்கள், அதிகாரிகள் என்று பலவகைப்பட்ட பிரிவினர் இருக்கிறார்கள். லட்சியம் மக்களை - மக்களின் வாழ்க்கையைக் காப்பதுதான்.

வேறு நாடுகளுடன் அரசு உறவு வைத்துக் கொள்ள வேண்டும். சில நாடுகள் வேண்டாத நாடுகளாகவும் இருக்கும்.

வேண்டிய நாடுகளுடன் இருக்கிற நட்பைப் பலப்படுத்திக் கொள்வதும், வேண்டாத நாடுகளின் நிலைமையை - மாற்றங் களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதும், அரசனுடைய கடமை.

அரசனுக்கு உதவியாக இருக்கிறவர்கள் தூதுவர். தூதுவர்கள் அரசனுடைய நேரடிப் பொறுப்பில் செயலாற்றக் கூடியவர்கள்.

தூதுவர்களின் செயலை அரசன்தான் நேரடியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கல்வி கேள்விகளில் ஈடு இணை இல்லாதவனாக இருக்க வேண்டும் தூதுவன். ஞானியைப்போல, சஞ்சலமில்லாதவனாய். அமைதி குலையாதவனாய் அவன் விளங்க வேண்டும்.

எதையும் உடனுக்குடன் தெளிவாக அறிந்து கொள்ளும் நுண்ணறிவும், எதையும் வெளியிட்டுவிடாத அடக்கமும், புலனடக் கமும் தூதுவனுக்கு வேண்டிய பண்புகள். அரசனுடைய கொள்கையைத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவிக்க வேண்டும். பயப்படக் கூடாது.

ஆபத்து வருவதாக இருந்தாலும் கலங்கக்கூடாது. மரணம் ஏற்படுவதாக இருந்தாலும் அரசனுடைய கொள்கையைக் கடைப் பிடிப்பவன் தான் தூதுவன்.

கடல் போன்ற கல்வியறிவும், மலைபோன்ற உறுதியும் கொண்ட ஒரு தூதுவன் செய்து முடிக்கும் பணியை பயிற்சி மிக்க போர் வீரர்களாலுஞ் செய்து முடிக்க முடியாது என்கிறார் கவிஞர்.

''நூலாருள் நூல்வல்லன்
ஆகுதல்; - வேலாருள்
வென்றி வினைஉரைப்பான்
பண்பு.'' 284

(வேலாருள் - வேல்ப் படைகளைக் கொண்டு போர்புரியும் வீரர்களைவிட, வென்றிவினை - மேலான வெற்றியை வேற்று நாட்டில், உரைப்பான் - அஞ்சாது சொல்லி காரியத்தைச் சாதிக்கும் தூதனுக்கு. பண்பு - உரிய பண்பு என்னவென்றால், நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் - கல்வியறிவில் மேம்பட்டவர்கள்கூட, ''இவனுடைய கல்வி உயர்ந்ததுதான்'' என்று பாராட்டும் வண்ணம் பல துறைகளையும் கற்றுத் தெரிந்திருத்தல்)

2

மேலும் தூதுவனுக்குரிய இலக்கணம் என்னவென்று பார்க்கலாம்.

''விடுமாற்றம் வேந்தர்க்கு
உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கண்
அவன்.'' 285

(வேந்தர்க்கு - பகையரசரிடத்திற்கே சென்று. விடுமாற்றம் - தன்னுடைய அரசன் தனக்கிட்ட கட்டளையை. (தெரிவிக்க வேண்டுமென்று சொல்லிவிட்ட கருத்துக்களை) உரைப்பான் - துணிந்து கூறச்சென்ற தூதுவன். வடுமாற்றம் - சோர்வினாலோ பயத்தினாலோ கலங்கிவிடக் கூடாது. கலங்கிவிட்டால், தான் சொல்ல வேண்டிய சொற்களைப் பிழைபடவோ, முரண்படவோ சொல்லிவிட நேரிடும். அதனால் கலங்காதிருக்கும் பண்பு தூதுவனுக்கு மிகமிக முக்கியம். வாய் சோரா - மறந்தும் தவறுதலாகச் சொல்லிவிடாத திறமை. வன் கண் அவன் - அவனை கலங்காத, கல்லுளிமங்கன் என்று கூடச் செல்லமாக அழைக்கலாம்.)

3

மரணம் வருவதானாலும் தூதன் பயப்படக்கூடாது. சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட வேண்டும்.

நம்பிக்கையை உயிருக்கும் மேலாக மதிக்க வேண்டும்.

இறுதி பயப்பினும்
எஞ்சா (து) இறைவற் (கு)
உறுதி பயப்பதாம்
தூது.'' 286

(இறுதி பயப்பினும் - மரணம் நேர்வதாக ஏற்பட்டாலும். எஞ்சாது- சொல்ல வேண்டியதைக் குறைக்காமல், மாற்றாமல். உறுதி பயப்பது - தன் அரசனுக்கு மேன்மையைத் தேடிக் கொடுப்பது. தூது - தூதுவனின் கடமை)

குறிப்பு :- தூதனின் இலக்கணமும், ஆற்றலும் தெளிவாக விளக்கிச் சொல்லப்பட்டுள்ளன. அற்புதமான கவிகளுக்குள் வந்து அவ் விளக்கங்கள் பிரகாசிக்கின்றன.

4

மேலே குறிப்பிட்ட தூதுவர்கள் பழகுவதற்கு இனியவர்களாக இருக்க வேண்டும். செயல் திறமையில் மிக்க உறுதியுடையவர் களாக இருக்க வேண்டும். ''எத்தனை தந்திரங்களைக் கையாண்டு பார்த்தாலும் கடுகளவுகூட அந்தரங்கத்தைக் கிரகிக்க முடியாது இந்த ஆசாமியிடமிருந்து'' என்று பிறர் கருதும்படி இருக்க வேண்டும்.

எந்த காரியத்திலும் உணர்ச்சி வசப்பட்டு பரபரப்புக் காட்டாத சுபாவம் வேண்டும்.

தூதுவர்களுக்கு ஒரு நாட்டில் நல்ல மதிப்பு இருக்கும். அந்நாட்டு அரசனோடு கலந்து உறவாடக் கூடிய வாய்ப்பு நிறைய உண்டு. வாய்ப்பிருக்கிறதே என்று அடிக்கடி அந்நாட்டு வேந்தனைச் சந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. அவசியமான காரியங்களில்ச் சந்திக்காமலிருக்கவும் கூடாது.

சந்திக்கும் வேளைகளில் எவ்வளவோ மரியாதை செய்து உற்சாகப்படுத்துவான் வேற்று நாட்டரசன். தோழமையோடும் உறவுமுறையோடும் நெருங்கிப் பழகுவான் அவ்வரசன்.

அரசனுடைய உபசரிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் மயங்கி விடக்கூடாது.

குளிர் தாங்க மாட்டாமல் தீக்காய்பவர்கள் நெருப்பை ஒட்டியும் ஒட்டாதும் இருக்கிறார்களே! அதுபோல வேற்றரச னோடு ஒட்டியும் ஒட்டாதும் இருந்து பணி புரியவேண்டும்.

"அகலாது அணுகாது
தீக்காய்வார் போல்க;
இகல் வேந்தர்ச் சேர்ந்தொழு
குவார்". 287

(தீ காய்வார் போல்க - குளிர் காய்பவர் போல் ஒட்டியும் ஒட்டா மலும் பழகவேண்டும். இகல்வேந்தர் - வேற்று நாட்டு அரசர்)

5

தூதர்களின் நுண்ணறிவிற்கு உவமையே சொல்ல முடியாது. சொல்லில் உள்ள பொருளை மாடு என்னும் வார்த்தை குறிக்கும் பொருளை எளிதில் தெரிவதுபோல், அரசனுடைய பார்வை, தோற்றம், நடவடிக்கை போக்கு ஒவ்வொன்றிலும் உள்ள கருத்தைத் தெரிந்து கொள்வார்கள் தூதர்கள். அவற்றின் நோக்கம் என்ன என்பதையும் தெரிந்து கொள்வார்கள் தூதர்கள்.

அரசியல் உலகத்தில் நடமாடும், இதயத்தையும் - இதயப் பாங்கையும் தங்களுடையக் கண்களைக் கொண்டல்லவா அளந்து விடுகிறார்கள் தூதுவர்கள்.

அளக்கும் கோல்
கண் அல்ல(து) இல்லை
பிற".

மரத்தையோ துணியையோ முழம் போட்டு அளந்துவிடலாம். இதயத்தையும், உணர்ச்சியையும் அவ்வாறு அளக்க முடியாது. இதயத்தை இதயத்தைக் கொண்டுதான் அளக்க முடியும்.

ஆனால்,தூதர்கள் கண்ணை வைத்தே - பார்க்கும் பார்வையை வைத்தே இதயப்பாங்கு முழுவதையும் அளந்து விடுகிறார்கள். அவர்கள் நுட்பமானவர்கள் தாம்.

"நுண்ணியம் என்பார்
அளக்கும்கோல் காணுங்கால்
கண்அல்ல(து) இல்லை
பிற". 288

(நுண்ணியம் - நுண்ணறிவினர் என்று சொல்லத்தக்கவர். காணுங் கால் - ஆராய்ந்து பார்க்கிற பொழுது.)

# எமனை வரவழைக்க வேண்டாம்

1

முனிவர் ஒருவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தார். அரசன் ஒருவன் - பரிட்சித் மகாராஜன் வேட்டையாட அந்தக் காட்டுக்குள் வந்தான். காட்டில் வழி பிசகிவிட்டது.

முனிவரிடம் வழி எப்படி என்று கேட்டான். முனிவர் பதில் சொல்லவில்லை. அரசன் கேட்டது அவர் காதில் விழவில்லை. மனதை யோக நிலையில் வைத்துத் தவம் செய்து கொண்டிருக்கிறார் முனிவர்.

"கேட்டகேள்விக்குப் பதில் சொல்லவில்லையே இவர்! என்ன திமிர் இவருக்கு" என்று அரசனுக்குக் கோபம் வந்தது. பக்கத்தில் ஒரு பாம்பு செத்துக் கிடந்தது. அதை வில்லால் கோதி எடுத்தான். அப்படியே முனிவரின் கழுத்தில் மாலைபோடுவது போல் போட்டு விட்டான்.

முனிவரின் தவநிலையைக் கலைத்துவிட்டது அரசன் செயல். விழித்துப் பார்த்தார். மனம் கொதித்துவிட்டது. "இன்றைக்குப் பத்தாம் நாள் பாம்பின் விஷத்தாலேயே நீ மடிவாய்" என்று சபித்துவிட்டார்.

கலங்கிவிட்டான் அரசன். காலில் விழுந்து கதறினான். கெஞ்சினான். மன்னிக்க வேண்டினான். ஒன்றும் நடக்கவில்லை.

தலைநகர் வந்தான். தன்னுடைய படைபட்டாளம் எல்லாவற்றையும் திரட்டி, காவல் காக்கும்படி செய்தான். பாம்பு நுழையாதபடி லட்சக்கணக்கில் வீரர்கள் காத்து நின்றனர்.

சர்ப்பம் வந்து தீண்டமுடியாது என்கிற நினைப்பு ஒரு பக்கம். 'முனிவர் சாபம் ஆயிற்றே' என்கிற பயம் ஒருபக்கம். இப்படி மனம் குழம்பியது. மனக்குழப்பம் தெளிய அரசனே தியானம் பண்ண ஆரம்பித்துவிட்டான்.

பத்தாவது நாளில் சர்ப்பமே ஒரு முனிவர் வேஷம் போட்டது. விஷத்தையே எலுமிச்சம் பழம் ஆக்கிக் கையில் வைத்திக்கொண்டு வந்தது. தியானத்தில் இருக்கும் அரசனை ஆசீர்வதிக்க வந்திருப்பதாகக் காவல் காப்பவரிடம் முனிவர் சொன்னார். வழி விட்டார்கள்.

அரசனிடம் வந்து எலுமிச்சம் பழத்தைக் கொடுத்தார் முனிவர். ஆவலோடு வாங்கி முகர்ந்து பார்த்தான் அரசன். விஷம் அரசனுடைய உயிரை வாங்கிவிட்டது.

முனிவர் அப்படியே மறைந்து போனார். கதை புராணக் கதைதான். மகாபாரதத்தில் இருக்கிறது கதை. பெரிய உண்மை ஒன்றை நோக்கி எழுந்த கதை இது.

பெரியவர்கள் மனம் கொதிக்க நடந்தால் எவ்வளவு வலிமை உடையவனும் அழிந்து போவான் என்னும் உண்மையை உணர்த்த எழுந்த கதை அது.

உலகநன்மைக்காக - உலகில் உள்ள அக்கிரமங்களை ஒழித்துக் கட்டுவதற்காக (அடல் வேண்டி) சுகவாழ்க்கையை விட்டுவிட்டு தவம் செய்கிறார்கள் (ஆற்றுபவர்) உத்தமர்கள். அந்த உத்தமர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும். பக்தியோடு அவர்களை மதிக்கவேண்டும்.

உத்தமர்களிடமே ஒருவன் போக்கிரித்தனம் பண்ணுகிறான் என்றால், அவன் கொடிய அயோக்கியன்தானே! அவன் அழிவது உறுதி.

"ஒருவன் கெட்டு ஒழியவேண்டும் என்றால், சான்றோர்களிடம் தவறுதலாக அவன் நடந்து கொண்டால் போதும்." என்கிறார் குறளாசிரியர்.

"கெடல்வேண்டின் கேளாது
செய்க; — அடல்வேண்டி
ஆற்று பவர்கண்
இழுக்கு." 289

(கேளாதுசெய்க - தான்தோன்றித்தனமாய் செயல்படுக. இழுக்கு - தவறு. அடல்வேண்டி - உலகில் முளைத்த விஷவேரை வெட்டி

எறியவே. ஆற்றுபவர் - தவம் செய்கிற முனிவர். அவர்களிடம் முறைகேடாக நடப்பவன் அழிவது உறுதி)

2

உலக நன்மைக்காகவே தங்களை இழந்து, தங்கள் வாழ்க்கையை இழந்து இறைவனை வேண்டிச் சதா தவம் இருக்கிறார்கள் ஞானிகள். அவர்களுக்கு 'ஆற்றுவார்' என்று பெயர்.

தங்கள் தங்கள் காரியங்களைக் கவனமாகச் செய்கிறவர்களுக்கு ஆற்றாதார் என்று பெயர்.

ஆற்றுவார்களுக்கு ஆற்றாதார் மரியாதை செய்யவேண்டும். பக்தி செலுத்தவேண்டும். மனப்பூர்வமாய் அவர்களை இவர்கள் மதிக்கவேண்டும்.

சான்றோர்களையும் பெரியோர்களையும் மதிக்காமல் தடித்தனமான நடந்துகொள்வதும், கிண்டல் பண்ணுவதும், ஏளனம் செய்வதும் (இன்னாச்செயல்) மடத்தனம். அது நாசமாக்கிவிடும். குடும்பத்தையே நாசமாக்கிவிடும். எமனை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிற காரியம் அது என்று சொல்கிறார் குறளாசிரியர்.

"கூற்றத்தைக் கையால்
விளித்தற்றால்; — ஆற்றுவார்க்(கு)
ஆற்றாதார் இன்னாச்
செயல்." 290

(கூற்றம் - எமன். அதாவது நாசம். கையால் விளித்தற்று - கையால் கைக்கிளை செய்து அழைக்கிற காரியமே. கைகூப்பி வணங்கி அழைக்கிற காரியமும் ஆகும். இன்னாச் செயல் - தவறு செய்தல்

குறிப்பு-கவிஞருடைய அனுபவம், பக்திப் பரவசத்தோடு வார்த்தைகளில் தாளத்தில் நின்று ஒலிக்கிறதைப் பாடல்களைப் பாடினால் தெரியவரும்.

அற்புதமான பாடல்கள், அற்புதரஸம், பயங்கரபாவத்தோடு தன் ஆற்றலை உணர்த்துகிறது. தமிழ் அப்படி உணர்த்த வைக்கிறது.

# அரைகுறை என்பது கூடாது

1

காய்ந்த விறகை எரித்துச் சமையல் செய்வார்கள் பெண்கள். விறகு முழுவதும் எரிந்தபின் கங்கு, தகதக என்று ஜொலிக்கும். கட்டி கட்டியாய் ஜொலித்துக் கொண்டு அடுப்பில் கிடக்கும் கங்கு. வெண்மையான சாம்பல் பூத்து, கங்கின்மேல் படர்ந்து மூடிக் கிடக்கும்.

சாம்பல்தானே என்று நினைத்து அதன்மேல் கையை வைத்தால் - சாம்பலை அள்ளிக் குப்பையில் போடுவோம் என்று எடுக்க முயன்றால் கையைச் சுட்டுவிடும்.

சில சமயம் அடுப்பில்க் கிடக்கும் கங்கை சாம்பலோடு எடுத்து வந்து வெளியில்க் கொட்டி விடுவார்கள். அதில் மிதித்து விட்டால் கால் வெந்து புண்ணாகிவிடும்.

எரிந்து மிஞ்சிய அனலுக்கு - விறகின் மிச்சமாகிய கங்குக்கு தீ எச்சம் என்று பெயர்.

எடுத்த காரியத்தை முடிக்காமல் அரைகுறையாகப் போட்டு விடுகிறோம் என்றால், அது மனதைச் சுட்டுக் கொண்டே இருக்கும். நமக்கும் இன்னொருவனுக்கும் மனம் மாறுபடுகிறது. முரண் உண்டாகிறது. அதை ஒரு வழியாக முடித்துவிட வேண்டும். கிடக்கட்டும் என்று போட்டுவிட்டால் அதுவும் சுட்டுக் கொண்டே இருக்கும்.

''வினைபகை என்றிரண்டின்
எச்சம்; — தெரியுங்கால்
தீஎச்சம் போலத்
தெறும்.''

(வினைபகை...எச்சம் - கடமையை முடிக்காத பாக்கி, பகையை முடிக்காத பாக்கி, தெறும் - சுடும்.)

திருமணம் என்பது முக்கியமான காரியம். மங்களகாரியம். தாலிகட்டி முடிகிறவரை மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் பரபரப்போடு இருப்பார்கள். காரியங்கள் எல்லாம் ஒழுங்காய்த்தான் நடந்தன. தாலி கட்டுவதற்குமுன் எப்படியோ ஒரு பிரச்சனையில் பேதம் உண்டாகி விட்டது. விஷயம் சூடு பிடித்து விட்டது. கல்யாணமே நடக்காமல் அரைகுறையாய்ப் போய்விட்டது. இது ஆயுள் முழுவதும் மனதைச் சுடத்தானே செய்யும்.

வேட்டையாடக் காட்டுக்குப் போனான் ஒரு வீரன். காட்டைக் கலைத்து புலியை உசுப்பி விட்டார்கள் துணைக்கு வந்தவர்கள். வீரனை நோக்கி ஆவேசமாக வந்தது புலி. துப்பாக்கியை வெடித்துப் புலியைச் சுட்டான் வீரன். பொருத்தில் வசமாக அடி விழுந்திருந்தால் புலி சுருண்டு விழுந்திருக்கும். அப்படி விழவில்லை. சூட்டை ஏற்று புதருக்குள் ஓடி விட்டது புலி.

அரைகுறையாய் முடிந்த அந்தக் காரியமும் ஆபத்துத்தான். விதியானது சுற்றிச் சுற்றி வந்து மனிதனை விழத்தட்டுவது போல, புலியும் சுற்றிச் சுற்றி வந்தது. வேட்டைக்காரனை மண்ணோடு மண்ணாய் உருட்டிவிட்டது.

பகையை விட்டு வைக்கக்கூடாது. செய்யவேண்டிய கடமையையும் விட்டு வைக்கக்கூடாது. பாதியில் விட்டுவிடுவது மோசமாகிவிடும். பிரயாணம் செய்கிறவன் வாகனக் கோளாறு காரணமாக நடுக்காட்டில் சிக்க நேரிட்டால் எப்படி இருக்கும்? அப்படி ஆகிவிடும், ''அதில்க் கொஞ்சம், இதில் கொஞ்சம்'' என்று ஒன்றையும் பூர்த்தி பண்ணாமல் விட்டு வைப்பது.

## 2

மனிதன் செய்ய வேண்டிய காரியம் ஒன்றல்ல இரண்டல்ல. பல, பலப்பல என்றாலும் குற்றம் இல்லை. அவ்வளவையும் செய்து முடிப்பதுதான் கடமையை நிறைவேற்றுவது ஆகும்.

இவ்வளவையும் நிறைவேற்ற முடியுமா என்று மலையக் கூடாது. நல்ல காரியம் ஒன்று செய்தால் போதும். அதை ஒட்டிப் பல காரியங்கள் நல்லதாய் வந்துவிடும். கோவில் காரியம் ஒன்று போதும். பசுமடம் வைத்துப் பசுவை வளர்க்கலாம். நந்தவனம்

வைத்துச் செடி கொடிகளை வளர்க்கலாம். சங்கீதம், நடனம், பாடல் எல்லாவற்றையும் வளர்க்கலாம். அன்னதானம் செய்ய லாம். அன்பை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருக்கலாம். அருள் வளரும். பக்தி வளரும். ஆனந்தம் பெருகும். எல்லாம் சேர்ந்து வந்துவிடும்.

யானை பிடிக்கிறவர்கள், ஒரு யானையை வைத்துக்கொண்டே பல யானையைப் பிடித்து விடுவார்கள். உண்மை என்று ஒன்று இருந்தால் போதும். ஒரு செயலை உண்மையோடு செய்தாலே போதும், அதை ஒட்டி எத்தனையோ செயல்களைச் செய்து முடித்துவிடலாம்.

''வினையால் வினைஆக்கிக்
கோடல்; — நனைகவுள்
யானையால் யானையாத்
தற்று.'' 292

கோடல் - கொள்ளல். நனைகவுள் - வேர்த்துக் கசிவதால் ஈரத்தில் நனைந்திருக்கும் கன்னம். (கவுள் - கன்னம்) யாத்தற்று - பிடித்துக் காட்டியது போன்றது. (யாத்தல் - காட்டுதல்.)

குறிப்பு :- யானை பிடிக்கிறவர்கள் தம்மிடம் உள்ள யானைக் கன்றை காட்டுக்குள் கொண்டுபோய் நிறுத்திவிடுவார் கள். அதன்முன் இலை தழை பச்சரி, தேங்காய் இவற்றை நிறைய வைத்து விடுவார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும். யானை, காட்டில் நடமாடும் யானைகளில் ஒன்றிரண்டு இந்த யானையை நோக்கிவரும். வரும்வழியில் பெரிய பள்ளம் தோண்டி அதை இலைதழையால் மூடி வைத்திருக்கும். அதில் விழுந்து சிக்கிக் கொள்ளும் பார்க்க வரும் யானை. இதற்கு யானை பிடித்தல் என்று பெயர்.

நம்மைக் காட்டுக்குள் கொண்டுபோய் யானை வந்து சிக்கு கிறதைப் பார்க்கும்படி காட்டி விடுகிறது தமிழ்.

# பேச்சுக் கலை

1

மனிதர்கள் பலர். அவர்களிடம் உள்ள மனங்களும் பல. யோசனைகளும் பல.

மக்களில்ப் பெரும்பாலானவர்களின் கருத்தை ஒன்றாக உரு வாக்குவது எளிதான செயல் அல்ல. லஞ்சம் கொடுத்தோ, சலாம் போட்டோ, பெரும்பாலானவர்களின் கருத்தை, தம் கருத்துக்கு இசையக் கொண்டுவர முடியாது. பயமுறுத்தியும் கொண்டுவர முடியாது.

பேச்சுவன்மையின் மூலம் பெரும்பாலானவர்களின் கருத்து தன் கருத்தை ஒட்டிவரும்படி சிலர் செய்து விடுகிறார்கள். அரசியல்வாதிகள் பேச்சு வன்மையையே ஒரு ஆயுதமாக வைத் திருக்கிறார்கள் மதவாதிகளும் சாதுர்யமான பேச்சையே ஆயுத மாக வைத்திருக்கிறார்கள்.

திருவள்ளுவர் காலத்திலும் பேச்சு வன்மை பல காரியங் களைச் சாதித்திருக்கிறது. அரசாங்க பொக்கிஷத்தாலும், ராணுவத்தாலும், செய்யமுடியாத அற்புதங்களைத் தெளிவாக வும், நயமாகவும் பேசுகிறவர்களின் பேச்சு சாதித்திருக்கிறது.

* * * *

இன்றைக்கு நமக்கு உகப்பாக இருக்கிற ஒரு காரியம், அன்றைக்கும் உகப்பான காரியமாகவே இருந்தது என்பதைத் தெரிகிறபொழுது மனதுக்கு இன்பம் உண்டாகிறது.

ஒரு உண்மையானது காலத்தோடு சுற்றி உருண்டு புரள்கிற பொழுது அதற்கு உரம் ஏறுகிறது. ஒளி ஏறுகிறது. பெருமையும் ஏறுகிறது.

பேச்சுக்கலையானது திருவள்ளுவர் காலத்தில் இருந்தே - அதற்கும் எவ்வளவோ. காலத்திற்கும் முன்பிருந்தே அதிகாரம் செலுத்தி வந்திருக்கிறது. இன்றும் அது செலுத்துகிற அதிகாரத் திற்குக் குறைவில்லை என்பதைத் தெரிகிறபொழுது நமக்கு வியப்பு மேலோங்கவே செய்கிறது.

பேச்சுக்கலையை "நாநலம்" என்கிறார் குறளாசிரியர். நாநலத்திற்கு இணையானது என்று ஒன்றும் இல்லை. உலகில் எங்குமே இல்லை என்கிறார் குறளாசிரியர். நமக்கு அது உண்மை என்றுதான் படுகிறது.

நாநலம் என்னும்
நலன்உடைமை — மாநிலத்து
யாநலத்(து) உள்ளதூஉம்
அன்று." 293

(நா - நாக்கு, நலம் - சொல். பேச்சுக்கலை. நலன் உடைமை - பாக்கியம். மாநிலத்து - உலகில். யாநலத்து உள்ளதூஉம் அன்று. உணர்ச்சிமயமான பேச்சில் விளையும் இன்பம். வேறு ஒன்றிலும் விளைவதில்லை.)

2

வாழ்க்கையில் எளிதில்க் காணமுடியாத ஒரு இன்பத்தை - மனதை வேறு ஒன்றோடு சேர்த்து வைக்கும் விந்தையை ஒருவ னுடைய ஆற்றல்மிக்க சொல் மூலம் கண்டுகொள்கிறான் மனிதன்.

அதனால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஆற்றல்மிக்க சொல்லைப் பின்தொடர்ந்து போய் விடுகிறான் மனிதன். இது எளிதான காரியம் இல்லையே.

இதை உத்தேசித்தே பேச்சுக் கலையில் விளையும் இன்பத் திற்கு நேரான இன்பம் உலகில் எங்கும் இல்லை என்று சொல் கிறார் குறளாசிரியர்.

2

உண்மைக்கு உருவம் கொடுக்கிறது சொல். அனுபவத்தின் நிறங்களை அது ஒளியாக வீசிக்கொண்டே இருக்கிறது. உண்மையை அனுபவித்து அனுபவித்து அதை உணர்ச்சிமயமாய் எடுத்துச் சொல்கிறவர்கள் உண்டு. அவர்களுடைய பேச்சு கேட்கக் கேட்க ஆனந்தமாக இருக்கும். விஷயம், உணர்ச்சி, கருத்து எல்லாம் பேச்சில் சுழித்து ஓடும். நிமிர்ந்து நிற்கும்.

இதயத்தோடு இதயம் வைத்துப் பேசுவது போல் அது நம்முடன். பேசும். பல நூல்களையும் பலகாலும் பயின்று தெளிந்த அறிஞர் (கேட்டார்) களுக்கு அவர்களுடைய பேச்சு ஆனந்தமாக இருக்கும். அப்படிக் கற்று விஷயங்களை நுணுகி ஆராயாத சாதாரண மக்களு(கேளார்)க்கும் அவர்கள் பேசுவது இன்பமாகவே இருக்கும்.

இன்னும் கேட்கவேண்டும், இன்னும் கேட்க வேண்டும் என்னும் ஆவலை உண்டாக்கும் பேச்சுக்கலை வல்லாரின் சொல்.

"கேட்டார்ப் பிணிக்கும்
தகையவாய்க் — கேளாரும்
வேட்ப மொழிவதாம்
சொல்." 294

(கேட்டார் பிணிக்கும் தகையவாய் - கற்ற அறிஞர்களை விஷயத்தோடு விஷயமாகச் சேர்த்து வைக்கும் ஆற்றலுடையதாய். கேளாரும் வேட்ப - நூல்களைப் படித்து ஆராயாதவர்களும் கேட்டுக்கேட்டு இன்புறும்படியாய்.

மொழிவதுஆம்சொல் - பேசுகிற பேச்சுத்தான் உண்மையான பேச்சு. உணர்ச்சியை அங்குதான் பார்க்கமுடியும்.

3

பேச்சு என்றால் உண்மையாக இருக்கவேண்டும். உண்மைமயமாகவே இருக்கவேண்டும். உண்மையானது அனுபவத்தோடும் ஆனந்தத்தோடும் சேர்ந்து உணர்ச்சிமயமாய் உதித்து வருகிறதுதான் பேச்சு.

அந்தப் பேச்சு இங்கு ஒருமாதிரி, அங்கு ஒரு மாதிரி என்று வேறுபடாது. இன்றைக்கு ஒருமாதிரி, நாளைக்கு ஒருமாதிரி என்று மாறுபடவும் செய்யாது.

அப்படி அழியாத் தன்மையோடு நிலைத்து நிற்கும் பேச்சு. பேச்சில் உள்ள சொல் ஒவ்வொன்றும் அப்படி நிலைத்து நிற்பவையே.

"சொல்லுக சொல்லைப்
பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுதல் இன்மை
அறிந்து." 295

இப்படிச் சொல்லியதற்குப் பதில் அப்படிச் சொல்லி இருக்கலாம் என்னும் மயக்கம் பேச்சில் வரக்கூடாது. சொல் என்பது மனிதனின் அடையாளம். எண்ணங்களின் உருவம். செயல் களின் மூல தத்துவம்.

மனிதனிடம் உண்டான காரியங்களில் எல்லாம் ஈடும் இணை யும் இல்லாதது சொல்தான். வார்த்தைதான் மனித இனத்தைச் சிதறி ஓடிவிடாதபடி சேர்த்து வைத்திருக்கிறது. சொல் இல்லாமல் போயிருந்தால் கலை இல்லை. பண்பாடு இல்லை. வாழ்க்கை இல்லை. காலம், இடம் ஆகியவற்றைத் தகர்த்தெறிந்து மனிதர் களை ஒன்றுபடுத்துகிறது சொல்.

அதனால் சொல்லை தெய்வ அருள் (நாமகள் செயல்) என்று போற்றுகிறோம்.

உண்மையைப் பக்தியோடு பார்த்து அனுபவிக்கிறவர்கள் வார்த்தைகளையும் அப்படியே பார்த்து அனுபவிப்பார்கள். அப்படி உண்மையோடு தோய்ந்து அனுபவிக்கிறவர்கள் சொல்லும் சொல் லில் மாற்றம் ஏற்பட ஞாயம் இல்லை.

இதை உத்தேசித்தே ''பிறிதோர் சொல், அச்சொல்லை வெல்லுதல் இன்மை அறிந்து, சொல்லுக'' என்கிறார் குறளாசிரியர்.

4

உண்மையை உணர்ச்சியோடு ஒருவன் எடுத்துச் சொல்கிறான் என்றால், அவன் பேச்சை நோக்கிக் கேட்பவர்களின் மனம் வந்து விடுகிறது. ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்கிற கணக்கில் மனம் வந்துவிடுகிறது.

வந்து அணிதிரண்டு ஒன்றாய் நிற்கிறது. கட்டளையை எதிர் பார்த்து நிற்கிறது. எதுவானாலும் அதை உடனுக்குடன் நிறை வேற்றியும் விடுகிறது.

சமூகம், சமுதாயம், நாடு எல்லாம் அவன் சொல்லை எதிர் பார்த்து நிற்கின்றன. உடனுக்குடன் செயல்படுகின்றன. உடல், பொருள், ஆவியைக்கூட சர்வபரித்தியாகம் பண்ணிவிடுகின்றன.

இதைவிட அதிசயம் வேறு என்ன இருக்க முடியும். அற்புத மான இந்தக் காட்சியைத் தெய்வாம்சம் பொருந்திய இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துப் பார்த்து அதிசயப்படுகிறார் குறளாசிரியர்.

கவிஞரின் அதிசயம் எப்படிக் குறளாக அவதாரம் எடுத்து வருகிறது என்பதைப் பாடலில் பார்க்கலாம்.

''விரைந்து தொழில்கேட்கும்
ஞாலம்; - நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப்
பெறின்.'' 296

(விரைந்து - வேகமாக - ஆவேசமாகவே. ஞாலம் - உலகத்தார். தொழில்கேட்கும் - ''செய்யவேண்டியது என்ன? சொல்லுங்கள், சொல்லுங்கள்'' என்று கட்டளையை எதிர்நோக்கி நிற்பார்கள். யாருடைய கட்டளையை? நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின் - விஷயத்தைத் தெளிவுபடுத்தி ஒவ்வொரு அம்சமாகப் பிரித்து அவற்றை முறைப்படுத்தி, நயமாக எடுத்துச் சொல்கிறவர்கள் உண்டென்றால், அவர்கள் சொல்வதை நிறைவேற்ற மக்கள் காத்து நிற்பார்கள்.)

விஷயத்தைத் தெளிந்து பொருத்தமான அம்சங்களோடு ஒழுங்குபடுத்திச் சொல்கிறவர்கள் குறைவுதான். அதையும் நயமாக எடுத்துச் சொல்கிறவர் மிகமிகக் குறைவுதான். தேசம் முழுவதையும் தேடிப்பார்த்தாலும் ஒருவர் இருவர் என்கிற அளவில்த்தான் இருப்பார்கள். சில வேளை ஒருவரும் இல்லாமல்க் கூட நாடு இருக்கும். அநாதையாகவே இருக்கும். இதை உணர்ந்தே சொல்லுதல் வல்லார்ப் பெறின் என்கிறார். அவர்களைப் பெற்றிருப்பது நாட்டின் பெறுதற்கரிய பெரும் பேறுதான்.

5

தெளிவில்லாதவர்கள் - உணர்ச்சி இல்லாதவர்கள் வார்த்தையை மேலும் மேலும் கொண்டு வந்து கொட்டுவார்கள். தார் எண்ணெயை ஊற்றி குளிப்பாட்டினால் ஓவியம் அலங்கோலம் ஆகிவிடும். அதேபோல் வெற்றுரையைக் கொட்டி விஷயத்தையே கேவலப்படுத்தி விடுவார்கள்.

வெற்றுரையில் ஒருமோகம் வந்துவிட்டால் - ஒருவெறி உண்டாகிவிட்டால், அப்புறம் அவனை விஷயத்தின் பக்கம் இழுத்துக் கொண்டுவர முடியாது வார்த்தை.

ஐயோ,பாவம் என்று அவனைக் கைவிட்டுவிடவேண்டியதுதான்.

''பலசொல்லக் காமுறுவர்
மன்ற; மா (சு) அற்ற
சிலசொல்லல் தேற்றா
தவர்.'' 297

(காமம்உறுவர் (காமுறுவர்) வெறிகொள்வர். மன்ற - பரிதாபந் தான். மாசுஅற்ற - தெளிவாக. சில சொல்லல் தேற்றாதவர் - உண்மையை மட்டும் விஷயத்தை மட்டும் சொல்ல முடியாதவர் கள்)

6

பிச்சிப் பூவும் மல்லிகைப் பூவும் எவ்வளவு அழகாய் இருக் கின்றன. பார்க்கப் பார்க்கப் பரவசப்படுத்துகின்றன. வண்டைத் தன்பக்கம் சேர்த்து வைத்துக் கொள்கின்றன. பெண்களையும் அப்படியே தன்பக்கம் இழுத்து வைத்துக் கொள்கின்றன. பெண்கள் மலர்களை நோக்கிப் போவதால் ஆடவர்களும் அப்படியே மலர் களை நோக்கிப் போகிறார்கள்.

வாசனையோடு கூடிய மலர்கள் அவ்வளவும் இப்படியே செயல் படுகின்றன. உண்மையை உணர்ந்து அனுபவித்த கற்றவர்கள், தங்கள் அனுபவத்தை நயமாக எடுத்துச் சொல்வார்கள். அவர் களுடைய சொல் ஒவ்வொன்றும் நல்ல வாசனையோடு கூடிய பிச்சி மலர்கள்தான். மல்லிகை மலர்கள் தான்.

உண்மையோ அனுபவமோ இல்லாத வெறும் பண்டிதர்களின் வார்த்தைச் சிலம்பங்களையும் கேட்டிருக்கிறார் குறளாசிரியர்.

அது ஒரு தனியான வேகத்தில் வருகிறது.

''இணர்ஊழ்த்தும் நாறா
மலர்அனையர்; - தாம்கற்ற (து)
உணர விரித்துரையா
தார் 298

(இணர்ஊழ்த்தும் - அடுக்கடுக்கான இதழ்கள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தும். நாறா - மணம் இல்லாத. மலர்அனையர் - வெறும் பூவுக்குச் சமானமாவர். வெறும் காகிதப்பூ போன்றவர் தாம். யார்? தாம்கற்றது உணர விரித்து உரையாதார் - படித்த விஷயத்தைக் கூட, மற்றவர்கள் எண்ணும்படி, கண்டு அனுபவிக் கும்படி விளக்கம் கொடுத்துச் சொல்ல முடியாதவர்கள்.

பேச்சு - அதாவது சொல் உலகில் செலுத்துகிற ஆதிக்கம் எவ்வளவு என்பதை அளந்து காட்டுகிறது தமிழ். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே, வார்த்தை, அதன்வேகம், நயம், வார்த் தையில் விளையும் இன்பம் எல்லாவற்றையும் ஒருபாஷை பார்த் திருக்கிறது என்றால், பார்த்து அனுபவித்திருக்கிறது என்றால் அது ஒரு அற்புதந்தான்.

உலகில் எங்கும் காணமுடியாத இது போன்ற அற்புதங்களைத் தமிழில் காணலாம். தமிழ் ஒன்றிலேயே காணலாம்.

# தமிழகம் எங்கும் ஞானசபை

1

உண்மையைத் தெளியவைத்து உணர்ச்சிமயமாக வழங்குகிற பேச்சு, அது தமிழகத்தில் ஒரு கலையாக இருந்தது. பேச்சில் உள்ள நயம், வேகம், தெளிவு, ஊக்கம் எல்லாவற்றையும் மக்கள் நெடுகிலும் அனுபவித்து வந்தார்கள். ஓவியம், இசை, கவி இவற்றை அனுபவிப்பதுபோல பேச்சையும் மக்கள் அனுபவித்து வந்தார்கள். பேச்சானது ஒரு கலையாகவே ஆகிவிட்டது தமிழ்நாட்டில்.

பேச்சுக்கலை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே — திருவள்ளுவர் காலத்திலேயே செழிப்பாக இருந்தது என்று தெரிகிறோம். அதற்குமுன்பு, மூவாயிரம் நாலாயிரம் வருடங்களுக்கு முன்பே அது வளமாக இருந்தது என்றும் தெரிகிறோம்.

ஒரு பெரியார் வந்து ஒரு விஷயத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார் என்றால் அதைக் கேட்க ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் கூடிவிடுவார்கள். இளைஞர்களும், வயோதிகர்களும் போட்டி போட்டுக் கூடுவார்கள். பலநாள், 'பலவாரம், பல மாதம் கூடத் தொடர்ந்து கேட்டு அனுபவிப்பார்கள்.

திருவிழாக் கூட்டம் கூட ஒருவாரம் பத்துநாள்களுக்கு மேலே போகாது. ஆனால் பெரியவர்கள் பேச்சை மாதக்கணக்கில் கூடி அனுபவிப்பார்கள். ஒவ்வொருநாளும் திருவிழாவுக்குக் கூடுவது போலவே ஆத்திரத்தோடு கூடுவார்கள்.

பெரியவர் ஊர்போய் விடுகிறார். அத்தோடு முடிந்ததா காரியம்? இல்லை. போகிற இடம் எல்லாம் பெரியவர் சொல்லிய விஷயத்தையே சொல்லிச் சொல்லி இன்புறுவார்கள். வீடு, தெரு,

ஊர், பட்டி, தொட்டி எல்லாம் மக்கள் பேசுகிற பேச்சு, விசாரணை எல்லாம் பெரியவர் சொல்லிய பேச்சுப் பற்றியே இருக்கும். கருத்தைவிட அவர் சொல்லில் உள்ள நயம், வேகம், உத்தி இவை பற்றியே பேச்சு வளர்ந்து கொண்டிருக்கும்.

இப்படியாக உண்மையை உணர்ச்சியோடு அனுபவிக்கும் அறிஞர்கள் வீடுதோறும் இருந்தார்கள். தெருவுக்குத் தெரு இருந்தார்கள். ஒவ்வொரு ஊரிலும் இருந்தார்கள். அறிஞர்கள் (ரசிகர்கள்) பலர்சேர்ந்து மன்றம் என்றும், சங்கம் என்றும் கூடி உண்மையை அனுபவித்தார்கள். கலைகளில்த் தோய்ந்து உண்மையில்த் திளைத்து இன்புற்றார்கள்.

சங்கம் வைத்து, புலவர்கள் கூடி, பலஆயிரம் வருடங்கள் தமிழை ஆராய்ந்தார்கள் என்றால் பொருள் என்ன? ஆராய்ச்சி பண்ணுவதற்கு என்ன இருக்கிறது? அனுபவித்தார்கள் என்பது தான் அதற்குப் பொருள்.

கலைஞர்களையும் கலைகளையும் உபசரித்தார்கள். புலவர்களை மதித்துப் போற்றினார்கள். அறிஞர்களின் அனுபவங்களை நேருக்கு நேராகக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்தார்கள். அப்படி அடைந்த ஆனந்தத்தையும் அனுபவத்தையும் நாலாதிசைக்கும் போய் ஊர் ஊராகச் சென்று மக்களிடம் சொல்லி அனுபவிக்கச் செய்தார்கள். சங்கம் நிறுவித் தமிழாய்ந்த கதை இதுதான்.

திருவள்ளுவர் காலத்தில் அச்சிட்டு ஆயிரக்கணக்கில் புஸ்தகங்களை விநியோகம் செய்ய வழி இல்லை. புலவர்குழாம் என்னும் மன்றங்களும் சங்கங்களுமே முதலில் அங்கீகரிக்கும். பாராட்டும். நாடு முழுவதும் எடுத்துச் சென்று பாடல்களையும் அவற்றில் உள்ள நயங்களையும் மக்களுக்குப் பரிமாறும். மக்களுக்கு அது சொந்தமாகிவிடும்.

மன்றங்களும் சங்கங்களும் அறிவுக்கு அப்படிச் சேவை செய்தன. தமிழ்ச்சங்கம் மதுரையில் இருந்தது என்றால், மதுரையில் மட்டும் அல்ல, நாடு முழுவதும் மன்றங்களும் சங்கங்களும் இருந்தன. அதற்கு அடையாளச் சின்னந்தான் மதுரைச்சங்கம்.

முந்நூறு வருடங்களுக்குமுன் இருந்த திரிகூடராஜப்பக் கவிராயர் ''தமிழ் எலாம் வளர்க்கும் மன்றம்'' என்கிறார். மூவாயிரம் வருடங்களுக்குமுன் இருந்த முத்தொள்ளாயிர ஆசிரியரும் ''பதிபடுவ முத்தமிழ்'' என்கிறார். பட்டி தொட்டி எல்லாம்

மன்றங்கள் வைத்து கவியை, இசையோடும் நாடக நயத்தோடும் அனுபவித்தார்கள். உண்மையைக் கண்டு தெளிந்தார்கள் என்று ஆகிறது.

மேலே சொல்லிய புலவர் குழாத்தோடு சேர்ந்து உண்மையை-உணர்ச்சியைப் பரிமாறிக் கொள்வது ஆனந்தம். எங்கும் இல்லாத பேரானந்தம். உலகிற்கே தம் அனுபவத்தை எடுத்துக் கொடுக்கும் இன்ப சாதனம் அது.

இந்த மன்றங்களில்க் கூடி தாம் கற்ற அரிய உண்மைகளை ஒருவர் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதுதான் உண்மைக்கல்வி. கல்வியின் நோக்கமே அதுதான். அப்படி எடுத்துச் சொல்கிறவர்களைக் ''கற்றாருள் கற்றார்''என்று பாராட்டு கிறார் தெய்வப்புலவர்.

''கற்றாருள் கற்றார்
எனப்படுவார்; — கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு
வார்.'' 299

(கற்ற - தாம் கற்று உணர்ந்த அனுபவத்தை - உண்மையை, செல - கேட்பவர் உள்ளத்துள்ப்புக, சொல்லுவார் - நயமாக எடுத்துச் சொல்கிறவர், கற்றாருள் கற்றார் ஆவார்.)

2

எதிரிகள் மேல்ப் பாய்ந்து மூர்க்கத்தனமாகச் சண்டை போடுகிறவர்கள் ஒன்றுக்கும் பயப்படமாட்டார்கள். உயிரை விடுவதற்குக்கூடப் பயப்படமாட்டார்கள். அவர்களிடம் பயம் இருக்காது. சண்டையில் வெற்றிபெற வேண்டும் என்கிற வெறி ஒன்றுதான் லட்சியம்.

வீரர்களின் வீரச்செயலைவிட மேலான மாவீரச் செயல் ஒன்றிருக்கிறது. அது என்ன?

கல்வி, கேள்விகளில் வல்லபுலவர்கள் குழுமியிருக்கிற அவையில் தம்முடைய அனுபவத்தையும் ஆனந்தத்தையும் தெளிவாக ஒருவர் எடுத்து விளக்குவதுதான் அது.

அஞ்சாமல் தம் அனுபவத்தை எடுத்து விளக்கும் பேரறிஞர் கள் தொகை உலகில் குறைவுதான். (அரியர்) போர்களத்துள் புகுந்து சண்டையிட்டு உயிரைவிடும் போர்வீரர்கள் மந்தை மந்தை யாக இருக்கிறார்கள். உலகில் அவர்களுக்கு எப்பொழுதும் பஞ்சம் இல்லை. (எளியர் அவர்)

மனிதர்களை இப்படிப் பார்க்கிறார் குறளாசிரியர்.

''பகையகத்துச் சாவார்
எளியர்; — அரியர்,
அவையகத் (து) அஞ்சா
தவர்.'' 300

உணர்ச்சியோடு உண்மையானது பேச்சாக வெளிவருகிற தென்றால் அது தெய்வச் செயல்தான். அதைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் குறளாசிரியர்.

3

கல்லாத மூடன், அல்லது அரைகுறையாகப் படித்த பேதை, கற்றவர்களிடம் வந்து துணிச்சலோடு வாதிடுவான். அது துணிச்சலாகாது. அதற்கு மூடத்தனம் என்று பெயர்.

கற்றறிந்த மேதைகளிடம் இயல்பாகவே எளிமையும் பணிவும் நிறைந்திருக்கும். அவர்கள் தம்மையொத்த கல்விமான்களை அபாரமாக மதிப்பார்கள். அவர்களிடம் மிக்க மரியாதையோடு நடந்து கொள்ளுவார்கள். கல்விமான்களை மதிப்பதும், அவர்களுடைய அனுபவ உண்மைகளைப் போற்றுவதும் பயத்தால் அல்ல. ''யானையைக் கண்டால் குதிரை விலகும். எருமை விலகவா செய்யும்.''என்பது பெரியார் ஒருவரின் பொன்மொழி. கல்லாத மூடர்கள் கற்றார்களிடமிருந்து ஒதுங்கமாட்டார்கள். நேருக்கு நேராக வந்து மோதுவார்கள். கல்விமான்களோ தங்களுடைய கல்வியில் மட்டும் முனைப்புக் காட்டாமல், தம்போன்ற கல்விமான்களின் சொற்களை அடக்கத்தோடு கேட்பார்கள். அச்சொற்களில் ஏற்றுக் கொள்ளக்கூடியவற்றை ஏற்றுக் கொள்வார்கள். ஏற்றுக் கொள்ள முடியாதவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார்கள்.

இத்தகைய அறிஞர்களிடம் தம் அனுபவத்தைப் பரிமாறி கலந்து உறவாடுவதுதான் கல்விமான்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

கல்விமான்களிடம் புலமையை வெளிப்படுத்தாமல் மறைத்து ஒளித்து வைப்பதும், கல்விமான்களின் கூட்டத்தை எண்ணிப் பயப்படுவதும் அழகல்ல. பயந்து விலகிப் போவார்களானால் அவர்களுக்கும், புலமைக்கும் சம்பந்தம் இல்லை என்று போய்விடும்.

வீரமில்லாத பேடியிடம் பளபள என்று மின்னும் கூரிய வாள் இருப்பதனால் ஒரு பயனும் ஏற்படாது. தெளிவாக எடுத்து விளக்கும் தன்மை இல்லாதவர்களிடம் நூலறிவு எவ்வளவு இருந்தும் புண்ணியமில்லைதான்.

''வாளோடென் வன்கண்ணர்
அல்லார்க்கு; — நூலோடென்
நுண்அவை அஞ்சு
பவர்க்கு.'' 301

(வன் கண்ணர் அல்லார்க்கு - வீரம் இல்லாதவர்களுக்கு. வாளோடு என் - வாள் ஆயுதத்தோடு உறவு எதற்கு. நுண்அவை - எதையும் நுட்பமாக ஆராய்ந்து உண்மையைக் கண்டறியும் அறிஞர்குழாம். நூலோடுஎன் - பலநூல்களைப் படித்து மனனம் நண்ணுவதில் புண்ணியம் என்ன.)

4

எவ்வளவோ நூல்களைக் கற்று எவ்வளவோ தத்துவங்களை மேலோரிடம் கேட்டு விஷயம் நிரம்பியவர் ஒருவர். அவர் கல்வி கேள்விகளில் வல்ல புலவர் - (நல்லவர்) ஆனால் புலவர் குழாமில் கலந்து கொள்ளப் பயப்படுகிறார். அவர்களுடன் வந்துஉரையாடக் கூசுகிறார். அனுபவங்களைப் பகிர்ந்து ஆனந்தம் பெறுவதில் கலக்கம் அடைகிறார். அப்படியானால் அவரைக் கற்றறிந்த நல்லார் (மேதை) என்று சொல்ல முடியாது.

இனி, கற்றறிந்த ஒருவரிடம் கல்லாத மூடன் ஒருவன் துணிச்சலோடு வந்து வாதாடுவான். அது மூடத்தனம். அதை விடக் கேவலமான மூடத்தனமாகிவிடும், படித்தவன், படித்ததை எடுத்துச் சொல்லப் பயப்படுவது.

''கல்லா தவரில்க்
கடைஎன்ப; — கற்றறிந்து
நல்லார் அவைஅஞ்சு
வார்.'' 302

(கல்லாதவரில் கடை என்ப - மூடர்களைவிடக் கீழானவர்கள் என்று வெறுப்படைவார்கள். யாரை? கற்று அறிந்து - கற்க வேண்டியவற்றைக் கற்றும், அறிய வேண்டுவனவற்றை அறிந்தும். நல்லார் அவை அஞ்சுவார் - அறிஞர்களோடு வந்து அளவளாவ பயப்படுகிற பேர்வழிகளைத்தான்.)

5

மூடர்கள் தங்களுடைய அறியாமையை எப்படியும் வெளிப் படுத்தி விடுகிறார்கள். அவர்களால் அதை மறைக்க முடியாது. ஆனால், படித்தவர்கள், தாங்கள் படித்துத் தெரிந்தவற்றை அறிஞர்கள் முன்வைக்கப் பயப்படுகிறார்கள். பயந்து மறைத்து விடுகிறார்கள். இவர்கள் செயல் மூடர்கள் செயலைவிட மோச மான செயல். ஆகவே சபையில் வந்து சொல்ல முடியாதவர்கள் படித்தும் படியாதவர்களே.

''உளர்எனினும் இல்லாரோ (டு)
ஒப்பர்; — களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா
தார்.'' 303

(களன்அஞ்சி - அறிஞர்களின் கூட்டத்தைக் கண்டு பயந்து- கற்ற - கற்றறிந்த விஷயத்தை. செல - அவர்கள் அங்கீகரிக்கு மாறு. சொல்லாதார் - சொல்ல முடியாதவர்கள்.)

6

பண்பாடும் அறிவும் நிறைந்த புலவர் குழாத்தில் (நல்லவை யில்) தங்கள் ஆராய்ச்சியையும் அனுபவத்தையும் எடுத்து விளக்கி ஆனந்தம் அடைபவர்கள் அறிஞர்கள். அவர்கள் புல்லவையில் போய்ப் பேசமாட்டார்கள்.

''புல்லவையுள் பொச்சாந்தும்
சொல்லார் நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு
வார்.'' 304

(பொச்சாந்து - மறந்தும்)

7

உணர்ச்சியே இல்லாத கூட்டத்தில் போய் கற்றறிந்த மேதை கள் தம் அனுபவங்களை எடுத்துச் சொல்வது நல்லதாகாது. இது பைத்தியக்காரச் செயல். தேவாமிர்தத்தைச் சாக்கடையில் கொட்டுவது எவ்வளவு பைத்தியமோ அவ்வளவு பைத்தியம்.

''அங்கணத்துள் உக்க
அமிழ்தற்றால்; — தங்கணத்தார்
அல்லார்முன் கோட்டிக்
கொளல்.'' 305

(தம் கணத்தார் அல்லார்முன் - தம்மை ஒத்த அறிவும் பண் பாடுங் கொண்டவர்களே, தம் கணத்தார். அறிவோ, பண்பாடோ உணர்ச்சியோ, ஆனந்தமோ, இல்லாக் கூட்டத்தில்ப் போய். கோட்டிக் கொளல் - தம்கருத்தைக் கொட்டுவது. அங்கணத்துள், உக்க அமிழ்து அற்று - சாக்கடையில் கொட்டிய தேவாமிர்தத் திற்கு என்ன கதி நேருமோ, அதே கதிதான் இவர்களுடைய நல்லுரைக்கும் ஏற்படும்.)

''பன்றிகளுக்கு முன் முத்தைச் சிதறீர்கள்'' என்பது ஏசு நாதரின் உபதேசம். மூடர்களிடத்தில் உயர்ந்த கருத்துக்களைச் சொல்வதில் உள்ள தீமையைக் கண்டு அவ்வாறு பயந்திருக்கிறார் கள், உலகிலுள்ள ஞானிகள் ஒவ்வொருவரும்.

# சேர்ந்து வாழும் கலை

1

குரங்கைப் பார்த்தால் பட்டாளம் பட்டாளமாகச் சேர்ந்தே வருகிறது. பறவைகளும் கூட்டம் கூட்டமாகத்தான் பறந்து போகின்றன. வயல்களை நோக்கிச் சாய்கின்றன.

ஆடு, மாடு, யானைகூட மந்தை மந்தையாகச் சேர்ந்தே இருக்கின்றன. நடமாடுகின்றன.

ஆனாலும் மனிதனிடந்தான் அண்ணன், தம்பி என்கிறமுறை இருக்கிறது. அக்காள் தங்கை என்கிற பாசம் இருக்கிறது. புலவர் களையும், கலைஞர்களையும் மதிக்கிறது என்று இருக்கிறது. கோயில் இருக்கிறது, வழிபாடு இருக்கிறது. அரசியல்கூட இருக் கிறது. மனிதனைத்தவிர வேறு ஒரு பிராணி இடமும் இப்படி ஒரு உறவு இல்லை. நட்பு என்றோ, சுற்றம் என்றோ ஒன்றும் அவை களிடம் இல்லைதான்.

தன்னுடைய குடும்பம், தன்னுடைய குடும்பம் என்று மனிதன் தனித்தனியாகத்தான் இருக்கிறான். ஆனாலும் எப்பொழுதும் மனிதர்களோடு சேர்ந்தே வாழ்கிறான்.

ஏனைய பிராணிகள் கூடிக்கூடி ஒரு கூட்டமாகவே இருக் கின்றன. ஆனால் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித்தனி யாகவே வாழ்கின்றன.

மனிதனிடம் மட்டுமே நட்பு இருக்கிறது. சுற்றம் இருக்கிறது. இந்த நட்பும் சுற்றமும் ஒன்றாய்ச் சேர்ந்து புதிய அவதாரமே எடுத்துவிட்டது. ஆவல் என்னும் பெயரோடு மனித உள்ளத்தில் பலஆயிரம் ஆண்டுகளாய்க் கருவிலிருந்து எடுத்த அவதாரம் அது.

அது தன்னுடைய மனக்கண்ணால் எட்டாத தூரத்தையே தொட்டுப் பார்க்கும். காலத்தை ஊடுருவிப் போய் - பலதலை முறைகளைத் தாண்டிப்போய் அங்கும் இங்கும் அது சுற்றிப் பார்க்கும்.

எவ்வளவுதான் பழையதாய்ப் போனாலும் - பிரயோசனமே இல்லாவிட்டாலும் நட்பை அணைத்துக் கொள்ளும், உறவைத் தழுவித்தழுவி இதங்காணும். தாயின்மடி கன்றுக்கு எப்படி உகந்த தாக இருக்கிறதோ அப்படி உகந்ததாகப் போய்விடுகிறது மனித உணர்ச்சிக்குப் பூர்வஉறவு.

நான்கு தலைமுறைகளுக்குமுன் நம்பாட்டனாரின் பாட்டனா ரோடு பிறந்தவர். சிங்கப்பூர் போய்விட்டார். அங்குள்ள ஒரு பெண்ணையே திருமணம் செய்து கொண்டார். அவருடைய இன்றைய வாரிசுகளுக்கும் நமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

ஆனாலும் மனம் அதை நினைத்து ஓடுவதுண்டு. ஓடிஓடிக் கட்டி அணைப்பதும் உண்டு. அதில் ஆறுதல் கிடைக்கிறது மனதுக்கு.

''பற்றற்ற கண்ணும்,
பழைமைபா ராட்டுதல்;
சுற்றத்தார் கண்ணே
உள.'' 306

(சுற்றத்தார் கண்ணே - நண்பர்கள், உற்றார், உறவினர், பக்தர், பழகியவர் என்று பலரோடு சேர்ந்து வாழும் மனிதர் களிடம் மட்டுமே. பழைமை பாராட்டுதல் - பழைமை பழக்கத்தை நினைத்து மகிழ்தல். உள - இருக்கிறது.)

பத்து ஏக்கர் அளவுக்குச் சம சதுரமான ஒரு நிலம். நல்ல நிலந்தான். உழவில்லை, பண்படுத்தவில்லை. தரிசாகக் கிடக் கிறது. அந்த நிலம் பார்ப்பதற்கு அழகாக இருக்காது.

அந்த நிலத்தை உழுது பண்படுத்தி நெல்லையும், கரும்பையும் வாழையையும் பயிராக ஏற்றிவிட்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் நிலம். பார்த்துக் கொண்டே இருக்கலாம் நிலத்தை.

குளம் ஒன்று இருக்கிறது. நீரும் நிறையவே இருக்கிறது குளத்தில். ஆனாலும் அதை நீண்ட நேரம் பார்த்துக் கொண் டிருக்க முடியாது. சிறிது நேரத்தில் சலிப்புத் தட்டிவிடும்.

தாமரைப்பூ - வெண்தாமரை என்றும், செந்தாமரை என்றும் தாமரை மலர்கள் குளத்தில் இருந்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும்.

மரகதப்பட்டை விரித்ததைப் போல பச்சைப் பசேல் என்ற இலையை விரித்து, தாமரை மலர்கள் அமர்ந்தருளும் கோலத்தைப் பார்த்தாலே போதும். கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தாக இருக்கும்.

வாழ்க்கையும் அப்படித்தான். ஒருவனிடம் வயல், தோப்பு, பசு, எருமை, தங்கம், வெள்ளி, வண்டி, மாடு எல்லாம் இருக்கின்றன. ஆனால் அவன் வீட்டுப் பக்கம் யாரும் போவது கிடையாது. வரவிடமாட்டான் மனிதன்.

அவனிடம் சிக்கிய லட்சுமிதேவி தலைவிரிகோலமாகத் தானே அழுது புலம்பிக்கொண்டிருப்பாள். அழகு எப்படி அங்கே இருக்கும். புலவர்களுக்கு அங்கு என்ன வேலை. கலைஞர்களுக்கு அங்கு என்ன வேலை. நண்பர்களோ, சுற்றத்தாரோ அந்த இடத்தை எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

அவனையும் அவன் வீட்டையும் ஒதுக்கி வைத்தே பார்ப்பார்கள்.

வசதி உடையவன் நண்பர்களோடும், உறவினர்களோடும் சேர்ந்து உறவாட வேண்டும். கலைஞர்களோடும், புலவர்களோடும் சேர்ந்து உண்மையை அனுபவித்து ஆனந்தம் பெற வேண்டும். தண்ணீரை விட்டு எடுத்து வெளியே போட்டு விட்டால் மீன் வாழமுடியாது. அப்படியே நண்பர், அன்பர் முதலிய சுற்றம் இல்லாமல் மனிதன் வாழமுடியாது! அப்படி இருக்கவேண்டும் வாழ்க்கை.

பலர் சூழ வாழ்க்கையை உணர்ந்து அனுபவிக்கிறதனால் செல்வத்துக்கு ஆனந்தம் உண்டாகிறது. பிறவிப்பயனே கிடைத்து விடுகிறது செல்வத்துக்கு.

> ''சுற்றத்தார் சுற்றப்
> படஒழுகல்; — செல்வந்தான்
> பெற்றத்தால் பெற்ற
> பயன்'' 307

(ஒழுகல் - வாழ்தல், பெற்றதால் என்பது பெற்றத்தால் என வந்திருக்கிறது, உணர்ச்சியை அப்படித் தளத்தில் வைத்துத் தோய்த்துக் காட்டுகிறது தமிழ்.)

குறிப்பு:- உண்மையை அப்படியே கையில் எடுத்துக் கொடுக்கிறது தமிழ். உணர்ச்சியிலிருந்து பொங்குகிற வேகத்தை, புதிய புதிய வர்ணங்களில் பிரகாசிக்கச் செய்கிறது தமிழ். வார்த்தையே மடக்கி வைக்கிறதும், அழுத்தி வைக்கிறதும் அற்புதம்.

3

ஆனந்தமாய் வாழ்வது எப்படி, சேர்ந்து ஒன்றுபட்டு வாழ்வது எப்படி என்பதை சர்வகலா சாலையில் போய்ப் படித்தால் உருப்படுமா? காக்கையைப் பார்த்தாலே போதும். தினந்தோறும் பார்க்கத்தானே செய்கிறோம் காக்கையை!

அன்னத்தை ஒருபிடி உருட்டி, காக்கைக்கு என்று வைப்பார்கள் பெண்டுகள். உடனே என்ன செய்கிறது காக்கை.

"காக்கை கரவா
கரைந்துண்ணும்; — ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே
உள." 308

(கரவா(து) - மறைக்காமல், ஒளிக்காமல். கரைந்து உண்ணும் - தன் இனத்தையே கரைந்து கூவி அழைத்துச் சேர்ந்து சாப்பிடும். ஆக்கம் - செல்வம். அன்னநீரார்க்கே உள - அவ்வாறு சேர்ந்து அனுபவிக்கும் குணம் உள்ளவனிடமே ஆனந்தமாக நிலைத்து நிற்கும்.)

4

ஒருவனிடம் செல்வம் ஏராளமாக வந்து சேர்ந்துவிட்டது. பூலோக குபேரன்தான் என்று அவனைச் சொல்லவேண்டும். எல்லா வகையான செல்வமும் அவனிடம் வந்து குவிந்துவிட்டது. மாந்தோப்பை எடுத்துக் கொண்டால் 'அவன்தான் அதில் அரசன், என்று சொல்லும்படி இருக்கிறது. நெல்லை எடுத்தாலும், பாலை எடுத்தாலும், தேங்காயை எடுத்தாலும், வீடு, தங்கம், வெள்ளி எதை எடுத்தாலும் ஒவ்வொன்றுக்கும் அரசனாக விளங்குகிறான் இவன். இப்படியாகச் செல்வம் குவிந்த வேந்தன் ஒரு வள்ளலாக வாழவேண்டும்.

வள்ளலை நோக்கி எத்தனையோ பேர் நிற்பார்கள். ஏழை எளியவர்கள், பணியாளர்கள், பழகியவர்கள், பாட்டன்வழி பூட்டன் வழி என்று இனமுறை கொண்டாடுகிறவர்கள். பொதுக் காரியங்களை ஏற்று நடத்துகிறவர்கள். கலைஞர்கள், புலவர்கள் எல்லோரும் வள்ளலின் தயவை எதிர்பார்த்து இருப்பார்கள்.

வள்ளலின் செல்வம் எல்லோருக்கும் பயன்படவேண்டும். ஒருவனை ஆதரிக்கிறது, ஒருவனை ஏமாற்றுகிறது என்று போய் விடக்கூடாது.

உதவுகிறதில்தான் இந்த நியதி. போற்றுவது, புகழ்வது, பாராட்டுவது, உள்ளம் உருகி உருகி ஆறுதல் பெறுவது என்பது ஒன்றிரண்டு பேரிடந்தான் இருக்கவேண்டும்.

வரிசை அறிந்து பரிசில் தந்து புலவர்களை வள்ளல்கள் பாராட்டுவது ஒரு சரித்திர நிகழ்ச்சிதான். அதை நெடுகிலும் பார்த்து அனுபவித்து வந்திருக்கிறது தமிழகம்,

உலகில் வேறு எங்கும் காணமுடியாத ஒரு ஆனந்தத் திருவிழா வாகவே இதை மதித்து வந்திருக்கிறது தமிழகம்.

அதை அனுபவித்து இன்புற்றிருக்கிறார்கள் மக்கள்.

''பொதுநோக்கான் வேந்தன்
வரிசையான் நோக்கின்;
அதுநோக்கி வாழ்வார்
பலர்.'' 309

(பொதுநோக்கான் - யாசகம் பெறுகிற கூட்டத்தில். தயவை எதிர் பார்த்து வாழ்கிற கூட்டத்தில் வைத்துப் பார்க்காமல், வரிசை யான்நோக்கின் - கவிஞர்கள் அருட்பாடல்களையும், அவற்றின் ஆனந்த நிலைகளையும் அநுபவித்துப் பார்க்க வேண்டும். அந்த அனுபவமும் ஈடுபாடும் செல்வத்துக்கு ஒருபுதிய அவதாரத்தையே கொடுத்துவிடும். மேளதாள முழக்கத்தோடு திருவிழாக்கோல மாக இருக்கும் அந்த அவதாரம். (புலவர்களை உபசரிக்கும் முறை)

அது நோக்கி வாழ்வார் பலர் - ஆனந்தமயமான அந்த அற்புத நிகழ்ச்சியைப் பார்த்துப் பார்த்து புதுவாழ்வு பெறுவர் மக்களில்ப் பலர்.

குறிப்பு:- அற்புதமான பாடல். விஷயம் உணர்ச்சி பாவத் தோடு கணகணவென்று பேசுகிறது.

# வெறிபிடித்த பேய்கள்—கயவர்

1

கவிஞரை வள்ளல்கள் மதிக்கிறார்கள். உபசரிக்கிறார்கள். கவிஞரின் தெய்வ சிருஷ்டியை - கவியை அனுபவிக்கிறார்கள். ஆனந்தம் அடைகிறார்கள். போனபோன இடம் எல்லாம், பார்த்தவர்களிடம் எல்லாம் கவிஞரைப் பற்றியும் அவருடைய கவியைப் பற்றியுமே பேசுகிறார்கள்.

சடையப்ப வள்ளல் கம்பரையும் அவருடைய கவியையும் மதித்துஉபசரித்தார். அதேபோல் நூற்றுக்கணக்கான புலவர்களை ஆயிரக்கணக்கில் வள்ளல்கள் போட்டி போட்டு உபசரித்தார்கள்.

வள்ளல், கவிஞர் இவர்களுடைய உறவுமுறையை மக்கள் நெடுகிலும் அனுபவித்து வந்திருக்கிறார்கள். வாழ்க்கை இன்ப மாகவே அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

அயோக்கியர்களால் ஒன்றையும் அனுபவிக்க முடியாது. ஆனந்தம் அடையவும் முடியாது. என்ன செய்வார்கள். உடனே கவிஎழுத ஆரம்பித்து விடுவார்கள். புலவர்களின் தெய்வ சிருஷ்டி களில் உள்ள எழுத்தை எண்ணுவார்கள். அசையை எண்ணுவார் கள். சீரை எண்ணுவார்கள். அப்படியே இவர்களும் எழுத்தை யும் அசையையும் சீரையும் போடுவார்கள்.

தாமரைப்பூவோ, கரடி குட்டியோ, மலையோ, சூரியனோ, பெண்ணோ, ஆணோ, காதலோ, கத்தரிக்காயோ ஒன்றைப் பற்றி யும் யோசிக்கமாட்டார்கள், ஆனால் கவிஞர்கள் இவற்றின் எதைக் கையாண்டிருந்தாலும் அதைச் சொல்வார்கள். அனுபவித் தல்ல, திருடியே சொல்வார்கள்.

தங்களைத் தாங்களே கவி என்று சொல்வார்கள். விளம்பரம் பண்ணுவார்கள். விழா எடுப்பார்கள். "கம்பர் சொல்லியதைத் தானே நான் சொல்லி இருக்கிறேன்; அப்படியானால் ஏன் என்னைப் பாராட்டவில்லை என்று அதட்டுவார்கள். மறைவில் நின்று கெஞ்சுவார்கள். காலில் விழுவார்கள். கையைப் பிடிப்பார்கள்.

"பிறகு நான்தான் கவி, நான் ஒருவனே கவி என்பார்கள். வெண்பா என்பார்கள். விருத்தம் என்பார்கள், கண்ணி என்பார்கள், சிந்து என்பார்கள்.

இப்படி வெறிக்கு ஆளான ஒருவன்

"கடிலில் முத்தம் - கடையில் சத்தம்
கண்டேன் நித்தம் - கொண்டேன் முத்தம்
அவளைக் கொண்டேன் முத்தம்"

என்று பாடித் தொலைப்பான். புதுக்கவிதை என்பான். புலவர் களுக்கு இது விளங்காது என்பான். தாரை, தப்பட்டை, கொட்டு எல்லாவற்றிற்கும் ஆள் வைத்திருப்பான்.

கவிஞர் மன்றம் என்பான். அகில உலகக் கவிஞர் கூட்டம் என்றே ஆரம்பித்துவிடுவான். அமெரிக்கா என்ன, ஜப்பான் என்ன ரஷ்யா என்ன, ஆப்பிரிக்கா என்ன, எல்லா இடங்களுக்கும் வசூலித்த பணத்திலேயே சுற்றிவருவான். கவிஞர், பெருங்கவிஞர், ஆசியக் கவிஞர், உலகக் கவிஞர் என்றெல்லாம் விருது சூடியே சுற்றிவருவான்.

அயோக்கியர்களில் எத்தனையோ விதம் உண்டு. இது ஒரு விதம். இன்னொரு விதம் விமர்சனத்தில் இறங்கிவிடும். "கம்பர் இந்த இடத்தில் ராவணனை ஆண்மகன் என்று சொல்லக் கூடாது. 'நல்லாண் மகன்' என்றே சொல்லி இருக்க வேண்டும்" என்று ஆராய்ச்சியில் இறங்குவான். இன்னொருவன் "அப்படிச் சொன்னது தான் சரி, நல்லாண் மகன் என்று ராவணன் போன்றவர்களைக் கார்க்கி சொல்ல மாட்டார். ரூலோ சொல்ல மாட்டார். மில்ட்டன் சொல்ல மாட்டார். நம்ஊர்க் கவிஞர் குல திலகமும் சொல்ல மாட்டார்." என்று நுட்பங்களை அவிழ்த்து விடுவான்.

ஆளுக்குப் பத்துப் பத்துப் புத்தகம் எழுதுவான். விற்பனைக்குப் பட்டிமன்றங்களைப் பிடிப்பான்.

கொடிகட்டிப் பறக்கும் ராஜ்யம்.

அயோக்கியர் கூட்டம் இலக்கியத்துறையில் மட்டும் அல்ல. சாதுக்கள் கூட்டம், சந்நியாசிகள் கூட்டம், அரசியல்த் துறை, நிர்வாகத் துறை, அறிவியல்த்துறை, வழக்கியல்த் துறை, வியாபாரம், விவசாயம், தொழில் எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறது.

''உண்மைக்கும் பொய்க்கும் வேறுபாடு என்ன இருக்கமுடியும் என்று கேட்பான்! நல்லது கெட்டது எல்லாம் ஒன்றுதானே என்று வாதிப்பான்! தெள்ளத்தெளிந்த ஞானிபோலவே பேசுவான் கயவன். பழிபாவத்திற்கு அஞ்சமாட்டான் அவன். பிடிபடவே மாட்டான் அவன். அப்படி மனிதனோடு மனிதனாய்ச் சேர்ந்தே கிடக்கிறான் கயவன்.

ஆனால் அவன் மனிதன் அல்ல. பேய். வெறிபிடித்த பேய்.

''மக்களே போல்வர்
கயவர்; — அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட(து)
இல்.'' 310

(அவரன்ன ஒப்பாரி - கயவனைப் போல வேஷக்காரனை பகல் வேஷக்காரனை. யாம் கண்டது இல் - இதுவரை நான் எங்கும் பார்க்கவில்லை.)

2

கயவர்களின் அக்கிரமங்களைப் பார்த்துப் பார்த்து திருவள்ளுவருக்கே பரிவு உண்டாகி விட்டது. பேராசை, பொறாமை, பொய், திருட்டுத்தனம், எரிச்சல் முதலிய அயோக்கியத்தனங்கள் எல்லாம் ஒத்துப்பேசி கயமை என்று அவதாரம் எடுத்திருக்கிறதை அவர் பார்க்கிறார். மனிதனைப் பற்றிக்கொண்டு அவனை என்ன பாடு படுத்துகிறது என்று யோசிக்கிறார். பரிவு உண்டாகிவிடுகிறது. பரிவின் காரணமாக ஆங்காரம் குத்தலும் பக்கவெட்டுமான நகைச்சுவையோடு வந்து விழுகிறது.

எல்லாம் இறைவனுடைய காரியம் என்று தெளிந்தவர்கள் ஞானிகள். அதனால் அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். நஷ்டமும் இறைவன் செயலே என்று ஆனபிறகு வருத்தம் வர ஞாயம் இல்லை.

கயவர்களும் ஒன்றுக்கும் வருத்தப்பட மாட்டார்கள். மானம் போனாலும், மரியாதை போனாலும் வருத்தப்பட மாட்டார்களாம்.

அப்படியானால் கயவர்களும் ஒருமாதிரிப்பட்ட ஞானிகள் தான் என்று ஒரு குத்துக் குத்துகிறார் கவிஞர்.

''நன்றறி வாரில்க்
கயவர் திருவுடையர்;
நெஞ்சத்(து) அவலம்
இலர்.'' 311

(நன்று அறிவாரில் - ஞானிகள்போல். திருஉடையர் - பேர் பெற்றவர்கள்தாம். அவலம் இலர்-கவலை இல்லாத ஜென்மங்கள்.)

3

நெஞ்சில்க் குத்தியதோடு நிற்கவில்லை கவிஞர். கயவர்களின் விலாவிலும் ஒரு குத்து குத்துகிறார். ஞானிகள் என்று சொல்லிய தோடு நிற்கவில்லை. கயவர்கள் தேவர்களுக்கு இணையானவர் என்கிறார்.

தேவர்கள் மழையைக் கொட்டுகிறார்கள். காற்றை வீசச் செய்கிறார்கள். இரவை உண்டாக்குகிறார்கள். பகலை உண்டாக்கு கிறார்கள். அதாவது தோன்றியபடி எல்லாம்நல்லது செய்வார்கள்.

கயவர்களும், தீயை வைப்பார்கள், காதை அறுப்பார்கள், கன்னம் போடுவார்கள், பொய் சொல்வார்கள். அதாவது மனதில் தோன்றியபடி எல்லாம் அயோக்கியத்தனம் செய்வார்கள்.

''நினைத்ததை நினைத்தபடி கயவர்கள் செய்து முடிக்கிறார் கள். அப்படியானால் இவர்களும் தேவர்கள் போலத்தானே'' என்று ஒரு குத்து குத்துகிறார் கவிஞர்.

''தேவர் அனையர்
கயவர்; — அவருந்தான்
மேவன செய்தொழுக
லான்.'' 312

(அவருந்தான் - கயவர்களும். மேவனசெய்து ஒழுகலான் - நினைத்தது நினைத்தபடி செய்து திரிகிற காரணத்தால் - தேவர் அனையர்.)

4

பேராசைதான் கயவர்களின் குணம். ஆசை முழுவதும் வேஷ மாக - பயமாக அவர்களிடம் செயல்படுகிறது. பயந்தான் அவர் கள் காரியம். உண்மையினிடத்து மரியாதை இல்லை. பயம் மட்டும் உண்டு. அதன்பக்கம் வரமாட்டார்கள்.

"அச்சமே கீழ்கள(து)
ஆசாரம்; — எச்சம்
அவாஉண்டேல் உண்டாம்
சிறிது." 313

(கீழ்களது - கயவர்களின். ஆசாரம் - பழக்கம். எச்சம் - மிச்சம். அவா - ஆசை. எச்சம் உண்டேல் அவா சிறிது உண்டாம் - ஆசை முழுவதும் பயமாக மாறிவிட்டது கயவர்களிடம். பயம்நீங்கலாக என்ன இருக்கிறது என்று தேடினால் மேலும் சிறிது பேராசை தான் அங்கு இருக்கும்.)

5

கயவர்களுக்கு ஒருவரிடமும் அன்பு கிடையாது. யாரும் சந்தோஷமாய் இருக்கக் கூடாது அவனுக்கு. எல்லோரும் திண்டாடித் தெருவில் அலையவேண்டும் என்பதுதான் அவன் விருப்பம்.

அவன் புத்தி எப்பொழுதும் அப்படியே வேலை செய்து கொண்டிருக்கும்.

சம்பந்தமே இல்லாதவர்களுடைய நஷ்டங்கள் ஆனாலும் சரி, இல்லை, அவர்கள் மனதில் ரகஸ்யமாய் வைத்திருக்கிற திட்டங்கள் ஆனாலும் சரி, இவனுக்குக் கடுகளவு தெரிந்தாலும்சரி. அவற்றுக்குக் கண், காது வைத்து, ஊர்முழுவதும் கொட்டடித்து விடுவான்.

"அறைபறை அன்னர்
கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்(கு) உய்த்துரைக்க
லான்." 314

(கேட்ட மறை - கேள்விப்பட்ட ரகஸ்யத்தை. பிறர்க்கு உய்த்து உரைக்கலான் - போகிறவர் வருகிறவர் எல்லோரிடமும் வலியச் சென்று விபரீதமாகச் சொல்லி அலைவான்.)

6

அழுக்கில்லாமல் ஒருவன் வெள்ளைவேட்டி கட்டி இருப்பதைப் பார்த்தாலே இவன் கொதிப்பான். ஒருவன் உழைக்கிறான். வேளாவேளைக்குச் சாப்பிடுகிறான் என்றாலே இவனுக்குத் தாங்க முடியாது. என்ன செய்வான்.

அவர்கள்மேல் கொடும் சொற்களைப் பொய்யாய்ச் சொல்லுவான். சொல்லிக் கொண்டே இருப்பான். அதற்கு ஆதாரம் தேடுவதுதான் இவனுக்குத் தொழில்.

"உடுப்பதூஉம் உண்பதூஉம்
காணில் — பிறர்மேல்
வடுக்காண வற்றாகும்
கீழ்." 315

(வடுக்காண - குற்றம் கண்டுபிடிக்க. வற்றாகும் - அலைவான்.)

7

சலாம் போடுவான், லஞ்சம் கொடுப்பான். பிறகு அதிகாரம் பண்ணுவான். கட்சி மாறுவான். "இவருக்காக உயிரையே கொடுப்பேன் என்பான். அப்புறம் இவர் உயிரை வாங்காமல் விட மாட்டேன்" என்பான்.

சதா தன்னை விற்றுமுதல் பண்ணிக்கொண்டே இருப்பான் கயவன்.

"எற்றுக்(கு) உரியர்
கயவர், ஒன்(று) — உற்றக்கால்
விற்றற்(கு) உரியர்
விரைந்து." 316

(ஒன்றுஉற்றக்கால் - வருமானம் என்றால் போதும். விரைந்து விற்றற்கு உரியர் - தன்னையே உடனுக்குடன் மாறிமாறி விலை பேசி விற்பான் கயவன்.)

குறிப்பு:- அது ஒன்றுக்குத்தான் அவன் லாயக்கு.

8

சாதாரண சட்டத்தைக் கொண்டு கயவர்களைத் திருத்த முடியாது. விபரம் இல்லாமல் தவறு செய்கிறவர்களை வழிக்குக் கொண்டு வருகிற சட்டம் அது. இதனால் அவர்களைக் கட்டுப் படுத்த முடியாது.

வாழைப்பழம் சிரமம் இல்லாமல் பயன்படும். கரும்பு அப்படி இடம் கொடுக்காது. துண்டுதுண்டாக முறித்து ஒடிக்க வேண்டும் கரும்பை. வில்லை வில்லையாய் வெட்ட வேண்டும். பிறகு அறைத்து எடுக்க வேண்டும். அப்பொழுது தான் ஒழுங்குக்கு வரும். அதன் பிறகு தான் சாறு இறங்கும்.

"சொல்லப் பயன்படுவர்
மேலோர்; — கரும்புபோல்
கொல்லப் பயன்படுமாம்
கீழ்." 317

(மேலோர் - நல்லவர்கள். வார்த்தைக்குக் கட்டுப்படுவார்கள்.
க்கு உடன் [illegible] நல்லவர்கள்.)

ஆங்காரபாவம் கவியில் விஸ்வரூபம் எடுக்கிறது.

# நான் என்பது இல்லைதான்

1

காற்று, தண்ணீர், வெளிச்சம் இவைபோதும், மரம்வளர. மனிதன் காரியம் அப்படி அல்ல. தாய், தந்தை, உற்றார், உற வினர், நண்பர் எல்லோருடைய உபசரிப்பும் வேண்டும். அப்படி யானால்த்தான் மனிதன் வளர்வான். கவிஞர்களுடைய பாடல், கலைஞர்களின் சிருஷ்டி எல்லாம் சேர்ந்து மனிதனை உருவாக்கு கின்றன. சமுதாயம் முழுவதும் எப்படி எப்படியோ மனிதனுக்கு உதவுகிறது. உலகம் முழுவதற்கும் மனிதன் சொந்தம். அதனால் குடும்பம் சமுதாயம் எல்லாவற்றையும் அவன்பேணி வளர்க்க வேண்டும். தன்னைமட்டும் வளர்த்துக் கொண்டால்ப் போதாது.

கண்ணுக்கெட்டிய தூரம் நிலம் விரிந்து பரந்து கிடக்கிறது. ஒன்றும் அதில் விளையாமல் பல காலமாக வெறுமனே கிடக் கின்றது நிலம்.

எங்கு பார்த்தாலும் சரளும் கல்லும் முட்புதருமாகத் தோன்றும் நிலத்தை, இந்தப் பகுதி உயர்ந்தது. அந்தப் பகுதி மட்டமானது என்று தரம் பிரிக்க முடியுமா? முடியாதுதான்.

மேலே குறிப்பிட்ட நிலத்தை உழுது பண்படுத்தி உரமிட்டு வேளாண்மைக்குக் கொண்டு வரவேண்டும். நெல்லும், கரும்பும், வாழையும், கொடிக்காலும் பயிரேற்ற வேண்டும். அறுவடை செய்ய வேண்டும். பழையபடி பயிரிட வேண்டும். வாய்க் காலும் வரப்பும் கட்டிப் பயிரிட்ட பிறகுதான், நிலத்தில் எந்தப்பகுதி எந்த வேளாண்மைக்கு உகந்தது என்று தெரியவரும். தரமான பகுதி எது? தரங்கெட்ட பகுதி எது? என்பதும் தெரிய வரும்.

நிலத்தின் இயல்பு அதனுடைய விளைவில் இருக்கிறது. அதாவது நிலமானது செயல்படுகிற பொழுதுதான் அதன் குணம் எப்படி என்பது தெரியும்.

மனிதர்களுடைய காரியமும் அப்படித்தான். திருவிழாக் கூட்டத்திலோ, விசேட வீடுகளிலோ பல மனிதர்களை ஒரு சேரப் பார்க்கிறோம். அவ்வளவு பேரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி யாகத்தான் இருப்பார்கள்.

சும்மா இருக்கிற மனிதர்களில் உயர்ந்தவர் யார்? தாழ்ந்தவர் யார்? என்று இனங் காணமுடியாது.

ஒரு மனிதன் போதுமான அளவிற்கு வசதி நிறைந்தவன். ஏதோ, தற்காலப் படிப்பையும் ஒருவாறு படித்து உயர்ந்த பட்டங் களையும் பெற்று விட்டான். கண்ணுக்கினிய மனைவி இருக்கி றாள். உற்றார், உறவினர், நண்பர் எல்லோரும் இருக்கிறார்கள். எந்த ஒரு குறையும் இல்லை அவனுக்கு. வேளாவேளைக்குச் சாப் பிடுகிறான். விளைந்து வருகிற பொருள்களை விற்று முதலாக்கு கிறான். பணத்தைப் பாங்கியில் கொண்டு போய்ப் போடுகிறான். குறிப்பிட்ட சிலருடைய வீடுகளில் நடைபெறும் விசேடங்களில் மட்டும் அப்போதைக்கப்போது போய்க் கலந்து கொள்கிறான்.

அவனுண்டு. அவன் காரியம் உண்டு. அவன் உடம்பிற்காக அவன் உண்கிறான். அதே போல் அவன் உயிர் வாழ்வதற்காக சில காரியங்களைச் செய்கிறான்.

அவன் இருந்தாலும் ஒன்றுதான். இல்லாமல் போனாலும் ஒன்றுதான். நல்லவன் போலத் தோன்றலாம். அவன் நல்லவனு மல்ல கெட்டவனுமல்ல. "ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற் காக வந்திருக்கிறோம் என்னும்' உணர்வு உண்டாகவேண்டும். அவ்வுணர்வு தெளிவடையத் தெளிவடைய கடமையை நிறை வேற்றுவதில் ஆர்வம் ஏற்படும். பிறகு சும்மா இருக்க முடியாது. லாபமானாலும், நஷ்டமானாலும் கடமையை நிறைவேற்றுவதில் ஒரு உறுதி உண்டாகும். அந்த உறுதியில் தான் மனிதனுக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. அது காரணமாகத் தான் மோட்சம் என் பதை உறுதி என்னும் சொல்லாலேயே முன்னோர்கள் காட்டி வந்திருக்கிறார்கள்."

"கருமம் செயஒருவன்
கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய(து)
இல்." 318

(கைதூவேன் - பின்வாங்க மாட்டேன், சோர்வுற மாட்டேன். பெருமையில் பீடு உடையதுஇல் - சிறப்பினை ஒத்த வேறு சிறப்பு இவ்வுலகில் இல்லை.)

2

கடமையை நிறைவேற்றுவது தான் மனிதனுடைய குறிக்கோள். கடமைக்காக வாழ்பவன்தான் மனிதன். தனக்காக மட்டும் வாழ்பவன் மனித உருவில் திரியும் பிசாசு. இது குறளாசிரியரின் கொள்கை. குடும்பம், குடும்பப் பண்பு, குல மரபு என்றெல்லாம் பாராட்டப்படுகிற தத்துவம், பல்லாயிரம் ஆண்டுகளாக, பல லட்சம் நல்லவர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தன்னலத்தை உதறி எறிந்துவிட்டுப் பொது நலத்தைப் பாதுகாக்க விரைந்தோடி வந்த உத்தமர்கள் பலரை உலக சரித்திரத்தில் நாம் பார்க்கிறோம். நேராகவும் பார்க்கிறோம்.

''கடமையை விட்டுக் கொடுக்க மாட்டேன். அதை நிறைவேற்றியே தீருவேன்'' என்னும் குறிக்கோள் உடைய மனிதனைப் பார்த்து விடுகிறார் கடவுள். தேவையான சாதனம் முழுவதையும் அவரே அவனுக்கு வழங்கி விடுகிறார். அவனுக்கு உதவுவதில் கடவுளுக்குச் சலிப்பே இல்லை. உறுதி, ஆனந்தம், இதய வளம், தியாக உணர்வு, அவ்வளவையும் மளமளவென்று தெய்வம் உதவிக் கொண்டே இருக்கும்.

''குடிசெய்வல் என்னும்
ஒருவற்குத், தெய்வம்
மடிதற்றுத் தான்முந்
துறும்.'' 319

(குடி செய்வல் என்னும் ஒருவற்கு - குடும்பப் பாங்கை அதாவது சமுதாய இயலை பாதுகாப்பேன். பாடுபடுவேன் என்று முனையும்)

3

குடும்பம், சமுதாயம் எல்லாவற்றையும் மனதில்வைத்து ஒருவன் செயல்படுகிறான். அவனுடைய மனதில் குடும்பநலம், சமுதாயநலம் பற்றிய ஆர்வம் இருந்தால்போதும். அந்த ஆர்வம் தளராமல் இருக்கவேண்டும்.

காரியத்தைத் தெய்வம் பார்த்துக் கொள்ளும். என்னென்ன செய்யவேண்டுமோ, அவ்வளவையும் தெய்வமே செய்து முடித்து விடும். இவனிடம் யோசனை கேட்காமலே காரியத்தை நிறை வேற்றிவிடும் தெய்வம்.

மனிதன் ஒரு கருவிதான். லட்சியம் ஒவ்வொன்றும் தானுகவே உருவாகிவிடும்.

காரியம் அவ்வளவு சுளுவு என்கிறார் குறளாசிரியர். உண்மை உணர்ச்சிதான் முக்கியம் என்பதை அப்படிச் சொல்கிறார் குறளா சிரியர்.

"சூழாமல் தானே
மடிவெய்தும்; — தம்குடியைத்
தாழா உஞற்று
பவர்க்கு." 320

(சூழாமல் - கூடிக்கலந்து ஆலோசிக்காமல். தானே முடிவு எய்தும்- காரியமே, முடிவுசெய்து உருவாகிவிடும். தம்குடியை - குடும்பம். சமுதாயம் ஆகிய உண்மையை. தாழாது உஞற்றுபவர்க்கு - பிரகாசப்படுத்தவேண்டி ஓயாது சிந்திப்பவர்க்கு, காரியம் தானே உருவாகும்.)

4

குடும்பநலம், சமுதாயம் இவற்றை ஒருவன் லட்சியமாக வைத்து வாழ்ந்தால், அவனுக்குச் சமுதாயம் முழுவதும் சொந்தந் தான்.

"குற்றம் இலனாய்க்
குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்றும்
உலகு." 321

(குடிசெய்து வாழ்வானை - பொதுநலம், சமுதாய நலம் கருதி வாழ்கிறவனை. சுற்றமாய்ச் சுற்றும் உலகு - சொந்தம் பாராட்டி உபசரிக்கும் மனிதகுலம்.)

5

குடும்பம் தன்னை உருவாக்கிய உண்மையை மனிதன் தெரிந் தால்ப் போதும். சமுதாயம் தன்னை எப்படி எப்படி எல்லாம் உருவாக்கி இருக்கிறது என்பது விளங்கிவிடும்.

உணர்ந்து அதற்கு ஏற்ப ஒருவன் செயல்படுவான் என்றால், அதுவே ஆண்மை. ஆன்மவீரம் என்பது அதுதான்.

"நல்லாண்மை என்ப(து)
ஒருவற்கு; தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக்
கொளல்." 322

நல்ஆண்மை - ஆன்மஞானத்தோடுகூடிய வீரம். தான்பிறந்தஇல்-தன்னை உருவாக்கிய குடும்ப இயலை - ஆண்மை ஆக்கிக் கொளல் - ஒரு சாதனமாக, வரப்பிரசாதமாக மதித்தல்.)

6

அதர்மங்களைத் துணிச்சலோடு எதிர்த்து, ஒழித்துக்கட்டி - சமுதாயத்தைக் காப்பாற்றுகிறவன் உத்தமன் (நல்லாள்)

தியாகமூர்த்தியாகிய உத்தமனை இல்லாத குடும்பம் - அதாவது சமுதாயம் தலைதூக்க முடியாது. அதர்மங்களால் சூழப்பட்டு நைந்து நைந்து சிதறும்.

"இடுக்கண்கால் கொன்றிட
வீழும்; — அடுத்தூன்றும்,
நல்லாளை இல்லா
இடத்து." 323

(இடுக்கண் - துன்பம். நல்ல பண்பாட்டையும் உண்மை உணர்ச்சியையும் அழிப்பதற்கென்றே அவதரித்திருக்கிற கொடுமை இருக்கிறதே, அது. (இடுக்கண் - கொடுமை) கால் கொன்றிட - மேலே சொல்லிய பண்பாட்டை, உண்மையை தூரிலேயே வெட்டிச் சாய்க்கும், அதனால், வீழும் - பழுத்துப் பண்பட்ட உறுதியான கலை, இலக்கியம், பக்தி, வழிபாடு முதலிய அம்சங்கள் எல்லாம் பொருளற்றுப் போய்விடும். எங்கே? உண்மைக்காக உயிரையே கொடுத்துக் காக்கும் வீரன் இல்லாத சமுதாயத்தில்.

குறிப்பு :- சமுதாயம் பண்பாட்டை நெடுகிலும் காத்து வருகிறது. அப்படி அது காத்து வருவதற்குத் துணையாக நிற்பது, சமுதாய நலனுக்காக, தன்னை அர்ப்பணிக்கும் தியாக உணர்வு தான். இந்த அரிய உண்மை கவிஉருவம் பெற்று வந்துவிட்டது.

# கடமை என்பது நல்லது செய்தல்

1

பெரும்பாலான மக்கள் அவர்கள் உண்டு, அவர்கள் காரியம் உண்டு என்று சும்மா இருந்து விடுவார்கள். வலியப் போய் பொய் சொல்ல மாட்டார்கள். திருடமாட்டார்கள், ஏமாற்றமாட்டார்கள். வேளாவேளைக்குச் சாப்பிடுவார்கள். தூங்குவார்கள், விழிப்பார்கள்.

விவசாயமோ, வியாபாரமோ அதைக் கவனித்துக் கொள்வார்கள். இவர்களை நல்லவர்கள் என்று பொதுவாக உலகம் சொல்கிறது. உண்மையில் இவர்கள் நல்லவர்கள் இல்லை.

நல்லவர்கள் என்றால் நல்லது செய்ய வேண்டும். தன்னுடைய காரியங்களில் நல்லது எது, கெட்டது எது என்று பார்க்கவேண்டும். கெட்டதை விட்டுவிடவேண்டும். லாபம் கிடைப்பதாக இருந்தாலும் விட்டுவிட வேண்டும். நல்லதை மட்டும் செய்யவேண்டும். நஷ்டம் ஏற்பட்டாலும் செய்யவேண்டும்.

இந்த அளவுக்காவது மனிதனிடம் செயல் இருந்தால் அல்லவா, செயலில் ஊக்கமும், முனைப்பும் இருந்தால் அல்லவா அவனை நல்லவன் என்று சொல்லவேண்டும். ஒன்றுமே செய்யாதவனை நல்லவன் என்று சொல்வதில் பொருள் இல்லைதான்.

நம்முடைய வேலைக்காரனை நாம் எப்படி வைத்திருக்கிறோம். அவன் உழைப்பை எந்த அளவுக்கு நாம் மதிக்கிறோம். என்பதைச் சோதித்துப் பார்த்தால்போதும். திருத்தவேண்டிய அம்சங்கள் பல அதில் இருப்பது தெரியும். தெரியத் தெரியத் திருத்தவேண்டும். திருத்தினால் அவன் நல்லவன்தான்.

நம் உதவியை நாடிவருகிறவன், நம்மைவிட உயர்ந்தவன், நம்மைவிட குறைந்தவன், பக்கத்து வீட்டுக்காரன், கடன் வாங்குகிறவன், கடன் கொடுப்பவன், வேண்டியவன், வேண்டாதவன் இவர்களிடம் நாம் நடந்து கொள்வதில் உண்மை எவ்வளவு, பொய் எவ்வளவு என்று யோசித்துப் பார்க்கிறவர்கள் யார்? யோசித்துப் பார்த்து பொய்யை ஒழித்தவர்கள், மெய்யை வளர்த்தவர்கள் யார்.

அப்படிச் செயல்படுகிறவர்கள் நல்லவர்கள். அவர்களைப் பார்த்து மற்றவர்களும் நல்லவர் ஆவார்கள். ஆகாமல் சண்டித்தனம் செய்தால் அவர்களை நல்லவர் ஆகும்படி எடுத்துச் சொல்லலாம். வற்புறுத்தலாம். போராடக்கூடச் செய்யலாம்.

நல்லவனை அப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கும் கடமை. லட்சியம் என்றால் கடமை என்றால் செயல்மயமாக இருக்கிறது. நல்லது செய்யும் செயலில் இருக்கிறது. நல்லவர்களை உருவாக்கும் செயலில் இருக்கிறது.

புதிதாக நான் ஒரு கேடும் செய்யவில்லை. அப்பன், பாட்டன், பூட்டன் செய்ததையே நான் செய்து கொண்டிருக்கிறேன். என்னென்ன தவறுகள் அவற்றில் உண்டோ அவ்வளவையும் அப்படியே செய்து கொண்டிருக்கிறேன் என்று செத்த சவமாய், சிவனே என்று கிடக்கிறவன் நல்லவனாகிவிட மாட்டான்.

தன்னிடம் இருந்த குறைகளைக் களைந்து எறிவதும், அவற்றை எக்காரணங்கொண்டும் செய்யாமல் இருப்பதும் கடமை. அதாவது வினைத்தூய்மை. கடமை உணர்வோடு செயல்பட்டால் நல்லது தானே வரும்.

வினைத்தூய்மையைக் குறளாசிரியர் எப்படி அனுபவிக்கிறார் என்று பார்ப்போம்.

"துணைநலம் ஆக்கம்
தரூஉம்; — வினைநலம்
வேண்டிய எல்லாம்
தரும்." 324

(துணைநலம் - நல்லநட்பு, மனைவி, மக்கள், சுற்றம், சிநேகிதர் இவர்கள் நல்லவர்களாய் அமைவது யோகம். ஆக்கம்தரும்- அப்படி அமைந்து விட்டால் அதைத் தெய்வகடாட்சம் (ஆக்கம்) என்று தான் மதிக்கவேண்டும். வினைநலம் - இனி, தூயசெயலை

எடுத்துப் பார்த்தால், அதாவது தீயவற்றை விலக்கி நல்லன வற்றைச் செய்துமுடிக்கும் செயலை யோசித்துப் பார்த்தால். வேண்டிய எல்லாம் தரும் - நாம் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்ன என்பதை ஒவ்வொன்றாக எடுத்துக் கையில் கொடுக்கும்.)

2

''என்ன கொடுமை! அநியாயம், அநியாயம்!! என்று பிறர் அலறும்படி ஒன்றும் செய்யக்கூடாது. தவறுதலாக ஒன்று நேர்ந்து விட்டால், தப்பு என்று உணரவேண்டும். செய்தது தவறுதான் என்று ஒப்புக் கொள்ளவேண்டும். அது அழுக்கைக் கழுவிச் சுத்தப் படுத்திவிடும். அப்படி இல்லாமல், செய்த தவறை மறைப்பதற்கு மேலும்மேலும் தவறு செய்வது அடாத காரியம்.

''எற்றென்(று) இரங்குவ
செய்யற்க; — செய்தபின்
மற்றன்ன செய்யாமை
நன்று.'' 325

(எற்று என்று இரங்குவ - என்ன கொடுமை இது. தெய்வத்துக்கு ஏற்குமா இந்தக் கொடுமை என்று பிறர் நொந்து வருந்தும் படியான செயல்களைச் செய்யக்கூடாது. மற்று அன்ன செய் யாமை - மறைப்பதற்குப் புதுப்புது தவறுகளைச் செய்யாது இருத்தல் நன்று.)

3

நம்பி வந்தவர்களோ, கடன் வாங்கியவர்களோ, வேலைக் காரர்களோ, ''ஏமாற்றிவிட்டானே பாவி'' என்று அழுது புலம்பும் படி மோசம் செய்கிறவன் உருப்படமாட்டான்.

அவனும் அவன் குடும்பமும் நொந்து வருந்தும்படி அவன் மோசடி செய்து சேர்த்த பொருள் அவனை விட்டு ஓடிவிடும்.

ஒழுங்கான செயலில் நஷ்டம் ஏற்பட்டாலும் குற்றம் இல்லை. அதுபெரிய லாபத்தைத் தேடிக்கண்டு பிடிக்கமுடியாத இன்பத் தையே கொண்டுவந்து கொடுத்துவிடும் அந்த ஒழுங்கு.

''அழக்கொண்ட எல்லாம்
அழப்போம்; — இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா
லவை.'' 326

(போம் - போய்விடும். நற்பாலவை-நல்ல செயல்கள். பிற்பயக்கும்-காலந்தாழ்த்தேனும் லாபம் கொடுக்கும்.

4

மண்குடம் பழகிப் பழகிக் காயவேண்டும். அப்பொழுதுதான் அதில் ஊற்றிய நீர் கசியாமல் இருக்கும். காயாத மண்குடத்தில் - பச்சை மண்குடத்தில் நீர் ஊற்றி நிரப்பி வைப்போம். நீர் முழுவதும் கசிந்து வெளியேறிவிடும். அப்படி மாயமாய் மறைந்துவிடும் நீர்.

வஞ்சனையின்மூலம் (சலத்தால்) பணத்தைத் தேடி வைக்கிற காரியம் அப்படித்தான். செல்வம் குவிந்ததைப் பார்த்து மகிழ்ந்து கொண்டே இருப்பான். இவன் மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே மாயமாய் ஓடிவிடும். தடுத்து நிறுத்த முடியாது.

''சலத்தால் பொருள்செய்(து)ஏ
மார்த்தல்; — பசுமண்
கலத்துள்நீர் பெய்(து)இரீஇ
அற்று.'' 3.7

(சலம் - வஞ்சனை. ஏமார்த்தல் (ஏமம் ஆர்த்தல்) சந்தோஷத்தில் ஆரவாரம் செய்தல். பெய்து - நிரப்பி. இரீஇஅற்று - நிரப்பிய நீர் கசிந்து போனது போலத்தான் நில்லாது ஓடிவிடும்.)

குறிப்பு:- இதைச் செய்யாதே அதைச் செய்யாதே என்று பாடம் நடத்துவதால் புண்ணியம் இல்லை. அப்படிச் சொல்வது சுயநலந்தான். என்னிடம் வம்பு செய்யாதே என்று பேரம் பேசுகிற கணக்குதான்.

இது நல்லது செய், அது நல்லது செய் என்று உபதேசம் பண்ணுவதும் அப்படித்தான். என்னை மறந்துவிடாதே என்று விண்ணப்பிக்கிற காரியந்தான்.

உண்மையை அனுபவித்து ஆனந்தத்தோடு சொல்லவேண்டும். அது கலையாக விளைந்து விடும். பிறகு நல்லதின் மேல் ஆசை உண்டாகும். கெட்டதின் மேல் வெறுப்பு உண்டாகிவிடும். மனிதனை அப்படி மாற்றும் கலை. குறள் ஒவ்வொன்றும் கலைக் கோயில்தான்.

# மனம் வைத்துச் செயல்படவேண்டும்

1

கலை என்பது ஆனந்த உணர்ச்சியிலிருந்து உண்டாகிறது. அதனால் குறைவில்லாமல் இருக்கிறது. நிறைந்திருக்கிறது. அழிவற்றதாய் இருக்கிறது.

பயங்கரமான கோபாவேசங்கூட கலையில் அழகாக இருக்கும், சோக உணர்ச்சி கூடக் கற்கண்டாய்த் தித்திக்கும். கலிங்கத்துப் பரணி ஆசிரியர் சிருங்காரரசம் சொட்டச்சொட்ட காதல்க்கவிகள் பாடுவார். அவை அழகாக இருக்கும். அவரே, பாலைவனம் பற்றியும், கோரமான பேய்பிசாசுகள் பற்றியும், போர்க்களம் பற்றியும், ரத்தவெள்ளத்தில் பிணங்கள் மிதப்பது பற்றியுங் கூடப் பாடுவார். அப்படிப் பாடுகிற பாடல்களும் அற்புதமாக இருக்கும். காதல்க் கவிகள் போல அவையும் ஆனந்தமாக இருக்கும்.

கலைஉருவம் பெற்றுவிட்டால் எதுவும் அழகுத்தெய்வம் ஆகி விடும். காரணம் என்ன? உண்மை அப்படியே கலையாவது இல்லை. கலைஞனுடைய அனுபவம், ஆனந்தம், உண்மை மூன்றும் ஒன்றாய்க் கரைந்துவிடுகின்றன. பிறகு புதிய அவதாரம்-கலை அவதாரமாக வந்துவிடுகிறது. கவியைப் பொறுத்தவரை அவற்றைக் கரைத்து ஒரு புதிய பிறவியைக் கொடுப்பது வார்த்தை களும் தாளங்களும்ந்தான்.

கலையின் காரியம் அப்படி இருக்கட்டும். மனசோடு சேர்ந்து செய்கிற எதுவும் அழகாகத்தான் இருக்கும். மனதுக்கு ரம்மிய மாகத்தான் இருக்கும்.

தினந்தோறும் சமையல் பண்ணிச் சாப்பிடுகிறோமே சலிப்புத் தட்டுகிறதா? நல்லவர்களோடு பழகப்பழக இன்பம் சுரக்கத்தானே

செய்கிறது. உழுகிறது, விதைக்கிறது, அறுவடை செய்கிறது எல்லாம் அழகாகத்தான் இருக்கின்றன. வீடு, முற்றம், கோலம் திருத்தமாக உள்ளன. அழகாக இருக்கின்றன.

காரணம் மனமும் செயலும் ஒட்டி நிற்பதனால்த்தான். மனம் ஒருபக்கம் செயல் ஒருபக்கம் என்று போய்விட்டால், தலையில் ஒரு குடத்தை வைத்துக் கொண்டு, இடுப்பிலும் ஒரு குடத்தை வைத்துக் கொண்டு, குழந்தையையும் கையில் பிடித்துக்கொண்டு ஒருபெண் வரமுடியுமா. அப்படி வருவதில் ஒய்யாரம் இருக்கிறது."கம்பீரம் இருக்கிறது. உண்மை இருக்கிறது. அழகு இருக்கிறது. யாதொரு குறையும் அதில் இல்லை.

அப்படியே தீயனவற்றைக் அழிப்பதிலும், நல்லனவற்றைச் செய்வதிலும் மனம் இருக்கவேண்டும். உற்சாகம் இருக்கவேண்டும். ஊக்கம் இருக்கவேண்டும். மன எழுச்சியே செயலில் பரிமளிக்க வேண்டும். மனம் வைத்துச் செய்கிற காரியங்கள் அழகுத் தெய்வங்களாய் எழுந்துவிடும்.

குறளாசிரியர் கண்ட உண்மை இது. இந்த உண்மை எப்படி அலங்காரத்தோடு வார்த்தைகளில் நடனமாடுகிறது என்று பாருங்கள்.

"வினைத்திட்பம் என்ப(து)
ஒருவன் மனத்திட்பம்:,
மற்றைய எல்லாம்
பிற." 328

(வினைத்திட்பம் - செயல் உருவம். மனத்திட்பம் - மனஉறுதியோடு சேர்ந்தது. மற்றைய எல்லாம் பிற-மனதோடு சேர்ந்து நிகழ்ந்தால் போதும் செயல், அது பூரணம் ஆகிவிடும். கருங்கல்லிலிருந்து பெண் ஒருத்தி அழகுத் தெய்வமாக எழுந்து வந்து விட்டால், அது போதுந்தானே. பிறகு, அதற்குப் பட்டுச் சுற்றுவது, நகை பண்ணிப் போடுவது, மாலை சார்த்துவது எல்லாம் அவ்வளவு முக்கியம் இல்லைதான்.)

2

அழியாமல் நிலைத்து நிற்கும்படி ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும். இப்போதைக்குக் குற்றம் இல்லை. பின்னால் தேவை இருக்காது என்கிற கணக்கில் காரியம் செய்யக்கூடாது.

பிறரை ஏமாற்றச் செய்கிற காரியம் பிரயோசனம் இல்லை. அது மாத்திரம் அல்ல, போலியான காரியங்கள் பல பிரச்சனைகளை உண்டாக்கும். பல தொல்லைகளையும் உண்டாக்கும்.

ஊரை ஏமாற்றுவதற்காகவே ஒருவன் அன்னசத்திரம் கட்டினான். ஒழுங்காக நடத்துவது போல் நடத்தினான். வசூல் நிறைய ஆயிற்று. அன்னசத்திரத்தை மூடிவிட்டான்.

போக்கிரித்தனமான காரியந்தானே.

''கடைக்கொட்க செய்தக்க(து)
ஆண்மை; — இடைக்கொட்கின்,
எற்றா விழுமம்
தரும்.'' 329

(கடைகொட்க-கடைசி வரை நிற்கிற காரியத்தை. செய்தக்கது-செய்யத்தகுந்த நல்ல காரியத்தையே செய்யவேண்டும். அதுதான் ஆண்மையான செயல். இடைகொட்கில்-இடையில் நின்றுவிடுகிற காரியம் செய்தல். எற்றாவிழுமம்தரும்-நீங்காக தொல்லையை உண்டாக்கும்.)

3

உயர்ந்த லட்சியத்தோடு ஒட்டிய செயல்களை - மனதோடு ஒட்டிய கடமைகளைப் பற்றிக் கட்டுரை எழுதிவிடலாம். மேடை ஏறிப் பிரசங்கம் பண்ணலாம். ரேடியோவில் கூடப் பேசிவிடலாம். கடமையை நிறைவேற்றுவேன் என்று சத்தியப் பிரமாணம்கூடச் செய்து கொடுக்கலாம்.

இவற்றில் ஒன்றும் சிரமம் இல்லை.

ஆனால், செயலில் ஈடுபட எவ்வளவோ உறுதிவேண்டும், ஊக்கம் வேண்டும், தெளிவு வேண்டும், அன்பு வேண்டும், உண்மை வேண்டும். இவ்வளவும் ஒருவனிடம் பக்குவமாய் அமைவது அருமைதான்.

''சொல்லுதல் யார்க்கும்
எளிய; — அரியவாம்
சொல்லிய வண்ணம்
செயல்.'' 330

4

மகாத்மாகாந்தி சாதாரணமாகத்தான் இருந்தார். குடிசையில்த்தான் வாழ்ந்தார். அரைநிர்வாணப் பக்கிரிதான். கோட் இல்லை. சூட் இல்லை. தலைப்பாகை இல்லை. அங்கவஸ்திரம் இல்லை. சாதாரணந்தான்.

ஆனால் அவரைச் சாதாரணம் என்று எண்ணமுடியுமா? உலகத்தையே தோளில் வைத்துத் தாங்கும் ஆற்றல் உடையவர் அவர்.

''உருவுகண்(டு) எள்ளாமை
வேண்டும்; — உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார்
உடைத்து.'' 331

(அச்சாணி இல்லாவிட்டால் தேர் இல்லை. இவர்கள் இல்லாவிட்டால் உலகம் இல்லைதான்)

5

ஒருவனிடம் பணம் பண்ணுகிற சக்தி இருக்கலாம். புகழைக் கூட தட்டிக் கொண்டு போய் விடுகிற ஆற்றல் இருக்கலாம். சண்டை போட அவனிடம் பலம் இருக்கலாம். ஆனால் நல்லது செய்வதில் அவனுக்கு மனம் இல்லை என்றால் அவனை உலகம் ஏற்றுக் கொள்ளாது. தள்ளிவிடும். அதாவது, மக்கள் அவனை நம்ப மாட்டார்கள். அதிகாரம் இருக்கும் வரை அவனைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அவ்னை நம்புவார்கள். அப்புறம் அவர்களும் அவனை உதறிவிடுவார்கள்.

''எனைத்திட்பம் எய்தியக்
கண்ணும்; — வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா(து)
உலகு.'' 332

(எனைத்திட்பம் எய்திய கண்ணும்-என்னென்ன ஆற்றல்கள் பெற்றிருந்தாலும். வினைத்திட்பம் வேண்டாரை-செயலில் ஈடுபாடு வைக்காதவர்களை. உலகுவேண்டாது-உலகம் விரும்பாது. அதாவது மக்கள் அவனை மனிதன் என்று ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.)

குறிப்பு:- உண்மையைக் கையில் எடுத்துப் பார்க்கிறது தமிழ். வெளியில் கொண்டு போய்ப் பார்க்கிறது. உள்ளே கொண்டு வந்து பார்க்கிறது. அப்படி வைத்துப் பார்க்கிறது. இப்படி வைத்துப் பார்க்கிறது. எல்லாம் கையில் எடுத்துக் கண்ணெதிரில் கொண்டு வந்து தான்.

காட்சி என்றால் இப்படி அனுபவித்து ஆனந்தத்தோடு பார்ப்பது தான் காட்சி.

ஏதோ விமர்சனம் பண்ண வேண்டி இருக்கிறதே என்பதற் காகப் பார்ப்பது காட்சி அல்ல.

உண்மையோடும் உணர்ச்சியோடும் ஒவ்வொன்றையும் பார்க் கிறது. அப்படிப் பார்க்கத் தமிழ் ஒன்றால்த் தான் முடியுமோ? என்னும் உணர்ச்சி குறளைப் படிக்க நமக்கு வரும்.

அப்படி வருவது உண்மை தான்.

# படைச்செருக்கு

1

யோசித்துப் பார்த்தால் கொஞ்சுவதும், சண்டைபோடுவதும் ஆக இரண்டுந்தான் வாழ்க்கை என்று தெரியவரும். குழந்தைகளிடமும் அப்படித்தான். மனைவியிடமும் அப்படித்தான். நண்பர், சுற்றத்தார், எல்லோரிடமும் அப்படித்தான். கடவுளிடம்கூட மனிதன் கொஞ்சுவதும் சண்டை போடுவதுமே தொழிலாக இருக்கிறான்.

கொஞ்சுவதைக் காதல் என்று சொன்னதுபோல, சண்டை போடுகிறதை ஊடல் என்று சொல்லி இருக்கிறார்கள். ஊடலை உப்பு என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஊடல் அளவுக்கு மீறி விடக் கூடாது என்கிறதை அப்படி நயமாய்ச் சொல்லி இருக்கிறார்கள்.

சில பதார்த்தங்களுக்கு உப்பே உதவாது. பாயசம், தேன், பால், பழரசம், சர்க்கரைப்பொங்கல், கனிகள், அல்வா, ஜிலேபி, அதிரசம், மோதகம் முதலியவற்றுக்கு உப்பு உதவாது.

கலை, இலக்கியம், பண்பாடு, உண்மை, ஒழுக்கம், அன்பு, பொறுமை முதலிய துறைகளுக்கும்,சண்டை கூடாதுதான்.

x x x

நாடு, பாதுகாப்பு என்று வந்து விட்டால், சண்டை மயந்தான் எல்லாம். பாதுகாப்புத்துறை என்பது சண்டையை வைத்து உண்டானது தான். தமிழ்நாட்டில் அரசர்களுக்குள் சதா சண்டை நடந்து கொண்டிருந்தது. மாட்டு மந்தைகளை அடித்தான், வெருட்டினான், கவர்ந்து சென்றான். இப்படி ஒவ்வொரு செயலும்

பெரிய பெரிய போராக உருவெடுத்தன. யுத்தத்துக்காகவே மேலே சொல்லிய செயல்களை அரசர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

எதிரியை ஒழித்துக் கட்டுவது, வெற்றி பெறுவது இவை தான் லட்சியம் என்று வந்து விட்டால் ரத்தவெள்ளமும் பிணக்குவியலும் கோரமாக இருக்காது. வீரலட்சுமியாகத் தோன்றும்.

வீடுகளையும், ஊர்களையும் தீவைத்துக் கொளுத்துவது, ஓவியங்களையும், சிற்பங்களையும் அடித்து நொறுக்குவது, மக்களைத் தாக்கித் துரத்துவது, அணைகளையும் ஏரிகளையும் உடைத்து நாசமாக்குவது, பயிர்கள், மரங்கள் எல்லாவற்றையும் பொசுக்கி விடுவதுகூட உத்சாகமான காரியங்களாகிவிடும்.

அன்பு, இரக்கம் எல்லாம் இடம்விட்டுப் பின்னுக்குப் போய் விடும். மூர்க்கத்தனமும். தடித்தனமும் முன்னால் வந்து நிற்கும்.

யுத்தம் இருக்கிறவரை வீரம் ஒன்றுதான் மக்களுக்கு லட்சிய மாக இருக்கும். வீரதத்துவத்தைப் பாதுகாப்பதற்காகவே போர்ப் பயிற்சியையும், திடமான சரீரத்தையும் வளர்த்துக் கொண்டே இருப்பார்கள்.

X X X

போர் வீரர்கள் தாம் நம்மையும் நாட்டையும் காக்கிறார்கள் என்று நினைக்கிற பொழுது—தம் உயிரைக் கொடுத்து நம்மை அவர்கள் காக்கிறார்கள் என்பதை நினைக்கிறபொழுது அவர் களை மதிக்கிறது இயல்புதான். அவர்களுடைய செயல் ஒவ்வொன்றும் நமக்கு அழகாகவே இருக்கும்.

இனி போர் வீரர் வாழும் போர்த்துறை பற்றிப் பார்க்கலாம். சரீரதிடம், மனோதிடம் இரண்டும் போர் வீரர்களிடம் எவ்வளவோ இருக்கிறது. ஆனாலும் அவர்களை நடத்திச் செல்லத் தகுதியான தளகர்த்தர்கள் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லை.

''நிலைமக்கள் சால
உடைத்தெனினும் தானை;
தலைமக்கள் இல்வழி
இல்.'' 333

(தானை - படையானது. நிலைமக்கள் சாலஉடைத்து எனினும்- வீரர்களை ஏராளமாக வைத்திருந்தாலும். தலைமக்கள் இல்வழி இல்-நல்ல படைத்தலைவர்கள் கிடைக்காவிட்டால் பலன் இல்லை தான்)

2

வீரத்தையே லட்சியமாகக் கொண்டு வாழ்நாள் முழுவதையும் சண்டை போடுவதிலேயே கழித்த ஒரு வீரன், போர் இல்லா விட்டால் கசங்கிவிடுவான். அவனுடைய தோள்கள் தினவெடுக்கும். பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிடும் அவன் நிலை.

''ஏன், உயிரோடு இருக்கிறோம்'' என்கிற அளவுக்கு அவன் கசந்து போவான்.

''விழுப்புண் படாதநாள்
எல்லாம்; — வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை
எடுத்து.'' 334

(விழுப்புண்-சண்டையில் வாங்குகிற புண். முகத்திலும் மார்பிலும் விழுகிற காயங்கள். வெட்டுக்காயங்களேதான். வழுக்கினுள் வைக்கும்-செத்த நாட்கள் என்றே நினைப்பான். நினைத்துக் கையைப் பிசைவான். தன் நாளை-சண்டை இல்லாமல் இருக்கிற தன்னுடைய (வாழ்நாளை). நிலைமையைப் பார்த்துப் பார்த்து அவன் மனம் புழுங்கும்.

குறிப்பு :- உண்மையான போர் வீரனுடைய நிலையை, அவனுடைய வீர உணர்ச்சியை நாடக இயலோடு வைத்துக் காட்டுகிறது குறள்.

3

உண்மையான வீரனுக்குத் தன் உயிர் ஒருபொருட்டல்ல. வீரம் ஒன்றுதான் லட்சியம். போர்க்களத்துள் பாய்ந்து எதிரிகளைச் சாடி எறிந்து நிர்மூலம் ஆக்குவதுதான் அவன் லட்சியம். அதற்காக உயிரைக் கொடுக்க யோசிக்கமாட்டான். இதற்குப் பேராண்மை என்று பெயர். மூர்க்கத்தனமாகப் போரிட்டுப் போரிட்டு வெறும் போர்க்கடாவாக வளர்ந்தவன் தான் போர் வீரன். ஆனாலும் அவனிடம் ஒரு நேர்மை உணர்ச்சி இருக்கிறது.

அது என்ன! ''ஞானமும் பண்பாடும் நிறைந்த தருமசீலர்கள் காரியம் வேறு. தம் போன்ற மிருகவெறி கொண்ட போர்வீரர்களின் காரியம் வேறு'' என்று பிரித்து வைத்துக் கொள்கிறான் உண்மையான போர்வீரன். அது தான் போர் வீரனுடைய போர். வீரனுடைய நேர்மை. அதாவது ஊராண்மை,

தன் போன்ற சண்டைக்கடாக்களின் காரியம் மட்டமானது என்றும், உத்தமர்களின் தூய வாழ்க்கை உன்னதமானது என்றும் தெளிகிறான்.

உயர்ந்த பண்பாட்டுடையவர்களைத் தெய்வமாக மதிக்கிறான். அவர்கள் தன்னுடைய இழிநிலைக்கு வந்துவிடக்கூடாது என்று உறுதியாக இருக்கிறான்.

போர் வீரனுடைய போர் வெறிக்குள் இப்படி ஒரு அற உணர்வு காலூன்றி நிற்பது அற்புதந்தான்.

கும்பகர்ணன் ராவணனுடைய செயலை வெறுக்கிறான். ஆனாலும் அவனுக்காகப் போரிட்டு மடிய முன்வருகிறான். ராமன் பக்கம் போய்விட அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. பேராண்மை உள்ள போர் வீரன்தான் கும்பகர்ணன்.

இருந்தாலும், விபீஷணன் ராமனிடம் போய்ச் சேர்ந்ததைப் பாராட்டுகிறான். ''நல்ல காரியம் செய்தான் தம்பி'' என்று ஆனந்தம் அடைகிறான். ஏன், வீபிஷணன் நிலை வேறு. அவனுடைய மனச்சாட்சி தனி. பெரிய ஞானி அவன்.'' என்று மதிக்கிற கும்பகர்ணனுடைய ஊராண்மைதான் காரணம்.

போர்க்களத்துள்ப் புகுந்து சண்டை போடுகிற காரியத்தை விபீஷணனோடு சேர்த்து வைத்துப் பார்த்தால் மிக்க அருவருப்பாக இருக்கிறது கும்பகர்ணனுக்கு.

அதனால் ''இந்தப் பக்கம் வந்துவிடக் கூடாதே தம்பி'' என்று கவலைப்படுகிறான் கும்பகர்ணன். இது ஊராண்மை. அதாவது எல்லோருக்கும் பொதுவான மனச்சாட்சி.

இப்படி ஒரு அருள்மயமான வீரம் தமிழ்நாடு முழுவதும் நிறைந்திருந்தது.

இந்த அதிசயத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்கிறார் குறளாசிரியர். எப்படி என்று பார்ப்போம்.

''பேராண்மை என்ப
தறுகண்; ஒன்(று) உற்றக்கால்
ஊராண்மை மற்றதன்
எஃகு.'' 335

(தறுகண் - அஞ்சாமல் போரிடும் மறம். குத்திக் குதறி வெட்டி வீழ்த்தும் கொடுமைக்குத்தான் பேராண்மை என்று பெயர். அந்த

மறஉணர்வுக்குள்ளும் ஒருஊராண்மை ஒளிவிடுகிறது. ஒன்று உற்றக்கால் - எதிர்பாராதவிதமாக உன்னத புருஷர்களே பழிபாவத்திற்கு அஞ்சாத போர் வெறிக்கு ஆளானால், ஊராண்மை அதன் எஃகு - அவர்களை விலக்கிவைக்கும் ஊராண்மை தான் அந்த ஒளி. அதுவே பேராண்மைக்கு ஒளிதருகிறது. (எஃகு-பிரகாசம், கூர்மை.)

4

போர் வீரர்களின் வீரத்தை அனுபவிக்கிறபொழுது அவர்களுடைய பெரியபெரிய தோள்களும் அழகாக இருக்கும், புண்பட்டுக் காய்த்துப் போன நெஞ்சும் அழகாக இருக்கும். அனல் கொப்புளிக்கும், அவர்கள் கண்களும், முரட்டு முகமும்கூட பார்க்கப் பார்க்க அழகாகவே இருக்கும். அவர்களுடைய வீரத்தின் மேல் விழுந்த அன்பு, எல்லாவற்றையும் அழகுமயமாக ஜொலிக்கச் செய்துவிடுகிறது.

வீரர்கள், தங்கள் காலுக்கு வீரக்கழல் (சலங்கை) கட்டிக் கொள்வார்கள். அதைப் பார்த்தாலும் அது ஒரு தனி அழகுதான். அந்த வீரக்கழலிலிருந்து வருகிற ஒலியும் ஒரு அற்புதமான இசை தான். நடனமாதின் பாதச் சலங்கையைவிட இனிதாக இருக்கும் அது.

''சுழலும் இசைவேண்டி
வேண்டா உயிரார்;
கழல்யாப்புக் காரிகை
நீர்த்து.'' 336

(இசைவேண்டி - வீரமரணம் என்னும் புகழ்பெற. வேண்டா உயிரார் - உயிரைவிட யோசிக்காத வீரர். கழல்யாப்பு - வீரக் கழலைக் காலில் கட்டுகிற செயல்கூட (யாப்பு-கட்டுதல்). காரிகை நீர்த்து - அழகுமயமாக இருக்கும். (சுழலும் இசை - சுற்றிச் சுற்றி மனிதர்களை வீரச் செயலுக்கு வரத்தூண்டும் வீரப்புகழ்.)

5

வீரர்களின் வீரமரணம் கல்நெஞ்சையும் உருக்கிவிடும்; அவர்கள் மரணத்தில் இருக்கிற ஊக்கம், நேர்மை, தியாகம் எல்லாம் சேர்ந்து மனதை உருக்கிவிடுகிறது. கண்ணீரைக் கொட்ட வைத்துவிடுகிறது.

மாவீரனின் பிரிவு பொறுக்காமல் அவனைச் சேர்ந்தவர்கள் - யாருக்காக அவன் உயிரை விட்டானோ அவர்களும் சேர்ந்து கொட்டுகிற கண்ணீர் வீரர்களின் வீரத்தைத் தூண்டிவிடுகிறது. அதனால், வீரர்கள் போட்டிபோட்டு 'நான்முந்தி, நீ முந்தி' என்று போரில் குதிக்கிறார்கள். உயிரையும் விட்டுவிடுகிறார்கள்.

''புரந்தார்கண் நீர்மல்கச்
சாகிற்பின்; — சாக்கா(டு)
இரந்துகோள்த் தக்க(து)
உடைத்து.'' 337

(புரந்தார் - ஆதரித்தவர். சாகிற்பின் - உயிர்விட நேர்ந்தால். சாக்காடு - மரணம் - இரந்து கோள்த்தக்கது உடைத்து - கேட்டு வாங்கக் கூடியதே.)

குறிப்பு ;- வீரம் விளைவதற்கு ஏற்ற மண் தமிழ்தான் என்று துணிந்து சொல்லலாம். அப்படிச் சொல்லத் தூண்டுகிறது பாடல்.

# நட்பு

1

கணவன், மனைவி, இவர்களுடைய உறவு நட்புத்தான், பெற்றோர் குழந்தைகள் இவர்களுடைய உறவும் நட்புத்தான். அன்புக்கு ஊற்றாக இருக்கிறது நட்பு. அன்பானது பல நிறங்களில் பொறுமை, அடக்கம், தியாகம் முதலிய உணர்ச்சிகளில் ஒளி வீசுவதற்கு இடம் கொடுக்கிறது நட்பு.

நட்புக்குக் காரணம் ஒன்றும் வேண்டியது இல்லை. காரணம் இல்லாமல் உண்டாகும் நட்பு. இன்ப ஊற்றாக இருக்கும் நட்பு.

குகனுக்கும் ராமனுக்கும் சம்பந்தம் இல்லைதான். ஆனாலும் நட்புப் பிறந்துவிட்டது. அந்த நட்பு இருவர் கண்களுக்கும் விருந்தாக அமைந்தது. மற்றவர் கண்களுக்கும் விருந்தாகவே அமைந்தது.

அந்த நட்பைப் பார்த்து அனுபவித்தான் ராமன். அனுபவித்து "யாதினும் இனிய நண்ப" என்று குகனைப் பார்த்து சொன்னான். குகனுக்கும் ராமனுக்கும் உண்டான நட்பைச் சீதையும் பார்த்து அனுபவித்தாள். அசோக வனத்தில் சோகமே உருவாய்த் தவித்துக் கொண்டிருக்கிற பொழுதுகூட ராமனுடைய நட்பு - குகனிடம் ராமனுக்கு உண்டான நட்பு கண்முன்வந்து தாண்டவம் ஆடுகிறது. அதைப் பார்த்துப் பார்த்து உருகுகிறாள் சீதை.

"வாழி நண்பினை உன்னி மயக்குவாள்"

நட்புக்கு இணையான வஸ்து உலகில் ஒன்றும் இல்லை. நட்பைப் போல் அழியாத வஸ்துவும் உலகில் வேறு இல்லைதான்.

இது கம்பர் கண்ட உண்மை. திருவள்ளுவர் கண்ட உண்மையும் இதுதான்.

திருவள்ளுவர் நட்பை எப்படி அனுபவத்தோடு வைத்துப் பார்க்கிறார் என்று பார்க்கலாம்.

"செயற்கரிய யாஉள
நட்பின்"

நட்பினால் முடியாத காரியம் ஒன்று இருக்கவா செய்கிறது என்றும் கேள்வியில் வைத்தே நட்பின் வியாபகத்தைக் காட்டிவிடுகிறார். உலகில் நல்ல செயலையே ஒருவன் செய்து வந்தால் அதுவே ஆனந்தம். அதுவே லட்சியம். அதுவே அவனுக்கு உறுதி. அவனைப் பாதுகாக்கும் சாதனம் அதுதான்.

நல்ல செயலைச் செய்கிறவனை ஒருவரும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அந்த நல்ல செயலே அவனைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்.

அதுபோல், "நட்புத்தான் குடும்பம். அதுதான் வாழ்க்கை, அதுதான் உலகம்" இப்படி லட்சியமாக நட்பை உடையவன் வேறு எதைத்தேட வேண்டும். எல்லாம் அவனிடம் இருக்கின்றது. நட்பு மயமாகவே அவ்வளவும் அவனிடம் இருக்கின்றது.

பாடல் முழுவதையும் இனிப் பார்க்கலாம்.

"செயற்கரிய யாஉள
நட்பின். — அதுபோல்
வினைக்கரிய யாஉள
காப்பு." 338

(செயற்கரிய யாவுள - உண்டாக்க முடியாதது என்ன இருக்கிறது? எல்லாவற்றையும் நட்பிலிருந்து உண்டாக்க முடியும். வினைக்கு அரிய யாவுள காப்பு - செயல் மூலம் உண்டாகாத பாதுகாப்பு வேறு என்ன இருக்கிறது. பாதுகாப்பு முழுவதும் செயலிலிலேயே இருக்கிறது.)

2

ஆர்வம் மிக்கவர்களுடன் சேர்ந்து கவியைப் பாடி அனுபவிக்க அனுபவிக்க ஆனந்தம் ஊறும். புதுப்புது ஒளி கவியிலிருந்து உண்டாகும். நல்லவர்களோடு பழகப்பழக - அவர்கள் உறவின் நயத்தைத் தெரியத் தெரிய புதுப்புது உணர்ச்சிகள் ஒளிவிடும்.

"நவில்தொறும் நூல்நயம்
போலும்; — பயில்தொறும்
பண்புடை யாளர்
தொடர்பு" 339

(நவில்தொறும் - படிக்கப்படிக்க. பயில்தொறும்-பழகப்பழக)

3

நல்ல நண்பர்கள், தம் நண்பனை மனக்கண்ணால் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். பாதை விலகிப் போகிறான் நண்பன் என்றால் ஓடிவந்து நல்வழிகாட்டுவார்கள். கண்டிப்பாய் நல்ல வழியிலேயே கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள். ஆபத்து நேராதபடி தடுப்பதில் ஜாக்கிரதையாக இருப்பார்கள். நல்ல நண்பர்கள், எதிர்பாராத வகையில் ஆபத்து வந்து விட்டால், கைவிட்டுப் போய்விட மாட்ட்டார்கள். ஆபத்து விலகும்வரை நண்பனோடு சேர்ந்து முயல்வார்கள். நஷ்டம் ஏற்பட்டாலும் அதை நஷ்டம் என்று நினைக்க மாட்டார்கள்.

நட்பு என்றால் அதுதான்.

"அழிவின் அவை நீக்கி,
ஆறுய்த்(து); — அழிவின்கண்
அல்லல் உழப்பதாம்
நட்பு." 340

அழிவின் அவைநீக்கி -அழிவுதரும் செயல்களைக் களைந்தெறிந்து. ஆறுஉய்த்து - நல்வழிப்படுத்தி. அழிவின்கண் - ஆபத்து நேர்கிற பொழுது. அல்லல் உழப்பது-நண்பனோடு சேர்ந்து துன்பப்படுவது தான். நட்பு-உண்மையான நட்பு.)

4

ஆடை அவிழ்வது தெரிகிறபொழுதே கையானது ஆடையை நோக்கிப் பாயும். நண்பனுக்கு ஒரு சிக்கல் வருகிறது என்று தெரிந்த உடனே பாய்ந்தோடி வரும் நட்பு.

"உடுக்கை இழந்தவன்
கைபோல; — ஆங்கே
இடுக்கண் களைவதாம்
நட்பு." 341

5

லாபம், நஷ்டம், இன்பம், துன்பம் எல்லாவற்றிலும் ஆதரவு தருவது தான் நட்பு தோளோடு தோள் சேர்ந்து தோய்வது போல வாழ்க்கையோடு இணைந்து செயல்படுவதுதான் நட்பு.

''நட்பிற்கு வீற்றிருக்கை
யாதெனில்; — கொட்பின்றி.
ஒல்லும்வாய் ஊன்றும்
நிலை'' 342

(வீற்றிருக்கை - ஆசனம். கொட்பு இன்றி - தளர்ச்சி இல்லாமல். ஒல்லும்வாய் - சந்தர்ப்பம் வருகிறபொழுதெல்லாம், கல்யாணமோ, மருவீடோ, கிரஹப்பிரவேசமோ, விவசாயமோ, வியாபாரமோ, தீர்த்தயாத்திரையோ, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஊன்றும் நிலை. சேர்ந்து செயல்படும் மனநிலையே, நட்பு என்னும் தேவதை கொலுவிருக்கும் சிம்மாசனம்.)

6

நட்புக்கு விரோதி பொய்தான். உண்மை இல்லாத அலங்காரப்பேச்சு நட்பை உலைத்துவிடும்.

''நாங்கள் ஆருயிர் நண்பர்கள். ஒன்றாய்ப் படித்தவர்கள், ஒரே அறையில் தங்கினோம்.'' என்று எவ்வளவுதான் பசப்பினாலும் செயலில் உண்மை இல்லாவிட்டால் நட்புக்கு உயிர் இருக்காது.

''இனையர் இவர்எமக்கு,
இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும்
நட்பு.'' 343

(இவர் இனையர் - அவர் எனக்கு இந்த வகையில் வேண்டியவர். யாம் இன்னம் என்று, புனையினும் - நான் இப்படி இப்படி அவருடன் பழகி இருக்கிறேன் என்று ஜோடித்தாலும் (உண்மை இல்லாவிட்டால்) நட்பு புல் என்னும் - நட்பானது உணர்ச்சி இல்லாமல் வறண்டுவிடும்.)

7

நட்பு என்பது உணர்ச்சியோடு ஒட்டிய காரியம். அப்படியே உடம்போடும், உயிரோடும் சேர்ந்து ஒட்டிக் கொள்கிறது. நட்பை எளிதில் உதறி எறிந்துவிட முடியாது. அதனால் பார்த்துத்தான் பழகவேண்டும். பழகிவிட்டுத் திணறக்கூடாது.

"நாடாது நட்டலிற்
கேடில்லை; — நட்டபின்
வீடில்லை நட்பாள்ப
வர்க்கு." 344

(நாடாது நட்டலில் கேடு இல்லை - விபரம் தெரியாமல் சிநேகிதம் செய்து கொள்வது ஆபத்து. அதுபோன்ற ஆபத்து ஒன்றும் இல்லைதான். நட்பு ஆள்பவர்க்கு - நட்பை ஒரு லட்சியமாகக் கொண்டவர்களுக்கு, நட்டபின் - பழகினபின். வீடு இல்லை- பழக்கத்தை விடமுடியாதுதான்.)

8

நல்லவர்களின் சிநேகிதத்திற்காக உடல், பொருள், ஆவி எல்லாவற்றையுமே தத்தம் பண்ணலாம்.

"குடிப்பிறந்து தன்கண்
பழிநாணு வானைக்,
கொடுத்தும் கொளல்வேண்டும்
நட்பு." 345

(குடி - நல்ல பண்பாடான குடும்பம். பழிநாணுவானை - தவறு களுக்கு வெட்கப்படுகிறவன், கூசுகிறவன்.)

குறிப்பு:- மனிதனையும், வாழ்க்கையையும் கண்ணாரக் கண்டு அனுபவிக்கிறார் குறளாசிரியர். நட்பு என்று ஒன்று மனித னிடம் இருக்கிறதே! அடடா! அது என்னென்ன ஆனந்தத்தை எல்லாம் விளைவிக்கின்றது!

வீராதி வீரனாக இருந்தாலும் எப்படி விலக முடியாமல் நிற் கிறான் நட்பில், எப்படி அதனோடு கரைந்து ஆனந்தத்தில் திளைக் கிறான் மனிதன்! என்றெல்லாம் பார்த்துப் பார்த்து அதிசயப்படு கிறார் கவிஞர். தமிழும் அப்படியே அதிசயப்படுகிறது.

9

சௌகர்யமாக இருக்கிறவரை நண்பர்களில் உண்மையானவர் யார்; போலியானவர் யார் என்பது தெரியாது. சிக்கல் ஒன்று ஏற்பட்டவுடன் உண்மையான நண்பர்கள் தோள்கொடுப்பார்கள். போலி நண்பர்கள் ஓடிவிடுவார்கள். அப்பொழுது தெரியும் நட்பின் திறம்.

வாழ்க்கையில் நேர்கின்ற நஷ்டமும் ஒரு லாபம் (உறுதி) ஆகவே அமைந்துவிடுகிறது. நட்பின் நிலையை உரைத்துப் பார்க்க வழிகிடைக்கிறது தானே.

"கேட்டினும் உண்டோர்
உறுதி; — கிளைஞரை
நீட்டி அளப்பதோர்
கோல்." 346

(ஓர் உறுதி உண்டு - லாபம் ஒன்று இருக்கிறது. கிளைஞர் - பழகுகிறவர்.)

10

நட்பில் உண்மை இல்லாமல் போலியாகப் பழகுகிறவன் பேதை. நட்பின் இன்பத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத பேதை அவன். பேதையோடு பழகக்கூடாது தப்பித்தவறிப் பழகிவிட்டால் விபரம் தெரிந்தவுடன் பேதைக்கு விடை கொடுத்து அனுப்பிவிடவேண்டும்.

பழகிய தோஷத்திற்குப் பலிவாங்காமல் அது போகாது. அது மனங்குளிர பொன்னோ, பொருளோ ஏதோ ஒன்றைக் கொடுத்தேனும் பைத்தியத்தை விட்டுத் தொலைத்து விடவேண்டும்.

அதுவும் ஒரு நஷ்டத்தில் கிடைக்கிற லாபந்தான்.

"ஊதியம் என்ப(து)
ஒருவற்கு; — பேதையார்
கேண்மை ஒரீஇ
விடல்." 347

(ஊதியம் - லாபம். கேண்மை ஒரீஇவிடல் - பழக்கத்தை விட்டு விடுவதுதான். வாழ்க்கையில் அடைகிற பெரிய லாபம், பொய்யை விட்டுத் தொலைக்கிறதில் இருக்கிறது.

11

சோதனையான நேரத்தில் கைவிட்டு ஓடிவிடுகிறவர்களை நினைத்தால் மனம் புண்படும். எல்லாவற்றையும் மறந்து உயிர் போகிற நேரத்தில்க்கூட அந்த நினைப்பு வந்தால், அது மனதைப் புண்படுத்தியேவிடும்.

"கெடுங்காலை கைவிடுவார்
கேண்மை; — அடுங்காலை
உள்ளினும் உள்ளம்
சுடும்." 348

கெடுங்காலை - நஷ்டம் உண்டாகி தொல்லைக்கு உள்ளாகிற வேளையில். கைவிடுவார் - விலகிப் போய் விடுகிறவர்களுடைய,

கேண்மை - பழக்கம். அவர்கள் உறவாடிய பொய்மை. அடுங் காலை உள்ளினும் - மரணவேளையில் நினைத்தாலும். உள்ளம் சுடும் - மனதை அது சுட்டுப் பொசுக்கும்.)

12

ஒருவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடன் படித்த சகமாணவன் நன்றாக உறவாடினான். நட்பே உண்டாகி விட்டது.

பிறகு இவன் அட்வகேட்டாக இருந்தான். அப்பொழுதும் பழக்கம் போய்விடவில்லை. அப்புறம் வட்டார நீதிபதியானான். துணைநீதிபதியாக வந்தான். மாவட்ட நீதிபதியாகவும் உயர்ந் தான். பழக்கமும் வளர்ந்து கொண்டே வந்தது.

ஒன்றாய்ப் படித்தவன் அடிக்கடி நீதிபதியிடம் வந்து 'அது செய்ய வேண்டும், இது செய்ய வேண்டும்' என்று கேட்பான். பரண்டுவான், முரண்டுவான், 'பழியோ பழி' என்று காத்துக் கிடப்பான். தொந்தரவுதான் என்றாலும் பழக்கம் முறிந்து விட வில்லை.

பிறகு இவன் உயர்நீதிமன்ற நீதிபதியாக வந்தான். அப் பொழுதும் பழக்கம் இருந்தது.

அடிக்கடி அவன் வந்து தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தான். மகனுக்கு வேலை, மகளுக்கு வேலை, மருமகனுக்கு வேலை என்று தொந்தரவு கொடுத்தான். தாங்கிக் கொண்டார். மெள்ள மெள்ள வழக்குகளுக்கு உள்ளேயே வாலைவிட்டு ஆட்ட ஆரம்பித்து விட்டான்.

விபரம் தெரியாத வெகுளி - பொறுப்பற்ற பயித்தியம் என்பது நீதிபதிக்குத் தெரியும். வேண்டும் என்று தொந்தரவுபடுத்தும் கொடுமை இவனிடம் இல்லை என்பதும் நீதிபதிக்குத் தெரியும். ஆனாலும் போகிறபோக்கு அபாயமாக இருக்கிறதே என்று வருந் தினார்.

பழகிய பழக்கத்தை மனம் இறுகப்பிடித்து வைத்திருக்கிறது, உதற முடியவில்லை. அதனால் நொந்து நொந்துதான் ஆற வேண்டி இருக்கிறது.

நண்பனுடைய அறியாமையை நோக்கி நொந்து கொள்ள வேண்டி இருக்கிறது. அவனுக்கும் தனக்கும் ஒரு உறவை உண் டாக்கி வைத்ததே விதி, அந்த விதியை நோக்கியும் நொந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

''எத்தனை ஆண்டுகளுக்குமுன் பழகிய பழக்கம். இத்தனை ஆண்டுகளாகப் பழுதுபடாமல் அதை வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறதே விதி, அது அல்லவா ஆட்டி வைக்கிறது அவன் அறியாமையை'' என்றும் நொந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

"பேதைமை ஒன்றோ
பெருங்கிழமை என்றுணர்க;
நோதக்க நட்டார்
செயின்." 349

(நட்டார் - பழகியவர். நோதக்கசெயின் - மனம் நோகும்படியான காரியங்களைச் செய்தால். பேதைமை ஒன்றோ - அறியாமை ஒன்று மட்டும் அதற்குக் காரணம் இல்லை. பெருங்கிழமை - தொடர்ந்து வந்த உறவு - விடாது பிடித்துவந்த பழக்கம் இதுவும் சேர்ந்து செய்கிற காரியந்தான் என்பதைப் பார்க்க வேண்டும்.)

13

மனம்நோகும் அளவுக்குப் பயித்தியகாரத்தனமாக நடந்து கொண்டாலும் பழக்கத்தை உதறி எறிந்து விடமுடியாது. பண் பாடு நிறைந்தவர்கள், தொந்தரவைத் தாங்கிக் கொள்வார்கள்.

அவர்களால் வழிதவறி நடக்கவும் முடியாது. நட்பைவிட்டு விடவும் முடியாது. அவர்கள்பாடு சங்கடந்தான்.

இத்தகைய தியாக மூர்த்திகளை விரோதிகளும் (விழையார்) மதித்துப் போற்றுவார்கள் (விழையப்படும்).

"விழையார் விழையப்
படுப; — பழையார்கண்
பண்பில் தலைப்பிரியா
தார்." 350

(விழையார் - எதிரிகளாலும். விழையப்படுப - விரும்பப்படுவார் கள். பழையார்கண் - நெடிய உறவு கொண்டவர்களிடம். பண்பில் தலைப்பிரியாதார் - உறவைவிட்டு விடாமலும், பண்பை விட்டு விடாமலும் பழகுகிறவர்கள்.)

14

தவறுக்கு இடம் கொடுக்காமலும் நட்புக்குப் பங்கம் ஏற்படா மலும் வாழ்கிற வாழ்க்கை அற்புதமான ஒரு கலைதான். கற்பு, கற்பு என்று சொல்கிறோமோ அந்தச் சொல்லுக்குரிய நேர் பொருள் இந்த அற்புதக்கலைதான்.

கலைநயம்மிக்க கற்புமயமான இந்த நட்பை ஒரு வரப் பிரசாதம் என்றே பாராட்டுவார்கள் மக்கள். எந்த நாட்டில் உள்ளவர்களும் இப்படி ஒரு அற்புதக்கலையைப் பார்த்தால் அதிசயப்படவே செய்வார்கள். அவர்கள் மனதைவிட்டு இந்த அற்புதம் விலகவே விலகாது.

''கெடாஅ வழிவந்த
கேண்மையார் — கேண்மை
விடாஅ விழையும்
உலகு.'' 351

(கெடா - ஒழுங்கு கெடாமல். வழிவந்த கேண்மையார் கேண்மை - உறவை மேலும் மேலும் புதுப்பித்துக் கொள்கிறவர்களின் நட்பை. விடாவிழையும் - மறக்காமல் நினைத்து நினைத்து இன்புறுவர். உலகு - உலக மக்கள்.)

குறிப்பு:- குறளைப் படிக்கப் படிக்க நாவில் தேனூறும். இதயத்தில் ஊறும் தேன். நமது வாழ்க்கையே இன்ப ஊற்றாக, உணர்ச்சி ஊற்றாக, அன்பு விளையும் அற்புத ஊற்றாக நமக்கு அமைந்துவிடும்.

மனிதர்களிடத்தும் வாழ்க்கையினிடத்தும் காதலே உண்டாகி விடும். பக்தியே உண்டாகிவிடும்.

அவ்வளவையும் தமிழ் வார்த்தைகள் எளிதில் செய்து காட்டு கின்றன.

# கொடுக்கல் வாங்கல்

1

தமிழகத்தில் ஒரு அதிசயத்தைப் பார்க்கிறோம். கலை, கவி, இவற்றை நெடுகிலும் ஆதரித்து வந்திருக்கிறார்கள் வள்ளல்கள். கவிஞர்களையும் கலைஞர்களையும் தெய்வங்களை மதிப்பதுபோல் மதித்து, தெய்வங்களுக்கு உபசாரம் செய்வது போலவே உபசாரம் செய்து வந்திருக்கிறார்கள். இந்த மரியாதையும் உபசாரமும் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. இன்றளவும் இருக்கிறது.

மூலை, முக்கு, பட்டி, தொட்டி எல்லா இடங்களும் தமிழகம் முழுவதும் இந்த மரியாதையைப் பார்க்கிறோம். இந்த உபசரிப்பைப் பார்க்கிறோம்.

மனித இனத்தில் ஒருபிரிவினரோ என்று சொல்லும் அளவுக்கு வள்ளல்கள் நிறைந்திருந்தார்கள். கலைஞர்களையும் கவிஞர்களையும் ஆதரித்து, கலைகளையும் கவிகளையும் அனுபவிப்பதையே பிறவிப் பயன் என்று அவர்கள் நம்பினார்கள். அப்படியே செயல் பட்டார்கள்.

இது உலகில் வேறு எங்கும் காணமுடியாத ஒரு அதிசயம்.

கோவிலுக்குப்போய் இறைவனுக்கு (மூர்த்திக்கு) அபிஷேகம் செய்யப் பாலும் தேனும் கொடுக்கிறார்கள் பக்தர்கள்.

கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது அபிஷேகம். இதை வைத்து, பக்தர்கள் பிச்சை போடுகிறார்கள் என்றோ, இறைவன் யாசகம் எடுக்கிறார் என்றோ சொல்லமுடியாது தானே.

பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொடுத்து விருந்தாலும் பாராட்டாலும் வள்ளல்கள் கவிஞர்களை அபிஷேகம் பண்ணிக்கொண்டே இருந்தார்கள். அப்படிச் செய்தது ஒரு தெய்வத் தொண்டுதான்.

இந்த அற்புதத்தைக் குறளாசிரியர் அனுபவித்திருக்கிறார். புலவர்களுக்கு வள்ளல்கள் வாரிவாரி வழங்குவதை அனுபவித்திருக்கிறார். புலவர்கள் வள்ளல்களிடம் வாங்குவதில் ஆனந்தம் அடைகிறார்கள். வள்ளல்களோ புலவர்களுக்குக் கொடுப்பதில் ஆனந்தம் அடைகிறார்கள்.

இந்த இன்பத்தை யார்தான் இழப்பார்கள்? வள்ளல்களால் இழக்கமுடியுமா? புலவர்களால்த்தான் இழக்க முடியுமா?

இனிக் குறளைப் பார்ப்போம்.

"இரத்தலும் ஈதலே
போலும்; — கரத்தல்
கனவினும் தேற்றாதார்
மாட்டு." 352

(கரத்தல் - இல்லை என்று பொய்சொல்லி மறைக்கும் கருமித்தனம். கனவினுந் தேற்றாதார் மாட்டு – துளியும் இல்லாதவர்களிடம், அன்பும் அருளும் நிறைந்த வள்ளல்களிடம். இரத்தலும் - புலவர்கள் வாங்குவதும் (ஒரு ஆனந்தமான செயல்தான்) ஈதலே போலும் - புலவர்களுக்கு வள்ளல்கள் கொடுப்பதும் ஆனந்தமான செயல்தான்).

2

நம்மிடம் உள்ள செல்வத்திற்கு லட்சியமே நல்லகாரியங்களுக்குப் பயன்படுவதுதான் என்னும் (கடன் அறிவார்) உண்மையை உணர்ந்தவர்கள் வள்ளல்கள். ஒளிப்பு மறைப்பு இல்லாத வள்ளல்கள் கொடுக்க, அதைக் கை ஏந்தி வாங்குகிற இன்பமே இன்பம்.

"கரப்பிலா நெஞ்சில்க்
கடனறிவார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏஎர்
உடைத்து." 353

(கரப்புஇலா - ஒளித்து மறைக்காத. இரப்பும் - வாங்குவதும், ஓர்- ஒப்பற்ற. ஏர் உடைத்து - அழகுடையதுதான்.)

3

கேட்ட பொருள் கேட்டபடியே கிடைத்துவிடுகிறது. அப்படி யானால் ஆனந்தந்தானே! புழுக்கமாய் இருக்கிறது. மழை பெய் தால் நல்லது என்று சொல்கிறோம். அப்பொழுதே வாடைக் காற்றும் மழையும் வந்துவிட்டது. ஆனந்தத்திற்குக் கேட்கவா வேண்டும்.

'இன்பம் ஒருவற்கு
இரத்தல், — இரந்தவை,
துன்பம் உறாஅ
வரின்.'' 354

(துன்பம் உறாவரின் - கஷ்டம் இல்லாமல், சந்தேகத்திற்கோ, திகைப்பிற்கோ இடம் இல்லாதபடி கிடைத்துவிட்டால்.)

4

கலைஉணர்வும் பண்பாடும் உடையவர்களிடமே(இரத்தக்கார்) ஒன்றைக் கேட்க வேண்டும். அவர்கள் மறைக்க மாட்டார்கள். ஏமாற்ற மாட்டார்கள். கொடுப்பதற்கு முகம்சுளிக்க மாட்டார் கள். மகிழ்ச்சியோடு கொடுப்பார்கள்.

பிரபுக்களில் பெரும்பாலோர் அப்படி வள்ளல்களாக இருந் தார்கள். ஒன்றிரண்டு பேர் மாத்திரமே விதிவிலக்காக இருந்தார் கள். விதிவிலக்காக அமைந்த பிரபு ஒருவரிடம் புலவர் ஒருவர் மரியாதையை எதிர்பார்த்தார். கிடைக்கவில்லை.

இந்த அவமானம் பிரபு குலத்துக்குத்தான். புலவர் குலத்துக்கு இல்லை. அப்படி இருந்தது சமுதாய நிலை.

''இரக்க இரத்தக்கார்க்
காணின்; — கரப்பின்
அவர்பழி; தம்பழி
அன்று.'' 355

(இரத்தக்கார்க்காணின் - கலையையும் அனுபவிக்கிறார் ஒரு பிரபு என்றால், இரக்க - அவரிடம் மரியாதையை எதிர்பார்க்க வேண்டியதுதான். அது தவறில்லை, கரப்பின் - மரியாதை செய்ய அவருக்கு விருப்பம் இல்லை. நழுவுகிறார் என்றால். அது அவரு டைய நஷ்டம். புலவருக்கு அதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை.)

5

வள்ளல்கள் இருக்கவே செய்கிறார்கள். தமிழகம் முழுவதும் இருக்கிறார்கள். என்ன செய்கிறார்கள் அவர்கள்? கவிஞரை வர வழைக்கிறார்கள். வாழ்த்தி வரவேற்கிறார்கள். பன்னீர் தெளித்து ஆரவாரித்து வரவேற்கிறார்கள். கவிஞரின் தெய்வீகப் பாடல் களைக் கேட்டு அனுபவிக்கிறார்கள். கவிஞருக்குச் சந்தனம் பூசு கிறார்கள். பொன்னாடை போர்த்துகிறார்கள். விருந்துபசாரம் நடத்துகிறார்கள். முத்தாரம் சூட்டுகிறார்கள். கவிஞரைப் பல்லக்கில் உட்கார வைத்து மேளதாள முழக்கத்தோடு பட்டணப் பிரவேசம் நடத்துகிறார்கள். பல்லக்கை வள்ளல்களே தோள் கொடுத்துச் சுமக்கிறார்கள்.

இந்தக்காட்சி மக்களின் கண்களைவிட்டு அகலுமா? அப்படியே நிலைத்து நிற்கும் காட்சி,

"கரப்பிலார் வையகத்(து)
உண்மையால், கண்ணின்;
இரப்பவர் மேற்கொள்
வது." 356

(இரப்பவர் மேற்கொள்வது-புலவர்மேல் பொன்மாரியும் பூமாரி யும் விழுகிற அற்புதம். கண்ணின்-பார்ப்பவர் கண்ணிலேயே நிற்கிறது.)

(6)

ஈனத்தனம், லோபித்தனம், கருமித்தனம் என்றெல்லாம் சொல்லப்படுகிற கரப்பு இருக்கிறதே, அது ஒரு கொடுமை (இடும்பை) தான். அந்தக் கொடுமைக்கு ஆளாகாத வள்ளல் களைப் பார்த்தாலே போதும். அவர்கள் முகத்தில் தாண்டவமாடு கிற அன்பும் பிரியமும் வறுமையை விரட்டிவிடும்.

"கரப்பிடும்பை இல்லாரைக்
காணின், — நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு
கெடும்." 357

(கரப்புஇடும்பை — மறைக்கும் கொடுமை. நிரப்பு இடும்பை — வறுமைத்துன்பம். எல்லாம் ஒருங்குகெடும் — வறுமைபடுத்துகிற கொடுமை ஒன்றல்ல, இரண்டல்ல. எண்ணிறந்தவை. அவ்வளவும் ஒழிந்துபோகும்.)

7

புலவர்கள் இல்லாவிட்டால் வள்ளல்கள் வாடிவிடுவார்கள். ஜனங்களின் கண்களும் பூத்துப் போகும். வாழ்க்கையோ ருசி இல்லாமல் வெறுத்துவிடும்.

உயிரற்ற பொம்மைகள் நடமாடும் யந்திர உலகம் போல உணர்ச்சியே இல்லாமல்ப் போய்விடும்.

"இரப்பாரை இல்லாத
ஈர்ங்கண்மா ஞாலம்,
மரப்பாவை சென்றுவந்
தற்று." 358

(ஈர்ங்கண்மாஞாலம் - குளிர்ந்த பெரிய இவ்வுலகம். மரப் பாவை - மரப்பாச்சி. சென்று வந்துஅற்று - போவது போலவும், வருவது போலவும் உணர்ச்சி இல்லாமலே இருக்கும்.)

குறிப்பு:- வள்ளன்மையும் கலைஇன்பமும் இல்லாத உலகம் உயிரற்ற செத்த உலகந்தான்.

# பழக்கவழக்கம்

## 1

''யான்ஏதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக்(கு) என்கடவேன்''

என்று இறைவனிடம் கூறுகிறார் மாணிக்கவாசகர்.

''இந்த உடம்போடு, இந்த மனசோடு, இந்த உலகத்தோடு, நான் சேர்ந்திருக்க வேண்டும். சேர்ந்திருந்து அனுபவிக்க வேண்டும். வேறெங்கும் போய்விடக்கூடாது''. என்று கேட்கிறார் மாணிக்க வாசகர்.

வாழ்க்கையின் ருசி இன்னதென்று தெரிந்தால் உயிர்வாழ் வதில் அப்படி ஒரு தேட்டம் உண்டாகிவிடும். அப்பர் சுவாமி களுக்கும் அந்த ருசி இன்னதென்று தெரிந்திருந்தது. அதனால்,

''மனித்தப் பிறவியும்
வேண்டுவ தேஇந்த
மாநிலத் தே''

என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

எத்தனைதடவை வேண்டுமானாலும் பிறக்கத்தயார், என்கி றார் அப்பர் சுவாமிகள். இந்த உலகில் உள்ள நலமும் வளமும் அப்படி உயர்வானவை என்று விளங்கிவிட்டது சுவாமிகளுக்கு.

மனிதனும் அவனுடைய காரியங்களும் உன்னதமானவை. எங்கும் இல்லாதவை.

இது சம்பந்தமாகக் கம்பரிடம் கேட்டால், ''தேவர்கள் என்ன, பிரமா என்ன, சிவபெருமான்தான் என்ன, எல்லோருமே மனித

னுடைய பண்பாட்டையும் வாழ்க்கை நயத்தையும் பார்த்து வெட்கப்பட்டு விட்டார்கள். பேரண்டம் முழுவதுக்குமே தனி நாயகமாக விளங்குகிறான் மனிதன்'' என்று விளக்கிச் சொல்கிறார்.

''ஆறுகொள் சடிலத்தா னும்
அயனும்என்(று) இவர்கள்ஆதி
வேறுள குழுவைஎல் லாம்
மானுடம் வென்றதம் மா'

விவசாயம், தொழில், வியாபாரம் இவைகளோடு நின்றுபோய் விடவில்லை மனிதனுடைய காரியம். அன்பை உண்டாக்கி இருக்கிறான். அறத்தை உண்டாக்கி இருக்கிறான். பக்தியை உண்டாக்கி இருக்கிறான். கலைகளை உண்டாக்கி இருக்கிறான். கவியை உண்டாக்கி இருக்கிறான். மொழியை உண்டாக்கி இருக்கிறான். அனுபவிக்கிறான். சேர்ந்து ஒன்றுபட்டு அனுபவிக்கிறான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் மறக்காமல் இவற்றைப் பாதுகாத்து வருகிறான்.

ஒரு செடியானது தனக்குரிய பண்பை - தன்னுடைய பூ, காய், வித்து ஆகியவற்றை லட்சக் கணக்கான வருஷங்களாய் விடாமல் காப்பாற்றி வருகிறது. அப்படியே மனிதனும் தன்னுடைய பண்பாட்டையும், உணர்ச்சியையும் விடாமல்ப் பாதுகாத்து வருகிறான்.

அறவுணர்வுகளையும் பண்பாட்டையும் மனிதன் பாதுகாக்க, குடும்பமானது சாதனமாக இருக்கிறது. சந்தர்ப்பம் கொடுக்கிறது. மனிதனுடைய செயல் ஒவ்வொன்றிலிருந்தும் மனிதப் பண்பைப் புதுப்புது வர்ணங்களில் பிரகாசிக்கச் செய்கிறது குடும்பப் பாங்கு. இதை உணர்ந்தே குடும்பத்தை 'குலம்' என்று சொல்கிறோம். 'குடிப்பிறப்பு' என்று சொல்கிறோம். 'குல ஒழுக்கம்' என்று சொல்கிறோம்.

மனிதனுடைய செயலில் மனிதப் பண்பு இல்லை. அது வெறும் போலியான காரியமாகவே இருக்கிறது என்றால். அவன் வாழும் குடும்பத்தைப் பற்றியே யோசிக்கத் தோன்றும்.

அவனுடைய தாய், தந்தை, பாட்டன் இவர்களும் அன்பு இல்லாமல்தான் வாழ்ந்தார்களா? உண்மை இல்லாமல், உணர்ச்சியே இல்லாமல்தான் செயல்பட்டார்களா? என்றெல்லாம் யோசனை பண்ண வைத்துவிடும்.

உண்மையும் உணர்ச்சியும் குடும்பத்தோடு சேர்ந்து கிடக்கின்றன.

''நலத்தின்கண் நார்இன்மை
தோன்றின்; — அவனைக்
குலத்தின்கண் ஐயப்
படும்'' 359

(நலத்தின்கண் - ஒருவனுடைய செயலில். நார் இன்மை தோன்றின் - ஒழுங்கின்மை, முறை இன்மை, கட்டுப்பாடு இன்மை இவை இருந்தால், குலத்தின்கண் - அவன் பிறந்து வளர்ந்த குடும்பப் பாங்கின் மேல், ஐயப்படும் - அன்பும் உண்மையும் உள்ள குடும்பத்தில் இவன் எப்படிப் பிறந்திருக்க முடியும் என்னும் சந்தேகம் மற்றவர்களுக்கு வந்துவிடும்.)

2

ஒரு குடும்பம் பண்பாட்டையும் அன்பையும் உயிராக வைத்து வளர்த்து வந்திருந்தால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் அடக்கம் இருக்கும், மரியாதை இருக்கும், பக்தியே இருக்கும்.

நல்ல பழக்கவழக்கம் - நாலுபேர் மதிக்கத்தக்க பழக்கவழக்கம் ஒருவனிடம் இருந்தால். அவன் பார்க்கப் பார்க்க அழகாக இருப்பான். அவனை நினைக்க நினைக்கப் பெருமையாக இருக்கும்.

முறைகேடான செயலை நினைக்கவே கூசுகிறவனிடம் (நாணுடைமை) அழகு (நலம்) ஊறவே செய்யும்.

''நலம்வேண்டின் நாணுடைமை
வேண்டும்; — குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும்
பணிவு.'' 360

(நலம் - அழகு. நாண் - மரியாதையோடு சேர்ந்த கூச்சம். குலம் வேண்டின் - பிறந்த குடும்பத்தின் பெருமையை நிலைநாட்ட விரும்பினால். யார்க்கும் பணிவு வேண்டுக - பணிவும் அடக்கமும் வாழ்க்கை முழுவதும் இருக்கவேண்டும்

3

மேலும் மேலும் சிறப்புற வேண்டும் என்றால் மேலும் மேலும் பணிந்து போக வேண்டும்.

''பெருக்கத்து வேண்டும்
பணிதல்; — சிறிய
சுருக்கத்து வேண்டும்
உயர்வு'' 361

(உயர்வு - தலைக்கனம். திமிரும் ஆணவமும் வளமான வாழ்க்கையைக்கூட நாசமாக்கிவிடும்.)

4

ஒழுங்கு இருக்கிறவரை, அன்பு இருக்கிறவரை, மரியாதை இருக்கிறவரை மனிதன் தெய்வமாக விளங்குவான். மேலே சொல்லிய பண்பாட்டைவிட்டு மனிதன் நழுவி வந்து விட்டால், பேயைவிடக் கேவலமாக நினைக்கப்படுவான். மிருகத்தைவிட மோசமாக எண்ணப்படுவான்.

மண்டையில் இருக்கிறவரை ரோமத்திற்கு மரியாதைதான். உபசரிப்புத்தான். மண்டையைவிட்டு உதிர்ந்துவிட்டால்.

''தலையின் இழிந்த
மயிரனையர்; — மாந்தர்
நிலையின் இழிந்தக்
கடை.'' 362

(மாந்தர் நிலை - மனிதப் பண்பு. இழிந்தக்கடை - வழுவிய நிலையில்.)

5

கல்வி, ஆராய்ச்சி, அறிவு, நுட்பம், நிறைந்தவன் ஒருவன். அவனுடைய திறமையை மதித்து அவனுக்கு அமைச்சர் பதவி கொடுத்தார்கள்.

உண்மையை எடுத்துப் பார்ப்பதிலும், சீர்தூக்கிக் காண்பதிலும் தீர்மானிப்பதிலும், செயல்படுவதிலும் அவனிடம் ஒரு நேர்த்தி இருந்தது. ஒழுங்கிருந்தது. துணிச்சலே இருந்தது.

அதனால் அவனுக்குப் பெரிய புகழ் கிடைத்தது. அதிகாரம் நிறைந்தவனாய்; ஆடம்பரம் மிக்கவனாய் அவன் வாழ்ந்தான். எப்பொழுதும் அவன் வீடு கல்யாண வீடுபோல் கலகல என்றிருந்தது. நூற்றுக்கணக்கில் அவன் தயவை நாடிவருவார்கள். திருவிழாக் கூட்டந்தான் வீடு.

வசதியும் வளமும் அவனிடம் பொங்கின. பாராட்டும் வாழ்த்தும் குவிந்துகொண்டே இருந்தன. நெடுந்தூரத்தில்

உள்ளவர்களுக்கும் அவனுடைய பெருமையும் புகழும் கண்ணுக் குள்ளேயே இருந்தன. ஓங்கி உயர்ந்த மலைபோல இருந்தது அவனுடைய தோற்றம்.

இப்படி இருந்தவன் கீழான செயல்களை இடைஇடையே செய்து வந்தான். அது எப்படியோ ஒரு பிரச்சனையை உண்டு பண்ணிவிட்டது. அது காரணமாக அமைச்சர் பதவி போய் விட்டது.

நிலைமை படுமோசந்தானே.

"குன்றின் அனையாரும்
குன்றுவர்; குன்றுவ
குன்றி அனைய
செயின்." 363

(குன்றின் அனையாரும் - மலை போன்ற பெரும்புகழ் பெற்ற வரும். குன்றுவர் - ஒடுங்கிவிடுவர். குன்றுவ - தலைகுனியத்தக்க, மானக்கேடான செயலை. குன்றி அனைய செயின் - குன்றி மணி அளவே செய்தாலும் - செய்து பிடிபட்டுவிட்டால் அவ்வளவுதான். எல்லாம் போய்விடும். அநாதையாய் விடுவான் மனிதன்.)

6

நிலைத்த புகழ் உடையவன்தான் ஆனந்தமாக வாழமுடியும். அவன் மட்டமான செயலில் ஈடுபடமாட்டான். மட்டமான பேர் வழிகள் தயவை நாடி நிற்கவும் மாட்டான்.

வாழ்க்கையில் உண்மையும் ஆனந்தமும் பெருக வாழ்வதுதான் புகழ். அந்தப் புகழும் ஆனந்தமுமே மோட்ச இன்பம். அதாவது புத்தேள் நாட்டு இன்பம்.

மட்டமானவனுக்கு திடுதிப்பென்று யோகம் வந்துவிடும். குபேரனாகிவிடுவான். இந்திரனாகிவிடுவான். அவனை ஒட்டிக் கொண்டால், அது கிடைக்கும், இது கிடைக்கும் என்கிற ஆசை மனதில் எழலாம். பலர் - ஏதோ தங்கள் காரியத்தை ஒழுங்காய்ப் பார்த்துக் கொண்டிந்ருதவர்களில் பலர் அப்படியே அவனை நாடிப் போவார்கள்.

வாழ்க்கையையும் உண்மையையுமே இன்பம் என்று நம்பு கிறவன் மட்டமானவனுடைய தயவை நாடவேண்டியது இல்லை.

"புகழ்இன்றால் புத்தேள்நாட்(டு)
உய்யாதால்; — என்ஒருவன்
இகழ்வார்பின் சென்ற
நிலை." 364

(புகழ் இன்று - புகழுக்குரிய நல்ல செயல்களைச் செய்யாமல், (ஒருவன்) புத்தேள் நாட்டு உய்யாது - மோட்சம் என்னும் உலக இன்பத்தைப் பெறமுடியாது. அப்படி இருக்க ஒருவன் இகழ்வார் பின்சென்ற நிலை என் - மனிதன் ஒருவன், மட்டமானவன் பின்னே சென்று துதிபாட வேண்டிய அவசியம் என்ன? ஒன்றும் இல்லைதான்.)

7

கேவலமானவன் தயவில் ஆடம்பரமாக வாழ்வதைவிட, சிரமப்பட்டு வாழ்க்கையை நடத்துவது எவ்வளவோ மேல்.

"ஒட்டார்பின் சென்றொருவன்
வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல்
நன்று." 365

(ஒட்டார் - ஒழுங்கோடும் உண்மையோடும் ஒட்டாதவர். அந் நிலையே - அந்த உறுதியில், கெட்டான் எனப்படுதல் - கஷ்டப்படு கிறான் மனிதன் என்று பிறர் சொல்ல. வாழ்தல் நன்று - காலந் தள்ளுவது மேலானதே.)

8

உண்மைக்குப் புறம்பான காரியம் கேவலமானது. அது. மானம், மரியாதை எல்லாவற்றையும் அழித்துவிடும். மானம் இல்லாமல், மரியாதை இல்லாமல், உணர்ச்சியே இல்லாமல் உயிரற்று வாழ்கிறதில் பிரயோசனம் இல்லை. மாமிசப் பிண்ட மாகிய உடம்பை அப்படிக் காப்பாற்ற என்ன இருக்கிறது?

"மருந்தோமற்(று) ஊன்ஓம்பும்
வாழ்க்கை; — பெருந்தகைமை
பீடழிய வந்த
இடத்து." 366

(மருந்தோ - அமிர்தம் போன்று உயிர்ச்சத்து உடையதா, இல்லையே! எது? ஊன்ஓம்பும் வாழ்க்கை - உடம்பை வளர்க்கும் வாழ்க்கை. மனிதப் பண்பின் தலையாய அற உணர்வும், அதைக்

காக்கும் ஆண்மையும் போன பிறகு வாழ்கிறது உடம்பை வளர்க்கிற காரியந்தான். (பெருந்தகைமை - தயாளம், பீடு - வீரம்)

9

மீளமுடியாத பழிக்கு ஆளாகிவிட்டால் மனம் கசந்துவிடும். கசப்பை நீக்கி இன்பத்தைக் கொடுப்பது மரணந்தான். துன்பத்தில் உழன்று உழன்று சாகமுடியாது மனிதனால்.

கவரிமானும் அப்படியே. ரோமம் உதிர்ந்து விட்டால், மானமே போய்விட்டதாக நினைத்து உயிரை விட்டுவிடுகிறது.

''மயிர்நீப்பின் வாழாக்
கவரிமா அன்னார்,
உயிர்நீப்பர் மானம்
வரின்.'' 367

வாழா - உயிர் வாழாத. மா - மான். உயிர்நீப்பர் - உயிரை விடுவார்கள்.

10

கேவலம் வந்த உடன், மானம் உடையவர்கள் உயிரையே விட்டுவிடுவார்கள். ஆனால், அவர்களுடைய காரியம், உயிர் போனதுபோல் போய்விடுவதில்லை.

என்றென்றும் நிலைத்து ஒளிமயமாய்ச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது மனிதப் பண்பு.

அந்த ஒளியையே தங்களுக்கு வழிகாட்டும் விளக்கு - தெய்வ விளக்கு என்று நம்பி வழிபடுகிறார்கள் மக்கள்.

''இளிவரின் வாழாத
மானம் உடையார்
ஒளிதொழு(து) ஏத்தும்
உலகு.'' 368

(இளி - கேவலம். உலகு - உலக மக்கள்.)

# உண்மை ஒளி

அன்பு, அருள், பொறுமை, அடக்கம், ஈகை ஆகிய பண்புகளும் இப்பண்புகளைக் காக்கும் ஆண்மையுமே வாழ்க்கை. அதாவது உண்மையான வாழ்க்கை. இப்படி வாழ்கிற வாழ்க்கையில் தான் ருசி இருக்கிறது. இந்த ருசியையே ஒளி என்று சொல்கிறார் குறளாசிரியர்.

மனிதனிடம் உள்ள செல்வம், உண்மையான செல்வம், ஒரே ஒரு உண்மையான செல்வம் மேலே சொல்லிய ஒளி தான்.

ஒளி இல்லாமலும் மனிதன் வாழ முடியும். சாப்பிட முடியும். தூங்கமுடியும். வேலைக்குப் போக முடியும். சம்பளம் வாங்க முடியும். ஒளியுடையான் போலவே இவனும் வாழமுடியும். ஆனால் இவன் வாழ்வது ஒளி அல்ல. இளி(கேவலம்).

''ஒளிஒருவற்(கு) உள்ள
வெறுக்கை: — இளிஒருவற்(கு)
அஃதிறந்து வாழ்தும்
எனல்.'' 369

(வெறுக்கை-செல்வம். இளி-கேவலம். அஃது இறந்து-அருளும் வீரமும் இல்லாமல். வாழ்தும் எனல்-வாழமுடியும் என்று சண்டித் தனம் செய்தல்.)

2

ஒளியோடு வாழ்கிறவன் தான் மனிதன். அவன் தான் உயர்ந் தவன் (மேலோன்). ஒளி இல்லாமல் வாழ்கிறவன் கயவன். அவன் மகாமட்டமானவன். (கீழோன்)

ஆனால் உலகில் வேறொரு காட்சியைப் பார்க்கிறோம். பணம் உடையவன், அதிகாரம் உடையவன், பதவி உடையவன், செல்வாக்கு உடையவன், சாதாரண மக்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு நான் தான் உயர்ந்தவன் என்று முன்னுக்கு வந்து நிற்கிறான். அவனை மேலோன் என்று பாராட்டுகிறது உலகம்.

பெரிய இடத்தில் இருப்பதால் அவன் மேலோன் தான். இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால்உண்மை ஒளிஅவனிடம் இல்லை என்றால் அவன் கீழோன்தான்(மேலோன்ஆகமாட்டான்).

இதை எப்படி தாளத்திலும் நடனத்திலும் வைத்துச் சொல்கிறது தமிழ் என்று பாருங்கள்.

''மேலிருந்தும் மேல்அல்லார்
மேல்அல்லர்; — கீழிருந்தும்
கீழ்அல்லர்; கீழல்ல
வர்.'' 370

(மேல் அல்லார்-ஒழுக்கம் இல்லாதவர். மேல் அல்லர்-உண்மை மனிதர் அல்லர். கீழ்அல்லவர்-மேலான பண்புடையவர். கீழ்அல்லர்-மிக உயர்ந்த மனிதர்.)

குறிப்பு :- அற்புதமான பாட்டு; பாடப்பாட நாவில் தேன் ஊறும். 'கீழல்லவர்' என்று ஒரு சுழற்றுச் சுழற்றிஅடிக்கிறதுதாளம். வார்த்தைகளும்,தாளமும் உணர்ச்சிக்கு அப்படி ஒளிகொடுக்கிறது.

3

வாழ்க்கையின் உண்மை ஒளியைக் கண்டு அனுபவிக்கிறவர் லட்சிய புருஷர். புண்ணிய ஆத்மாக்கள். அவர்களுடைய பெருமை உருட்டும் புரட்டும் நிறைந்த கயவனுக்கு எப்படி விளங்கும்.

''சிறியார் உணர்ச்சியுள்
இல்லை; — பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும்
நோக்கு.'' 371

(பேணிக்கொள்வேம் என்னும் நோக்கு-வழிபட்டு அனுபவிக்க வேண்டும் என்னும் புத்தி. கயவர்களுக்கு வராது,)

4

கொழுப்பும், மப்பும் நிறைந்த ஆணவத்திடம் ஆனந்த உணர்ச்சி இருக்காது. ஆனந்த உணர்ச்சியே இல்லாத அந்தச் சிறுமை(கயவன்) இருக்கிறதே, அது, தற்பெருமை ஒன்றிலேயே மிதக்கும்.

உண்மையும், ஒளியும் நிறைந்த உத்தமர்களிடம் ஆனந்த உணர்ச்சி பெருக்கெடுத்துப் பாயும்.

அவர்கள் பெரியவர்கள். பெருமைக்கு உரியவர்கள்.

இருந்தாலும் அவர்களிடம் தற்பெருமையே இல்லை.

இந்த அதிசயம் தமிழில் எப்படித் துள்ளி விளையாடுகிறது என்று பாருங்கள்.

பெருமை பெருமிதம்
இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து
விடல்.'' 372

(பெருமிதம் இன்மை பெருமை-ஆணவம் இன்மையே ஆனந்தம். பெருமிதம் ஊர்ந்துவிடல் சிறுமை-ஆனந்தம் இன்மையே ஆணவம்.)

5

ஆணவம் மிக்கவன் பெரியோர்களிடம் தடித்தனமாகவே நடந்து கொள்வான். வரன்முறை கடந்து கன்னாபின்னா என்று அவர்களைப் பற்றிப் பேசுவான்.

ஒரு மகானுக்குப் பாராட்டு விழா நடந்தது. அகம்பாவம் நிறைந்த ஒரு அதிகாரியும் பாராட்டுரையில் கலந்து கொண்டார். எல்லோருக்கும் பயந்தான். ''என்ன சொல்லித் தொலைக்குமோ இந்தத் திமிர் பிடித்த மிருகம்'' என்று கலங்கினார்கள். நல்ல வேளை. ஒன்றும் விபரீதம் ஏற்படவில்லை. 'நல்லவர், வல்லவர், அன்பே சொல்லுவார், அருளே புல்லுவர்' என்று ஒருவகை எது கையில் முக்கிவிட்டார் தன் புத்தியை.

அதிசயந்தானே அது! ஆணவமே செய்து செய்து, அவனுக்கே அதில் ஒரு வெறுப்பு உண்டாகி விட்டதாம். அந்த வெறுப்பில் விளைந்ததுதானாம் இந்த நல்லுரை.

''இறப்பே புரிந்த
இழிபாம்; சிறப்புத்தான்
சீரல் லவர்கண்
படின்.'' 373

(இறப்பே புரிந்த இழிபாம்-நெறிமுறை நீங்கிய செயலையே வாழ் நாள்முழுவதும் செய்ததால், அதில் ஒரு சலிப்பு அவனுக்கு உண்டாகி விட்டதாம். சீர் அல்லவர்கண் சிறப்புபடின்-அயோக்கி யர்களிடம் யோக்கியமான செயல் உண்டானால், அதற்கு மேலே சொல்லியது தான் காரணம்.)

# கூடா நட்பு

1

வெடிக்கும் அதிர்வேட்டு பார்க்க அழகாகவே இருக்கும். அதை மடியில் வைத்துக் கொண்டால் அது ஆபத்தான காரியந்தான். நேரம் வந்தவுடன் வெடித்துவிடும். வெடியை வைத்துக் கொண்டது எவ்வளவு ஆபத்தான காரியம் என்பது இவ்வளவும் ஆனபிறகே தெரியும்.

வேண்டாதவர்களின் பசப்பு மொழியை நம்பி அவர்களுடன் பழகுவது ஆபத்து. பெரிய ஆபத்தாய்ப் போய்விடும் அது.

"சீறிடம் காணின்
எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர்
நட்பு." 374

(நேரா-மனம் ஒன்றுபடாமல். நிரந்தவர்-(காரியத்திற்காக) கலந்து உறவாடுகிறவருடன் வைத்துக் கொள்கிற. நட்பு-பழக்கமும். உறவும். பட்டடை-வெடிக்கும் அதிர்வேட்டு. சீறு இடம் காணின்-வெடிக்கும் தருணம் வந்தவுடன் என்ன உண்டாகுமோ அதை உண்டாக்கிவிடும்.)

நட்பு என்பது இதயத்திலிருந்து உண்டாவது. நட்பு இருக்குமானால் இதயம் கனியும். உணர்ச்சிமயமாக அது கனியும்.

2

உண்மை நண்பர்கள் பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டிக் கொள்வார்கள். கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும் கொள்வார்கள்.

பாராட்டிலுஞ்சரி, கண்டிப்பிலுஞ்சரி, உண்மையிருக்கும். ஆர்வமே மேலோங்கி நிற்கும். ஏமாற்று இருக்காது.

இதயம் ஒன்றுபடாமல், ஏமாற்றுவதற்காகப் பழகுகிறவர்களிடம் உண்மை இருக்காது. அன்பும் இருக்காது. ஆனால் எது செய்தாலும், எதைச் சொன்னாலும், என்னத்தைப் பேசினாலும் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள். பொய்தான் அவ்வளவும்.

பொய்யான புகழுரையை மெய்யானதென்று நம்பிவிடக் கூடாது. நம்பி அவர்களை நண்பர்களாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. மிக விழிப்பாக இருக்கவேண்டும் என்கிறார் குறளாசிரியர்.

"மனத்தின் அமையா
தவரை; — எனைத்தொன்றும்
சொல்லினால்த் தேறல்ப்பாற்(று)
அன்று" 375

(மனத்தின் அமையாதவரை-இதயபூர்வமாக ஒட்டாத போலி ஆசாமிகளை, எனைத்து ஒன்றும் சொல்லினால்-அவர்கள் எதை எதையோ பற்றி நம்மைப் பாராட்டுவார்கள். அவர்கள் அவ்வாறு பாராட்டுகின்ற சொற்களைக் கொண்டு, தேறல் பாற்று அன்று-நண்பர்கள் என்று அங்கீகரித்து விடக்கூடாது.)

3

இதயத்தோடு இதயமாய் ஒட்டிப் பழகுகிறவர்களின் பழக்கத்திற்குத்தான் நட்பு என்று பெயர். அவ்வாறு ஒட்டாமல் தங்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாக வைத்துப் பழகுகிறவர்களின் பழக்கத்திற்கு வஞ்சகம் என்று பெயர். வஞ்சகமாகப் பழகுகிறவர்களை 'நட்டார்' என்கிறார் குறளாசிரியர்.

எவ்வளவு இனிமையாகப் பாராட்டினாலும் சரி, அவர்கள் சொல், ஆர்வத்திலிருந்து உண்டான சொல்லல்ல; ஏமாற்றுவதற்கு வந்த சொல்லேதான். உடனுக்குடன் இது தெரிந்துவிடும்.

"நட்டார்போல் நல்லவை
சொல்லினும்; ஒட்டார் சொல்
ஒல்லை உணரப்
படும்." 376

(நட்டார் போல்-நண்பர்களைப் போல, ஒல்லை-தாமதமில்லாமல் வேகமாக.)

4

வஞ்சகமாக நம்முடன் உறவாடுகிறவர்கள் நம்மைப் புகழ்வதோடு நின்றுவிடமாட்டார்கள். நம்மிடம் பலபடியாக உருகவுஞ் செய்வார்கள். தங்களுடைய பொய்யான ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் கண்ணீர் விட்டு அழுதுங் காட்டுவார்கள். அவ்வளவும் நம்மை ஏமாற்றுவதற்குத்தான். ஏமாற்றி நம்மை வஞ்சிப்பதற்காகத்தான்.

இருளில் தன்னந்தனியாய் சிக்கிவிட்ட திருடன் கைகூப்பி வணங்குவான். உடனே அவனை நம்பி "வா" போலீஸ் நிலையத்திற்கு என்று கூப்பிட்டான். பத்தடி தூரம் கூடவே வருவான். தக்கநேரம் பார்த்து மறைத்து வைத்திருக்கும் கத்தியால் ஒரு கீறு கீறித் தப்பித்தும் விடுவான். அவ்வளவும் அவனைச் சரியாகக் கவனிக்காமல் ஏமாறுவதால் ஏற்படும் பலன். சரியாக அவனைக் கவனிக்கும் ஆற்றலிருந்தால், அவன் எத்தனை தடவை கும்பிட்டாலும் ஏமாற மாட்டோம்.

உன்னுடைய ஆயுதங்களை முதலில் எடுத்துக் கீழே வை என்று சொல்லி அவற்றைக் கைப்பற்றிக் கொள்வோம். ஆயுதங்களை நம் வசத்தில் வைத்துக் கொண்டு பத்தடி அவனை முன்னே போக விட்டு நடத்திக் கொண்டு போவோம்; அக்கம்பக்கம் அவன் திரும்பினால், சவுக்கால் அவன் உடம்பைத் தடவிக் கொடுத்துக் கொண்டே போவோம்.

அப்படியானால் தான் நாம் ஏமாறவில்லை என்றாகும்.

பொய்யாக உருகி ஏமாற்றுகிறவர்களிடமும் அப்படி ஒரு ஜாக்கிரதை வேண்டும்.

"தொழுதகை உள்ளும்
படைஒடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும்
அனைத்து." 377

(தொழுதகை உள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்-வணங்கும் கையினுள் மறைந்து நிற்கும் கொடிய ஆயுதம் போன்றவர் தான் வஞ்சகர். ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து-அவர்கள் விடுகிற போலிக் கண்ணீரும் அந்த ஆயுதம் போல வஞ்சகமானது தான்)

# எளிமையின் அருமை

## 1

அன்பு என்பது உலகம் முழுவதும் இருக்கிறது. மனிதனிடம் மட்டும் அல்ல. ஏனைய பிராணிகளிடமும் அன்பு இருக்கிறது.

ஆனால், அருமை பாராட்டல் என்பது மனிதனிடம் மட்டுமே உண்டு. தமிழ் மக்களாகிய நம்மிடம் அருமைபாராட்டல் என்பது கலையாக வளர்ந்து வந்திருக்கிறது.

குத்துவிளக்கிடம் தாய்மார்களுக்கு எவ்வளவு அருமை இருக்கிறது என்பதைப் பார்த்தால் தெரியவரும். மூர்த்திக்கு, ஒவ்வொரு கோயிலிலும் எப்பொழுதும் அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. அலங்காரம் நடந்து கொண்டிருக்கிறது. ஆராதனையும் நடந்த வண்ணமாக இருக்கிறது. அருமை பாராட்டுவதில் என்றாவது சலிப்பு ஏற்பட்டது உண்டா?

பசுவினிடம் நாம் வைத்திருக்கிற அருமைக்கு அளவு கிடையாது. எட்டாத தூரத்தில் உள்ள அன்னிய தேசத்திற்குப் போனாலும் சரி, நம்வீட்டு முற்றம், கோலம் இவை அங்கும் நம் கண்முன் வந்து நிற்கும். குத்துவிளக்கு, பசு, கோவில், மூர்த்தி, வழிபாடு இவை எல்லாம் நம்மை விடாமல் சேர்ந்தே வரும்.

அருமை பாராட்டல் என்னும் உணர்ச்சி நம் உள்ளத்தோடு உள்ளமாய் சேர்ந்து கிடக்கிறது.

நண்பர்கள், சுற்றத்தார், குடும்பத்தார் இவர்களிடம் உண்டாகிற அருமைக்கு, அளவே இல்லை. குழந்தைகளிடம் அருமை. விருந்தினரிடம் அருமை, நம்முடன் ரயிலிலோ மோட்டாரிலோ

பிரயாணம் செய்பவர்களுடன் அருமை, ஒரு விஷயத்தை அழகாக எடுத்துச் சொல்கிறவர்களிடம் அருமை, இப்படியாக அருமை உணர்ச்சி நம்மிடம் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது.

அது பிரியத்தை உண்டாக்குகிறது. மரியாதையை உண்டாக்குகிறது. உறவிலும் பழக்கத்திலும் ஒரு நயத்தையே உண்டாக்கி விடுகிறது. அனுசரித்துப் போகும் மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தாங்கிக் கொள்ளும் மனப்பான்மை, இவ்வளவையும் கொடுக்கிறது அருமை உணர்ச்சி.

எல்லாவற்றிற்கும் மேலாக உபசரிக்கும் பண்பை கலையாக உண்டாக்கி விடுகிறது அருமை பாராட்டல்.

அருமை பாராட்டல் என்னும் பண்பை, பண்புடைமை என்று சொல்கிறார் குறளாசிரியர்.

அருமை பாராட்டல் என்னும் உணர்ச்சி மனிதனின் எளிமையிலிருந்து பிறக்கிறது. எளிமை என்னும் உணர்ச்சி பெரிய பெரிய காரியங்களைக்கூட லகுவாகச் செய்து முடிக்கும் தெய்வீக சக்தியாக இருக்கிறது.

திருமணம் நடத்துவது என்பது எவ்வளவு பெரிய காரியம். சுவாமிக்குத் திருவிழா நடத்துவதுபோல் வீட்டில் திருமணத்தை நடத்தி விடுகிறான் மனிதன். திருமணம் போன்ற சடங்குகள் பலவற்றைத் தொடர்ந்து நடத்திவிடுகிறான் மனிதன். எளிமையும் அருமையும் சேர்ந்தே குறிப்பிட்ட காரியங்களை நடத்தி முடிக்கிறது.

''எண்பதத்தால் எய்தல்
எளிதென்ப; — யார்மாட்டும்
பண்புடைமை என்னும்
வழக்கு.'' 378

(எண்பதத்தால் - நினைத்தபடி நயமாகவும் சிறப்பாகவும். எய்தல் - காரியத்தை நடத்துதல். எளிது என்ப - எளிதான செயல்தான் என்று சொல்வார்கள்.)

## 2

மனிதனுக்கும் ஏனைய பிராணிகளுக்கும் வேறுபாடு பண்புடைமையை வைத்தே இருக்கிறது. பண்புடைமை இல்லாவிட்டால் மனிதன் உண்மையான மனிதன் இல்லைதான்,

"உறுப்பொத்தல் மக்கள்ஒப்(பு)
அன்றால்; — வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம்
ஒப்பு." 379

(உறுப்பு ஒத்தல் - காது, கண், நாக்கு, மூக்கு இவை சேர்ந்து இருப்பதாலோ, எலும்பு, நரம்பு, ரத்தம், தோல் எல்லாம் ஒரு தன்மைத் தாய்க் கட்டுண்டு நிற்பதாலோ. மக்கள் ஒப்பு அன்று - மனிதன் உயர்ந்தவன் ஆகிவிடமாட்டான். விலங்கு முதலியவைகளிடமும் அங்கங்களின் சேர்மானமும் கட்டுமானமும் இருக்கவே செய்கின்றன. வெறுத்தக்க - மதிக்கத்தக்க. பண்பு ஒத்தல் - பழகப் பழக அருமையும் எளிமையும் கசிந்து ஊறுகிற நயம் ஒன்று உணர்ச்சியோடு இருப்பதுதான் (மனிதனுக்குப் பெருமை). ஒப்பதாம் ஒப்பு - மனிதனுக்கு இணை மனிதனே தான்.)

## 3

அருமையும் எளிமையும் உடைய பண்பாளர்கள் ஞானத்திற்கும், அருளுக்கும் உறுதுணையாக இருக்கிறார்கள். அவர்கள் இருப்பதே அவைகளுக்கு உற்றதுணை (பயன் உடையார்) தான். உயர்ந்த மேலான லட்சியங்களை அவர்கள் உபசரிக்கிறார்கள். பக்தி பரவசத்தோடு உபசரிக்கிறார்கள். அந்தப் புண்ணிய ஆத்மாக்களின் தயவால்தான் அன்பு இருக்கிறது. உண்மை இருக்கிறது.

இந்த உபகாரத்தை மனதில் வைத்து தரும தேவதை இவர்களைப் பாராட்டுகிறது.

"நயனொடு நன்றி
புரிந்த, பயனுடையார்
பண்புபா ராட்டும்
உலகு." 380

(நயனொடு - பணிவோடு. நன்றி புரிந்த பயன் உடையார் - உணர்ந்த லட்சியங்களுக்குத் துணையாக இருந்து உதவும் உத்தமர்களின். பண்பு - தயவை. உலகு பாராட்டும் - தரும தேவதையே வாழ்த்தும்.)

## 4

பிரியமும் உபசாரமும் ஆகிய மனிதப் பண்புதான் முக்கியம். அவை இருந்தால்தான் மனிதன். இல்லாவிட்டால் அவன் மனிதன்

இல்லை. அவனுடன் படிப்பு இருந்தாலும் ஆராய்ச்சித் திறன் இருந்தாலும் அவன் மனிதன் இல்லை.

"அரம்போலும் கூர்மைய
ரேனும், — மரம்போல்வர்
மக்கள்ப்பண்(பு) இல்லா
தவர்." 381

(கூர்மையரேனும் - நுட்ப உணர்ச்சி உடையவரானாலும்.)

5

அன்பர்களோடு கூடிக்குலாவி கலகலப்பாய் இருக்கிறவர்களுக்கு வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும். ஒரே வெளிச்சமாய் இருக்கும் வாழ்க்கை.

சிரித்து மகிழாமல் எப்பொழுதும் படபடப்போடு இருக்கிறவனுக்கு வாழ்க்கையில் வெளிச்சம் இருக்காது. இருட்டுத்தான். ஒரே அமாவாசை இருட்டுத்தான்.

"நகல்வல்லர் அல்லார்க்கு
மாயிரு ஞாலம்;
பகலின்பால் பட்டன்(று)
இருள்." 382

(பகலின் பால்பட்டன்று - வெளிச்சமாய் இருக்காது.)

# கண்ணோட்டம்—அனுசரித்து வாழ்தல்

## 1

மனிதர்களில்ப் பலர் சொத்து இல்லாமல் வாழ்கிறார்கள். குடி இருக்க வீடுகூட இல்லாமல் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். உத்யோகம், மாதச் சம்பளம், டெலிபோன், மோட்டார், ரோட்டரிகிளப் மெம்பர் பதவி, இப்படி எதுவும் இல்லாமல் காலந் தள்ள முடியும். ஆனால் தாட்சண்யம் இல்லாமல் முடியாது. ஒரு நிமிஷம்கூட வாழ முடியாது.

தாட்சண்யம் என்பது மனச்சாட்சியில் கசிகிற அமிர்தம். அது வாழ்க்கையில் ஏற்படும் எரிச்சலை, அரிப்பை, புண்ணை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. உடம்பு, மனம், ஆன்மா எல்லாவற்றையும் குணப்படுத்துகிறது அமிர்தம்.

தாட்சண்யம் என்னும் அற்புதப் பண்பையே கண்ணோட்டம் என்று சொல்கிறார் குறளாசிரியர்.

ஒரு குடும்பத்தைப் பார்த்தால் போதும். ஒரு குட்டி தேசமே தான் குடும்பம் என்று தெரியவரும். தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, அம்மான், அத்தை, மதனி, கொழுந்தி, மனைவி, மக்கள் என்று பலர் இருக்கிறார்கள். மேலும் நண்பர்கள் என்று பலர் இருக்கிறார்கள் சொந்தக்காரர் என்று பலர் இருக்கிறார்கள். இவ்வளவு பேரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. தனித்தனியான மனதும் சிந்தனையும் உடையவர்களே. ஆனாலும் இத்தனை பேருடனும் அனுசரித்து வாழ்கிறான் மனிதன். முண்டு முடிச்சுகள், மேடு பள்ளங்கள், கரடுமுரடுகள் ஆங்காங்கு எதிர்ப்படவே செய்யும். அவ்வளவுக்கும் ஈடுகொடுத்து

மனிதன் சேர்ந்து அனுசரித்து வாழ்கிறான். இன்றளவும் வாழ்கிறான். ஒவ்வொரு மனிதனும் வாழ்கிறான். ஆற்று நீரோட்டத்தில் ஒரு தெப்பக்கட்டை எப்படி அனாயாசமாக போய்க் கொண்டிருக்குமோ, அப்படியே மனிதனும் அனாயாசமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகிறான்.

அப்படிச் சுளுவாய்ப் போவதற்குத் துணைசெய்கிறது தாட்சண்யம். அதாவது கண்ணோட்டம்.

"கண்ணோட்டம் என்னும்
கழிபெரும் காரிகை
உண்மையால் உண்டிவ்
உலகு." 383

(கண்ணோட்டம் - தாட்சண்யம். கழிபெருங் காரிகை - அளவிட முடியாத அற்புதம். உண்மையால் - இருக்கிறபடியால்தான். உலகு - குடும்பநலம், வாழ்க்கைநலம் என்னும் மனித உலகம். காரிகை -அழகு, பேரழகு. உலகம் என்பது மனைவி, மக்கள், உறவினர், நண்பர், இப்படி அழகுமாய்ப் பூத்துக் குலுங்குகிறது. அதை அனுபவித்து வாழ்வதுதான் வாழ்க்கை. அதுதான் உலகம்)

2

உணர்ச்சியோடு பாடலைப் பாடுவதுதான் இசை. உணர்ச்சியோடு பாடலைப் பாடுவது எல்லோருக்கும் உகந்த காரியமே. அதனால் பாடலைப் பாடுவதற்கு உரிய இசை - பாங்கு, எல்லோரிடமும் இருக்கிறது.

குருகுலவாசம் பண்ணிப் படிக்கிறேன். கல்லூரியில் போய்ப் படிக்கிறேன் என்று வந்து விட்டால் பாட்டைப் பாட வராது.

சுருதியோடு சேராமலும், அபசுரத்தோடும் காட்டுக் கூப்பாடு போடவே தோன்றும். ராகம் என்றும், ஆலாபனை என்றும், தாளம் என்றும், சுரவரிசை என்றும் பேயாட்டம் ஆடவே வைத்து விடும்.

தொண்டைக்குள் ஆடு, மாடு, காக்கை, குருவி, யானை, குதிரை இவைகளைக் கொண்டுபோய் அடைத்து அவைகளையும் சேர்த்து கூப்பாடு போட வைத்துவிடும்.

பாடலை அனுபவத்து உணர்ச்சியோடு பாடவராத இசையால் புண்ணியம் இல்லை, அது இசையே இல்லைதான்.

''பண்என்னாம் பாடற்(கு)
இயைபின்றேல்; — கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத
கண்.'' 384

(பண் - இசை. கண்ணோட்டம் இல்லாத கண் - தாட்சண்யம் என்பது இல்லை என்றால் அந்த மனிதனிடம். கண்என்ஆம் - கண்ணும் பார்வையும் இருந்தும் புண்ணியம் இல்லை.)

3

உறவுக்காக – நட்புக்காக, உண்மையைப் பலியிட்டுவிடக் கூடாது. எந்த வகையிலும் உண்மையைக் காத்தே ஆக வேண்டும்.

உண்மைக்குத் துரோகம் செய்யாமல் நண்பர்களையும், உற வினர்களையும் சமாளிக்க வேண்டும். அப்படிச் சமாளிப்பதுதான் வாழ்க்கை.

அப்படி வாழும் அவர்களுக்கு எல்லோரும் வேண்டியவர்கள் ஆகி விடுவார்கள். உலகமே வேண்டிய - மிகமிக வேண்டிய ஒரு சிநேகிதன் ஆகிவிடும்.

''கருமம் சிதையாமல்க்
கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை உடைத்திவ்
உலகு.'' 385

(கருமம் - காரியம். சிதையாமல் - பழுதுபடாமல். அதாவது உண்மைக்கு மோசம் வந்து விடாதபடி. கண்ணோட வல்லார்க்கு - தாட்சயம் காட்டுகிறவர்களுக்கு.)

4

வெட்டொன்று துண்டிரண்டு என்று பேசுகிறவர்கள் - இம்மி அளவுகூட விட்டுக் கொடுக்காதவர்கள், சிறு தவறுதலைக் கூடப் பொறுத்துக் கொள்ளாதவர்கள், விளையாட்டாகச் சொன்ன சொல்லைக்கூட அனுபவிக்காமல் அதை வினையாக வைத்து, 'அதற்குப் பதில் இது என்று' வஞ்சந் தீர்க்கிறவர்கள் இப்படி உலகில் பலரும் இருக்கிறார்கள்,

அவர்களிடத்தும் தாட்சண்யம் காட்டவேண்டியதுதான். அவர்களையும் அனுசரித்துக் கொண்டுபோக வேண்டியதுதான்,

உலக வாழ்க்கை என்பது கல்யாண வீடுமாதிரி. எல்லோரையும் வரவேற்று உபசரிக்க வேண்டியதுதான். அதுதான் முறை.

''ஒறுத்தாற்றும் பண்பினார்
கண்ணும்கண் ஓடிப்
பொறுத்தாற்றும் பண்பே
தலை.'' 86

(ஒறுத்து ஆற்றும் பண்பினார் கண்ணும் - பதிலுக்குப் பதில் என்று வட்டியும் முதலுமாய்க் கேடுசெய்யும் இயல்புடையவர்களிடத்தும். கண்ஓடி - தாட்சண்யம் காட்டி. பொறுத்து ஆற்றும் பண்பேதலை- அனுசரித்து ஆதரிப்பதுதான் சிறந்த பண்பாகும்.)

5

தாட்சண்யத்திற்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதைப் பத்து அல்லது பதினைந்து வயதுப் பையனைப் பார்த்தால் தெரியும்.

அவனை ஒத்தப் பருவத்துப் பையனுடன் பழகுகிறான். உறவாடுகிறான். அவன் செய்யும் காரியங்களையே இவனும் செய்கிறான்.

தலைமுடியை வாரிச் சிங்காரிப்பதிலிருந்து, சாப்பாட்டுமுறை, ஆடை அலங்கார முறை, உறவு முறை எல்லாவற்றிலும் நட்பின் ஆதிக்கம் ஏறி நிற்கிறது.

வீட்டுக்கும், ஊருக்கும் ஒவ்வாத காரியங்கள் - முரண்பட்ட செயல்கள், அருவருக்கத்தக்கவை. பண்பாட்டுக்கு விரோதமானவை. இவையெல்லாம் விஷந்தான். மனதை அணுஅணுவாகக் கொல்லும் நஞ்சேதான்.

அந்தக் கொடிய நஞ்சையும் நாகரீகம் என்னும் பெயரில் ஏற்றுக் கொள்கிறான் பையன். அதற்காக உயிரையே கொடுக்கவும் தயார் என்கிறான் பயல்.

பழக்கம், உறவு, இவற்றிலிருந்து சுரக்கிற தாட்சண்யம், அப்படி ஒரு விட்டுக் கொடுக்கும் நிலையை உண்டாக்கிவிடுகிறது.

பள்ளிக்கூடத்தில் படிக்கிற பையனையே - பெண் பிள்ளையையே தாட்சண்யம் இந்த ஆட்டு ஆட்டினால் பெரியவர்களை விட்டு வைக்கவா செய்யும்?

''பெயக்கண்டும் நஞ்சுண்(டு)
அமைவர்; — நயத்தக்க
நாகரிகம் வேண்டு
பவர்.,' 387

(பெயக்கண்டும் - ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தித் தூண்டுவது. நஞ்சு - விஷம். உண்டு அமைவர் - ஏற்றுக் கொள்ளவே செய்கிறார்கள். நண்பன் புகை பிடிக்கிறான் என்றால் இவனும் பிடித்துத்தானே தொலைக்கிறான். அவன் சாராயம் குடிக்கிறான் என்றால் இவனும் குடிக்கிறான்.

நயத்தக்க - நயம் கசிகிற (தாட்சண்யம் காரணமாக). நாகரிகம் வேண்டுபவர் - பழக்கம், உறவு, என்னும் பெயரில் புதிய போக்குகளை மேற்கொள்கிறவர்கள்.)

குறிப்பு :- அற்புதமான பாடல். சமுதாய இயலைக் கவி உருவங்கொடுத்து அபிநயத்தோடு சேர்த்து வைத்துக் காட்டுகிறது பாடல்.

# சான்றாண்மை

1

மகாபாரதத்தில் ஒரு கதை.

துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் பாண்டவர்களின் மேல் பொறாமை கொண்டு பல கேடுகள் புரிந்து வந்தார்கள். ஆசிரியராகிய துரோணரே பஞ்சபாண்டவர்களை மட்டும் நன்றாகக் கவனிக்கிறார். தங்களை அவ்வளவாகக் கவனிக்கவில்லை என்று பாட்டனா (பீஷ்ம)ரிடம் புகார் சொன்னார்கள்.

பீஷ்மருக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. ஒருநாள் துரியோதனாதியர்களிடம் நூறு ரூபாய் கொடுத்தார். "அப்பனே இந்த ரூபாய்க்கு வீடு நிறைய சாமான் வாங்கி வைக்க வேண்டும். இன்று மாலை பார்க்க வருவோம்" என்றார். சரியென்று அவர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

பாண்டவர்களை அழைத்து அவர்களுக்கும் நூறு ரூபாய் கொடுத்து, அப்படியே சொல்லியனுப்பினார்.

மாலை ஐந்து மணிக்கெல்லாம் இருதிறத்தாருடைய இல்லங்களையும் பார்க்க, பீஷ்மர் கிளம்பினார். மந்திரிப் பிரதானிகள், கிருபாச்சாரியர், துரோணாச்சாரியர், அசுவத்தாமன், விதுரன் முதலிய பலரும் பீஷ்மருடன் சேர்ந்து வந்தார்கள்.

முதலில் பாண்டவர்களின் வீட்டை நோக்கி வந்தார்கள், பாண்டவர்கள் அந்த வீட்டை நன்றாகத் துப்புரவு செய்து வெள்ளையடித்திருந்தார்கள். வெளியில் நல்ல கோலங்களைப் போடச் செய்திருந்தார்கள். உள்ளே அற்புதமான சித்திரங்களைத்

தீட்டியிருந்தார்கள். விளக்குகளையும் பொருத்தியிருந்தார்கள். தெய்வ விக்ரகம் ஒன்றை வைத்து அதன் பக்கத்தில் குத்து விளக்கையும் ஏற்றி வைத்திருந்தார்கள்.

சந்தனம், புஷ்பம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், குங்குமம், பன்னீர், கனிவகைகள் இவ்வளவும் தட்டுத் தட்டாக நிறைந் திருந்தன. ஆங்காங்கே பெரிய பெரிய சமுக்காளங்கள் விரிக்கப் பட்டிருந்தன.

விருந்தினர் அவ்வளவு பேருக்கும் உணவு வகைகள் தயாரிக்கப் பட்டிருந்தன. வாசல் நடையை ஒட்டிய பகுதியில் பெரிய அண்டா ஒன்றில் நீர் நிரப்பப்பட்டு, அதன் பக்கத்தில் ஐந்தாறு செம்புகளும் இருந்தன.

பீஷ்மரும் மற்றவர்களும் அந்த வீட்டின் பக்கம் வருகிற பொழுதே புளகாங்கித மடைந்தார்கள். சாம்பிராணி மணமும், சந்தன மணமும், மலர்களின் வாசனையும் இதயத்திற்குச் சுகம் கொடுத்தது.

தருமருடைய தம்பிமார்களில் ஒருவன் அண்டாவிலிருக்கும் நீரைச், செம்பால்மொண்டு விருந்தினர் ஒவ்வொருவருக்கும், கால், கை, சுத்தம் செய்யப் பணிவோடு கொடுத்தான். மற்றொருவன் பன்னீரைத் தெளித்தான். இன்னொருவன் சந்தனமும், குங்கும மும் வழங்கினான். மற்றொரு தம்பியோ வீடு முழுவதையும் சுற்றிக் காண்பித்து ஒவ்வொருவருக்கும் மலரும், கனியும், வெற்றிலை பாக்கும் வழங்கினான். எல்லோரும் மகிழ்ந்து விம்மிதம் அடைந்தார்கள். பணிவோடும் கனிவோடும் உண வருந்த வேண்டுமென்று - விருந்தருந்த வேண்டினார் தருமர்.

பீஷ்மரும், மற்றவர்களும் ஆனந்தமடைந்தார்கள். அவர் களுடைய உள்ளம் நிறைந்தது, வீடும் நிறைந்தே இருந்தது.

அப்படியே துரியோதனன் வீட்டை நோக்கி நடந்தார்கள். வீட்டுக்கு முன்னே பல மாட்டு வண்டிகள் இருந்தன. அவிழ்த்துப் போடப்பட்ட அவ்வண்டிகள் மேல் துரியோதனுதியர் சேர்ந்து சேர்ந்து இருந்தார்கள்.

துரியோதனனைப் பார்த்து பீஷ்மர் சொன்னார். ‘‘வீடுநிறைய நீ என்ன வாங்கி வைத்திருக்கிறாய். நாங்கள் அவற்றைப் பார்ப் பதற்காக வந்திருக்கிறோம். வீட்டைத் திறந்து காட்டு’’

துரியோதனன் சொல்கிறான், "வீட்டை எப்படித் திறக்க முடியும், முப்பது வண்டி வைக்கோலை வாங்கி அடைத்தல்லவா நிறைத்து வைத்திருக்கிறோம்." பீஷ்மரும் மற்றவர்களும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள்.

நிறைவு என்பது எடையையோ, அளவையோ பொறுத்த தன்று. அது, பண்பாட்டையும் ஒழுங்கையும் பொறுத்திருக்கிறது. நிறைவு என்பதற்கு அழகான வேறொரு சொல் தமிழில் உண்டு. அதுதான் சால்பு,

சால்பு என்கிற சொல், சால, சால், சாலும், எனப் பல உருவங்களில் நடமாடும்.

அன்பு, உண்மை, உபகாரம், தாட்சண்யம், நாணம் முதலிய குணங்கள் இதயத்தில் வற்றாமலிருக்க வேண்டும்.

ஒவ்வொரு சோதனையிலும் மேலே குறிப்பிட்ட பண்புகள் தளராமல் நிலைத்து நிற்க வேண்டும். அப்படிப் பொங்கி நிற்பதற்குச் சால்பு என்று பெயர்,

"அன்புநாண் ஒப்புரவு
கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய
தூண்." 388

(நாண் - மரியாதை, வாய்மை - உண்மை. ஐந்து - ஐந்தும்)

மனித தத்துவம் என்கிற கொடி தொடர்ந்து பூத்துக் காய்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்காகவே வாழ்க்கை என்கிற பெரிய பந்தல் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பந்தலுக்கு ஊன்றப்பட்ட நான்கு தூண்களும், குறுக்குவசமாகப் போடப்பட்ட பெரிய உத்தரமும், ஆக இந்த ஐந்தும் வேறொன்றுமில்லை. அன்பு, நாணம், உபகாரம், தாட்சண்யம், உண்மை ஆகிய ஐந்து குணங்களேதாம். அருங்குணங்களாகிய ஐந்து தூண்களையும் ஊன்றி வைத்தது, சால்பு என்னும் அற்புத தத்துவம்.

அன்பு, நாணம், உபகாரம், தாட்சண்யம், உண்மை முதலிய பண்புகள் தனித்தனியான வடிவமும், இயல்பும் கொண்டவை போலச் சாதாரண மக்களின் கண்களுக்குத் தோன்றும். அது உண்மை அல்ல.

சால்பு என்கிற தத்துவமே, அன்பென்றும், மரியாதை யென்றும், உபகாரமென்றும், பொறுமையென்றும், உண்மை என்றும் செயல்படுகிறது.

இதைத் தெரிந்து கொண்ட அதிசயம்,

''ஐந்து சால்(பு) ஊன்றிய
தூண்.

என அழகாய் உருவெடுக்கிறது.

2

தங்கத்தின் மாற்று (தரம்) எவ்வளவென்று நிர்ணயம் செய்ய உரைகல் (கட்டளைக்கல்) இருக்கிறது.

உத்தமர்களிடம் நிறைந்துள்ள குணநலத்தை அளந்து கணிப்பது முடியாத காரியம்.

அவர்களுடைய செயல்கள் ஒவ்வொன்றும், அளவிட முடியாத குணநலன்களை வெளிப்படுத்துகிறது.

அவர்கள் செயல்களில் ஒன்றைப் பார்ப்போம்.

உத்தமர்கள் யாருக்கும் தீங்கு செய்யமாட்டார்கள். நன்மையே செய்வார்கள். அதனால் யாரும் அவர்களுக்கு விரோதி யாக இருக்க முடியாது. இது நமக்குத் தெரியும்.

ஆனால், வேண்டுமென்றே, விரோதங்கொண்டு, சிலர் இடையூறு செய்கிறார்கள். தூற்றாகிறார்கள். பழித்து அவமானப் படுத்திவிட முனைகிறார்கள்.

தகுதியோ, ஒழுங்கோ இல்லாதவர்கள் தாம் அவர்கள்.

தரங்கெட்டவர்களின் பகைமையை ஒரு பொருளாக மதித்துப் பதிலுக்குப் பதில் செய்யமாட்டார்கள் உத்தமர்கள். அவர் களுக்கும் மனங்குளிரும்படியாக அவர்கள் வெறுப்பு முழுவதையும் தாங்கிக் கொள்வார்கள். அவர்களுக்குக் குறுக்கே நிற்காமல் வழி விட்டு விலகிக்கொள்வார்கள். ஏதோ, பந்தயத்தில் தோற்று விட்டதுபோல நமக்குத் தோன்றும். சான்றோர்களுக்கு அதுபற்றிக் கொஞ்சங்கூடக் கவலை இல்லை.

கீழோர்களின் கீழான செயல்களையுந் தாங்கிக் கொள்கிற காரியம், சான்றோர்களின் சான்றாண்மையை - உணர்ந்து அனுபவிப்பதற்குக் கட்டளைக்கல்லாக இருக்கிறது.

சான்றோர்களையும் அவர்களுடைய பெருந்தன்மையையும் இப்படிப் பார்த்து ஆனந்தமடைகிறார் குறளாசிரியர்.

''சால்பிற்குக் கட்டளை
யாதெனில்,? — தோல்வி
துலையல்லார் கண்ணும்
கொளல்'' 389

(துலை - சமானம் அல்லது தகுதி)

3

தீமை செய்தவர்களைக்கூட ஆதரவு கொடுத்து அவர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும். அப்படிச் செய்வதுதான் சால்பு.

தீமை செய்தவர்களை விட்டு விலகிவிடுவது கூடச் சால்பாகாது. பலன் கொடுக்காத வெறும் மலட்டுச் சால்பாகி விடும் அது.

கொடுமைக்கும், வஞ்சகத்திற்குங்கூட இரக்கங்காட்டி நன்மை செய்வதில்தான், சால்பென்னும் பண்பாட்டிற்கு மணம் இருக்கிறது.

''இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்யாக்கால்;
என்ன பயத்ததோ
சால்பு'' 390

(இன்னா செய்தார்க்கும் - கொடுமை செய்தவர்களுக்குமே. இனியவே செய்யாக்கால் - நன்மையே செய்யவேண்டும். அப்படிச் செய்யமுடியாவிட்டால். சால்பு என்ன பயத்தது -சால்புஎன்பதற்கு ஒரு பிரயோசனமும் இல்லைதான்)

4

வேப்பமரம் உச்சிமுதல் அடிவரை கசப்புத்தான். இலை, பூ, காய் கனிகூடக் கசப்பாக இருக்கும். ஆனாலும் வேப்பமரத்தை அழித்துவிடவில்லை. நாலா வழியிலும் உபயோகப்படும்படி வேப்பமரத்தை உபசரித்து வைத்திருக்கிறார்கள் மக்கள்.

அழகும் ஆரோக்கியமும் கொடுக்கிற - குளிர்தரு நன்னிழல் கொடுக்கும் இயற்கைப் பந்தலாக மதித்து வேப்பமரத்தை உபயோகிக்கிறார்கள்.

வேப்ப இலையைக் கொண்டு நோய்களின் விஷத்தை முறித்து விடுகிறார்கள். கருப்புக் கோளாறுகளை விரட்டி விடுகிறார்கள். பூவைப்போட்டு ரசம் வைத்துவிடுகிறார்கள். பச்சடிகூட வைத்து விடுகிறார்கள்.

வேம்பின் எண்ணெய், பட்டை எல்லாம் உயர்ந்த மருந்தாகப் பயன்படுகின்றன.

குழந்தையை வளர்ப்பதுபோல் வேம்பை வளர்க்கிறார்கள். கசப்பை நினைத்து அதை யாரும் புண்படுத்துவதில்லை.

கற்றாழையைக்கூட பயிருக்கு வேலியாக வைத்தே உபசரிக்கிறார்கள். அதாவது நலம் பாராட்டுகிறார்கள்.

வெளிப்படையான அம்சங்கள் ஒத்துவராவிட்டால், உள்க்கிடையான அம்சங்களைப் பார்த்து, அவற்றில் உள்ள அழகை மதிப்பது உயர்ந்த பண்பாடு. அதை நோன்பு என்று பாராட்டி இருக்கிறார்கள்.

"கொல்லா நலத்தது
நோன்மை"

குடும்பம், நட்பு, சுற்றம், தெரு, ஊர், உலகம் இப்படியாக மனித இனம் இருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ நாம் எல்லாவற்றோடும் சேர்ந்தே இருக்கிறோம். தனித்து இருப்பது இல்லைதான்.

மனைவி, மக்கள், நண்பர், சுற்றத்தார் இவர்களிடம் உள்ள பண்பை நல்ல அம்சங்களைப் பார்த்துப் பாராட்டவேண்டும். அப்படிப் பாராட்டுகிற பெருந்தன்மை எளிதில் வந்துவிடாது. அது வருவதற்கு ஒருவழி இருக்கிறது. அது என்னவென்றால்?

நம்மை விட்டுவிலகி இருக்கிறவர்களுடைய (பிறர்) செயலைப் பார்த்து வியந்து பாராட்டவேண்டும். அது ஒன்றும் சிரமம் இல்லை. நமக்குத் தெரியாதவர்கள் - நாம் போட்டு வைத்திருக்கிற வேலிக்கு வெளியே உள்ளவர்களுடைய காரியங்களில் உள்ள அதிசயம் நம்மை எளிதில் வசப்படுத்தும். அந்தக் காரியங்களோடு கிடக்கிற வேண்டாத அம்சங்கள் தானாகவே விலகிவிடும்.

பிறருடைய காரியங்களைப் பாராட்டிப் பாராட்டி அதில் ஒரு ருசி கண்டுவிட்டால் நம்முடன் ஒட்டி உள்ளவர்களின் காரியங்களில் உள்ள நலன்களையும் பார்த்துப் பாராட்ட ஆவல் உண்டாகிவிடும்.

மற்றவர்களுடைய காரியங்களைப் பாராட்டுவதும் மதிப்பதும் (பிறர் தீமை சொல்லாமல் - நலமே சொல்வது) சால்பு என்னும் பண்பாகும்.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

"கொல்லா நலத்தது
நோன்மை; — பிறர்தீமை
சொல்லா நலத்தது
சால்பு." 390

(நோன்மை - உலகக்ஷேமத்திற்காகச் செயல்படும் தெய்வச்செயல்)

பாராட்டுவதும் உபசரிப்பதும் உலக க்ஷேமந்தான் என்பதை அழகாக எடுத்துச் சொல்கிறது கவி.

5

கோடிக்கணக்கான மக்களுக்கு உயிரும் வாழ்வும்கொடுத்து உலகைக் காப்பதற்காக ஆவலோடு ஓடிவருகிறது நதி. அப்படி வேகமாக ஓடிவரும் நதியை ஆங்காங்கு வழிமறித்து சிலமேடுகளும் பாறைகளும் தடுக்கும்.

குறுக்கிட்டு இடையூறு செய்கிற மேடுகளையும், பாறைகளையும் சுக்கல் சுக்கலாக நொறுக்கி விடமுடியும் நதியால். நதியினிடம் பொங்கிவரும் வெள்ளத்தில் அளவிடமுடியாதபடி சக்தி இருக்கிறது.

ஆனால் பாறையோடும், மேட்டோடும் சண்டைபோட்டு நேரத்தை வீணாக்காது நதி. சுற்றிவளைத்து - விலகிப்போய் விடும் நதி.

மேடுகளையும் பாறைகளையும் தனக்குக் கோட்டையாகவும் அரணாகவும் வைத்து உபயோகப்படுத்திக் கொள்கிறது நதி.

சான்றோர்கள் காரியமும் அப்படியே.

எதிர்ப்பவர்களையும் தங்கள் காரியத்திற்கு உரமாக மாற்றிக் கொள்வார்கள் சான்றோர்கள். அவர்களை எதிர்க்காமல் விட்டுக் கொடுப்பதின் மூலமே எதிரிகளையும் நண்பர்களாக ஆக்கிவிடுவார்கள் சான்றோர்.

"ஆற்றுவார் ஆற்றல்
பணிதல்! — அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும்
படை", 392

(ஆற்றுவார் ஆற்றல் பணிதல்-உலகக்ஷேமத்திற்காகத் துன்பங் களைத் தாங்கி செயல்படுகிற லட்சிய புருஷர்களின் சக்தி விட்டுக் கொடுத்தல்தான். அது-விட்டுக் கொடுக்கும் அந்த வீரமே. சான்றோர் படை- லட்சியவீரர்களின் ஆற்றல்மிக்க ஆயுதம். மாற்றாரை மாற்றும் படை-எதிரிகளையும் நண்பர்களாக மாற்றி விடும் அற்புத சாதனம் அது)

6

பார்ப்பதற்கு மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் தோன்றுகிறார்கள். பழகிப் பார்த்தால்தான் மனிதர்களுக்குள் இருக்கின்ற வேறுபாடு தெரியவரும்.

மனிதர்களுக்குள் ஆயிரமாயிரம் வேறுபாடுகளிருக்கின்றன• இவ்வளவு வேறுபாடுகளையும் மூன்று வகையாகத் தொகுத்துக் கொள்ளலாம்.

சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் கட்டுப்படாதவர்கள் ஒருவகை எந்தக் காரியத்தையும் இவர்கள் துணிந்து செய்வார்கள், தண்டனை கிடைத்தால்கூட அதற்காக வெட்கப்படமாட்டார்கள்.

இழிசெயல் புரியாமல் இவர்களால் இருக்க முடியாது. இவர் களுடைய மனச்சாட்சியில் கூர்மை என்பதே இல்லாமல் மழுங்கிப் போய்விட்டது. இவர்களைக் கயவர் என்று பிரித்து வைத்திருக் கிறது.

இனி, சாதாரண மனிதர்கள் ஒருவகை. இவர்கள் நடுவுநிலை யிலிருந்தும் ஒழுங்கிலிருந்தும் மஞ்சாடிகூட விலகாதவர்கள் போலத் தோன்றுவர்கள் ஆனால் அவசியம் நேரும்பொழுது என்ன வேண்டு மானாலும் செய்வார்கள்.

லாபம் கிடைக்கும் என்றால் கொடுமை செய்யப் பின்வாங்க மாட்டார்கள். பொய் சொல்லக் கூசமாட்டார்கள். மனச்சாட்சியை விற்பதற்கும் வேஷத்தைக் களைந்து களைந்து மாற்றுவதற்கும் யோசிக்க மாட்டார்கள்.

வாழ்க்கை சௌகர்யமாக இருக்கும்வரை இவர்களுக்கு ஒரு குணம், சௌகர்யம் குறைந்தால் வேறு குணம், அந்த வகையில் கயவர்களைவிட இவர்கள் மோசமானவர்கள். கயவர்கள் ஒரே நிலையில் தான் என்றும் இருப்பார்கள்.

இந்த நெறி கெட்ட மனிதர்களை உத்தேசித்துத்தான்' அறததையும் நீதியையும் வற்புறுத்திப் பல உபதேசங்களை ஞானி கள் அவ்வப்பொழுது உபதேசித்திருக்கிறார்கள்.

இனிக் கடைசியாக வேறொரு வகையினரைப் பற்றிப் பார்க்கலாம்.

இவர்கள் மனித சமுதாயத்தில் அபூர்வமாகத்தான் இருப்பார்கள். லட்சத்தில் ஒருவர். கோடியில் ஒருவர் என்கிற கணக்கில் தான் இவர்களைப் பார்க்க முடியும். ஒன்றிரண்டு பேர் அதிகமாக இருப்பார்களானால், அது மனித சமுதாயம் செய்த தனிப்பெரும் பேறு.

இவர்களுடைய மனச்சாட்சி எப்பொழுதும் கூர்மையாகவே இருக்கும். மனச்சாட்சிக்கு விரோதமாக எந்தக் காரியத்தையும் இவர்கள் செய்ய மாட்டார்கள்.

அறத்திற்கும், ஒழுங்கிற்கும் விரோதமாக எந்தக் காரியத்தை-எந்த இடத்தில்-யார் செய்தாலும், அதை வெறுப்பார்கள். எதிர்த்துப் போராடுவார்கள். எதிர்த்துப் போராடுவதால் ஏற்படும் நஷ்டத்தை மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள்.

மற்றவர்களிடம் இவர்கள் காட்டுகின்ற அன்பிற்கு அளவு கிடையாது. உபகாரம் செய்வதில்கூட இவர்கள் கூசுவார்கள். உபகாரத்தைப் பெறுபவர் தயங்கக் கூடாதே. தயக்கத்தின் மூலம் தாழ்ந்து விடக்கூடாதே என்று கூசுவார்கள்.

சட்டத்தைக் காட்டிலும் நீதிக்குத்தான் இவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள். அறியாமையால் ஏற்படும் தவறுகளை, அனுதாபங்காட்டி இவர்கள் பொறுத்துக் கொள்வார்கள். பிறப்பு, இறப்பு, வாழ்க்கை, வாழ்க்கையில் பெறவேண்டிய பேறு. அவ்வளவையும் சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்து கொண்டவர்கள் இவர்கள். 'இதன் இயல் இது தான்' என்று அளந்து முடிவு கட்டியவர்கள் இவர்கள். இத்தகைய பெரியவர்களைச் சான்றோர் என்று முன்னோர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள்.

சான்றோர்களையும், சான்றோர்களிடமுள்ள நீதி, கருணை, தியாகம், ஞானம் முதலிய பண்புகளையும் நன்றாக அனுபவித்தவர் குறளாசிரியர்.

'தன்னலமற்றுப் பொது நலத்திற்காகத் தியாகம் புரியும் இந்த உத்தமர்கள் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறார்கள்' என்று வியந்து விடுகிறார் குறளாசிரியர்,

தம்மிடம் இல்லாத வயலைப் பற்றியோ, தோப்பைப் பற்றியோ, மாடி வீட்டைப் பற்றியோ இவர்கள் சிந்திப்பதும் இல்லை. கவலைப்படுவதும் இல்லையே என்று அதிசயப்படுகிறார் குறளாசிரியர்.

குறளாசிரியரின் வியப்பையும் அதிசயத்தையும் எப்படி வெளியிடுகிறது தமிழ் என்று பாருங்கள்.

''இன்மை ஒருவற்(கு)
இழிபன்று; — சால்பென்னும்
திண்மைஉண் டாகப்
பெறின்.'' 393

(இன்மை ஒருவற்கு இழிபு அன்று - வசதி இன்மை என்பது கேவலம் ஆகாது. அதுவும், சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்-சால்பென்னும் பண்பு உடையவர்களுக்கு டெலிபோன் இல்லை, பிளசர்கார் இல்லை என்பது பிரச்னை ஆகாது)

நீதி, கருணை, ஆனந்தம் முதலிய பண்புகள் சேர்ந்து நிறைந்ததுதான் சால்பு. அதுமிக மிருதுவானது, எளிமையானது, ஆனால் உறுதியானது. அதனால் தான் ''சால்பென்னும் திண்மை'' என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இந்தச் சால்பென்னும் திண்மை எல்லோரிடமும் இல்லை. அது அபூர்வமாகத் தான் சில பேரிடம் அமைந்துள்ளது இந்த உண்மையை ''உண்டாகப்பெறின்'' என்பதின் மூலம் விளக்கிக் காட்டுகிறது தமிழ்.

ஒரு பெண்ணின் பூர்ண சந்திரன் போன்ற முகத்தில் மரு ஒன்று கிடந்தால் அதுவும் பார்க்கப் பார்க்க அழகாகவே இருக்கும். அதே போலத்தான் சான்றோர்களிடம் சென்ற வறுமையும் அழகாகவே இருக்கும்.

இந்த உண்மையை எவ்வளவு நயமாக விளக்குகிறது தமிழ்? எல்லோராலும் பெற முடியாத சால்பென்னும் மனநிறைவை ஒருவன் பெற்றுவிட்டால் அவனிடமுள்ள வறுமை தாழ்ந்ததன்று. உயர்ந்ததுதான் என்று பக்கமாக விளக்குகின்றது தமிழ்.

7

சான்றோர்களென்றால் வேளா வேளைக்குச் சாப்பிட்டு விட்டு நிம்மதியாகச் சும்மா இருக்கிறவர்களல்லர்,

கொடுமையை எதிர்க்கிறவர்கள், எதிர்த்துப் போராடுகிற வர்கள், தோல்விக்கு அஞ்சாதவர்கள். வெற்றி கிட்டும் வரை விடாது போரிடுகிறவர்கள் யாரோ? அவர்கள் தாம் சான்றோர்.

குறிப்பிட்ட ஒரு இனத்தாருக்கு மட்டும் இவர்கள் போராடுவ தில்லை. எல்லா மக்களுக்காகவும் இவர்கள் தொடர்ந்து போராடு வார்கள்.

தென்னாப்பிரிக்காவிற்கு வக்கீலாக வழக்காடப் போனவர் தான் காந்தியடிகள். அங்குள்ள இனக் கொடுமை அவரை வேதனைப்படுத்தியது. இனக் கொடுமையைப் பகிரங்கமாகக் காந்தியடிகள் வெறுத்தார். அதை எதிர்த்துப் போராடினார்.

பின்பு, இந்தியாவிற்கு வந்தார். ''நாற்பது கோடி இந்தியர் களும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு என்ன ஞாயம்! இந்தியர் களைத் தந்திரமாக அடிமைப்படுத்தி ஆள்வதற்கு ஆங்கிலேயர் களுக்கு உரிமை ஏது?

''அடிமைப்படுத்துவது குற்றம். அதைவிடப் பெருங்குற்றம் அடிமைப்படுவது. இவை கடவுளுக்கு விரோதமான காரியங்கள்'' என்று முழங்கினார்.

ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடினார். அது மட்டுமா? லட்சோபலட்சம் மக்களை-உடன் பிறந்த மக்களே ஒதுக்கிவைத்த, தீண்டாமையை எதிர்த்தார். கள்ளையும், சாராயத்தையும் கொடுத்து மக்களைக் கொடுமைப்படுத்தும் வழக்கத்தைக் கண்டித் தார். பெண்களை வெறும் கேளிக்கைப் பொருளாக வைத்து அவர் களுடைய உரிமைகளைப் பறித்தது கொடுமை என்று அறிவுறுத் தினார்.

''உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்'' என்று முழங்கினார்.

இவ்வளவுதானா?

''இந்தியா சுதந்திரம் பெற்று முடிந்தவுடன் நீங்கள் என்ன செய்வீர்கள்'' என்று காந்தியடிகளிடம் ஒருவர் கேட்கிறார்.

''இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் சைனாவுக்குச் சென்று, சமூக சீர்திருத்தப் பணியில் நான் ஈடுபடுவேன்'' என்று தயங்காமல் பதில் சொல்கிறார் காந்தி மகான்.

சான்றோர்கள் என்றால் உலக நன்மைக்குப் பாடுபடுவதைக் கடமையாகக் கொண்டவர்கள். அந்தக் கடமையை விட்டு விலகி

அவர்களால் வாழ முடியாது. அவர்களுடைய வாழ்க்கையே உலக நன்மைக்கு உழைப்பது தான்.

இத்தகைய அற்புதமான மகான்களைக் குறளாசிரியர் பார்த் திருக்கிறார். தம் இதயத்துள் வைத்து அவர்களைப் போற்றியும் இருக்கிறார்.

குறளாசிரியர் மதித்துப் பாராட்டுகிறதைக் குறள் எவ்வளவு நயமாக விளக்கிக் காட்டுகிறதென்று பார்க்கலாம்.

''கடன்என்ப நல்லவை
எல்லாம்; — கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள்
பவர்க்கு''. 394

(நல்லவை எல்லாம் கடன் என்ப-எங்கெங்கு நன்மை செய்ய வேண்டுமோ அங்கங்கு நன்மையைச் செய்வது தான் அவர் களுடைய கடமை. கடன் அறிந்து-மனிதனாகப் பிறந்ததற்கும்-பிறந்து வாழ்வதற்கும் உள்ள குறிக்கோளை உணர்ந்து· சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு-குறைகளை எல்லாம் களைந்து நிறைவை உண்டாக்கப் பாடுபடுகிறவர்களுக்குத் தான். நல்லவையெல்லாம் கடன் என்ப,)

பள்ளத்தை நோக்கித் தண்ணீர் வருவது போலத் துன்பப்படு கிறவர்களின் வேதனையை நோக்கி அதைத் தீர்க்க ஓடி வருவார் கள் சான்றோர். இதை விளக்கிக் காட்டுகிறது. ''சான்றாண்மை மேற்கொள்பவர்'' என்னும் தொடர்.

அவர்கள் விரைந்து வருவதையும், துணிந்து செயல்படுவதை யும் தெளிவாகக் காட்டுவதற்காக, ''கடன் என்ப நல்லவை எல்லாம்'' என்று எடுத்த எடுப்பில் துரிதத்தில் வைத்துச் சொல்லி யிருக்கிறது ''நல்லவை எல்லாம் கடன் என்ப'' என்று சொல்ல வில்லை. ''கடன் என்ப'' என்று சொல்லியிருக்கிறது.

பெரியோர்களைப் பற்றிய குறளாசிரியரின் அனுபவத்திற்குத் தமிழ் அப்படி அழுத்தமும் ஒளியும் தருகின்றது.

8

இருபது மைல் நீளம், பதினைந்து மைல் அகலமுள்ள செழிப்பான பிரதேசம் ஒன்று. அதில் சிறு சிறு பட்டிகளும் கிராமங் களுமாக நூற்றுக்கு மேல் இருக்கின்றன. வயலும் தோப்பும்

நிறைந்த அந்த வளமான பிரதேசத்திற்கு மத்தியில் இரண்டு மைல் சுற்றளவும் ஆயிரம் அடி உயரமும் கொண்ட கருங்கல் பாறை, சிறுமலை போல நிற்கின்றது.

இந்தப் பிரதேசத்திற்குப் பத்து மைல் மேற்கே, ஆற்றை மறித்து ஒரு அணை கட்டியிருக்கிறது. அணையில் பல மடைகள் வைத்து வாய்க்கால்களின் வழியாகப் பாசனத்திற்குத் தண்ணீர் பாய்ந்து கொண்டே இருக்கின்றது.

எவ்வளவு தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறதோ, அவ்வள விற்கு ஆற்றின் வழியாக அணைக்குத் தண்ணீர் வந்து கொண்டிருக் கின்றது. சமுத்திரம் போலக் கோடையிலும் அணையில் நிறைந் திருக்கிறது தண்ணீர்.

எதிர்பாராத விதமாக ஒரு வாரகாலத்திற்கு விடாத அடை மழை பிடித்து விட்டது, மேலே சொன்ன பிரதேசத்தில்.

எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடு குடிசைகள், கால்நடைகள், வயதான மரங்கள் அளவில்லாதபடி அடித்துச் செல்லப்பட்டன. வயல்களும் தோப்புகளும் மூழ்கிவிட்டன. ஏரிகளும் குளங்களும் உடைந்து கொண்டிருப்பதால் தங்கள் நிலை என்னாகுமோ என்று அப் பிரதேச மக்கள் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள்.

ஒருநாள் பகல் பத்து மணிக்கு அந்த அணையும் உடைப் பெடுத்து விட்டது. ஊழிக் காலத்து வெள்ளம் போலச் சீறிக் கொண்டு வருகிறது அணை நீர்.

கிராமங்களையும் கிராமங்களிலுள்ள மக்களையும் வாரிவாரி வயிற்றில் போட்டுக் கொண்டு வருகிறது வெள்ளம்.

இந்தப் பரிதாபமான வேளையில் கருங்கல் பாறையைச் சுற்றி யுள்ள கிராம மக்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளோடும், அவசிய மான பொருள்களோடும் குன்றின் உச்சியில் ஏறிக் கொண்டார் கள்.

வெள்ளம், கருங்கல் பாறையில் ஆங்காரமாக வந்து மோது கிறது. நுங்கும் நுரையும் கக்கிச் சீறுகிறது. கருங்கல்ப் பாறையை முற்றுகையிட்டு நாலாபக்கமும் உறுமுகிறது.

அவ்வளவிற்கும் கற்பாறை கொஞ்சங்கூடக் கலங்கவில்லை. கற்பாறையிலிருந்த மக்களும் துளிகூடக் கலங்கவில்லை.

பாறையும் பாறையிலிருந்த மக்களும் தங்கள் நிலையிலிருந்து இம்மியளவு கூடப் பெயராமல் நிலைத்து நிற்கின்ற காட்சி அற்புதந்தான்.

இந்தக் காட்சியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். எத்தனை ஆபத்துக்கள் வந்தாலும் சரி, எத்தனை நஷ்டம் ஏற்பட்டாலும் சரி, சான்றோர்கள் தங்கள் கடமையிலிருந்து இம்மியளவு கூடப் பெயர (நகர) மாட்டார்கள்.

சொத்தும் சுகமும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். உற்றாரும், உறவினரும், நண்பரும், கட்டிய மனைவியும், மக்களுங் கூட வெறுக்கும் நிலை ஏற்பட்டாலும் ஏற்படும்.

பெற்ற தாயும் தந்தையும் நொந்து துடிக்கக்கூடிய கட்டங்கூட வரலாம். மேலே சொன்ன அத்தனைபேரும் தனக்கு எதிராகக் கூடிய நிலை வந்தாலும் வரலாம்.

என்ன நேர்ந்தாலும் சரி, எப்படி நேர்ந்தாலும் சரி, சான்றோர்கள் தங்கள் கடமையிலிருந்து நழுவ மாட்டார்கள். நாம் உண்டு, நம்காரியம் உண்டுஎன்றுசும்மாஇருந்துவிட மாட்டார்கள்.

சான்றோர்களையும், அவர்களுடைய உறுதிப்பாட்டையும் மிக மிக அனுபவித்திருக்கிறார் குறளாசிரியர்.

அனுபவம் தமிழோடும், தமிழ் மணத்தோடும் குலாவுகின்றது. குலாவிக் குறளாக விளைந்து விடுகின்றது.

எப்படியென்று பார்ப்போம்.

''ஊழி பெயரினும்
தாம்பெயரார்; — சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு
வார்.'' 395

சான்றோர்களை எவ்வளவு உன்னத நிலையில் வைத்துப் பார்க்கிறார் குறளாசிரியர்.

9

ஒழுக்கமும் நியதியும் சீர் குலைந்து, மனித சமுதாயம் மிருகக் கூட்டமாக மாறிவிடாதபடி, சான்றோர்களின் உறுதியும் தியாக, மும் அல்லவா காப்பாற்றுகின்றன என்று அதிசயப்படுகிறார், குறளாசிரியர். வானத்தைப் பார்க்கிறார், பூமியைப் பார்க்கிறார். ஒவ்வொரு தத்துவமும் நியதி தவறாமல் செயல்படுகிற அற்புதத்தைக் காண்கிறார்.

சூரியன் உதிப்பதும் மறைவதும் ஒழுங்காக நடந்து கொண்டிருக்கின்றன. சந்திரன் வளர்வதும் தேய்வதும் முறைப்படி நடக்கின்றன. அமாவாசையும் பௌர்ணமியும் தவறாத கணக்கில் வந்து கொண்டிருக்கின்றன. மழையும் காற்றும் குறிப்பிட்ட முறையில் குறிப்பிட்ட காலத்தில் செயலாற்றுகின்றன.

இயற்கையின் ஒவ்வொரு அம்சமும் மஞ்சாடி கூடப் பிசகாமல் நியதிப்படி இயங்குகின்ற அற்புதத்தைக் குறளாசிரியர் பார்த்துப் பார்த்து அதிசயப்படுகிறார்.

நியதியிலிருந்தும் ஒழுக்கத்திலிருந்தும் சிறிது பிறழ்ந்து விட்டாலும் இந்த உலகம் என்ன கதிக்கு உள்ளாகுமென்று யோசித்துப் பார்க்கின்றார்.

சூரியனே இருட்டாகி விட்டால், மேகமே, மழை பொழியாமல் போய் விட்டால், காற்றே ஆடாமல் அசையாமல் ஒடுங்கி விட்டால் வேறு எதைக் கொண்டு ஈடு செய்வது.

சான்றோர்களும் அவர்களிடமுள்ள சான்றாண்மையும், இல்லாமல் போனால் உலகத்திற்கு விமோசனம் என்ன இருக்க முடியும்.

"சான்றவர் சான்றாண்மை
குன்றின்; — இருநிலந்தான்
தாங்காது மன்னோ
பொறை." 396

அற்புதமான அனுபவத்தை அற்புதமான முறையில் வெளியிடுகிறது குறள்.

ஒவ்வொரு சொல்லும் தாளத்தில் நின்று கண கண என்று ஒலிக்கின்றன. "இருநிலம்" என்பதை ஒட்டி 'தான்' என்பதை வைத்திருக்கிறது. 'தாங்காது' என்பதற்கும் 'பொறை' என்பதற்கும் இடையில் 'மன்னோ' என்பதை வைத்திருக்கிறது.

சான்றாண்மையின் அளவிட முடியாத பெருமையினையும், அது குறைந்து விட்டால் உலகிற்கு ஏற்படும் அளவிடமுடியாத துன்பத்தினையும் எடுத்துக் காட்டுகின்ற அற்புதக் குறிப்பு அது. தாங்காது மன்னோ பொறை".

வெறும் இடைச் சொற்கள் என்று அவற்றை (தான், மன்னோ, என்பவற்றை) ஒதுக்கி விட முடியாது.

ஒருவனுடைய உடம்பை நிறுத்துப் பார்த்தால் நூறு பவுண்ட், நூற்றைம்பது பவுண்ட் என்று இருக்கின்றது. இவ்வளவு பாரத்தையும் வைத்துக்கொண்டு, மனித உயிர் ஏறுகிறது. இறங்குகிறது, குதிக்கிறது, ஓடுகிறது.

ஆரோக்கியம் என்கின்ற ஒன்று இருப்பதின் காரணமாக உடம்பின் பாரம் உயிருக்குக் கடுகளவுகூடத் தெரியாமல் போய் விடுகிறது.

ஆரோக்கியம் குன்றக் குன்ற மனிதனுக்கு அவன் உடம்பு பாரமாகவே தோன்றும். தாங்க முடியாத பெரும்பாரமாகவே தோன்றும். அப்படியானால் அந்த உடம்பை அந்த உயிர் தாங்கிக் கொள்ள முடியுமா? முடியாதுதான்.

சான்றாண்மை என்கின்ற அற்புதம் இருக்கும்வரை, பூமா தேவிக்கு ஒரு பாரமும் இல்லை. சான்றாண்மை வாட வாட பூமாதேவிக்குப் பாரம் பொறுக்க முடியாதுதான்.

எத்தனை எத்தனை மலைகளையும் காடுகளையும் பிராணி களையும் சுமந்து கொண்டிருக்கிறாள் அன்னை, பூமாதேவி! அவ்வளவு பளுவும் அழுத்த ஆரம்பித்து விட்டால், அவளால் பொறுக்க முடியுமா? முடியாதுதான்.

"இரு நிலந்தான்
தாங்காது மன்னோ பொறை"

பெரியோர்களையும் ஞானிகளையும் எப்படிப் பார்க்க வேண்டும், எப்படி மதிக்கவேண்டும் என்பதை அழகாக விளக்குகிறது குறள்.

குறிப்பு;- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குறளாசிரியர் கண்ட அனுபவம் இது.

குறளாசிரியரின் அனுபவத்தைத் தெளிவாகவும் அழுத்த மாகவும் ஒலித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது குறள்.

இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு ஒலித்துக் காட்டிக் கொண்டுதான் இருக்கும் குறள்.

* * * *

குறளாசிரியர் தம் அனுபவங்களையெல்லாம் தமக்கே சொந்தமென்று வைத்துக் கொள்ளவில்லை. வழிவழி வருகின்ற மனித சமுதாயம் முழுவதும் அனுபவிக்க அழகிய குறளாக வாரி வழங்கிப் போன மகான் அவர்.

யாரிடமும் எதையும் எதிர்பாராமல் எல்லோருக்கும் குறளை வழங்கிய வள்ளலுக்கு, யார், என்ன கைம்மாறு செய்ய முடியும்.

உலகம் முழுவதையும் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற மழைக்கு நாம் கைம்மாறு செய்ய முடியுமா? ஒரு வாழ்த்துப் பத்திரம் எழுதி வாசித்து விட்டால் அது கைம்மாறாகி விடுமா?

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, குறளையும் குறளாசிரியரையும் அனுபவித்த புலவர் ஒருவர் இப்படி யெல்லாம் சிந்தித்தார். அவருடைய சிந்தனை அழகிய வெண்பா வாக உருவெடுத்தது.

"தானே முழுதுணர்ந்து
தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா
அந்நான்கும்—ஏனோர்க்(கு)
ஊழின் உரைத்தார்க்கும்
ஒள்நீர் முகிலுக்கும்
வாழிஉல(கு) என்ஆற்றும்
மற்று."

குறளாசிரியரையும் குறளையும் பார்த்தால், அவர் மனித வாழ்க்கையை அன்போடு பார்த்தவர் என்பதும் ஆர்வத்தோடு அனுபவித்தவர் என்பதும் எளிதில் விளங்கும். அத்துடன், இந்த உண்மையானது எந்தக் கலாசாலையிலும், எந்தப் பேராசிரியரிடத்தும் பாடங் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடியதன்று என்பதும், விளங்கும். இதை "தானே முழுணர்ந்து" என்னும் தொடர் அழகாக விளக்கிக் காட்டுகிறது.

தம் அனுபவங்களை அவர் இன்பமயமாக வெளியிட விரும்பினார். ஓசை வளமும் ஒலி நயமும் நிறைந்த தெய்வத்தமிழ் அவர் விரும்பியபடி குறள் வெண்பாக்களாக உருவாக்கின.

"தண்தமிழின் வெண்குறளால்"

குடும்பம், சமுதாயம், குலவிருத்தி, ஆனந்தம் என்கின்ற தத்துவங்கள் நிரந்தரமானவை. இவற்றைக் கையாள்வதில், மனிதனிடம் குறைபாடிருக்கலாம். ஆனால், இவைகளிடம் எந்த விதமான குறைபாடுகளும் இருக்க முடியாது. இதை "ஆனா அறமுதலா அந்நான்கும்" என்பது உணர்த்துகின்றது.

குறைவில்லாத இந்தத் தத்துவ நெறிகளை உணர்ந்து அனுபவித்த மகான் குறளாசிரியர். தம் அனுபவத்தைக் குறைக்காமல்

மற்றவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் அவர். இதை "ஏனோர்க்கு ஊழின் உரைத்தார்" என்பது விளக்கிக் காட்டு. 'கின்றது. குறளாசிரியருக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? மழைக்குத்தான் கைம்மாறு செய்து விட முடியுமா நாம்? இதை.

"ஊழின் உரைத்தார்க்கும்
ஒள்நீர் முகிலுக்கும்
வாழிஉல(கு) என்ஆற்றும்
மற்று."

என்பது அழகாகத் தெளிவுபடுத்துகின்றது.

இருபதினாயிரம் அடிகளுக்குமேல் உலகம் முழுவதையும் வியாபித்துக் கொண்டு காப்பாற்றுகின்ற வான் மழையோடு வைத்தல்லவா குறளாசிரியரை அனுபவிக்கிறார் கவிஞர்.

ஆம், உண்மைதான், குறளாசிரியரைத் தெய்வப் புலவர் என்று குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மைதான்.

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு நக்கீரர் போன்ற கவிஞர்கள் கண்ட உண்மை இது.

இந்த உணர்ச்சியும் பக்தியும் நம்மில் எத்தனை பேரிடம் இருக்கின்றன?